# செந்தமிழ் இலக்கணம்

முதற் பாகம்

## எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்

ஆக்கியோன் :
கௌரவ ஸ்ரீமான்
சேர் பொன்னம்பலம் இராமநாதன்

வெளியீடு:
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.
2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ் இலக்கணம்

## முதற் பாகம்

## எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்

ஆக்கியோன் :

கௌரவ ஸ்ரீமான்

**சேர் பொன்னம்பலம் இராமநாதன்**

மீள் பதிப்பாசிரியர்கள்:

தகைசார் வாழ்நாட் பேராசிரியர் அ. சண்முகதாஸ்

பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்

சைவப்புலவர் கு. றஜீபன்

வெளியீடு:

பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை

மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,

வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | **செந்தமிழ் இலக்கணம்** |
| ஆசிரியர் | : | **சேர். பொன்னம்பலம் இராமநாதன்** |
| முதற்பதிப்பு | : | **1927 (அடிஸன் அச்சுக்கூடம், சென்னை.)** |
| இரண்டாம் பதிப்பு | : | **2018** |
| பதிப்பாசிரியர்கள் | : | **தகைசார் வாழ்நாட் பேராசிரியர் அ. சண்முகதாஸ்<br>பேராசிரியர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்<br>சைவப்புலவர் திரு. கு. றஜீபன்<br>பிரதேச செயலகம், துணுக்காய்.** |
| வெளியீடு | : | **பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,<br>கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை<br>மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,<br>வட மாகாணம்.** |
| அச்சுப் பதிப்பு | : | **எவகிறீன் அச்சகம், கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.<br>தொ. பே : 021 221 9893** |

| | | |
|---|---|---|
| Title | : | **CENTAMIL ILAKKANAM** |
| Author | : | **Sir Ponnambalam Ramanathan** |
| First Edition | : | **1927 (Adisan Press, Madras)** |
| Second Edition | : | **2018** |
| Editors | : | **Emeritus Professor Dr. A. Sanmugadas<br>Professor Dr. Manonmani Sanmugadas<br>Saivappulavar Mr. K. Rajeepan**<br>*(Cultural Officer, Divisional Secretariat Thunukkai)* |
| Publication | : | **Department of Cultural Affairs,<br>Ministry of Education, Cultural Affairs,<br>Sports and Youth Affairs<br>Northern Province.** |
| Printers | : | **NEvergreen Printers, K.K.S. Road, Jaffna.<br>T.P : 021 221 9893** |
| ISBN | : | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ் இலக்கணம்

முதற் பாகம்

எழுத்ததிகாரமும்

சொல்லதிகாரமும்

இவை

கௌரவ ஸ்ரீமான்

பொன்னம்பலம் இராமநாதன்

அவர்களால்

ஸ்ரீ பவணந்தி முனிவரது சூத்திரங்களைத் தழுவி

இலகுவான உரைநடையில் விரித்து

இயற்றப்பெற்றன.

புத்தக உரிமை அரசினரிடம்

பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

சென்னை,

அடிஸன் அச்சுக்கூடம்

௲௮௱௯௰௨.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ON

# The Characteristics of Classic Thamil.

## PART I

Relating to

# LETTERS AND WORDS

Expounded in simple prose
(following the order of the "Suthras" Of
Shri Pavananthi Muni),

By

SIR **PONAMBALAM RAMANATHAN, Kt.,**
K.C., C.M.G., M.L.C., Ceylon.

**Founder of parameshvara college for Shaiva Boys
and of Ramanathan college for Shaiva Girls;
A Member of the Board of Education of the Goverment Of Ceylon.
and of the Ceylon University college Council**

MADRAS:
PRINTED AT THE ADDISON PRESS

1927.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

தமிழ் கற்கும் மாணவர்கள் தமிழ் இலக்கண நூற்களைக் கல்லாது கைவிடுவதற்குக் காரணம் அவற்றின் கடின சொல் நடையே என்று யாரும் அறிவர். இவ்வருத்தத்தை முற்றிலும் நீக்கி , இலக்கண விதிகளின் இன்றியமையாச் சிறப்புக்களைத் தெளிவாக விளக்கும் பொருட்டு, இந்நூல் இயற்றப்பெற்றது.

இயற்றிய முறையாவது, விதிகளை எல்லாம் இலகுவாக அறியத்தக்க உரைநடையில் வரைந்தும், அவற்றிற்குரிய உதார ணங்களைக் காட்டியும், அவ்வுதாரணங்களில் அமைந்து கிடக்கும் விதிகளைப் புலப்படக் கூறியும், அப்பால் எழுத்துக்கும் சொல் லுக்கும் ஸ்ரீ பவணந்தி முனிவர் தமது நூலிற் செய்திருக்கும் சூத்தி ரங்களை மேற்கோளாகக் கொண்டும், அச்சூத்திரங்களுக்கு தெளி வுரை எழுதியும், முடித்திருப்பதே.

நாம் வசிக்கும் ஊராகிய இலங்கை இந்நூல் அச்சிடப்பெற்ற ஊராகிய சென்னையிலிருந்து மிக்க தூரமாதலாலும், அச்சுப் பிழைகளைத் தக்கவாறு திருத்த அங்கும் இங்கும் வசதிகள் ஏற்படா மற் போனமையினாலும், வேறு சில காரணங்களாலும், இந்தப் பதிப்பில் அச்சுப் பிழைகள் அநேகமாயின. இவற்றின் திருத்தம் ஈற்றி லுள்ள ஏழு பக்கங்களில் காட்டப்பட்டிருக்கின்றது. இந்த நூலை வாசிக்கமுன்னரே, காட்டிய திருத்தங்களை அவற்றிற்குரிய இடங் களிற் செலுத்தி அமைத்துக் கொள்ளுமாறு வேண்டு கின்றோம்.

பொன். இராமநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலின் அங்கம்

தமிழ் மொழியின் இலக்கணங்கள் ஐந்து அதிகாரங்களில் அடக்கப்படும். இவை எழுத்து சொல், பொருள், யாப்பு, அணி என்னும் அதிகாரங்களாம்.

அவற்றில் இப்பொழுது வெளியிடப்படுபவை எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமுமே. மற்றைய மூன்று பகுதிகள் பின்னர் அச்சிடப்படும்.

எழுத்ததிகாரத்தில், (1) ஒலி வடிவங்களும் வரி வடிவங்களுமாய் விளங்கும் எழுத்துக்களின் இயல்புகளும்; (2) எழுத்துக்களால் உண்டான சொற்களின் உறுப்புக்களாகிய முதனிலை (பகுதி) இறுதிநிலை(விகுதி) , இடைநிலை, சாரியை, சந்தி, விகாரங்களும்; (3) சொற்களோடு சொற்கள் பொருளைக்கருதிச் சேருமிடத்துத் தோன்றிய வேற்றுமை அல்வழிப் புணர்ச்சிகளும்; ;சொற்களின் இறுதியில் வரும் உயிரெழுத்துக்கள் புணரும் இயல்புகளும்; (4) சொற்களின் இறுதியில் வரும் மெய்யெழுத்துக்கள் புணரும் இயல்புகளும்; (5) எண்வகை உருபுகளோடு நிலை மொழி வருமொழிகள் புணரும் இயல்புகளும், விரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வெழுத்ததிகார விஷய அட்டவணை கீழ்வருமாறு காண்க: -


I. எழுத்தியல் ... ... பக்கம் 9 - 104
II. பதவியல் ... ... ,, 104 - 166
III. உயிரீற்றுப் புணரியல் ... ,, 166 - 227
IV. மெய்யீற்றுப் புணரியல்... ,, 228 - 261
V. உருபு புணரியல்... ... ,, 261 - 278


சொல்லதிகாரத்தில், (1) ஒவ்வொரு பொருளைக் குறிக்கும் பெயர்ச்சொல்லின் இயல்புகளும் ; (2) அப்பொருட்கண் நிகழும் தொழிலைக் குறிக்கும் வினைச்சொல்லின் இயல்புகளும்; (3) பெயர்ச் சொல்லிற்கும் வினைச்சொல்லிற்கும் உள்ள சில பொதுவாய இயல்புகளும்; (4) பெயர்ச்சொல்லிற்கும் வினைச்சொல்லிற்கும் முன்னாவது பின்னாவது நின்று பொருளைத் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைச்சொல்லின் இயல்புகளும்; (5) பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் அடுத்து, அவற்றின் குணங்களை விளக்கும் உரிச்சொல்லின் இயல்புகளும் , விரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச்சொல்லதிகார விஷய அட்டவணை கீழ்வருமாறு காண்க :-


| | | | | |
|---|---|---|---|---|
| I. பெயரியல் | ... | ... | பக்கம் | 278 - 372 |
| II. வினையியல் | ... | ... | ,, | 372 - 406 |
| III. பொதுவியல் | ... | ... | ,, | 406 - 480 |
| IV. இடையியல் | ... | ... | ,, | 480 - 502 |
| V. உரியியல் | ... | ... | ,, | 502 - 518 |


---

அகராதிகள்.


| | | | | |
|---|---|---|---|---|
| I. பத அகராதி | ... | ... | பக்கம் | 519 - 528 |
| II. நன்னூற் சூத்திர அகராதி | ... | | ,, | 529 - 536 |
| III. திருத்தப் பத்திரிகை | ... | | ,, | 537 - 543 |


---

பொன். இராமநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பரமேஸ்வர வித்யாலயத் தமிழ்ப் பண்டிதர், யாழ்ப்பாணம் மாவை ஸ்ரீமத் க. சு. நவநீத கிருஷ்ண பாரதி அவர்கள், இயற்றியது.

1. பூவேந்தர்க் கிருவிழியே போன்றொளிர்வோன்
இயற்கையெல்லாம் புனைந்து பாடும்
பாவேந்தர்க் கவருளச்சிந் தாமணியாத்
திகழ்ந்தமைவோன் பாரை யேற்றும்
நாவேந்தர்க் கோராற்றல் ஏற்றியடி
போற்றவைக்கு நற்றே வொத்தோன்
காவேந்தர்க் கொண்ணாத இருசெல்வக்
கொடையாலிக் கலி தீர்ப் போனே.

2. முறைபடைத்த செங்கோலு மதிக்குடையும்
துதிக்கொடையு முதன்மை சான்றீண்டு
இறைபடைத்த பெருந்திருவும் பொருந்தியுந்தம்
இதயத்தை ஈசன் தாட்கே
உறைபடைத்த சனகரிரு வோரென்ன
உலகுதொழற் குவமை சான்றோன்
மறைபடைத்த விதிநாட்டுஞ் செயராம
நாதனெனும் வாய்மைத் தேவே.

3. மேனாட்டின் உளந்திருத்திக் கீழ்நாட்டின்
உடல் திருத்தி விளக்கி யொன்றே
போனாட்டி மக்கள் வகுப் பினைச்சமமாக்
குவித்தருளப் பூவில் வந்தோன்
கானாட்டிக் கனன் மூட்டி விளக்குமொளி
இடையிறையைக் கனிந்து போற்றும்
ஆனாட்டும் விழுதனையா னருள்ராம
நாதனெனு மறிஞர் கோவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4\. வேதமிலாக் குறைதீர்த்த திருக்குறளாம்
ஆழ்கடலின் மேவுஞ் செல்வம்
ஈதெனத்தாம் அறியாமற் றுரும்புமுதற்
பொருளையெடுத் திம்பர்க் காட்டும்
போதமிலார் செயலொதுக்கி யாழ்ந்துபுக்குத்
துருவியெட இப் புவனிக் கீந்தான்
ஆதவனை அணிமதியை யமுதத்தை
மணிக்குவையை யலர்மா தோடே.

5\. கயப்பமைந்த மருந்தெனநன் னூலினைமா
ணாக்கரெலாம் கற்ற னீங்கி
மயக்குடைய ராய்த் திரிந்த வகைகண்டு
சருக்கரைக்குண் மருந்தீந் தாங்கு
நயப்புறுநல் லுரையிடைநன் னூல் பொதித்தவ்
வுலகுண்ண நல்கிக் காத்தான்
வியப்புறுநுண் மதிநிதியான் வேள்ராம
நாதனென்னும் வேந்தர் வேந்தே.

க. சு. நவநீத கிருஷ்ண பாரதி.

---

இராமநாத வித்தியாலயத் தமிழ்ப்பண்டிதராகிய யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஸ்ரீமத் ச .பொன்னம்பலபிள்ளை அவர்கள் இயற்றியது.

---

(நேரிசை ஆசிரியப்பா.)

பொன்னு மணியும் புரிவலம் புரியு
மின்னு மிப்பி யீன்றவெண் முத்தும்
வாரண மருப்பும் மன்னுறு மீழ
மண்டலஞ் சிறக்க வந்தருள் வித்தெனப்
புகழொடு தோன்றிய பொன்னம் பலவேள்
யாத்திரை தன்னின் ராமேச் சுரனை
ஆண்மக வின்னும் அருள்கென் றிரக்க
அயோத்திமன் போற்று மவன்றரு வரத்தால்
தந்தைதன் றவமுந் தரணியோர் தவமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுமோ ருருவாய் வந்தவ தரித்தே
ஆங்கிலஞ் செந்தமி ழாரியக் கடலைக்
கருத்தினா னீந்தீக் கரைகண் டுணர்ந்து
வேந்தியன் முறையால் விதிகளை யாய்ந்து
மன்னவர்க் குரைக்கும் மந்திரித் துவம்பூண்
டிலங்கைக் குடிக ளிதமுறப் புரந்து
பெண்மகார் கற்கப் பிறங்குகல் லூரியும்
ஆண்மகார் கற்றற் காங்கல் லூரியும்
பைந்தமிழ் வழங்குயாழ்ப் பாண நகர்க்கண்
தயங்கிரு கண்போற் றாபித் தருளிப்
பல்லூ ரகத்தும் பலவிதா லயங்கள்
திருந்தவே யமைத்துச் சீர்பெற நடாத்தித்
தண்டமிழ்க் கலையைச் சைவமா மதத்தைத்
தினகரன் கதிர்போற் றிகழவே பரப்பி
மூவேந் தரந்நாண் முற்றிய முறைபோற்
சிவாலயத் திருப்பணி செவ்விதி னியற்றிக்
காவற் கடவுளிற் கருணைமே லிட்டு
வறிஞரென் றவர்க்கும் வள்ளலா யுதவி
மும்மணி நேரும் மூன்றுசோ தரருள்
நடுநா யகமாம் நன்மணி யாமென்
றெத்தகை யினரு மேத்துமா றமர்ந்தே
மனத்தால் வாக்கான் மதிக்கப் புகல
வொண்ணா வெவையு மொருங்கே யமைந்திட்
டெண்டிசை யெங்கு மிசைமிக நிறீஇய
"சேர்ரா மநாத ஸ்ரீமான்" இந்நாள்
கற்பவர் தமக்கது கடுமையென் றுலகிற்
பல்லோர் கல்லாப் பான்மைதா னோர்ந்தே
மாசுட்படிந்து மழுங்குசெம் மணியைச்
சாணை தீர்ந்து தயங்கவைத் தாங்கவ்
வெழுத்துச் சொல்பொருள் யாப்பணி யென்னு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைவகை யிலக்கண மவற்றுண் முதற்கண்
எழுத்துஞ் சொல்லுமா மிரண்டதி காரத்
தடங்கிய விலக்கண வமைதிகள் தெரித்துத்
தமிழகத் தார்கள் தனிநூற் பொருளை
யிலகுவி லறியவு மெழுதவும் பேசவுந்
துணையென நன்னூற் சூத்திரந் தழுவி
மேற்கொ ளுதாரணம் விரிவுரை யாதியின்
பொற்புற நன்கு புதுக்கி விளக்கி
யியற்றிய செந்தமி ழிலக்கண நூலை
ஆசறக் கற்கு மருந்தமி ழறிஞர்
அகத்திரு ளகற்று மாதவ னாக
நச்சிநன் றாய்ந்து நயந்தே
யுச்சி மேற்கொண் டுவப்புறல் கடனே.

ச. பொன்னம்பல பிள்ளை

யாழ்ப்பாணம் கோப்பாய் அரசினர் ஆசிரியர்கலாசாலைத்
தமிழ்ப்போதகாசிரியர் ஸ்ரீமத் ம.வே.மகாலிங்கசிவம் இயற்றியது.

1. ஆனந்த மணிமன்றி லம்பிகையார் கண்காண
ஆனந்த நடநவிற்றும் நடராஜ ரருள்கூட்ட
ஆனந்த சிவயோகி யகத்தியனார் முதன்முனிவர்
ஆனந்த மிகுதமிழ்நூற் கிலக்கணமுந் தருளினரால்.

2. அகத்தியந் தொல்காப்பியமே யவிநயமென் றிவை முதலா
வகுத்தரு ளந்நூல்க ளுணர்தற்கருமை மனத்தாய்ந்து
சுகத்தினிது கற்பார்க்குத் துரிசில் பவணந்தி முதல்
மகத்துவஞ் சாலறிஞர்கள் சிற்றிலக்கண நூல்வாய்மலர்ந்தார்

3. ஆங்கவையும் பாநடையி லமைதலினாற் பிறபாஷை
பாங்குபெறப் பயின்று தமிழ்ப்பயிற்சிகுன்று மிந்நாளில்
தேங்குதமிழ்ச் சிறாருணர்தற் கரிதாகச் சிலவறிஞர்
ஈங்கிதனைக்கருதி யிலக்கணமுரையா லெழுதினரால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அன்னவற்றிற் பலதப்பாம், அன்னவற்றிற் சில ஒப்பாம்
என்னினு மற்றவை பயில்வாரிடரின்றி யெளிதுணரும்
தன்மையவன்று, இலக்கணத்தின்றனி நுட்பங்கண்டிலவால்
இன்ன பலவுங் கருத்திலெண்ணினானெம் பெருமாள்.

5. தரும உருவாய் அறிஞர் தமக்கெல்லாம் நாயகமாய்ப்
பிரபுசிகாமணியாகிப் பிறையணிந்த பெருமானார்
அருள் பரவு சிவானந்த அனுபூதிப்பெருவாழ்வாய்த்
தருமருவு தமிழ் நாட்டார் தவஞ்செய்த தவமானோன்.

6. பொன்னேர் பல்கலைக்கழகம் பொருந்து சிவாலய முதலாம்
தன்னேரி லறப்பணியான் தரணியர்க்கே வாழ்பெரியோன்
எந்நாடும் எந்நகரும் எவ்வனமுஞ் செவிகளிக்குந்
தன்னாமமறியாரைத் தானறியாப் புகழ் கொண்டான்.

7. துரைராம நாதனருள் தோய்தருபல்லிலக்கண நூற்
பொருளாய்ந்து முறைவகுத்துப் பொருளெல்லாம் பகல்செய்தே
அரியதமிழ் மொழித்தொன்மை யதிசயிப்ப நனிவிளக்கி
உரைநடையா னிலக்கணமிவ் வுலகுவப்ப அருளினனே.

ம.வே. மகாலிங்கசிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியர்களின் உரை

சேர். பொன். இராமநாதன் எழுதிய செந்தமிழ் இலக்கணம் என்னும் நூல் பற்றி யாரும் பெரிதாக எதுவும் பேசுவதில்லை. நாவலருடைய இலக்கணச்சுருக்கம் நன்னூலார் கூறிய இலக்கணங்களை ஓரளவு சுருக்கித் தருகின்றது. ஆனால், செந்தமிழ் இலக்கணமோ நன்னூலாருடைய எழுத்ததிகார, சொல்லதிகாரச் சூத்திரங்களிலே கூறப்பட்டனவற்றையும் உரைகளிலே கூறப்பட்டனவற்றையும் விளக்கிக் கூறுகின்றது. ஐநூறுக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இவ்விலக்கண நூல் சென்னை அடிஸன் அச்சுக்கூடத்திலே அச்சிடப் பெற்று 1927 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூல் ஏன் எழுதப்பட்டது என்பதற்கு நூலாசிரியர் பொருத்தமான விளக்கம் தருகிறார்:

*"தமிழ் கற்கும் மாணவர்கள் தமிழ் இலக்கண நூல்களைக் கல்லாது கைவிடுவதற்குக் காரணம் அவற்றின் கடின சொல் நடையே என்று யாரும் அறிவர். இவ்வருத்தத்தை முற்றிலும் நீக்கி, இலக்கண விதிகளின் இன்றியமையாச் சிறப்புக்களைத் தெளிவாக விளக்கும் பொருட்டு இந் நூல் இயற்றப்பெற்றது."*

காலத்தினுடைய தேவையை அறிந்து ஆற்றும் பணியே சிறப்பானதாகும். இவ் இலக்கண நூற்பணியும் அத்தகைய நல்ல எண்ணத்துடனேயே நடைபெற்றது. எனினும் இவ்விலக்கண நூலிலே கையாளப்பட்டுள்ள நடை எளிமையான நடையென்று முற்றாகக் கூறிவிடவும் முடியாதுள்ளது. ஒப்பீட்டு அடிப்படையிலே, தமிழ் இலக்கணம் படிக்கும் மாணாக்கரை எண்ணத்திற் கொண்டு ஓரளவு எளிமையான நடையிலே எழுதப்பட்டுள்ளது என்று கூறலாம்.

இந்நூலுக்கு மூன்று பெரியார்களுடைய அணிந்துரைகள் அணி செய்கின்றன.

**"கயப்பமைந்த மருந்தெனநன் னூலினைமா**
**ணாக்கரெலாம் கற்ற னீங்கி**
**மயக்குடைய ராய்த்திரிந்த வகைகண்டு**
**சருக்கரைக்குண் மருந்தீந் தாங்கு**
**நயப்புறுநல் லுரையிடைநன் னூல்பொதிந்தவ்**
**வுலகுண்ண நல்கிக் காத்தான்**
**வியப்புறுநுண் மதிநிதியான் வேள்ராம**
**நாதனென்னும் வேந்தர் வேந்தே"**

என்று பரமேஸ்வராக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் பாடுகின்றார். இரண்டாவது அணிந்துரை வழங்கிய இராமநாதன் கல்லூரித்தமிழ்ப் பண்டிதராகிய ச. பொன்னம்பலபிள்ளை,

*"எழுத்துஞ் சொல்லுமா மிரண்டதி காரத்தடங்கிய விலக்கண வமைதிகள் தெரித்துத் தமிழகத்தார்கள் தனிநூற் பொருளையிலகுவி லறியவு மெழுதவும் பேசவுந் துணையென நன்னூற் சூத்திரந்தழுவி மேற் கோளுதாரணம் விரிவுரை யாதியின் பொற்புற நன்கு புதுக்கி விளக்கி..."*

என்று சாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலைத் தமிழ்ப் போதனாசிரியர் ம.வே. மகாலிங்கசிவம் அவர்கள் மூன்றாவது அணிந்துரையை வழங்கியுள்ளார்.

**"துரைராம நாதனருள்**
**தோய்தருபல் விலக்கணநூற்**
**பொருளாய்ந்து முறைவகுத்துப்**
**பொருளெல்லாம் பகல் செய்தே**
**அரியதமிழ் மொழித்தொன்மை**
**யதிசயிப்ப நனிவிளக்கி**
**உரைநடையா னிலக்கணமிவ்**
**வுலகுவப்ப அருளினனே"**

இவ்வாறு கவிஞர் மகாலிங்கசிவம் **செந்தமிழ் இலக்கணம்** நூல் ஆசிரியரைப் பாராட்டுகிறார். இவ்வாறு பாராட்டுப்பெற்ற இவ்விலக்கண நூல் பற்றிப் பிற்கால அறிஞர்கள் ஏன் சிறப்பித்துப் பேசியதில்லை என யாம் எண்ணியதுண்டு.

**செந்தமிழ்** இலக்கண ஆசிரியர் மரபு வழியான இலக்கண விளக்கத்தின் ஒளியிலே தமிழ்மொழியின் ஒலியமைப்பினையும் அதன் வரிவடிவத்தினையும் புதுமையான போக்கிலே நோக்குகின்றார். தமிழ்மொழிக்குரிய ஒலிவடிவங்கள் 399 ஆக் இருப்பினும் அவற்றுக்குரிய வரிவடிவங்கள் 247 மாத்திரமே என்னுங் கருத்தினை முன்வைக்கும் ஆசிரியர்,

> *"தமிழ் இலக்கணக் கர்த்தாக்கள் மேற்கண்ட படி 152 ஒலிவடிவங்களுக்கு வரிவடிவங்கள் இல்லை என்கிறார்கள். ஆயினும், தமிழர் பேசிவரும் பேச்சு இன்னும் பல ஒலிவடிவங்களுக்கு வரிவடிவங்கள் இல்லை என்பது நிச்சயம் நகை, பகை, தங்கம், மங்கை என்ற பதங்களிலுள்ள க (ka) வரிவடிவம் ha, Ga என்ற ஒலிவடிவங்களையும் குறிக்கும்."*

என்று கூறிச் செல்கிறார். க, ச, த, ப ஆகிய வரிவடிவங்கள் முறையே ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிவடிவங்களைக் குறித்து நிற்கும் பாங்கினைச் **செந்தமிழ் இலக்கணம்** ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளமை அவருக்கு ஒலியியல் தொடர்பான சிறந்த சிந்தனை இருந்துள்ளது என்பதை உணரவைக்கின்றது.

சுட்டெழுத்துத் தொடர்பாக ஆசிரியர் ஒரு புதிய கருத்தினை முன்வைக்கிறார். இது பொருத்தமான கருத்தோ என்பது ஆராயற்பாலது. தமிழிலுள்ள அ, இ, உ என்ற மூன்று சுட்டெழுத்துக்களுள் இ பேசுபவருக்கு அருகிலுள்ளதைச் சுட்டவும், உ கேட்பவருக்கு அருகிலுள்ளதைச் சுட்டவும், அ இருவருக்குமே தூரத்திலுள்ளதைச் சுட்டவும் பயன்படுவதை துருக்கிய மொழியிலும் தமிழ்மொழியிலும் காணலாம். ஆனால், **செந்தமிழ் இலக்கணம்** ஆசிரியர் "அந்த என்பது தூரத்திலுள்ள பொருளையும், இந்த என்பது சமீபத்திலுள்ள பொருளையும், உந்த என்பது பின்புறத்திலுள்ள பொருளையும் குறிக்குமென்று நன்கு விளக்குகின்றது" என்று கூறுகிறார். உகரச்சுட்டு பின்புறத்திலுள்ள பொருளைச் சுட்டுமென்றால், யாருடைய பின்புறம் என்னும் வினா எழுகின்றது. பேசுபவருடைய பின்புறமா அல்லது கேட்பவருடைய பின்புறமா? எனவே உகரச்சுட்டுப் பற்றிய இந்த விளக்கம் பொருத்தமாகத் தென்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செந்தமிழ் இலக்கணம்** ஆசிரியர் புதுமையான எண்ணங்களுடையவராய் உள்ளார் என்பதற்கு நூலிலே பல சான்றுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஒன்றைத் தருகிறேன். மங்கலமொழி பற்றிக் கூறவந்த ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

> "சிலவித்துவான்கள் செத்தார், இறந்தார், சுடுகாடு, ஓலை என்பன அமங்கலச் சொல்லென்றும், இவற்றிற்கு மங்கலச் சொற்கள் துஞ்சினார், சிவபதமடைந்தார், நன்காடு. திருமுகம் என்றும் கூறுவர். ஆனால், திருவாசகத்தில் செத்திலாப் பத்து என்ற பதிகத்தில் சாதல், செத்திலேன் என்றும், நாலடியாரில், "செத்தாரைச் சாவார் சுமந்து" என்றும் கூறியிருப்பதால், செத்தாரென்ற சொல் மேம்பாடு பெற்று நிற்கின்றது...."

என்று ஒவ்வொரு அமங்கலச் சொல்லுக்கும் இலக்கியச்சான்று காட்டி, அச்சொற்களை மங்கலச் சொற்களாகவே கொள்ளலாம் என்று கூறியிருப்பது புதுமையான விளக்கமாகும்.

நன்னூல் இலக்கண விதிகளுக்கெல்லாம் எளிமையான நடைமுறை எடுத்துக் காட்டுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல்வேறு சிறப்பான பண்புகள் கொண்டதாக செந்தமிழ் இலக்கணம் அமைந்துள்ளது.

இத்தகைய இந்நூலை மீள்பதிப்புச் செய்வதற்கான முன்மொழிவினை ஏற்றுக் கொண்ட வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், வடமாகாணக் கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள், இளைஞர், விவகார அமைச்சின் செயலாளருக்குப் பரிந்துரைத்ததை அமைச்சர் முதலானவர்கள் ஏற்றுக்கொண்டதையடுத்து இந்நூல் வெளிவருகின்றது.

நன்னூல் இலக்கணத்தைக் கற்பதற்கு இன்று பெரும்பாலானவர்கள் இடர்படு கிறார்கள். இத்தகையோர் இராமநாதனின் செந்தமிழ் இலக்கணம் நூலைப் படித்தால் பயன் பெறுவர். மொழியியல் கருத்துக்களையும் பயன்படுத்தி எழுதப்பட்ட இந்நூல் இன்றைய தமிழ் இலக்கண மாணவர்களுக்கு ஓரளவு துணை செய்யவல்லது. இதை எண்ணியே இந்நூலை மீள்பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டது.

முதல் நூலில் 'திருத்தப் பத்திரிகை' என்றொரு பகுதி இருந்தது. மீள்பதிப்புச் செய்யும் போது பிழைகளெல்லாம் திருத்தப்படுவதால், இப்பகுதி நீக்கப்படுகிறது.

காலத்தினுடைய தேவையை அறிந்து இச்செந்தமிழ் இலக்கணம் நூலை சேர். பொன். இராமநாதன் எழுதினார். இன்றும் அந்தத் தேவை இருப்பதனால், மீள்பதிப்புக்கு உதவும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கு நாம் நன்றி கூற வேண்டும். இதற்கு உறுதுணையாயுள்ள கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகார அமைச்சின் மாண்புமிகு அமைச்சர், முதன்மைச் செயலாளர், செயலாளர், பண்பாட்டலு வல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் யாவருக்கும் தமிழ் மக்கள் தமிழ் அறிவுலகோர் நன்றி கூறுகின்றனர்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்,**
**பேராசிரியர் ச. மனோன்மணி**
**சைவப்புலவர் கு. றஜீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி



பண்பாட்டாலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் “செந்தமிழ் இலக்கணம்” எனும் நூலுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இந்நூல் சேர்.பொன்.இராமநாதனால் எழுதப்பட்ட இலக்கண நூலாகும். நன்னூலின் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய இரண்டு பகுதிகளையும் மட்டும் விளக்கும் இந்த நூல் முதல்பாகமாக வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நன்னூல் இலக்கணத்தினை மாணவர்கள் எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் மிகவும் எளிமையான நடையில் உருவாக்கப்பட்டதே செந்தமிழ் இலக்கணம் என்ற இந்த இலக்கண நூலாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் எமது நாட்டில் பல தமிழ் அறிஞர்கள் தோன்றி தமிழுக்கு பெரும் தொண்டாற்றி இருக்கின்றார்கள்.

தமிழ்ப் புலமை நெறிப்பட்ட ஒரு பரம்பரை இங்கு இருந்திருக்கின்றது என்பதற்கு அவர்கள் ஆற்றிய தமிழ்ப் பணிகள் சான்றாக விளங்குகின்றது. தமிழ்ப் பரப்பில் சிறப்பாக இலக்கணத்துறையில் எமது நாடு தனக்கென ஒரு தனித்துவமான இடத்தினைக் கொண்டிருந்தது. அதனால் தான் இங்கு பலவகையான இலக்கண நூல்கள் காலத்துக்குக் காலம் எழுந்தவண்ணம் இருந்திருக்கிறது.

அந்தவகையில் தான் சேர்.பொன்.இராமநாதன் அவர்களால் உருவாக்கப் பட்ட இந்த செந்தமிழ் இலக்கணம் என்ற நூல் செந்தமிழின் இலக்கணச் சிறப்பினை மிக எளிய நடையில் உணர்த்தி நிற்கின்றது. இந்த நூல் 1927 ஆம் ஆண்டு வெளிவந்ததற்கு பின்னர் இன்றுவரை தொடர்ந்து வெளிவராமல் இருந்திருக்கின்றது. எம் நாட்டின் எழுத்தாளர்களினால் உருவாக்கப்பட்ட பழைய நூல்களை மீண்டும் மீள்பதிப்புச் செய்கின்ற ஒரு பணியினை பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மேற்கொள்ளுகின்றது. உண்மையில் இது ஒரு ஆவணமாக்கல் பணியாகவே இருக்கின்றது. எம்மவர்களின் அளப்பரிய பணியினை அழிந்து போகாது பாதுகாக்கும் ஒரு காலம் கருதிய பணியாகவே இது அமைந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ் இலக்கணம் நன்னூலாருடைய இலக்கணக் கோட்பாடுகளை மிகத் தெளிவாக விளக்கி நிற்கின்றது. இன்று பல்கலை மாணவர்களுக்கு நன்னூல் இலக்கணம் ஒரு பாடமாக இருக்கின்ற தருணத்தில் இந்த நூல் வெளிவருவது மாணவர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும் என நம்புகின்றேன். எனவே இப்பணியில் ஈடுபட்ட பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், பதிப்பாசிரியர்கள், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் மலர் குழுவினருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி. சத்தியசீலன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

யாழ்ப்பாணம் அறிவாலும். ஆன்மீகத்தாலும் உயர்ந்த விழுமியங் களாலும் உயர்நிலையில் உள்ள ஒரு பிரதேசமாகும். தமிழுக்கும் சமயத்திற்கும் இங்குள்ள அறிஞர்கள் பெரும் தொண்டாற்றி உள்ளார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்தவர்களுக்கே உரிய நூற்றாண்டாகும். இந்த நூற்றாண்டில் தான் ஈழம் பல அறிஞர்கள் தமிழுக்கும் சமயத்திற்கும் தொண்டாற்றக் கண்டுள்ளது.

இந்த வகையில் யாழ்ப்பாணத்தின் புலமைப்பாரம்பரியத்தில் இலக்கணப் புலமை என்பது ஒரு காலத்தில் உயர்ந்த இடத்தில் இருந்திருக்கின்றது என்பதை இன்று நாம் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. பண்டிதர்களாலும், வித்துவான்களாலும் தமிழ் இலக்கணம் ஒரு கட்டுக்கோப்பான நிலையில் பாதுகாத்து வளர்க்கப்பட்டுள்ளது.

ஈழத்து இலக்கணப் பாரம்பரியத்திலும் அதன் வரலாற்றிலும் குறிப்பிடக் கூடியவர்களாக ஆறுமுகநாவலர், கணேசையர், சுன்னாகம் குரமாரசுவாமிப் புலவர், பண்டிதர் வீரகத்தி, போன்ற பலர் இருந்திக்கிறார்கள். யாழ்ப்பாணத்து புலமைத்துவத்தின் இன்னொரு பரிமாணமாக பிற்கால மாணவர்கள் இலக்கணத்தினை இலகுவாகக் கற்கும் பொருட்டு அவற்றின் கடின சொல்நடை களை இலகுபடுத்திய ஓர் இலக்கண உருவாக்கம் ஆறுமுகநாவலருடைய இலக்கணச் சுருக்கத்துக்குப் பிறகு சேர்.பொன்.இராமநாதன் அவர்களால் "செந்தமிழ் இலக்கணம்" என்ற பெயரில் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. நன்னூல் இலக்கணத்தினை மிக எளியமுறையில் தெளிவுபடுத்தும் இலக்கணமே "செந்தமிழ் இலக்கணம்" ஆகும். இது அச்சில் வெளிவந்து நீண்ட காலமாகையால் இந்நூல் பற்றி இக்கால தலைமுறையினருக்கு அறிமுகமில்லாது போய்விட்டது.

யாழ்ப்பாணத்தின் இலக்கணப் பாரம்பரியத்தில், இலக்கண முயற்சிகளுக்கு யாழ்ப்பாணத்தவர்கள் ஆற்றி இருக்கும் பணியினை ஆவணப்படுத்தும் நோக்கில் இந்த நூல் மறுபதிப்புச் செய்யப்படுகின்றது. தற்கால இலக்கண வழக்கிற்கு ஏற்றவாறு இருக்கும் இந்த இலக்கணத்தினை இக்காலத் தலைமுறையினரும் எதிர்காலத் தலைமுறையினரும் தக்கவாறு பயன்படுத்தி எமது இலக்கணப் பாரம்பரியத்தினை தொடர்ந்து பேணுவதற்கு இப் பதிப்பு முயற்சி ஓர் உந்து கோலாக அமையும். இப்பதிப்பு முயற்சியில் ஈடுபட்ட பதிப்பாசிரியர்களான பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், சைவப்புலவர் கு.றஜீபன் ஆகியோருக்கு திணைக்களம் சார்ந்து நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற இந்த இலக்கண நூல் யாழ்ப்பாணத்தின் இலக்கணப் பாரம்பரியத்தினை அடையாளப்படுத்தும் ஒரு நூலாகும். இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**திருமதி.அபிராமி பாலமுரளி**
உதவிப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வடமாகாணம்
2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ் இலக்கணம்

## பாயிரம்

ஸமஸ்க்ருத பாஷையில் லக்ஷணம் - லக்ஷ்யம் என்ற பதங்கள் தமிழில் இலக்கணம் - இலக்கியம் எனப்படும்.

லக்ஷணம், லக்ஷ்யம் என்ற ஸம்ஸ்க்ருத பதங்களிரண்டும் "லக்ஷ" (தரிசனம், அறிகுறி) என்ற தாதுவில் நின்று ஜனித்து, அறிகுறி (அறிதலுக்குரிய அடையாளம்) என்றும், அறியப்பட்ட பொருள் என்றும், முறையே பொருள் தரும்.

எந்தப் பதங்களால் (சொற்களால்) ஒன்றை அதிவ்யாப்தி, அவ்யாப்தி, அஸம்பவம் என்ற தோஷங்களற அறியலாமோ, அவை அதன் லக்ஷணம் எனப்படும்.

அதிவ்யாப்தி தோஷம் என்பது, குறிக்கப்பட்ட பொருளைக் கடந்து வேறு பொருளையும் உணர்த்தும் சொற்குற்றமாம்.

அவ்யாப்தி தோஷம் என்பது, குறிக்கப்பட்ட பொருளின் சில குறிகளை மாத்திரம் உணர்த்தும் சொற்குற்றமாம்.

அஸம்பவ தோஷம் என்பது குறிக்கப்பட்ட சம்பவம் (தோற்றம், பிறப்பு, அங்கப்பொருத்தம்) இல்லாமையை உணர்த்தும் சொற்குற்றமாம்.

இந்த மூன்று தோஷங்களையும் அகற்றி எந்தப் பதங்கள் ஒரு பொருளின் குறிகளை (அமைதிகளை) விளக்குமோ, அவை அதன் லக்ஷணம் என்றறிக.

லக்ஷணத்தை பெற்றுள்ள (பொருந்தி நிற்கும்) பொருள் லக்ஷ்யம் எனப்படும். இது தக்க குறிகளால் தனக்கு அமைந்த லக்ஷணங்களைக் கொண்டு அறியப்படும்.

இலக்கணம் என்றது பொதுவாகக் குறியெனப் பொருள் பட்டாலும், தமிழகத்தில் (தமிழர்கள் வாழும் தேசத்தில்) செந் தமிழுக்குரிய இலக்கணம் என்று சிறப்புப் பெற்று விளங்கி நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாயிரம்

யாதானும் ஒரு பொருளுக்கு இலக்கணம் கூறினாலும் சொற்களைக் கொண்டே கூறவேண்டுமாதலாலும், சொல்லுக்கு இலக்கணம் அமையாவிடில் ஏனைய பொருள்களுக்கும் இலக்கணம் கூற ஒண்ணாதாதலாலும், யாவற்றிலும் சிறந்த இலக்கணம் மொழி யிலக்கணமே - பாஷா இலக்கணமே - பேச்சிலக்கணமே- என்று ஸித்திக்கின்றது.

செந்தமிழ்ப்பேச்சுக்கு இயல்பாக இருக்கின்ற அமைதிகள் அதன் எழுத்துக்கும், சொல்லுக்கும், சொல்லினுள் நிகழும் பொருளுக்கும், பாட்டு என்ற யாப்புக்கும், அலங்காரம் என்ற அணிக்கும் உரிய முறைகளே.

ஆதலால், செந்தமிழிலக்கணப் பாகுபாடுகள் எழுத்தாலும், சொல்லாலும், பொருளாலும், யாப்பாலும், அணியாலும், ஐந்து வகைப்படும்.

இந்த ஐவகை இலக்கணங்கள் இலக்கியங்களில் அமைந்து கிடக்கின்றன.

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளினின் றெண்ணெய் எடுப்பதுபோல
இலக்கியத்தினின் றெடுபடும் இலக்கணம்"

என்பது அகஸ்தியர் சூத்திரமாம்.

தமிழிலக்கியம் என்பது தமிழறிஞர் இயற்றிய செய்யுளும் உரைநடைகளுமாம்.

செய்யுள் என்பது பாட்டு. வாக்கு என்ற இந்திரியம் எதனைச் சீர், தளை, அடி, தொடை என்ற கட்டுக்களோடு உண்டாக்குமோ, அது செய்யுளாம். பலவகைத் தாதுக்களாலாய உடலை உயிர் பொருந்தும் படி இறைவன் செய்வதுபோல, சீர், தளை, அடி, தொடை என்ற கட்டுக்களாலாய சொற்றொடரைப் பொருள் பொருந்தும்படி வல்லமைபெற்ற வாக்கு அணியொடு(அழகொடு) செய்வது செய்யுளாம்.

"வல்லோர் அணிபெறச் செய்வது செய்யுள்" என்று பவணந்திமுனிவர் விளக்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாயிரம்

உரைநடை என்பது சீர் தளை முதலிய கட்டுப்பாடுகளின்றி அறிஞர்கள் பேசுவதும் எழுதுவதுமாம்.

இலக்கணப் பாகுபாடுகளாகிய எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பவற்றைக் கற்றாலின்றி யாம் செவ்வையாகத் தமிழை எழுதவும் பேசவும் மாட்டோம், அறிஞர்கள் இயற்றிய நூல்களையும் ஆராய்ந்து அறியவும் மாட்டோம். இந்த மூடநிலையில், அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருஷார்த்தம் ஆத்மாவுக்கு அந்நியமாகும்,

மேற்கூறிய ஐந்து இலக்கணங்களுக்கும் ஆதி நூல்கள் அகஸ்திய முனிவர் அருளிய அகஸ்த்யம், ஜமதக்நி புத்ரராகிய த்ரணதூமாக்நி என்னும் மகர்ஷி இயற்றிய தொல்காப்பியம் என்பவையாம்.

இவற்றில் அகஸ்த்யம் மறைந்துபோயிற்று. தொல்காப்பியம் அச்சிடப்பட்டுத் தற்காலத்தில் வழங்கி வருகின்றது.

தொல்காப்பியத்தை இலக்கியப் பயிற்சியில் உயர்ந்தவர்களே அறியத்தக்கவர்கள். அப்பயிற்சியிற் குறைந்தவர்கள் கற்கும் பொருட்டுத் தொல்காப்பியத்தைப் பின்பற்றி ஐயனாரிதனாரால் (1) புறப்பொருள் வெண்பாமாலையும், நாற்கவிராய நம்பியால் (2) அகப்பொருள் விளக்கமும், குணவீரபண்டிதரால்(3) நேமி நாதமும், புத்தமித்திரனால் (4) வீரசோழியமும், பவணந்திமுனிவரால் (5) நன்னூலும், அம்ருத சாகரரால் (6) யாப்பருங்கலக் காரிகையும், திருக்குருகூர் ரத்நக்கவிராயரால் (7) மாறனலங்காரமும், வைத்தியநாதநாவலரால் (8) இலக்கண விளக்கமும், சாமிநாத தேசிகரால் (9) இலக்கணகொத்தும் வழி நூல்களாகச் செய்யப் பட்டன.

இவற்றுள் நன்னூல் பவணந்திமுனிவரால் இற்றைக்கு 700 வருஷங்களுக்குமுன் செய்யப்பட்டது. இவர் ஜைனமதத்துறவி. ஜைனருள் துறவிகள் நந்தி என அழைக்கப்படுவர். இவரூர் கொங்கு மண்டலத்திலுள்ள சனகாபுரம். இவராசிரியர் சன்மதிமாமுனிவர். பவணந்திமுனிவர், அகஸ்திய சூத்திரங்களையும் தொல்காப்பிய சூத்திரங்களையும் அவிநயம் முதலிய பழைய சூத்திரங்களையும் ஆதாரமாகக்கொண்டு, தமது நன்னூலை இயற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாயிரம்

நன்னூல் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் மாத்திரம் கூறுவதாக இப்பொழுது வழங்கி வருகின்றது. ஆனால் ஐந்திலக்கணங்களையும் வகுத்தே பவணந்திமுனிவர் ஆதியில் நூலியற்றினார் என்று நன்னூலுக்குக் கூறப்பட்ட சிறப்புப் பாயிரத்தி னால் தெரியவருகின்றது.

இப்பாயிரம் பாடியவரின் பெயர் தற்காலத்தில் புலப்பட வில்லையாயினும், அவர் பவணந்திமுனிவருடைய ஆசிரியர், அல்லது உடன்கற்றவர்(சகபாடி), அல்லது மாணாக்கராக இருந்திருக்கவேண்டுமென்பது திண்ணம். இந்தப் பாயிரத்தில் சீயகங்கன் என்ற மன்னன் பவணந்தி முனிவரை ஐந்திலக்கணங் களுக்கும் நூல் செய்து தருக என்று கேட்டதும், அவர் அவ்வாறே நன்னூல் செய்தனர் என்பதும் பின்வரும் வரிகளில் குறிக்கப் படுகின்றன.

"அருந்தமிழ் ஐந்தையும் யாவரும் உணரத்
தொகைவகை விரியிற் றருகென ...
... ... ... ... ...
சீயகங்கன் மொழிந்தன னாக
முன்னோர் நூலின் வழியே
நன்னூற் பெயரின் வகுத்தனன்"

சீயகங்கன் என்பவன் மூன்றாவது குலோத்துங்கச் சோழனுக் குத் திறைகொடுத்துக் கிறிஸ்தவாப்தம் 1200 - ஆம் ஆண்டளவில் கொங்குமண்டலத்தில் வாழந்தவனென்று சாதன ஆராய்ச்சிக் காரர்கள்(Epigraphists) யூகிக்கின்றனர்.

தொன்றுதொட்டு ஸம்ஸ்கிருத பாஷைக்குரிய இலக்கணங் களை விளக்கும் நூல் வியாகரணம் எனப்படும். இதற்குச் சூத்திரம் உண்டு. வேத கர்மகாண்ட விதிகளுக்கும் சூத்திரமுண்டு. அவ்வாறே ஞானகாண்டத்திற்கும் சூத்திரம் உண்டு. அகஸ்தியரும் சூத்திர ரூபமாக அகஸ்தியத்தையும் அருளினர். அகஸ்தியத்தை அண்டித் தொல்காப்பியச் சூத்திரங்களும் வந்தன.

ஸம்ஸ்க்ருதத்தில் ஸூத்ரம் என்ற பதம் தமிழில் சூத்திரம் என வரும். சூத்திரம் = நூல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாயிரம்

கைவன்மையுள்ள ஒரு பெண் பஞ்சின் முனைகளை இழை யாக்கி நூற்கும் நூல் போல, நுண்ணறிவுள்ள புலவன் தனது வாயைக் கையாகவும், சொற்களைப் பஞ்சாகவும், செய்யுளை இழையாகவும், மதியைக் கதிராகவும் கொண்டு முடிப்பதே கல்வி நூல்.

"பஞ்சிதன் சொல்லாய்ப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையாய் - எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு"

என்பது ஆப்தர் வாக்கு.

பெரிய சரீரம் முதலியவற்றின் சாயைத் தன்னுள்ளே அடக்கிக் காட்டும் சிறிய கண்ணாடி போல, சில எழுத்துக்களாலாய வாக்கியத் திலே பலவகைப்பட்ட பொருள்களைச் செவ்வையாக அடக்கித் திட்பமாகவும் நுட்பமாகவும் விளக்கிக் காட்டுவதே சூத்திரம்.

இதற்கு மேற்கோள், -

"சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பம் சிறந்தன சூத்திரம்"

சூத்திரம் தமிழ்ப்பாக்களில் அகவற்பா என்னும் வகுப்பைச் சேர்ந்தது.

பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட சூத்திரங்கள் தமிழ் பேசுவோர் வாக்கை எளிதாகச் சுத்திசெய்வதற்கும், தமிழிலுள்ள புருஷார்த்த நூல்களை இலகுவாக வாசித்தற்கும் போந்த நன்னெறி கள் அடங்கியிருப்பதுபற்றி, அவற்றிற்கு "நன்னூல்" என்னும் பெயர் ஆக்கியோனால் இடப்பட்டது. எந்தநூல் செந்தமிழையாவது , வேறொரு சிறந்த பாஷையை யாவது, நன்றாய்ப் பேசவும் எழுதவும் கற்பிக்குமோ, அந்தநூல் அப்பாஷைக்கு "நன்னூல் " எனத்தகும்.

பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலுக்கு முதலில் உரை செய்தவர் மயிலை நாதர். இவர் நன்னூலை ஆக்குவித்த சீயகங்கன் காலத்திலாவது, அல்லது அவன் பரம்பரையில் வந்த ஒரு உபகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரியின் காலத்திலாவது இருந்திருக்கவேண்டுமென்று தமிழ் வித்வசிரோமணியாகிய மஹோபாத்யாய உத்தமதானபுரம் வே.சுவாமிநாத ஐயரவர்கள் தமது மயிலைநாதர் உரைப்பதிப்பில் கூறுகின்றார்கள்.

மயிலைநாதருக்கு அநேக வருஷங்களக்குப் பின்னர், நன்னூலுக்கு விருத்தி உரை செய்தவர் சங்கரநமச்சிவாயப் புலவர்.

சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் நன்னூலுக்கு உரை இயற்றியவர்கள் விசாகப்பெருமாளையரும் இராமா நுஜ கவிராயருமே. ஆறுமுகநாவலர் விசாகப்பெருமாளையர் இயற்றிய உரையை விளக்கி அச்சிட்டார்.

தமிழகத்தில் வழங்கும் *சிற்றிலக்கிய நூல்களிற் றோன்றும் எழுத்து சொல் அமைதிகளை அறிதற்குச் சிறந்த கருவி பவணந்தி முனிவரது நன்னூலே என்று இலக்கண ஆசிரியர்கள் எடுத்துப் பாராட்டி வருவதால் , அதனிற் கூறிய சூத்திரங்களை யாம் எமது நூலின் எழுத்துசொல் என்னும் அதிகாரங்களில் தழுவிச் செல்கின்றோம்.

தமிழிலக்கணம் ஐந்தனுள் முதல் வருவது எழுத்திலக்கணம் இது எழுத்தின் தன்மைகளை , எழுத்தைப்பற்றிய அமைதிகளைக், கூறும்.

எழுத்துக்களின் அமைதிகளை விளக்கும் பிரிவு எழுத்ததி காரம் எனப்படும்.

ஓர் அரசன் தனக்குள்ளடங்கிய நாட்டைப் பல அதிகாரிகள் வழித்தாக அதிகாரம் செய்து ஆளுவது போல, ஒரு நூல் விஷயங் களைப் பல பிரிவுகளாகப் பிரித்து, அப்பிரிவுகளால் ஆளுவதே இங்கு அதிகாரம் எனப்படும்.

எழுத்தின் இலக்கணங்களை எல்லாம் ஒருபிரிவின் ஆளுகைக்குள் அடக்கினமையால் இப்பிரிவு எழுத்ததிகாரம் எனப்பட்டது.

---

*சிற்றிலக்கியம் = சிறு இலக்கிய நூல்கள். இவை பேரிலக்கிய நூல்களிலும் சிறியன. பேரிலக்கண அமைதிகளைச் சங்கம் மருவிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற நூல்களிற் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாயிரம்

இவ்வெழுத்திலக்கணத்தில் எழுத்தின் அமைதிகள் பன்னிரண்டு வகையாக விளங்கும். :- அவையாவன :-

1. எழுத்துக்களின் தொகை எத்தனை என்பதும், 2. எழுத்துக்களின் பெயர்கள் எவை என்பதும், 3. எழுத்துக்கள் ஒன்றன்பின் ஒன்று வரும்முறை எப்படி என்பதும் 4. எழுத்துக்களின் ஒலிகள் எவ்விதமாய்ப் பிறக்கும் என்பதும், 5. எழுத்துக்களின் வரிவடிவங்கள் எவ்விதம் என்பதும், 6. எழுத்துக்களின் ஒலி வடிவங்கள் எவ்வளவு மாத்திரை என்பதும், 7. சொற்களுக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எவை என்பதும், 8. சொற்களுக்கு முடிவில் வரும் எழுத்துக்கள் எவை என்பதும், 9. சொற்களுக்கு இடையில் வரும் எழுத்துக்கள் எவை என்பதும், 10. ஓர் எழுத்து வேறோர் எழுத்தாய் எப்படி திரிபு பெறும் என்பதும், 11. எழுத்துக்கள் சொற்களாகும் தன்மை எப்படி என்பதும், 12. எழுத்துக்கள் நிலைமொழி முடிவிலும் வருமொழி முடிவிலும் நின்று எவ்விதம் ஒன்றோடொன்று புணரும் (சேரும்) என்பதுமாம்.

இவை அனைத்தும் எழுத்துக்களைப் பற்றிய இலக்கணமே ஆயினும், நன்னூலார் தமது எழுத்திலக்கணத்தில் இவற்றை ஐந்து இயலாகப் பிரித்துக் கூறினார்.

1. எழுத்துக்களின் தொகை முதற்கொண்டு எழுத்துக்கள் திரிபு பெறும் தன்மை ஈறாக உள்ள பத்துவித எழுத்தமைதிகளை எழுத்தியல் என்றும்,

2. பதினொன்றிற் குறித்த எழுத்துக்கள் சொற்களாகும் தன்மையைப் பதவியல் என்றும்,

3. பன்னிரண்டிற் குறித்த எழுத்துக்கள் நிலைமொழி முடிவிலும் வருமொழி முதலிலும் நின்று புணரும் வகையை நிலைமொழி முடிவில் (ஈற்றில் ) உயிரெழுத்துக்கள் நின்று புணருமிடத்து உயிர்ப்புணரியல் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அவ்விடத்தில் மெய்யெழுத்துக்கள் நின்று புணருமிடத்து மெய்யிற்றுப் புணரியல் என்றும்,

5. அவ்விடத்தில் உருபுகள் நின்று புணருமிடத்து உருபியல் என்றும்,

பிரித்துக் கூறினார். இவ்வாறே இந்நூலில் எழுத்ததிகாரம் விவரிக்கப்படும்.

எழுத்திலக்கத்தின் பின்னர் சொல்லிலக்கணம் ஆராயப்படும்.

எழுத்துக்களுக்கு உரிய அமைதிகளைப் பற்றிக் கூறும் இலக்கணப்பிரிவு எழுத்ததிகாரம் எனப்பட்டாற்போல சொற்களின் அமைதிகளைப் பற்றிய பிரிவு சொல்லதிகாரம் எனப்படும்.

சொற்களானவை பெயர்ச்சொற்கள், வினைச் சொற்கள், இடைச் சொற்கள், உரிச் சொற்கள் என நான்கு வகைப்படும். பவணந்தி முனிவர் தனது நன்னூலில்,

1. பெயர்சொற்களின் அமைதிகளைக் பெயரியல் என்றும்,
2. வினைச்சொற்களின் அமைதியினை வினையியல் என்றும்,
3. இடைச்சொற்களின் அமைதியினை இடையியல் என்றும்,
4. உரிச் சொற்களின் அமைதியினை உரியியல் என்றும்,
5. இவ்வியல்களிற் கூறாத சொல்லமைதிகளைப் பொதுவியல் என்றும்,

ஐந்து இயல்களாய்ச் சொல்லதிகாரத்தை விளக்கியிருக்கின்றனர். அவ்வாறே இந்நூலில் சொல்லதிகாரம் வகுத்துக் கூறப்படும்.

பாயிரம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கணம்

## முதலாவது
## எழுத்ததிகாரம்

தமிழ்மொழியின் பஞ்சலக்கணங்களுக்குள் முதற் கூறாகிய எழுத்ததிகாரம் எழுத்தின் தன்மைகள் யாவற்றையும் கூறும். இது பன்னிரண்டு பிரிவுகளையுடையது. அப்பிரிவுகளாவன :-

1. எழுத்துக்களின் கணக்கு ... "எண்"
2. எழுத்துக்களின் நாமம், அல்லது ... "பெயர்"
3. எழுத்துக்கள் ஒன்றன்பின் ஒன்று நிற்கும் ஒழுங்கு அல்லது ... "முறை"
4. எழுத்துக்களின் தோற்றம் அல்லது ... "பிறப்பு"
5. எழுத்துக்களின் வரி வடிவம் "உருவம்"
6. எழுத்துக்களின் ஒலி அளவு, அல்லது ... "மாத்திரை"
7. சொற்களுக்கு முன்நிற்கும் எழுத்துக்கள் அல்லது "முதனிலை"
8. சொற்களுக்கு இறுதியில் (முடிவில்) நிற்கும்.... எழுத்துக்கள் அல்லது ... "இறுதிநிலை"
9. சொற்களுக்கு இடையில் நிற்கும் எழுத்துக்கள் அல்லது .... "இடைநிலை"
10. ஒரெழுத்து நிற்குமிடத்து மற்றோர் எழுத்து வருதல் அல்லது "போகி"
11. எழுத்துக்கள் சொற்களாய் வருதல் அல்லது "பதம்"
12. எழுத்துக்கள் நிலைமொழியிறுதியிலும் வருமொழி முதலிலும் நின்று புணரும் (சேரும்) புணர்ச்சி அல்லது .. "புணர்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்ததிகாரம்

இதற்கு நன்னூற் சூத்திரம் : -

க. எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலி யென்றா
பதம் புணர் பெனப்பன் னிருபாற்றதுவே.

" என் ... ... புணர்பு என அது பன்னிரனிபாற்று" அந்த எழுத்திலக்கணம் எண், பெயர் , முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதநிலை, இறுதிநிலை , இடைநிலை, போலி, பதம், புணர்வு என்ற பன்னிரண்டு பிரிவுகளை உடையது,

நன்னூலார் எழுத்துக்களின் கணக்கை முன் விரித்துக் கூறிய பின்னர் அவற்றின் பெயரையும் மற்றைய தன்மைகளையும் முறையே கூறுகின்றார். "எண்" முதல் " போலி" வரையுள்ள பத்து விஷயங்கள் எழுத்தியல் எனவும், "பதம்" பதவியல் எனவும், "புணர்பு" உயிற்றுப்புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுணியல் எனவும் ஐந்து இயல்களாக எழுத்ததிகாரத்தை நன்னூலார் பிரித்தார்.

இச்சூத்திரத்தின் இரண்டாம் அடியில் வந்துள்ள "என்றா" என்பது என்றும் எனப் பொருள் படும்.

மூன்றாம் அடியிலுள்ள "அதுவே" அந்த எழுத்தே, அந்த எழுத்திலக்கணமே.

நன்னூலாரின் கடவுள் வாழ்த்தில் " நான்முகற்றெழுது நன்கியம்புவ னெழுத்தே" (நான்முகன் தொழுது நன்கு இயம்புவன் எழுத்தே) என்று கூறியிருப்பதாலும், அதற்கடுத்த சூத்திரத்தில், " எண் பெயர் முறை ... எனப்பன் னிருபாற் றதுவே" என்று கூறியிருப்பதாலும்," அதுவே என்றது அந்த எழுத்தே என்று பொருள் படும். கண்டு, எழுத்து = எழுத்திலக்கணம்.

" அதுவே " - அது = ஏ. ஏகாரம் ஈற்றசை, ஈற்றில் (முடிவில்) வரும் அசையெழுத்து. " பதம் புணர்பு" பதமும் புணர்ப்பும் எனப் பொருள்படும்.

" பன்னிருபாற்று" = பன்னிரண்டு பகுதியை யுடையது. பால்+ று= பாற்று பால்= பகுதி , பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்ததிகாரம்

எண் முதல் போலி ஈறாகவுள்ள எழுத்திலக்கணங்கள் பத்தும் எழுத்தியலில் விபரிக்கப்படும்.

கூ-ம் பக்கத்திலும் எ-ம் பக்கத்திலும் காட்டியபடி எழுத்ததிகாரம் ஐந்து இயல்புகளை உடையது. அவையாவன :-

1. எழுத்தியல் 2. பதவியல் 3. உயிரீற்றுப் புணரியல்
4. மெய்யீற்றுப் புணரியல் 5. உருபு புணரியல்

இவற்றில் எழுத்தியல் இனி விவரிக்கப்படும்.

எழுத்தியல் = எழுத்தின் இயல்பு, எழுத்துக்களின் தன்மைகள், எழுத்துக்களைப் பற்றி அறிய வேண்டிய பத்து வகை லஷணங்கள்

எழுத்துக்களின் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதனிலை, இறுதிநிலை, இடைநிலை, போலி என்ற பத்து விஷயங்களில் எண் இங்கு கூறப்படும்.

## 1. எழுத்துக்களின் எண்.

எழுத்துக்களின் எண் = ஒலிகளின் கணக்கு

ஒலி = ஓசை, தொனி, சத்தம், இது ஆகாசத்தின் கூறு (அம்சம்), ஆகாசத்தை ஆதாரமாகக் கொண்ட வாயு, தீ, நீர், மண் என்ற ஸூக்ஷம பூதங்களின்றும் , இவற்றைக் கொண்டு ஷருஷ்டிக்கப் பட்ட சாராசரங்களினதும் எழுகின்ற ஓசைகள் அளவிறந்தன. அவற்றைக் காதாற் கேட்டு ஆத்மா அறியும்.

ஆனால் காதாற் கேட்கப்படும் ஒலிகள் யாவற்றையும் வாக்கு என்ற இந்திரியம் ரூபிக்கவல்லதன்று. கேட்ட ஒலிகளை வாக்கு ரூபித்தாலும், அவ்வொலிகள் எல்லாம் எழுத்தாகா.

எவ்வொலிதான் எழுத்தெனில் காதால் கேட்கத்தக்கதும், வாக்கால் ரூபிக்கத்தக்கதும் சொல்லுக்குக் காரணமானதும், ஆன ஒலியே எழுத்து என்றறிக.

தமிழிலுள்ள ஒலி வடிவங்கள் கோடுகளால் எழுதப்பட்டு வரி வடிவங்களாகிக் கண்ணுக்குப் புலன் ( விஷயம்) ஆகும்.
வடிவங்களாகிக் கண்ணுக்குப் புலன் (விஷயம்) ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் கொள்ளும் ஓரெழுத்தும் இரண்டு மூன்று முதலாகத் தொடர் எழுத்துக்களும், "சொல்" (மொழி) எனப்படும்.

நன்னூலாசிரியர் மொழிக்கு முதற் காரணம் எழுத்து என்பதும், அவ்வெழுத்து அணுத்திரளின் காரியமாகிய ஒலி என்றும் பின்வரும் சூத்திரத்தில் விளக்கியபடிஎழுத்திற்கு முதற்காரணம் அணுத்திரள் என்று பெறப்படும்.

அணுத்திரள் ஸூக்ஷும பூத அணுக் கூட்டம், நுட்பங்களின் சேர்க்கை.

பல அணுக்கள் ஒன்று கூடும் சமயத்தில் ஒலி பிறக்குமாதலால் ஒலிக்குக் காரணம் அணுத்திரட்சியே.

அணுவென்பது ஆகாச அணுவையும் , வாயு அணுவையும் தீயணுவையும் , நீரணுவையும், மண்ணணுவையும் என்க. ஆகாச அணுக்களோடு ஏனைய அணுக்கள் மோதினால் பற்பல ஒலிகள் தோன்றும். எங்ஙனமெனில் ஆகாச அணு (விண்ணணு) வோடு காற்றணு தாக்கக் காற்றொலி பிறக்கும், விண்ணணுவோடு தீயணு தாக்கத் தீயொலி பிறக்கும், விண்ணணுவோடு நீரணு தாக்க நீரொலி பிறக்கும் இவ்வாறு எமக்குப் புறத்தில் இசைக்கும் (தொன்றி வெளியேறிவரும்) எழுத்துக்கள் கணக்கற்றன.

இங்ஙனம் பஞ்சபூத அணுத்திரவாற் காரியப்பட்டுச் சொல்லுக்கு முதன்மையாகின்ற ஒலிகளே எழுத்துக்கள். அவ்வெழுத்துக்களின் கணக்கை (எண்ணை) விளக்கும்பொருட்டு அவற்றை முதலெழுத்து, சார்பெழுத்து என அறிஞர்கள் வகுத்தார்கள்.

இதற்கு நன்னூற் சூத்திரம் : -

உ. மொழிமுதற் காரண மாமணுந் திரளொலி
எழுந்தது முதல்சார் பெனவிரு வகைத்தே

இதன் பதப் பொருள் :

மொழி முதற் காரணம் ஆம் அணுத்திரள் ஒலி எழுத்து மொழிக்கு முதற்காரணமும் அணுத்திரளின் காரியமுமாகிய ஒலி எழுத்து எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எழுத்தியல் - (1) எழுத்துக்களின் எண் 13

அது முதல் சார்பு என இருவகைத்து = அவ்வெழுத்து முதலெழுத்து சார்பெழுத்து என்று இருவகையினையுடையது.

முதல் எழுத்துக்களின் (காரண ஒலிகளின்) வகை.

முதலெழுத்துக்கள் உயிர், மெய் என இருவகைப்படும்.

உயிரெழுத்துக்கள் 12 : அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ, மெய் (உடம்பு) எழுத்துக்கள் 18 : க் ங் ச் ஞ் ட் ண் த் ர் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்.

உயிரெழுத்துக்கள் 12 ம் மெய்யெழுத்துக்கள் 18 ம் கூடி முப்பது முதலெழுத்துக்களாகும்.

எழுத்தின் வகை உயிரும் உடம்பும் என்பதற்கும். நன்னூற் சூத்திரம் : -

௬. உயிரு முடம்புமா முப்பது முதலே

ஈண்டு, "முதல்" என்றது எழுத்து வரிசைகளின் ஆதிகள் (காரணங்கள்) ஆம். மற்றைய எழுத்துக்கள் இவற்றின் காரியங்கள் என்றறிக.

### சார்பெழுத்துக்களின் வகை

எழுத்து என்ற பதம் ஒலிவடிவமாயும் வரிவடிவமாயும் இருப்ப தால் சார்பெழுத்துக்கள் என்று கூறப்பட்டவை முதலெழுத்துக் களின் ஒலிகளாகிய 30 காரண ஒலிகளைச் சார்ந்துவரும் ஒலி வடிவங்கள் என்று அறிய வேண்டியது இச்சார்பெழுத்துக்கள் பத்துவகைப்படும்.

முதலெழுத்துக்கள் (அல்லது காரண ஒலிகள்) ஆகிய அ ஆ முதலிய உயிரொலிகள், க் ங் முதலிய உடம்பொலிகளிற் சென்றவுடகே இருநூற்றிப்பதினாறு (12 x 18 = 216) உயிர்மெய் ஒலிவடிங்கள் தோன்றும்.

க கா முதலிய பன்னிரண்டும் ங ஙா முதலிய பன்னிரண்டும்,
ச சா முதலிய பன்னிரண்டும் ஞ ஞா முதலிய பன்னிரண்டும்,
ட டா முதலிய பன்னிரண்டும் ண ணா முதலிய பன்னிரண்டும்,
த தா முதலிய பன்னிரண்டும் ந நா முதலிய பன்னிரண்டும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப பா முதலிய பன்னிரண்டும் ம மா முதலிய பன்னிரண்டும்
ய யா முதலிய பன்னிரண்டும் ர ரா முதலிய பன்னிரண்டும்
ல லா முதலிய பன்னிரண்டும் வ வா முதலிய பன்னிரண்டும்
ழ ழா முதலிய பன்னிரண்டும் ள ளா முதலிய பன்னிரண்டும்
ற றா முதலிய பன்னிரண்டும் ன னா முதலிய பன்னிரண்டும்

ஆகக் கூடிய இருநூற்றிப்பதினாறு உயிர்மெய்யெழுத்துக்கள் சார்பெழுத்தின் முதல் வகை ( அல்லது தலைப்பிரிவு) என்றறிக. சார்பெழுத்தின் ஏனைய ஒன்பது வகை ஒலிவடிவங்களைக் கீழ்வருமாறு காண்க.

| | | |
|---|---|---|
| முற்றப்தம் | .... இதன் பிரிவு | 8 |
| உயிரானபெடை | ... இதன் பிரிவு | 21 |
| ஒற்றனபெடை | ... இதன் பிரிவு | 42 |
| குற்றியலிகரம் | ... இதன் பிரிவு | 3 |
| குற்றியலுகரம் | ... இதன் பிரிவு | 36 |
| ஐகாரக்குறுக்கம் | ... இதன் பிரிவு | 3 |
| ஔகாரக்குறுக்கம் | .. இதன் பிரிவு | 1 |
| மகரக் குறுக்கம் | .. இதன் பிரிவு | 3 |
| ஆய்தக் குறுக்கம் | .. இதன் பிரிவு | 2 |

ஆய்தம் என்ற எழுத்து உயிருமன்று மெய்யுமன்று. மூன்று புள்ளிகளே ஃ இதற்கு வரிவடிவம். இந்த ஒரே ஆய்தத்துக்குப் பத்துவிதமான ஒலிகள் உண்டு. இவற்றுள் எட்டு ஒலிகள் மூன்றாய்தம் என்பதற்கு உரியன, இரண்டு ஒலிகள் ஆப்தக்குறுக்கம் என்பதற்குரியன.

மூற்றாய்தத்தின் விளக்கம் 51 - 52 பக்கங்களிலும், ஆதக் குறுக்கத்தின் விளக்கம் 71 ஆவது பக்கத்திலும் காண்க.

அளபெடை ஸ்ரீ உயிரெழுத்துக்கள் ஆ ஈ ஊ எ ஐ ஒ ஓ ஔ என்ற நெட்டெழுத்துக்களும், மெய்யெழுத்துள் ங் ஞ் ந் ம் ன் வ் ம் ய் ல் ள் ஃ என்னும் ஆய்தவெழுத்தும் செய்யுளிலே ஓசை குறைந்தவிடத்து தம் மாத்திரைக்கு மேற்பட்ட ஒலிகளை எடுக்கும்
அளபு + எடை = அளபெடை = மாத்திரை எடுத்தல்
அளவு + அடை = அளபடை = மாத்திரை எடுத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (1) எழுத்துக்களின் எண்.

உயிரெழுத்து அளவு கூடினால் உயிரான பெடை என்றும் ஒற்று (மெய்) எழுத்து அளவு கூடினால் ஒற்றளபெடை என்றும் கூறப்படும். இவற்றைப் பின்னர் விரித்துக் கூறலாம். (53 - 58 பக்கங்களிற் காண்க)

இ, உ, ஐ, ஔ, ம் என்ற ஒலிகள் தம்மாத்திரையிற் குறைந்து வரும்பொழுது அவற்றை முறையே "குற்றியலிகரம்", குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகாக் குறுக்கம் என்பர்.

அவற்றின் ஒலிப் பிரிவுகள் பின்னர் விளக்கப்படும். (58 முதலிய பக்கங்களைப் பார்க்க)

சார்பெழுத்துக்கள் பத்துவகை என்பதற்கு நன்னூற் சூத்திரம்.

**ச. உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள**
**பஃகிய இஉ ஐஔ மஃகான்**
**தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும்.**

இதன் பதப்பொருள் :

உயிர்மெய் = உயிர்மெய்யெழுத்துக்களும்
ஆய்தம் = முப்பாற் புள்ளிபெற்ற ஆய்தவெழுத்தும் (ஃ)
உயிரளவு = உயிரெழுத்தினது அளபெடையும்

ஒற்றளவு = மெய்யெழுத்தினது அளபெடையும்
குற்றளவு = மெய்யெழுத்தினது அளபெடையும்,
அஃகிய இ = (தனது மாந்திரையிற்) சுருக்கிய குற்றியலிகரமும்"
(அஃகிய) உ = (தனது மாத்திரையிற்) சுருங்கிய குற்றியலுகரமும்,
(அஃகிய) ஐ = ஐ காரக் குறுக்கமும்,
(அஃகிய) இ = ஔகாரக் குறுக்கமும்,
(அஃகிய) மஃகான் = மகரக் குறுக்கமும்

"ம" என்ற எழுத்தானது "கான்" என்ற சாரியையோடு புணரும்பொழுது, இடையிலே ஆய்தம் தோன்ற "மஃகான்" என வந்தது. (ம + கான் = மஃகான்)
(அஃகிய) தனிநிலை = ஆய்தக் குறுக்கமும் ஆகிய,

உயிரைப்போலவும் மெய்யைப் போலவும் இல்லாத நிலை தனி நிலை எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரானது மெய்யோடு சேர்ந்துவரும். மெய்யானது உயிரோடு சேர்ந்துவரும். ஃ என்ற ஆய்தம் உயிரோடும் மெய்யோடும் சேர்ந்து வராது. இவற்றினின்றும் இந்த ஆய்தம் தனிந்த நிலையைப் பெற்று நிற்றலால் "தனிநிலை" எனப்பட்டது.

" பத்தும் சார்பு எழுத்து ஆகும்" = பத்தும் சார்பொலியின் வகைகளாம்

பத்து வகையான சார்பெழுத்துக்களின் எண் காட்டு

நன்னூற் சூத்திரம் : -

ரு. உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு முன்றெற் றளபெடை
ஆறே ழஃகு மிம்முப் பானேழ்
உகர மாறா றைகான் முன்றே
ஔகா னொன்றே மஃகான் முன்றே
ஆய்த மிரண்டோடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றெழி முந்நூற் றெழுபா னென்ப.

இதன் பதப்பொருள் :

உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு = உயிர் மெய் இருநூற்றுப் பதினாறு.

உயிர் ஆய்தம் எட்டு = தன்மாத்திரையிற் குறைவுபடாத முற்றாய்தம் எட்டு.

உயிர் அளபு எழுமூன்று = உயிரளபெடை இருபத்தொன்று

ஒற்று அளபெடை ஆறேழ் = ஒற்றளபெடை நாற்பத்திரண்டு

அஃகும் இ. முப்பானேழ் = குற்றியலிகரம் முப்பத்தேழு

உகரம் ஆறாறு = குற்றிய லுகரம் முப்பத்தாறு

ஐகான் மூன்று = ஐகாரக்குறுக்கம் மூன்று

ஔகான் ஒன்று = ஔகாரக் குறுக்கம் ஒன்று

மஃகான் மூன்று = மகரக் குறுக்கம் மூன்று

ஆய்தம் இரண்டோடு = ஆய்தக் குறுக்கம் இரண்டுடனே

சார்பு = சார்பெழுத்தின் ஒலிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தியல் - (1) எழுத்துக்களின் எண்.

உறு = பொருந்திய

விரி = பரப்பின் தொகை

ஒன்று ஒழி முந்நூற்றெழுபான் என்ப = ஒன்று குறைவுபட்ட முந்நூற்றெழுபது (முந்நுற்றபத்தொன்பது) என்று புலவர் சொல்லுவர்.

ஆகவே முதலெழுத்தொலி முப்பதும், சார்பெழுத்து வகையில் உயிர்மெய்யெழுத்தொலி இருநூற்றுப் பதினாறும், ஏனைய முற்றாய்தம் முதலிய எழுத்துக்களினொலி நூற்றைம்பத்து மூன்றும் சேர்ந்து, முந்நூற்றுத் தொண்ணூற்றொன்பதும் (399) தமிழுக்குரிய ஒலிவடிவங்களாகும்.

தமிழுக்குரிய ஒலி வடிவங்கள் 399 ஆக இருப்பினும், அவைகளுக்குள்ள வரி வடிவங்கள் இருநூற்றுநாற்பத்தேழு (247) மாத்திரமே. எங்ஙனமெனில்,

முதலெழுத்துக்களின் வரிவடிவங்கள் ... 30

உயிர்மெய்யெழுத்துக்களின் வரிவடிவங்கள் ... 216

ஆய்தவெழுத்தின் வரிவடிவம் ... 1

ஆக 247 வரிவடிவங்கள்.

எனவே, வரிவடிவங்களைக் கொண்டிராத ஒலிவடிவங்கள் 152 என்றறிக. எவ்விதமெனில்,

| | | | |
|---|---|---|---|
| முற்றாய்தம் எட்டினில் | ... | ... | 7 |
| உயிரளபெடை | ... | ... | 21 |
| ஒற்றளபெடை | ... | ... | 42 |
| குற்றியலிகரம் | ... | ... | 37 |
| குற்றியலுகரம் | ... | ... | 36 |
| ஐகாரக்குறுக்கம் | ... | ... | 3 |
| ஔகாரக் குறுக்கம் | ... | ... | 1 |
| மகரக் குறுக்கம் | ... | ... | 3 |
| ஆய்தக் குறுக்கம் | ... | ... | 2 |

ஆக 152 இவற்றிற்கு வரிவடிங்கள் இல்லை.

தமிழ் இலக்கண கர்த்தாக்கள் மேற்கண்டபடி 1552 ஒலி வடிவங்களுக்கு வடிவங்கள் இல்லையென்றார்கள் ஆயினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் பேசிவரும் பேச்சில் இன்னும் பல ஒலிவடிவங்களுக்கு வரிவடிவங்கள் இல்லையென்பது நிச்சயம். நகை, பகை, தங்கம், மங்கை என்ற பதங்களிலுள்ள க ( ka) வரிவடிவம் ha, Ga என்ற ஒலிவடிவங்களையும் குறிக்கும். சமையல், சில, ஓசை, மஞ்சள், பஞ்சம் என்ற பதங்களிலுள்ள ச (cha) என்ற வடிவம் sa, ja என்ற ஒலிவடிவங்களையும் குறிக்கும். பண்டம், கொண்டை, படம், பட்டம் என்ற பதங்களிலுள்ள ட (da) என்ற வரிவடிவம் ta என்ற ஒலி வடிவத்தையும் குறிக்கும் , அதன் தந்தை என்ற பதங்களிலுள்ள த (tha) என்ற வரி வடிவம் வால, thy, they, then என்ற இங்கிலீஸ் பதங்களில் தொனிக்கும் தகரத்தையும் குறிக்கும். கம்பம், கம்பி என்ற பதங்களிலுள்ள ப (pa) என்ற வரி வடிவம் ba என்ற ஒலி வடிவத்தையும் குறிக்கும்.

வரிவடிவங்களற்ற ஒலிவடிவங்களின் நிலையை அறிந்த தமிழ் வித்வான்கள் ஸமஸ்க்ருத அக்ஷரங்களின் லக்ஷணங்களை விளக்கும் வியாகரண நூல்களைக் கற்றபொழுது க வர்க்கத்தில் ka, ka' , ga, ga', nga ( க$^1$ க$^2$ க$^3$ க$^4$ ங) ஆகிய ஐந்து பேதங்கள் உள்ளனவென்றும் ச வர்க்கத்தில் ch'a, cha', ja, jna', ( ச$^1$, ச$^2$, ச$^3$, ச$^4$, ஞ) ஆகிய ஐந்து பேதங்கள் உள்ளனவென்றும், ட வர்க்கத்தில் ta, t$^1$ a, da, d$^1$ a, na (ட$^1$ ட$^2$ ட$^3$ ட$^4$ ண) ஆகிய ஐந்து பேதங்கள் உள்ளனவென்றும், த வர்க்கத்தில் tha, th'a , tha, na (த$^1$ த$^2$ த$^3$ த$^4$ ந) ஆகிய ஐந்து பேதங்கள் உள்ளன வென்றும், ப வர்க்கத்தில் pa, p'a, ba, b'a, ma ((ப$^1$ ப$^2$ ப$^3$ ப$^4$ ம) ஆகிய ஐந்து பேதங்கள் உள்ளனவென்றும் இவற்றிற்கப்பால் sha, sa, sa, ha, ksha (ஷ பி ஹ க்ஷ) ஆகிய அக்ஷரங்கள் உள்ளனவென்றும் இந்த ஒலி வடிவங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வரிவடிவம் உண்டென்றும் அறிந்தார்கள்.

புவர் ஸ்வர் முதலிய மேல் லோகங்களிலுள்ள தேவலோகங் களில் தேவர்கள் எழுதும் லிப்பிகள் (வரிவடிவங்கள்) தேவநாகரி எனப்படும். இது தேவ உர்ஷிகளால் பூலோகத்தில் ஸ்தாபிக்கப் பட்டது. எங்கள் பரதகண்டமாகிய இந்தியாவில் இமைய பர்வத்திற் கும் விந்தியா பர்யதந்திற்கும் இடையிலேயிருக்கும் புண்யதேசத்தில் பரபலமாய் இது வழங்கி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தியல் - (1) எழுத்துக்களின் எண்.

இந்த தேவநாகரியில் உயிரெழுத்துக்கள் 16, மெய்யெழுத்துக்கள் 35, இவ்வித 51 எழுத்துக்களில் நின்று 525 உயிர் மெய் எழுத்துக்கள் தோன்றின.

கீழ்க்கண்ட படத்தில் தேவநாகரி பாஷையின் உயிரெழுத்துக் களுக்கும் மெய்யெழுத்துக்களுக்கும் இயையத் தமிழ்க்குறியீடுகள் அமைத்தும், அவ்வெழுத்துக்களின் ஒலிக்குறிப்பை இங்கிலிஷ் அகராதிகளைக் கொண்டு விளக்கியும், காட்டப்பட்டிருக்கின்றது.

(i) உயிரெழுத்துக்கள்

| | தமிழ் | இங்கிலிஷ் |
|---|---|---|
| अ | அ | a (as in material) |
| आ | ஆ | â (as in father) |
| इ | இ | i (as in pin) |
| ई | ஈ | î (as in machine) |
| उ | உ | u (as in full) |
| ऊ | ஊ | û (as in yule) |
| ऋ | உ்ர | ur̲ (commonly ṛi) |
| ॠ | ஊ்ர | ûr̲ (commonly ṛî) |
| ऌ | உழ் | uḷ (commonly ḷi) |
| ॡ | ஊழ் | ûḷ (commonly ḷî) |
| ए | எ<br>ஏ | e (as in met or they)<br>ê (as in fête) |
| ऐ | ஐ | ai (as in aisle) |
| ओ | ஒ<br>ஓ | o (as in post)<br>ô (as in hotel) |
| औ | ஔ | au (as in how) |
| अं (அநுஸ்வார) | அம் | am (as um in umbrella) |
| अः (விஸர்க[3]) | ஃ | ah (as in bah) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ii) மெய்யெழுத்துக்கள்

| | தமிழ் | இங்கிலிஷ் |
|---|---|---|
| क | க¹ | ka |
| ख | க² | k'a |
| ग | க³ | ga |
| घ | க⁴ | g'a |
| ङ | ங | nga |
| च | ச¹ | cha |
| छ | ச² | ch'a |
| ज | ச³ | ja |
| झ | ச⁴ | j'a |
| ञ | ஞ | jña |
| ट | ட¹ | ta |
| ठ | ட² | t'a |
| ड | ட³ | da |
| ढ | ட⁴ | d'a |
| ण | ண | ṇa |
| त | த¹ | tha |
| थ | த² | th'a |
| द | த³ | th³a |
| ध | த⁴ | th⁴a |
| न | ந | na |
| प | ப¹ | pa |
| फ | ப² | p'a |
| ब | ப³ | ba |
| भ | ப⁴ | b'a |
| म | ம | ma |
| य | ய | ya |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எழுத்தியல் - (2) எழுத்துக்களின் பெயர்.
### (ii) மெய்யெழுத்துக்கள்

| தேவநாக3 ரீ. | தமிழ் | இங்கிலிஷ் |
|---|---|---|
| र | ர | ra |
| ल | ல | la |
| व | வ | va |
| ळ | ள | ḷa |
| श | ஶ | sha |
| ष | ஷ | ṣa |
| स | ஸ | sa |
| ह | ஹ | ha |
| क्ष | க்ஷ | ksha |

மூலப்பிரதி

இந்தப் பட்டோலையின்படி ஸமஸ்கிருதத்திலுள்ள காவியங்கள் உரைநடைகள் யாவற்றையும் தமிழிலும் இங்கிளிஷிலும் செவ்வையாக எழுதலாம்.

எழுத்துக்களுக்குரிய பத்துப் பகுதிகளில் இதுகாறும் எண் என்ற பகுதி கூறப்பட்டது.

இனி, இரண்டாம் பிரிவாகிய பெயர் கூறப்படும். ஈண்டு பெயர் என்றது எழுத்துக்களின் பெயராம்.

### 2. எழுத்துக்களின் பெயர்

மிக நுட்பமாயும் எல்லையற்றதாயுமுள்ள ப்ரக்ருதியில் நின்று பரமேஸ்வரனது அருளாற் பெயர்ந்த (பிரிந்த) விண் (ஆகாசம்) கால் (வாயு), தீ (தேயு), நீர் (ஜலம்), பார் (ப்ருதிவி) என்ற அணுக்களும், அவற்றின் அனுத்திரன்களும், ஸ்தூஸீக்ஷ்மரூபங்களும் ப்ரக்ருதியின் பெயர்களாம், நாமங்களாம், பிரிவுபாடுகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப் பெயர்க்கப்பட்ட ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு சொற்குறியை (நாமத்தை) அமைத்தனர் பெரியோர் தமிழில் இந்தச் சொற்குறியும் "பெயர்" எனப்படும்.

எத்தனை பெயர்கள் வந்தார்கள்? இவர்களுக்குப் பெயர் என்ன? என்ற வினாக்களில் "பெயர்" என்பது பிரிவென்றும் பிரிவின் சொற்குறி, அல்லது நாமம், என்றும் விளங்குகின்றது.

இவ்வாறு தோன்றின நானாவித ரூபங்களில் பெயர்களில் எழுத்தென்ற ஒலிவடிவங்கள் ஓர்வகையென அறிக.

எழுத்தென்ற ஒலி வடிவங்களின் பெயர்கள் உயிரெழுத்து, மெய்யெழுத்து, ஆய்தவெழுத்து, குற்றெழுத்து, நெட்டெழுத்து, சுட்டெழுத்து, வினாவெழுத்து, அசையெழுத்து, உயிர்மெய் யெழுத்து, வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என்பனவாம்.

## பெயர் வகை

எழுத்துக்களுக்கும், சொற்களுக்கும், மற்ற பொருள்களுக்கும் இடப்பட்ட பெயர் இடுகுறி (காரணமின்றி இட்ட குறி) யாலாவது, காரணத்தாலாவது, காரண இடுகுறியாலாவது வரும். எனவே பெயர் என்பது இடுகுறிப்பெயர், காரணப் பெயர், காரண இடுகுறிப்பெயர் என்று மூவகைப்படும்.

## இடுகுறிப் பெயர்

இடுகுறிப்பெயராவது ஒரு காரணமும் கருதாமல் ஒரு பொருளைக் குறித்தற்கு இடப்பட்ட பெயராம்.

இடுகுறிப்பெயரானது இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர் என்று இரு வகைப்படும்.

இடுகுறிப் பொதுப் பெயர் என்பது காரணமின்றி அமைக்கப் பட்டுபல பொருள்களுக்கும் பொதுவாக வருவது.

பொது என்பது ஒரு பொருளுக்குச் சிறப்பாகி வராமல், அதன் ஜாதியிலுள்ள பல பொருள்களுக்குப் பொதுவாக வருவது.

நாம = க +அம = இல்லை + அகன்ட = கண்டப்பட்ட ஸ்துவ பொருள் பிரிக்கப்பட்டது, பிரிவுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் - மரம், புள், பறவை, பாம்பு, செடி, கொடி என்னும் இவை இடுகுறி பொதுப்பெயர்கள், காரணப் பெயர்கள் அல்ல.

மரம் என்ற சொல்லில் மர் + அம் என்பதுபோலப் பிரித்துப் பார்த்தாலும், அல்லது பிரிக்காமல் பார்த்தாலும் அந்தச் சொல்காரண காரியவழியாகத் தனது பொருளை உணர்த்தாது. இடுகுறி வழியாகவே உணர்த்தும்.

இனி, மரம் என்ற சொல்லானது பலா, தெங்கு, மா முதலிய மரச் சாதிகளுக்கும், புள் - (பறவை) என்ற சொல்லானது அன்னம், பருந்து முதலிய பறவைச் சாதிகளுக்கும், பாம்பு என்ற சொல்லானது நாகம், சாரை, வழலை, முதலிய பாம்புச் சாதிகளுக்கும் - செடி என்ற சொல்லானது துவரை முதலிய செடிச் சாதிகளுக்கும் - கொடி என்ற சொல்லானது அவரை பாகல் புடலை முதலிய கொடிச்சாதிகளுக்கும் பொதுவான பெயராக வருதல் காண்க. ஆகையால் இவை இடுகுறிப் பொதுப்பெயர் என அறிக.

இடுகுறிச் சிறப்புப் பெயர் என்பது, காரணமின்றி அமைக்கப் பட்ட பெயராயிருந்து பலவகுப்புப் பொருள்களுக்குப் பொதுப் பெயராகாமல், ஒருவகுப்புப் பொருளுக்கே உரிய பெயராய் வருவதாம்.

சிறப்புப் பெயர் = விசேஷப் பெயர் : ஒரு ஜாதியிலுள்ள பல வகுப்புப் பொருள்களுக்கும் பொதுவாகாமல் ஒருவகுப்புப் பொருளையே சிறப்பித்து (விசேஷித்து) வருவது.

உ+ம் :- பலா, பருந்து, அவரை, சாரை, துவரை என்பன இடுகுறிச் சிறப்புப் பெயர்கள்.

பலா என்ற பெயரானது பலாமர வகுப்பைத் தவிர வேறு பொருள்களை உணர்த்தாமல் காரணமின்றி வந்த பெயராகையால் அதே இடுகுறிச் சிறப்புப் பெயர் என்றறிக.

இவ்வாறே பருந்து, சாரை, அவரை, துவரை என்ற பெயர்களும் இடுகுறிச் சிறப்புப்பெயராவதை ஆராய்ந்து அறிந்துகொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரணப்பெயர்

காரணப்பெயர் என்பது இடுகுறிப் பெயர் போலாகாது ஒரு பொருளுக்குத் தான் பெயராகிய காரணத்தை விளக்கிக் காட்டுவதாம்.

உ+ம் : அணி, முடி, அணியப்படுதலால் ஆபரணம் அணி எனப்பட்டது, முடியில் (சிரசில்) வைக்கப்படுகின்ற காரணத்தால் கீரிடம் முடி காணப்பட்டது.

காரணப் பெயரானது காரணப் பொதுப் பெயர் எனவும் காரணச் சிறப்புப் பெயர் எனவும் இருவகைப்படும்.

காரணப் பொதுப்பெயராவது பல வகுப்புப் பொருள்களுக்குப் பொதுவான பெயராகி அப்பொருளுக்குத் தான் பெயரான காரணத்தைப் புலப்படுவது.

உ + ம் அணி, இது காரணப்பெயராகவும், வெவ்வேறு அங்கங்களில் அணிந்துகொள்ளும் நகைகளுக்கெல்லாம் பொதுவான பெயராகவும் இருப்பதால், காரணப்பொதுப்பெயர் எனக் கூறப் படும்.

தோடு, மூக்குத்தி, காப்பு, சிலம்பு முதலியவை அணி என்ற பெயரில் அடங்கும்.

காரணச் சிறப்புப்பெயர் என்பது காரணப்பொதுப் பெயர் போலாகாது. ஒரு பொருளுக்கே காரணம் பற்றிய பெயராகி அதனைச் சிறப்பித்து வருவதாம்.

உ - ம் :- மூக்குத்தி, காப்பு, சிலம்பு

இவை அணி என்ற வர்க்கத்தில் அடங்கி, அவ்வணியின் பல வகுப்புள் ஒவ்வொன்றையே காரணத்தோடு சிறப்பித்து வருவதால் காரணச் சிறப்புப் பெயர் எனப்படும்.

## காரண இடுகுறிப்பெயர்

காரண இடுகுறிப்பெயராவது காரணங் கருதியபொழுது காரணத்தை உடையதாய்ப் பல பொருள்களுக்கும் பொதுவான பெயராகியும் காரணங் கருதாதபொழுது பொதுவான பெயராகியும், காரணங்கருதாத பொழுது ஒரு பொருளுக்கே இடுகுறியளவாய்ச் சிறப்புப்பெயராகவும் வருவதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ - ம் பொன்னன்

இந்தப்பெயர் பொன்னுடையவன் என்ற காரணத்தைக் கருதினால் காரணப் பொதுப்பெயராயும், அக்காரணம் அமையாவிடில் இடுகுறிப்பெயராய் ஒருவனையே சிறப்பிக்கும்.

இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப் பெயர், காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப் பெயர், காரண இடுகுறிப் பெயர் என்பவற்றைக் கூறும்

சூத்திரம் : -

**கூ. இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின**

இதன் பதப்பொருள்:

இடுகுறி (ப்பெயர்) = இடுகுறிப் பெயரும்

காரணப் பெயர் = காரணப் பெயருமாகிய இரண்டும்

பொது = பலபொருட்குப் பொதுப்பெயராகியும்

சிறப்பின - ஒரு பொருட்குச் சிறப்புப் பெயராகியும் வருவனவாம். பொருள்களுக்குப் பெயர் வருங் காரணங்களை இதுவரையும் விளக்கினோம். இனி எழுத்துக்களுக்கு அமைந்த பெயர்கள் எவையென்றும் எக்காரணங் களால் அப்பெயர்கள் வந்தனவென்றும் விளக்குவாம்.

உயிர், மெய், எழுத்துக்களும் அவற்றின் பிரிவுகளும்

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஔ என்ற பன்னிரண்டு எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள் எனப்படும்.

அ ஆ முதலிய எழுத்துக்கள் க் ங் முதலிய எழுத்துக்களை இயங்க வைத்தலினால் உயிரெழுத்துக்கள் எனப்பட்டன.

எங்ஙனம் உயிரானது உடம்பை இயக்குகின்றதோ அங்ஙனமே உயிரெழுத்துக்கள் க் ங் முதலாய மெய்யெழுத்துக்களை இயக்குகின்றன. ஆதலின் உயிரெழுத்து என்பது காரணப் பெயராம்.

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் என்னும் பதினெட்டும் மெய்யெழுத்துக்கள் எனப்படும்.

உயிரில்லாத உடல் எங்ஙனம் இயங்காதோ அங்ஙனமே உயிரெழுத்தைப் பெறாத மெய்யெழுத்தும் இயங்காது. க், ங் முதலிய எழுத்துக்கள் உடல்போல இருத்தலின் அவை மெய்யெழுத்துக்கள் எனக் காரணப் பெயர் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கு நன்னூற் சூத்திரம் : -

ஏ. அம்முத லிரா றாவி கம்முதல்
மெய்ம்மு வாறென விளம்பினர் புலவர்.

இதன் பதப்பொருள்

அம்முதல் = "அ" என்ற எழுத்து முதற்கொண்டு "ஔ" என்ற எழுத்து வரையிலுள்ள

ஈராறு = பன்னிரண்டு எழுத்துக்களும்

ஆவி = உயிரெழுத்துக்கள் என்றும்

கம்முதல் = "க" என்ற எழுத்து முதல் "ன்" என்ற எழுத்து வரையுள்ள

மூவாறு = பதினெட்டு எழுத்துக்களும்

மெய் என = மெய்யெழுத்துக்கள் என்றும்

புலவர் = அறிவாளிகள்

விளம்பினர் = கூறினார்கள்.

மாதாவின் கர்ப்பத்தில் வளரும் சிசுவின் தேகத்துள் ப்ராண வாயு முதலிய தத்துவங்கள் சென்று அதனை எவ்விதம் உயிர்ப்பிக்குமோ அவ்விதம் அ முதல் ஔ ஈறாகவுள்ள பன்னிரண்டு ஒலிகள் க் முதல் ன் ஈறாகவுள்ள பதினெட்டு மெய்களிலும் பிரவேசித்து அவற்றைத் தொனிக்கச் செய்யும். இதுபற்றி அகமுதலாய பன்னிரண்டெழுத்துக் களும் உயிரெழுத்துக்கள் எனப்பட்டன.

உயிரெழுத்தின் பிரிவுகள் குற்றெழுத்து, நெட்டெழுத்து, சுட்டெழுத்து, வினாவெழுத்து என்பனவாம்.

அ இ உ எ ஒ என்னும் ஐந்து எழுத்துக்கள் குற்றெழுத்துக்களாம்.

குற்றெழுத்து = குறுகிய எழுத்து, ஒலியளவிற் குறுகிய எழுத்து.

ஒலியளவில் நீண்டு வருவனவாகிய நெட்டெழுத்துக்களை நோக்க அ இ உ ஒ என்பன குறுகிய ஒலியுள்ள எழுத்துக்களாய்த் தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்

**அ. அவற்றுள், அ இ உ எ ஒக்குறி லைந்தே.**

இதன் பதப்பொருள் :

அவற்றுள் = அப்பன்னிரண்டு உயிரெழுத்துக்களுள்

அ இ உ எ ஒ = அ இ உ எ ஒ என்னும்

குறில் ஐந்தே = குற்றெழுத்துக்கள் ஐந்தேயாகும்.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்ற ஏழு எழுத்துக்கள் நெட்டெழுத்துக்கள் எனப்படும்.

நெட்டெழுத்து - நீண்ட எழுத்து, ஒலியளவில் நீண்ட எழுத்து, குற்றெழுத்துக்களைக் காட்டிலும் இவை நீண்ட ஒலியுள்ள எழுத்துக்களாகத் தோன்றும்.

இதற்குச் சூத்திரம் :

**கூ. க, ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்**

இதன் பொருள் : பன்னிரண்டு உயிரெழுத்துக்களில் ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்ற ஏழும் நெட்டெழுத்துக்களாம்.

குற்றெழுத்து ஒரு மாத்திரையுடையது. நெட்டெழுத்து இரண்டு மாத்திரையுடையது. ஒரு மாத்திரையையுடைய குற்றெழுத்தைக் கொண்டே நெட்டெழுத்து இரண்டு மாத்திரை யுடையது என்று அறிவதற்கிடமாகும்.

கண் இமைத்தல், கை சொடித்தல் என்ற தொழில்களுக்கு வேண்டிய நேரத்தின் அளவு மாத்திரை எனப்படும்.

குறில் என்பது மாத்திரையாகிய அளவு கருவிக்குக் குறைந்தது எனவும், நெடில் என்பது அக்கருவிக்கு கூடியது எனவும், கொள்ளக் கூடாது,

குறிலையும் நெடிலையும் ஒப்பிட்டு நோக்கும்போது ஒன்று குறுகியதாகவும் மற்றொன்று நெடியதாகவும் தோன்றும்

சுட்டெழுத்து என்பது ஒருபொருளைச் சுட்டிக் காட்டுவதற்கு அறிகுறியாக வரும் எழுத்தாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ இ உ என்ற மூன்றெழுத்துக்களும் சுட்டுவதற்கு அறிகுறியாக வரும்பொழுது சுட்டெழுத்துக்கள் எனப்படும். பொருளைச் சுட்டாதபோது அ இ உ என்ற எழுத்துக்கள் உயிர்க் குற்றெழுத்தே என்று உணர்க.

ஒரு மனிதனைச் சுட்டிக் குறிப்பிடவேண்டியபோது அவன் என்று கூறுகின்றோம். அவன் என்ற சொல்லிலுள்ள அ என்ற எழுத்து சுட்டெழுத்தென்று அறிக.

ஒரு பொருளுக்கு அம்மி என்பது பெயர், இந்தச் சொல்லிலுள்ள அ என்றது சுட்டெழுத்தன்று. அது ஒரு பொருளையும் சுட்டிக் காட்டவில்லை. ஆதலால் அ என்றது இங்கே உயிர்க் குற்றெழுத் தென்று அறிக.

அந்தச் சுட்டு அகச் சுட்டு, புறச்சுட்டு என்று இரு வகைப்படும்.

அகச்சுட்டு என்பது ஒரு சொல்லினுள்ள பகுதியாக (முன்னிலை யாக) நின்று அச்சொல்லுக்குரிய பொருளைச் சுட்டிக் காட்டுவதாம்.

உ-ம் அவன், அவள், அவர், அது, அவை, இவன், இவள், இவர், இது, இவை, உவன், உவர், உது, உவை என்றவற்றுள் பகுதியாகிய அ இ உ என்பன அந்தந்த சொல்லுக்குரிய பொருளைக் குறித்து (சுட்டி)க் காட்டுவதாம்.

புறச்சுட்டு என்பது ஒரு சொல்லின் அகத்தே (உள்ளிடத்தே) அமைந்து அதன் பொருளைச் சுட்டிக்காட்டாமல், புறத்தே (வெளியிடத்தே) அமைந்து அந்தச் சொல்லின் பொருளைச் சுட்டிக் காட்டுவதாம்.

உ+ம் அப்பணக்காரன், இக்கணபதி, உவ்வீதி என்ற சொற்களில் சுட்டெழுத்துக்களாகிய அ இ உ என்பன பணக்காரன் கணபதி, வீதி என்ற சொற்களின் உள்ளே வராது அவற்றிக்கு வெளியே (முன்னே) வந்து அப்பொருளைச் சுட்டுகின்றன.

இச்சுட்டெழுத்துக்களுக்குள்ளே அகரம் தூரத்திலுள்ள பொருள்களும், இகரம் சமீபத்திலுள்ள பொருள்களையும் பின்புறத்தி லுள்ள பொருள்களையும் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (2) எழுத்துக்களின் பெயர்.

ஒருவன் ஒரு புஸ்தகத்தை எடுத்து வா என்று மற்றொருவனை ஏவினான். ஏவப்பட்டவன் பக்கத்திலுள்ள ஒரு புஸ்தகத்தைக் காட்டி, இந்தப் புஸ்தகமா? என்று கேட்டான். ஏவினவன் அன்று மற்றொன்று என்று கூறினான். பின்னரும் ஏவப்பட்டவன் தூரத்தி லுள்ள ஒரு புஸ்தகத்தைக் காட்டி அந்தப் புஸ்தகமா? என்று கேட்டான். ஏவினவன் அன்று என்று கூறினான். பின்னரும் ஏவப் பட்டவன் பின்புறத்திலுள்ள ஒரு புஸ்தகத்தைக் காட்டி உந்தப் புஸ்தகமா? என்று கேட்டான். ஏவினவன் ஆம் என்று கூறினான்.

இந்த ஸம்பாஷணையால் அந்த என்பது தூரத்திலுள்ள பொருளையும், இந்த என்பது சமீபத்திலுள்ள பொருளையும், உந்த என்பது பின்புறத்திலுள்ள பொருளையும் குறிக்குமென்று நன்கு விளங்குகின்றது.

சுட்டெழுத்துக்களைக் குறிக்கும் சூத்திரம் :-

௰. உம்முதற் றனிவரிற் கட்டே.

இதன் பதப்பொருள் :

அ இ உ = அ இ உ என்ற மூன்றெழுத்துக்களும்

முதல் = சொல்லுக்கு முதலில்

சுட்டு = சுட்டெழுத்துக்கள் எனப் பெயர் பெறும்.

தனித்து வருதலாவது அகச் சுட்டுக்குப் பகுதியாகவும் புறச் சுட்டுக்கு மொழிக்கு (சொல்லுக்கு) புறம்பாகவும் வருதலாம்.

வினாவெழுத்து என்பது ஒன்றைப் பற்றி வினாவும் (கேட்கும்) பொழுது சொல்லுக்கு முதலிலாவது முடிவிலாவது சொல்லின் அகத்திலாவது, புறத்திலாவது அமைத்து வினாப் பொருளைத் தருவதாம்.

கோவிந்தன் என்பவன் இராமனை நோக்கி இராமா, நீ குறிப்பிட்ட மனிதன் இவனா? என்றான். இராமன். இவன் அல்லன் என்றான். பின்னரும் கோவிந்தன் மற்றொருவனைக் காட்டி, நீ கூறியவன் அவன்தானே என்றான். இராமன் அவனும் அல்லன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான். அதற்குப் பின்னரும் கோவிந்தன் மற்றொருவனைக் காட்டி நீ கூறியவன் உவன் தானா? என்றான் இராமன் உவனும் அல்லன் என்றான்.

உடனே கோவிந்தன் இராமனை நோக்கி, உன்னாற் கூறப்பட்டவன் இவனும், அவனும், உவனும் அல்லாதபோது பின்னர் எவன்தான்? என்றான். இங்கே வினாவிய எவன் என்பதுவே வினாப்பெயர் ஆகும்.

எவன் = எ + அன். எ என்ற எழுத்து வினாவெழுத்து.

வினாவானது அகவினா, புறவினா என்று இருவகைப்படும்.

அகவினா என்பது அகச்சுட்டு போல ஒரு சொல்லுக்குப் பகுதியாக அமைந்து வினாப்பொருளைத் தருவதாம்.

எ ஏ யா என்னும் எழுத்துக்கள் அகவினாப்பொருளைக் குறித்தற்கு வரும்.

உ+ம் :- எவன், ஏவன், யாவன், எவள், ஏவள், யாவள், எவர், ஏவர், யாவர், எது, ஏது, யாது, எவை, ஏவை, யாவை என்ற வினா மொழிகளில் எ, ஏ, யா என்னும் எழுத்துக்கள் அன், அள், அர், து, வை, என்று (ஆண் பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்) விகுதிகளுக்குப் பகுதிகளாகி வினாப் பொருளில் வந்தன.

புற வினா என்பது ஒரு சொல்லின் முதலிலும் முடிவிலும் அச்சொல்லோடு சேராமல் தனித்து நின்று வினாப்பொருளைத் தருவதாம்.

எ எ யா ஆ ஓ என்றும் எழுத்துக்கள் புறவினாப்பொருளை குறித்தற்கு வரும்.

உ-ம் எப்பொருள் (எ + பொருள்), இராமனே ( இராமன் + ஏ) யாங்ஙனம் ( யா + ஙனம்), கண்ணனா ( கண் ணன் + ஆ), அவனோ (அவன்+ ஓ ),

எ, யா என்பன சொல்லுக்கு முதலிற் புறவினாவாக வரும், ஆ, ஓ என்பன சொல்லுக்கு முடிவிற் புறவினாவாக வரும்

ஏ என்பது சொல்லுக்கு முதலிலும் முடிவிலும் புற வினாவாக வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (2) எழுத்துக்களின் பெயர்.

ஆ என்ற வினாவெழுத்தை அவனா (அவன் + ஆ) என்றதிலும் ஓ என்ற வினாவெழுத்தை இவனோ (இவன் + ஓ) என்றதிலும் ஏ என்ற வினாவெழுத்தை ஏவன் (ஏ + அன்) பொன்னனே ( பொன்னன் + ஏ) என்றவற்றிலும், எ, யா என்பவற்றை எவன் ( எ + அன்) எம்மனிதன் (எ+ மனிதன்), யாவன் (யா + அன்), யாங்ஙனம் (யா + ஙனம்) என்றவற்றிலும் காண்க.

எனவே எ, யா என்னும் வினாவெழுத்துக்கள் சொல்லுக்கு முதலில் அகவினாவாகவும் புறவினாவாகவும் ஆ, ஓ என்ற வினா வெழுத்துக்கள் சொல்லுக்கு முடிவிலே புறவினாவாகவும் ஏ என்ற வினாவெழுத்து சொல்லுக்கு முதலில் அகவினாவாகவும் சொல்லுக்கு முடிவில் புறவினாவாகவும் வரும் என்றறிக.

குறிப்பு, சொல்லுக்கு முதலில் அகவினாவும் புறவினாவும் வரும், சொல்லுக்கு முடிவில் புறவினா மாத்திரம் வரும் என்க.

வினாவெழுத்துக்களின் கூறுபாடுகளைக் கீழ்வரும் பாடத்திற் காண்க.

| மொழிமுதல் | | | மொழியிறுதி (முடிவு) |
|---|---|---|---|
| வினாவெழுத்து | அகவினா | புறவினா | புறவினா |
| எ | எவன் | எப்பொருள் | ............... |
| யா | யாவன் | யங்ஙனம் | ............... |
| ஆ | ............. | ................ | அவனா |
| ஓ | ............. | ................ | அவனோ |
| ஏ | ஏவன் | ................ | பொன்னனே |

இதற்குச் சூத்திரம் : -

௰௧. ஏயா முதலும் ஆஓ ஈற்றும்
ஏயிரு வழியும் வினாவா கும்மே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பதப் பொருள் :-

ஏ யா முதலும் = எ யா என்ற வினாவெழுத்துக்கள் சொல்லின் முதலிலே அகவினாவாயும் புறவினாவாயும்,

ஆ ஓ ஈற்றும் = ஆ ஓ என்ற வினாவெழுத்துக்கள் சொல்லின் முடிவில் புறவினாவாயும்

ஏ இருவழியும் = ஏ என்ற வினாவெழுத்து சொல்லின் முதலில் அகவினாவாயும் முடிவில் புறவினாவாயும்,

ஆகும் = ஆகிவரும்

இதுவரையும் முதலெழுத்துக்களின் முதற் பிரிவாகிய உயிர் வர்க்கத்திற்கு அமைந்த பெயர்களைக் கூறினாம்.

இனி, முதலெழுத்துக்களின் இரண்டாம் பிரிவாகிய மெய் வர்க்கத்தின் பெயர்களைக் கூறுவாம்.

மெய்யெழுத்தின் பிரிவுகள் : வல்லினம், மெல்லினம், இடையினம்

க் முதல் ன் ஈறாகவுள்ள பதினெட்டு மெய்யெழுத்துக்களும் வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூவகைப்படும்.

இனம் = வர்க்கம், ஒருவகையான கூட்டம்.

க் ச் ட் த் ப் ற் என்னும் ஆறு எழுத்துக்கள் வல்லினம் எனப் பெயர் பெறும்.

இவை வலி எனவும், வன்மை எனவும், வன்கணம் எனவும் கூறப்படும்.

இதற்கு சூத்திரம் :-

**௰௨. வல்லினம் க ச ட த ப ற என வாறே.**

ஈண்டு க் ச் ட் த் ப் ற் என்ற மெய்களுக்கு அ என்ற சாரியையைச் சேர்த்து உச்சரிப்புக்காக.

ங் ஞ் ண் ந் ய் ன் என்னும் ஆறு எழுத்துக்கள் மெல்லினமாம்.

மெல்லினம் = மெல்லிய ஓசையையுடைய எழுத்தின் வர்க்கம்

இவை மெலி எனவும் மென்மை எனவும் மென்கனம் எனவும் கூறப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம் :-

**யங. மெல்லினம் ங ஞ ண ந ம ன எனவாறே.**

ஈண்டும் அ என்ற சாரியை ங் முதலிய மெய்களுடன் உச்சரிப்புக்காகச் சேர்க்கப்பட்டது.

ய் ர் ல் வ் ழ் ள் என்னும் ஆறு எழுத்துக்களும் இடையினம் எனப்பெயர் பெறும்.

இடையினம் வல்லோசையும், மெல்லோசையும் அல்லாமல் இடைநிகர்த்த ஓசையை உடைய எழுத்துக்களின் வர்க்கம்.

இவை இடை எனவும், இடைமை எனவும், இடைக்கணம் எனவும் பெயர்பெறும்.

இதற்குச் சூத்திரம் :-

**யச. இடையினம் ய ர ல வ ழ ள எனவாறே.**

ஈண்டு அ என்ற சாரியை உச்சரிப்புக்காக ய் முதலிய மெய்யெழுத்துக்களுடன் சேர்க்கப்பட்டது.

இதுகாறும் எழுத்தியலின் இரண்டாம்பிரிவாகிய "பெயர்" என்பதைப் பற்றிக் கூறினாம்

இனி, மூன்றாம்பிரிவாகிய "முறை" என்றதைக் கூறுதும்.

## ௩. எழுத்துக்களின் முறை.

ஈண்டு முறை என்றது எழுத்துக்கள் ஒன்றன்பின் ஒன்று நிற்கும் வரிசைமுறைமையாம்.

முறைமையாவது எழுத்துக்கள் அ ஆ முதலாக வரிசையாக நிற்கவேண்டிய காரணம் என்க.

வரிசையாக எழுத்துக்கள் நிற்கும் முறைக்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவை இனம், சிறப்பு என்பனவாம்.

### இனத்தால் முறையாதல்.

இனமாவது எழுத்துக்கள் ஒருவகையால் ஒற்றுமை பெற்றிருத்தல் - எழுத்துக்கள் பிறக்கும் (தோன்றும்) இடம், - எழுத்துக்கள் உண்டாகுமாறு உச்சரித்தற்குச் செய்யும் முயற்சி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்ததிகாரம்.

எழுத்துக்களின் மாத்திரை (ஒலியளவு), - ஒரு சொல்லில் ஒரெழுத்து நிற்கவேண்டிய இடத்தில் வேறோர் எழுத்து நின்றாலும் அர்த்தவேற்றுமைப் படாமை, - வரிவடிவங்களின் அமைதி, - ஆகிய இவற்றுள்ளே ஒருவகையால் ஒற்றுமை பெற்றிருத்தலாம்.

### பிறப்பிடத்தால் இனமாதல்.

எழுத்துக்கள் மார்பு, கழுத்து, மூக்கு, உச்சி என்னும் நான்கிடங்களிலும் பிறக்கும். மார்பிலே தோன்றுகின்ற எழுத்துக்களும், கழுத்திலே தோன்றுகின்ற எழுத்துக்களும், மூக்கிலே தோன்றுகின்ற எழுத்துக்களும் உச்சியில் தோன்றுகின்ற எழுத்துக்களும் தங்கள் தங்களுக்குள்ளே இனமாகும். (ப 39).

### முயற்சியால் இனமாதல்.

மார்பிலும், கழுத்திலும், மூக்கிலும், உச்சியிலும் உதயமாகின்ற எழுத்துக்கள் உச்சரிப்பதற்கு இதழ்(உதடு), நாக்கு, பல், மேல்வாய் என்னும் இவைகள் முயற்சி (பிரயத்தனம்) செய்ய வேண்டும். இந்த முயற்சியினால் தம்மில் ஒருவாறு ஒற்றுமைப்பட்ட எழுத்துக்கள் இனவெழுத்துக்களாகும்.

உ - ம் க் என்ற எழுத்தும், ங் என்ற எழுத்தும் அடி நாக்கு மேல் வாயைப் பொருந்த உண்டாகும். இந்த இரண்டு எழுத்துக்களும் ஒருவித ஒற்றுமைப்பட்ட முயற்சியால் உண்டாவதால், இனமெனப் படும்.

### மாத்திரையால் இனமாதல்.

ஒரெழுத்துக்குரிய ஒலியளவு மற்றோரெழுத்துக்கும் அமையுமாயின், அவை ஒன்றினுக்கொன்று இனமாகும்.

### அர்த்த ஒற்றுமையால் இனமாதல்.

ஒரு சொல்லில் ஒரெழுத்து நின்றவிடத்தில் மற்றோரெழுத்து வந்தாலும், அச்சொல்லின் அர்த்தம்(பொருள்) வேறுபடாது முன்னிருந்த அர்த்தமேயிருக்குமாகில், அவ்வெழுத்துக்கள் ஒன்றினுக்கொன்று இனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (3) எழுத்துக்களின் முறை.

உ- ம். அங்கு என்ற சொல்லின் முதலிலேயுள்ள அ என்ற எழுத்துக்கு பிரதியாக ஆ என்ற எழுத்து வந்து நின்றாலும், பொருள் வேறுபடாமல் அச்சொல் அவ்விடம் என்றே அர்த்தமாகின்றது. ஈண்டு அ என்ற எழுத்தும் ஆ என்ற எழுத்தும் தம்மில் இனமாயின.

### வரிவடிவத்தால் இனமாதல்.

ஒரெழுத்துக்குரிய வரிவடிவம்போல் மற்றோரெழுத்துக்கும் வரிவடிவம் சிறிது ஒற்றுமைப்படுமேல், அவ்வெழுத்துக்கள் இனவெழுத்துக்களாகும். உ - ம் அஆ, எஏ, ஒஓ என்பன வரிவடிவங்களால் இனமாயின.

### சிறப்பால் முறையாதல்.

நெடுங்கணக்கு (அரிச்சுவடி) வரிசையிலே ஓரெழுத்திற்கு முன்னர் மற்றோர் எழுத்து நிற்பது அதன் சிறப்புக்கருதியும் ஆகும்.

தாமே சொல்லாகும் வல்லமையுடைய உயிரெழுத்துக்கள் அவ்வாறு தாமே சொல்லாகும் வல்லமையில்லாத மெய்யெழுத்துக் களுக்கு முன்னே நிற்பதும், குற்றெழுத்தினது நீட்டமே நெட்டெழுத் தாதலால் குற்றெழுத்துக்கள் நெட்டெழுத்துக்களுக்கு முன்னே நிற்பதும் , ஓசையிலே வலிமை படைத்த வல்லெழுத்துக்கள் ஓசை யிலே மென்மை படைத்த மெல்லெழுத்துக்களுக்கு முன்னே நிற்பதும், சிறப்பினால் என்றறிக.

நெடுங்கணக்கு வரிசையிலே அ, இ, உ, எ, ஒ என்னும் குற்றெழுத்துக்களுக்குப் பின்னர் முறையே ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் நெட்டெழுத்துக்கள் நிற்பதும், க், ச், ட், த், ப், ற் என்னும் வல்லெழுத்துக்களுக்குப் பின்னர் முறையே அவ்வவற்றிற்கு உரிய மெல்லெழுத்துக்களாகிய ங், ஞ், ண், ந், ம், ன் என்பன நிற்பதும், இனத்தால் என்றுணர்க.

முறையென்பதை ( எழுத்துக்களின் வரிசைக் கிரமத்திற்கு உரிய காரணத்தை) விளக்கும் சூத்திரம் :-

**யரு. சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்**
**நடத்த றானே முறையா கும்மே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பதப்பொருள் :

சிறப்பினும் = எழுத்துக்கள் ஒன்றை விட ஒன்று (ஓசை முதன்மை, ஓசை வலிமை முதலிய) விசேஷம் பெற்றதனாலேயும், இனத்தினும் = (பிறக்குமிடம், உச்சரிப்புக்குரிய முயற்சி, மாத்திரை, பொருள், வரிவடிவம் என்னும் இவற்றுள் ஓரம்ச ஒற்றுமை பெற்று ) ஓர் இனம் (வகுப்பு) ஆகும் தன்மையினாலேயும்,

செறிந்து = முதல்நிற்கும் சிறந்த எழுத்துக்களுக்குப் பின்னர் சிறப்பிற்குறைந்த எழுத்துக்கள் நின்று பொருந்தி,

ஈண்டு = நெடுங்கணக்கு வரிசையிலே,

அம்முதல் = முதலெழுத்துக்களாகிய உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும்,

நடத்தல் தானே = நடந்துவருதல்தானே,

முறை ஆகும் = எழுத்து வரிசைக்குரிய கிரமமாகும்.

இனி, இனத்திற்குக் காரணம் காட்டும் சூத்திரம் : -

யசூ. தான முயற்சி யளவு பொருள்வடி
வானவொன் றாதியோர் புடையொப் பினமே.

இதன் பதப்பொருள் :

தானம் = எழுத்துக்கள் பிறக்கும் இடமும்,

முயற்சி = ( எழுத்துக்கள் பிறப்பதற்கு உச்சரிப்பவன் செய்யும்) பிரயத்தனமும்,

அளவு = எழுத்துக்களது மாத்திரையும்,

பொருள் = எழுத்துக்களது பொருளும்,

வடிவு = எழுத்துக்களது வரிவடிவமும்,

ஆன ஒன்று ஆதி = ஆகிய இவற்றுள் ஒன்று முதலாக

ஓர் புடை ஒப்பு = ஓர் அம்சம் ஒத்திருப்பது

இனம் = இனமாகும்.

ஒருபுடை, ஒருசிறை, ஓரம்சம், ஏகதேசம் என்பன ஒரு பொருட்சொற்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (3) எழுத்துக்களின் முறை.

எழுத்துக்கள் இனமாவதை விளக்கும் சூத்திரம் : -

யஎ. ஐ ஔ இ உ ச் செறிய முதலெழுத்
திவ்விரண் டோரின மாய்வரன் முறையே.

இதன் பதப்பொருள் :

ஐ ஔ = ஐகார ஔகாரங்களுக்கு மற்ற நெட்டெழுத்துக்களுக் குப் போல இனம் அமையாதலால், அவை,

இ உ செறிய = (ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய ) இகர உகரங்களையே தமக்கு இனவெழுத்துக்களாகப் பொருந்த,

முதலெழுத்து = பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யுமாகிய முதலெழுத்துக்கள்,

இவ்விரண்டு = இரண்டு இரண்டு எழுத்துக்களாய்

ஓர் இனமாய்வரல் = ஒவ்வோரினமாகச் சேர்ந்துவருதல்,

முறை = இனமாகும்.

நெடுங்கணக்கில் (அரிச்சுவடியில்) வரிசையாகக் கூறியபடியே எழுத்துக்களை இரண்டு இரண்டாகச் சேர்த்து அவற்றை இனமென்று அறிக.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ, க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன், என்று நெடுங்கணக்கில் வரிசை செய்யப் பட்டிருக்கிறது.

உயிரெழுத்தில் ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனமாகும் என்று மேற்சூத்திரத்திற் கூறப்பட்டிருக்கிறது.

எனவே அ ஆவும், இ ஈ ஐ யும், உ ஊ ஔவும், எ ஏயும், ஒ ஓவும் உயிரெழுத்துக்களில் இனவெழுத்துக்களாகும் என்று பெறப் பட்டது.

மெய்யெழுத்துக்களில் இரண்டு இரண்டு எழுத்துக்களை வரிசை யாகச் சேர்த்து அவற்றை இனவெழுத்துக்களென்றே சொல்லல் வேண்டும். என்றாலும், ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும், இனவெழுத்துக்களாகும் என மேற்சூத்திரத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியிருத்தலை ஆராய்ந்து கொள்வது மெய்யெழுத்துக்களுக்கு இனம் வகுக்க இடமாகும்.

ஐகாரத்துக்கு இகரமும், ஔகாரத்துக்கு உகரமும், இனவெழுத்துக்களாகும் என்றதனாலே குற்றெழுத்துக்களுக்கு நெட்டெழுத்துக்கள் இனமாகும் என்பது ஸித்திக்கின்றது. குற்றெழுத்துக்களும் நெட்டெழுத்துக்களும் இனமாவதுபோல, வல்லெழுத்துக்களுக்கும் மெல்லெழுத்துக்களுக்கும் இனமாகும் என்பது பெறப்படும். ஆகவே, இடையெழுத்துக்களுக்கு இனமில்லையென்று சொல்லவேண்டுவதில்லை என்க.

க்ங் என்னும் எழுத்துக்களும், ச்ஞ் என்னும் எழுத்துக்களும், ட்ண் என்னும் எழுத்துக்களும், த்ந் என்னும் எழுத்துக்களும், ப்ம் என்னும் எழுத்துக்களும், ற்ன் என்னும் எழுத்துக்களும் இனவெழுத்துக்களாம்.

ய் ர் ல் வ் ழ் ள் என்னும் இடையெழுத்துக்களுக்கு இனம் இல்லையென்றுணர்க.

எழுத்துக்களின் இனத்தைக் கீழ்க்காட்டிய படம் விளக்கும்.

| இனமுள்ள | | | | இனமற்ற |
|---|---|---|---|---|
| உயிரெழுத்துக்கள். | | மெய்யெழுத்துக்கள். | | மெய்யெழுத்துக்கள். |
| குறில். | நெடில். | வல்லினம். | மெல்லினம். | இடையினம். |
| அ | ஆ | க் | ங் | ய் |
| இ | ஈ, ஐ | ச் | ஞ் | ர் |
| உ | ஊ, ஔ | ட் | ண் | ல் |
| எ | ஏ | த் | ந் | வ் |
| ஒ | ஓ | ப் | ம் | ழ் |
| | | ற் | ன் | ள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (4) எழுத்துக்களின் பிறப்பு.

இதுவரையிலும் எழுத்திலக்கணத்தின் மூன்றாவது பிரிவாகிய முறை என்றதைக் கூறினாம்

இனி, நான்காவது பிரிவாகிய எழுத்துக்களின் பிறப்பைக் கூறுதும்

### ச. எழுத்துக்களின் பிறப்பு

எழுத்துக்களின் பிறப்பாவது இன்ன இடத்திலிருந்து இன்ன முயற்சியால் ஒலிவடிவ எழுத்துக்கள் உதயமாகின்றன என்று விளக்குவதாம்.

எழுத்துக்களின் பிறப்பைக் கூறுமிடத்துப் பிறப்பின் பொது இலக்கணம் என்றும், பிறப்பின் சிறப்பிலக்கணம் என்றும், இரண்டு பிரிவுகளாய்ப் பிரித்துக்கூறலாம்.

பிறப்பின் பொது இலக்கணமாவது ஒலிவடிவ எழுத்துக்கள் பிறத்தற்குரிய இடங்கள் இவையென்றும், உச்சரித்தற்குரிய முயற்சிகள் இவை என்றும், பொதுவாகக் கூறுவதாம்.

பிறப்பின் சிறப்பிலக்கணமாவது இன்ன இன்ன ஒலிவடிவ எழுத்துக்கள் இன்ன இன்ன இடங்களிலிருந்து, இன்ன இன்ன முயற்சிகளால், உதயமாகும் என்று சிறப்பித்துக் கூறுதலாம்.

பிறப்பின் சிறப்பிலக்கணத்தை எழுத்துக்கள் பிறக்கும் இடம் என்றும், எழுத்துக்கள் பிறத்தற்குரிய முயற்சிகள் என்றும், பிரிக்கலாம்.

### பிறப்பின் பொது இலக்கணம்.

சரீரத்தோடு கூடிய ஆத்மா எழுத்தொலிகளைக் கூறவேண்டும் என்று இச்சித்து உள்ளே இருக்கும் ப்ராணவாயுவுடன் ஸம்பந்தப் பட்ட ஆத்மா வாக்கென்னும் இந்திரியத்தை மூலாதாரத்திலிருந்து எழுப்பும். இந்த இடத்தில் வாக்கு அதிசூக்ஷ்மமாக இருப்பதால், அது பராவாக்கு எனப்படும்.

மூலாதாரத்திலிருந்து எழுப்பிய வாக்கு நாபிஸ்தானத்தில் பஶ்யந்தி என்றும், ஹ்ருதயத்தில் மத்யமை என்றும், கண்டத்தில் வைகரி என்றும் விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்ததிகாரம்.

பஶ்யந்தி வாக்கு சூக்ஷ்ம ஆகாச அணுக்களோடு சேர்ந்து மிக மிருதுவாகப் பேசும். இதன் தொனி ஜபிப்போன் காதுக்கும கேட்காது. அப்படியே மத்யமை வாக்கு மார்பில் நின்று இன்னும் தடித்த அணுத்திரள்களோடு கூடிப் பேசும் பேச்சும் ஜபிப்போன் காதுக்கு புலப்படாது.

பஶ்யந்திக்கும் மத்யமைக்கும் ஸ்தூலமான வைகரிவாக்கு கண்ட ஸ்தானத்திற் பேசும்பொழுது அப்பேச்சு பேசுவோனது காதுக்கு விளங்கும். ஏனையோர் காதுக்கு விஷயமாகாது.

கண்டஸ்தானத்தில் தன் காதுக்கு விளங்கின ஒலிகளைப் பிறர் காதுக்கு விஷயமாக்க வேண்டுமெனில், பேசுவோன் அவ்வொலி களை மார்பு, கழுத்து, உச்சி, மூக்கு என்ற ஸ்தானங்களிற் பொருத்தி, உதடு, நாக்கு, பல், மேல்வாய் என்னும் உறுப்புக்கள் மூலமாக முயல்வன் என்க.

இவ்வுண்மை பற்றித் தொல்காப்பியனாரும் வைகரி வரையி லுள்ள வாக்குகள் அஜபாஜபங்களுக்கு உரியன என்றும், வெளியிடும் பேச்சுக்கு உரியனவல்ல என்றும் காட்டி, முன்னவற்றை விரிக்காது பின்னதையே உணர்த்தினார்.*

நன்னூலார் பரா, பஶ்யந்தி, மத்யமையை அறவே கூறாது, வைகரியின் வெளித் தொழில்களை மாத்திரம் கூறினார்.

இவ்வாறு கூறிய சூத்திரம் :-

யவ. நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப
எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.

---

* கீழ்வரும் தொல்காப்பிய சூத்திரங்களை நோக்குக :
"அகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே
அஃதிவ ணுவலா தெழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளியிசை யளபு நுவன்றிசினே" - (தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பிறப்பியல், சூத்திரம் 20, 21) இவற்றின் விளக்கம் நச்சினார்க்கினியருரையிற் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (4) எழுத்துக்களின் பிறப்பு.

இதன் பதப்பொருள் :

நிறை உயிர் = எழுத்துக்களை உச்சரித்தற்கு வேண்டிய வல்லமை நிறைந்த உயிரினது,

முயற்சியின் = (எழுத்தொலிகளைச் வெளியிட வேண்டும் என்று செய்யும்) ப்ரயத்தனத்தால்,

உள் வளி துரப்ப = உள்ளேயிருக்கும் காற்றானது எழுப்ப,

எழும் அணுத்திரள் = எழுகின்ற அணுக்களின் கூட்டம்,

உரம் கண்டம் உச்சி மூக்கு உற்று = மார்பும், கழுத்தும், தலையும் நாசியும் ஆகிய நான்குஸ்தானங்களையும் பொருந்தி,

இதழ் நா பல் அண்ணம் = உதடும், நாக்கும், பல்லும், மேல் வாயும் ஆகிய உறுப்புக்களின்,

தொழிலின் = செயலால்,

வெவ்வேறு எழுத்தொலியாய் = வேறு வேறு ஒலி வடிவங் களாய்,

வரல் பிறப்பு = வருதல் பிறப்பாகும்.

### பிறப்பின் சிறப்பிலக்கணம்.

முதலெழுத்துக்களுக்குப் பிறப்பிடம்.

அ ஆ முதலிய பன்னிரண்டு உயிரெழுத்துக்களுக்கும், ய் ர் ல் வ் ழ் ள் என்ற இடை எழுத்துக்களுக்கும், பிறப்பிடம் கழுத்தாகும்.

ங் ஞ் ண் ந் ம் ன் என்ற மெல்லெழுத்துக்கள் பிறக்குமிடம் மூக்கு ஆகும்.

க் ச் ட் த் ப் ற் என்ற வல்லெழுத்துக்கள் பிறக்குமிடம் மார்பு ஆகும்.

இவற்றிற்குச் சூத்திரம் : -

யகூ. அவ்வழி ஆவி யிடைமை யிடமிட றாகும்
மேவு மென்மை மூக் குரம்பெறும் வன்மை.

இதன் பதப்பொருள் :

அவ்வழி = முன்னர்ச் சொன்ன அந்த வழியாக எழுத்துக்கள் பிறக்குமிடத்து,

ஆவி = உயிரெழுத்துக்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைமை = இடையினத்திற்கும்,

இடம் = பிறக்குமிடம்

மிடறு ஆகும் = கழுத்து ஆகும்.

மென்மை = மெல்லினம்

மூக்கு = நாசியை

மேவும் = ( பிறக்குமிடமாகப்) பொருந்தும்

வன்மை = வல்லினம்

உரம் = மார்பை

பெறும் = (பிறக்குமிடமாகப்) பொருந்தும்.

உயிரும், வல்லினம் மெல்லினம் இடையினம் என்னும் மெய்யும், இன்ன முயற்சியாற் பிறக்கும் என்று இனிக் கூறுதும்.

முதலெழுத்துக்களின் பிறப்புக்கு முயற்சி

உயிரெழுத்துக்கள் அ ஆ என்னும் இரண்டெழுத்துக்களும் வாயைத் திறத்தலாகிய முயற்சியினாலே பிறக்கும்.

இதற்குச் சூத்திரம் :-

௨௰. அவற்றுள்,

முயற்சியுள் அ ஆ அங்காப் புடைய.

இதன் பதப்பொருள் :

அவற்றுள்= மேலே பிறப்பிடம் வகுப்பட்ட முதலெழுத்துக்களாகிய முப்பது எழுத்துக்களுள்,

முயற்சியுள் = (முன்சொன்ன நால்வகையான) ப்ரயத்தனங்களுள்

அ ஆ = அ ஆ என்னும் இரண்டெழுத்துக்களும்

அங்காப்பு = (வாயின் தொழிலாகிய) திறத்தலை

உடைய = உடையனவாகப் பிறக்கும்.

இ ஈ எ ஏ ஐ என்னும் ஐந்தெழுத்துக்களும் வாயைத்திறந்து அடிநாக்கின் ஓரம் மேல்வாய்ப் பல்லைப் பொருந்தப் பிறக்கும்.

இதற்குச் சூத்திரம் :-

**௨௰௧. இ ஈ எ ஏ ஐயங் காப்போ**
**டண்பன் முதனா விளிம்புற வருமே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (4) எழுத்துக்களின் பிறப்பு.

இதன் பதப்பொருள் :

இ ஈ எ ஏ ஐ = இ ஈ எ ஏ ஐ என்னும் ஐந்தெழுத்துக்களும்

அங்காப்போடு = வாயைத் திறத்தலோடு

அண்பல் = மேல்வாயின் அடிப் பல்லை

முதல் நாவிளிம்பு உற = அடி நாக்கினது ஓரமானது பொருந்த,

வரும் = பிறக்கும்.

இனி, உ ஊ ஒ ஓ ஔ என்னும் ஐந்தெழுத்துக்களும் உதடுகள் இரண்டும் குவிதலால் பிறக்கும்.

இதற்குச் சூத்திரம் :-

உயஉ. உ ஊ ஒ ஓ ஔ விதழ் குவிவே

இதன் பதப்பொருள் :

உ ஊ ஒ ஓ ஔ = உ ஊ ஒ ஓ ஔ என்னும் ஐந்தெழுத்துக்களும்
(பிறத்தற்குக் காரணமாகிய முயற்சி)

இதழ் குவிவு = உதடுகள் குவிதலாம்.

இனி, அடி நாக்கு மேல்வாய் அடியைப் பொருந்த க் ங் என்னும் இரண்டெழுத்துக்களும் பிறக்கும்.

இடை (நடு) நாக்கு மேல்வாயின் நடுவைப் பொருந்த ச் ஞ் என்ற இரண்டெழுத்துக்களும் பிறக்கும்.

கடை (நுனி) நாக்கு மேல்வாயின் கடையைப் பொருந்த ட் ண் என்ற இரண்டெழுத்துக்களும் பிறக்கும்.

இவற்றிற்குச் சூத்திரம் :-

**உயங. க ங வும் ச ஞ வும் ட ண வும் முதலிடை**
**நுனிநாவண்ண முறமுறை வருமே.**

இதன் பதப்பொருள் :

க ங வும் = க் ங் என்றவையும்,

ச ஞ வும் = ச் ஞ் என்றவையும்,

ட ண வும் = ட் ண் என்றவையும்,

முதல் நா = அடி நாக்கும்,

இடை நா = நடு நாக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுனி நா = நுனி நாக்கும்,
(அடி) அண்ணம் = மேல்வாயின் அடியையும்,
(இடை) அண்ணம் = மேல்வாயின் நடுவையும்,
(நுனி) அண்ணம் = மேல்வாயின் கடைசியையும்,
உற = பொருந்த,
முறைவரும் = இக்கிரமமாகப் பிறக்கும்.

இனி, நாக்கு நுனியானது மேல்வாய்ப்பல்லின் அடியைப் பொருந்த த் ந் என்ற இரண்டெழுத்துக்களும் பிறக்கும்.

இதற்குச் சூத்திரம் :-

**உயச. அண்ப லடிநா முடியுறத் தநவரும்**

இதன் பதப்பொருள் :
அண்பல் அடி = மேல்வாய்ப்பல்லின் அடியை
நா முடி உற = நாக்கு நுனி பொருந்த,
தந = த் ந் என்னும் இரண்டெழுத்துக்களும்
வரும் = பிறக்கும்.

இனி, மேலுதடும் கீழுதடும் பொருந்த ப் ம் என்ற இரண்டெழுத்துக்களும் பிறக்கும்.

இதற்குச் சூத்திரம் :-

**உயரு. மீ கீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்.**

இதன் பதப்பொருள் :

மீ (இதழ்) கீழ் இதழ் உற = மேலுதடும் கீழுதடும் பொருந்த, பம பிறக்கும் = ப் ம் என்ற இரண்டெழுத்துக்களும் பிறக்கும்.

இனி, நாக்கின் அடியானது மேல்வாயின் அடியைப் பொருந்த, ய் என்ற எழுத்துப் பிறக்கும்.

இதற்குச் சூத்திரம் :

**உயசு. அடி நா வடியண முறயத் தோன்றும்.**

இதன் பதப்பொருள் :
அடி நா = நாக்கின் அடியானது
அடி அ (ண்)ணம் உற = மேல்வாயின் அடியைப் பொருந்த, ய தோன்றும் = ய் என்ற எழுத்துப் பிறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (4) எழுத்துக்களின் பிறப்பு

இனி மேல்வாயை நாக்கு நுனி தடவ, ர் ழ் என்னும் இரண்டெழுத்துக்களும் பிறக்கும்.

இதற்குச் சூத்திரம் :-

**உயஎ. அண்ண நுனிநா வருட ரழவரும்.**

இதன் பதப்பொருள்

அண்ணம் = மேல்வாயை

நுனி நா = நாக்கு நுனியானது

வருட = தடவ,

ரழ = ர் ழ் என்னும் இரண்டெழுத்துக்களும்

வரும் = பிறக்கும்.

இனி, மேல்வாய்ப்பல்லின் அடியை நாவின் ஓரமானது தடித்துநெருங்க, ல் என்ற எழுத்துப் பிறக்கும்.

மேல்வாயை நாவின் ஓரமானது தடித்துத் தடவ, ள் என்ற எழுத்துப் பிறக்கும்.

இவற்றிற்குச் சூத்திரம் :-

**உயவு. அண்பன் முதலு மண்ணமு முறையே**
**நாவிளிம்பு வீங்கி யொற்றவும் வருடவும்**
**லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்.**

இதன் பதப்பொருள் :

அண்பல் முதலும் = மேலவாய்ப் பல்லினது அடியையும்

அண்ணமும் = மேல்வாயையும்

முறையே = வரிசையாக

நா விளிம்பு = நாக்கினது ஓரம்

வீங்கி = தடித்து

ஒற்றவும் = நெருங்கவும்

வருடவும் = தடவவும்,

லகார ளகாரம் = ல் ள் என்ற

ஆயிரண்டும் = அவ்விரண்டு எழுத்துக்களும்

பிறக்கும் = தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி , மேல்வாய்ப்பல்லைக் கீழுதடு பொருந்தினால், வ் என்ற எழுத்துப் பிறக்கும்.

இதற்குச் சூத்திரம் :-

**உயகூ. மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.**

இதன் பதப்பொருள் :

மேல்பல் = மேல்வாய்ப்பல்லை

இதழ் உற = கீழ் உதடு பொருந்த,

வ மேவிடும் = வ் என்ற எழுத்துப் பிறக்கும்.

இனி, மேல்வாயை நாவின் நுனியானது மிகப்பொருந்தினால் ற் ன் என்ற இரண்டெழுத்துக்களும் பிறக்கும்.

இதற்குச் சூத்திரம் :-

**கூம. அண்ண நுனிநா நனியுறிற் றனவரும்.**

இதன் பதப்பொருள்

அண்ணம் = மேல்வாயை

நுனி நா = நாக்கின் நுனியானது

நனி உறில் = மிகவும் பொருந்தினால்,

றன வரும் = ற், ன் என்ற இரண்டெழுத்துக்களும் பிறக்கும்.

இனிச் சார்பெழுத்துக்கள் (பக்கம் 13 - 15) பிறத்தலுக்குரிய இடத்தையும் முயற்சியையும் பற்றிக் கூறுவோம்.

**சார்பெழுத்துக்கள் பிறக்கும் இடமும் முயற்சியும்.**

ஆய்தத்திற்குப் பிறப்பிடம் தலை , வாயைத் திறத்தல் முயற்சி, ஆகும்.

(மற்றைய) ஆய்தம் ஒழிந்த ஒன்பது சார்பெழுத்துக்களும், தத்தம் முதலெழுத்துக்கள் போல, பிறப்பிடமும் முயற்சியும் கொண்டனவாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. உயிர் மெய்க்கு | முதலெழுத்து | - | மெய்யும் உயிரும். |
| 2. உயிரளபெடைக்கு | ,, | - | உயிர் |
| 3. ஒற்றளபெடைக்கு | ,, | - | ஒற்று. |
| 4. குற்றியலிகரத்திற்கு | ,, | - | இ. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 குற்றியலுகரத்திற்கு ,, - உ
6 ஐகாரக் குறுக்கத்திற்கு ,, - ஐ
7 ஔகாரக் குறுக்கத்திற்கு ,, - ஔ
8 மகரக் குறுக்கத்திற்கு ,, - ம்
9 ஆய்தக்குறுக்கத்திற்கு ,, - ஃ (ஆய்தம்)

இதற்குச் சூத்திரம் :-

௯௰க. ஆய்தக் கிடந்தலை யங்கா முயற்சி
சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய

இதன் பதப்பொருள் :

ஆய்தக்கு = ( பத்துவகையான சார்பெழுத்துக்களுள் ஒன்றாகிய ) ஆய்தம் என்ற எழுத்திற்கு

இடம் தலை = பிறப்பிடம் தலையாகும்,

அங்கா முயற்சி = வாயைத்திறத்தல் பிரயத்தனமாகும்.

சார்பெழுத்து எனவும் = (ஆய்த எழுத்து நீங்கலாகும்) மற்றைய (ஒன்பது வகையான) சார்பெழுத்துக்களும்

தம்முதல் அனைய = தம்முதலெழுத்துக்களை (பிறப்பிடம்முயற்சிகளினால்) ஒத்தன வாகும்.

இந்தச் சூத்திரத்தின் முதலாம் அடியிலுள்ள "ஆய்தக்கு" என்பது ஆய்தத்துக்கு என்றதன் விகாரம். ஆய்தம் + கு = ஆய்தக்கு

எழுத்துக்களின் பிறப்பிற்குப் புறனடை.

புறனடை என்பது முன்னர் விதித்த விதிகளுக்குப் பொருந்தா ததும், தழுவவேண்டியதும், ஆகிய விதியை விதித்தல்.

புறனடை = புறன் + நடை = (முன் விதித்த விதியன்றிப்) புறம்பாக நடப்பது.

புறன் + அடை எனவும் பிரித்துப் புறம்பாக அடுத்துவரும் விதி எனப் பொருள் கூறுவாரும் உளர்.

எழுத்துக்களுள் இரண்டு முதலாகியவற்றிற்கு ஒரே பிறப்பிடமாகவும், ஒரே முயற்சியாகவும் முன்னர் விதித்தாம். அங்ஙனம் ஒன்றாகக் கூறப்பட்ட எழுத்துக்களுக்குள்ளும் சிலமாறுபாடுகள் உள. இம்மாறுபாடுகள் அவ்வெழுத்துக்களின் பிறப்பிற்குப் புறனடையாகக் கூறப்படும் என்றறிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, எழுத்துக்களின் பிறப்பைக் கூறிய மேற் சூத்திரங்களில், பிறப்பிடம், முயற்சி என்ற ஒற்றுமையால் சில எழுத்துக்களை ஒன்றாகச் சேர்த்துப் பிறப்பிலக்கணம் கூறியிருப்பினும், உயர்த்தி உச்சரித்தல், தாழ்த்தி உச்சரித்தல், உயர்த்தியும் தாழ்த்தியும் உச்சரித்தல், என்னும் ஒலிவேற்றுமையால் ஒன்றுக்கொன்று பிறப்பு வேறுபாடுகள் சில உண்டு.

இதற்குச் சூத்திரம் : -

**௱யஉ. எடுத்தல் படுத்தல் நலித லுழப்பிற்**
**றிரிபுந் தத்தமுட் சிறிதுள வாகும்.**

இதன் பதப்பொருள் :

எடுத்தல் = உயர்த்தி உச்சரித்தல்,

படுத்தல் = தாழ்த்தி உச்சரித்தல்,

நலிதல் = உயர்த்தியும் தாழ்த்தியும் உச்சரித்தல்,

உழப்பில் = (என்ற இவை காரணமாகிய) ஒலி வேற்றுமையால்,

திரிபும் = (பிறப்பிடம், ஒலி முயற்சி என்றும் இவைகளைக் கூறுமிடத்து ஒன்றாகச் சேர்த்துக் கூறப்பட்ட எழுத்துக்களுள்) மாறுபாடும்,

தம்தம்முள் = தங்கள் தங்களுக்குள்ளே

சிறிது உளவாகும் = சற்று உள்ளனவாகும்.

## சார்பெழுத்துக்களின் தோற்றம்.

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்னும் பத்துவகையான சார்பெழுத்துக்கள் பிறக்கும் வகையைக் குறிப்பாக முன்னர் 46, 47 - வது பக்கங்களிற் காட்டினாம். அவை எவ்விடத்து உண்டாகின்றன, எங்ஙனம் உண்டாகின்றன என்பதை ஈண்டு விளக்கிக் காட்டுதும்.

## 216 உயிர்மெய்யெழுத்துக்கள் ஆதல்.

மெய்யெழுத்துக்களிலே உயிரெழுத்துக்கள் ஏறில் உயிர்மெய் யெழுத்துக்கள் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க் என்ற மெய்யெழுத்திலே அ என்ற உயிர் ஏறி, "க" என்ற உயிர்மெய்யெழுத்தாகும். க் + அ = க இவ்வாறே மற்ற மெய்யெழுத் துக்களில் உயிர் ஏறிப் பலவித உயிர்மெய்யெ ழுத்துக்களாகும்.

மெய்யில் உயிர் ஏறும் போது வரும் வேறுபாடுகளைக் கீழே காண்க.

1. மெய்யெழுத்துக்களில் உயிரெழுத்துக்கள் ஏறும்போது மெய்யெழுத்துக்குள்ள புள்ளிகள் கெட்டுவிடும்.

2. புள்ளிவிட்ட அந்த வடிவமே அ என்ற உயிர் ஏறுவதற்கு உரிய வடிவமாகும்.

3. அ என்ற உயிரெழுத்து ஒழிந்த ஏனைப் பதினோருயிரும் மெய்யெழுத்துக்களில் ஏறும்போது புள்ளியை விட்டதோடு பல வேறுபட்ட வடிவங்களை மெய்யெழுத்துக்கள் அடையும்.

4. மெய் தனது மாத்திரையை விட்டுத் தன்மேலேறிய உயிரெழுத்துக்கேற்பக் குறிலாகவும் நெடிலாகவும் ஒலிக்கும்.

5. மெய்யெழுத்துத் தன்மேலேறிய உயிரெழுத்துக்களின் வரிவடிவத்தைக் கெடுத்துவிடும்.

6. உயிர்மெய்யெழுத்தை உச்சரிக்கும்போது மெய்யொலி முன்னும் உயிரொலி பின்னுமாக வரும்.

இந்த வேறுபாடுகளைப் பின்வருமாறு தொகுக்கலாம் :-

மெய்யெழுத்தானது தனக்குரிய புள்ளியை ஒழித்து அகர உயிர் ஏறுங்கால் புள்ளிவிட்ட அந்த வரிவடிவமே தனக்கு வரிவடிவ மாகியும்; அஃதொழிந்த உயிரெழுத்துக்கள் ஏறியவழி வரிவடிவு வேறுபட்டும், தன் மாத்திரை தோன்றாது, தன்மேலேறிய உயிரெழுத்தின் மாத்திரையே தனக்கு மாத்திரையாய்க் கொண்டும்; தனது வேறுபாடுற்ற வரிவடிவமே தன்மீதேறிய உயிரெழுத்துக்கு வரிவடிவாகுமாறு அவ்வுயிரெழுத்தின் வரிவடிவத்தைக் கெடுத்தும்; உயிரும் மெய்யுமாகப் பிறந்த காரணத்தால் உயிர்மெய் என்னும் பெயரோடு கூடி மெய்யெழுத்தொலி முன்னும் உயிரெழுத்தொலி பின்னுமாகப் பெற்றும்; உயிர்மெய்யெழுத் துக்கள் வருவனவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெட்டு மெய்யெழுத்துக்கள் மேலும் தனித்தனி பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் ஏறியபொழுது (பன்னிரு பதினெட்டு) அதாவது, இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்யெழுத்துக்கள் ஆகும் என்றதைக் கீழ்வரும் அட்டவணையிற் காண்க.

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

இதற்குச் சூத்திரம் : -

நூ. புள்ளிவிட் டவ்வோடு முன்னுரு வாகியும்
ஏனை யுயிரொ டுருவு திரிந்தும்
உயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடு மொற்று முன் னாய் வரு முயிர்மெய்

இதன் பதப்பொருள்:

புள்ளிவிட்டு = உயிரெழுத்து ஏறுங்காலத்தில் மெய்யெழுத்தானது தனக்குள்ள புள்ளியை விட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (4) எழுத்துக்களின் பிறப்பு

அவ்வொடு = அ என்ற உயிரெழுத்தோடு (கூடியபொழுது),

முன் உரு ஆகியும் = புள்ளி விட்டிருந்த அந்த வரிவடிவமே தனக்கு வரிவடிவமாகியும்

ஏனை உயிரொடு = ஆ முதலிய பதினோருயிர் எழுத்துக் களோடு (கூடியபொழுது),

உருவு திரிந்தும் = ( புள்ளிவிடுதல் மாத்திரமேயன்றிப் (பலவகையாக) வரிவடிவம் வேறுபட்டும்.

உயிர் அளவாய் = (தன்மீதேறிய) உயிரெழுத்தின் மாத்திரையே தனக்கு மாத்திரையாய் (மெய்யெழுத்துக்குள்ள மாத்திரை தோன்றாமல்),

அதன் வடிவு ஒழித்து = உயிரெழுத்தின் வரிவடிவத்தை நீக்கி (விகாரப்பட்ட மெய்யெழுத்தின் வரிவடிவமே வரிவடிவமாய்),

இருவயின் பெயரொடும் = (உயிரும் மெய்யும் ஆகிப் பிறந்த காரணத்தால்) அவ்விரண்டுடிடத்துக்குரிய பெயராகிய உயிர்மெய் யென்ற பெயரொடும்,

ஒற்று முன்னாய் = மெய்யொலி முன்னாய் (உயிரொலி பின்னாய்),

உயிர்மெய் வரும் = உயிர்மெய் யெழுத்துக்கள் பிறக்கும்.

### 8 முற்றாய்தம்

முற்றாய்தமாவது ஒலிமுற்றிய ( மாத்திரை குறையாத) ஆய்த வெழுத்து என்பதாகும்.

ஆய்தவெழுத்து சிலமொழிகளில் தனக்குள்ள மாத்திரை குறையாமலும், சிலமொழிகளில் மாத்திரை குறைந்தும், வருகின்றது.

மொழிகளில் மாத்திரை குறையாமல் வரும் ஆய்த வெழுத்தை முற்றாய்தமென்றும், மொழிகளில் மாத்திரை குறைந்து வரும் ஆய்தவெழுத்தை ஆய்தக்குறுக்கம் என்றும், இரண்டு வகையாக ஆய்தம் பிரிக்கப்படும். ஆய்தக்குறுக்கத்தின் விளக்கம் பின்வரும் 70 ஆம் பக்கத்திற் காண்க.

முற்றாய்தம் = முற்று + ஆய்தம் = ஒலிமுற்றிய( மாத்திரை பூரணம் பெற்ற) ஆய்தவெழுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றுபக்கங்களிலும் புள்ளிபெற்ற ஃ வரிவடிவமே இதன் உருவம்.

இந்த முப்பாற்புள்ளி (ஆய்தவெழுத்து) குற்றெழுத்திற்குப் பின்னரும், வல்லின உயிர்மெய் யெழுத்துக்களுக்கு முன்னரும் மொழிகளிலே வரும்.

க் ச் ட் த் ப் ற் என்ற ஆறு வல்லெழுத்துக்களுக்கு முன்னர் ஆய்தவெழுத்து மொழிகளில் இயல்பாக வரும்.

உ -ம் எஃகு (க்); கஃசு (ச்); கஃடு (ட்); கஃது (த்); கஃபு (ப்); கஃறு; (ற்).

க் ச் ட் த் ப் ற் என்ற வல்லின எழுத்துக்கள் ஆறோடும் மொழி களில் இயற்கையாக ஆய்தவெழுத்து வருதலினால், மொழிகளின் இடம் நோக்கி இங்கே ஆய்தவெழுத்துக்கள் ஆறும் முற்றாய்தம் எனப்படும்.

அவ் என்ற பதம் கடிய என்ற பதத்தோடு புணருங்கால் அவ் என்ற சொல்லின் கடை எழுத்தாகிய "வ்" என்ற எழுத்து ஃ என்ற எழுத்தாக மாறி அஃகடிய என்றாகும். அவ் + கடிய = அஃகடிய

அ என்ற எழுத்து கான் என்ற சாரியையோடு புணருங் காலத்தில் இடையிலே ஃ என்ற ஆய்தவெழுத்துத் தோன்றி அஃகான் என்றாகும்.
(அ + கான் = அஃகான்)

அஃகடிய என்ற சொல்லில் வ் என்ற எழுத்தானது ஃ என்று திரிந்த ஆய்தமொன்றும், அஃகான் என்றதிலுள்ள ஆய்தவெழுத்து ஒன்றும், மேற்காட்டியபடி வல்லெழுத்துக்களோடு வரும் முற்றாய் தம் ஆறுடன் சேர்ந்து, முற்றாய்தம் எட்டாயினவாறு காண்க.

இதற்குச் சூத்திரம் : -

௱௰௪. குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே.

இதன் பதப்பொருள் :

ஆய்தம் புள்ளி = (மூன்று) புள்ளிவடிவாகிய ஆய்தவெழுத் தானது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (4) எழுத்துக்களின் பிறப்பு.

குறியதன் முன்னர் = குற்றெழுத்தின் முன்னதாய் (வலப்பக்கத்தில்),

உயிரொடு புணர்ந்த = உயிரெழுத்தோடு கூடிய,

வல் ஆறன் = ஆறு வல்லெழுத்தின்,

மிசைத்து = மேலதாய் (இடப்பக்கத்தில்) வரும்.

முன், மேல் என்ற பதங்களைப்பற்றி 69- வது பக்கத்தைப் பார்க்க.

### அளபெடை.

அளபெடையாவது பாட்டிலே ஓசை குறைந்த இடத்திலும், செவிக்கு இனிமை குறைந்த இடத்திலும், ஒருவகைச் சொல்லை மற்றொரு சொல்லாக்கவேண்டிய இடத்திலும், உயிராவது ஒற்றாவது தன் மாத்திரையில் மிகுதிப்படுவதாம்.

அளபெடை = அளபு (அளவு) + எடை = அளவாக எடுப்பது.

அளபெடை என்பதை அளபெடை என்றும் கூறுவர்.

அளபடை = அளபு (அளவு) + அடை = அளவாக அடுத்து வருவது.

பாட்டிலே சிலவிடங்களில் ஒலி செவிக்கு இனிமையற்றிருக்கும். அவ்விடங்களில் உள்ள எழுத்துக்களின் மாத்திரையை அதிகப்படுத்தினால் இனிமையாகவிருக்கும். இனிமைக்காக அளபெடுத்தால் அதனை இன்னிசை யளபெடை எனவும், ஒருவகைச்சொல் மற்றொருவகைச் சொல்லாக அளபெடுப்பதைச் சொல்லிசை யளபெடை எனவும் கூறப்படும்.

இவ்வளபெடை உயிரளபெடை, ஒற்றளபெடை என்று இரண்டு வகைப்படும்.

### 21 உயிரளபெடை

உயிரளபெடையாவது உயிரெழுத்துக்கள் பன்னிரண்டினுள் ஏழு நெட்டெழுத்துக்களும் மொழிக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் அளவெடுப்பதாம்.

இவ்வாறு நெட்டெழுத்துக்கள் அளபெடுத்திருக்கின்றன என்பதைக் காட்டுவதற்கு அடையாளமாக அந்த நெட்டெழுத்துக்களுக்கு இன எழுத்துகளாகிய குற்றெழுத்துக்கள் அவற்றின் பக்கத்தில் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ -ம் (1) மொழிக்கு முதலில் வரும் உயிரளபெடை:

"ஓ ஓதல் வேண்டும்" ஈண்டு, ஓதல் என்ற பதத்தின் முதலெழுத்தாகிய ஓ என்ற நெட்டெழுத்து ஓ ஒ என அளபெடுத்தது. ஓ என்ற எழுத்து அளபெடுத்ததற்கு அடையாளமாக அதன் பக்கத்தில் அதன் இனவெழுத்தாகிய ஒ என்றது எழுதப்பட்டிருத்தல் காண்க.

உ - ம் (2) மொழிக்கு இடையில் வரும் உயிரளபெடை :

"உறா அர்க் குறுநோய்" ஈண்டு, "உறார்க்கு என்ற பதத்தி லுள்ள நடுவெழுத்தாகிய றா றா அ என்று அளபெடுத்தது.

உ-ம் (3) மொழிக்குக் கடையில் வரும் உயிரளபெடை :

"நல்ல படா அ பறை" படா என்ற பதத்தின் கடையெழுத் தாகிய டா என்றது டாஅ என்று அளபெடுத்தது.

இன்னிசை நிறைக்க வரும் அளபெடை.

**இன்னிசை அளபெடையாவது** செய்யுளில் இனிய ஓசை குறைந்த பொழுது உள்ள குற்றெழுத்துக்கள் நெட்டெழுத்துக்களாக மாறி, மாத்திரை நீண்டொலித்து இனிமையுண்டாக்குவதாம்.

உ-ம் "கெடுப்பதுங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
யெடுப்பது மெல்லா மழை"

இந்த இரண்டடியையுடைய செய்யுளைப் பாடுங்கால் முதலடியிலுள்ள "கெடுப்பதும்" என்றதும், இரண்டாம் அடியி லுள்ள "எடுப்பதும்" என்றதும் ஓசைகுன்றிச் செவிக்குச் சுகக்குறை வைத் தருகின்றன.

"கெடுப்பதும்" "எடுப்பதும்" என்ற பதங்களிலுள்ள து என்ற குற்றெழுத்தைத் தூ என நெட்டெழுத்தாக்கித் தூஉ என அளவு கொடுத்துக் "கெடுப்பதூஉம்" "எடுப்பதூஉம்" என்று கீழ்வருமாறு சேர்த்துப்பாடினாற் செவிக்கு இன்பமாயிருக்கும்.

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிசை நிறைக்க வரும் அளபெடை.

சொல்லிசை நிறைக்கவரும் அளபெடையாவது செய்யுளில் ஒரு பெயர்ச்சொல்லை எச்சமாக்கவேண்டியிருந்தால் அந்தப் பெயர்ச்சொல் அளபெடுத்து வருவதாம்.

உ -ம் நசை (விருப்பம்)என்பது பெயர்ச்சொல். இந்த நசை என்ற பெயர்ச்சொல் விரும்பி என்று வினையெச்சப்பொருளில் வரும் போது "நசை இ" என்று அளபெடுத்துவரும்.

ஏழு நெட்டெழுத்துக்களும் மொழிக்கு முதலிலும், இடையிலும், கடையிலும் அளபெடுத்து வரும் என்று பொதுப்பட முன்னர் கூறியிருப்பினும், ஔ என்ற எழுத்து மொழிக்கு இடை கடைகளில் அளபெடுக்காமல், மொழிக்கு முதலில் மாத்திரம் அளபெடுத்து வரும்.

ஔ என்ற எழுத்து நீங்கலாக மற்ற ஆறு நெட்டெழுத்துக்களும் மொழிக்கு முதல் இடை கடைகளில் அளபெடுத்தலின் அறு மூன்று பதினெட்டு அளபெடைகளாகும். ஔ என்ற நெட்டெழுத்து மொழிக்கு முதலிற் பெறக்கூடிய அளபெடை ஒன்றனையும், இன்னிசை யளபெடை ஒன்றனையும், சொல்லிசை யளபெடை ஒன்றனையும் அந்தப் பதினெட்டோடுங் கூட்ட, உயிரளபெடை இருபத்தொன்றாதல் காண்க.

இதற்குச் சூத்திரம் : -

**௯௰௫. இசைகெடின் மொழிமுதலிடைகடை நிலைநெடில்**
**அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே.**

இதன் பதப்பொருள்:

இசை கெடின் = செய்யுளில் ஓசை குறைந்தால்

மொழிமுதல் = மொழிக்கு முதலிலும்

இடைகடை = இடையிலும், கடையிலும்

நிலைநெடில் = நிற்கின்ற நெட்டெழுத்துக்கள்

அளபு எழும் = அவ்வோசையை நிறைத்தற் பொருட்டுத் தத்தம் மாத்திரையில் மிகுந்து ஒலிக்கும்.

அவற்று அவற்று = அந்த நெட்டெழுத்துக்களுக்குப் பின் அவ்வவ் நெட்டெழுத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனம் குறில்= இன எழுத்தாகிய குற்றெழுத்தை வரிவடிவில் எழுதுவதே

குறி = அடையாளமாக வரும்.

42 ஒற்றளபெடை.

ஒற்றளபெடையாவது பாட்டில் ஓசை குறைந்தபோது சொல்லின் இடை கடை, என்ற இடங்களில் இரண்டு குற்றெழுத்துக் களுக்குப் பின்னரும், ஒரு குற்றெழுத்துக்குப் பின்னரும், சில மெய்யெழுத்துக்கள் தம்மாத்திரையில் மிகுந்து ஒலிக்கும்.

ஒற்று + அளபு + எடை = ஒற்றளபெடை = மெய்யெழுத்து அளவெடுத்து வருவது.

ஒற்றளபெடையை ஒற்றளபடை என்றும் கூறுவர்.

ஒற்று + அளபு + அடை ஒற்றளபடை = மெய்யெழுத்து மாத்திரையை அடுத்துவருவது.

ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் ல் ள் என்ற பத்து மெய்யெழுத்துக் களும்,ஃ என்ற ஆய்தமும், தம்மாத்திரையில் மிகுந்து ஒலித்து ஒற்றள பெடையாக வரும்.

க் ச் ட் த் ப் ற் ர் ழ் என்ற எட்டு மெய்யெழுத்துக்கள் ஒற்றள பெடையில் வாரா.

எந்தமெய்யெழுத்து அளபெடுத்ததுவோ அந்த மெய் யெழுத்துக்குப் பக்கத்தில் அந்த மெய்யெழுத்தையே வரி வடிவில் எழுதி விடுவது ஒற்றளபெடைக்கு அடையாளமாகும்.

மொழியின் இடையிலே இரண்டு குற்றெழுத்துக்களுக்குக் கீழ்வரும் ஒற்றளபெடைக்கு உதாரணம் : -

"இலங்ங்கு வெண்பிறை" இதிலே "இலங்கு" என்ற பதத்தில் இல என்ற இரண்டு குற்றெழுத்துக்களுக்குப் பின்னர் வரும் ங் என்ற மெய்யெழுத்து அளபெடுத்தது. அங்ஙனம் அளபெடுத்ததற்கு அடையாளமாக அதன் பக்கத்தில் மறுபடியும் ங் என்ற மெய்யெழுத்து இடப் பெற்று "இலங்ங்கு" என வந்தமை காண்க.

மொழிக்கு இடையில் ஒரு குற்றெழுத்துக்குக் கீழ்வரும் ஒற்றளபெடைக்கு உதாரணம் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கிறைவனுளன்" இதில் "எங்கு" என்ற பதத்தில் எ என்ற ஒரு குற்றெழுத்துக்குக் கீழ் உள்ள ங் என்ற மெய்யெழுத்து அளபெடுத்தது. அஃது அளபெடுத்ததற்கு அடையாளமாக அதன் பக்கத்தில் மறுபடியும் ங் என்ற மெய்யெழுத்து இடப்பெற்று "எங்ங்கு" என வந்தமையுணர்க.

எங்கு +இறைவன் = எங்கிறைவன் என ஆயிற்று.

மொழிக்குக் கடையில் இரண்டு குற்றெழுத்துக்களுக்குக் கீழ்வரும் ஒற்றளபெடைக்கு உதாரணம் :

"மடங்ங் கலந்த மனனே" இதிலே "மடம்" என்ற பதம் "கலந்த" என்ற பதத்தோடு சேர்ந்து (மடம் + கலந்த) "மடங்கலந்த" என்றாகியது. இங்கேயுள்ள "மடங்" என்ற சொல்லின் மட என்ற இரண்டு குற்றெழுத்துக்களுக்குப் பின்னர் வரும் ங் என்ற எழுத்து அச்சொல்லின் கடை யெழுத்து. அந்த ங் என்ற மெய்யெழுத்து அளபெடுத்தது. அஃது அளபெடுத்ததற்கு அடையாளமாக மறுபடியும் ங் என்ற மெய்யெழுத்து இடப்பெற்று"மடங்ங்" என வந்தமை நோக்குக.

இங்ஙனம் மொழிக்கு இடையிலும் கடையிலும், இரண்டு குற்றெழுத்துக்களுக்கும், ஒரு குற்றெழுத்துக்கும் கீழே ஒற்றள பெடைக்கு உரிய எழுத்துக்கள் அளபெடுக்கும். ஆதலின் அந்த எழுத்துக்களில் ஒவ்வொன்றுக்கும் நந்நான்கு இடங்களுண்டு.

ஆனால் ஆய்தவெழுத்து மொழிக்குக் கடையில் வராது; இடையிலேதான் வரும். ஆதலின் ஆய்தவெழுத்துக்கு இரண்டி டமே உண்டென்க.

அளபெடுத்தற்கு உரிய பத்து மெய்யெழுத்துக்களில் ஒவ்வொன்றும் இடையிலும் கடையிலும், இரண்டு குற்றெழுத்துக் களுக்குப் பின்னரும், ஒரு குற்றெழுத்துக்குப் பின்னருமாக நான்கு வகையாக அளபெடுக்குமாதலின், அவை பத்துக்கும் ஒற்றளபெடை $(10 \times 4) = 40 + 2 = 42$ ஆய்தவெழுத்துக்கு 2.

ஆக ஒற்றளபெடை 42 ஆதல் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்ததிகாரம்.

இதற்குச் சூத்திரம் : -

௩௰௬சூ. ங ஞ ண ந ம ன வ ய ல ள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே.

இதன் பதப்பொருள் :

ங ஞ ண ம ன வ ய ல ள ஆய்தம் = ங் ஞ் ண் ம் ன் வ் ய் ல் ள் ஃ என்ற எழுத்துக்கள்.

அளவு ஆம் = அளவெடுக்கும். (எவ்விடத் தென்னில்).

குறில் இணை (கீழ்) = இரண்டு குற்றெழுத்துக்களின் பின்னரும்.

குறில் கீழ் = ஒரு குற்றெழுத்தின் பின்னரும்

இடை கடை = ஒருமொழியின் நடுவிலும் முடிவிலும். (அவ்வாறு அளபெடுத்தற்கு அடையாளம் யாதோவெனில்).

வேறு மிகலே = அந்த மெய்யெழுத்துக்கள் தாமே மறுபடியும் மிகுந்து வருதலே.

அவற்றின் குறியாம் = அவ்வளபெடைகளின் அடையாளமாகும்.

37 குற்றியலிகரம்.

முத்தி (மோக்ஷம்) என்ற பதத்தில் தி என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (த் + இ) இ என்ற எழுத்துத் தன் ஒலியளவிற் குறையவில்லை.

முத்தி யாது (மோக்ஷம் எது) என்றபோதும் தி என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள இ என்ற எழுத்துத் தன் ஒலியளவிற் குறையவில்லை.

ஆனால் முத்து யாது என்ற இரண்டு சொற்களும் சேர்ந்து நின்ற முத்தியாது (முத்து + யாது = முத்தியாது) என்ற பதத்திலே தி (த் + இ) என்ற உயிர்மெய்யிலுள்ள இ என்ற எழுத்துத்தன் ஒலியளவிற் குறைகின்றது.

இவற்றால் இ என்ற எழுத்து மொழிகளிற் சிலவிடத்தில் தன் ஒலியளவிற் குறைந்தும், சிலவிடத்தில் தன் ஒலியளவிற் குறையாதும் வரும் என்பது பெறப்பட்டது.

தன் ஒலியளவிற் குறைந்துவரும் இ என்ற எழுத்து குற்றியலிகரம் எனப்படும். ஒலியளவிற் குறையாத இ என்ற எழுத்து முற்றியலிகரம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (4)எழுத்துக்களின் பிறப்பு

குற்றியலிகரம் இருவகையாகப் பிறக்கும்.

முதல்வகை.

ஒரு குற்றெழுத்தோடு மாத்திரம் வராத சொற்களின் கடையெழுத்தான கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துக்களுள் ஒன்றாக இருத்தல் வேண்டும். இத்தகைய சொற்களுக்குப் பின்னர் யா என்ற எழுத்தை முதலிலே உடைய சொற்கள் வந்தால் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்கள் கி, சி, டி, தி, பி, றி என மாறிவிடும். இவற்றிலுள்ள இகரங்கள் குற்றியலிகரங்கள் எனப்படும்.

உ-ம். நாகு + யாது =நாகியாது. வரகு +யாது = வரகியாது

இரண்டாம் வகை.

முன்னிலை யசைச்சொல்லாகிய மியா என்ற பதத்திலே மி என்ற உயிர்மெய்யெழுத்திலே உள்ள இ என்ற எழுத்தும் தன் ஒலியளவிற் குறைந்த குற்றியலிகரம்.

இனி, நாகு + யாது = நாகி யாது. இங்கே நா என்ற நெடிலுக்குப் பின் கு என்ற எழுத்து மொழிக்குக் கடையில் வந்தது.

வரகு + யாது = வரகி யாது இங்கே வர என்ற இரண்டு குற்றெழுத்துக்குப்பின் கு என்ற எழுத்து மொழிக்குக் கடையில் வந்தது.

எஃகு + யாது = எஃகியாது. இங்கே ஃ என்ற ஆய்தவெழுத்துக்குப்பின் கு என்ற எழுத்து மொழிக்குக் கடையில் வந்தது.

கொக்கு + யாது = கொக்கியாது. இங்கே க் என்ற வல்லின மெய்யெழுத்துக்குப் பின் கு என்ற எழுத்து மொழிக்கிடையில் வந்தது.

குரங்கு யாது = குரங்கியாது இங்கே ங் என்ற மெல்லின மெய்யெழுத்துக்குப்பின் கு என்ற எழுத்து மொழிக்குக் கடையில் வந்தது.

தெள்கு + யாது = தெள்கி யாது இங்கே ள் என்ற இடையின மெய்யெழுத்துக்குப்பின் கு என்ற எழுத்து மொழிக்குக்கடையில் வந்தது.

இந்த உதாரணங்களில் கு என்ற ஓரெழுத்தானது நெட்டெழுத்துக்கும், இரண்டு முதலாகிய உயிர்மெய்யெழுத்துக்கும்.,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்ததிகாரம்.

ஆய்தவெழுத்துக்கும், வல்லின மெய்யெழுத்துக்கும், மெல்லின மெய்யெழுத்துக்கும், இடையின மெய்யெழுத்துக்கும் பின்னர் மொழிக்குக் கடையெழுத்தாகியது.

இவ்வகையாகவே கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு எழுத்துக்களுக்கும் ஆறாறு முப்பத்தாறு இடங்கள் உள்ளன.

இங்ஙனம் முப்பத்தாறு இடங்களையுடைய கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துக்களுக்குப் பின், யா என்ற எழுத்தை முதலிலேயுள்ள சொற்கள் வரில், இந்த ஆறு எழுத்துக்களும் கி, சி, டி,தி, பி, றி என மாறுதலின், இவற்றால் உண்டாகும் குற்றியலிகரங்கள் முப்பத்தாறும், மியா என்ற அசைச்சொல்லின் மி (ம் + இ) என்ற உயிர் மெய்யெழுத்திலுள்ள இ என்ற குற்றியலிகரம் ஒன்றும் சேர்ந்து குற்றியலிகரங்கள் முப்பத்தேழு ஆதல் காண்க.

இதற்குச் சூத்திரம் : -

௩௰௭. யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய

இதன் பதப்பொருள் :

யகரம் வர = ய் என்ற எழுத்தை முதலிலே உள்ள சொல் வந்து புணரும் போது

குறள் உ திரி இகரமும் = தன்னொலி யளவிற் குறைந்த குற்றிய லுகரம் திரிந்த இ என்ற எழுத்தும்.

அசைச்சொல் மியாவின் = அசைச்சொல்லாகிய மியா என்றதிலுள்ள.

இகரமும் = இ என்ற எழுத்தும்.

குறிய = தங்கள் ஒலியளவிற் குறைந்த குற்றியலிகரங்களாகும்.

இனிக் குற்றியலுகரத்தின் இலக்கணம் கூறுதும்.

36 குற்றியலுகரம்

கடு என்ற பதத்தில் டு (ட் + உ) என்ற உயிர் மெய்யெழுத்திலுள்ள உ என்ற உயிர்க்குற்றெழுத்துத் தன் ஒலியிற் குறையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கடு என்ற பதத்தோடு அதன் முன்னர் அ என்ற எழுத்தைச் சேர்த்தால் அகடு என்ற பதமாகும்.

இந்த அகடு என்ற பதத்தின் டு என்ற உயிர்மெய்யெழுத்தி லுள்ள உ என்ற உயிர்க்குற்றெழுத்துத் தன் ஒலியளவிற் குறைந் திருக்கின்றது.

எனவே, உ என்ற உயிர்க்குற்றெழுத்துச் சிலமொழிகளில் ஒலி குறைந்தும், சிலமொழிகளில் ஒலி குறையாதும், வரும் என்பது பெறப்பட்டது.

ஒலி குறைந்து வரும் உ என்ற எழுத்து குற்றியலுகரம் என்றும், ஒலி குறையாது வரும் உ என்ற எழுத்து முற்றியலுகரம் என்றும், கூறப்படும்.

இனி, உ என்ற எழுத்து எந்தெந்த இடங்களில் ஒலி குறைந்தும், எந்தெந்த இடங்களில் ஒலி குறையாதும், வரும் என்றதை ஆராய்வோம்.

நாகு, கஃசு, முரடு , கொத்து , கொம்பு, நால்கு, ஆடு, இரு, பஃது, பலாசு, பனாட்டு, விலங்கு, கன்று, என்னும் இந்தப் பதங் களின் கடையிலுள்ளன. கு, சு, டு, து, பு, று என்னும் வல்லின உயிர் மெய்யெழுத்துக்கள் இந்தக் கு (கு= க்+உ); சு (சு= ச் +உ); டு (டு=ட் +உ); து (து= த்+உ); பு (பு= ப் +உ); று (று= ற்+உ) என்ற வல்லின உயிர்மெய்யெழுத்துக்களிலுள்ள உ என்ற உயிர்க்குற்றெழுத்துத் தனக்கு உரிய ஒலியளவில் (மாத்திரையில்) குறைந்திருக்கின்றது.

ஏழு, உருமு, வாரு, தாணு என்ற இப்பதங்களின் கடை யெழுத்தாய் அமைந்து, மெல்லின இடையின மெய்யெழுத்துக் களின் மேல் ஏறிய உ என்ற உயிர்க்குற்றெழுத்துத் தனது ஒலியளவில் (மாத்திரையில்) குறையவில்லை.

இவற்றால் சில மொழிகளின் கடையில் வல்லினமெய்களின் மேல் ஏறிய உ என்ற உயிர்க்குற்றெழுத்துத் தனது ஒலியளவிற் குறைந் தும், மொழிக்குக் கடையில் மெல்லின இடையின மெய்களின் மேல் ஏறிய உ என்ற உயிர்க்குற்றெழுத்துத் தனது ஒலியளவிற் குறை யாதும், வரும் என்பது ஸித்திக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகு, பசு, கடு, அது, தபு, மறு என்ற பதங்களின் கடையெழுத்துகளாகிய கு, சு, டு, து, பு, று என்னும் வல்லின உயிர் மெய்யெழுத்துக்களில் ஏறிய உ என்ற உயிர்க்குற்றெழுத்துத் தனது ஒலியளவிற் குறையவில்லை.

ஒலியளவிற் குறைந்த குற்றியலுகரத்துக்கு உள்ள இலக்கணங்களைக் கீழ்வருமாறு கண்டுகொள்க.

கு, சு, டு, து, பு, று என்ற ஆறெழுத்துக்களில் ஒன்று மொழிக்குக் கடையெழுத்தாயிருத்தல் வேண்டும்.

(1) இந்தக் கு, சு, டு, து, பு, று என்ற உயிர்மெய்யெழுத்துக்களுக்கு முன்னர் ஒரு நெட்டெழுத்து வந்தால் அவற்றிலுள்ள உ என்ற உயிர்க்குற்றெழுத்து குற்றியலுகரமாகும்.

கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துக்களில் டு என்ற எழுத்தையும், சு என்ற எழுத்தையும் கடையிலே கொண்டு முதலில் ஆ என்ற நெட்டெழுத்தையும் ,மா என்ற நெட்டெழுத்தையும் பெற்று ஆடு , மாசு என்ற மொழிகளாயின.

ஆடு, மாசு என்ற பதங்களின் கடையிலே உள்ள உயிர்மெய் யெழுத்துக்களாகிய டு (டு = ட் + உ); சு (சு = ச் + உ) என்றவைகளிலே உள்ள உ என்ற உயிர்க்குற்றெழுத்து, தனது மாத்திரையிற் குறைந்திருக்கின்ற மையால், குற்றியலுகரமாயிற்று

நெட்டெழுத்துக்களின் பின்வரும் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளிலுள்ள உ என்ற உயிர்க்குற்றெழுத்துத் தனது ஒலியளவிற் குறைவதற்குக் காரணம், அவற்றின் முன்னே நெட்டெழுத்து தொடர்ந்திருப்பதே இத்தகைய தொடரை நெடிற்றொடர்க் குற்றியலுகரம் என்று பெரியோர் கூறுவர்.

(1) கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துக்கள் ஏழு நெட்டெழுத்துக்களோடும் வரும். ஆதலினால் நெடிற்றொடர் குற்றியலுகரங்கள் ஏழாயின என்றறிக.

2) கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துக்கள் ஃ என்ற ஆய்தவெழுத்தைத் தொடர்ந்து குற்றியலுகரங்களாகும்.

உ-ம் அஃது. கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துக்களில் ஒன்றாகிய து என்ற எழுத்து ஃ என்ற ஆய்தவெழுத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (4)எழுத்துக்களின் பிறப்பு

தொடர்ந்து, அவ்வாய்தத்துக்கு முன்னர் அ என்ற எழுத்து அமையப்பெற்றதாய் அஃது என வந்து குற்றியலுகரமாயிற்று.

கு, சு,டு, து, பு, று என்றவை ஆய்தவெழுத்தை தொடர்ந்து, குற்றியலுகரமாகும் பொழுது ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் ஒன்றே.

(3) கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துக்கள் இரண்டு முதலாய உயிர்மெய்யெழுத்துக்களைச் சார்ந்து குற்றியலுகரங்களாகும்.

உ- ம் வரகு, பலாசு. வரகு, பலாசு என்ற சொற்களின் கடையில் உள்ள கு, சு என்ற எழுத்துக்களுக்கு முன்னர் வர பலா என இவ்விரண்டு உயிர்மெய்யெழுத்துக்கள் தொடர்ந்திருக்கின்றன. வர என்பதில் ர என்பது பின்னுள்ள எழுத்து. பலா என்றதில் லா என்றது பின்னுள்ள எழுத்து. பின்னுள்ள எழுத்துக்களாகிய ர, லா என்பன வற்றை ர் + அ, ல் + ஆ என்று பிரிக்கலாம். அப்போது கு, சு என்பன அ, ஆ என்ற உயிரெழுத்துக்களையே தொடர்ந்தனவாகக் காணப் படும்.

உயிரெழுத்துக்களைத் தொடர்ந்து கு, சு, டு, து, பு, று என்ற உயிர்மெய்யெழுத்துக்களில் உள்ள உகரம் குற்றியலுகரமாகும் போது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

நெடிற்றொடர்க் குற்றியலுகரத்திற்கு ஆடு, மாசு என்ற பதங்கள் உதாரணங்களாகும். இந்தப் பதங்களின் கடையெழுத்துக்களாகிய டு, சு என்ற எழுத்துக்களைத் தொடர்ந்திருக்கிற ஆ என்ற எழுத்தும் மா (ம் + ஆ) என்றதிலுள்ள ஆ என்பதும் உயிரெழுத்துக்களாயிருக்க ஆடு, மாசு முதலியவற்றை மாத்திரம் நெடிற்றொடர்க் குற்றியலுகரம் என்று கூறுவதேன் என்னில் கூறுதும்.

நெடிற்றொடர்க் குற்றியலுகர மொழிகளில் கு, சு, டு , து, பு, று என்ற எழுத்துக்களுக்கு முன்னர் ஒரெழுத்தே தொடரும். ஆனால், உயிர்த்தொடர்க் குற்றியலுகர மொழிகளில் கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துக்களுக்கு முன்னர் இரண்டு முதலாகப் பல எழுத்துக்கள் தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலின் ஆடு, மாசு முதலியன உயிர்த்தொடர்க் குற்றியலுகர மொழிகள் ஆகா என்றறிக.

நெடிற்றொடர்க் குற்றியலுகரமல்லாத ஏனைய எல்லாத் தொடர்க்குற்றியலுகர மொழிகளுக்கும் ஈற்று எழுத்தைத் தொடர்ந் திருக்கும் எழுத்துக்குமேல் ஒன்று முதலாகப் பல எழுத்துக்களும் வந்தே தீரும் என்றுணர்க.

உயிரெழுத்துக்களில் ஔ என்ற எழுத்து மொழிகளின் இடை கடைகளில் வராது. ஆதலால் ஔ என்ற எழுத்து நீங்கலாக உள்ள பதினோருயிரெழுத்துக்களையும் தொடர்ந்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்களிலுள்ள உ என்ற எழுத்து குற்றியலுகரம் ஆகின்றமையால், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் பதினொன் றாகியது.

(4) கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்கள் க் ச் ட் த் ப் ற் என்ற வல்லெழுத்துக்களைத் தொடர்ந்து குற்றியலுகரங்களாகும்.

உ - ம். கொக்கு , பனாட்டு. இந்த இரண்டு சொற்களிலும் கு, டு என்ற எழுத்துக்கள் முறையே க், ட் என்ற வல்லெழுத்துக்களைத் தொடர்ந்தமை யறிக. இங்கே தொடர்ந்த வல்லெழுத்துக்களாகிய க்,ட் என்னும் இவற்றிற்கு மேலே கொ, பனா என்னும் எழுத்துக்கள் தொடர்ந்திருத்தலும் கவனிக்கத்தக்கது.

கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துக்கள் க் ச் ட் த் ப் ற் என்ற ஆறு வல்லின மெய்யெழுத்துக்களைத் தொடர்ந்துகுற்றியலுகரங்கள் ஆகின்றமையால், வன்றொடர்க் குற்றியலுகரங்கள் ஆறாகும்.

(5) கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துக்கள் ங் ஞ் ண் ந் ம் ன் என்ற மெல்லினமெய்யெழுத்துக்களைத் தொடர்ந்து குற்றியலுகரங் களாகும்.

உ- ம் விலங்கு, கொம்பு. இந்த இரண்டு சொற்களில் கு, பு என்ற எழுத்துக்கள் ங்,ம் என்ற மெல்லின மெய்யெழுத்துக்களை முறையே தொடர்ந்தும் , ங்,ம் என்ற எழுத்துக்கள் வில, கொ என்ற எழுத்துக்களை முறையே தொடர்ந்தும் குற்றியலுகரங்களாயினமை காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (4)எழுத்துக்களின் பிறப்பு

கு, சு,டு, து, பு, று என்ற எழுத்துக்கள் ங் ஞ் ண் ந் ம் ன் என்ற ஆறு மெல்லின மெய்யெழுத்துக்களைத் தொடர்ந்து குற்றியலு கரங்கள் ஆகின்றமையால், மென்றொடர்க் குற்றியலுகரங்கள் ஆறாகும்.

(6) கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துக்கள் வல்லெழுத்துக்க ளோடு தொடராத வ் நீங்கிய ய், ர், ல், ழ், ள் என்ற இடையின மெய்யெழுத்துக்களைத் தொடர்ந்து குற்றியலுகரங்களாகும்.

உ - ம் இயல்பு, போழ்து. இந்த இரண்டு சொற்களில் பு, து என்ற எழுத்துக்கள் ல், ழ் என்ற இடையின மெய்யெழுத்துக்களை முறையே தொடர்ந்து குற்றியலுகரங்களாயின. ல், ழ் என்ற எழுத்துக் களுக்கு முன் இய, போ என்ற எழுத்துக்கள் முறையே தொடர்ந்து நிற்பது காண்க.

கு, சு , டு, து, பு, று என்ற எழுத்துக்கள் ய் ர் ல் ழ் ள் என்ற ஐந்து இடையின மெய்யெழுத்துக்களைத் தொடர்ந்து குற்றியலுகரங்கள் ஆகின்றமையால், இடைத்தொடர் குற்றியலுகரங்கள் ஐந்தாகும்.

குற்றியலுகரத்தின் இலக்கணங்களை இனித் தொகுத்துக் கூறுதும்.

நெட்டெழுத்துக்கள்(தனி ஆய்தமாயின்றிப்) பிறவெழுத் துக்களைத் தொடர்ந்த ஆய்தவெழுத்து, உயிர்மெய்யெழுத்துக்கள் , க் ச் ட் த் ப் ற் என்ற வல்லெழுத்துக்கள், ங், ஞ் ண் ந் ம் ன் என்ற மெல்லெழுத்துக்கள் ய் ர் ல் வ் ழ் ள் என்ற இடையெழுத்துக்கள் - ஆகிய அவற்றில் ஓரெழுத்து, ஒரு சொல்லின் கடையெழுத்துக்கு முதலெழுத்தாகத் தொடர,கடை யெழுத்தாய் அமைந்த கு, சு, டு, து, பு, று என்னும் வல்லின உயிர்மெய்யெழுத்துக்கள் ஒன்றில் உள்ள உ என்ற எழுத்துத் தனது மாத்திரையில் (ஒலியளவில்) குறையும். அதுவே குற்றியலுகர மெனப்படும்.

இவ்வாறு வரும் குற்றியலுகரங்களில்,

| | |
|---|---|
| நெடிற்றொடர்க் குற்றியலுகரம் | ... 7. |
| ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் | ... 1. |
| உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் | ... 11 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்றொடர்க் குற்றியலுகரம் ... 6
மென்றொடர்க் குற்றியலுகரம் ... 6
இடைத்தொடர்க் குற்றியலுகரம் ... 5
ஆகக் குற்றியலுகரங்கள் முப்பத்தாறாயின என்றறிக.

இதற்குச் சூத்திரம் : -

௯௰௮. நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே.

இதன் பதப்பொருள் :

நெடிலோடு = தனித்த நெட்டெழுத்துக்கள் ஏழுடனே

ஆய்தம் = ஃ என்ற ஆய்தவெழுத்து ஒன்றும்,

உயிர் = (சொல்லுக்கு நடுவிலும் கடையிலும் வராத ஔ என்ற எழுத்து நீங்கலாகிய) உயிர் பதினொன்றும்,

வலி = க் ச் ட் த் ப் ற் என்ற வல்லெழுத்துக்கள் ஆறும்,

மெலி = ங் ஞ் ண் ந் ம் ன் என்ற மெல்லெழுத்துக்கள் ஆறும்,

இடை = ( வல்லெழுத்துக்களோடு தொடராத வ் என்ற எழுத்து ( நீங்கிய) ய் ர் ல் ழ் ள் என்ற இடையெழுத்துக்கள் ஐந்தும் (ஆகிய முப்பத்தா றெழுத்துக்களில் ஒன்றால்),

தொடர்மொழி = ( ஈற்றுக்கு அயவெழுத்தாகத்) தொடரப்பட்ட சொல்லின்,

இறுதி வன்மை ஊர் உகரம் = ஈற்றில் வல்லெழுத்துக்களுள் யாதாயினும் ஒரெழுத்தின் மேல் ஏறிவரும் உகரமானது ,

அஃகும் = (தனது ஒரு மாத்திரையில்) குறையும்.

பிற = பிறவெழுத்துக்கள் ( ஒன்றும் பலவுமாய்),

மேல்தொடரவும் = மொழியின் கடையெழுத்திற்கு முன் உள்ள எழுத்தின் முன்னே சேர்ந்து வரவும்,

பெறும் = (நெடிற்றோடர் ஒழிந்த ஐந்து தொடர்களும்) பெறும்.

இனி முற்றியலுகரம் வருமாறு.

முற்றியலுகரம்.

ஒரு குற்றெழுத்தைத் தொடர்ந்து சொல்லின் கடையில் வரும் கு, சு, டு, து, பு, று என்ற வல்லின உயிர்மெய்யெழுத்துக்களில் உள்ள உ என்ற எழுத்தும், சொல்லின் கடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (4)எழுத்துக்களின் பிறப்பு

மெல்லின இடையின மெய்யெழுத்துக்களின் மேல் ஏறிய உ என்ற எழுத்தும், மொழி முதல் இடை கடைகளில் உயிராகியும், மெய்யெழுத்துக்களில் ஏறியும் வரும் ஏனைய உ என்ற எழுத்தும் முற்றியலுகரங்களாம்.

குற்றியலுகரங்களல்லாத உகரங்களெல்லாம் முற்றியலு கரங்கள் என்றறிக.

நுந்தை என்ற பதத்தின் முதலெழுத்தாகிய நு என்றதினுள்ள உ என்ற எழுத்தும் குற்றியலுகரம் என்று தொல்காப்பியனார் கூறியிருக்கின்றனர்.

3 ஐகாரக்குறுக்கம்

ஐகாரக் குறுக்கம் என்பது ஐ என்ற எழுத்து மொழிக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் தனது மாத்திரையிற் குறுகி ஒலிப்பதாம்.

ஐ என்ற எழுத்தாக மாத்திரம் தனித்து உச்சரிக்கும் போது அவ்வெழுத்து குறுகாது. ஆனால் மொழியில் வரும் போது எங்கும் குறுகும்.

உ - ம் ஐப்பசி, இடையன், குவளை

ஐ என்ற எழுத்து ஐப்பசி என்ற பதத்தின் முதலெழுத்தாக வந்து தனது மாத்திரையிற் குறுகி ஒலித்தது.

ஐ என்ற எழுத்து இடையன் என்ற பதத்தின் இடையில் உள்ள எழுத்துக்களில்ஒன்றாகிய டை (ட் + ஐ = டை) என்ற உயிர் மெய்யெழுத்தாகித் தனது மாத்திரையிற் குறுகி ஒலித்தது.

ஐ என்ற எழுத்து "குவளை " என்ற பதத்தின் கடையிலே ளை (ள் + ஐ = ளை) என்ற உயிர்மெய்யெழுத்தாகித் தனது மாத்திரையிற் குறுகி ஒலித்தது.

ஔகாரக்குறுக்கம் (1).

ஔகாரக் குறுக்கம் என்பது ஔ என்ற எழுத்து மொழிக்கு முதலில் வரும் போது தனது மாத்திரையிற் குறுகி ஒலிப்பதாம்.

உ - ம். ஔவை

ஔ என்ற எழுத்தாக மாத்திரம் தனித்து உச்சரிக்கும் போது அவ்வெழுத்துத் தனது மாத்திரையிற் குறையாமற் ஒலிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஔவை என்ற பதத்தில் முதலெழுத்தாக வந்து தனது மாத்திரையிற் குறைந்து ஒலித்தது.

ஔ என்ற எழுத்து மொழிக்கு இடையிலும் கடையிலும் வராது. ஐகாரக்குறுக்கம் மொழிக்கு முதல், இடை, கடை என்ற மூன்றிடங் களிலும் வருதலால் மூன்றாகியது. ஔகாரக்குறுக்கம் மொழிக்கு முதலில் மாத்திரம் வருவதால் ஒன்றாகியது.

இவற்றிற்கு சூத்திரம் :-

௲ய௭. தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்
நையுமௌவு முதலற் றாகும்.

இதன் பதப்பொருள் :

ஐ = ஐ என்ற எழுத்தானது

தன் சுட்டு = தன்னைச் சுட்டிக் குறித்துக்காட்டும்.

அளபு ஒழி = ஆளபு ஒழிந்த

மூவழியும் = (சொல்லின்) முதல், இடை, கடை என்ற மூன்று இடங்களிலும்

நையும் = தனது மாத்திரையில் குறையும்.

ஔவும் = ஔ என்ற எழுத்தும்

முதல் = சொல்லின் முதலில்

அற்று ஆகும் = (தனது மாத்திரையில்) குறையும், அந்தத் தன்மையுடையதாகும்.

மகரக்குறுக்கம் (3).

மகரக்குறுக்கம் என்பது ம் என்ற எழுத்து மொழியில் வந்து தனது மாத்திரையிற் குறைந்து ஒலிப்பதாம்.

ம் என்ற மெய்யெழுத்தானது ண் ன் என்ற மெய்யெழுத் துக்களைத் தொடர்ந்தும், வ் என்ற எழுத்துக்கு மேலும் வந்தால் தனது மாத்திரையிற் குறைந்து ஒலிக்கும்.

உ-ம். மருண்ம். போன்ம். தரும் வள்ளல்.

மருண்ம் என்ற பதத்தில் ண் என்ற எழுத்தை ம் என்ற எழுத்துத் தொடர்ந்து வந்து தனது மாத்திரையிற் குறைந்து ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ம் என்ற பதத்தில் ன் என்ற எழுத்தை ம் என்ற எழுத்துத் தொடர்ந்து வந்து தனது மாத்திரையிற் குறைந்து ஒலித்தது.

தரும் வள்ளல் என்ற தொடரில் வ என்ற உயிர் மெய்யெழுத் தின் முதல் ஒலியாகிய (வ் + அ = வ) வ் என்ற மெய்யெழுத்துக்கு மேலே ம் என்ற மெய்யெழுத்து வந்து தனது மாத்திரையிற் குறைந்து ஒலித்தது.

ம் என்ற மெய்யெழுத்து ண், ன் என்ற மெய்யெழுத் துக்களைத் தொடர்நதுவந்து ஒலி குறுகுவது இரண்டிடமும், வ் என்ற மெய்யெழுத்துக்கு மேல் வந்து ஒலி குறைவது ஓரிடமும் கூட, மூன்றிடங்கள் மகரக்குறுக்கத்திற்கு உண்டாயின வென்க.

இதற்குச் சூத்திரம் :-

சய. ண ன முன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்

இதன் பதப்பொருள் :

ண ன முன்னும் = ண் ன் என்ற மெய்யெழுத்துக்களைத் தொடர்ந்த விடத்தும்

வஃகான் மிசையும் = வ் என்ற மெய்யெழுத்துக்குமேலும்.

மகுறுகம் = ம் என்ற மெய்யெழுத்தானது தனது மாத்திரை யில் குறைந்து ஒலிக்கும்.

மேல், கீழ்; முன், பின், என்பவற்றின் விளக்கம்.

இவை காலம்பற்றியும் இடம்பற்றியும் வரும் போது வித்தியாசப்படும்.

காலம் பற்றி வரும் போது மேல் , முன் என்பன ஒரு பொருளின் வலப்பக்கத்தையும், கீழ், பின் என்பன ஒருபொருளின் இடப்பக்கத்தையும் குறிக்கும்.

மேலேயுள்ள 40- வது சூத்திரத்தில்“ ண ன முன்னும்” என்றதில் “முன்” என்ற பதம் காலம்பற்றிவந்து “ண ன” வின் வலப்பக்கத்தை உணர்த்தியது.

இடம்பற்றி வரும்போது மேல், முன் என்பன ஒருபொருளின் இடப்பக்கத்தையும், கீழ், பின் என்பன ஒருபொருளின் வலப்பக்கத்தையும் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற் சூத்திரத்தில் "வஃகான் மிசையும்" என்றவிடத்து "மிசை" என்பது "மேல்" என்ற பொருளில் இடத்தைப்பற்றி வந்து "வ்" என்ற மெய்யெழுத்தின் இடப்பக்கத்தை உணர்த்தியது.

ஆய்தக்குறுக்கம் (2)

ஆய்தக்குறுக்கம் என்பது ஃ என்ற ஆய்தவெழுத்துச் சில மொழிகளில் வரும்போது தனது மாத்திரையிற் குறைந்து ஒலிப்ப தாம்.

ல், ள் என்ற மெய்யெழுத்துக்களைக் கடையிலே கொண்ட பதங்கள், உயிரோடு கூடிய த் என்ற எழுத்தை முதலிலே கொண்ட பதங்களோடு புணரும்போது ( சேரும் போது) இடையிலே ஃ என்ற ஆய்தவெழுத்துத் தோன்றும். அந்த ஆய்தவெழுத்துத் தனது மாத்திரையிற் குறைந்து ஒலிக்கும்.

உ - ம் கல் + தீது = கஃறீது

முள் + தீது = முஃடீது.

"கல்" என்ற பதத்தின் கடையெழுத்தாகிய "ல்" என்ற மெய்யெழுத்தும், "தீது" என்ற பதத்தின் முதலெழுத்தாகிய "தீ" என்ற உயிர் மெய்யெழுத்தும் சேர்ந்து "றீ" என்ற உயிர் மெய்யெழுத்தாகி யது, (கல் + தீது = கறீது ). "கறீது" என்ற பதச்சேரக்கையின் நடுவிலே "ஃ" என்ற ஆய்தவெழுத்துத் தோன்றி "கஃறீது" என்றாகியது.

"முள்" என்ற பதத்தின் கடையெழுத்தாகிய "ள்" என்ற மெய்யெழுத்தும் "தீது" என்ற பதத்தின் முதலெழுத்தாகிய "தீ " என்ற உயிர்மெய்யெழுத்தும் சேர்ந்து "டீ" என்ற உயிர்மெய்யெழுத்தாகி (முள்+ தீது = முடீது) "முடீது" என்றாகியது.

"முடீது" என்ற பதச் சேர்க்கையின் நடுவிலே "ஃ" என்ற ஆய்தம் தோன்றி "முஃடீது" என்றாகியது.

ல் என்ற எழுத்துவகையாலும், ள் என்ற எழுத்துவகையாலும் ஆய்தக்குறுக்கம் இரண்டாகியது.

இதற்குச் சூத்திரம் :-

**சயக. லளவீற் றியைபினா மாய்த மஃகும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் - (5) எழுத்துக்களின் உருவம்.

இதன் பதப்பொருள் :

ல ள ஈற்று இயைபின் = ல் ள் என்ற மெய்யெழுத்துக்கள் த் என்ற மெய்யெழுத்தோடு புணர்வதால்.

ஆம் ஆய்தம் = இடையிலே தோன்றுகின்ற ஃ என்ற ஆய்தவெழுத்து.

அஃகும் = தனது மாத்திரையில் குறைந்து ஒலிக்கும்.

இதுகாறும் எழுத்திலக்கணத்தின் நான்காவது பிரிவாகிய முதலெழுத்துக்களின் பிறப்பையும், சார்பெழுத்தின் பிறப்பையும் கூறினாம்.

இனி ஐந்தாவது பிரிவாகிய எழுத்துக்களின் வரிவடிவங்கள் இன்னவை என்பதைக் கூறும்.

### ரு. எழுத்துக்களின் உருவம்.

உருவம் = வடிவம்

எழுத்துக்களின் ஒலி வடிவம் காதுக்கு விஷயமாவதன்றி வேறுவகையால் உணர்தல் கூடாது. உணர்த்தலும் கூடாது. ஆதலின் எழுத்துக்களின் வரிவடிவங்கள் மாத்திரம் விளக்கப்படும்.

அ ஆ முதலாகிய எழுத்துக்கள் எல்லாம் இப்பொழுது நாம் எழுதிவருவது போலவே முற்காலத்திலும் எழுதப்பட்டிருந்தன. ஆனால் பண்டைக்காலத்துச் சான்றோர்கள் எ, ஒ என்ற உயிரெழுத்துக்களுக்கும் மெய்யெழுத்துக்களைப் போலப் புள்ளியிட்டு வந்தார்கள்.

எ என்ற எழுத்தை எ் என்றும், ஒ என்ற எழுத்தை ஒ் என்றும் எழுதிவந்தார்கள்

இதற்குச் சூத்திரம் :-

சயஉ. தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர மொகர மெய்புள்ளே

இதன் பதப்பொருள் :

எல்லா எழுத்தும் = எல்லா எழுத்துக்களும்

தொல்லை வடிவின = (பலவேறு வகைப்பட எழுதி வழங்கும்) பழையவடிவுகளை உடையன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு = அவ்வடிவுகளை உடையனவாய் வழங்குமிடத்து

எகரம் ஒகரம் மெய் = எ என்ற எழுத்தும், ஒ என்ற எழுத்தும், மெய்எழுத்துக்களும்

புள்ளி எய்தும் = புள்ளிகளைப் பெறும்.

இனி எழுத்திலக்கணத்தின் ஆறாவது பிரிவாகிய எழுத்துக் களின் (செவிப்புலனாகும்) ஒலியளவைக் கூறுதும்.

ஒலியளவு = மாத்திரை

**௬. எழுத்துக்களின் மாத்திரை**

நமக்கு இமைக்கவும் நொடிக்கவும் வேண்டும் என்ற எண்ண மின்றியே இயல்பாக உண்டாகும் ஓர் இமைப்பொழுதையும், கையால் நொடித்துக்காட்டும் ஓர் நொடிப்பொழுதையும் ஒரு மாத்திரைக்கு அளவாகக் கொள்க.

இதற்குச் சூத்திரம் : -

**௧௰௬. இயல்பெழு மாந்தரிமைநொடி மாத்திரை.**

இதன் பதப்பொருள் :

மாந்தர் = மக்களுடைய

இயல்பு எழும் = இயல்பாக உண்டாகின்ற

இமை = கண்ணிமைப்பொழுதும்

நொடி = கைநொடிப்பொழுதும்

மாத்திரை = ஒரு மாத்திரையாகும்.

எழுத்துக்களின் மாத்திரை வருமாறு, -

| | |
|---|---|
| உயிரளபெடைக்கு மாத்திரை | மூன்று |
| நெட்டெழுத்துக்கு மாத்திரை | இரண்டு |
| குற்றெழுத்துக்கு மாத்திரை | ஒன்று |
| ஐகாரக் குறுக்கத்துக்கு மாத்திரை | ஒன்று |
| ஔகாரக் குறுக்கத்துக்கு மாத்திரை | ஒன்று |
| ஒற்றளபெடைக்கு மாத்திரை | ஒன்று |
| மெய்யெழுத்துக்கு மாத்திரை | அரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் (6) எழுத்துக்களின் மாத்திரை.

| | |
|---|---|
| குற்றியலிகரத்துக்கு மாத்திரை | அரை |
| குற்றியலுகரத்துக்கு மாத்திரை | அரை |
| முற்றாய்தத்துக்கு மாத்திரை | அரை |
| மகரக்குறுக்கத்துக்கு மாத்திரை | கால் |
| ஆய்தக் குறுக்கத்துக்கு மாத்திரை | கால் |

இதற்குச் சூத்திரம் :-

**சயச. மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே**
**குறிலோ டையௌக் குறுக்க மொற்றள**
**பரையொற் றிஉக் குறுக்க மாய்தம்**
**கால்குறண் மஃகா னாய்த மாத்திரை**

இதன் பதப்பொருள்:

மாத்திரை : - உயிர் அளபு மூன்று (ஆம்) = உயிரளபெடைக்கு மாத்திரை மூன்றாகும்.

நெடில் இரண்டு ஆம் = ( உயிரும் உயிர்மெய்யுமாகிய ) நெட்டெழுத்துக்கு இரண்டாகும்.

குறிலொடு = (உயிரும் உயிர்மெய்யுமாகிய ) குற்றெழுத்தோடு

ஐ ஔ குறுக்கம் = ஐ, ஔ என்ற எழுத்துக்களுள் ஒலி குறைந்து ஐகாரக்குறுக்கம் , ஔகாரக்குறுக்கம்,

ஒற்றளபு = ஒற்றளபெடை

ஒன்று ஆம் = என்னும் இவற்றிற்குத் தனித்தனி ஒன்றாகும்

ஒற்று = மெய்யெழுத்து

இ (குறுக்கம்) = இ என்ற எழுத்தில் ஒலியளவிற் குறைந்த குற்றியலிகரம்

உ குறுக்கம் = உ என்ற எழுத்தில் ஒலியளவிற் குறைந்த குற்றியலுகரம்

ஆய்தம் = முற்றாய்தம்

அரை (ஆம்) என்னும் இவற்றிற்குத் தனித்தனி அரை ஆகும்.

குறள் மஃகான் = ம் என்ற எழுத்தில் ஒலியளவு குறைந்த மகரக்குறுக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறள் ஆய்தம் = ஃ என்ற எழுத்தாகிய ஆய்தத்தில் ஒலியளவு குறைந்த ஆய்தக் குறுக்கம்

கால்(ஆம்) என்னுமிவற்றிற்குக் கால் ஆகும்.

மாத்திரைக்குப் புறனடை.

இராகத்திலும், அழைத்தலிலும், பண்டமாற்றலிலும், முறையீட்டிலும், புலம்பலிலும் உயிரெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும் முன்சொன்ன அளவைக் கடந்து ஒலிக்கும்.

இதற்குச் சூத்திரம் :-

**சயரு. ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலும்**
**மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின்.**

இதன் பதப்பொருள் :

ஆவியும் = உயிரெழுத்துக்களும்,

ஒற்றும் = மெய்யெழுத்துக்களும்,

அளவு இறந்து = முன்சொன்ன அளவைக்கடந்து,

இசை = இராகமும்,

விளி = அழைத்தலும்,

பண்டமாற்று = பண்டமாற்றுதலும்

ஆதியின் = ஆகிய இவை முதலியவைகளிடத்து,

ஒலித்தலும் மேவும் = ஒலித்தலையும் பொருந்தும்.

இதுகாறும் எழுத்திலக்கணத்தின் ஆறாவது பிரிவாகிய எழுத்துக்களின் மாத்திரையைக் கூறினாம்.

இனி ஏழாவது பிரிவாகிய மொழிக்கு முதலில் நிற்கும் எழுத்துக்களைக் கூறுதும்.

## எ. எழுத்துக்களின் முதல் நிலை.

முதல் நிலை என்பது மொழிக்கு முதலில் நிற்கும் எழுத்துக்கள் என்பதாம்.

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், க் ச் த் ந் ப் ம் வ் ய் ஞ் ங் என்னும் பத்து மெய்கள் உயிரோடுங் கூடிவரும் உயிர்மெய்யெழுத்துக்களும், மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ - ம். அ - அணி; ஆ - ஆடை; இ - இலை; ஈ - ஈடு;
உ - உடை; ஊ - ஊன்; எ - எடு; ஏ - ஏடு; ஐ - ஐயம்;
ஒ - ஒன்று; ஓ - ஓடு; ஔ - ஔவை:
க - கனி; ச - சவடி; த - தனி; ந - நலம்; ப - படை; ம - மலை;
வ - வளம்; ய - யவனர்; ஞ - ஞண்டு; ங - அங்ஙனம்.

ட் ற் ண் ன் ர் ல் ழ் ள் என்ற எட்டு மெய்களும் உயிரோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரப்பெறா. தனி மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரப்பெறா.

இதற்குச் சூத்திரம் : -

**சㄩசு. பன்னீ ருயிரும் கசதந பமவய**
**ஞஙவீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல்.**

இதன் பதப்பொருள் :

பன்னீர் உயிரும் = பன்னிரண்டு உயிரெழுத்துக்களும்

க ச த ந ப ம வ ய ஞ ங = க் ச் த் ந் ப் ம் வ் ய் ஞ் ங் என்ற மெய் யெழுத்துக்கள் உயிரோடு கூடி ஆகிய ஈரைந்து உயிர்மெய்யும் = பத்து உயிர்மெய்யெழுத்துக்களும்

மொழி முதல் = மொழிக்கு முதலாகும்.

பொதுவிதியுள் சிறப்பு விதி.

பொதுவிதியுள் சிறப்புவிதி என்றதாவது : - க் ச் த் ந் ப் ம் வ் ய் ஞ் ங் என்ற மெய்யெழுத்துக்கள் உயிரெழுத்துக்களோடு கூடி மொழிக்கு முதலில் வரும் என்றது பொதுவிதியாகும். க் ச் த் ந் ப் ம் வ் ய் ஞ் ங் என்ற பத்து மெய்யெழுத்துக்களும் எந்த எந்த உயிரெழுத் துக்களோடு கூடி மொழிக்கு முதலில் வரும் என்று கூறுவது சிறப்பு விதியாகும்.

க் ச் த் ந் ப் ம்.

க் ச் த் ந் ப் ம் என்ற ஆறு மெய்யெழுத்துக்களும் அ, ஆ முதலிய பன்னிரண்டு உயிரெழுத்துக்களோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

உ -ம் - க். கள், கால், கிளி, கீரை, குடி, கூடி, கெடு, கேடு, கைதை, கொடு, கோடு, கௌவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச். சவடி, சாரை, சிறுமை, சீர், சுழல், சூழல், செட்டி, சேறு, சைவம், சொல், சோறு, சௌரியம்.

த். தலை, தாலி, திரை, தீட்டு, துலை, தூறு, தெரு, தேர், தையல், தொழில், தோடு, தௌவை

ந். நலம், நாடு, நிலம், நீறு, நுரை, நூல், நெல், நேர், நைதல், நொறில், நோய், நௌவி

ப். பரல், பார், பிறை, பீர்க்கு, புரை, பூண், பெடை, பேடு, பொடி, போது, பௌவம்.

ம். மலை, மாது, மின், மீன், முன், மூடு, மெலி, மேடு, மையல், மொழி, மோது, மௌவல்.

வ்

வ் என்ற மெய்யெழுத்தானது அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்ற எட்டு உயிரெழுத்துக்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

எனவே, வ் என்ற மெய்யெழுத்தானது உ, ஊ, ஒ,ஓ என்னும் உயிரெழுத்துக்களோடு மொழிக்கு முதலில் வராது என்பது பெறப்பட்டது.

உ - ம் வழி, வாள், விடு, வீடு , வெளி, வேறு, வையம், வௌவு

இதற்குச் சூத்திரம் : -

சயஎ. உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல்

இதன் பதப்பொருள் :

உ ஊ ஒ ஓ அலவொடு = உ, ஊ, ஒ, ஓ என்னும் நான்கு உயிரெழுத்துக்கள் அல்லாத அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்ற எட்டு உயிரெழுத்துக்களுடன் கூடி.

வ முதல் = வ் என்ற மெய்யெழுத்து மொழிக்கு முதலில் வரும்.

ய்.

ய் என்ற மெய்யெழுத்தானது அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ என்ற ஆறு உயிரெழுத்துக்களுடன் கூடி மொழிக்கு முதலில் வரும்.

ய் என்ற மெய்யெழுத்து இ, ஈ, எ, ஏ, ஐ, ஓ என்னும் ஆறு உயிரெழுத்துக்களுடன் கூடி மொழிக்கு முதலில் வராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ -ம் யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யெளவனம்.

இதற்குச் சூத்திரம் : -

**சயவு. அ ஆ உ ஊ ஒ ஒள யம்முதல்.**

இதன் பதப்பொருள்:

அ ஆ உ ஊ ஒ ஒள = அ, ஆ, உ, ஊ, ஒ, ஒள என்ற ஆறு உயிரெழுத்துக்களோடு கூடி.

ய முதல்= ய் என்ற மெய்யெழுத்தானது மொழிக்கு முதலில் வரும்.

ஞ்.

ஞ் என்ற மெய்யெழுத்தானது அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிரெழுத்துக்களுடன் கூடி மொழிக்கு முதலில் வரும்.

ஞ் என்ற மெய்யெழுத்தானது இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஒள என்ற எட்டு உயிரெழுத்துக்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வராது.

உ -ம் ஞமலி, ஞாயிறு, ஞெகிழி, ஞொள்கிற்று (சுருங்கிற்று)

இதற்குச் சூத்திரம் :-

**சயகூ. அ ஆ எ ஒவ்வோ டாகும் ஞம்முதல்.**

இதன் பதப்பொருள் :

அ ஆ எ ஒவ்வோடு = அ, ஆ, எ, ஒ என்ற நான்கு உயிரெழுத்தோடு கூடி

ஞ முதல் ஆகும் = ஞ் என்ற மெய்யெழுத்தானது மொழிக்கு முதலில் வரும்.

ங்.

ங் என்ற மெய்யெழுத்தானது அ, இ, உ என்ற மூன்று சுட்டெழுத்துக்களுக்கும், எ, யா என்ற வினாவெழுத்துக்களுக்கும் பின் அ என்ற உயிரெழுத்தோடு கூடி மொழிக்கு முதலில் வரும்.

உ -ம் அங்ஙனம் (அ + ஙனம்). இங்ஙனம் (இ + ஙனம்).
உங்ஙனம் (உ + ஙனம்). எங்ஙனம் (எ + ஙனம்). யாங்ஙனம் (யா + ஙனம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம் :-

**ருய. சுட்டியா வெகர வினாவழி யவ்வை**

**யொட்டி ஙவ்வு முதலா கும்மே.**

இதன் பதப்பொருள் :

சுட்டு (வழி) = அ இ உ என்ற மூன்று சுட்டெழுத்துக்களுக்குப் பின்ரும்

யா எகர வழி = யா, எ என்ற வினாவெழுத்துக்களுக்குப் பின்னரும்,

அவ்வை ஒட்டி அ என்ற உயிரெழுத்தோடு கூடி,

ஙவ்வும் முதலாகும் ங் என்ற மெய்யெழுத்தும் மொழிக்கு முதலில் வரும்.

இதுகாறும் எழுத்திலக்கணத்தின் ஏழாவது பிரிவாகிய முதனிலையை விளக்கினாம்.

இனி எட்டாவது பிரிவாகிய இறுதிநிலையை விளக்குதும்.

## அ. எழுத்துக்களின் இறுதி நிலை.

இறுதி நிலை என்பது மொழிக்குக் கடையில் எந்த எந்த எழுத்துக்கள் வந்து நிற்கும் என்பதாம்.

மொழிக்குக் கடையில் அ ஆ முதலிய பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்ற பதினொரு மெய்யெழுத்துக்களும், குற்றியலுகரம் ஒன்றும் சேர்ந்த இருபத்து நான்கு எழுத்துக்களும் வரும்.

உயிரெழுத்துக்களுள் ஆ ஈ ஊ ஏ ஐ ஓ என்ற ஆறு நெட்டெழுத்துக்களும் தனி உயிராகவும், மெய்யெழுத்துக்களோடு சேர்ந்து உயிர்மெய்யெழுத் துக்களாகவும் மொழிக்குக் கடையில் வரும்.

உ -ம். ஆ (பசு) ; ஈ (இலையான்); ஊ (மாமிசம்) ஏ (அம்பு) ஐ (அழகு) ஓ (மதகுநீரைத் தடுக்கும் பலகை) : இவை தனி உயிராக வந்தமைக்கு உதாரணங்களாகும்.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ என்னும் உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்களோடு கூடி உயிர்மெய்யெழுத்துக்களாக மொழிக்குக் கடையில் வந்தமைக்கு உதாரணம் வருமாறு :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா(சோலை); தீ (நெருப்பு) ; பூ (புஷ்பம்); தே (கடவுள்); தை (ஒரு மாசம்) போ (செல்).

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ என்ற உயிரெழுத்துக்கள் ஓர் எழுத்து ஒரு மொழிகளாக வந்தன. ஓ (ஓர் எழுத்து ஒரு மொழி) = (ஓர் எழுத்தே ஒரு சொல்லாய் நின்று பொருள் தருவது). ஒரெழுத்தொரு மொழிகளுக்கு முதலும் கடையும் அவ்வெழுத்துக்களேயாகும்.

கா, தீ, பூ, தே, தை, போ என்ற உயிர்மெய் நெட்டெழுத்துக் களைப் பிரித்தால் க் + ஆ, த் + ஈ, ப் + ஊ, த் + ஏ, த் + ஐ, ப் + ஓ எனப் பிரிபடுகின்றன. இங்ஙனம் பிரிபட்ட பதங்களின் முதலெழுத்தாக உள்ளன முறையே க், த், ப், த், த், ப் என்ற மெய்யெழுத்துக்களாம். அவற்றிற்கு முறையே ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ என்ற நெட்டெழுத்துக்கள் கடையெழுத்துக்களாய் வந்தன.

ஆதலால் கா, தீ, பூ, தே, தை, போ என்ற பதங்களில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ என்ற நெட்டெழுத்துக்கள் கடையில் வந்தன என்றறிக.

ஔ என்ற உயிர்நெட்டெழுத்து க் வ் என்ற மெய்யெழுத்துக் களுடன் சேர்ந்து மொழிக்குக் கடையில் வரும்; தனி உயிராக மொழிக்குக் கடையில் வராது.

உ - ம். கௌ (வாயால் பற்று) ; வௌ (கொள்ளையிடு).

கௌ என்ற பதத்தை க் + ஔ எனவும், வௌ என்ற பதத்தை வ் + ஔ எனவும் பிரித்தால், அந்த இரண்டு பதங்களின் கடையிலும் ஔ என்ற எழுத்துள்ளதைக் காண்க.

அ இ உ எ ஒ என்ற ஐந்து உயிர்க்குற்றெழுத்துக்களும் அளபெடையிலேதான் உயிரெழுத்துக்களாக மொழிக்குக் கடையில் வரும்.

உ - ம் பலாஅ ; தீஇ ; பூஉ; சேஎ ; கோஒ.

எ என்ற எழுத்து மெய்யெழுத்துக்களோடு கூடி மொழிக்குக் கடையில் வராது.

ஒ என்ற எழுத்து ந் என்ற மெய்யெழுத்தொன்றோடு சேர்ந்தது தான் உயிர்மெய்யெழுத்தாக மொழிக்குக் கடையில் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். நொ (துன்பப்படு). நொ = ந் + ஒ.

உயிரெழுத்துக்களில் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஐ, ஓ என்னும் ஒன்பது உயிரெழுத்துக்களும் தங்களுக்கேற்ற எல்லா மெய்யெழுத்துக்களோடும் சேர்ந்து மொழிக்குக் கடையில் வரும் என்றறிக.

மெய்யெழுத்துக்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்ற பதினொரு மெய்யெழுத்துக்களும் மொழிக்குக் கடையில் வரும்.

உ - ம். உரிஞ் (உரிஞ்சுதல்) மண்; பொருந்; (பொருந்துதல்); மரம்; மெய்; வேர்; வேல்; தெவ் (பகை); வாழ்; வாள்.

குற்றிய லுகரமும் மொழிக்குக் கடையில் வரும்.
உ - ம் நாடு.
இவற்றிற்குச் சூத்திரம் : -

ருயக. ஆவிஞ ணநமன யரலவ ழளமெய்
சாயு முகரநா லாறு மீறே.

இதன் பதப்பொருள் :
ஆவி (தனித்தும் மெய்யெழுத்தோடு கூடியும் வரும்) பன்னிரண்டு உயிரெழுத்துக்களும்.

ஞ ண ந ம ன ய ர ல வழ ள மெய் = ஞ் ண் ந் ம் ன் ய், ர், ல், வ், ழ், ள் என்ற பதினொரு மெய்யெழுத்துக்களும்,
சாயும், உகரம் ஒலி குறைந்த உ என்ற எழுத்தும் (குற்றிய லுகர மும்) கூடிய,
நாலாறும் இருபத்துநான்கு எழுத்துக்களும்,
ஈறு மொழிக்குக் கடையில் வரும்.

இவற்றிற்குச் சூத்திரம் : -
ருயஉ. குற்றுயி ரளபி னீறா மெகரம்
மெய்யோடே லாதொந் நவ்வொ டாமௌ
ககர வகரமோ டாகு மென்ப.

இதன் பதப்பொருள் :
குற்றுஉயிர் = (அ இ உ எ ஒ என்னும்) உயிர்க்குந்றெழுத்துக்கள் ஐந்தும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளபின் = அளபெடையில்
ஈறாம் = வரி வடிவில் மொழிக்குக் கடையில்வரும்.
எகரம் மெய்யொடு ஏலாது = எ என்ற உயிரெழுத்து மெய்யெழுத்துடன் சேர்ந்து மொழிக்குக் கடையில் வராது.
ஒ நவ்வொடு ஆம் = ஒ என்ற உயிரெழுத்து ந் என்ற மெய்யெழுத்தோடு கூடி மொழிக்குக் கடையில் வரும்
ஔ = ஔ என்ற உயிரெழுத்தானது
ககர வகரமொடு ஆகும் = க், வ் என்ற மெய்யெழுத்துக்களோடு மொழிக்குக் கடையில் வரும்.
என்ப = என்று அறிவாளிகள் கூறுவர்.

உயிர்மெய்யெழுத்தின் முதலீறுகள்.

பூ, மா என்ற உயிர்மெய்யெழுத்துக்களைப் பிரிக்க முறையே ப் + ஊ என்றும், ம் + ஆ என்றும் பிரிபடுகின்றன. இப்பிரிவுகளில் ப், ம் என்னும் மெய்யெழுத்துக்கள் முதலிலும், ஊ, ஆ, என்னும் உயிரெழுத்துக்கள் ஈற்றிலும் (முடிவிலும்) இருக்கின்றன.

இதனால் உயிர்மெய்யெழுத்துக்கு மெய்யெழுத்தை முதலாகவும், உயிரெழுத்தைக் கடையாகவும் கொள்க.

இதற்குச் சூத்திரம் :-

**௫௰௩.** நின்ற நெறியே யுயிர்மெய் முதலீறே
இதன் பதப்பொருள் :
நின்ற நெறியே (ஒலி வடிவத்திலே உயிர்மெய்யெழுத்தானது எவ்வாறு ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாக நின்றதுவோ அவ்வாறு) நின்றவழியே
உயிர்மெய் = உயிர்மெய்யெழுத்துக்கு
முதல்ஈறு = (மெய்) முதலாகவும், (உயிர்) கடையாகவும் வரும்.

இதுகாறும் எழுத்திலக்கணத்தின் எட்டாவது பிரிவாகிய இறுதிநிலையைக் கூறினாம்.

இனி ஒன்பதாவது பிரிவாகிய இடைநிலை மெய்மயக்கத்தைக் கூறுதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௬. இடைநிலை மெய்மயக்கம்.

இடைநிலை மெய்மயக்கமாவது மொழிகளின் இடையிலுள்ள மெய்யெழுத்துக்கள் ஒன்றறோடு மற்றொன்று கூடுவதாம்

இடை (மொழியின் நடுவில்) நிலை (நிலைபெற்றிருக்கின்ற) + மெய் (மெய்யெழுத்துக்கள்) + மயக்கம் (தம்மில் ஒன்று மெற்றொன்றோடு சேர்தல்) = இடைநிலை மெய்மயக்கம்.

மொழிக்கு இடையிலே உயிரெழுத்தோடு மெய்யெழுத்தும், மெய் யெழுத்தோடு உயிரெழுத்தும் கூடுங் கூட்டத்திற்கு ஓரளவு கிடையாது. ஆதலின் மொழிக்கு இடையிலே வரும் உயிர்மெய்யெழுத்துக்களின் சேர்க்கையை யாம் இங்கு எடுத்துக் கூறவில்லை.

மொழிக்கு இடையில் மெய்யெழுத்துக்கள் கூடிப் பொருந்துதலை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை (1) தம்மொடு தாம் மயங்குதல், (2) தம்மொடு பிற மயங்குதல், (3) தம்மொடு தாமும் பிறவும் மயங்குதல் என்பவையாம்.

தம்மொடு தாம் மயங்குதல்.

தம்மொடு தாம் மயங்குதல் என்பது மொழிக்கு இடையில் நிற்கும் மெய்யெழுத்து எதுவோ அதுவே பின்னரும் வந்து கூடுதலாம்.

தம்மொடு தாம் மயங்கும் மெய்யெழுத்துக்கள் க் ச் த் ப் என்னும் நான்கு எழுத்துக்களாம்.

தம்மொடு தாம் மயங்கும் மயக்கத்தை உடனிலை மெய்மயக்கம் எனவுங் கூறுவர்.

உ-ம். கொக்கு, பச்சை, கொத்து, உப்பு.
கொக்கு என்ற பதத்தின் நடுவிலுள்ள க் என்ற மெய்யெழுத்துத் தன்பின்வரும் கு என்ற உயிர்மெய்யெழுத்தின் முன்னொலியாகிய (க் + உ = கு) க் என்ற மெய்யெழுத்தோடு கூடினமை காண்க. இவ்வாறே பச்சை, கொத்து, உப்பு என்பனவும் தம்மொடு தாம் மயங்கின உடனிலை மெய்மயக்கம் என்றறிக.

தம்மொடு பிற மயங்குதல்.

தம்மொடு பிற மயங்குதல் என்பது மொழிக்கு இடையிலுள்ள மெய்யெழுத்துக்கள் தாம் அல்லாத ஏனைய மெய்யெழுத்துக்களோடு கூடுதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மொடு பிற மயங்குவன ர், ழ் என்னும் இரண்டு மெய்யெழுத்துக் களாம்.

உ-ம் சார்பு; வாழ்வு.

சார்பு என்ற பதத்திலுள்ள ர் என்ற மெய்யெழுத்து வேறு மெய்யெழுத்தாகிய பு என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (ப் + உ = பு) ப் என்ற மெய்யெழுத்தோடு கூடினமை காண்க.

தம்மொடு பிற மயங்குதல் என்பதை வேற்றுசிலை மெய்ம் மயக்கம் என்பர்.

தம்மொடு தாமும் பிறவும் மயங்குதல்.

தம்மோடு தாமும் பிறவும் மயங்குதல் என்பது மொழிக்கு இடையில் நிற்கும் மெய்யெழுத்து எதுவோ அதுவும், அஃதல்லாத வேறு மெய்யெழுத்துக்களும் வந்து கூடுவதாம்.

தம்மொடு தாமும் பிறவும் மயங்குவன ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன் என்னும் பன்னிரண்டு மெய்யெழுத்துக்களுமாம்.

உ- ம் வெட்டு ; வெட்கம் ; சுண்ணம் ; சுண்டு.

வெட்டு என்ற பதத்தின் நடுவிலுள்ள ட் என்ற மெய்யெழுத்து டு என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (ட் + உ = டு) ட் என்ற மெய்யெழுத்தோடு கூடித் தன்னொடு தான் மயங்கியும், வெட்கம் என்ற பதத்தின் நடுவிலுள்ள ட் என்ற மெய்யெழுத்து க என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (க்+அ = க) க் என்ற பிறமெய்யெழுத்தோடு கூடிப் பிறிதுடன் மயங்கியும் வருதலால், இது தம்மொடு தாமும் பிறவும் மயங்குதலாயிற்று என்க.

அவ்வாறே சுண்ணம், சுண்டு என்னும் உதாரணங்களிலும் கண்டுகொள்க.

இதற்குச் சூத்திரம் : -

ருயச. கசதப வொழித்தவீ ரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்
டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை
மேவு முயிர்மெய்ம் மயக்கள வின்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பதப்பொருள்:

கசதப ஒழிந்த ஈரேழன் கூட்டம் = (பதினெட்டு மெய்களில்) க், ச், த், ப் என்ற நான்கு மெய்யெழுத்துக்களையும் நீங்கிய (ட், ற், ங், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்ற) பதினான்கு மெய்யெழுத்துக்களும் (பிற மெய்களோடு மொழிக்கு நடுவில் கூடும்) கூட்டம்.

(வேற்றுநிலை) மெய்ம்மயக்கு (ஆகும்) = (தம்மொடு பிறமயங்குதல் என்ற வேற்றுநிலை) மெய்மயக்கமாகும்.

ர ழ ஒழித்து = (பதினெட்டு மெய்யெழுத்துக்களில்) ர், ழ் என்ற மெய்யெழுத்துக்களை நீக்கி,

ஈரெட்டு கூட்டம் = க், ச், ட், த், ப், ற், ங், ஞ், ண், ந், ம், ன், ய், ல், வ், ள் என்ற மற்றைய பதினாறு மெய்யெழுத்துக்களும் கூடும் கூட்டம், உடனிலை (மெய்மயக்கு) ஆகும் (தம்மொடு தாம் கூடுகின்ற) உடனிலை மெய்மயக்கமாகும்.

இ இருபால் மயக்கும் = (உடனிலை மெய்மயக்கம், வேற்றுநிலை மெய்மயக்கம் என்ற) இந்த இரண்டு வகை மயக்கங்களும்,

மொழி இடை மேவும் = மொழிகளின் நடுவிலே வரும்.
உயிர்மெய் மயக்கும் = உயிரெழுத்தோடு மெய்யெழுத்தும், மெய்யெழுத் தோடு உயிரெழுத்தும் கூடும் கூட்டத்திற்கு

அளவு இன்று = கணக்கில்லை (வேண்டியவாறு கூடும்).
இனி மொழிக்கு இடையில் எந்த மெய்யெழுத்து எந்த மெய்யெழுத்தோடு கூடும் என்ற சிறப்புவிதியைக் கூறுதும்.

### மெய்மயக்கச் சிறப்பு விதிகள்.

மெய்மயக்கச் சிறப்பு விதிகள் வேற்றுநிலைமயக்கச் சிறப்பு விதிகள் எனவும், உடனிலை மயக்கச் சிறப்புவிதிகள், எனவும் இரண்டு வகைப்படும்.

### வேற்றுநிலை மயக்கச் சிறப்பு விதிகள்.

வேற்றுநிலை மயக்கச் சிறப்பு விதிகள் என்பன ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன் என்ற (தம்மொடு தாமும் பிறவும் கூடுதற்குரிய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யெழுத்துக்களும், ர், ழ், என்ற (பிறமெய்யோடு கூடுதற்குரிய) மெய்யெழுத்துக்களும், மொழிக்கு நடுவில் இன்ன இன்ன மெய்யெழுத்துக்களோடு கூடும் என்பதை விளக்குவனவாம்.

ங்.

மொழியிடையிலே ங் என்ற மெய்யெழுத்தின்பின் க் என்ற மெய்யெழுத்து வந்து கூடும்.

உ-ம் பங்கு.

பங்கு என்ற பதத்தின் நடுவிலுள்ள ங் என்ற மெய்யெழுத்துக்குப்பின் கு என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (க் + உ = கு) க் என்ற மெய்யெழுத்து வந்து கூடிற்று.

வ்.

மொழியிடையிலே வ் என்ற மெய்யெழுத்தின் பின் ய் என்ற மெய்யெழுத்து வந்து கூடும்.

உ - ம் தெவ்யாது. (தெவ்= பகை).

இவற்றிற்குச் சூத்திரம் :-

**ருயரு. ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.**

இதன் பதப்பொருள் :

ங முன் க ஆம் = (மொழியிடையிலே) ங் என்ற மெய்யெழுத்துக் குப்பின் க் என்ற மெய்யெழுத்து பொருந்துவதாகும்.

வ முன் ய (ஆம்) = (மொழியிடையிலே) வ் என்ற மெய்யெழுத்துக் குப்பின் ய் என்ற மெய்யெழுத்து பொருந்துவதாகும்.

இச் சூத்திரத்தில் ஙம்முன் என்றதிலுள்ள முன் என்ற பதம், ங் என்ற எழுத்தின் வலப்பக்கத்தை உணர்த்தியது. இவ்வாறே பின் சூத்திரங்களிலும் அப்பதம் வலப்பக்கத்தை உணர்த்தி நிற்கும். (முன் என்ற பதத்தின் விளக்கத்தை 66-வது பக்கத்திற் காண்க).

ஞ்.

மொழியிடையிலே ஞ் என்ற மெய்யெழுத்துக்குப்பின் ச் என்ற மெய்யெழுத்தும், ய் என்ற மெய்யெழுத்தும் வந்து கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்.

மொழிக்கு இடையில் ந் என்ற மெய்யெழுத்துக்குப்பின் த் என்ற மெய்யெழுத்தும், ய் என்ற மெய்யெழுத்தும் வந்து கூடும்.

உ - ம். சந்து ; பொருந்யாது.

இவற்றிற்குச் சூத்திரம் : -

சூத்திர எண் : ஞ ந முன் றம்மினம் யகரமோடாகும்.

இதன் பதப்பொருள் :

ஞ ந முன் = (மொழியிடையிலே) ஞ், ந் என்ற இரண்டு மெய்யெழுத்து க்களுக்கு முன்னால்

தம் இனம் ஞ் என்ற மெய்யெழுத்துக்கு இனவெழுத்தாகிய ச் என்றதும், ந் என்ற மெய்யெழுத்துக்கு இனவெழுத்தாகிய த் என்றதும்

யகரமோடு = ய் என்ற மெய்யெழுத்தோடு.

ஆகும் = (வந்து) பொருந்தும்.

ட்.

மொழிக்கு இடையிலெ ட் என்ற மெய்யெழுத்துக்குப் பின்னர் க், ச், ப் என்ற மூன்று மெய்யெழுத்துக்களும் வந்து பொருந்தும்.

உ - ம். வெட்கம் மாட்சி நட்பு.

ற்.

மொழிக்கு இடையில் ற் என்ற மெய்யெழுத்துக்குப் பின்னர் க், ச், ப் என்ற மூன்று மெய்யெழுத்துக்களும் வந்து கூடும்.

உ - ம் கற்கை (படித்தல்) ; கவற்சி ; பொற்பு.

இவற்றிற்குச் சூத்திரம் : -

ருயஎ. டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.

இதன் பதப்பொருள் :

டறமுன் = (மொழியிடையிலே) ட், ற் என்ற மெய்யெழுத்துக்கள்

க ச ப மெய்யுடன் = க், ச், ப் என்ற எழுத்துக்களுடன் கூடி மயங்கும் = பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியிடையில் ண் என்ற மெய்யெழுத்துக்குப் பின்னர் ட், க், ச், ஞ், ப், ம், ய், வ் என்ற எட்டு மெய்யெழுத்துக்களும் வந்து பொருந்தும்.

உ - ம் கண்டனர்; வெண்கலம் ; வெண்சோறு ; பண்ஞானம்; காண்பர் ; வெண்மலர் ; மண்யாது ; மண்வலிது.

ன்.

மொழியிடையில் ன் என்ற மெய்யெழுத்துக்குப் பின்னர் ற், க், ச், ஞ், ப், ம், ய், வ் என்ற எட்டு மெய்யெழுத்துக்களும் வந்து கூடும்.

உ - ம். கன்று ; புன்கு ; (ஒரு மரம்) புன்செய் ; பொன்ஞாண் ; புன்பயிர் ; பொன்மலர் ; பொன்யாது ; பொன்வலிது.

இவற்றிற்குச் சூத்திரம் : -

ருயஅ. **ணனமுன் னினங்கச ஞபமய வவ்வரும்.**

இதன் பதப்பொருள் :

ணனமுன் = (மொழியிடையிலே) ண், ன் என்ற மெய்யெழுத்துக்களுக்கு முன்னால்.

இனம் = ண் என்ற மெய்யெழுத்துக்கு இனமாகிய ட் என்ற மெய்யெழுத்தும், ன் என்ற மெய்யெழுத்துக்கு இனமாகிய ற் என்ற மெய்யெழுத்தும்.

க ச ஞ ப ம ய வ = க், ச், ஞ், ப், ம், ய், வ் என்ற மெய்யெழுத்துக்களும்.

வரும் = வந்து கூடும்.

ம்.

மொழிக்கு இடையில் ம் என்ற மெய்யெழுத்துக்குப் பின்னர் ப், ய், வ் என்ற மூன்று மெய்யெழுத்துக்களும் வந்து கூடும்.

உ - ம். கம்பன் ; கலம்யாது ; கலம்வலிது.

இதற்குச் சூத்திரம் : -

ருயகூ. **மம்முன் பயவ மயங்கு மென்ப.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பதப்பொருள் :

மமுன் = (மொழியிடையிலே) ம் என்ற மெய்யெழுத்துக்குமுன்னால்

பயவ = ப், ய், வ் என்ற மூன்று மெய்யெழுத்துக்களும்

மயங்கும் என்ப வந்து பொருந்தும் என்று அறிவாளிகள் கூறுவர்.

ய், ர், ழ்

மொழிக்கு இடையில் ய், ர், ழ் என்ற மூன்று மெய்யெழுத்துக் களுக்குப் பின்னர் க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ், ங் என்ற பத்து மெய்யெழுத்துக்களும் வந்து பொருந்தும்.

| உ-ம் ய் | ர் | ழ் |
|---|---|---|
| வேய்கடிது. | வேர்கடிது. | வீழ்கடிது. |
| வேய்சிறிது. | வேர்சிறிது. | வீழ்சிறிது. |
| வேய்தீது. | வேர்தீது. | வீழ்தீது. |
| வேய்நன்று. | வேர்நன்று. | வீழ்நன்று. |
| வேய்பெரிது. | வேர்பெரிது. | வீழ்பெரிது. |
| | வேர்யாது. | வீழ்யாது. |
| வேய்வலிது. | வேர்வலிது. | வீழ்வலிது. |
| பாழ்ஞமலி. | கார்ஞமலி. | பாழ்ஞமலி. |
| வேய்ங்குழல். | ஆர்ங்கோடு. | பாழ்ங்கிணறு. |

* வேற்றுநிலை மெய்மயக்கத்திற்குச் சிறப்புவிதி நாம் இங்கே கூறிவருகின்றோம். வேய்யாது என்ற உதாரணத்தை ய் என்பதற்குப் பின் (ய் + ஆ = யா ய் என்பது வரும் என்று காட்டினால் அது உடனிலை மெய்மயக்கமாகும். ஆதலின் வேய்யாது என்ற உதாரணத்தை இங்கே காட்டிலேம்.

இதற்குச் சூத்திரம் :-

சூய. யரழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.

இதன் பதப்பொருள் :

யரழ முன்னர் = (மொழியிடையிலே) ய், ர், ழ் என்னும் மூன்று மெய்யெழுத்துக்களுக்கு முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிமுதல் மெய் = சொல்லுக்கு முதலாக (உயிரோடு சேர்ந்து) வருகின்ற க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ், ங் என்ற) பத்து மெய்யெழுத்துக்களும்
வரும் = வந்து மயங்கும்.

ல், ள்.

மொழிக்கு இடையிலே ல், ள் என்ற மெய்யெழுத்துக்களுக்குப் பின்னர் க், ச், ப், வ், ய் என்ற ஐந்து மெய்யெழுத்துக்களும் வந்து மயங்கும்.

| உ - ம் | ல் | ள் |
|---|---|---|
| | வேல்கடிது. | வாள்கடிது. |
| | வேல்சிறிது. | வாள்சிறிது. |
| | வேல்பெரிது. | வாள்பெரிது. |
| | வேல்வலிது. | வாள்வலிது. |
| | வேல்யாது. | வாள்யாது. |

இதற்குச் சூத்திரம் :-

**௯௰௧. லளமுன் கசப வயவொன் றும்மே.**

இதன் பதப்பொருள் :
லளமுன் = (மொழியிடையிலே) ல், ள் என்ற மெய்யெழுத்துக்களுக்கு முன்னர்.
கசபவய ஒன்றும் = க், ச், ப், வ், ய் என்ற மெய்யெழுத்துக்கள் ஐந்தும் வந்து மயங்கும்.

உடனிலை மெய்மயக்கச் சிறப்பு விதி.

(தம்மோடு தாமே மயங்கும் என்ற) க், ச், த், ப் என்ற நான்கு மெய்யெழுத்துக்களும் (தம்மொடுதாமும், தம்மொடுபிறவும் மயங்கும் என்ற) ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன் என்ற பன்னிரண்டு மெய்யெழுத்துக்களும் உடனிலை மெய்மயக்கத்திற்கு உரியன.

உ - ம். கொக்கு; அச்சம் ; நித்தம் ; செப்பு ; அங்ஙனம் ; அஞ்ஞானம் ; கட்டு ; அண்ணன் ; செந்நீர் ; அம்மை ; அய்யன் ; எல்லை ; அவ்வை ; கொள்ளை ; முற்றம் ; அன்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம் :-

௩௰௨. ரழவல்லன தம்முற் றாமுட னிலையும்.

இதன் பதப்பொருள் :

ரழ அல்லன = ர், ழ் என்ற மெய்யெழுத்துக்கள் அல்லாத க், ச், ட், த், ப், ற், ங், ஞ், ண், ந், ம், ன், ய், ல், வ், ள் என்ற பதினாறு மெய்யெழுத்துக்களும்
தம்முன் தாம் = தமக்கு முன் தாமே (வந்து)
உடன் நிலையும் = உடனின்று மயங்கும்.

மொழிக்கு நடுவில் இரண்டு மெய்யெழுத்துக்களாகச் சேர்ந்து வருவன.

ய், ர், ழ் என்ற மெய்யெழுத்துக்களுக்குப் பின் க், ச், த், ப், ங், ஞ், ந், ம் என்ற எட்டு மெய் யெழுத்துக்களும் இரண்டு மெய்யெழுத்துக்களாகச் சேர்ந்து வரும்.

ர், ழ் என்ற இரண்டு மெய்யெழுத்துக்கள் ஒரு குற்றெழுத்துக்குப் பின்னர் வந்து மயங்கமாட்டா.

| உ-ம் | ய் | ர் | ழ் |
|---|---|---|---|
| | காய்க்க. | ஈர்க்கு. | வாழ்க்கை. |
| | பாய்ச்சல். | தேர்ச்சி. | சூழ்ச்சி. |
| | துய்த்தல். | போர்த்தல். | வாழ்த்தல். |
| | காய்ப்பு. | பார்ப்பார். | காழ்ப்பு. |
| | வேய்ங்குழல். | ஆங்கோர்டு. | பாழ்ங்கிணறு. |
| | தேய்ஞ்சது. | சேர்ந்தது. | வாழ்ந்தனம். |
| | வேய்ம்புறம். | ஈர்ம்புனல். | பாழ்ம்பதி. |

இதற்குச் சூத்திரம் :-

௩௰௩. யரழ வொற்றின்முன் கசதப ஙஞநம
ஈரொற் றாம்ரழத் தனிக்குறி லணையா

இதன் பதப்பொருள் :

ய ர ழ ஒற்றின் முன் = ய், ர், ழ் என்ற மூன்று மெய்யெழுத்துக்களின் முன்னே.

க ச த ப ங ஞ ந ம = க், ச், த், ப், ங், ஞ், ந், ம் என்ற எட்டு மெய்யெழுத்துக்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர் ஒற்று ஆம் = (மேற்கூறியவாறு உயிர்மெய்யெழுத்துக் களோடு மயங்குவதன்றியும்) மெய்யெழுத்தோடும் மயங்கும்.

ர ழ = ர், ழ் என்ற இரண்டு மெய்யெழுத்துக்களும்.

தனிகுறில் அணையா = ஒரு குற்றெழுத்துக்குப் பின்னால் வரப்பெறா.

போன்ம் மருண்ம்.

செய்யுளில், போலும், என்பது (போல் + ம்) போன்ம் எனவும், மருளும் என்பது (மருள் + ம்) மருண்ம் எனவும் வரும்.

போலும் என்ற பதத்தின் நடுவெழுத்தாகிய லு என்ற உயிர் மெய்யெழுத்திலுள்ள (லு = ல் + உ) உ என்ற உயிரெழுத்துக் கெட்டுப் போக, போல்ம் என்றாகும். ல் என்ற எழுத்து மயங்காது (கூடாது). ஆதலின் அது ன் என்ற எழுத்தாக மாறிபோல்ம் என்றது போன்ம் என்றாயிற்று.

மருளும் என்ற பதத்தின் நடுவெழுத்தாகிய ளு என்ற உயிர் மெய்யெழுத்திலுள்ள உ என்ற உயிரெழுத்துக் கெட்டுப்போக மருள்ம் என்றாகும். ள் என்ற எழுத்துக்குப்பின் ம் என்ற எழுத்து வந்து பொருந்தாது. ஆதலின் ள் என்ற எழுத்து ண் என்ற எழுத்தாகாத் திரிந்து மருள்ம் என்றது மருண்ம் என்றாயிற்று.

மருண்ம், போன்ம் என்ற பதங்களிலுள்ள ம் என்ற மெய்யெழுத்தானது தன் மாத்திரையிற் குறைந்து ஒலிக்கும் மகரக் குறுக்கம் என்க.

இதற்குச் சூத்திரம் :-

**௱௨௪.** லளமெய் திரிந்த ணனமுன் மகாரம்
நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே.

இதன் பதப்பொருள் :

செய்யுள் உள்ளே = பாட்டிலே

லளமெய் திரிந்த = ல், ள் என்ற மெய்யெழுத்துக்கள் மாறின. ண ன முன் = ண், ன் என்ற மெய்யெழுத்துக்களின் முன்னே வருகின்ற

மகாரம் = ம் என்ற மெய்யெழுத்தானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைந்து = தன் மாத்திரையில் குறைந்து ஒலித்து,

ஈர் ஒற்று ஆம் = (அந்த ண், ன் என்ற மெய்யெழுத்துக்களுடன் ம் என்று தனித்தனி வந்து) இரண்டு ஒற்றுக்களாகும்.

முதல்நிலை, இறுதிநிலை, இடைநிலை என்பனவற்றிகுப் புறநடை.

மொழிக்கு முதலிலும், இறுதியிலும், நடுவிலும், இந்த இந்த எழுத்துக்கள் வரப்பெறா என்று விதிக்கப்பட்டிருப்பினும், பொருளைக் காட்டாமல் எழுத்துக்களையே காட்டும்போது எல்லா எழுத்துக்களும் மொழிக்கு முதலிலும், இறுதியிலும், இடையிலும் வந்து மயங்கும் என்க.

உ - ம். இடை எழுத்துக்கள் ல், ள் என்ற மெய்யெழுத்துக்கள்.

இவ்வுதாரணத்திலுள்ள இடையெழுத்துள் என்ற பதத்தின் கடை யெழுத்து ள் என்ற மெய்யெழுத்து அதற்குப்பின் ல், ள் என்ற என்பது வந்திருக்கின்றது. ள் என்ற எழுத்துக்குப் பின் ல் என்ற மெய்யெழுத்து வராது என்று முன்னர் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கே ல், ள் என்பது பொருளைக் காட்டாமல் எழுத்தைக் குறித்தமையால், ல் என்ற மெய்யெழுத்துக்குப்பின் ள் என்ற மெய்யெழுத்து வந்து மயங்கியது.

கெப்பெரிது (கெ என்ற எழுத்து பெரியது). ஈண்டு, எ என்ற உயிரெழத்து க் என்ற மெய்யெழுத்தோடு கூடி இறுதியாக வந்திருக்கிறது. எ என்ற உயிரெழுத்து மெய்யோடு கூடி மொழிக்குக் கடையில் வராது என்பது விதி. ஆனால், இங்கே கெ என்றது பொருளைக் குறியாமல் எழுத்தைக் குறித்தமையால், எ என்ற உயிரெழுத்து க் என்ற மெய்யெழுத்தைக் கூடி மொழிக்குக் கடையில் வந்தது.

இதற்குச் சூத்திரம் : -

சூயரு. தம்பெயர் மொழியின் முதலு மயக்கமும்

இம்முறை மாறியு மியலு மென்ப.

இதன் பதப்பொருள் :

தம் பெயர் மொழியின் = எழுத்துக்களின் பெயரைச் சொல்லும் போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலும் மயக்கமும் = மொழிக்கு முதலிலும், இடையிலும், இறுதியிலும், இந்த இந்த எழுத்துக்கள் வரலாம் என்ற விதியாகிய இ முறை மாறியும் இயலும் = இந்த முறைமை (க்ர்மம்) பிறழ் ந்தும் வரும்.

என்ப = என்று சொல்லுவர் (அறிஞர்).

இதுகாறும் எழுத்திலக்கணத்தின் ஒன்பதாம் பிரிவாகிய இடைநிலையைக் கூறினாம்.

இனிப் பத்தாம் பிரிவாகிய போலியைக் கூறுதும்.

## ய. எழுத்துக்களின் போலி.

போலி யாவது ஒருசொல்லின் முதல், இடை, கடை என்ற மூன்று இடங்களுக்குள் ஓரிடத்தில் நின்ற எழுத்துக்கு ஈடாக வேறொரு எழுத்து நின்று அச் சொல்லின் பொருளையே குறித்தலாம்.

போலி = போலுவது = போன்றிருப்பது = எழுத்துக்களில் ஒன்றை மற்றொன்று ஒத்திருப்பது.

இது மொழிமுதற்போலி, மொழியிடைப்போலி, மொழியிறுதிப் போலி என மூன்று வகைப்படும்.

### மொழிமுதற் போலி.

மொழி முதற்போலியாவது ஒரு சொல்லின் முதலெழுத்துக்கு ஈடாக மற்றோரெழுத்து வந்து நின்று அச்சொல்லுக்குரிய பொருளையே தருதலாம்.

உ - ம். மயல் = மையல்.

மயல் என்ற பதத்தின் முதலெழுத்தாகிய ம என்றதற்கு ஈடாக மை என்ற யெழுத்து வந்து நின்று மையல் என்றாகி, மயல் என்று சொல்லுக்குரிய பொருளையே குறித்தமை அறிக.

### மொழியிடைப் போலி.

மொழியிடைப்போலியாவது ஒரு சொல்லின் நடுவிலுள்ள எழுத்துக்கு ஈடாக வேறொரு எழுத்து வந்து நின்று அச்சொல்லுக் குரிய பொருளையே தருதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ -ம் அமைச்சு = அமச்சு.

அமைச்சு என்ற பதத்தின் நடுவெழுத்தாகிய மை என்றதற்கு ஈடாக ம என்ற எழுத்து வந்து அமச்சு என்றாகி, அமைச்சு என்ற சொல்லுக்குரிய பொருளையே குறித்தமை அறிக.

மொழியிறுதிப் போலி.

மொழியிறுதிப் போலியாவது ஒரு சொல்லின் கடையிலுள்ள எழுத்துக்கு ஈடாக வேறோரெழுத்து வந்து நின்று அச்சொல்லுக் குரிய பொருளையே தருதலாம்.

உ - ம் மரம் = மரன்

மரம் என்ற பதத்தின் கடையெழுத்தாகிய ம் என்றதற்கு ஈடாக ன் என்ற எழுத்து வந்து நின்று மரன் என்றாகி, மரம் என்ற சொல்லுக்குரிய பொருளையே காட்டியது காண்க.

போலிகளுக்கு சிறப்பு விதி

மொழி முதற் போலி, மொழியிடைப்போலி, மொழியிறுதிப் போலி என்ற மூன்று போலிகளிலும், எந்த எந்த எழுத்துக்கள் எந்த எந்த எழுத்துக்களாகும் என்று இனித் தனித்தனியாக விளக்குதும்.

இந்த மூன்று போலிகளிலும் மொழியிறுதிப் போலியே மிகுதியாக வருகின்றமையால் அதனை முன்னர்க் கூறுதும்.

மொழியிறுதிப் போலி.

ஆண் பெண் என்று பிரிக்கமுடியாத அஃறிணைப் பெயர்களில் இரண்டு குற்றெழுத்துக்களுக்குப் பின்னர் ம் என்ற மெய்யெழுத்தை இறுதியிலேகொண்ட பதங்களின் கடையெழுத்தாகிய ம் என்ற மெய்யெழுத்துக்கு ஈடாக ன் என்ற மெய்யெழுத்து வரும்.

உ - ம். அகம் = அகன். முகம் = முகன் புலம் = புலன்
நிலம் = நிலன்

அகம், முகம், புலம், நிலம், என்ற பதங்கள் ஆண்பெண் என்று பிரிக்கக் கூடாத அஃறிணைப் பெயர்கள். இந்தப் பெயர்கள் அக, முக, புல, நில, என இவ்விரண்டு குற்றெழுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குப்பின்னர் ம் என்ற மெய்யெழுத்தைக்கொண்டு அகம், முகம், புலம், நிலம் என வந்தன. அகம், முகம், புலம், நிலம் என்ற பதங்களின் கடையெழுத்தாகிய ம் என்று எழுத்துக்கு ஈடாக ன் என்ற மெய்யெழுத்து வந்து நின்று அகன், முகன், புலன், நிலன் என்று ஆகினமை காண்க.

இதற்குச் சூத்திரம் :-

சூ௰சூ. மகர விறுதி யஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன வுளவே.

இதன்பதப்பொருள் :

அஃறிணைப்பெயரின் = (ஆண் பெண் என்று பிரிக்கப்படாத) அஃறிணைப் பெயர்களின்

இறுதி மகரம் = கடை எழுத்தாகிய ம் என்ற எழுத்து

னகரமோடு உறழா = ன் என்ற மெய்யெழுத்தோடு ஒத்து

நடப்பன உள = வருவனவும் உண்டு

சில குற்றியலுகரம் அர் என்ற போலி எழுத்துக்களோடு ஒத்துவரும்.

உ -ம் சுரும்பு (வண்டு) = (சுரும்பு + அர்) = சுரும்பர்

வண்டு = ( வண்டு + அர்) = வண்டர்

சிறகு = (சிறகு + அர்) = சிறகர்.

இடக்கு (சபையிற் சொல்லக்கூடாத சொல்.)

= ( இடக்கு + அர்) இடக்கர்

சுரும்பு, வண்டு, சிறகு, இடக்கு என்ற பதங்களின் கடையெழுத்துகளாகிய பு, டு, கு, கு என்ற உயிர்மெய்களிலுள்ள (பு= ப் + உ, டு = ட் + உ, கு = க் + உ) உ என்ற (மாத்திரை குறைந்த) எழுத்து (குற்றியலுகரம் நின்ற இடத்திலே அர் என்ற எழுத்துக்கள் நின்றுசுரும்பர், வண்டர், சிறகர், இடக்கர் என்றானமை காண்க.

சில பெயர்களின் கடையெழுத்தாகிய ல் என்ற மெய்யெழுத்து நின்றவிடத்தில் ர் என்ற எழுத்து வந்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். சாம்பல்= சாம்பர். பந்தல்= பந்தர். குடல்= குடர்.

திடல்=திடர்.

சில பெயர்களின் கடையெழுத்தாகிய ம் என்ற எழுத்து நின்றவிடத்திலே ல் என்ற எழுத்து வந்து நிற்கும்.

உ-ம். திறம்= திறல். மறம்= மறல். பக்கம்= பக்கல். கூவம் (கிணறு) = கூவல்.

சில பெயர்களின் இறுதியெழுத்தாகிய ள் என்ற எழுத்து நின்ற விடத்திலே ல் என்ற எழுத்து வந்து நிற்கும்.

உ-ம். மதிள்= மதில். மரள் = (ஒரு செடி) = மரல்.

இங்கே காட்டிய போலிவகைகளைக்கொண்டு உலகவழக்கிலும் (உலக வழக்கத்திலும்) செய்யுள் வழக்கிலும் (பாட்டு நடையிலும்) வரும் போலிகளையெல்லாம் அமைத்துக்கொள்க.

மொழிமுதற் போலியும் மொழியிடைப் போலியும்.

ஒரு சொல்லுக்கு முதலிலும், நடுவிலும் ச் என்று எழுத்திற்கும், ஞ் என்ற எழுத்திற்கும், ய் என்ற எழுத்திற்கும், முன்னேவரும் அ என்ற எழுத்துக்கு ஈடாக ஐ என்ற எழுத்து வந்து நிற்கும்.

மொழி முதற்போலிக்கு உதாரணம் :-

பசல் = பைசல். பசல் என்ற பதத்தின் நடுவிலுள்ள ச என்ற உயிர் மெய்யெழுத்திலுள்ள (ச = ச் + அ)ச் என்ற மெய்யெழுத்துக்கு முன்னர், ப என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (ப = ப + அ) அ என்ற உயிரெழுத்துக்கு ஈடாக ஐ எழுத்துவந்து நின்ற பைசல் என ஆகியது.

மிஞ்சு = மைஞ்சு, மஞ்சு என்ற பதத்தின் நடுவிலுள்ள ஞ் என்ற மெய்யெழுத்துக்கு முன்னர் மொழி முதலில் வந்த ம என்ற உயிர் மெய்யெழுத்திலுள்ள (ம = ம் + அ) அ என்ற உயிரெழுத்துக்கு ஈடாக ஐ என்ற எழுத்துவந்து நின்று மை ஞ் சு என ஆகியது.

மயல் = மையல். மயல் என்ற பதத்தின் நடுவிலுள்ள ய என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (ய = ய் + அ)ய் என்ற மெய்யெழுத்துக்கு முன்னுள்ள ம என்ற உயிர்மெய்யெழுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள (ம = ம் + அ) அ என்ற உயிரெழுத்துக்கு ஈடாக ஐ என்ற எழுத்து வந்து மையல் என்று ஆகியது.

மொழியிடைப் போலிக்கு உதாரணம் :-

அமச்சு = அமைச்சு. அமச்சு என்ற மொழியிலிருக்கும் ச் என்ற மெய்யெழுத்துக்கு முன்னின்ற ம என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (ம = ம் + அ) அ என்ற உயிரெழுத்துக்கு ஈடாக ஐ என்ற எழுத்து வந்து அமைச்சு என ஆகியது.

இலஞ்சி = இலைஞ்சி. இலஞ்சி என்ற சொல்லின் நடுவிலிருக்கும் ஞ் என்ற மெய்யெழுத்துக்கு முன்னின்ற ல என்ற உயிர் மெய் யெழுத்திலுள்ள (ல = ல் + அ) அ என்ற எழுத்துக்கு ஈடாக ஐ என்ற எழுத்து வந்து இலைஞ்சி என்று ஆகியது.

அரசர் = அரைசர். அரசர் என்ற பதத்தின் நடுவிலிருக்கும் ச என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (ச = ச் + அ) ச் என்ற மெய்யெழுத்துக்கு முன்னின்ற ர என்ற உயிர் மெய்யெழுத்திலுள்ள (ர = ர் + அ) அ என்ற எழுத்துக்கு ஈடாக ஐ என்ற எழுத்து வந்து அரைசர் என்று ஆகியது.

சிலமொழிகளில், ச், ஞ், ய் என்ற எழுத்துக்களின் முன்னே யுள்ள ஐ என்ற எழுத்துக்கு ஈடாக அ என்ற எழுத்துவந்து நிற்கும்.

உ-ம். வைச்ச = வச்ச. இங்கே ச் என்ற எழுத்துக்கு முன்னிருக் கும் உயிர்மெய்யெழுத்திலுள்ள ஐ என்ற எழுத்துக்கு ஈடாக அ என்ற எழுத்து வந்தது.

ஐஞ்சு = அஞ்சு. இங்கே ஞ் என்ற எழுத்துக்கு முன்னுள்ள ஐ என்ற எழுத்துக்கு ஈடாக அ என்ற எழுத்து வந்தது.

பைய = பய. இங்கே ய என்ற உயிர்மெய்யெழுத்திலிருக்கும் (ய = ய் + அ) ய் என்ற மெய்யெழுத்துக்கு முன்னின்ற பை என்ற உயிர் மெய்யெழுத்திலுள்ள (பை = ப் + ஐ) ஐ என்ற எழுத்துக்கு ஈடாக அ என்ற எழுத்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலமொழிகளில் இன்ன எழுத்துக்கு முன்னர் என்ற விதியின்றி அ என்ற எழுத்துக்கு ஈடாக ஐ என்ற எழுத்து வரும்.

உ-ம். பழமை = பழைமை. இங்கே ழ என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (ழ = ழ் + அ) அ என்ற உயிரெழுத்துக்கு ஈடாக ஐ என்ற எழுத்து வந்தது.

இளமை = இளைமை. இங்கே ள என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (ள = ள் + அ) அ என்ற எழுத்துக்கு ஈடாக ஐ என்ற எழுத்து வந்தது.

இதற்குச் சூத்திரம் :-

**௬௭. அஐ முதலிடை யொக்குஞ் சஞ யமுன்.**

இதன் பதப்பொருள்:

அ ஐ = அ என்ற எழுத்தும், ஐ என்ற எழுத்தும்,

முதல் இடை = (சொல்லுக்கு) முதலிலும் நடுவிலும்,

ச ஞ ய முன் = ச், ஞ், ய் என்ற மெய்யெழுத்துக்களின் முன்னர் ஒக்கும் = ஒத்து நடக்கும்.

ஐ என்ற எழுத்துக்கும் ய் என்ற எழுத்துக்கும் பின்னால் ந் என்ற எழுத்துவந்தால், அந்த ந் என்ற எழுத்துக்கு ஈடாக ஞ் என்ற எழுத்து வரும்

உ-ம். மைந்நின்ற = மைஞ்ஞின்ற. இங்கே மை என்ற உயிர் மெய்யெழுத்திலேயுள்ள (மை = ம் + ஐ) ஐ என்ற எழுத்துக்குப்பின் நி என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (நி = ந் + இ) ந் என்ற மெய்யெழுத்து ஞ் என்ற மெய்யெழுத்தாகியது.

கைந்நின்ற = கைஞ்ஞின்ற. செய்ந்நின்ற = செய்ஞ்ஞின்ற.

நெய்ந்நின்ற = நெய்ஞ்ஞின்ற.

இவையெல்லாம் பாட்டில் வரும்.

ஐந்நூறு = ஐஞ்ஞூறு. = சேய்ஞலூர்.

இவை உலகவழக்கில் வரும்.

இதற்குச் சூத்திரம் :-

**௬௮. ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி**
**ஞஃகா னுறழு மென்மனார் புலவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் — (10) எழுத்துக்களின் போலி.

இதன் பதப்பொருள் :

சில்வழி = சில இடத்திலே (சொல்லுக்கு நடுவிலே)

ஐகான் ய வழி = ஐ என்ற எழுத்துக்குப் பின்னும், ய் என்ற எழுத்துக் குப் பின்னும்

நவ்வொடு = ந் என்ற எழுத்தோடு

ஞஃகான் = ஞ் என்ற மெய்யெழுத்து

உறழும் = ஒத்து வரும்

எம்மனார் புலவர் = என்று அறிவாளிகள் சொல்வார்கள்.

இதுகாறும் கூறிய போலிகளைத் தவிர்த்து இன்னுமுள்ள சில போலிவகைகளைக் கூறுதும்.

மொழிகளில் ந் என்ற எழுத்துக்கு ஈடாக ஞ் என்ற எழுத்து வரும்.

உ-ம். நயம் = ஞயம். நயம் என்ற பதத்தின் முதலிலேயுள்ள ந என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (ந = ந் + அ) ந் என்ற மெய் யெழுத்துக்கு ஈடாக ஞ் என்ற மெய்யெழுத்துவந்து ஞயம் என்றா கியது.

நாஞ்சில் = ஞாஞ்சில். நாஞ்சில் என்ற பதத்தின் முதலெழுத்தாகிய நா என்ற மெய்யெழுத்திலுள்ள (நா = ந் + ஆ) ந் என்ற மெய்யெழுத்துக்கு ஈடாக ஞ் என்ற மெய்யெழுத்து வந்து ஞாஞ்சில் என்றாகியது.

நேயம் = ஞேயம். நேயம் என்ற பதத்தின் முதலெழுத்தாகிய நே என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (நே = ந் + ஏ) ந் என்ற மெய் யெழுத்துக்கு ஈடாக ஞ் என்ற எழுத்துவந்து ஞேயம் என்றாகியது.

நண்டு = ஞண்டு, நண்டு என்ற பதத்தின் முதலிலேயுள்ள ந என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (ந = ந் + அ) ந் என்ற மெய்யெழுத் துக்கு ஈடாக ஞ் என்ற எழுத்துவந்து ஞண்டு என்றாகியது.

அ = எ.

மொழிக்கு முதலிலுள்ள அ என்ற எழுத்துக்கு ஈடாக எ என்ற எழுத்து வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். ஞண்டு = ஞெண்டு. ஞண்டு என்ற பதத்தின் முதலிலேயுள்ள ஞ என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (ஞ = ஞ் + அ) அ என்ற உயிரெழுத்துக்கு ஈடாக ஞெ என்ற எழுத்து வந்து ஞெண்டு என்றாகியது.

ந் = ஞ் ; த் = ச்.

ந் என்ற எழுத்துக்கு ஞ் என்ற எழுத்தும், த் என்ற எழுத்துக்கு ச் என்ற எழுத்தும் ஈடாக (போலியாக) வரும்.

உ-ம். உய்ந்தனன் = உய்ஞ்சனன். உய்ந்தனன் என்ற பதத்தின் நடுவிலுள்ள ந் என்ற எழுத்துக்கு ஞ் என்ற எழுத்தும், த் என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (த = த் + அ) த் என்ற மெய்யெழுத்துக்கு ச் என்ற எழுத்தும் ஈடாக வந்து உய்ஞ்சனன் என்றாகியது.

பித்து = பிச்சு. பித்து என்ற பதத்தின் நடுவிலுள்ள த் என்ற எழுத்துக்கு ச் என்ற எழுத்தும், கடையிலுள்ள து என்ற உயிர்மெய் யெழுத்திலுள்ள (து = த் + உ) த் என்ற மெய்யெழுத்துக்கு ச் என்ற எழுத்தும் போலியாக வந்து பிச்சு என்றாகியது.

வைத்த = வைச்ச. வைத்த என்ற பதத்திலுள்ள த்த என்ற எழுத்துக்களுக்கு முறையே ச்ச என்ற எழுத்துக்கள் ஈடாக வந்து வைச்ச என்றாகியது.

ஐ = அ ; ந் = ஞ் ; த் = ச்.

மொழி முதலிலுள்ள ஐ என்ற எழுத்துக்கு அ என்ற எழுத்தும், மொழியிடையிலுள்ள ந் என்ற எழுத்துக்கு ஞ் என்ற எழுத்தும், மொழியிறுதியிலுள்ள த் என்ற எழுத்துக்கு ச் என்ற எழுத்தும் ஈடாக வரும்.

உ-ம். ஐந்து = அஞ்சு. ஐந்து என்ற பதத்தின் முதலிலேயுள்ள ஐ என்ற எழுத்துக்கு அ என்ற எழுத்தும், இடையிலேயுள்ள ந் என்ற எழுத்துக்கு ஞ் என்ற எழுத்தும், கடையிலேயுள்ளது என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (து = த் + உ) த் என்ற மெய்யெழுத்துக்கு ச் என்ற மெய்யெழுத்தும் ஈடாகவந்து அஞ்சு என்றாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தியல் — (10) எழுத்துக்களின் போலி.

ய் = ச்.

ய் என்ற எழுத்துக்குப் போலியாக ச் என்ற எழுத்து வரும்.

உ-ம். நேயம் = நேசம். நேயம் என்ற பதத்தின் நடுவிலுள்ள ய என்ற எழுத்துக்கு ஈடாக ச என்ற எழுத்து வந்து நேசம் என்றாகியது.

கயம் = கசம். கயம் என்ற பதத்தின் நடுவிலுள்ள ய என்ற எழுத்துக்கு ஈடாக ச என்ற எழுத்து வந்து கசம் என்றாகியது.

ங் =. ஞ் ; க் = ச்.

ங் என்ற எழுத்துக்கு ஞ் என்ற எழுத்தும், க் என்ற எழுத்துக்கு ச் என்ற எழுத்தும் ஈடாக வரும்.

உ-ம். இங்கு = இஞ்சு. இங்கு என்ற பதத்திலுள்ள ங் கு என்ற எழுத்துக்களுக்குப் போலியாக முறையே ஞ் சு என்ற எழுத்துக்கள் வந்து இஞ்சு என்றாகியது.

இன்னும் பலவிதமான போலிவகைகள் உண்டு. அவற்றையெல்லாம் வரையறுத்துக் கூறல் ஒண்ணாது. உலகவழக்கிலும் (உலகவழக்கத்திலும்) செய்யுள் வழக்கிலும் (பாட்டு நடையிலும்) கண்டுகொள்க.

சந்தியக்கரம்.

ஸந்தி அக்ஷரம் என்ற ஸமஸ்க்ருத பதங்கள் சந்தியக்கரம் என்று தமிழில் வந்தன.

ஸ்ந்தி = கூடுதல் ; அக்ஷரம் = எழுத்து ; ஸந்தியக்ஷரம் = கூட்டெழுத்து.

சில எழுத்துக்கள் கூடி வேறோர் எழுத்தாக ஒலிக்கும். அ என்ற எழுத்தும், இ அல்லது ய் என்ற எழுத்தும் சேர்ந்து ஐ என்ற எழுத்துப்போல் ஒலிக்கும்.

உ-ம். அ + ய் = அய் = ஐ.

அ என்ற எழுத்தும் உ என்ற எழுத்தும் கூடி ஔ என்ற எழுத்துப்போல் ஒலிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். அ + உ = அஉ = ஔ.

அ என்ற எழுத்தும் வ் என்ற எழுத்தும் கூடி ஔ என்ற எழுத்துப் போல் ஒலிக்கும்.

உ-ம். அ + வ் = அவ் = ஔ.

இதற்குச் சூத்திரம் : -

௺௰௬. அம்மு னிகரம் யகர மென்றிவை
எய்தி னையொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன.

இதன் பதப்பொருள் :

அ முன் = அ என்ற எழுத்தின்முன்
இகரம் யகரம் என்று இவை = இ என்ற எழுத்தும், ய் என்ற எழுத்தும்
ஒத்து எய்தின் = இணைந்து பொருந்தினால்,
ஐ இசைக்கும் = ஐ என்ற எழுத்தின் ஒலி உண்டாகும்.
அவ்வோடு = அ என்ற எழுத்தோடு
உவ்வும் வவ்வும் = உ என்ற எழுத்தும், வ் என்ற எழுத்தும் ஓர் அன்ன (ஒத்து எய்தின்) = ஒரு தன்மை உடையனவாக இணைந்து பொருந்தினால்,
ஔ (ஒலிக்கும்) = ஔ என்ற எழுத்தின் ஒலி உண்டாகும்.

## எழுத்தின் சாரியைகள்.

எழுத்துக்களை இலகுவாக உச்சரித்தற்குச் சார்பாக வரும் எழுத்துக்கள் அல்லது சொற்கள் எழுத்துச் சாரியை எனப்படும்.

உ-ம். அ, அகரம், கரம், காரம் ; அன்ன, ஏன.

மெய்யெழுத்துக்கள் அ, அகரம் என்ற சாரியைகளைப் பெற்று வரும்.

உ-ம். க் என்ற மெய்யெழுத்து அ என்ற சாரியையோடு கூடி. க எனவும், க் என்ற எழுத்து அகரம் என்ற சாரியையோடு கூடி ககரம் எனவும் வரும்.

இவ்வாறே ஏனைய மெய்யெழுத்துக்களுக்கும் சாரியை கூட்டி உரைத்துக்கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ, ஔ என்ற இரண்டு (உயிர்) நெட்டெழுத்துக்களும் காரம், கான் என்ற சாரியைகளைப் பெற்றுவரும்.

உ-ம். ஐகாரம் ; ஐகான். ஐ என்ற உயிர் நெட்டெழுத்து காரம் என்ற சாரியையோடு கூடி, ஐகாரம் எனவும், கான் என்ற சாரியையோடு கூடி ஐகான் எனவும், வந்தது.

ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்ற நெட்டெழுத்துக்களும் காரம் என்ற சாரியைப் பெறும்.

உ-ம். ஆகாரம் ; ஈகாரம்.

உயிர்க் குற்றெழுத்துக்களும், உயிர்மெய்க் குற்றெழுத்துக்களும் கரம், காரம், கான் என்ற சாரியைகளைப் பெறும்.

உ-ம். அ = அகரம் ; அகாரம் ; அஃகான்
க = ககரம் ; ககாரம் ; கஃகான்

குற்றெழுத்துக்கள் கான் என்ற சாரியையோடு சேரும் போது இடையில் ஃ என்ற ஆய்தவெழுத்துத் தோன்றும்.

உ-ம். ம + கான் = மஃகான்

மெய்யெழுத்துக்கள் சாரியை பெற்றே வரும். உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் சாரியை பெறாமலே வரும்.

இவற்றிற்குச் சூத்திரம்: -

எ௯. மெய்க ளகரமும் நெட்டுயிர் காரமும்
ஐஔக் கானு மிருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்பிற.

இதன் பதப்பொருள்:

மெய்கள் அகரமும் = மெய்யெழுத்துக்கள் அ என்ற சாரியையும்,
நெட்டு உயிர் காரமும் = உயிர்நெட்டெழுத்துக்கள் காரம் என்ற சாரியையும்,
ஐ ஔ கானும் = ஐ, ஔ, என்ற இரண்டு நெட்டெழுத்துக்களும், காரம் என்ற சாரியையோடு, கான் என்ற சாரியையும்,
இருமைக்குறில் = உயிர்க் குற்றெழுத்துக்களும், உயிர்மெய்க் குற்றெழுத்துக்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரண்டொடு = காரம், கான், என்ற இந்த இரண்டு சாரியை களோடு
கரமும் = கரம் என்ற சாரியையும்
ஆம் சாரியை பெறும் = ஆகிய கான் காரம் கரம் என்பவற்றில் தத்தமுக்குப் பொருந்திய ஒரு சாரியையைப் பெறும்.

எழுத்தியலுக்குப் புறனடை.

எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதனிலை, இறுதிநிலை, இடைநிலை, போலி என்று கூறப்பட்ட பத்து இலக்கணங்களையுடைய எழுத்துக்கள் தனிப்பதங்களாயிருந்தாலும், அந்தப் பதங்களோடு வேறு பதங்களும் உருபுகளும் சேர்ந்தாலும் தங்களுக்கு உரிய இலக்கணங்களில் மாறுபாடு அடையா.

இதற்குச் சூத்திரம் :-

**எயக. மொழியாய்த் தொடரினு முன்னனைத் தெழுத்தே.**

இதன் பதப்பொருள்:

எழுத்து = (முதலெழுத்தும், சார்பெழுத்தும் ஆகிய) இருவகை எழுத்துக்கள்
மொழியாய்த் தொடரினும் = பதங்களாகத் தொடர்ந்தாலும்
முன் அனைத்து = முன்னே சொல்லப்பட்ட எண் முதலாகப் போலி ஈறாகவுள்ள பத்து இலக்கணங்களையும் உடையனவாகும்.

எழுத்ததிகாரத்தின் முதற்பிரிவாகிய எழுத்தியல் முற்றிற்று.

## பதவியல்

இதுவரையிலும் எழுத்ததிகாரத்தின் முதற்பிரிவாகிய எழுத்தியலில் உள்ள எண் முதல் போலி இறுதியாகிய இலக்கணங்களைக் கூறினாம்.

எழுத்தியலில் எழுத்ததிகாரத்திற்கு உரிய எழுத்திலக்கணப் பகுதிகள் பன்னிரண்டுள், பத்து இலக்கணங்கள் கூறப்பட்டன.

இனி, எழுத்ததிகாரத்தின் இரண்டாவது கூறாகிய சொற்களின் உறுப்புக்களை விளக்கும் பகுதியைக் கூறுதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவியல் - பதவகை.

இப்பகுதிக்கு முன்னோர் பதவியல் என்று பெயரிட்டனர்.

பதவியல்= பதம் + இயல் = சொல்லின் இயல்பு.

சொல்லின் இயல்பைச் சொல்லதிகாரத்திற் கூறுவது முறை ஆனால் எழுத்ததிகாரத்தில் சொல்லின் இயல்பைக் கூறாமல் சொற்களின் உறுப்புக்களாகிய முதல்நிலை (பகுதி), இறுதி நிலை (விகுதி) சாரியை, சந்தி, விகாரம் என்றவற்றின் அமைதிகள் கூறப்பட்டன.

பதம் என்பதை முதலில் அறிந்துகொண்டாலன்றி அந்தப் பதத்தின் உறுப்புகளை அறிந்து கொள்ள முடியாது.

ஆதலின் பதம் இன்னதென்று கூறுதும்.

ஓர் எழுத்தும், இரண்டு முதலாகத் தொடர்ந்த பல எழுத்துக் களும், எழுத்துக்களைக் குறியாமல் பொருளைக் குறிக்கும் போது, பதம் எனப்படும்.

ஆ என்றது எழுத்தைக் குறித்தால் பதமாகாது. ஆ என்றது பசுவைக் குறிக்கும்போது பதமாகும். (ஆ = பசு)

இது ஒரெழுத்தாலாகிய பதம்.

ஆல், உணவு, பண்டம், சந்திரன் : இவை ; இரண்டு எழுத் துக்கள் முதலாகத் தொடர்ந்து பொருள்களை உணர்த்தும் பதங்கள்.

க ச த ப எனச் சிலவெழுத்துக்கள் தொடர்ந்திருந்தாலும், ஒருபொருளை உணர்த்தாமல் க, ச, த, ப என்ற எழுத்துக்களை உணர்த்தலின் க ச த ப என்பது பதமாகாது ; எழுத்துக்களேயாகும்.

### பதங்களின் வகை.

பதங்களில் இரண்டு வகையுண்டு : பிரிக்கக்கூடிய பதமும், பிரிக்கக்கூடாத பதமும்.

பிரிக்கக்கூடிய பதம் பகுபதம் என்றும், பிரிக்கக்கூடாத பதம் பகாப்பதம் என்றும் கூறப்படும்.

பகுபதம் = பகுக்கத்தக்க பதம் = பிரிக்கக்கூடிய பதம்.

பகாப்பதம் = பகுக்கத்தகாத பதம் = பிரிக்கக்கூடாத பதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுபதத்திற்கு உதாரணம் : -

பொன்னன், பொன்னன் என்ற பதத்தைப் பொன் எனவும், அன் எனவும் பிரிக்கலாம். (பொன் + அன் = பொன்னன்). பொன்னன் என்ற பதம் பொன்னையுடையவன் என்று பொருள்படும். பொன் என்ற பதம் பொன்னைக் குறிக்கின்றது. அன் என்றது பொன் என்ற பொருளை உடைய ஒருவன் என்று குறிக்கின்றது.

அவன். இந்தப் பதத்தை அ என்றும் அன் என்றும் பிரிக்கலாம். அ என்றது சுட்டெழுத்து.

எந்தப் பொருளைச் சுட்டுகின்றது எனில், அன் என்ற ஆண் பாலைக் குறிக்கும் விகுதியைச் சுட்டுகின்றது என்றறிக.

எனவே, பகுபதம் என்றது தொடர்புடைய உறுப்புகளாகப் பிரிக்கப்படும் இயல்புடையது என்று நன்கு விளக்கப்பட்டது.

பகாப்பதத்திற்கு உதாரணம்: -

சோறு. இந்தப் பதத்தைச் சோ + று என்று பிரித்தால், சோ என்பதையுடையது என்று வரும். ஆனால், இப்பொருள் சோறு என்ற பதத்திற்கும் பொருத்தமில்லாதிருப்பதினால், சோறு என்ற பதம் பிரிக்கக்கூடாத பதம் என அறிக.

இவற்றிற்குச் சூத்திரம்: -

எ௰உ. எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்
பதமா மதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி யியலு மென்ப.

இதன் பதப்பொருள்:

எழுத்தே = எழுத்துக்கள்
தனித்தும் = (ஒவ்வோரெழுத்தாக) ஒன்றாகவும்.
தொடர்ந்தும் = (இரண்டெழுத்து முதலாகச்) சேர்ந்ததும்
பொருள் தரின் = பொருளைத் தருமாயின்
பதம் ஆம் = மொழியாகும்.
அது = அந்த மொழி, தனித்தும், தொடர்ந்தும் பொருளைத் தரும் பதங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவியல் - பதவகை.

பகாப்பதம் பகுபதம் என இருபால் ஆகி = பகாப்பதம் என்றும், பகுபதம் என்றும் இரண்டு வகையாகி
இயலும் என்ப = நடந்துவரும் என்பார் புலவர்.

ஒரெழுத்தும் இரண்டு முதலிய பல எழுத்துக்களும் தொடர்ந்து பொருள் தருமாயின் பதங்களாகும் என்று கூறினாமன்றே. அவற்றுள் ஒரெழுத்தொரு மொழியில் சிறந்தனவற்றை விளக்குவாம்.

ஒரெழுத்தொரு மொழி

ஒரெழுத்தொரு மொழி = ஓர் + எழுத்து + ஒரு + மொழி = ஒரு எழுத்தே தனியாக நின்று ஒரு மொழியாய் வருவது.

ஒரெழுத்தொரு மொழிகள் எல்லாம் பகாப்பதங்கள்.

ஒரெழுத்தொரு மொழிகளின் விபரம்.

உயிர் நெட்டெழுத்து வர்க்கத்தில் - சூ : ஆ (பசு); ஈ (இலையான்); ஊ (இறைச்சி); ஏ (அம்பு); ஐ (அழகு); ஓ (மதகுநீர் தாங்கும் பலகை).

உயிர்மெய் நெட்டெழுத்து மகர வர்க்கத்தில் - சூ : மா (ஒரு மரம்); மீ (மேல்); மூ (மூப்பு); மே (மேல்); மை (மேகம்); மோ (மோந்துபார்).

உயிர்மெய் நெட்டெழுத்து தகர வர்க்கத்தில் - ரு: தா (தருவாய்); தீ (நெருப்பு); தூ (சுத்தம்); தே (தெய்வம்); தை (மாசம்).

உயிர்மெய் நெட்டெழுத்து பகர வர்க்கத்தில் - ரு: பா (பாட்டு); பூ (புஷ்பம்); பே (நுரை); பை (பாம்பின் படம்); போ (போவாய்)

உயிர்மெய் நெட்டெழுத்து நகர வர்க்கத்தில் - ரு : நா (நாக்கு); நீ; நே (அன்பு); நை (வருந்து); நோ (வருத்தம்).

உயிர்மெய் நெட்டெழுத்துக் ககர வர்க்கத்தில் - ச : கா (சோலை); கூ (அழை); கை; கோ (அரசன்).

உயிர்மெய் நெட்டெழுத்துச் சகர வர்க்கத்தில் - ச : சா (செத்துப்போ); சீ; சே (இடபம்); சோ (மதில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்மெய் நெட்டெழுத்து வகர வர்க்கத்தில் - ச : வா ; வீ (புஷ்பம்) ; வை (கூர்மை) ; வெள (திருடு).

உயிர்மெய் நெட்டெழுத்து யகர வர்க்கத்தில் - க : யா (எவை).

உயிர்மெய் குற்றெழுத்து நகர வர்க்கத்தில் - க : நொ (வருந்து).

உயிர்மெய்க் குற்றெழுத்து தகர வர்க்கததில் - க : து (உண்).

நெட்டெழுத்தில், உயிர் வர்க்கத்திலும் மவ்வர்க்கத்திலும் அவ்வாறும் ; தவ்வர்க்கத்திலும் பவ்வர்க்கத்திலும் நவ்வர்க்கத்திலும் அவ்வைந்தும்; கவ்வர்க்கத்திலும் வவ்வர்க்கத்திலும் சவ்வர்க்கத்திலும் நந்நான்கும் யவ்வர்க்கத்தில் ஒன்றும் ; உயிர்மெய்க் குற்றெழுத்தில், நவ்வர்க்கத்திலும் தவ்வர்க்கத்திலும் ஒவ்வொன்றும்.

ஆகக் கூடி ஒரெழுத்தொரு மொழி நாற்பத்திரண்டாகும்.

இதற்குச் சூத்திரம்: -

**எ௰௬. உயிர்மவி லாறும் தபநவி லைந்தும்**
**கவசவி னாலும் யவ்வி லொன்றும்**
**ஆகு நெடினொது வாங்குறி லிரண்டோ**
**டோரெழுத் தியல்பத மாறேழ் சிறப்பின.**

இதன் பதப்பொருள்:

உயிர் ம இல் ஆறும் = உயிர் வர்க்கத்திலும், மவ்வர்க்கத்திலும் அவ்வாறும்,

த ப ந இல் ஐந்தும் = தவ்வர்க்கததிலும், பவ்வர்க்கத்திலும், நவ்வர்க்கத்திலும் அவ்வைந்தும்,

க வ ச இல் நாலும் = கவ்வர்க்கத்திலும், வவ்வர்க்கத்திலும், சவ்வர்க்கத்திலும் நந்நான்கும்,

யவ்வில் ஒன்றும் = யவ்வர்க்கத்தில் ஒன்றும்,

ஆகும் நெடில் = ஆகின்ற நெட்டெழுத்தில் (வரும் ஒரெழுத்தொரு மொழிகள் நாற்பதும்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொ து ஆம் குறில் இரண்டோடு - நொ, து என்ற குற்றெழுத்தால் ஆகிய (ஒரெழுத்தொரு மொழிகள்) இரண்டுடனே.

ஓர் எழுத்து இயல்பதம் = ஓர் எழுத்தால் அமைந்த மொழிகள்.

ஆறு ஏழ் சிறப்பின = (ஆறேழு) நாற்பத்திரண்டும் சிறப்புடையனவாம்.

இனி, இரண்டு முதலாகிய தொடரெழுத்துக்களால் ஆகும் மொழிகளின் விபரம் கூறப்படும்.

பகுபதம் இரண்டு எழுத்து முதலாக ஒன்பது எழுத்து ஈறாகத் தொடர்ந்துவரும்.

உ-ம்:- கூனி ; கூனன்; பொன்னன்; தெலுங்கன்; அம்பலவன் ; அம்பலத்தான்; உத்தராடத்தான் ; உத்தரட்டாதியான்.

பகாப்பதம் இரண்டு எழுத்து முதல் ஏழு எழுத்து ஈறாகத் தொடர்ந்து வரும்.

உ.ம்:- கண்; குதிரை ; நெருநல் (நேற்று) ; இறும்பூது (பெருமகிழ்ச்சி); தருப்பணம் ; உத்தரட்டாதி.

இதற்குச் சூத்திரம்:-

௭௰௬. பகாப்பத மேழும் பகுபத மொன்பதும்
எழுத்தீ றாகத் தொடரு மென்ப.

இதன் பதப்பொருள்:

பகாப்பதம் = பகுக்கப்படாத (பிரிக்கப்படாத) மொழிகள்

எழு (எழுத்து ஈறாகவும்) = (இரண்டு எழுத்துக்கள் முதலாக) ஏழு எழுத்துக்கள் ஈறாகவும்.

பகுபதம் = பகுக்கக்கூடிய (பிரிக்கக்கூடிய) மொழிகள்

ஒன்பது எழுத்து ஈறாக = (இரண்டு எழுத்துக்கள் முதல்) ஒன்பது எழுத்துக்கள் ஈறாகவும்.

தொடரும் என்ப = சேர்ந்துவரும் என்று (புலவர்) கூறுவர்.

இதுகாறும் ஒரெழுத்தொரு மொழி, தொடரெழுத்து மொழி, பகாப்பதம், பகுபதம் என்னும் இவற்றின் எழுத்தெல்லை என்பனவற்றைக் கூறினாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிப் பகாப்பதம், பகுபதம் என்பவற்றுக்குரிய அமைதிகளைக் கூறுதும்.

பகாப்பதத்துக்குரிய அமைதிகள்

பகாப்பதமாவது பகுக்கப்படாத (பிரிக்கக் கூடாத) இயல்புடைய மொழி.

உலகத்திலேயுள்ள மொழிகளுள் சில காரணம் படைத்த உறுப்புக்கள் சேர்ந்தும், சில அவ்வுறுப்புக்கள் சேராதும், அமைந்துள்ளன.

காரணம் பெற்ற உறுப்புக்களையுடைய மொழிகளைப் பிரிக்கலாம். உறுப்பில்லாதவற்றைப் பிரிக்க முடியாது.

காரணங்கொண்ட உறுப்புக்களைப் பெற்ற பதத்தைப் பகுபதம் என்றும், உறுப்புக்களைப் பெறாத பதத்தைப் பகாப்பதம் என்றும் அறிவுடையார் கூறுவர்.

காரண உறுப்புக்களைப் பெற்ற பகுபத விளக்கம்: -

உ-ம்: படித்தான். இந்தப்பதம் ஒருவன் சென்ற காலத்தில் படித்தல் என்ற தொழிலைச் செய்தான் என்று தெரிவிக்கின்றது. இங்கே செய்யப்பட்ட படித்தல் என்ற தொழிலைத் தெரிவிக்க படி என்றதும், சென்ற காலத்தில் அந்தத் தொழில் நடந்தது என்பதைத் தெரிவிக்க த் என்றதும், இந்த இறந்த காலத்தைத் தெரிவிக்கும் த் என்ற இடைநிலையைச் சார்ந்த த் என்ற சாரியையும், இத்தொழிலை ஓர் ஆடவன் செய்தான் என்பதைத் தெரிவிக்க ஆன் என்றதும் உறுப்புக்களாகி, (படி + த் + த் + ஆன்) படித்தான் என்று வந்தது. இவ்விதமாகக் காரண காரிய சம்பந்த உறுப்புக்களோடு வருவதுவே பகுபதம் என்றறிக.

காரண உறுப்புக்களைப் பெறாத பகாப்பத விளக்கம் :

உ-ம். சோறு. இந்தப்பதம் அன்னத்தைக் குறிக்கும். சோ + று எனவும் பிறவாறும் பிரிக்கப்பட்டால் அன்னத்தைக் குறிப்பதற்குக் காரணமாகிய உறுப்புக்கள் இன்மையால், இம்மொழி பகுபதமாகாது ; பகாப்பதமேயாகும்.

பகுக்கக்கூடிய பதங்களும் (பகுபதங்களும்), பகுக்கக்கூடாத பதங்களும் (பகாப்பதங்களும்) பெயர்ச் சொல், வினைச் சொல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைச் சொல், உரிச் சொல் என்ற நான்கு சொல்வகைக்குள் அமைந்து விடும்.

பெயர்ச்சொல் ஒருபொருளின் பெயரைக் காட்டும்.

வினைச்சொல் ஒருபொருளின் தொழிலைக் காட்டும்.

இடைச்சொல்லாவது பெயர்ச்சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் முன்னும் பின்னும் இருந்து அப்பெயர் வினைகளின் வித்தியாசத்தையும், அவற்றின் பொருளையும், ஓசையையும் காட்டும்.

உரிச்சொல்லாவது பெயர்ச்சொல், வினைச்சொல் என்னும் இவற்றின் குணங்களைக் காட்டும்.

பெயர்ச்சொல்லுக்கு உதாரணம் : மரம் (ஒரு பொருளின் பெயர்).

வினைச்சொல்லுக்கு உதாரணம் : ஒடிந்தது. இது மரம் என்ற ஒருபொருளின் தொழிலாகிய ஒடிதலை உணர்த்திற்று.

இடைச்சொல்லுக்கு உதாரணம் : மன், கொல், போல், மற்று.

மன் என்ற இடைச்சொல் காடு என்ற பெயர்ச்சொல்லோடு கூடிக் காடுமன் என்றாகியது. பண்டு காடுமன் என்றால், இப்போது வயல் என்று பொருள்படுகின்றது.

உரிச்சொல்லுக்கு உதாரணம் : உறு, தவ, நனி என்ற உரிச்சொல் மிகுதியைக் குறிக்கும். நனி செய்தான் என்று ஒருவினைச் சொல் லோடு கூடினால், செய்தலின் மிகுதியைக் காட்டும். நனி செய்தான் = மிகுதியாகச் செய்தான்.

பகாப்பதங்களும் பெயர்ப்பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப்பகாப்பதம், உரிப்பகாப்பதம் என நான்கு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| உ-ம். | நிலம், நீர், காற்று, சோறு | பெயர்ப்பகாப்பதம். |
| | நட, வா, உண், தின், | வினைப்பகாப்பதம். |
| | மன், கொல், போல், மற்று, | இடைப்பகாப்பதம். |
| | உறு, தவ, நனி, கழி, | உரிப்பகாப்பதம். |

இவற்றிற்குச் சூத்திரம்:-

எ௰௫. பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்றாய் முடிந்தியல்கின்ற
பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பதப்பொருள் :

பகுப்பால் = (உறுப்புக்களாகப்) பிரிப்பதால்

பயன் அற்று = காரணகாரிய ஸம்பந்தமாகிய பிரயோஜன மில்லாமல்.

இடுகுறி ஆகி = காரணமின்றி இடப்பட்ட பெயராய்.

முன்னே ஒன்றாய் = படைப்புக்காலந் தொடங்கி ஒரே தன்மை யனவாகி

முடிந்து இயல்கின்ற = நிறைவேறி நடக்கின்ற

பெயர், வினை, இடை, உரி நான்கும் = பெயர்ச் சொல்லும், வினைச்சொல்லும், இடைச்சொல்லும், உரிச்சொல்லும் ஆகிய நான்கும்.

பகாப்பதம் = பிரிக்கக்கூடாத பதங்களாம்.

---

பகுபதங்களுக்குரிய அமைதிகள்.

பகுபதமாவது காரணகாரிய ஸம்பந்தமாகப் பிரிக்கக் கூடிய பதமாம்.

இந்தப் பகுபதம் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற வகையான பெயர்களை முதலுறுப்பாகப் பெற்று வரும்.

பொருள் என்பது மண், பொன், பெட்டி, வாள் முதலிய பொருள்களுக்குரிய பெயர்களைக் குறிக்கும்.

இடம் என்பது மேல், கீழ், ஊர், உள், வெளி முதலிய இடங் களுக்குரிய பெயர்களைக் குறிக்கும்.

காலம் என்பது வருஷம், மாசம், கிழமை, கார், வேனில் முதலிய காலங்களுக்குரிய பெயர்களைக் குறிக்கும்.

சினை என்பது கை, கால், மூக்கு, காது, கண் முதலிய உறுப்புக் களுக்குரிய பெயர்களைக் குறிக்கும்.

குணம் என்பது கருமை, செம்மை, நன்மை, தீமை, வெம்மை, தண்மை, புதுமை, பழமை முதலிய குணங்களுக்குரிய பெயர்களைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் என்பது இருத்தல், எழுதல், நடத்தல், நிற்றல், செய்தல் முதலிய தொழில்களுக்குரிய பெயர்களைக் குறிக்கும்.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற வற்றிற்குரிய ஆறு பெயர்களின் அடியாக (முதலுறுப்பாக, பகுதி யாக)க் கொண்டு பிறக்கும் பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களும் பகுபதங்களாம்.

வினைச் சொற்கள் குறிப்புவினை, தெரிநிலைவினை என இரண்டு வகைப்படும்.

குறிப்புவினை

குறிப்புவினையாவது காலத்தைக் குறிப்பாகக் காட்டும் வினைச் சொல்லாகும்.

உதாரண விளக்கம் :

ஒருவன் தன் தம்பியை நோக்கி : இராமா, எனது நண்பன் கோவிந்தனை நமது வீட்டு விசேடத்திற்கு அழைக்க வில்லையா, என்று கேட்டான்.

தம்பி : அண்ணா, கோவிந்தன் நமது விரோதி. நம்மை யெல் லாம் பலர் முன்னிலையில் இகழந்து பேசினான்.

இங்கே, கோவிந்தன் நமது விரோதி என்றது முன்னர் நண்பனா யிருந்த கோவிந்தன் இப்போது விரோதியாய் இருக்கின்றான் என்ற பொருளைக் குறிக்கின்றது.

விரோதி என்றது பகைவன் என்ற பொருளில் வராது, பகை வனாய் இருக்கிறான் என்ற பொருளில் வந்தமையால், பெயர்ச் சொல்லாகாமல் வினைச்சொல்லாகியது.

பேசுகின்ற ஸந்தர்ப்பத்தின் குறிப்பால் காலம் தெரிவதால், விரோதி என்றதைக் குறிப்பு வினைமுற்று என்று கூறவேண்டும்.

இந்தக் குறிப்புவினைமுற்றிலிருந்து ஒரு பெயர்ச்சொல் பிறக்கும்.

உதாரண விளக்கம்:

அண்ணன் : தம்பி, (கோவிந்தனாகிய அந்த) விரோதியை ஒழித்து விடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே விரோதியை என்றது கோவிந்தனைக் குறித்தலால் பெயர்ச்சொல்லாகியது. விரோதியை என்றது விரோதி என்ற குறிப்பு வினைமுற்றால் வந்த பெயர்ச்சொல்லாய் இருத்தலினால், குறிப்பு வினையாலணையும்பெயர் எனப்படும்.

குறிப்பு வினைமுற்றும், குறிப்பு வினையாலணையும் பெயரும் பகுபதங்களாக வரும்.

## தெரிநிலைவினை

தெரிநிலைவினையாவது குறிப்பு வினைமுற்றைப் போலக் காலத்தைக் குறிப்பாகக் காட்டாமல் நேரே தெரிவிப்பதாம்.

உ-ம். நடந்தான். இந்தப்பதம் ஒருவன் முன்னர் நடத்தலைச் செய்தான் என்று காலத்தை நேராக (வெளிப்படையாகக்) காட்டுகின்றது.

தெரிநிலைவினை = (காலத்தைத்) தெரிவிக்கின்ற நிலைமையையுடைய வினைச்சொல்.

தெரிநிலைவினையும் பெயராகும்.

உதாரண விளக்கம்:

இராமனுக்குப் பெண் கொடுத்தான் என்று கிருஷ்ணன் என்பவன் பொன்னனுக்குச் சொன்னான். பொன்னன், கிருஷ்ணா! பெண் கொடுத்தானை நான் பார்க்கவேண்டும் என்று சொன்னான்.

கொடுத்தான் என்ற தெரிநிலை வினைச்சொல் வழியாகக் கொடுத்தானை என்றது வந்தது. கொடுத்தானை என்ற பதம் பெண் கொடுத்த அந்த மனிதனை என்று பொருள்படுதலால் தெரிநிலை வினைச்சொல் ஆகாமல் பெயர்ச்சொல் ஆகியது.

கொடுத்தான் என்ற தெரிநிலை வினைமுற்றின் வழியாகக் கொடுத்தானை என்ற பெயர் தோன்றுவதால், இது தெரிநிலை வினை யாலணையும் பெயர் ஆகியது.

தெரிநிலை வினைமுற்றும், தெரிநிலை வினையாலணையும் பெயரும் பகுபதங்களாக வரும்.

வினைச்சொல் தெரிநிலைவினை, குறிப்புவினை என்னும் இரண்டு வகைகளால் இரண்டுவித வினையாலணையும் பெயர்களாவதோடு, தொழிற்பெயர் என மற்றொரு வகையும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்பெயர்

தொழிற்பெயர் என்பது ஒரு தொழிலை இன்னார் செய்தார் என்று காட்டாது அந்தத் தொழிலையே காட்டும் பெயராம்.

உ-ம். நடத்தல். இந்தப்பதம் ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்னும் இவற்றில் ஒன்றின் கர்த்தா நடத்தலைச் செய்தது என்று காட்டாமல் நடத்தல் என்னும் தொழிலுக்கே பெயரானமை காண்க.

தொழிற்பெயரும் பகுபதமாக வரும்.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறு வகைப் பெயர்களின் அடியாகப் பிறக்கும் பெயர்களும் (நடந்த, நடக்கின்ற, நடக்கும் என்ற) மூன்று காலங்களில் ஒரு காலத்தை வெளிப்படையாகக் காட்டும் தெரிநிலை வினைச்சொற்களும், தெரிநிலை வினையாலணையும் பெயர்களும், மூன்று காலங்களுள் ஒரு காலத்தைக் குறிப்பாகக் காட்டும் குறிப்பு வினைமுற்றுகளும், குறிப்புவினையாலணையும் பெயர்களும், தொழிற்பெயர்களும் பகுபதங்களாக வரும்.

பொருள் முதலாய அறுவகையில் நின்றும் பிறந்த பெயர்ப் பகுபதங்களுக்கு உதாரணம் :-

பொன்னன். பொன் என்ற பொருளின் அடியாகப் பிறந்த பெயர்ப் பகுபதம்.

ஊரன். ஊர் என்ற இடத்தின் அடியாகப் பிறந்த இடம் பெயர்ப்பகுபதம்.

வேனிலான். வேனில் என்ற காலத்தின் அடியாகப் பிறந்த காலப்பெயர்ப் பகுபதம்.

கண்ணன், கண் என்ற சினையின் (உறுப்பின்) அடியாகப் பிறந்த சினைப்பெயர்ப் பகுபதம்.

நல்லன். நல் என்ற குணத்தின் அடியாகப் பிறந்த குணப்பெயர்ப் பகுபதம்.

நடையன். நடை என்ற தொழிலின் அடியாகப் பிறந்த வினைப் பெயர்ப் பகுபதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று காலத்திலும் வரும் தெரிநிலை வினைச்சொற் பகுபதங்களுக்கு உதாரணம்:

நடந்தான். இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம். நடந்தானை என்றது வினையாலணையும் பெயர்.

நடக்கின்றான். நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம். நடக்கின்றானை என்பது வினையாலணையும் பெயர்.

நடப்பான். எதிர்காலத் தெரிநிலை வினைமுற்றுப் பகுபதம். நடப்பானை என்பது வினையாலணையும் பெயர்.

குறிப்புவினைமுற்றுப் பகுபதத்திற்கு உதாரணம்:

இவன் (இப்போது) பகைவன். பகைவனை அழிப்போம் என்றதில் பகைவனை என்ற சொல் குறிப்பு வினையாலணையும் பெயர்.

இன்னும் அவன், இவன், உவன் என்ற சுட்டுப்பெயர்களும் எந்தை, தம்பி, நுந்தை முதலிய முறைப்பெயர்களும் பகுபதங்களாம்.

இதற்குச் சூத்திரம் : -

**எயகூ. பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்**
**வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.**

இதன் பதப்பொருள் :

பொருள் = பொருளடியாகவேனும்,
இடம் = இடமடியாகவேனும்,
காலம் = காலம் அடியாகவேனும்,
சினை = உறுப்பு அடியாகவேனும்,
குணம் = பண்படியாகவேனும்,
தொழில் = வினையாடியாகவேனும்,
வருபெயர் = பகுதி முதலியவற்றைப் பெற்று வருகின்ற பெயர்ச் சொற்களும்,
பொழுதுகொள் வினை = தெரிநிலையாகவேனும் (வெளிப் படையாகவேனும்), குறிப்பாகவேனும், காலத்தைப் பெறும் வினைச் சொற்களும்.
பகுபதம் = பகுபதங்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பகுபத உறுப்புக்கள்

உடம்புக்குத் தலை, கால், கை முதலிய உறுப்புக்கள் இருத்தல் போலப் பகுபதங்களுக்கும் உறுப்புக்கள் உண்டு. பகுபதவுறுப் புக்கள் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி. விகாரம் என்பன வாம்.

### பகுதி.

பகுதியாவது ஒரு பதத்தின் முதலுறுப்பாக உள்ளது. முதலுறுப் பாக உள்ள பகுதியின்றிப் பகுபதங்கள் வரா. பகுபதங்களின் இன்றியமையாத காரணத்தை விளக்குவது பகுதியே.

"ப்ரக்ருதி" என்ற ஸம்ஸ்க்ருத பதமே பகுதியெனத் தமிழில் வந்தது. ப்ரக்ருதி = தன்னியல்பில் நிற்பது.

உ-ம். கூனி. இந்தப்பதத்தின் முதலிலுள்ள (கூனி = கூன் + இ) கூன் என்ற உறுப்பே பகுதி என்றறிக.

நடந்தான். இந்தப்பதத்தின் முதலிலே நிலைபெற்ற (உறுப் பாகிய முதனிலை) நட என்றதுவே பகுதி என்றறிக.

பகுதியை முதனிலை என்றும் கூறுவர். முதனிலை = முதலிலே நிற்பது = சொல்லுக்கு முதலிலே நிலைபெற்ற உறுப்பு.

### விகுதி.

விகுதியாவது பகுபதங்களின் இறுதியுறுப்பாவதாம். பகுதி யைத் தன்னியல்புக்குள் விகாரப்படுத்தி (வேறுபடுத்தி)க் கொள் வது.

"விக்ருதி" (வேறுபடுத்துவது) என்ற ஸம்ஸ்க்ருத பதமே விகுதியெனத் தமிழில் வந்தது. இறுதிநிலை என்றும் விகுதியைக் கூறுவர். இறுதிநிலை = கடையில் நிற்பது = சொல்லுக்குக் கடையில் நிற்பது.

கூன், ஊண் முதலிய சொற்கள் ஒருபொருளால் விகாரப்படுத் தப்படாமல் தங்கள் இயல்பிலேயே இருக்கின்றன. ஆதலின் இவை பகுதிகள் (தம் இயல்பில் நிற்பவை) எனப்பட்டன.

கூன், ஊண் முதலிய சொற்களோடு ஆடவனைக் குறிப்ப தாகிய அன் என்ற இடைச்சொல்லைக் கூட்டி, (கூன் + அன்) கூனன், (ஊண் + அன்) ஊணன் என்று ஆக்கிக்கொண்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையே கூனை உடையவன் கூனன் எனவும், ஊணை உடையவன் ஊணன் எனவும் பொருள்பட்டுவிடுகின்றன.

எனவே, தம் இயல்பாக (வேறுபாடின்றி) இருந்த கூன், ஊண் முதலிய சொற்களை வேறுபடுத்தி ஒர் ஆடவன் தனக்குரிமை யாக்கிக் கொண்டு கூனன், ஊணன் எனப்பட்டான். ஆதலின் ஆடவனைக் காட்டும் இடைச்சொல்லாகிய அன் என்றது கூன், ஊண் என்றவற்றை வேறு படுத்தினமையால் (விகாரப்படுத்தி யனமையால்), விகுதி எனப்பட்டது.

இடைநிலை.

இடைநிலையாவது பகுதிக்கும், விகுதிக்கும் இடையிலே நிற்ப தாம். பகுதிக்குள்ள எழுத்திற்கும் விகுதிக்குள்ள எழுத்திற்கும் ஸம்பந்தமுண்டாக்க இடையிலே வரும் உறுப்பு இடைநிலை எனப்படும்.

இடைநிலை = நடுவில் நிற்பது = மொழிக்கு நடுவில் நிற்கும் உறுப்பு.

உ.ம். வலைஞன். இந்தப் பதத்தை வலை + ஞ் + அன் என்று பிரிக்கலாம். முதலில் நின்ற வலை என்றது பகுதி. கடையில் நின்ற அன் என்றது விகுதி. நடுவிலே நின்ற ஞ் என்றதை இடைநிலை யாகக் கொள்க.

சாரியை

சாரியையாவது பகுபதங்களிலே இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையிலே வந்து அவ்விரண்டையும் பொருந்தும்படி செய்வதாம்.

சார்ந்து பொருந்துவதைச் சாரியை என்றார். சார் + இயை = சார்ந்து பொருந்துவது = பொருந்தாத இரண்டு சொற்களுக்கு இடையிலே சார்ந்து அவற்றைப் பொருந்துமாறு பொருத்துவது.

உ-ம். உண்டனன். இந்தப் பதத்தை உண் + ட் + அன் + அன் எனப் பிரிக்கலாம். முதலில் நிற்பதாகிய உண் என்றது பகுதி. கடையில் நிற்பதாகிய அன் என்றது விகுதி. இடையில் நிற்பதாகிய ட் என்றது இடைநிலை. ட் என்ற இடைநிலைக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன் என்ற விகுதிக்கும் நடுவிலே உள்ள அன் என்றதைச் சாரியையாகக் கொள்க.

பகுபதங்களின் விகுதி உறுப்புக்குரிய எழுத்துக்களே சாரியை யாகப் பெரும்பாலும் வரும்.

சந்தி.

சந்தியாவது பகுதிக்கும் இடைநிலைக்கும் நடுவே வருவது. இடைநிலையெழுத்தே பெரும்பாலும் இரட்டித்துச் சந்தியாக வரும்.

சந்தி = புணர்ச்சி. ஒருசொல் மற்றொரு சொல்லோடு புணரும் (சேரும்) போது உண்டாகும் எழுத்து.

பகுபதத்திலுள்ள ஓர் உறுப்பு மற்றைய உறுப்போடு சேரும் போது உண்டாகும் (தோன்றும்) எழுத்தே சந்தியாகும்.

உ.ம். படித்தனன். இந்தப் பதத்தை படி + த்+ த்+ அன் + அன் என்று பிரிக்கலாம். முதலிலுள்ள படி என்றது பகுதி. கடையிலுள்ள அன் என்றது விகுதி. நடுவிலுள்ள த் என்றது இடைநிலை. த் என்ற இடைநிலைக்கும், அன் என்ற விகுதிக்கும் இடையிலுள்ள அன் என்றது சாரியை, படி என்ற பகுதிக்கும், த் என்ற இடைநிலைக்கும் நடுவிலுள்ள த் என்றது சந்தி.

விகாரம்.

விகாரம் என்றது சந்தியால் தோன்றிய எழுத்து. பகுதியோடு அமைந்து பொருந்துவதன்பொருட்டு இனவெழுத்தாக வேறுபடு வதாம்.

உ-ம். நடந்தனன். இந்தப் பதத்தை நட + ந் + த் + அன் + அன் என்று பிரிக்கலாம். நட என்றது பகுதி. கடை யிலுள்ள அன் என்றது விகுதி. நடுவிலுள்ள த் என்றது இடை நிலை. பகுதிக்கும் இடைநிலைக்கும் மத்தியில் ந் என்ற எழுத்து இருக்கிறது. ந் என்ற எழுத்தைச் சந்தியெழுத்தாகச் சொல்லலாமோ எனில், த் என்ற எழுத்து இடைநிலையாக இருத்தலினால், இடையில் சந்தியும், த் என்றே வருதல்வேண்டும். ஆனால் த் என்றது ந் என்று இருத்தலினால். த் என்ற சந்தியெழுத்தே தனக்கு இனவெழுத்தாகிய ந் என்ற எழுத்தாய் விகாரப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றறிக. த் என்ற இடைநிலைக்கும், அன் என்ற விகுதிக்கும் இடையிலுள்ள அன் என்றது சாரியையாகும்.

பகுதி முதலிய பகுபத உறுப்புக்களைக் கூறும் சூத்திரம்: -

எய்எ பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

இதன் பதப்பொருள்:

| | | |
|---|---|---|
| பகுதி | = | முதனிலையும் |
| விகுதி | = | இறுதிநிலையும் |
| இடைநிலை | = | நடுநிலையும் |
| சாரியை | = | சாரியையும் |
| சந்தி | = | சந்தியும் |
| விகாரம் | = | விகாரமும் |
| ஆறினும் | = | ஆகிய ஆறு உறுப்பினுள்ளும் |
| ஏற்பவை | = | (பொருள் அமைதிக்குப்) பொருந்தியவைகளை |
| முன்னி | = | (அறிவுடையோர்) ஆராய்ந்து |
| புணர்ப்ப | = | கூட்டி முடிக்க |
| எப்பதங்களும் | = | எவ்வகைப்பட்ட சொற்களும் |
| முடியும் | = | பூர்த்தி பெறும் |

பகுதி.

பகுபத உறுப்புக்கள் ஆகிய பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்ற ஆறு உறுப்புக்களில், பகுதி, விகுதி, இடைநிலை என்ற மூன்று உறுப்புக்களே இங்கு விளக்கப்படும். சாரியை, சந்தி, விகாரம் என்ற மூன்று உறுப்புக்களும் புணரியலில் விளக்கப்படும்.

பகுதியாவது பகுபதங்களின் முதலிலே நிற்கும் பகாப்பதங்களாம்.

உ-ம். அடித்தான். இந்தப் பதத்தின் முதலுறுப்பாகிய அடி என்பதுவே பகுதியாகும். அடி என்ற பதத்தை அ + டி என்று பிரித்தலினால் அடி என்ற வினைச்சொல்லுக்குரிய பொருள் கிடைக்கவில்லை. ஆதலின் அடி என்றது பகாப்பதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவியல் - பகுதி.

பகுபதங்களுக்குப் பகுதியாகப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்ற நான்கு வகைச் சொற்களும் வரும்.

பெயர்ப் பகுபதங்களுக்கும், குறிப்பு வினைமுற்றுப் பகுபதங் களுக்கும் பெரும்பான்மை பெயர்ச்சொற்களும், சிறுபான்மை இடைச்சொல், உரிச்சொற்களும், பகுதிகளாக வரும்.

உ-ம். குழையன். இந்தப் பதத்திற்குக் (குழை + அன்) குழை என்ற பெயர்ச்சொல் பகுதியாக வந்தது. குழை என்பது பொருட் பெயர்.

ஊரன். இந்தப் பதத்திற்கு (ஊர் + அன்) ஊர் என்ற இடப் பெயர்ச் சொல் பகுதியாக வந்தது.

வேனிலான். இந்தப் பதத்திற்கு (வேனில் + ஆன்) வேனில் என்ற காலப்பெயர் பகுதியாக வந்தது.

மூக்கன். இந்தப் பதத்திற்கு (மூக்கு + அன்) மூக்கு என்ற சினைப்பெயர் (உறுப்புப் பெயர்) பகுதியாக வந்தது.

நன்மையான். இந்தப் பதத்திற்கு (நன்மை + ஆன்) நன்மை என்ற குணப்பெயர் பகுதியாக வந்தது.

தொழிலான். இந்தப் பதத்திற்குத் (தொழில் + அன்) தொழில் என்ற தொழிற்பெயர் பகுதியாக வந்தது.

அவன். இந்தப் பதத்திற்கு (அ + அன்) அ என்ற சுட்டிடை யெழுத்தானது பகுதியாக வந்தது.

எவன். இந்தப் பதத்திற்கு (எ + அன்) எ என்ற வினாவிடை யெழுத்தானது பகுதியாக வந்தது.

பிறன். இந்தப் பகுபதத்திற்குப் (பிற + ன்) பிற என்ற இடைச் சொல் பகுதியாக வந்தது.

சால்பு. இந்தப் பகுபதத்திற்குச் (சால் + பு ) சால் என்ற உரிச்சொல் பகுதியாக வந்தது.

குறிப்பு வினைமுற்றுப் பகுபதங்களுக்கும் மேற்காட்டிய வையே உதாரணங்களாகும்.

பெயர்ப்பகுபதத்துக்குச் சிறுபான்மை வினைப்பதமும் பகுதி யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். அறிஞன். இந்தப் பதத்திற்கு (அறி + ஞ் + அன்) அறி என்ற வினைச்சொல் பகுதியாக வந்தது.

தெரிநிலைவினைப் பகுபதங்களுக்குப் பெரும்பான்மை வினைச்சொற்களும், சிறுபான்மை பெயர்ச்சொற்களும். இடைச் சொற்களும், உரிச்சொற்களும் பகுதிகளாக வரும்.

உ-ம். பிடித்தான். இந்தப் பகுபதத்திற்குப் (பிடி + த் + த் + ஆன்) பிடி என்ற வினைச்சொல் பகுதியாக வந்தது.

கொடுத்தான். இந்தப் பகுபத்திற்குக் (கொடு + த் + த் + ஆன்) கொடு என்ற வினைச்சொல் பகுதியாக வந்தது.

கடைக்கணித்தான். இந்தப் பகுபதத்திற்குக் (கடைக்கண் + இ + த் + த் + ஆன்) கடைக்கண் என்ற பெயர்ச்சொல் பகுதியாக வந்தது.

காதலித்தான். இந்தப் பகுபதத்திற்குக் (காதல் + இ + த் + த் + ஆன் ) காதல் என்ற பெயர்ச் சொல் பகுதியாக வந்தது.

என்றான். இந்தப் பகுபதத்திற்கு (என்று + ஆன்) என்று என்ற இடைச்சொல் பகுதியாக வந்தது.

போன்றான். இந்தப் பகுபதத்திற்கும் (போல் + ற் + ஆன்) போல் என்ற இடைச்சொல் பகுதியாக வந்தது.

பகாப்பதங்கள் பகுதியாகும் என்றதற்குச் சூத்திரம்: -

எயஅ தத்தம்,
பகாப்ப தங்களே பகுதி யாகும்.

இதன் பதப்பொருள்: -

தத்தம் = (பெயர்ப் பகுபதங்களிலும், வினைப் பகுபதங்களிலும்) அவற்றின் அவற்றின்

பகாப்பதங்களே = (முதலிலே நிற்கின்ற) பிரிக்கக்கூடாத சொற்களே

பகுதி ஆகும் = பகுதிகளாகும்.

பண்புப் பகுதிகள்

பண்புப் பகுதி = குணத்தை உணர்த்தும் பகுதி. பண்பு = குணம், பண்பாவது. அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், பிறப்பு, சாதி, குடிச்சிறப்பு முதலானவற்றைக் கொள்வதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மை, வெண்மை, கருமை, பொன்மை, பசுமை என்பவைகளும் ; சிறுமை, பெருமை என்பவைகளும்; சேய்மை (தூரம்), அணிமை (சமீபம்) என்பவைகளும் ; தீமை, நன்மை என் பவைகளும்; புதுமை, பழமை என்பவைகளும் ; மென்மை, வன்மை, இடைமை என்பவைகளும்; மேன்மை, தாழ்மை, கீழ்மை, நடுமை என்பவைகளும்; திண்மை (கடினமுடைமை), நொய்மை (இலேசாந்தன்மை) என்பவைகளும்; உண்மை, இன்மை, என்பவைகளும்; நுண்மை (நுட்பத்தன்மை), பருமை (பெருத்திருத்தல்) என்பவைகளும் ; இவை போன்ற பிறவும் பண்புப் பகாப்பதங்களாம்.

செம் + மை என்றாற்போல, மேற்கூறியவற்றையெல்லாம் பிரிக்கலாம். பிரித்தாலும், பகுதியும் விகுதியும் சேர்ந்து ஒரே பொருளைக் கொடுப்பனவாய், விகுதிக்குப் பொருள் வேறில்லாமையால், இவற்றையெல்லாம் பிரிக்கக்கூடாது. இவையெல்லாம் சொல்லளவில் பகுபதமும், பொருளளவில் பகாப்பதமும் ஆகும்.

மேற்கூறிய செம்மை முதல் பருமை ஈறாகக் கூறப்பட்டன. எல்லாம் பண்பு (குணம்) எனப்படும். இப்பண்பை (குணத்தை)த் தனக்கு உடையதுவாகக் கொண்ட பொருள் பண்பி (குணி) எனப்படும்.

உ-ம். செம்மை - குணம் (பண்பு)

செம்மையான - குணி (பண்பி). செம்மையான் = செம்மை என்ற குணத்தை உடையவன்.

செம்மையாயின் என்ற பதத்தைப் பிரிக்கும் போது செம்மை + ஆன் என்றே பிரித்தல் வேண்டும்.

இவற்றிற்குச் சூத்திரம்: -

**எயசு. செம்மை சிறுமை சேய்மை தீமை**
**வெம்மை புதுமை மென்மை மேன்மை**
**திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்**
**இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே.**

இதன் பதப்பொருள்: -

செம்மை = செம்மையும் ; இதற்கெதிர் = இதனுக்கு மாறான வெண்மை, கருமை, பொன்மை, பசுமை என்பவையும் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமை = சிறியதன்மையும் ; இதற்கெதிரான பெருமையும்
சேய்மை = சேய்மையும் ; இதற்கெதிர் = இதனுக்கு மாறான அணிமையும் ;
தீமை = தீமையும் ; இதற்கெதிர் = இதனுக்கு மாறான நன்மையும் ;
வெம்மை = வெம்மையும் ; இதற்கெதிர் = இதனுக்கு மாறான தன்மையும் (குளிர்ச்சியும்);
புதுமை = புதுமையும் ; இதற்கெதிர் = இதனுக்கு மாறான பழமையும் ;
மென்மை = மென்மையும் ; இதற்கெதிர் = இதனுக்கு மாறான வன்மையும், இடைமையும் ;
மேன்மை = மேன்மையும் ; இதற்கெதிர் = இதனுக்கு மாறான தாழ்மையும், கீழ்மையும்,
திண்மை = கடினமும் ; இதற்கெதிர் = இதனுக்கு மாறான நொய்மையும்,
உண்மை = உள்ளதும் ; இதற்கெதிரான பொய்மையும் ;
நுண்மை = நுட்பமும் ; இதற்கெதிரான பருமையும்,
இன்னவும் = இவை போல்வன பிறவும்,
பண்பின் = பண்புப் பொருளிலிருந்தும்,
பகா = (வேறுபொருளாகப்) பிரிக்கப்படாத
நிலை பதம் = நிலைமையுடைய பதங்களாம்.

பண்புச் சொற்கள் பெயர் முற்று முதலாயின ஆகுங்காலத்தும், ஏனை மொழியோடு கூடுங்காலத்தும், பல விகாரங்களை அடையும். கீழ்வருமாறு காண்க.

(1) இறுதியிலுள்ள மை என்ற எழுத்துக் கெட்டுவிடும்.
உ-ம். சிறுவன், சிறுமை + அன் = சிறு + அன் = சிறுவன்.

சிறுமை என்ற பதம் அன் என்ற விகுதியோடு கூடும்போது, தனது கடையெழுத்தாகிய மை என்ற எழுத்துக் கெடப்பெற்று, சிறு என்றாகி, வ் என்ற இடைநிலை அன் என்ற விகுதியோடு சேர்ந்து, சிறுவன் என்றாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) நடுவிலுள்ள உ என்ற எழுத்து இ என்றாகும்.

உ-ம். சூரியன். கருமை + அன் = கரு + அன் = கரி + அன் = கரியன்.

கருமை என்ற பண்புச் சொல்லின் ஈற்றெழுத்தாகிய மை கெட்டு, கரு என்றாகி, கரு என்ற பதத்தின் ஈற்றிலுள்ள உயிர்மெய்யெழுத்தின் (ரு = ர் + உ) உ என்ற உயிரெழுத்து இ என்றாகியது.

(3) பண்புச் சொல்லின் முதலில் நின்ற குற்றெழுத்து நெட்டெழுத்தாகும்.

உ-ம். பாசி. பசுமை + இ = பசு + இ = பாசு + இ = பாசி.

பசுமை என்ற பதத்தின் கடையிலுள்ள மை என்ற எழுத்துக் கெட்டுப் பசு என்றாகி, பசு என்ற பதம் பாசு என முதலெழுத்தாகிய குற்றெழுத்து நெட்டெழுத்தாகிக் கடையிலுள்ள சு என்ற உயிர் மெய்யெழுத்திலுள்ள உ என்ற எழுத்துக் கெட்டு, இ என்ற எழுத்தோடு கூடி, பாசி என்றாகியது.

(4) பண்புச் சொல்லின் முதலிலுள்ள அ என்ற எழுத்து ஐ என்றும் மாறும்.

உ-ம். பைந்தார். பசுமை + தார் = பசு + தார் = ப + தார் = பை + தார் = பைந்தார்.

பசுமை என்ற சொல் தார் என்ற சொல்லோடு புணரும் போது, பசுமை என்ற சொல்லின் இடையெழுத்தும் கடையெழுத்துமாகிய சு, மை என்ற எழுத்துக்கள் கெட்டுப் ப என்றாகி, ப என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள அ என்ற உயிரெழுத்து ஐ என்று மாறிப் பை என நின்று, தார் என்ற சொல்லின் முதலெழுத்தாகிய த என்னும் உயிர்மெய்யெழுத்திலுள்ள (த = த் + அ) த் என்ற மெய்யெழுத்துக்கு இனவெழுத்தாகிய ந் என்ற எழுத்துத் தோன்றிப், பைந்தார் என்றாகியது.

(5) பண்புச் சொல்லின் நடுவிலுள்ள மெய்யெழுத்து இரட்டிக்கும்.

உ-ம். நட்டாறு. நடுமை + ஆறு = நடு + ஆறு = நட்டு + ஆறு = நட்டாறு.

நடுமை என்ற பதம் ஆறு என்ற பதத்தோடு புணரும் போது நடுமை என்ற பதத்தின் ஈற்று உயிர்மெய்யெழுத்தாகிய மை என்றது. கெட்டு, நடு என்று நின்று, தன்னொற்று இரட்டித்து நட்டு என்றாகி, ஆறு என்ற பதத்தோடு கூடி, நட்டாறு என்றாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) பண்புச் சொல்லின் மை என்ற கடையெழுத்துக்கு முன்னிருந்த மெய்யெழுத்து வேறொரு மெய்யெழுத்தாய்த் திரிபு பெறும்.

உ-ம். செங்கரும்பு. செம்மை + கரும்பு = செம் + கரும்பு = செங்கரும்பு.

செம்மை என்ற பதம் கரும்பு என்ற பதத்தோடு புணரும் போது, செம்மை என்ற பதத்தின் ஈற்றிலுள்ள மை என்ற எழுத்துக் கெடச், செம் என்று நின்று கரும்பு என்ற சொல்லோடு சேரும் போது செம் என்ற பதத்தின் கடையெழுத்தாகிய ம் என்றது. ங் என்று மாறிச் செங்கரும்பு என்றாகியது.

(7) பண்புச் சொல்லின் நடுவிலுள்ள உயிர்மெய்யெழுத்துக் கெடும்.

உ-ம். பைந்தார். பசுமை + தார் = பசு + தார் = ப + தார் = பைந்தார்.

இங்கே பசுமை என்ற பதத்திலுள்ள சு என்ற எழுத்துக் கெட்டதற்கு விதி கூறப்பட்டது.

பசுமை என்ற சொல் தார் என்ற சொல்லோடு புணரும்போது, பசுமை என்ற சொல்லின் சுமை என்ற எழுத்துக்கள் கெட்டுப், ப என்று நின்று, பை என்றாகித் தார் என்ற சொல்லோடு கூடிப் பைந்தார் என்றாகியது.

(8) பண்புச் சொல்லின் நடுவிலுள்ள உ என்ற எழுத்துக் கெடும்.

உ-ம். கார். கருமை = கரு = காரு = கார்.

கருமை என்ற பதத்தின் மை என்ற எழுத்துக் கெட்டுக் கரு என நின்றது. கரு என்ற பதம் காரு என நீண்டது. காரு என்ற பதத்தின் கடையிலே உள்ள உயிர்மெய்யெழுத்தாகிய ரு என்றதிலுள்ள (ரு = ர் + உ) உ என்ற எழுத்துக் கெட்டுக் கார் என்றாகியது.

(9) பண்புச் சொல்லின் நடுவிலுள்ள இ என்ற எழுத்துக் கெடும்.

உ-ம். இன்சொல். இனிமை + சொல் = இன் + சொல் = இன்சொல்.

இனிமை என்ற பதத்தின் கடையெழுத்தாகிய மை என்றது கெட்டு இனி என்றாகியது. இனி என்றதின் கடையிலுள்ள னி என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (னி = ன் + இ) இ என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக் கெட்டு இன் என்றாகியது. இன் என்ற பதம் சொல் என்றதோடு கூடி இன்சொல் என்றாகியது.

(10) பண்புச் சொல்லின் நடுவிலுள்ள அ என்ற எழுத்து ஐ என்று மாறும்.

உ-ம். பழையன். பழமை + அன் = பழ + அன் = பழை + அன் = பழையன்.

பழமை என்ற பதத்தின் கடையிலுள்ள மை என்ற எழுத்துக் கெட்டுப் பழ என நின்றது. பழ என்ற பதத்தின் கடையிலேயுள்ள ழ என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (ழ = ழ் + அ) அ என்ற உயிரெழுத்துக்குப் பதிலாக ஐ என்ற எழுத்து வந்து பழை என்றாகியது. பழை என்ற பதம் அன் என்ற விகுதியோடு கூடிப் பழையன் என்றாகியது.

(11) பண்புச் சொல்லின் முதலிலேயுள்ள நெட்டெழுத்து குற்றெழுத்தாகும்.

உ-ம். துய்யன். தூய்மை + அன் = தூய் + அன் = துய் + அன் = துய்யன்.

தூய்மை என்ற பதத்தின் கடையெழுத்தாகிய மை என்றது கெட்டுத் தூய் என நின்றது. தூய் என்ற பதத்தின் முதலெழுத்தாகிய தூ என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள (தூ = த் + ஊ) ஊ என்ற நெட்டெழுத்து உ என்ற குற்றெழுத்தாகித் துய் என நின்றது. துய் என்ற பதம் அன் என்ற விகுதியோடு ய் என்ற உடம்படுமெய் பெற்று துய்யன் என்றாகியது.

பண்புச் சொற்களுக்கு மேற்கூறிய விதிகளேயன்றி இன்னும் பலவிதிகளுண்டு. உலக வழக்கத்திலும், செய்யுள் வழக்கத்திலும் அவற்றையெல்லாம் அறிந்து கொள்க.

பண்புச் சொற்களெல்லாம் மேற்கூறிய விதிகளில் ஒன்றும் பலவும் பெற்று வரும். இவ்விதிகளைப் பெறும் சொற்களுக்கு மை விகுதி கெட்டேவிடும் என்றுணர்க. மேற்கூறிய விதிகள் செம்மை, கருமை இவைபோன்ற வாய்பாடுகளுக்கு அமையும். அன்பு, அழகு முதலியவற்றிற்கு இவ்விதிகள் இல்லை என்றறிக.

செம்மை முதலிய பண்புச் சொற்கள் மேல்விதிக்கப்பட்ட விதிகளைப் பெறாமலும் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்குச் சூத்திரம் :-

அய. ஈறு போத லிடையுகர மிய்யாதல்
ஆதி நீட லடியகர மையாதல்
தன்னொற் றிரட்டன் முன்னின்ற மெய்திரிதல்
இனமிக லினையவும் பண்பிற் கியல்பே.

இதன் பதப்பொருள்:-

ஈறு போதல் = (மேற்கூறிய செம்மை முதலிய பதங்களின்) இறுதியிலுள்ள மை என்ற எழுத்துக் கெடுதலும்,
இடை உகரம் இ ஆதல் = (அந்தப் பதங்களின்) நடுவிலேயுள்ள உ என்ற எழுத்து இ என்ற எழுத்தாக மாறுதலும்,
ஆதி நீடல் = (பண்புப் பதங்களில்) முதலிலே உள்ள குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீளுதலும்,
அடி அகரம் ஐ ஆதல் = (பண்புச் சொற்களின்) முதலிலே உள்ள அ என்ற எழுத்து ஐ என்று மாறுதலும்
தன் ஒற்று இரட்டல் = (பண்புச் சொற்களின்) நடுவிலே உள்ள மெய்யெழுத்துத் தானே இரட்டித்து வருதலும்,
முன் நின்ற மெய்திரிதல் = (பண்புச் சொற்களின்) கடையிலுள்ள மை என்ற எழுத்துக்கு முன்னால் நிற்கின்ற மெய்யெழுத்து வேறு மெய்யெழுத்தாகத் திரிதலும்,
இனம் மிகல் = வருகின்ற வல்லெழுத்துக்கு இனமாகிய மெல்லெழுத்து மிகுந்து வருதலும்,
இனையவும் = இவை போல்வன பிறவும்,
பண்பிற்கு இயல்பு = பண்புப் பதங்கள் விகுதியோடும் மற்றைய சொற்களோடும் புணரும் போது உண்டாகும் இயற்கையாகும். (கூ)

## வினைப்பகுதிகள்.

வினைப்பகுதி = வினைச் சொல் ஆகிய பகுதி.

வினைப் பகுதிகளை அறிந்துகொள்வதற்கு இலேசாக அந்த வினைப்பகுதிகளுக்கு உரிய ஈற்றெழுத்துக்களை ஓர் அடையாளமாக வைத்துக்கொள்ளலாம்.

வினாவிலும், அளபெடையிலும், தன்னை உணர்த்தும் இடத்திலேயுந்தான் எ என்ற எழுத்து, சொல்லுக் கடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் மற்றைய சொற்களின் கடையில், வராது. ஆதலால், பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள், என்ற பதினொரு மெய்யெழுத்துக்களும் குற்றியலுகரம் ஒன்றும் சேர்ந்த இருபத்து நான்கு எழுத்துக்களும், மொழிக்குக் கடையில் வரும்.

நட, பற முதலிய வினைப்பகுதிகள் எல்லாம் அ என்ற எழுத்தை ஈற்றிலே கொண்ட பகுதிகள். இவற்றையெல்லாம் நட என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

வா, தா, கொணா, சா முதலிய வினைப்பகுதிகள் எல்லாம் ஆ என்ற எழுத்தைக் கடையிலே கொண்ட பகுதிகள். இவற்றை வா என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

மடி, தவி, குறி, எறி, எரி முதலிய வினைப்பகுதிகள் எல்லாம் இ என்ற எழுத்து ஈற்றிலே கொண்ட சொற்கள். இவற்றை மடி என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

சீ, வீ, ஈ முதலிய வினைப் பகுதிகள் எல்லாம் ஈ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றைச் சீ என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

விடு. எடு, கொடு, உடு. இரு, எழு, உழு, நெருடு, வருடு முதலிய வினைப்பகுதிகள் எல்லாம் உ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றை விடு என்ற வாய்பாட்டாற் குறிப் பிடலாம்.

கூ, பூ முதலிய வினைப்பகுதிகள் எல்லாம் ஊ, என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றைக் கூ என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

வே முதலிய வினைப்பகுதிகள் எல்லாம் ஏ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றை வே என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

வை, பதை, புதை, தை, உதை, நகை முதலிய வினைப்பகுதிகள் எல்லாம் ஐ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றை வை என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

நொ முதலிய வினைப்பகுதிகள் எல்லாம் ஒ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றை நொ என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போ, மோ முதலிய வினைப்பகுதிகள் எல்லாம் ஒ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றைப் போ என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

வௌ, கௌ முதலிய வினைப்பகுதிகள் எல்லாம் ஔ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றை வௌ என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

ஞ் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப் பகுதிகள் எல்லாவற்றையும் உரிஞ் என்ற வாய்பாட்டாற் குறிப் பிடலாம்.

உண், பண், எண் முதலிய வினைப்பகுதிகள் எல்லாம் ண் என்ற மெய்யெழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றை உண் என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

ந் என்ற எழுத்தைக் கடையிலேயுள்ள வினைப்பகுதிகள் எல்லா வற்றையும் பொருந் என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

ம் என்ற எழுத்தைக் கடையிலே கொண்ட வினைப்பகுதிகள் எல்லாவற்றையும் திரும் என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

தின், பன், ஈன் முதலிய வினைப்பகுதிகள் எல்லாம் ன் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றைத் தின் என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

தேய், காய், ஏய், ஆய், சாய் முதலிய வினைப்பகுதிகள் ய் என்ற எழுத்ந்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றைத் தேய் என்ற வாய்பாட்டாற் குறிபப்பிடலாம்.

பார், வளர், கிளர், சேர் முதலிய வினைப்பகுதிகள் ர் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றைப் பார் என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

செல், வெல், கோல், கொல் , அகல், இகல், ஏல், புகல் முதலிய வினைப்பகுதிகள் ல் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றைச் செல் என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

வ் என்ற எழுத்தைக் கடையிலேயுள்ள வினைப்பகுதிகளை வவ் என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ், போழ், தாழ், தவழ் முதலிய வினைப்பகுதிகள் எல்லாம் ழ் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றை வாழ் என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

கேள், ஆள் முதலிய வினைப்பகுதிகள் ள் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ளன. இவற்றைக் கேள் என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

அஃகு, நாடு முதலிய வினைப்பகுதிகள் குற்றியலுகரத்தை ஈற்றிலே உடையன. இவற்றை அஃகு என்ற வாய்பாட்டாற் குறிப்பிடலாம்.

மேலே காட்டிய நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு முதலிய இருபத்துமூன்று வாய்பாடுகளுக்குரிய வினைப்பகுதிகளில் நின்றும் ஏவல்வினை, தெரிநிலை வினைமுற்று, பெயரெச்சவினையெச்சங்கள், வினையாலணையும் பெயர், தொழிற் பெயர் முதலியன பிறக்கும்.

### ஏவல் வினை

ஏவல்வினையாவது முன்னிற்பானை நோக்கி இதைச் செய் என்று கட்டளையிடுவதாம்.

உ-ம். நீ செய். கோபாலா, ராமனை, அடி. செய், அடி, என்பன ஏவல்வினைகள்.

செய்யாய் (செய + ஆய்), அடியாய் (அடி + ஆய்) என்ற பதங்களின் முன்னிலை விகுதியாகிய ஆய் என்றது கெட்டுச் செய், அடி என நின்றன.

நட, வா, முதலிய பகுதிகள், அப்படியே முன்னிலை ஏவலாய் வரின் நடவாய், வாராய், என்றாகும். அவை ஆய் விகுதி குன்றி வந்தனவென்று கருதுக.

### தெரிநிலை வினைமுற்று

தெரிநிலை வினைமுற்றாவது ஒரு தொழிலையும், அந்தச் தொழிலைச் செய்யும் தலைவனையும், அந்தத் தொழிலுக்கு வேண்டிய கருவியையும், அந்தத் தொழில் நிறைவேறுதற்குரிய இடத்தையும், அந்தத் தொழில் நிறைவேறும் காலத்தையும், அந்தத் தொழிலாற் செய்யப்பட்ட பொருளையும் முற்றும் தெரிவிப்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறியவற்றை முற்றும் தெரிவிக்கும் வினை ஆதலால் அது தெரிநிலை வினைமுற்று எனப்பட்டது. இவற்றிற் சில குறைந்தாலும் முற்றெனவே படும்.

உ-ம். பாடினான். பாடினான் என்றபோது ஓர் ஆடவன் சென்ற காலத்தில் வாயால் ஒரிடத்திலிருந்து ஒரு பாட்டைப் பாடுதலைச் செய்தான் என்று விளங்குகின்றது. பாடினான் என்ற பதத்தைப் பாடு + இன் + ஆன் என்று பிரிக்கலாம். பாடு என்றது பகுதி. இது தொழிலைக் காட்டியது. இன் என்பது இறந்த காலத்தைக் காட்டும் இடைநிலை. இது சென்ற காலத்தில் பாடுதல் நடை பெற்றது என்று காலத்தைக் காட்டியது. ஆன் என்றது விகுதி. இது பாடுதலை ஓர் ஆடவன் செய்தான் என்று காட்டியது.

பெயரெச்சம்

பெயரெச்சமாவது தொழிலும் காலமும் தோன்றப் பெற்று ஒரு பெயர்ச் சொல்லோடு முடிவதாம்.

உ-ம். செய்த மனிதன். செய்த என்ற பதம் ஒரு தொழிலைச் சென்ற காலத்தில் செய்த என்று பொருள்பட்டு, அந்தத் தொழிலுக் குரிய மனிதன் என்ற பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகிறது.

பெயரை எச்சமாகக் கொண்டு நிற்றலால், பெயரெச்சம் எனப் பட்டது. எச்சம் = சேஷம் = மிச்சம்.

வினையெச்சம்

வினையெச்சமாவது செய்கையையும், காலத்தையும் காட்டி வினைமுற்றைக் கொண்டு முடிவதாம்.

உ-ம். படித்து வந்தான். படித்து என்ற பதம் படித்தல் என்ற தொழிலைச் சென்ற காலத்திலே செய்து என்று பொருள்பட்டு, படித் தலைச் செய்தவன் ஓர் ஆடவன் என்று காட்டக் கூடிய வந்தான் என்ற தெரிநிலை வினைமுற்றோடு முடிந்து நின்றது.

ஒரு தொழிலுக்கு மேல் மற்றொரு தொழிலைக் காட்டும் போது முதல் தொழில் வினையெச்சமாகும். ஒருவன் படித்தான், படித் தவன் இங்கே வந்தான் என்ற வாக்கியமானது, படித்தல் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலைச் செய்தபின் வருதல் என்ற தொழிலையுஞ் செய்தான் என்று பொருள்படுகின்றது. ஆதலின் வினையெச்சம் என்றது தனக்குரிய தொழிலுக்கு மேல் மற்றொரு தொழிலையும் உடையது என்று அறிக.

நட முதலிய வாய்பாடுகள் ஏவல்வினை ஆவதற்கு உதாரணம்:- நட - நடவாய், வா - வாராய், உண் - உண்ணாய், தின் - தின்னாய், அஃகு - அஃகாய் எனவரும். இவையெல்லாம் ஏவலொருமை.

நடமின், வம்மின், உண்மின், தின்மின், அஃகுமின். இவையெல்லாம் ஏவற்பன்மை.

நட முதலிய வாய்பாடுகள் தெரிநிலைவினை ஆவதற்கு உதாரணம் : நடந்தான், வந்தான், உண்டா ன், தின்றான், அஃகினான்.

நட முதலிய வாய்பாடுகள் தெரிநிலைவினைப் பெயரெச்சம் ஆவதற்கு உதாரணம்:- நடந்த, வந்த, உண்ட, தின்ற, அஃகிய.

நட முதலிய வாய்பாடுகள் தெரிநிலை வினையெச்சம் ஆவதற்கு உதாரணம்: நடந்து, வந்து, உண்டு, தின்று, அஃகி.

நட, வா முதலிய வாய்பாட்டு வினைப்பகுதிகள் முற்றுக் களாகவும், எச்சங்களாகவும் வருதற்பொருட்டு விகுதி முதலிய வற்றோடு கூடுங்காலத்து இயல்பாயும், பல வேறுபாடுகளை அடைந்தும் வரும்.

இயல்பாய் வருவனவற்றிற்கு உதாரணம்:- தொழு - தொழுதான். செய் - செய்தான்.

வேறுபட்டு வருவதற்கு உதாரணம்: செல் - (செல் + தல்) சேறல், தா - தந்தான்.

இயல்பாயும், வேறுபட்டும் வருவனவற்றிற்கு உதாரணம்: முழுகு - முழுகினான். மூழ்கினான்.

கொல் - கொல்லுதல். கோறல்.

இனிப் பகுதிகளின் வேறுபாட்டிற்குரிய விதிகளை விளக்குதும்.

(1) பகுதிகள் முதலிலுள்ள ஆ என்ற எழுத்து அ என்று ஆகும்.

உ-ம். தா + த் + த் + ஆன் = தந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பகுதியின் முதலிலுள்ள ஆ என்ற எழுத்து அ என்ற குற்றெழுத்தாகி, அயலில் ஒரு உயிர்மெய்யெழுத்து விரியும்.
உ-ம். வா + கிறு + ஆன் = வகிறு ஆன், வருகிறான்.

(3) பகுதியின் முதலிலுள்ள உ என்ற எழுத்து நீண்டு. அதன் அயலிலுள்ள உயிர்மெய்யெழுத்தில் உ என்ற உயிரெழுத்துக் கெடும். உ-ம். முழுகு - மூழ்கினான்.

(4) பகுதியின் முதலெழுத்தாகிய எ என்ற எழுத்து ஏ என்ற எழுத்தாகும். உ-ம். செல் - சேறல்.

(5) பகுதியின் முதலிலுள்ள ஒ என்ற எழுத்து ஓ என்றாகும்.
உ-ம். கொல் - கோறல்.

(6) பகுதியின் முதலிலுள்ள ஆ என்ற எழுத்து எ என்றாகும்.
உ-ம். சா - செத்தான்.

(7) பகுதியின் கடையெழுத்தாகிய ஆ என்றது குறுகி ஒரு மெய்யெழுத்துத் தோன்றும். உ-ம். கொணா - கொணர்ந்தான்.

(8) பகுதியின் நடுவிலுள்ள அ என்ற எழுத்து ஆ என்றாகும்.
உ-ம். விரவு - விராவினான்.

(9) பகுதியின் கடையிலுள்ள மெய்யெழுத்து வருமெழுத் தாகத் திரியும். உ-ம். கல் - கற்றான்.

(10) பகுதியின் கடையிலுள்ள மெய்யெழுத்து வருமெழுத் திற்கு இனவெழுத்தாக மாறும். உ-ம். அகல் - அகன்றான்.

(11) பகுதியின் கடையிலே வரும் வல்லெழுத்து மிகும்.
உ-ம். உரை - உரைத்தான்.

இன்னும் இந்தத் தெரிநிலைவினைப் பதங்களுக்கு நட, வா, முதலிய வினைச்சொற்கள் பகுதியாதலேயன்றிச் சிறுபான்மை பெயர்ச்சொல். இடைச்சொல், உரிச்சொல் என்னும் இவைகளும் பகுதிகளாக வரும். உ-ம். சித்திரித்தான் ; கடைக்கணித்தான்.

சித்திரித்தான் என்பதில் சித்திரம் என்ற பெயர்ச்சொல்லும். கடைக்கணித்தான் என்பதிற் கடைக்கண் என்ற பெயர்ச்சொல்லும் பகுதிகளாக வந்தன.

போன்றான் ; நிகர்த்தான். போன்றான் என்பதிற் போல் என்ற இடைச்சொல்லும், நிகர்த்தான் என்றதில் நிகர் என்ற இடைச் சொல்லும் பகுதிகளாக வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றான் ; மாண்டான். சான்றான் என்பதில் சால் என்ற உரிச்சொல்லும், மாண்டான் என்பதில் மாண் என்ற உரிச் சொல்லும் பகுதிகளாக வந்தன.

நட, வா முதலிய வாய்பாடுகளை விளக்கும் சூத்திரம்: -

அயக. நட வா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரி நுண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கே ளஃகென்
றெய்திய விருபான் மூன்றா மீற்றவுஞ்
செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.

இதன் பதப்பொருள்: -

நட = அ என்ற எழுத்தைக் கடையிலே உள்ள வினைப்பகுதிகளுக்கு வாய்பாடாகிய நட என்றதும்.
வா = ஆ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதி களுக்கு வாய்பாடாகிய வா என்றதும்
மடி = இ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதி களுக்கு வாய்பாடாகிய மடி என்றதும்
சீ = ஈ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதி களுக்கு வாய்பாடாகிய சீ என்றதும்
விடு = உ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதி களுக்கு வாய்பாடாகிய விடு என்றதும்
கூ = ஊ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதி களுக்கு வாய்பாடாகிய கூ என்றதும்
வே = ஏ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதி களுக்கு வாய்பாடாகிய வே என்றதும்
வை = ஐ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப் பகுதிகளுக்கு வாய்பாடாகிய வை என்றதும்
நொ = ஒ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதி களுக்கு வாய்பாடாகிய நொ என்றதும்
போ = ஓ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதி களுக்கு வாய்பாடாகிய போ என்றதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள = ஔ என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப் பகுதிகளுக்கு வாய்பாடாகிய வெள என்றதும்.

உரிஞ் = ஞ் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப் பகுதிகளுக்கு வாய்பாடாகிய உரிஞ் என்றதும்

உண் = ண் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப் பகுதிகளுக்கு வாய்பாடாகிய உண் என்றதும்

பொருந் = ந் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப் பகுதிகளுக்கு வாய்பாடாகிய பொருந் என்றதும்

திரும் = ம் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப் பகுதிகளுக்கு வாய்பாடாகிய திரும் என்றதும்

தின் = ன் என்ற எழுத்தைக கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதி களுக்கு வாய்பாடாகிய தின் என்றதும்

தேய் = ய் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப் பகுதிகளுக்கு வாய்பாடாகிய தேய் என்றதும்

பார் = ர் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதி களுக்கு வாய்பாடாகிய பார் என்றதும்

செல் = ல் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதி களுக்கு வாய்பாடாகிய செல் என்றதும்

வவ் = வ் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப் பகுதிகளுக்கு வாய்பாடாகிய வவ் என்றதும்.

வாழ் = ழ் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதி களுக்கு வாய்பாடாகிய வாழ் என்றதும்

கேள் = ள் என்ற எழுத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதி களுக்கு வாய்பாடாகிய கேள் என்றதும்

அஃகு = குற்றியலுகரத்தைக் கடையிலே கொண்டுள்ள வினைப் பகுதிகளுக்கு வாய்பாடாகிய அஃகு என்றதும் (ஆகி)

எய்திய = இருபான் மூன்று ஆம் ஈற்றவும் = பொருந்திய இருபத்து மூன்று எழுத்துக்களைக் கடையிலே கொண்டுள்ள வினைப்பகுதிகள் எல்லாம்.

செய் என் ஏவல் = செய் என்று கூறுகின்ற ஏவல்வினைக்கும்

வினை = (ஏனைத்) தெரிநிலைவினைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகாப்பதம் = முதலிலேயுள்ள பகுதியாகிய பகாப்பதங்களாம்.

ஏவற்பகுதிக்குச் சிறப்புவிதி

ஏவலானது ஏவல், ஒரேவல், ஈரேவல் என்று மூன்று வகைப் படும்.

ஏவல்

ஏவலானது ஒருதொழிலைச் செய்யும்படி ஒருவனை ஏவுதல். உ-ம். பொன்னா, நீ இதனைச் செய். இந்த ஏவல் செய் என்னும் வாய்பாடாம்.

ஒரேவல்

ஒரேவலாவது ஒரு தொழிலைச் செய்யும்படி ஒருவனைத் தான் நேரே ஏவாது, மற்றொருவனைக்கொண்டு ஏவுவிப்பதாம்.

உ-ம். பொன்னா, இந்தக் காரியத்தை இராமனைக் கொண்டு செய்வி இந்த ஒரேவல் செய்வி என்ற வாய்பாடாம்.

இந்த ஒரேவலை உணர்த்த இயற்கையாகவுள்ள வினைப் பகுதிகளோடு வி என்ற விகுதியாவது, பி என்ற விகுதியாவது, வரும்.

ஈரேவல்

ஈரேவலாவது ஒருதொழிலைச் செய்யும்படி ஒருவனை மற்றொருவனைக் கொண்டு வேறொருவனாற் செய்விக்கும்படி ஏவுதல். உ-ம். பொன்னா, இராமன் மூலமாக கோவிந்தனைக் கொண்டு இந்தக் காரியத்தைச் செய்விப்பி. இந்த ஈரேவல் செய்விப்பி என்ற வாய்பாடாம்.

இந்த ஈரேவலை உணர்த்த விப்பி என்ற விகுதியும், பிப்பி என்ற விகுதியும் நட முதலிய பகுதிகளோடு ஏற்குமாறு கூட்டப் படும். விவ்பி என்று வராது விப்பி, பிப்பி என்று வரும்.

தன்வினை பிறவினைகள்

ஒரு வினையைத் தான்செய்வது தன்வினையாம்.
உ-ம். நடந்தான். இந்தப் பதம் ஒருவன் நடத்தல் என்ற தொழிலைத் தானே செய்தான் என்று பொருள் படுகின்றது ; ஆதலில் தன்வினை யாயிற்று.

பிறவினையாவது ஒருவன் ஒருவினையைப் பிறனைச் செய்யுமாறு செய்வதாம். உ-ம். நடத்தினான். இந்தப்பதம் நடத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் தொழிலை ஒருவனைச் செய்யுமாறு பிறன் செய்தான் என்று பொருள் தருதலால் பிறவினையாயிற்று.

சில வினைப்பகுதிகள் கு, சு, டு, து, பு, று என்ற ஆறு விகுதிகளுள், ஒன்றனைப் பெற்றும், வேறு சில பகுதிகள் சில வேறுபாடுகளைப் பெற்றும் பிறவினைகளாய் வரும்.

உ-ம். போ - போக்கு ; பாய் - பாய்ச்சு ; உருள் - உருட்டு ; நட - நடத்து ; எழு - எழுப்பு ; துயில் - துயிற்று.

இவையெலல்ாம் வினைப்பகுதிகள். கு, சு, டு, து, பு, று என்ற விகுதிகளைப் பெற்றுப் பிறவினைகளாயின.

இயங்கு - இயக்கு ; திருந்து - திருத்து. இவையெல்லாம் இடையிலுள்ள மெல்லொற்று வல்லொற்றாகிப் பிறவினையாயின.

உருகு - உருக்கு ; தேறு - தேற்று. இவை தன்னொற்று இரட்டித்துப் பிறவினைகள் ஆயின.

சில பகுதிகள் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகவும் வரும். அவை கரை, தேய், மறை முதலியனவாம்.

கரை, தேய், மறை என்ற பகுதிகள் தன்வினைப்பொருளில் விகுதி முதலியவற்றோடு கூடுங்காலத்து மெல்லின மெய்யெழுத்து மிகுந்துவரும்.

உ-ம். கரை - கரைந்தான் ; தேய் - தேய்ந்தான் ; மறை - மறைந்தான்.

கரை, தேய், மறை என்னும் பகுதிகள் பிறவினைப் பொருளில் விகுதி முதலியவற்றோடு கூடி வரும்போது, வல்லின மெய்யெழுத்து மிகுந்துவரும்.

உ-ம். கரை - கரைத்தான் ; தேய் - தேய்ப்பான் ; மறை - மறைத்தான்.

இதற்குச் சூத்திரம்: -

**அ௰உ. செய்யென் வினைவழி விப்பி தனிவரிற்**
**செய்வியென் னேவ லிணையி னீரேவல்.**

இதன் பதப்பொருள்:

செய் என் வினைவழி = செய் என்னும் ஏவற்பொருளில் வருகின்ற வினைப்பகுதிகளின் பின்

விபி தனிவரின் = வி என்ற விகுதியாவது பி என்ற விகுதியாவது, தனித்து வருமாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வி என் ஏவல் = செய் என்னும் ஏவலின்மேல் ஒரேவலாய் வரும் செய்வி என்னும் ஏவலாகும்.

இணையின் = (செய் என்னும் ஏவலின்மேல்) ஈ ரேவலாக வி, பி என்ற விகுதிகள் சேர்ந்து வந்தால்,
ஈர் ஏவல் = இரண்டு ஏவலாகும்.

வினைப்பகுதிகளுக்குப் புறனடை

நட, வா முதலிய வாய்பாட்டு வினைப்பகுதிகள், ஏவலில் வி, பி, விப்பி, பிப்பி முதலியவற்றைப் பெற்றுச் செய்வி, செய்விப்பி, நடப்பிப்பி என்று வேறுபட்டமை போல, ஏனைத்தெரிநிலையில் வரும்போதும் வேறுபடும்.

நட முதலிய பகுதிகள் நடத்து, நடத்துவி, நடத்துவிப்பி, நடப்பிப்பி என்று வேறுபட்டு, விகுதி முதலியவற்றோடு சேர்ந்து, முறையே நடத்தினான், நடத்துவித்தான், நடத்துவிப்பித்தான், நடப்பிப்பித்தான் எனவரும்.

இதற்குச் சூத்திரம்:-

அயரு. விளம்பிய பகுதி வேறாதலும் விதியே.

இதன் பதப்பொருள்:

விளம்பிய பகுதி = முன்சொல்லப்பட்ட வினைப்பகுதிகள்
வேறாதலும் =(ஏவல்வினைக்கு வேறுபட்டமை போலத்) தெரிநிலை வினைக்கு வேறுபடுதலும்.
விதியே விதியேயாம்.

---

விகுதி

விகுதி என்றது "விக்ருதி" என்ற வடமொழிச் சொல்லின் சிதைவு. விகுதி எனினும் இறுதிநிலை எனினும் ஒக்கும்.

பகுபதத்தின் இறுதியில் (கடையில்) நிற்றலால், விகுதி என்பது இறுதிநிலை எனப்பட்டது.

விகுதி என்பது பகுதி, இடைநிலை, முதலியவற்றோடு புணர்ந்தும், புணராதும் பெயர், வினை என்னும் இவற்றைக் காட்டுவதற்கு அறிகுறியாகப் பகுபதத்தின் இறுதி உறுப்பாக வரும் ஓர் இடைச் சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னியல்பாக நிற்கக்கூடிய பகுதியைத் தனக்குரியதாக வேறு படுத்திக் கொள்ளவதால், இறுதிநிலை விகுதி (விக்ருதி) எனப் பட்டது. விகுதி= வேறுபடுத்துவது.

இவ்விகுதி பெயர்விகுதி, வினைவிகுதிஎன இரண்டு வகைப் படும்.

பெயர் விகுதியானது பெயர் விகுதி, தொழிற்பெயர் விகுதி, பண்புப் பெயர் விகுதி என மூன்று வகைப்படும்.

வினைவிகுதியானது தெரிநிலை விகுதி, குறிப்புவினை விகுதி என இரண்டு வகைப்படும்.

தெரிநிலைவினை விகுதியானது தெரிநிலை வினைமுற்று விகுதி, தெரிநிலைப் பெயரெச்ச விகுதி, தெரிநிலை வினையெச்ச விகுதி என மூன்று வகைப்படும்.

குறிப்புவினை விகுதியானது குறிப்புவினைமுற்று விகுதி, குறிப்புவினைப் பெயரெச்ச விகுதி, குறிப்புவினையெச்ச விகுதி என மூன்று வகைப்படும்.

இந்த விகுதிகள் பெயர் முதலிய சொற்களுள் எவற்றிற்கு விகுதியாகின்றனவோ அவற்றின் விகுதிகள் என்று கூறப்படும்.

இன்னும் இவ்விகுதிகள் திணை, பால், இடங்களை உணர்த்துங் கால், அவ்வப் பால் இடங்களின் பெயரால் ஆண்பால் விகுதி, தன்மை விகுதி, ஒருமை விகுதி என்றாற் போலப் பெயர் பெறுதலும் உண்டு.

பெயர் விகுதிகள்

ஆண்பால் விகுதிகள்: -

அன் - குழையன்
ஆன் - வானத்தான்.
மன் - வடமன்
மான் - கோமான்
அல் - தோன்றல்.
முன் - எம்முன்.
தை - எந்தை.
பி - எம்பி.
ன் - பிறன்.

பெண்பால் விகுதிகள்: -

அள் - குழையள்.
ஆள் - வானத்தாள்.
இ - பொன்னி.
கை - எங்கை.
ள் - பிறள்

பலர்பால் விகுதிகள்: -

அர் - குழையர்
ஆர் - வானத்தார்
மார் - தேவிமார்.
கள் - கோக்கள்.
ர் - பிறர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவியல் - விகுதி

ஒன்றன்பால் விகுதி, து. அ + து = அது.

பலவின் பால் விகுதிகள்: -

அ - குழையன.
வ் - அவ் (அவை).

வை - அவை.
கள் - பசுக்கள்.

### தொழிற்பெயர் விகுதிகள்

அம் - வாட்டம்.
அரவு - தோற்றரவு (தோற்றுதல்).
அல் - ஆடல்.
ஆல் - தழால் (தழுவுதல்).
ஆனை - வாரானை (வருதல்).
இல் - எழில் (எழுதல்).
உ - வரவு.
உள் - விக்குள் (விக்குதல்).
ஐ - கொலை.
காடு - சாக்காடு (சாதல்).
கு - போக்கு.

கை - நடக்கை.
சி - புணர்ச்சி
தல் - நடத்தல்.
தி - மறதி.
து - பாய்த்து (பாய்தல்).
பாடு - கோட்பாடு (கொள்கை).
பு - நடப்பு.
மை- நடவாமை.
வி - புலவி.
வை - பார்வை

தொழிற்பெயராவது முதனிலைத் தொழிற்பெயர், முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் என இரண்டு வகைப்படும். அவற்றின் விரிவை **149 - 150**ம் பக்கங்களிற் காண்க.

முதனிலைத் தொழிற் பெயராவது விகுதி புணர்ந்து கெட்டுப் பகுதி விகாரப்படாமல நிற்பதாம்.

உ-ம். அடி (அடித்தல்). அடித்தல் என்ற தொழிற்பெயரின் விகுதியாகிய தல் என்றது கெட்டு, அடி என்ற பகுதி விகாரப்படாமல் தன்னியல்பிலேயே நின்றது.

முதனிலை திரிந்த தொழிற்பெயராவது தொழிற்பெயர் விகுதி புணர்ந்து கெடும் போது பகுதி பலவேறுபாடு பெறுதலாம்.

உ-ம். கோள் (கொள்ளல்). கொள்ளல் என்றதில் (கொள் + அல்) அல் என்ற தொழிற்பெயர் விகுதி கெட்டுக் கொள் என்ற பகுதி கோள் என்று விகாரமடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பண்புப்பெயர் விகுதிகள்

| | |
|---|---|
| அம் - நலம். | பு - மாண்பு. |
| உ - மழவு. | றி - நன்றி. |
| ஐ - தொல்லை. | று - நன்று. |
| கு - நன்கு. | நர் - நன்னர் (நன்மை). |
| சி - மாட்சி. | மை - நன்மை |
| பம் - திட்பம் | |

### தெரிநிலை வினைமுற்று விகுதிகள்.

ஆண்பாற் படர்க்கை விகுதிகள்: -

| | |
|---|---|
| அன் - நடந்தனன். | ஆன் - நடந்தான். |

பெண்பாற் படர்க்கை விகுதிகள்: -

| | |
|---|---|
| அள் - நடந்தனள். | ஆள் - நடந்தாள். |

பலர்பாற் படர்க்கை விகுதிகள்: -

| | |
|---|---|
| அர் - நடந்தனர். | ப - நடப்ப. |
| ஆர் - நடந்தார். | மார் - நடமார். |

ஒருமைத் தன்மை விகுதிகள்: -

| | |
|---|---|
| கு - உண்கு. | என் - நடந்தனென். |
| டு - உண்டு. | ஏன் - நடந்தேன். |
| து - நடந்து. | அல் - நடப்பல். |
| று - சேறு. | அன் - நடப்பன். |

பன்மைத் தன்மை விகுதிகள்: -

| | |
|---|---|
| கும் - உண்கும். | அம் - நடப்பம். |
| டும் - உண்டும். | எம் - நடப்பெம். |
| தும் - நடந்தும். | ஏம் - நடப்பேம். |
| றும் - சேறும். | ஓம் - நடப்போம். |

முன்னிலை ஒருமை விகுதிகள்: -

| | |
|---|---|
| ஐ - நடந்தனை. | இ - சேறி. |
| ஆய் - நடந்தாய். | |

முன்னிலைப் பன்மை விகுதிகள்: -

| | |
|---|---|
| இர் - நடந்தனிர். | மின் - நடமின். |
| ஈர் - நடந்தீர். | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவியல் - விகுதி.

வியங்கோள் விகுதிகள் (மேன்மையைக் கொண்ட:- நிலையைக் குறிக்கும் விகுதிகள்):-

| | |
|---|---|
| ஈயர் - நிலீயர் | ய - வாழிய. |
| க - நடக்க. | |

உம் என்ற விகுதி சிலவிடத்தில் வினைமுற்றாகவும், சில விடத்தில் பெயரெச்சமாகவும் வரும்.

உ-ம். செய்யும் மனிதன். உம் என்ற விகுதி பெற்ற செய்யும் என்றது பெயரெச்சம்.

அவன் செய்யும் (செய்வான்). செய்யும் (செய்வான்) என்றது வினைமுற்று.

யான் வந்தேன் என்றதில் ன் என்ற விகுதி தன்மையொருமையில் ஆண்பால் பெண்பால்களுக்கு வரும்.

டு - முக்கட்டு. மூன்று கட்டு = மூன்று + கண் + டு = மூன்று கண்களை உடையது. து - நடந்தது. து = கூயிற்று.

இந்த டு, து, று என்ற மூன்று விகுதிகளும் அஃறிணை யொருமை விகுதிகளாம்.

அ - வந்தன. இந்த அ என்ற விகுதி அஃறிணைப் பன்மை விகுதியாம்.

எதிர்மறை ஏவலொருமை விகுதிகள்:-

| | |
|---|---|
| ஆல் - மறால் (மறக்காதே). | ஏல் - அழேல் (அழாதே). |

ஏவலொருமை விகுதிகள்:-

| | |
|---|---|
| ஆய் - செய்யாய். | காண் - சொல்லிக்காண். |

குறிப்பு வினைமுற்று விகுதிகள்

ஆண்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று:-

| | |
|---|---|
| அன் - கரியன். | ஆன் - கரியான். |

பெண்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று:-

| | |
|---|---|
| அள் - கரியள். | ஆள் - கரியாள். |

பலர்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று:-

| | |
|---|---|
| அர் - கரியர். | ஆர் - கரியார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றன்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று:-

டு - குறுந்தாட்டு (குறுகிய தாளையுடையது)

து - கரிது.

று - குழையிற்று.

டு, து, று என்ற மூன்று விகுதிகளும் வினைப்பகுதிகளோடு வரும்போது காலம் காட்டும்; ஏனைய பகுதிகளுக்கு விகுதிகளாக வரும்போது காலம் காட்டா.

பலவின்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று:-

அ - கரிய.

தன்மையொருமைக் குறிப்பு வினைமுற்று:-

ஏன் - கரியென். | ஏன் - கரியேன்.

தன்மைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று:-

அம் - கரியம். | ஏம் - கரியேம்.

ஆம் - கரியாம். | ஓம் - கரியோம்.

எம் - கரியெம்.

முன்னிலை ஒருமைக் குறிப்பு வினைமுற்று:-

ஐ - கரியை. | இ - வில்லி.

ஆய் - கரியாய்.

முன்னிலைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று:-

இர் - கரியிர். | ஈர் - கரியீர்.

தெரிநிலைவினைப் பெயரெச்ச விகுதிகள்

அ - செய்த ; செய்கின்ற. | உம் - செய்யும்.

குறிப்புவினைப் பெயரெச்ச விகுதிகள்

அ - கரிய. அ என்ற விகுதி த் என்ற இடைநிலையோடு கூடிச் செய்த என இறந்தகாலத்தையும், கின்று என்ற இடைநிலையோடு கூடிச் செய்கின்ற என நிகழ்காலத்தையும் காட்டுமேயன்றித் தானே காலங்களைக் காட்டாது. ஆதலால், அ என்ற விகுதி குறிப்புப் பெயரெச்சத்திற்கு வந்தது.

உம் என்ற விகுதி எதிர்காலத்தைக் காட்டும். ப, வ என்ற உ இடைநிலைகளோடு சேராமலே தானே எதிர்காலங் காட்டுவதால், அது குறிப்புப் பெயரெச்ச விகுதியாக வராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியல் - விகுதி

## தெரிநிலை வினையெச்ச விகுதிகள்

| | |
|---|---|
| அ - உண்ண. | ஏல் - உண்டானேல். |
| ஆ - உண்ணா (உண்டு). | ஏனும் - உண்டானேனும். |
| ஆயின் - உண்டானாயின். | கடை - செய்தக்கடை. |
| ஆல் - உண்டால். | கால் - செய்தக்கால். |
| இ - ஒடி. | கு - உணற்கு. |
| இடத்து - செய்தவிடத்து. | பாக்கு - உண்பாக்கு. |
| இய - உண்ணிய (உண்ண). | பான் - உண்பான் (உண்பதற்கு) |
| இயர் - உண்ணியர் (உண்ணுதற்கு). | பு - உண்குபு (உண்டு). |
| இன் - உண்ணின். | மல் - உண்ணாமல். |
| உ - நடந்து. | மை - உண்ணாமை. |
| உம் - கண்டாலும். | மே - உண்ணாமே. |
| ஊ - உண்ணூ | ய் - போய். |
| என - உண்டென. | வான் - வருவான் (வரும்படி) |
| எனின் - உண்டானெனின். | வழி - செய்தவழி. |

## குறிப்புவினையெச்ச விகுதிகள்.

| | |
|---|---|
| அ - மெல்ல. | து - அல்லது. |
| ஆல் - அல்லால். | றி - அன்றி. |
| இடத்து - அல்லாவிடத்து. | மல் - அல்லாமல். |
| கடை - அல்லாக்கடை | வழி - அல்லாவழி. |
| கால் - அல்லாக்கால். | |

## பிறவினை விகுதிகள்

| | |
|---|---|
| வி - செய்வி. | டு - உருட்டு. |
| பி - நடப்பி. | து - நடத்து. |
| கு - போக்கு. | பு - எழுப்பு. |
| சு - பாய்ச்சு. | று - துயிற்று. |

இ, ஐ, அம் என்ற மூன்று விகுதிகளும் வினைமுதற் பொருளை யும், கருவிப்பொருளையும், செயப்படுபொருளையும் உணர்த்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைமுதற்பொருளாவது:- ஒரு தொழிலைச் செய்வது எதுவோ அது வினைமுதற்பொருள் எனப்படும்.

உ-ம். இ - சேர்ந்தார்க்கொல்லி. சேர்ந்தார்க்கொல்லி = நெருப்பு. கொல்லுதலாகிய தொழிலைத் தன்னைச் சேர்ந்தார்க்குச் செய்வது நெருப்பு ஆதலின், சேர்ந்தார்க்கொல்லி என்பது வினை முதற் பொருளாயிற்று.

ஐ - பறவை. பறக்கும் தொழிலைச் செய்வது பறவை ஆதலின், அது வினைமுதற்பொருளாயிற்று.

அம் - எச்சம் (மிச்சம்). எஞ்சி (மிஞ்சி) நிற்பது எச்சம் (மிச்சம்) ஆதலின், அது வினைமுதற்பொருளாயிற்று.

வினைமுதற்பொருள், கருத்தாப்பொருள் என்பன ஒரு பொருட் சொற்கள்.

கருவிப்பொருளாவது:- ஒரு தொழிலைச் செய்வதற்குக் கருவி யாக இருக்கும் பொருளாம்.

கருவிப்பொருளை உணர்த்தும் விகுதிகள் இ, ஐ, அம் என்பன.

உ-ம். இ - மண்வெட்டி. மண்வெட்டுதலாகிய தொழிலைச் செய்வதற்குக் கருவியாக இருத்தலின், மண்வெட்டி கருவிப்பொரு ளாயிற்று.

ஐ - பார்வை. பார்த்தற்குக் கருவியாக இருப்பது பார்வை (விழி) ஆதலின், அது கருவிப்பொருளாயிற்று.

அம் - நோக்கம். நோக்குவதற்குக் கருவியாக இருப்பது நோக்கம் (கண்) ஆதலின், அது கருவிப்பொருளாயிற்று.

செய்யப்படுபொருளாவது:-கருத்தாவால் (வினைமுதலால்) செய்யப்படும் தொழிலின் பிரயோஜனத்தைக் கொடுக்கும் பொருள்.

செயப்படுபொருளை உணர்த்தும் விகுதிகள் இ, ஐ, அம் என்பன.

உ-ம். இ - ஊருணி. ஊருணி = நன்னீர்க்குளம். ஊரார் நீர் எண்ணுதலாகிய தொழிலின் பிரயோஜனத்தைத் தன்னிடத்தே கொண்டது ஊருண்ணி ஆதலின், அது செயப்படுபொருளாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ - தொடை. தொடை = (பூவால்) தொடுக்கப்படுவது = மாலை. ஒருவன் நாரைக்கொண்டு பூவைத் தொடுக்கும் தொழிலாற் கிடைப்பது தொடை (மாலை) ஆதலின், அது செயப்படுபொரு ளாயிற்று.

அம் - தொல்காப்பியம். தொல்காப்பியமுனிவராற் செய்யப் பட்ட இலக்கண நூல் தொல்காப்பியம் எனப்பட்டது. ஆதலின் அது செயப்படுபொருளாயிற்று.

வினைமுதற்பொருளையும், கருவிப்பொருளையும், செயப்படு பொருளையும் உணர்த்தும் இ, ஐ, அம் என்ற விகுதிகள் பகுதியோடு சேர்ந்து பின்னர்க் கெடுதலுமுண்டு.

உ-ம். காயி என்ற பதம் காய் எனவரும்.
தளிரி என்ற பதம் தளிர் எனவரும்.

காயி, தளிரி என்ற பதங்களில் வினைமுதற்பொருளை உணர்த்தும் இ என்ற விகுதி புணர்ந்து கெட்டது.

ஊணை என்ற பதம் ஊண் எனவும், பூணை என்ற பதம் பூண் எனவும் வரும்.

ஊணை, பூணை என்ற பதங்களிலே புகுந்திருக்கும் செயப்படு பொருள் விகுதியாகிய ஐ என்றது கெட்டு ஊண், பூண் எனலாயின.

நோக்கம் என்ற பதம் நோக்கு எனவரும்.

நோக்கம் என்ற பதத்திலே செயப்படுபொருளை உணர்த்தும் விகுதியாகிய அம் என்றது கெட்டு நோக்கு என நின்றது.

### துணிவுப்பொருளை உணர்த்தும் விகுதிகள்.

விடு - செய்து விட்டான். செய்தது நிச்சயம் என்றதை விடு என்ற விகுதி காட்டுகின்றது.

ஒழி - செய்தொழிந்தான். செய்தது நிச்சயம் என்றதை ஒழி என்ற விகுதி காட்டுகின்றது.

### தற்செயலுணர்த்தும் விகுதி.

தற்செயலுணர்த்தும் விகுதியாவது தான் செய்யும் தொழிலின் பிரயோஜனம் தனக்கு வருவதை உணர்த்துவதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். அடித்துக்கொண்டான். இது அடிப்பவனும் அடிபடுபவனும் ஒருவனே என்றதை உணர்த்தும்.

செயப்பாட்டு வினைப்பொருள் விகுதி

படு (கட்டுப்பட்டான்), உண் (கட்டுண்டான்) என்னும் விகுதிகள் செயப்பாட்டு வினைப்பொருளை உணர்த்தும்.

பெறு (கட்டப்பெற்றான்) என்பதனையும் செயப்பாட்டு வினைப்பொருள் விகுதியாகச் சிலர் கொள்ளுகின்றனர்.

தன்மைப்பொருள் விகுதி

மை என்ற விகுதி (ஆண்மை, பொன்மை) தன்மைப்பொருளை உணர்த்தும்.

தன்மையாவது ஒரு பொருளுக்குரிய ஸ்வபாவம்.

பகுதிப்பொருள் விகுதி

பகுதிப்பொருள் விகுதியாவது:- விகுதியாகிய தனக்கென ஒரு பொருளுமின்றிப் பகுதிக்குரிய பொருளே தனக்கும் பொருளாகக் கொண்டு வருவதாம்.

உ-ம். இரு - எழுந்திருந்தான் (= எழுந்தான்).
இடு - எழுந்திட்டேன் (= எழுந்தேன்).

உறு - சொல்லுறுகின்றேன். (சொல்லுறுகின்றேன் = சொல்லுகின்றேன்).

மேற்காட்டிய உதாரணங்களில் இரு, இடு, உறு என்ற விகுதிகள் தங்களுக்கென்று தனியே ஒரு பொருளுமின்றித் தங்கள் பகுதிகளாகிய எழு, சொல் என்றவற்றின் பொருளையே பற்றி வந்தமை காண்க.

எதிர்மறை விகுதிகள்

இல், அல், ஆ என்ற மூன்று விகுதிகளும் எதிர்மறைப் பொருளை உணர்த்துவனவாம்.

எதிர் மறைப்பொருள் = நேரே மறுக்கப்படும் பொருள். உண்டு என்ற பதத்தின் பொருளை இல்லை என்ற பதம் மறுக்கும். இல்லை என்பது உண்டு என்ற பதத்துக்கு எதிர்மறைப் பதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். இல் - நடந்திலன். அல் - உண்ணலன். ஆ - உண்ணாதான்.

இல், அல், ஆ என்ற மூன்று விகுதிகளையும் எதிர்மறை இடைநிலை என்று கொள்வதும் உண்டு.

எதிர்மறைப் பொருளில் வரும் பகுபதங்களின் பகுதிகள் எதிர்மறைப்பொருளை உணர்த்தும்போது, அப்பகுதிகளைத் தொடர்ந்து வரும் இல், அல், ஆ என்றவற்றைச் சாரியைகளாகக் கொள்ளல் வேண்டும்.

உ-ம். இல்லாதான். இந்தப் பகுபதத்தின் பகுதியாகிய இல் என்றது எதிர்மறைப் பொருளைத் தருதலால் (இல் + ஆ + த் + ஆன்), ஆ என்றதை எதிர்மறை விகுதி என்றாவது, எதிர்மறை இடைநிலை என்றாவது, கொள்ளுதல் கூடாது. சாரியை என்றே கொள்ளல் வேண்டும்.

பகுதியொடு புணர்ந்து கெடும் முன்னிலையேவலொருமை விகுதிகள்.

ஆய் என்னும் முன்னிலையேவல் ஒருமை விகுதி சிலவிடத்திற் பகுதியொடு சேர்ந்து கெடுதலும் உண்டு. கெட்டாலும் விகுதி சேர்ந்திருப்பது போலவே பொருள்ள உணர்த்தும்.

உ-ம். நடவாய் - நட. நடவாய் என்றதிலுள்ள முன்னிலை யேவல் ஒருமை விகுதியாகிய ஆய் என்பது கெட்டும் பொருள் வேறுபடாமல் நட என்று வந்தது.

பெயரெச்ச விகுதிகள்

கொன்ற களிறு = கொல் களிறு ; கொல்கின்ற களிறு = கொல்களிறு ; கொல்லும் களிறு = கொல்களிறு ; எனப் பெயரெச்ச விகுதிகள் (ற், கின்ற, உம்) கெட்டும் வரும்.

தொழிற்பெயர் விகுதிகள்

சில தொழிற்பெயர்கள் விகுதி குன்றிப் பகுதியளவாக நிற்பதும் உண்டு. இவை முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

உ-ம். அடி (அடித்தல்). அடித்தல் என்ற தொழிற்பெயரின் விகுதியாகிய தல் என்றது கெட்டு, அடி என்ற பகுதி விகாரப்படாமல் தன்னியல்பிலேயே நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற் பெயரின் விகுதி கெட்டுப் பகுதி விகாரமடைந்தால், அது முதனிலை திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.

உ-ம். கோள் (கொள்ளல்). கொள்ளல் என்றதில் (கொள் + அல்) அல் என்ற தொழிற்பெயர் விகுதி கெட்டுக் கொள் என்ற பகுதி கோள் என்று விகாரமடைந்தது.

வினைமுதற்பொருள், செயப்படுபொருள், கருவிப்பொருள் விகுதிகள் சில பகுதிகளோடு புணர்ந்து கெட்டே வரும்.

வினைமுதற்பொருள் விகுதி:- காய்ப்பது, பூப்பது என்ற பொருள்படக் காய், பூ என வரும் பகுதிகள் வினைமுதற்பொருளை உணர்த்தும் இ என்ற விகுதியோடு புணர்ந்து, காயி, பூவி என நிற்க வேண்டியிருக்கக் காய், பூ என்று விகுதி கெட்டு நிற்கும்.

செயப்படுபொருள் விகுதி:- உண்ணப்படுவது, தின்னப்படுவது என்ற பொருளில் உண், தின் என்ற பகுதிகள் செயப்படுபொருள் உணர்த்தும் ஐ என்ற விகுதியோடு புணர்ந்து உண்ணை, தின்னை என்று நிற்கவேண்டியவை, விகுதி கெட்டு, உண், தின் என்ற பகுதிகள் ஊண் தீன் என்று நிற்கின்றன.

கருவிப்பொருள் விகுதி:- நோக்குங் கருவி என்ற பொருள்பட நோக்கு என்ற பகுதி அம் என்ற கருவிப்பொருள் விகுதியோடு கூடி நோக்கம் என்றாகும். ஆனால் நோக்கம் என்றதிலுள்ள அம் விகுதி கெட்டு, நோக்கு என்று வருதலும் உண்டு.

வினையெச்ச விகுதி

"வரிந்து புனைந்த பந்து" என்பதிலுள்ள வரிந்து என்ற வினையெச்சம் விகுதி தொக்கு, வரிப்புனைபந்து என்று நிற்பதும் உண்டு.

புனைந்த பந்து புனைபந்து என்று வருதற்கு விதி முன்னர் கூறப் பட்டது. 149-வது பக்கத்தில் பெயரெச்ச விகுதிகள் என்ற தலைப் பின் கீழ்ப் பார்க்க.

முற்று விகுதி

கொள்வாருங் கள்வரும் நேர்வர் என்றதில் நேர்வர் என்பதிலுள்ள வினைமுற்று விகுதி தொக்குநேர் என நிற்பதும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே காட்டப்பட்ட உதாரணங்களிலெல்லாம் விகுதிகள் புணர்ந்து கெட்டனவாயினும் உள்ளன போலவே கொள்ளப்படும்.

இவ்வாறு பிறவிகுதிகளுள்ளும் சில கெட்டு வரும் என அறிக.

சில பெயர்ச்சொல் விகுதிகளின் விகாரம்.

(1) சிலவிடங்களில் ஆன் என்ற விகுதி ஒன் என்று திரியும்.
உ-ம். வில்லான் = வில்லோன்.

(2) ஆன் என்ற விகுதி ஆள் எனத் திரியும்.
உ-ம். பெருமான் = பெருமாள்,

(3) ஆள் என்ற விகுதி ஆன் எனத்திரியும்.
உ-ம். பெண்பெருமாள் = பெண் பெருமான்.

(4) ஆள் என்ற விகுதியிலுள்ள ஆ என்ற எழுத்து ஒ என்று திரியும். உ-ம். நல்லாள்= ந ல்லோள்.

(5) ஆர் என்ற விகுதி ஒர் எனத் திரியும்.
உ-ம். நல்லார் = நல்லோர்.

(6) ஆய் என்ற விகுதி ஒய் எனத் திரியும்.
உ-ம். நல்லாய் = நல்லோய்.

இவை போல்வன பல உண்டு. இவற்றையெல்லாம் ஆராய்ந்து கண்டுகொள்க.

விகுதிகளை விளக்கும் சூத்திரம்: -

அயச. அன் ஆன் அள் ஆள் அர் ஆர் ப ம் மார்
அ ஆ குடுதுறு என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஒமொ டும் ஊர்
கட தற ஐ ஆய் இ ம் மின் இர் ஈர்
ஈயர் கய வுமென்பவும் பிறவும்.
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே.

இதன் பதப்பொருள்:

அன் .......... என்பவும் = அன் என்ற விகுதி முதல் முப்பத் தேழாகச் சொல்லப்பட்டவைகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவும்= இவை போன்ற மற்றவைகளும்,
வினையின் விகுதி = தெரிநிலைவினைமுற்றுப் பகுபதங்களின் விகுதி களாகும்.
பெயரிலும் சில = பெயர்ப் பகுபதங்களிலும் (அவற்றுட்) சில விகுதி களாம்.

"உம் ஊர் கட தற" என்றது உம் ஏறிய க், ட், த், ற் என்ற மெய்யெழுத்துக்கள். (க் + உம்) கும், (ட் + உம்) டும், (த் + உம்) தும், (ற்+ உம்) றும் என்பனவே அவையாகும்.

முற்காலத்தில் அன் என்ற விகுதி ஆண்பாற் படர்க்கைக்கே வரும். பின்னர் அது தன்மையொருமைக்கும் வருவதாயிற்று. இதனை உணர்த்தவே அன் ஆன் என்று கூறிய பின்னரும் எல் ஏன் அல் அன் என்று அன் மறுமுறையும் கூறப்பட்டது.

இடைநிலை

இடைநிலையாவது பகுபதங்களின் நடுவில் (இடையில்) நிற்பதாம்.

பகுபதங்களின் முதலில் நிற்பது முதனிலை (பகுதி) எனவும், இறுதியில நிற்பது இறுதிநிலை (விகுதி) எனவும், இடையில நிற்பது இடைநிலை எனவும் கொள்ளப்படும்.

இந்த இடைநிலை காலங்காட்டா இடைநிலை எனவும், காலங்காட்டும் இடைநிலை எனவும் இருவகைப்படும்.

காலங்காட்டா இடைநிலை பெயர்ப் பகுபதங்களில் வரும். காலங்காட்டும் இடைநிலை தெரிநிலை வினைச்சொற்களில வரும்.

காலங்காட்டா இடைநிலை

பெயர்ப் பகுபதத்திலும், குறிப்புவினைப் பகுபதத்திலும், பகுதி விகுதிகளைக் குறிப்பாக வேறுபிரித்துப் பார்க்கும் பொழுது, அவற்றிற்கு இடையில் நிற்பனவற்றை ஏற்குமாறு காலங்காட்டா இடைநிலைகளாகக் கொள்க.

உ-ம். ஓதுவான். (ஓது+ வ் + ஆன்). வ் என்றது இடைநிலை.

அறிஞன் (அறி + ஞ் + அன்). ஞ் என்பது இடைநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைச்சி (வலை + ச் + ச் + இ). விகுதியாகிய இ என்றதற்கு முன்னுள்ள ச் என்பது இடைநிலை.

வண்ணாத்தி (வண் + ண் + ஆ + த் + த் + இ). முதல் த் என்றது இடைநிலை.

இங்கே காட்டிய உதாரணங்களையே பெயர்ப் பகுபதங்களாகவும், குறிப்பு வினைமுற்றுப் பகுபதங்களாகவும் கொள்க.

குறிப்பு வினைமுற்று குறிப்பாகக் காலங்காட்டினாலும், அக்காலம் இடைநிலையாற் காட்டப்பட்டதென்று கொள்ளற்க.

காலங்காட்டா இடைநிலை பெயரிடைநிலை என்றும் கூறப்படும்.

பெயரிடைநிலையை அறிந்து கொள்ளும் வழி

அறிஞர்களால் உண்டாக்கப்பட்ட இலக்கியங்களிலே அமைந்திருக்கும் அமைதியே இலக்கணம் எனப்படும். ஆதலின் சான்றோர் செய்துள்ள இலக்கியங்களில் வந்துள்ள சொற்களில் பகுதி, விகுதி போக, நடுவிலே நிற்பதை இடைநிலையாகக் கொள்க.

வினையாலணையும் பெயர்க்கு இடையில் உள்ளனவற்றைப் பெயர் இடைநிலையாகக் கொள்ளுதல் கூடாது.

இதற்குச் சூத்திரம்: -

அயச இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே.

இதன் பதப்பொருள்:

இலக்கியம் கண்டு = (அறிஞர்களால் உண்டாக்கப்பட்ட) இலக்கியத்தைப் பார்த்து,
அதற்கு = அவ்விலக்கியத்திற்கு
இலக்கணம் = (அவ்விலக்கியத்தின் அமைதியே) இலக்கணமாக,
இயம்பலின் = சொல்லவேண்டுவதால்,
பகுதி விகுதி பகுத்து = பகுபதங்களின் முதலிலேயுள்ள பகுதியையும், இறுதியிலுள்ள விகுதியையும், பிரித்து,
இடைநின்றதை = நடுவிலே நின்றதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைப்பெயர் அல்பெயர்க்கு = வினையாலணையும் பெயரல்லாத ஏனைய பெயர்களுக்கு
இடைநிலை எனல்= (பெயர்) இடைநிலை என்று சொல்லுக.

காலங்காட்டும் இடைநிலை என்ற வினையிடைநிலை.

வினையிடை நிலையானது இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை என மூன்று வகைப்படும்.

இறந்தகால இடைநிலை

இறந்தகால இடைநிலையாவது நடந்த (சென்ற) காலத்தைக் காட்டக் கூடியதாம்.

த், ட், ற், இன் என்ற நான்கும் இறந்தகால இடைநிலைகளாம்.

த் என்ற இடைநிலை குற்றியலுகரங்களை ஈற்றிலேயுள்ள பகுதிக் குப் பின்னர் இடைநிலையாக வராது. குற்றியலுகரம் ஒழிந்த ஏனைய உயிரெழுத்துக்களையும், ய், ர், ழி என்ற மெய்யெழுத்துக் களையும், ஈற்றிலை கொண்ட பகுதிகளின் பின்னர் வரும்.

உ-ம். நடந்தான் ; எழுந்தான் ; ஆயந்தான் ; நேர்ந்தான் ; வாழ்ந்தான்.

ற், ட் என்ற இடைநிலைகள் ல், ண், என்ற மெய்யெழுத்துக் களைக்கடையிலே கொண்ட சில பகுதிகளின் பின்னர் வரும்.

உ-ம். கற்றான் (கல் + ற் + ஆன்) ; கண்டான் (கண் + ட் + ஆன்).

இன் என்ற இடைநிலை ய், ர், ழ் என்ற மெய்யெழுத்துக்கள் ஒழிந்த ஏனைய மெய்யெழுத்துக்களையும், குற்றியலுகரத்தையும், ஏனைய உயிரெழுத்துக்களையும், கடையிலே கொண்ட பகுதி களின் பின்னர் வரும்.

| | | |
|---|---|---|
| உ-ம். உரிஞினான். | நண்ணினான். | பொருநினான். |
| திருமினான். | பன்னினான். | புல்லினான். |
| வவ்வினான். | துள்ளினான். | அஃகினான். |
| ஊட்டினான். | கூவினான். | |

இன் என்ற இடைநிலைலுள்ள இ என்ற எழுத்துக் குறைந்து வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். போனான். இதைப் போ + இன் + ஆன் என்று பிரிக்கலாம். இடையிலேயுள்ள ன் என்ற இடைநிலையின் இ என்ற எழுத்துக் கெட்டும் வரும்.

எஞ்சியது. எஞ்சு + இன் + அ + து = எஞ்சினது என்று வருதல் வேண்டும். இன் என்ற இடைநிலையின் ன் என்ற எழுத்துக்கெட்டு, எஞ்சு + இ + அ + து = எஞ்சியது என்றாகியது.

ய் என்ற இடைநிலை போயது என இறந்தகாலங் காட்டும்.

மன் என்ற இடைநிலை என்மனார் என இறந்தகாலங் காட்டும். என்மனார் = என்று சொன்னார்.

இசின் என்ற இடைநிலை என் றிசினோர் (என்று சொன்னார்) என இறந்தகாலங் காட்டும்.

இறந்தகால இடைநிலைக்குச் சூத்திரம்: -

**வுயகூ. தடறவொற் றின்னே ஐம்பான் மூவிடத்**
**திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.**

இதன் பதப்பொருள்: -

தடற ஒற்று = த், ட், ற் என்ற மெய்யெழுத்துக்களும்,
இன் = இன் என்றதும்,
ஐம்பான் மூவிடத்து = ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பாலாகிய ஐந்து பால்களிலும் தன்மை, முன்னிலை, படர்க்கையாகிய மூவிடத்தும்
இறந்தகாலம் தரும் = சென்ற காலத்தைக் காட்டும்.
தொழில் = வினைப்பகுபதங்களினுடைய
இடைநிலை = இடைநிலைகளாம்.

நிகழ்கால இடைநிலை

நிகழ்கால இடைநிலை யாவது நடக்கின்ற காலத்தைக் காட்டும் இடைநிலையாம்.

ஆநின்று, கின்று, கிறு என்ற மூன்றும் நிகழ்கால இடைநிலை களாம்.

உ-ம். நடவாநின்றான் ; நடக்கின்றான் ; நடக்கிறான்.

இதற்குச் சூத்திரம்: -

அயகூ ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பதப்பொருள்: -
ஆநின்று கின்று கிறு = ஆநின்று, கின்று, கிறு என்ற மூன்றும்
ஐம்பால் மூ இடத்தின் = (ஆண்பால் முதலிய) ஐந்து பால்களிலும் (தன்மை முதலிய) மூன்று இடங்களிலும்,
நிகழ்பொழுது அறை= நிகழ்காலத்தைக் காட்டும்
இடைநிலை= இடைநிலைகளாம்.

எதிர்கால இடைநிலை.

எதிர்கால இடைநிலை இனி நடக்கவிருக்கும் காலத்தைக் காட்டும் இடைநிலையாம்.

எதிர்காலத்தைக் காட்டும் இடைநிலைகள் ப், வ் என்ற மெய் யெழுத்துக்களாம்.

உ-ம். நடப்பான். (நட + ப் + ப் + ஆன்).
வருவான். (வா + வ் + ஆன்)

ம் என்ற இடைநிலை சிறுபான்மை எதிர்காலங்காட்டும்.

பகுதியாயினும், விகுதியாயினும் காலங்காட்டுமேல் இவ் விடைநிலைகள் வாரா.

இதற்குச் சூத்திரம்: -

**௩௰௭. பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு**
**திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில.**

இதன் பதப்பொருள்:
பவ்வ = ப் என்ற மெய்யெழுத்தும், வ் என்ற மெய்யெழுத்தும், மூ இடத்து ஐம்பால் = மூன்றிடங்களிலும், ஐம்பால்களிலும்,
எதிர்பொழுது = எதிர்காலத்தை
இசை= காட்டுகின்ற
வினை இடைநிலை ஆம் = வினைப்பகுபதங்களின் இடைநிலை களாம்.
இவை = இந்த மூன்று கால இடைநிலைகளும்
சில இல= சில வினைப் பகுபதங்களுக்கு இல்லை.

காலங்காட்டும் இடைநிலை

மேலே கூறிய இடைநிலைகள் காலங்களைக் காட்டுவதே யல்லாமலும் விகுதிகளும், வேறு இடைநிலைகளும், விகாரப்பட்ட பகுதிகளும் காலங்களைக் காட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகுதிகள் நின்று காலங்காட்டும் பகுபதங்களுக்கு இடை நிலைகள் வருவதில்லை.

விகுதிகள் காலங்காட்டுவதைப் பின்வருமாறு காண்க.

| விகுதி கள் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| று | சென்று (சென்றேன்) | ............. | சேறு (செல்வேன்). |
| றும் | சென்றும் (சென்றேம்) | ............. | சேறும் (செல்வேம்). |
| து | வந்து (வந்தேன்) | ............. | வருது (வருவேன்). |
| தும் | வந்தும் (வந்தேம்) | ............. | வருதும் (வருவேம்). |
| டு | உண்டு (உண்டேன்) | ............. | ............. |
| டும் | உண்டும் (உண்டேம்) | ............. | ............. |
| கு | ............. | ............. | உண்கு (உண்பேன்). |
| கும் | ............. | ............. | உண்கும் (உண்பேம்) |
| மின் | ............. | ............. | உண்மின். |
| இர் | ............. | ............. | வருகுதிர் (வருவீராக). |
| ஈர் | ............. | ............. | உண்ணீர் |
| இ | ............. | ............. | சேறி (செவ்வாய்) |
| ஆய் | ............. | ............. | உண்ணாய் |
| க | ............. | ............. | உண்க. |
| இய | ............. | ............. | உண்ணிய (உண்க). |
| இயர் | ............. | ............. | உண்ணியர் (உண்க) |
| மார் | ............. | ............. | உண்மார் (உண்பார்) |
| ப | ............. | ............. | என்ப (என்பர்) |
| உம் | ............. | உண்ணும் (உண்கிறான்) | உண்ணும் உண்பான்) |
| ஆ | உண்ணா | உண்ணா | உண்ணா |
| இ | ............. | வருதி (வருகின்றாய்) | வருதி (வருவாய்) |

காலங்காட்டும் வேறு இடைநிலைகள்

ய் என்ற மெய்யெழுத்து இறந்தகாலத்தில் வரும்.

உ-ம். போயது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிடந்து, ஆவிருந்து என்னும் இடைநிலைகள் நிகழ் காலத்தில் வரும். உ-ம். உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான்.

க் என்ற மெய்யெழுத்து எதிர்கால இடைநிலையாக வரும். உ-ம். செய்கேன்.

இசின் என்ற இடைநிலை இறந்தகாலத்தில் வரும். உ-ம். என்றிசினோர்.

ம் என்ற மெய்யெழுத்தும், மன் என்றதும், எதிர்கால இடை நிலைகளாக வரும். உ-ம். போன்ம்(போலும்); என்மனார் (என்பர்).

விகாரப்பட்டுக் காலங்காட்டும் பகுதிகள்

சில பகுதிகள் தம் ஒற்று இரட்டித்து இறந்தகாலத்தில் வரும். உ-ம். புகு - புக்கான்; தொகு - தொக்கான்; போடு - போட்டான்; விடு - விட்டான்; உறு - உற்றான்; பெறு - பெற்றான்.

இன்னும் காலங்காட்டும் இடைநிலைகளையும், விகுதிகளை யும் பகுதிகளையும், பகுபதங்களில் வரும் போது உணர்ந்து கொள்க.

இவற்றிற்குச் சூத்திரம்:-

**அகூஅ.** றவ்வொ டுகர வம்மைநிகழ் பல்லவுந்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோ ளிம்மா றெதிர்வும் பாந்தஞ்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

இதன் பதப்பொருள்:-

றவ்வொடு உகர உம்மை = ற் என்ற மெய்யெழுத்தோடு கூடிய உ என்ற எழுத்தும் (ற் + உ = று), உம் என்றதும் (ற் + உம் = றும்),

நிகழ்பு அல்லவும் = நிகழ்காலம் ஒழிந்த இறந்தகால எதிர்காலங் களையும்,

தவ்வொடு (உகரஉம்மை) = த் என்ற மெய்யெழுத்தோடு கூடிய உ என்ற எழுத்தும் (த் + உ = து), உம் என்றதும் (த் = உம் = தும்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பும் எதிர்வும் = இறந்தகால எதிர்காலங்களையும்,
டவ்வொடு (உகர உம்மை) = ட் என்ற மெய்யெழுத்தோடு கூடிய உ என்ற எழுத்தும் (ட் + உ = டு), உம் என்றதும் (ட் + ம் = டும்),
கழிவும் = இறந்தகாலத்தையும்,
கவ்வொடு (உகர உம்மை) = க் என்ற மெய்யெழுத்தோடு கூடிய உ என்ற எழுத்தும் (க்+ உ = கு), உம் என்றதும் (க் + உ-ம் = கும்),
எதிர்வும் = எதிர்காலத்தையும்,
மின் = மின் என்ற விகுதியும்,
ஏவல் = மற்றைய ஏவல் விகுதிகளும்,
வியங்கோள் = வியங்கோள் விகுதியும்,
இ மார் = இ என்றதும், மார் என்றதும் ஆகிய விகுதிகளும்
எதிர்வும் = எதிர்காலத்தையும்,
ப அந்தம் = ப என்ற விகுதி,
செலவொடு வரவும் = இறந்த காலத்தையும், எதிர்காலத்தையும்
செய்யும் = செய்யும் என்னும் வாய்பாட்டு முற்று விகுதி
நிகழ்பு எதிர்வும் = நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும்
எதிர்மறை = எதிர்மறையில் வரும் ஆ என்ற விகுதி
மும்மையும் = இறந்தகால நிகழ்கால எதிர்காலங்களையும்
ஏற்கும் = ஏற்றுவரும்,
ஈங்கே = மேற்கூறிய அ ய எ-ம் சூத்திரத்தில் (156-வது பக்கத்தில்) "சிலவில" என்ற வைகளுள். (கஅ)

---

இதுகாறும் தமிழ்ச்சொற்களுக்குரிய உறுப்பிலக்கணங்களைக் கூறினாம்.

இனி வடசொற்கள் தமிழில் வந்து பயிலும் விதத்தைக் கூறவாம்.

வடசொல், வடமொழி, ஆரியம், ஸம்ஸ்க்ருதம் என்பன ஒரு பொருட் சொற்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழியாக்கம்

வடமொழி ஆக்கம் என்பது வடமொழியைத் தமிழ் நடைக்குப் பொருந்துமாறு ஆக்கிக்கொள்ளுதல்.

அஃதாவது தமிழ் நடைக்கும், தமிழ் எழுத்துக்களுக்கும் ஒவ்வாத நடையும் எழுத்துமுள்ள வடமொழிப் பதங்களை ஒவ்வுமாறு ஆக்கிக்கொள்ளுதல்.

ஒவ்வுமாறு ஆக்குதலாவது தமிழ் நடை பெறுவித்தும், தமிழ் எழுத்தாக விகாரப்படுத்தியும், வடமொழிப்பதங்களைத் தமிழில் அமைத்தல்.

ஒவ்வாத எழுத்துக்களாவன தமிழில் இல்லாதனவும், வடமொழியில் உள்ளனவும் ஆகிய எழுத்துக்கள்.

ஒவ்வாத நடையாவது தமிழிலும் வடமொழியிலும் உள்ள எழுத்துக்களோடு அமைந்த பதங்களாக இருப்பினும், அப்பதங்களில் மொழிக்கு முதலிலும், இடையிலும், கடையிலும் வரக்கூடாத எழுத்துக்கள் அமையப் பெறுதல்.

தமிழ், ஸம்ஸ்க்ருதம் என்னும் மொழிகளில் (பாஷைகளில்) உள்ள எழுத்துக்கள் பொது எழுத்து, சிறப்பு எழுத்து என இரு வகைப்படும்.

பொது, சிறப்பு எழுத்துக்களின் விளக்கம்.

பொது எழுத்துக்களாவன தமிழ், ஸம்ஸ்க்ருதம் என்னும் இரண்டு பாஷைகளிலும் உள்ள எழுத்துக்கள்.

உ-ம். அ, ஆ ; இ, ஈ இவை தமிழ் ஸம்ஸ்க்ருதம் என்ற இரண்டு பாஷைகளிலும் அமைந்த எழுத்துக்ள் ; ஆதலால் பொது வெழுத்துக்களாம்.

சிறப்பெழுத்துகளாவன:- ஸம்ஸ்க்ருத பாஷையில் இராத சில எழுத்துக்கள் தமிழ்பாஷையிலும், தமிழ்ப் பாஷையில் இராத சில எழுத்துக்கள் ஸம்ஸ்க்ருத பாஷையிலும் இருக்கின்றன. அவை அவ்வப்பாஷைகளுக்கு உரிய சிறப்பெழுத்துக்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவியல் - வடமொழியாக்கம்

தமிழ் மொழியின் சிறப்பெழுத்துக்களையும் பொதுவெழுத்துக்களையும் கூறும் சூத்திரம்: -

**அயகூ றனழள ஒவ்வு முயிர்மெய்யு முயிரளபல்லாச் சார்பும் தமிழ் பிற பொதுவே.**

இதன் பொருள்: -

றனழள ஒவ்வும் = (முதலும், சார்பும் ஆகிய நாற்பதெழுத்துக்களில்) றகர, னகர, ழகர, எகர, ஒகரங்களாகிய இவ்வைந்து முதலெழுத்துக்களும்,

உயிர்மெய்யும் உயிரளபும் அல்லா சார்பும் = உயிர்மெய்யும் உயிரளபெடையும் அல்லாத (முற்றாய்தமும், ஒற்றளபெடையும், இ, உ, ஐ, ஔ, ம என்னும் குறுக்கங்களும், ஆய்தக்குறுக்கமும் ஆகிய எட்டுச்) சார்பெழுத்துக்களும்,

தமிழ் = தமிழ்மொழிக்குரிய சிறப்பெழுத்துக்களாம்.

பிற பொது = ஏனைய எழுத்துக்கள் வடமொழி தமிழ் மொழிகளுக்குப் பொதுவெழுத்துக்களாம்.

ஸம்ஸ்க்ருத பதங்கள் தமிழில் வந்து வழங்கும் போது, தத்பவம், தத்சமம் என்று பிரிவுபடும்.

தத்பவம் என்பது பொதுவெழுத்துக்களாலாகிய ஸம்ஸ்க்ருத பதங்கள் தமிழில் வருவதாம். உ-ம். அமலம், கமலம்,

தத்சமம் என்பது ஸம்ஸ்க்ருதத்திற்குரிய சிறப்பெழுத்துக்களாகிய பதங்கள் தமிழுக்குரிய சிறப்பெழுத்துக்களாக விகாரப்பட்டுத் தமிழில் வழங்குதலாம். உ-ம். ஸுகி = சுகி, ஹரி = அரி.

தத்பவம் = உள்ளபடி இருத்தல்.

தத்ஸமம் = உள்ளபடி இருக்கும் பதத்துக்கு ஈடாக வரும் பதம்.

ஸம்ஸ்க்ருதச் சிறப்பெழுத்துக்கள் தமிழில் விகாரப்படும் வகை.

பக்கம் 19 - இல் உள்ள ஸம்ஸ்க்ருத - தமிழ் = இங்க்ளிஷ் அக்ஷரப் படத்தை இங்கு திரும்பவும் பார்க்க.

உயிரெழுத்தில் ஆறு சிறப்பெழுத்தையும், மெய்யெழுத்தில் இருபத்திரண்டு சிறப்பெழுத்தையும் கொண்ட வடமொழிப் பதங்கள் ஏற்றபடி திரிந்து தமிழில் வழங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உர் என்ற உயிர் இகரமாகவும், இரு ஆகவும், திரியும்.
உ-ம். உர்ஷப$^4$: = இடபம். வுர்த்த: = விருத்தம்.

ஐந்து வர்க்கத்திலும் நடுவில் மும்மூன்று எழுத்துக்கள் அவ்வவ் வர்க்கத்தின் முதலெழுத்தாகத் திரியும்.

க$^2$, க$^3$, க$^4$ என்ற உயிர்மெய்யெழுத்துக்கள் க என்று திரியும்.
உ-ம். நக$^2$: = நகம். நா க$^3$: = நாகம், மே க$^4$: = மேகம்.

ச$^2$, ச$^3$, ச$^4$ என்ற உயிர்மெய்யெழுத்துக்கள் ச என்று திரியும்.
உ-ம். ச$^2$வி = சவி (ஒளி), விச$^3$யம் = விசயம். ச$^2$டிதி = சடிதி.

ட$^2$, ட$^3$, ட$^4$ என்ற உயிர்மெய்யெழுத்துக்கள் ட என்று திரியும்.
உ-ம். பீட$^2$ம் = பீடம். ச$^3$ட$^3$ம் = சடம். கூ$^3$ட$^4$ம் = கூடம்.

த$^2$, த$^3$, த$^4$ என்ற உயிர்மெய்யெழுத்துக்கள் த என்று திரியும்.
உ-ம். ஸ்த$^2$லம் = தலம். தி$^3$நம் = தினம். த$^4$ரா = தரை.

ப$^2$, ப$^3$, ப$^4$ என்ற உயிர்மெய்யெழுத்துக்கள் ப என்று திரியும்.
உ-ம். ப$^2$லம் = பலம். ப$^3$லம் = பலம். ப$^4$ாவ: = பாவம்.

ச என்ற உயிர்மெய்யெழுத்து சகரமாகத் திரிதலேயன்றி, யகரமாகவும் திரியும்.
உ-ம். ச$^3$மதக்$^3$நி: = யமதக்கினி. பங்கச$^3$ம் = பங்கயம்.

ய (பக்கம் 21) என்ற உயிர்மெய்யெழுத்து மொழிக்கு முதலிலும், இறுதியிலும் ச என்றும், இடையிலே ய என்றும் திரியும். உ-ம். யங்கரன் = சங்கரன் (மொழிமுதல்); பாஸ: = பாசம் (மொழி யிறுதி); தே$^3$ய: = தேயம் (மொழி யிடை)

ஷ என்ற உயிர்மெய்யெழுத்து மொழிக்கு முதலில் ச என்றும், இடையிலும் இறுதியிலும் ட என்றும், திரியும்.

உ-ம். ஷண்முகம் = சண்முகம் (மொழிமுதல்); விஷயம் = விடயம் (மொழியிடை); பாஷை = பாடை (மொழியிறுதி)

ஸ என்ற உயிர்மெய்யெழுத்து மொழிக்கு முதலில் ச என்றும், இடையில் ச என்றும், த என்றும் திரியும்.

உ-ம். ஸப$^4$ா = சபை (மொழிமுதல்); வாஸ: = வாசம் (மொழி யிடை); மாஸ: = மாதம் (மொழியி றுதி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹ என்ற உயிர்மெய்யெழுத்து மொழி முதலில் தான் ஏறியிருந்த உயிராகவும், இடையில் க ஆகவும், திரியும்.

உ-ம். மொழி முதலில் : ஹரி : = அரி ; ஹிமம் = இமம் ; ஹேமம்= எமம். மொழியிடையில் : மோஹம்= மோகம்.

க்ஷ (க்ஷ) என்ற உயிர்மெய்யெழுத்து இரண்டாகத் திரியும். உ-ம். பக்ஷ = பக்கம்.

வடமொழிப் பதங்களின் கடையிலுள்ள ஆ என்ற எழத்து ஐ என்றாகும். உ-ம். மாலா = மாலை.

வடமொழிப் பதங்களின் கடையிலுள்ள ஈ என்ற எழுத்து இ எனத் திரியும். உ-ம். புரீ = புரி.

வடவெழுத்துக்கள் மேலே கூறியவாறன்றிப் பிறவாறும் தமிழ்ல் விகாரப்படும். க்ஷ வின் திரிபுகள்:-

க்ஷ = க. உ-ம். க்ஷணம்= கணம் (ஒரு ககரமாகத் திரிந்தது)
க்ஷ= ட்ச. உ-ம். மீனாக்ஷி = மீனாட்சி (டகர சகரமாயின)
க்ஷ= ச்ச.உ-ம். பிக்ஷா = பிச்சை (இரு சகரமாகத் திரிந்தது)
க்ஷ = ச. உ-ம். க்ஷேமம்= சேமம் (ஒரு சகரமாகத் திரிந்தது)

இவற்றிற்குச் சூத்திரம்:-

௬௰ ஏழாமுயி ரிய்யு மிருவு மைவருக்கத்
திடையின் மூன்று மவ்வம் முதலும்
எட்டே யவ்வு முப்பது சயவும்
மேலொன்று சடவு மிரண்டு சதவும்
மூன்றே யகவு மைந்திரு கவ்வும்
ஆவீ றையும் ஈயீ றிகரமும்.

இதன் பொருள்:-

ஏழாம் உயிர = ஏழாம் உயிராகிய உர் (பக்கம் 19) என்பது,
இய்யும் இருவும்= இகரமாகவும், இருவாகவும்.
ஐ வருக்கத்து = (க, ச, ட, த, ப என்னும் எழுத்துக்களை முதலிலே கொண்ட) ஐந்து வர்க்கங்களிலும்,
இடையில் மூன்றும் = (க², க³, க⁴ ) என்பன போல இடையிலுள்ள மும்மூன்று எழுத்துக்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வவ் முதலும் = அந்த அந்த வர்க்கத்தின் முதலெழுத்துக் களாகவும்,
எட்டு= எட்டாவது மெய்யாகிய ச்[3] என்றது,
யவ்வும்= (ச் என்று திரிதலேயன்றி) ய் என்றும்,
முப்பது சயவும் = முப்பதாம் மெய்யெழுத்தாகிய ஸ் என்ற மெய் யெழுத்து மொழி முதலிறுதிகளில் ச் என்றும், மொழியிடையில் ச் என்றும், ய் என்றும்,
மேல் ஒன்று சடவும் = முப்பத்தொன்றாம் மெய்யெழுத்தாகிய ஷ் என்றது மொழிக்கு முதலில் ச் ஆகவும், இடைகடைகளில் ட் ஆகவும்,
இரண்டு சதவும் = முப்பத்திரண்டாம் மெய்யெழுத்தாகிய ஸ் என்றது மொழிக்குமுதலில் ச் ஆகவும், இடையில் ச் அல்லது த் ஆகவும்,
மூன்று அகவும் = முப்பத்துமூன்றாம் மெய்யெழுத்தாகிய ஹ் என்றது மொழிக்கு முதலில் தன் மேலேறிய உயிரெழுத்துக்களா கவும், இடையில் க் ஆகவும்,
ஐந்து இரு கவ்வும் = முப்பத்தைந்தாம் மெய்யெழுத்தாகிய க்ஷ என்றது இரண்டு ககரமாகவும்,
ஆ ஈறு ஐயும் = (பொது எழுத்துக்களிலே) மொழிக்குக்கடையில் உள்ள ஆ என்ற எழுத்து ஐ என்றும்,
ஈ ஈறு இகரமும் = ஈ என்ற இறுதி இ என்றும் (திரியும்).

வடமொழிப் பதங்களிற் சில தமிழில் வரும் விதம்

ரகரத்தை முதலெழுத்தாகக் கொண்ட பதங்கள் அ, இ, உ என்னும் மூன்றெழுத்தில் ஒன்றை முதலிற் பெற்றுவரும்.

உ-ம். ரங்கம் சபை = அரங்கம். (அகரம் முதலில் வந்தது).
ராமன் = இராமன். (இகரம் முதலில் வந்தது).
ரோமம் = உரோமம். (உகரம் முதலில் வந்தது).

லகரத்தை முதலெழுத்தாகக் கொண்ட பதங்கள் இ, உ என்னும் இரண்டெத்தில் ஒன்றை முதலிற் பெற்றுவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். லாபம் = இலாபம். (இகரம் முதலில் வந்தது).
லோபம் = உலோபம். (உகரம் முதலில் வந்தது).

யகரத்தை முதலெழுத்தாகக் கொண்ட பதங்கள் இ என்ற எழுத்தை முதலிற் பெற்றுவரும். உ-ம். யக்ஷ: = இயக்கன்.

இவற்றிற்குச் சூத்திரம்: -

சூ௰க ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே.

இதன் பதப்பொருள்: -

ரவ்விற்கு = ஸம்ஸ்க்ருத பதங்களின் மொழி முதலில் வரும் ரகரத்திற்கு அ முதல் ஆம் முக்குறிலும் = அ, இ, உ என்ற மூன்று குற்றெழுத்தில் ஒன்றும்,
லவ்விற்கு இ முதல் இரண்டும் = லகரத்தை முதலிலே கொண்ட மொழிக்கு இ, உ என்ற இரண்டெழுத்தில் ஒன்றும்,
யவ்விற்கு இய்யும் = யகரத்தை முதலிலே கொண்ட மொழிக்கு இகரமும்,
மொழி முதல் ஆகி = மொழிக்கு முதலாகி,
முதல் வரும் = ர, ல, ய என்ற மூன்றெழுத்துக்களும் முன்வரும்.

சில வடமொழிக் கூட்டெழுத்துக்கள் தமிழில் வருமாறு.

“காவ்யம்” என்ற சொல்லிலுள்ள “வ்ய” என்ற இரண்டு எழுத்துக்களும் சேர்ந்து வடமொழியில் ஒரு கூட்டெழுத்தாக எழுதப்படும். இம்மாதிரி வேறு பல கூட்டெழுத்துக்கள் வட மொழியில் உண்டு.

இக்கூட்டெழுத்துக்கள் தமிழில் வந்து விகாரமடைவதற்கு உதாரணம்.: -

காவ்யம் = காவியம். வக்ரம் = வக்கிரம். சுக்லம் = சுக்கிலம்.

வ்ய, க்ர, க்ல என்ற கூட்டெழுத்துக்களில் அவ்வவற்றின் இரண்டாம் எழுத்துக்களாயிருக்கும் ய, ர, ல என்பவற்றோடு இகரம் சேர்க்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மம் (கூட்டெழுத்து) = பதுமம். பக்வம் (கூட்டெழுத்து) = பக்குவம். த்ம, க்வ, என்ற கூட்டெழுத்துக்களில் ம, வ, என்ற எழுத்துக்களுடன் உகரம் சேர்க்கப்பட்டது.

ரத்நம் (கூட்டெழுத்து) = அரதனம். த்ந என்ற கூட்டெழுத்தில் ந என்றதிற்கு முன்னுள்ள த் என்றதற்கு முன் அ என்றது கூட்டப்பட்டது. அரதனம் = இரத்தினம்.

அர்த்தம் (கூட்டெழுத்து) = அருத்தம். ர்த் என்னும் கூட்டெழுத்தில் ர் என்ற எழுத்தோடு உகரம் சேர்க்கப்பட்டது.

இவற்றிற்குச் சூத்திரம்: -

**கூயஉ. இணைந்தியல் காலை யரலக் கிகரமும்**
**மவ்வக் குகரமும் நகரக் ககரமும்**
**மிசைவரும் ரவ்வழி உவ்வு மாம்பிற.**

இதன் பதப்பொருள்: -

இணைந்து இயல் காலை = ஸம்ஸ்ருத மொழியுள் (இரண்டெழுத் துக்கள்) சேர்ந்து (ஓரெழுத்துப்போல) நடக்குமிடத்து,
யரலக்கு இகரமும் = பின்னின்ற யகர, ரகர, லகரங்கட்கு இகரமும்,
மவ்வக்கு உகரமும் = மகர வகரங்கட்கு உகரமும்,
நகரக்கு அகரமும் = நகரத்திற்கு அகரமும்,
மிசை வரும் = முன்னேவரும்.
ரவ்வழி உவ்வும் ஆம் = இணைந்து முன்னின்ற ரகரத்தின்பின் உகரமும் வரும்.

எழுத்ததிகாரத்தின் இரண்டாவது பகுதியாகிய பதவியல் முற்றிற்று.

---

## புணரியல்

இதுகாறும் எழுத்திலக்கணத்தையும் பதங்களின் உறுப்புக் காளகிய முதனிலை (பகுதி), இறுதிநிலை (விகுதி), இடை நிலை களின் அமைதிகளையும் விளக்கினாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புணரியல்

இனி, பதங்கள் ஒன்றோடொன்று புணரும்பொழுது அவற்றின் ஈற்றெழுத்து முதலெழுத்துக்களின் அமைதிகளைக் கூறுவாம்.

நளன், மகாராசன், சோலை, உலாவு, போது, அழகியது, ஒன்று, அன்னம், கண்டான் என்ற பதங்களுக்கு இயல்பாக ஒவ்வொரு பொருளுண்டெனிலும், இவற்றால் தொடர்பான, விஷயமொன்றும் புலப்படவில்லை. ஆனால், இப்பதங்களைக் கீழ்க்கண்டவாறு புணர்த்திக் கூறினால், ஒருவிஷயத் தொடர்பு வெளிப்படும்.

நள மகாராசன் சோலையில் உலாவும்போது அழகியதோர் அன்னத்தைக் கண்டான் என்று கூறினால், ஒரு தொடர்பான விஷயம் புலப்படும். ஆகவே, சொற்கள் ஒன்றொடு மற்றொன்று புணர்தல் பொருளின் தொடர்பு பற்றியே வருமென்க.

இவ்வாறு பதங்கள் பொருளைக் கருதிப் புணரும் புணர்ச்சியே பொருட் புணர்ச்சி என்று சொல்லப்படும்.

பொருளின் தொடர்பு கருதிப் பதங்கள் புணரும்போது, முதலில் நிற்கும் பதத்தின் இறுதி எழுத்தும் அதனை அடுத்து வரும் பதத்தின் முதலெழுத்தும் புணரும் புணர்ச்சி எழுத்துப் புணர்ச்சி எனப்படும்.

பதப்புணர்ச்சியானது பொருட்புணர்ச்சியும் எழுத்துப் புணர்ச்சியும் என இரண்டு வகைப்படும்.

பொருட் புணர்ச்சியானது வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இரண்டு வகைப்படும்.

வேற்றுமைப் புணர்ச்சிகளுக்கு உதாரணம்:- 1. கிருஷ்ணன் காப்புச் செய்தான். 2. கிருஷ்ணனைக் கந்தன் அடித்தான். 3. கிருஷ்ணனால் கந்தனடிக்கப்பட்டான். 4. கிருஷ்ணனுக்குக் கந்தன் பணங்கொடுத்தான். 5. கிருஷ்ணனின் பாவம் நீங்கிற்று. 6. கிருஷ்ணனது புத்தகம். 7. கிருஷ்ணன்கண் உள்ள நலம். 8. கிருஷ்ணா வா.

மேலே காட்டிய எட்டுவாக்கியங்களிலும் அமைந்த கிருஷ்ணன் என்ற சொல், முதல்வாக்கியத்தில் காப்பைச் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாகிய கர்த்தாப்பொருளாக வந்திருக்கின்றது. இங்ஙனம் கர்த்தாப் பொருளில் வருவது முதல் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை) எனப்படும்.

இரண்டாவது வாக்கியத்தில் கிருஷ்ணன் என்ற சொல் கந்தனால் செய்யப்பட்ட அடித்தல் என்னுந் தொழிலின் பயனைப் பெற்ற பொருளாக வந்திருக்கின்றது. இப்பொருள் செயப்படு பொருளெனக் கூறப்படும். இங்ஙனம் வரும் பொருள் இரண்டாம் வேற்றுமையாம்.

மூன்றாவது வாக்கியத்தில், கிருஷ்ணன் என்ற சொல் கந்தன் அடிபடுவதற்குக் காரணப்பொருளாக வந்திருக்கின்றது. இங்ஙனம் வரும் காரணப்பொருள் மூன்றாம் வேற்றுமை எனப்படும்.

நான்காவது வாக்கியத்தில், கிருஷ்ணன் என்ற சொல் கந்தனாற் கொடுக்கப்பட்ட பணத்தை ஏற்கும் பொருளாக வந்திருக்கின்றது. இங்ஙனம் கொடைப் பொருளில் வருவது நான்காம் வேற்றுமைக் எனப்படும்.

ஐந்தாவது வாக்கியத்தில், கிருஷ்ணன் என்ற சொல் பாவ நீக்கத்தைப் பெற்ற பொருளாக வந்திருக்கின்றது. இங்ஙனம் நீக்கப் பொருளில் வருவது ஐந்தாம் வேற்றுமை எனப்படும்.

ஆறாவது வாக்கியத்தில், கிருஷ்ணன் என்ற சொல் புத்தகத் தைத் தனக்கு உடைய பொருளாக வந்திருக்கின்றது. இங்ஙனம் உடைமைப் பொருளில் வருவது ஆறாம்வேற்றுமை எனப்படும்.

ஏழாவது வாக்கியத்தில், கிருஷ்ணன் என்ற சொல் நலம் என்பது இருத்தற்குரிய பொருளாக வந்திருக்கின்றது. இங்ஙனம் இடப் பொருளில் வருவது ஏழாம் வேற்றுமை எனப்படும்.

எட்டாவது வாக்கியத்தில், கிருஷ்ணன் என்ற சொல் கிருஷ்ணா என்று முன்னிலைப் பொருளாக வந்திருக்கின்றது. இங்ஙனம் வரு வதே விளிவேற்றுமையாம். விளித்தல் = கூப்பிடுதல். விளி வேற்றுமை படர்க்கைப் பொருளை முன்னிலையாக்கி அழைத்தல், இது எட்டாம்வேற்றுமை எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புணரியல்

இப்படி ஒரு பெயர்ச்சொல் பிற சொற்களுடன் கூடிப்பெற்ற வெவ்வேறு பொருட் சம்பந்தம் வாய்ந்திருத்தலே வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்.

மேற்கூறிய வேற்றுமைப் பொருளைக் காட்டுவதற்கு உருபுகள் உண்டு.

உருபாவது பொருளை வேற்றுமை செய்வதற்கு உரியசொல்.

முதலாம் வேற்றுமை உருபு = ஆனவன, ஆகின்றவன், ஆவான் ; இரண்டாம் வேற்றுமை உருபு - ஐ ; மூன்றாம் வேற்றுமை உருபு - ஆல், ஆன், ஒடு. ஓடு; நான்காம் வேற்றமை உருபு - கு ; ஐந்தாம் வேற்றுமை உருபு - இல், இன் ; ஆறாம் வேற்றுமை உருபு - அது, ஆது, அ ; ஏழாம் வேற்றுமை உருபு - கண் முதலியன ; எட்டாம் வேற்றுமை உருபு - ஏ, ஈ.

வேற்றுமை உருபுகளின் இலக்கணங்கள் பின்னர், சொல்லதி காரத்தில் பெயரியலில் விரித்துக் கூறப்படும்.

அல்வழிப்புணர்ச்சியானது மேலே கூறிய வேற்றுமைகள் அல்லாதபடி சொற்கள் புணரும் புணர்ச்சிகளாம். இவை தொகை நிலைத்தொடர், தொகா நிலைத்தொடர் என்று இரண்டு வகைப் படும்.

தொகை நிலைத்தொடர் ஐந்து வகைப்படும். இவை வினைத் தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்பனவாம்.

தொகா நிலைத்தொடர் ஒன்பது வகையாம். இவை எழுவாய்த் தொடர், விளித்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத் தொடர், தெரிநிலை வினைமுற்றுத்தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத் தொடர் என்பனவாம்.

இனி, தொகை நிலைத்தொடரின் முதல்வகையாகிய வினைத் தொகை: -

அழிகின்ற பிறவி, அலைந்த மனம், வரும் புனல் என்ற சொற் றொடர்கள் ஒவ்வொன்றிலும் முன்னுள்ள சொல் பெயரெச்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெயரெச்சங்கள் பகுதியளவாக நின்று அழிபிறவி அலைமனம் வருபுனல் என்று வருமொழியோடு புணர்வதும் உண்டு. அதனால் பொருளில் மாற்றம் இல்லை. பெயரெச்சத்தின் இடைநிலை முதலியவைகள் கெடப்பெற்றுப் பெயர்ச்சொல்லோடு புணர்வது வினைத்தொகை எனப்படும்.

இரண்டாவது, பண்புத்தொகை:- சிறுமையாகிய விரல், புதுமையாகிய பானை, வட்டமாகிய கல் என்ற சொற்றொடர் களிலுள்ள சிறுமை, புதுமை, வட்டம் என்னும் பண்புப்பெயர்கள், சிறுவிரல் புதுப்பானை, வட்டக்கல் என வந்து, ஆகிய என்ற பதம் தொக்கு நிற்கப் புணர்வதுமுண்டு. அப்படிப் புணரும் புணர்ச்சி பண்புத்தொகை எனப்படும்.

சாரையாகிய பாம்பு, கந்தனாகிய முருகன் என்ற தொடர்கள் ஒவ்வொன்றிலுமுள்ள இவ்விரண்டுபெயர்களும் ஒரு பொருளையே குறிக்கின்றன. சாரை பாம்பு என்ற சொற்கள் வெவ்வேறு பொருள் களைச் குறிக்கவில்லை. கந்தன் முருகன் என்ற சொற்களும் அவ் வாறே. அவை சாரைப் பாம்பு கந்த முருகன் எனவந்து, ஆகிய என்ற உருபு மறைந்து நிற்பதுமுண்டு. இவ்வாறு ஒரு பொருளைக் குறிக் கும் இருபெயர்கள் ஒன்றோடு ஒன்று (ஆகிய என்பது இல்லாமல்) ஒட்டி நிற்பது, இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்.

மூன்றாவது, உவமைத்தொகை:- அன்னம் போன்ற நடை, பிறையொத்த நுதல், மின்னலன்ன இடை, என்ற சொற்றொடர்கள் உவமைச் சொல்லாகிய போன்ற ஒத்த அன்ன என்பவை தொக்கு (மறைந்து), அன்ன நடை, பிறைநுதல், மின்னலிடை என்று நிற்பது முண்டு. இவ்வாறு உவமைவாசகம் மறைந்து நிற்கச் சொற்கள் புணருவது உவமைத்தொகை எனப்படும்.

நான்காவது, உம்மைத்தொகை:- எழுத்தும் சொல்லும் பொருளும், சூரியனும் சந்திரனும், பலாவும் மாவும் வாழையும், என்ற சொற்றொடர்கள் எழுத்துச் சொற்பொருள், சூரியசந்திரர், பலாமாவாழை என்று உம் என்னுஞ்சொல் தொக்கு வருவது, உம்மைத்தொகையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது, அன்மொழித்தொகை:- அன்னநடையையுடைய பெண், நல்வழியைக் கூறும்நூல், தேன்மொழி பேசும் மாது என்ற சொற்றொடர்கள் அன்னநடை, நல்வழி, தேன்மொழி என்று இறுதி யிலே பெண் நூல் மாது என்றும் சொற்கள் முறையே மறைந்து நிற்கவும், பழைய பொருளையே உணர்த்தும். இவ்வாறு சொற் றொடர்கள் இறுதியிலே சிலசொற்கள் தொகப்பெற்றும் முன்குறித்த பொருளைக் குறிப்பது, அன்மொழித்தொகை என்று சொல்லப் படும்.

இந்த ஐந்துவகைப் புணர்ச்சிகளும் மேலே கூறியவாறு சில சொற்கள் இடையிலாவது கடையிலாவது தொக்கு நிற்கிறபடியால், தொகைநிலைகள் என்று கூறப்படும்.

இனித், தொகாநிலைத்தொடர் விரிக்கப்படும்.

மேற்கூறிய ஐந்து தொகைநிலைத் தொடர்கள் போலச் சில எழுத்துக்களாவது சொற்களாவது தொக்கு வரப்பெறாது (மறைந்து நில்லாமல்) வருவது தொகாநிலைத்தொடராம்.

தொகாநிலைத்தொடர் ஒன்பது பிரிவுகளையுடையது. இவை எழுவாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத்தொடர், வினை யெச்சத்தொடர், தெரிநிலை வினைமுற்றுத்தொடர், குறிப்புவினை முற்றுத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் என்பனவாம்.

(1) எழுவாய்த்தொடாரவது ஒருவாக்கியத்திலுள்ள எழுவாய் பயனிலையைத் தொடர்ந்துவரும். உ-ம். பொன்னன் வந்தான்.

(2) விளித்தொடராவது அழைத்தலைச் செய்கின்ற தொடர்ச் சொல் தனது முன்னிலையில் இல்லாது வேறோரிடத்து இருப்பவ ரைத் தனக்கு எதிர்முகமாக அழைப்பதற்கு உபயோகிக்கும் சொல். உ-ம். பொன்னா வா.

(3). பெயரெச்சத் தொடராவது ஒரு பெயர்ச்சொல்லைத் தொடர்ந்து ஒரு தொழிலைச் சுட்டி நிற்கின்ற சொல்லின் எச்சம்.

உ-ம். வந்த மன்னன். இதில் மன்னன் என்ற பெயர்சொல்லைத் தொடர்ந்தும், வருதலாகிய தொழிலைச் சுட்டியும் நிற்கின்ற வந்த என்னும் எச்சச் சொல்லே பெயரெச்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த என்ற சொல் வருதலாகிய தொழிலைச் செய்த, அல்லது வருதல் என்னுந் தன்மையைப் பெற்ற, பொருளைக் குறிக்கும். இந்த இரண்டாம் அர்த்தப்படி, வந்த என்ற பதம் பெயரெச்சத்துக்குரிய அகர விகுதியைச் சேர்ந்து, மன்னன் என்ற பதத்தைத் தொடர்ந்து, நிற்பதால் பெயரெச்சமாயிற்று.

இங்ஙனமே நல்லமனுஷன், கெட்டகுதிரை என்பவற்றில் நல்ல கெட்ட என்னும் சொற்கள் பெயரெச்சமானவாறு காண்க.

(4) வினையெச்சத்தொடராவது ஒருவினைமுற்றுச் சொல் லைத் தொடர்ந்தும், ஒருதொழிலையுணர்த்தியும், வருகின்ற சொல்லின் எச்சம்.

உ-ம். நடந்து போனான். இதில், போனான் என்ற வினை முற்றுச் சொல்லைத் தொடர்ந்தும், நடத்தலாகிய தொழிலை உணர்த்தியும், நிற்கின்ற நடந்து என்ற எச்சச் சொல்லே வினை யெச்சம்.

நடந்து என்ற பதம் வினையெச்சத்துக்குரிய உகரவிகுதியைச் சேர்ந்து, போனான் என்ற வினைமுற்றுச் சொல்லைத் தொடர்ந்து, நிற்பதால் வினையெச்சமாயிற்று.

(5) தெரிநிலைவினை முற்றுத்தொடர்:- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக்காலத்தில் ஒன்றைத் தெரி வித்து நிற்கின்ற வினையின் முற்றுச்சொல்.

உ-ம். வந்தான் பொன்னன். இதில், வந்தான் என்பது இறந்தகாலத்தைக் காட்டி, வருதலாகிய தொழிலின் முடிபை உணர்த்தி நிற்றலால் தெரிநிலை வினைமுற்றாயிற்று.

(6) குறிப்புவினை முற்றுத்தொடராவது காலத்தை நேராகச் காட்டாமல், ஒரு வினையின் முடிபை உணர்த்தி நிற்குஞ் சொல்.

உ-ம். பெரியன் பொன்னன். இதில், பெரியன் (பெருமையை உடையவன்) பெருமையை அடைந்த காலத்தை வெளிப்படை யாகக் காட்டாமல், குறியினால் காட்டினமையால் குறிப்புவினை முற்றெனப்பட்டது.

(7). இடைச்சொற்றொடர் :- ஒரு பெயர்ச்சொல்லையாவது வினைச்சொல்லையாவது தொடர்ந்து இடையில் வருஞ்சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். இனி மற்றொன்று. இங்கே, மறு என்னும் இடைச்சொல் மற்று என விரிந்து, ஒன்று என்னும் பெயரைத் தொடர்ந்து வந்தது. யா கா பிற இருந்து நின்று முதலியவை இடைச்சொற்கள்.

(8) உரிச்சொற்றொடர். பெயரையாவது வினையையாவது தொடர்ந்து வரும் உரிச்சொல்.

உ-ம். நனி பேதை (மிகமடமையுள்ள ஆத்மா), தவ (மிக), நடந்தான். சால, உறு, கழி, கூர், முதலியவை உரிச்சொற்கள்.

(9) அடுக்குத்தொடர்:- முதலில் நின்ற சொல்லே பின்னரும் அடுக்கப் பெற்று வருவது. உ-ம். பாம்பு பாம்பு

எனவே, அல்வழிப் புணர்ச்சியானது ஐந்து தொகைநிலைத் தொடரையும் ஒன்பது தொகாநிலைத் தொடரையும் உடையதெனக் கண்டு கொள்க.

பதப்புணர்ச்சியின் முதற்பிரிவாகிய பொருட்புணர்ச்சியினது பாகுபாடான வேற்றுமை புணர்ச்சியும் அவ்வழிப் புணர்ச்சியும் இதுவரையிற் கூறினாம். இனி, அதன் இரண்டாம் பிரிவாகிய எழுத்துப் புணர்ச்சியைக் கூறுவாம்.

இரண்டு சொற்கள் புணரும் பொழுது, முதற்சொல்லின் கடையெழுத்து:ம் இரண்டாஞ் சொல்லின் முதலெழுத்தும் விகாரப் படாமலும், விகாரப்பட்டும், பொருந்தி நிற்பது எழுத்துப் புணரச்சியாம்.

உ-ம். பழம் + விழுந்தது = பழம்விழுந்தது. இது விகாரப்படாத புணர்ச்சி. சொல் + தொடர்பு = சொற்றொடர்பு. இது விகாரப்புணர்பு.

இவ்வாறு புணருஞ் சொற்கள் உயிர்முதல் உயிரீறாகவும் (உ-ம். அறிவு), உயிர்முதல் மெய்யீறாகவும் (உ-ம். அருள்), மெய்முதல் மெய்யீறாகவும் (உ-ம். கடன்), மெய்முதல் உயிரீறாகவும் (உ-ம். கண்ணி), நான்கு வகைப்படும்.

இவை ஒன்றோடொன்று புணரும்பொழுது முன்நிற்கும் சொல் நிலைமொழி எனவும், பின்வருஞ்சொல் வருமொழியெனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படும். உ-ம். பழம் விழுந்தது. இதில் பழம் நிலைமொழி, விழுந்தது வருமொழி.

பல சொற்கள் புணரும்பொழுது முன்னின்ற சொல்லுக்கு வருமொழியாக வந்து புணர்ந்த சொல்லே தனக்குப் பின்வரும் மொழிக்கு நிலைமொழியாக நின்று புணரும். உ-ம். காகம் எலியைக் கண்டது. இதில் எலியென்பது காகம் என்பதனுடன் வருமொழி யாகவும், கண்டது என்பதனுடன் நிலைமொழியாகவும், நின்று புணர்ந்தது.

எழுத்துப் புணர்ச்சியானது இயல்பு புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி என இரண்டு வகைப்படும்.

இயல்புப் புணர்ச்சி: கந்தன் போனான் என்பதில் நிலைமொழி இறுதியாகிய ன் என்பதும், வருமொழி முதலாகிய ப் என்பதும் ஒரு வேறுபாடுமின்றிப் புணர்ந்த புணர்ச்சி.

இவ்வாறு நிலைமொழி இறுதியெழுத்தும் வருமொழி முத லெழுத்தும் புணர்தற்குமுன் நின்றது போலவே, புணர்ந்த பின்னும் நிற்பதால், இயல்பு புணர்ச்சி யெனப்படும்.

இயல்பு புணர்ச்சி = இயற்கை மாறாமல் இருக்கப் புணரும் புணர்ச்சி.

விகாரப் புணர்ச்சி : வாழைபழம், வாழைப்பழம். வேல்கை வேற்கை. மரம் வேர், மரவேர், வாழை பழம், என்னும் சொற்கள் புணரும் போது நடுவில் ப் தோன்றினது. வேல் கை என்பன புணரும் பொழுது ல் என்பது ற் ஆகத் திரிந்தது. மரம் வேர் என்பன புணரும் போது ம் என்பது கெட்டது.

இவ்வாறு எழுத்து தோன்றியாவது திரிந்தாவது கெட்டாவது புணரும் புணர்ச்சி விகாரப்புணர்ச்சியெனப்படும்.

விகாரம் = மாற்றம். இது தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும். இம்மூன்று விகாரங்களும் சொற்களின் முதல் இடைகடையில் ஏற்றபடி வரும்.

மேலே காட்டிய உதாரணங்களில் விகாரப்புணர்ச்சி ஒவ் வொன்று வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விகாரமேயன்றி இரண்டு விகாரமும் மூன்று விகாரமும் ஒரு புணர்ச்சியில் வருதலுமுண்டு. வட்டம் இலை என்ற பதங்கள் புணரும்பொழுது நிலைமொழி இறுதியில் நின்ற மகர ஒற்றுக் கெட்டு வகர உடம்படுமெய் தோன்றி வட்டவிலை என்றாயிற்று. ம் கெட்டதும் வ் தோன்றியதுமாகிய இரண்டு விகாரங்கள் வந்தன.

பனை காய் என்ற பதங்கள் புணருமிடத்து, நிலைமொழியின் ஐகாரங்கெட்டு அம் சாரியை தோன்றி அம் என்றதின் மகரவொற்று ஙகர ஒற்றாகத் திரிந்து பனங்காய் என மூன்று விகாரங்கள் பெற்றமை காண்க.

இதுகாறும் வசனநடையில் வரும் சொற்புணர்ச்சி விகாரங்கள் கூறப்பட்டன. இனி செய்யுளில் வரும் விகாரங்கள் கூறப்படும்.

1. குறுத்தாட்பூதம் (குறுத்த கால்களையுடைய பூதம்). இங்கே குறுந்தாள் என்றது குறுத்தாள் என மாறிற்று. இது வலித்தல் விகாரமாம். மெல்லெழுத்தாகிய ந் வல்லெழுத்தாகிய த் என மாறி நிற்றல் வலித்தல் விகாரம் எனப்படும்.

2. தண்டையினினக்கிளி கடிவோள் (கூட்டமாகிய கிளிகளை தட்டையினால் துரத்துபவள்) இங்கே தட்டை என்பது தண்டை என மாறிற்று.

வல்லெழுத்து மெல்லெழுத்தாக மாறிமையால் மெலித்தல் விகாரம் எனப்படும்.

3. வீடுமின். இங்கே விடுமின் வீடுமின் என்று நீண்டது. இது நீட்டல் விகாரம்.

குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீளுதல் நீட்டல் விகாரமாம்.

4. நன்றென்றேன் தியேன். இங்கே தீயேன் தியேன் என்று குறுகினமையால், குறுக்கல் விகாரமெனப்பட்டது.

5. நெல்விளையும்மே. இங்கே விளையுமே என்ற பதம் விளையும்மே என இடையில் மகர ஒற்று விரிந்தமையால், விரித்தல் விகாரம் எனப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வரப்பெறுனவுமுள. இங்கே வரப்பெறுவனவும் உள என்பது வரப்பெறுனவுமுள என்று வகர உயிர்மெய் குறைந்து நிற்பதனால், தொகுத்தல் விகாரம் எனப்பட்டது.

உள்ள எழுத்து இல்லாமல் போவதே தொகுத்தல் விகாரம்.

இங்கே கூறிய வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல் விரித்தல் தொகுத்தல் என்னும் ஆறு விகாரங்களும் செய்யுள் விகாரங்களாம்.

செய்யுளிலே சில சொற்களின் முதலெழுத்தாவது இடை எழுத்தாவது கடையெழுத்தாவது கெட்டுவரும். இதுவும் செய்யுள் விகாரம் என்று சொல்லப்படும். உ-ம். தாமரை என்பது முதலெழுத்தாகிய தா கெட்டு மரை என்று செய்யுள் வழக்கில் வருவதும் உண்டு. ஓந்தி என்பது நடுவெழுத்தாகிய ந் கெட்டு, ஓதி என்று பாட்டில் வருவதும் உண்டு. நீலம் என்பது ஈற்றிலுள்ள அம் குறைந்து நீல் என்று செய்யுள் நடையில் வருவதும் உண்டு.

கீழ்வரும் ஏழு சூத்திரங்களில் நன்னூலார் கூயந-ம் சூத்திரத்தால் புணர்ச்சி இன்னதென்றும், கூயச.சூத்திரத்தால் வேற்றுமை அல்வழிப் புணர்ச்சிகளின் வகைகள் இன்னவென்றும், கூயரு-ம் சூத்திரத்தால் இயல்பு புணர்ச்சியின் இலக்கணம் இன்னதென்றும், கூயசா. ம். சூத்திரத்தால் விகாரப் புணர்ச்சியின் மாறுதல் இன்னதென்றும், கூயஎ ,ம் கூயஅ -சூத்திரங்களால் செய்யுளில் வரும் விகாரம் இன்னதென்றும், கூயகூ -ம் சூத்திரத்தால் செய்யுளிலும் உரைநடையிலும் வரும் ஒரு புணர்ச்சிக்கு இரண்டு மூன்று விகாரங்களும் பொருந்துமென்றும் விளக்கினார்.

கூயந. மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே.

இதன் பொருள்: -

மெய்உயிர் = மெய்யெழுத்துக்களையும் உயிர் எழுத்துக்களையும் முதல் ஈறு ஆம் = முதலும் ஈறுமாக உடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதங்களும் = பகாப்பதம், பகுபதம் என்ற இரண்டு பதங்களும்
தன்னொடும் = பகுபதத்தோடு பகுபதமும், பகாப்பதத்தோடு பகாப் பதமும்,
பிறிதொடு = பகாப்பதத்தோடு பகுபதமும், பகுபதத்தோடு பகாப்பத முமாய்,
அல்வழிப் பொருளில் = அல்வழிப் பொருளினாலாவது
வேற்றுமைப் பொருளில் = வேற்றுமைப் பொருளினாலாவது
நிலைவரு மொழிகள் = நிலைமொழியும் வருமொழியும்
இயல்பொடு விகாரத்து = இயல்பாகவாயினும் விகாரமாகவாயினும்
பொருந்துழி = பொருந்துமிடத்து
இயைவது = பொருத்தமுற வருவது
புணர்ப்பு = முன்சொல்லப்பட்ட புணர்ச்சியாம்.

சுயச. வேற்றுமை யைம்முத லாறா மல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கெனவீ ரேழே.

இதன் பொருள்: -

வேற்றுமை = வேற்றுமைப் புணர்ச்சியாவது
ஐ முதல் ஆறாம் = ஐ ஆல் கு இன் அது கண் என்றும் ஆறு உருபு களும் (இடையில் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரும் பதங்கள்) பொருந்தும் தொடர்ச்சியாம்.
அல்வழி = அல்வழிப் புணர்ச்சியாவது
தொழில் = வினைத்தொகையும்
பண்பு = பண்புத்தொகையும்
உவமை = உவமைத்தொகையும்
உம்மை = உம்மைத்தொகையும்
அன்மொழி = அன்மொழித்தொகையும்
எழுவாய் = எழுவாய்த் தொடரும்
விளி = விளித்தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரெச்சம் = பெயரெச்சத் தொடரும், வினையெச்சத் தொடரும்
ஈர்முற்று = தெரிநிலை வினைமுற்றுத் தொடரும் குறிப்புவினை முற்றுத் தொடரும்
இடை= இடைச்சொற் றொடரும்
உரி = உரிச்சொற்றொடரும்
அடுக்கு = அடுக்குத்தொடரும் என்ற
தழுவு தொடர்= ஒன்றை ஒன்று அடுத்து நிற்கும் தழுவு தொடர்கள்
ஈரேழ்= பதினான்கு வகையாம்

**சுயரு. விகார மனைத்து மேவல தியல்பே.**

இதன் பொருள்: -

விகாரம் அனைத்தும் = (வருஞ் சூத்திரங்களிற் சொல்லப்படும்) விகார வகை முழுவதையும்
மேவலது இயல்பு = மேவுதல் அல்லாதது (அடையாதது). இயல்பு புணர்ச்சியாம்.

சுயசு. தோன்ற றிரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும்

இதன் பொருள்: -

தோன்றல் = எழுத்தாவது சாரியையாவது தோன்றுதலும்,
திரிதல் = ஒரெழுத்து மற்றோரெழுத்தாக வேறுபட்டு வருதலும்,
கெடுதல் = உள்ளஎழுத்துக் கெடுதலும்,
விகாரம் = மாறுதல்களாம்.
மூன்றும்= இந்த மூன்றுவித விகாரங்களும்
மொழி = நிலைமொழி வருமொழிகளின்
மூவிடத்தும் ஆகும் = முதலிலும் நடுவிலும் கடையிலும் அவ்வவ் இடங்களுக்கு ஏற்றபடி வரும்.

**சுயஎ. வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்**
**விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி.**

இதன் பொருள்: -

வலித்தல் = மெல்லின மெய்யெழுத்தாய் நின்றதை வல்லின மெய் யெழுத் தாக்குதலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெலித்தல் = வல்லின மெய்யாய்நின்ற எழுத்தை மெல்லினமெய் யெழுத்தாக்குதலும்,
நீட்டல்= குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்குதலும்,
குறுக்கல் = நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்குதலும்,
விரித்தல்= முன் இல்லாத எழுத்தை வருவித்தலும்,
தொகுத்தல் = முன் இருந்த எழுத்தை நீக்கிவிடுதலும் ஆகிய இந்த விகாரங்கள்.
செய்யுள் வேண்டுழி = பாட்டின் அடிதொடை முதலியவற்றை நிறைக்க இன்றியமையாது வேண்டுமிடங்களில்,
வரும்= வருவனவாம்.

௬௰அ. ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே.

இதன் பொருள்:-

ஒருமொழி = ஒரு சொல்லின்
மூவழி = முதல் இடைகடை என்னும் மூன்றில் ஓரிடத்து
குறை தலும்= இருக்கவேண்டிய எழுத்து இல்லாமல் வருதலும்
அனைத்து = அந்த விதமான செய்யுள் விகாரமாம். எந்த விதமான செய்யுள் விகாரமெனில், ௬௰எ-ம் சூத்திரத்திற் கூறிய செய்யுள் வேண்டுழிவரும் விகாரம் என்றறிக. அஃதாவது அடிதொடைகளின் சந்த இன்பம் முதலியவற்றைக் கருதி இன்றியமையாத இடங்களில் வரும் விகாரங்களாம்.

௬௰௯. ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப்பெறும்.

இதன் பொருள்:-

ஒரு புணர்க்கு = ஒரு புணர்ச்சிக்கு
இரண்டு மூன்றும்= இரண்டு விகாரமும் மூன்று விகாரமும்.
உறப்பெறும் = பொருந்தி வரப்பெறும்.

இதற்குமுன் வேற்றுமைப் புணர்ச்சியைப் பற்றியும், அல்வழிப் புணர்ச்சியைப் பற்றியும், இவற்றின் வகைகளைப் பற்றியும், எழுத்துப் புணர்ச்சிக்குரிய, நிலைமொழி வருமொழிகளைப் பற்றியும், இயல்பு புணர்ச்சி விகாரப் புணர்ச்சிகளைப் பற்றியும், பொதுவாக விளக்கினாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, உயிரீற்றுப் புணர்ச்சி, மெய்யீற்றுப் புணர்ச்சி, உருபு புணர்ச்சி என்றவற்றைப் பற்றி விளக்குவாம்.

உயிரீற்றுப் புணர்ச்சியாவது நிலைமொழியின் கடையிலுள்ள உயிரெழுத்து வருமொழியோடு சேர்தலாம்.

மெய்யீற்றுப் புணர்ச்சியாவது நிலைமொழியின் இறுதியிலுள்ள மெய்யெழுத்து வருமொழி முதலோடு பொருத்தமுறச் சேர்தலாம்.

உருபு புணர்ச்சியாவது உருபுகள் முன்னும் பின்னுமுள்ள சொற்களோடு பொருட்பொருத்தமுறச் சேர்தலாம். உ-ம். பொன்னனைக் கண்டான். இங்கே ஐ உருபு தனக்கு முன் மொழியாகிய பொன்னன் என்பதையும் பின்மொழியாகிய கண்டான் என்பதையும் பொருட்பொருத்தமுறப் புணர்த்தியது. ஆதலின் இது உருபு புணர்ச்சி.

முதன்மையாகிய உயிரெழுத்தை இறுதியாகக் கொண்ட பதங்கள் புணரும் விதியை உயிரீற்றுப் புணரியலாகவும், இந்த உயிருக்கு உடலென்று சொல்லும் மெய்யிற்றுப் பதங்கள் புணரும் விதியை மெய்யீற்றுப் புணரியலாகவும், உயிரெழுத்துக்களாலும் மெய்யெழுத்துக்களாலும் ஆகும் வேற்றமை உருபுகள் சொற்களை இணைத்துப் புணரும் விதிகளை உருபு புணரியலாகவும் கூறுவாம்.

முதல் உயிரீற்றுச் சொற்களும் மெய்யீற்றுச் சொற்களும் நிலைமொழி வருமொழிகளோடு புணரும் பொதுவிதிகளைக் பக்கங்கள் 180 தொட்டு 188 வரையில் கூறிப் பின்னர்ச் சிறப்பு விதிகளைக் கூறவாம்.

சொல்லுக்கு இறுதியில்வரும் பன்னிரண்டு உயிரெழுத்தும் ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்ற பதினொரு மெய்யெழுத்தும், குற்றியலுகரம் ஒன்றும் ஆகிய இருபத்துநான்கு எழுத்துக்களும், நிலைமொழியின் இறுதியில் நிற்பனவாம்.

பன்னிரண்டு உயிரெழுத்தும், க் ச் த் ப் ஞ் ந் ம் ய் வ் ங் என்னும் பத்து மெய்யெழுத்துக்களுமாகிய இருபத்திரண்டு எழுத்துக்களும், வருமொழியின் முதலாக நிற்பனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புணரியல்

சொற்களின் இறுதியில் வருவனவாகிய இருபத்துநான்கெழுத்துக்களின் முன் ஞ் ந் ம் என்னும் மெல்லெழுத்துக்களும், ய் வ் என்னும் இடை எழுத்துக்களும், வந்தால் இயல்பாகப் புணரும். இந்த இயல்பு புணர்ச்சி அல்வழியிலும் வரும், வேற்றுமையிலும் வரும்.

இள ஞாயிறு (இளமையாகிய சூரியன்) என்னும் அல்வழிப் பண்புப் பெயரின் நிலைமொழியாகிய இள (ன் + அ) என்பதின் இறுதியில் நின்ற அகர உயிரின்முன் ஞா( ஞ் + ஆ) யிறு என்னும் வருமொழி முதலில் ஞகர ஒற்று இயல்பாகப் புணர்ந்தது.

வலி ஞமலி (வலிமையையுடைய நாய்) என்னும் இரண்டாம் வேற்றுமைப் பெயர்ச்சொல்லின் நிலைமொழியாகிய வலி (ல் + இ) என்பதின் இறுதியில் நின்ற இகர உயிரின்முன் ஞ (ஞ் + அ) மலி என்னும் வருமொழி ஞகர ஒற்று (ஞ்) இயல்பாகப் புணர்ந்தது.

பொன் மாட்சி (பொன்னினது மகிமை) என்ற ஆறாம் வேற்றுமைச் சொல்லின் நிலைமொழியாகிய பொன் என்பதின் இறுதியில் நின்ற ன் என்னும் மெய்யெழுத்தின் முன் மா (ம் + ஆ ) ட்சி என்னும் வருமொழி முதலில் ம் என்ற மெய் யெழுத்து வந்து இயல்பாகப் புணர்ந்தது.

நிலைமொழியில் தனிக்குற்றெழுத்துக்குப் பின் நின்ற யகர மெய்யும், ஒரெழுத்துதொரு மொழியாகிய ஐகார உயிரும், கை மை தை முதலான ஐகாரத்தோடு சேரந்துவரும் உயிர் மெய்களும், ஆகிய இவைகளின் முன் ஞ் ந் ம் என்னும் மெய்கள் வந்தால், அவ்வாறு வந்த மெய்யெழுத்துக்களே மிகும்.

உ-ம். மெய் ஞான்றது. இங்கே குற்றெழுத்தாகிய மெ என்ற தன் பின் நின்ற யகர மெய்யின் முன் ஞா (ஞ் + ஆ) ன்றது என்னுஞ் சொல் வர, ஞகரமெய் மிகுந்து மெஞ்ஞான்றது எனப் புணர்ந்தது.

மெய் நீண்டது. இங்கே குற்றெழுத்தாகிய மெ என்ற தின் பின் நின்ற யகர மெய்யின் முன் நீ ( ந் + ஈ) ண்டது என்னுஞ் சொல் வர, நகர மெய் மிகுந்து, மெய்ந்நீண்டது எனப் புணர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய் மாண்டது. இங்கே குற்றெழுத்தாகிய மெ என்றதின் பின் நின்ற யகர மெய்யின் முன் மா(ம் + ஆ) ண்டது என்னுஞ் சொல்வர, மகர மெய் மிகுந்து, மெய்ம்மாண்டது எனப் புணர்ந் தது.

நொ (துன்பப்படு), து (உண்), என்பவற்றின் முன் வரும் மெல்லெழுத்தும் இடையெழுத்தும் மிகும்.

உ-ம். நொ + ஞெள்ளா (ஒருவன் பெயர்) நொஞ்ஞெள்ளா என்றும், நொ+ நாகா (ஒருவன் பெயர்) நொந்நாகா என்றும், நொ + யவனா (யவனன்= சோனகன்) நொய்யவனா என்றும், து+ நாதா துந்நாகா என்றும், து + வளவா துவ்வளவா (வளங் களையுடையவனே உண்) என்றும், மிகுந்தமை காண்க.

ண் ள் என்னும் மெய்களின் முன் வரும் நகரம் ணகரமாகத் திரியும்.

உ-ம். கண் + நன்று = கண்ணன்று (நயனம் நல்லது), கள் + நன்று = கண்ணன்று, (கள் நல்லது). இங்கே கண் என்பதின் ஈற்று ணகரத்தை நோக்கி வருமொழி நகரம் ணகரமாகவும், கள் என்பதின் இறுதி ளகரத்தை நோக்கி நகரம் ணகரமாகவும் திரிந்தன.

ன் ல் என்னும் மெய்களின் முன்வரும் நகரம் னகரமாகத் திரியும்.

உ-ம். பொன்+ நன்று = பொன்னன்று. கல் + நன்று = கன்னன்று.

இவற்றிற்குச் சூத்திரம்:-

ஈ. எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரும் ஞநமய வக்க ளியல்பும்
குறில்வழி யத்தனி ஐந்நொது முன்மெலி
மிகலுமாம் ணளனல வழிநத் திரியும்.

இதன் பொருள்:-

எண்மூ எழுத்து = இருபத்துநான்கு எழுத்துக்களையும்
ஈற்று = இறுதியாகவுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வகை மொழிக்கும் = எந்தச் சொற்களுக்கும்
முன் வரும் = முன்னே வருகின்ற
ஞ ந ம ய வக்கள் = ஞ் ந் ம் ய் வ் என்னும் மெய்யெழுத்துக்கள்
இயல்பும் = இயல்பாதலும்
குறில் வழிய = தனிக் குறிலின் பின்வரும் ய் என்னும் மெய்யெழுத்துக்கும்
தனி ஐ = ஓரெழுத்து மொழியாகிய (உயிர் உயிர்மெய் என்னும்) ஐகாரத்திற்கும்
நொ து = நொ என்பதற்கும் து என்பதற்கும்
முன் = முன்வருகின்ற
மெலி மிகலும் ஆம் = மெல்லெழுத்துக்கள் மிகுந்து வருதலும் உண்டு.
ண ள ன ல வழி = ண் ள் ன் ல் என்ற மெய்களின் பின்வருகின்ற
ந திரியும் = நகரமானது திரியும்.

"எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழியும்" என்றது. இயல்பினாலாயிலும் விதியினாலாயினும் இருபத்துநான்கெழுத்துக்களையும் ஈறாகவுடைய பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், திசைச்சொல், வடசொல் என்னும் பலவகைப்பட்ட மொழிகளைக் குறித்த, இவை அல்வழியிலும் வேற்றுமையிலும் இயல்பாக வரும்.

இனி, பொதுப்பெயர் முன்னும் உயர்திணைப்பெயர் முன்னும் வல்லினம் புணர்தற்கு விதிகள் கூறவாம்.

பொதுப்பெயர்களாவன உயர்திணை, அஃறிணை இரண்டிற்கும் பொதுவாக வழங்கிவரும் பெயர்களாம். அவை நான், நாம், நாங்கள் முதலிய தன்மைப் பெயர்களும். நீ, நீர், நீங்கள் முதலிய முன்னிலைப் பெயர்களும். சாத்தன், சாத்தி, கொற்றன், மருதி தந்தை, தாய் முதலிய படர்க்கைப் பெயர்களுமாம்.

பொதுப்பெயர் உயர்திணையிலும், அஃறிணையிலும் கலந்து (விரவி) வருவதால் விரவுப்பெயரெனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வழியிலும் வேற்றுமையிலும் பொதுப்பெயர்களின் ஈற்றுமெய் வருமொழிமுதலில் வல்லினம் வந்தால், இயல்பாகப் புணரும்.

உ-ம். பெண் (பெண்ணாகிய) + குழந்தை = பெண்குழந்தை. கொற்றன் (வெற்றியுடையவன்) + பெரியன் = கொற்றன்பெரியன். நான் நான் என்பவன் ) + சிறியன் = நான்சிறியன். இப் புணர்ச்சிகள் அல்வழியில் இயல்பாயின.

பெண் (பெண்ணினது) + புத்தி = பெண்புத்தி. பொன்னன் (பொன்னனது) + புறம் = பொன்னன்புறம். இப்புணர்ச்சிகள் வேற்றுமையில் இயல்பாயின.

அல்வழியிலும் வேற்றுமையிலும் உயர்திணைப் பெயர்களின் இறுதியிலுள்ள மெய், வல்லினம் வந்தால், இயல்பாகும். உ-ம். அவன் + கொடியன் = அவன்கொடியன். திருடர்கள் (ஆனவர்கள்) + போனார்கள் = திருடர்கள் போனார்கள். இப் புணர்ச்சிகள் அவ்வழியில் இயல்பாயின. தையல் (தையலினது) + பெருமை = தையல்பெருமை. வேள் (வேளினது) + சிறுமை = வேள்சிறுமை என வேற்றுமையில் இயல்பாகப் புணர்ந்தன.

இருவழியிலும் பொதுப்பெயரின் இறுதியிலுள்ள உயிரெழுத் துக்களுக்கும், ய் ர் என்ற மெய்யெழுத்துக்களுக்கும், முன்வரும் வல்லினம் விகாரமின்றி இயல்பாகும்.

உ-ம். பிள்ளை + சிறியன் = பிள்ளைசிறியன். பிள்ளை + சிறிது = பிள்ளைசிறிது. நீ + குறியை = நீகுறியை (= நீகுறுத்த வடிவத் தையுடையாய்). சாத்தி + கை = சாத்திகை. சாத்தி + செவி = சாத்திசெவி. தாய் + தலை = தாய்தலை ( = தாயினது தலை). தந்தையார் + பொருள் = தந்தையார்பொருள். நீர் + குறியீர் = நீர்குறியீர். இங்ஙனம் பொதுப் பெயரின் இறுதி உயி ரெழுத்துக்களுக்கும், யகர ரகர மெய்யெழுத்துக்களுக்கும், முன் வல்லினம் வருமொழிமுதலில் வந்து இயல்பாயிற்று.

இருவழியிலும் உயர்திணைப்பெயரீற்றில் வரும் உயிர் களுக்கும் ய் ர் என்ற மெய்களுக்கும் முன் வரும் வல்லினம் இயல் பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். நம்பி+ குறியன்= நம்பிகுறியன். சேய்+சிறியன்=சேய்சிறியன். அவர் + பெரியர்= அவர்பெரியர். இவற்றில், நம்பி என இகர உயிர் முன்னும், சேய் அவர் என யகர ரகர மெய்களின் முன்னும், வந்த வல்லின முதன்மொழிகள் இயல்பாயின. இவை அல்வழிப் புணர்ச்சி.

நங்கை+ தலை= நங்கைதலை, சேய்+ சிறுமை =செய்சிறுமை, அவர் + பெருமை அவர்பெருமை என வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாயின.

இருவழியிலும் உயிரையும் மெய்யையும் ஈற்றிலேயுடைய உயர்திணைப்பெயர்கள், சில இடங்களில் வருமொழி முதலில் வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் என்ற நான்கு கணங்களும் வரும்பொழுது விகாரமாகப் புணர்வது முண்டு.

உ-ம். நம்பி+ கொற்றன்= நம்பிக்கொற்றன். இதில் உயிர்முன் வலி வர, ககர ஒற்று மிகுந்தது. கபிலன் + பரணன் = கபில பரணன். இதில் வல்லினத்தின் முன் னகரமெய் கெட்டது. வடுகன் + நாதன் = வடுகநாதன். இதில் மெல்லினத்தின் முன் னகர மெய்கெட்டது. இவை அல்வழிப் புணர்ச்சி.

ஆசீவகர் (சமணமுனிவர்) + பள்ளி = ஆசீவகப்பள்ளி. இதில் ப் என்ற வல்லெழுத்து வர நிலைமொழியீற்று ரகரமெய் கெட்டுப் பகரமெய் தோன்றியது. மக்கள் + குணம் = மக்கட்குணம். இதில் கு என்ற வல்லெழுத்துவர ளகரம் டகரமாகத் திரிந்தது. உ-ம். நளன் + வெண்பா= நளவெண்பா. இதில் வெ என்ற இடை யினம் வர, நிலைமொழியீற்றிலுள்ள மெய் கெட்டது. குமரன்+ கோட்டம்= குமரகோட்டம் அல்லது குமரக்கோட்டம். இதில் கோ என்ற வல்லெழுத்துவர, நிலைமொழியீறு கெட்டு குமர கோட்டம் என்றும், ககர ஒற்று மிகுந்து குமரக்கோட்டம் என்றும், விகாரமாகப் புணர்ந்தது.

இவற்றிற்குச் சூத்திரம்:-

**௱க. பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்**
**வலிவரி னியல்பா மாவி யரமுன்**
**வன்மை மிகாசில விகாரமா முயர்திணை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்ததிகாரம்.

இதன் பொருள்:-

பொதுப்பெயர் = திணைகளுக்கும் பால்களுக்கும் பொதுவாக வழங்கி வரும் பெயர்களுக்கும்,
உயர்திணைப் பெயர் = உயர்திணைப் பெயர்களுக்கும்,
ஈற்றுமெய் = இறுதியிலுள்ள மெய்கள்.
வலி வரின் = வருமொழி முதலில் க் ச் த் ப் என்ற வல்லொற்றுக்கள் வந்தால்
இயல்பு ஆம் = இயல்பாகும்.
ஆவி ய ர முன் = பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களின் இறுதியில் வருகின்ற உயிரெழுத்துக்களின் முன்னரும், ய் ர் என்ற மெய்யெழுத்துக்களின் முன்னரும், வருமொழி முதலில் வருகின்ற வன்மை மிகா = வல்லெழுத்துக்கள் மிகுந்து வரா.
சில உயர்திணை = மெய்யீறும் உயிரீறும் ஆகிய சில உயர் திணைப்பெயர்கள் நாற்கணங்களோடு புணரும் போது,
விகாரம் ஆம் = நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுதலும் உண்டு.

ஈற்றிலே வினாவெழுத்தைக் கொண்ட வினாப்பெயர்முன் வரும் வல்லினம் இயல்பாகப் புணரும்.

உ-ம். அவனா + கொண்டான் = அவனாகொண்டான். பொன்னனோ + தந்தான் = பொன்னனோதந்தான். நீலனே + போயினான் = நீலனேபோயினான். இங்கே அவனா என்பதில் ஆகாரமும், நீலனே என்பதில் ஏகாரமும், பொன்னனோ என் பதில் ஓகாரமும், வினாப்பொருளைத் தரும் வினா எழுத்துக்கள் என்று ணர்க.

யாவை என்று பொருள்படும் யா என்ற வினாவிற்கு முன்னர் வரும் வல்லினம் இயல்பாகப் புணரும்.

உ-ம். யா + குறியன = யாகுறியன (குறியவடிவத்தை யுடையவை யாவை)

உயிரீறும் மெய்யீறுமாகிய விளிப்பெயருக்கு முன் வரும் வல்லினம் இயல்பாகப் புணரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். நீலா + கொடு = நீலாகொடு. மக்காள் + போவீர் = மக்காள்போவீர்.

இதற்குச் சூத்திரம்:-

**௭௨. ஈற்றியா வினாவிளிப் பெயர்முன் வலியியல்பே.**

இதன் பொருள்:

ஈறுவினா = ஒரு பெயரின் இறுதியில் வருகின்ற ஆ ஏ ஓ என்னும் மூன்று வினாவெழுத்துக்களுக்கும்
யா வினா = யா என்னும் வினாப்பெயர்க்கும்
விளிப்பெயர் = (உயிரீறும் மெய்யீறும் ஆகிய) விளிவேற்றுமைப் பெயர்க்கும்
முன் = முன்னர்வருகின்ற
வலி இயல்பே = க் ச் த் ப் என்ற வல்லெழுத்துக்கள் இயல்பாகப் புணரும்.

உயிர் முன்னும் ய ர ழ ஈற்று முன்னிலை முன்னும் வல்லினம் புணரும் விதிகள்:-

அல்வழியில் உயிரெழுத்துக்களையும் ய் ர் ழ் என்ற மெய் யெழுத்துக்களையும் ஈற்றிலுடைய முன்னிலைவினைக்கு முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

உ-ம். உண்டனை + பொன்னா = உண்டனைபொன்னா (பொன்னா நீ உண்டாய்). உண்டீர் + பொன்னரே = உண்டீர் பொன்னரே. சென்றாய் + கண்ணனே = சென்றாய் கண்ணனே. சென்றீர் + கண்ணப்பரே = சென்றீர்கண்ணப்பரே. முன்னிலை வினைக்கு ழ் என்ற மெய்யெழுத்து ஈறாகாது.

உயிரையும் மெய்யையும் ஈற்றிலேயுள்ள ஏவல். வினைக்கு முன்வரும் வல்லினம் பல இயல்புப் புணர்ச்சியாகவும், சில இயல் பாகியும் மிகுந்தும் வரும்.

உ-ம். நட + பொன்னா = நடபொன்னா என்று இயல்புப் புணர்ச்சியாகவும், பாய் + கறுப்பா = பாய்கறுப்பா = பாய்க்கறுப்பா என இயல்பாகியும் மிகுந்தும் வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்:-

**எசூ. ஆவி யரழ இறுதிமுன் னிலைவினை**
**ஏவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே.**

இதன் பொருள்:-

ஆவியரழ இறுதி = உயிரையும் ய் ர் ழ் என்ற மூன்று மெய்களை யும் இறுதியாகவுடைய
முன்னிலைவினை ஏவல்வினைமுன் = முன்னிலைவினை முற்றுக்களுக்கும், ஏவல்வினை முற்றுக்களுக்கும், முன் வருகின்ற
வல்லினம் = க் ச் த் ப் என்ற வல்லெழுத்துக்கள்
இயல்பொடு விகற்பே = இயல்பாகவும் விகற்பமாகவும் வரும்.

ஒருமுறை இயல்பாகியும் ஒருமுறை விகாரமாகியும் புணர்வதே விகற்பமென்றறிக.

இதுகாறும் புணர்ச்சியின் பொதுவிலக்கணமும் உயிரீற்றுச் சொற்களுக்கும் மெய்யீற்றுச் சொற்களுக்கும் பொதுவாக வரும் புணர்ச்சி விதிகளுங் கூறப்பட்டன. இனி, உயிரீற்றுக் சொற்களுக் குரிய சிறப்புப் புணர்ச்சிகளின் விதிகள் கூறப்படும்.

## உயிரீற்று புணரியலின் பகுதிகள்.

இந்த உயிரீற்றுப் புணரியல் (1) உயிரீற்றுச் சிறப்புவிதி, (2) உயிரீற்றின் முன் வல்லினம் வந்து புணரும் பொதுவிதி, (3) உயிரீற்றின் முன் வல்லினம் வந்து புணர்தற்குச் சிறப்புவிதி, (4) அகரவீற்றுச் சிறப்புவிதி, (5) ஆகாரவீற்றுச் சிறப்புவிதி, (6) இகரவீற்றுச் சிறப்பு விதி, (7) இகர ஐகார வீற்றுச் சிறப்புவிதி, (8) ஈகாரவீற்றுச் சிறப்புவிதி, (9) முற்றுகரவீற்றுச் சிறப்புவிதி, (10) குற்றுகரலீற்றுச் சிறப்புவிதி, (11) ஊகாரவீற்றுச் சிறப்புவிதி, (12) ஏகார ஓகார வீற்றுச் சிறப்புவிதி, (13) ஐகாரவீற்றுச் சிறப்பு விதி எனப் பதின்மூன்று பகுதிகளை உடையது.

### (1) உயிரீற்றுச் சிறப்புவிதி.

இது (1) உயிர்முன் உயிர்புணர்தல், (2) வினாமுன்னும் சுட்டின் முன்னும் நாற்கணமும் வந்து புணர்தல் (3) குற்றுகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னும் சில முற்றுகர முன்னும் உயிரும் யகரமும் வந்து புணர்தல் என மூன்று வகைப்படும்.

உயிர்முன் உயிர்புணர்தல்:- அஃதாவது, உயிரீற்றுச் சொற்களின் முன் உயிர்வந்து புணருதல்.

இ ஈ ஐ என்ற உயிரெழுத்துக்களை இறுதியிலுடைய சொற்களுக்கு முன் உயிர்வந்தால், இடையில் ய் என்ற மெய் தோான்றிப் புணரும்.

உ-ம். அல்வழிப் புணர்ச்சி : மணி + அழகிது = மணியழகிது (மணியானது அழகையுடையது). தீ + அழகிது = தீயழகிது. மலை + அழகிது = மலையழகிது. வேற்றுமைப் புணர்ச்சி : மணி + அழகு மணியழகு (மணியினது அழகு) தீ + அழகு = தீயழகு. மலை + அழகு = மலையழகு.

அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்ற உயிர்களுக்கு முன் உயிரெழுத்துக்கள் வரும்போது நடுவில் வ் என்ற எழுத்து உடம்படு மெய்யாகத் தோன்றிப்புணரும்.

உ-ம். விள + அழகியது = விள + வ் + அழகியது = விளவழகியது. பலா + அரியது = பலாவரியது. பூ + அழகு = பூ + வ் + அழகு = பூவழகு. நொ + அழகு = நொ + வ் + அழகு = நொவ்வழகு. கௌ + அழகு = கௌ + வ் + அழகு = கௌவழகு. ஏ என்பதற்கு முன் உயிரெழுத்து வந்தால் சில இடங்களில் ய் என்பதும், சில இடங்களில் வ் என்பதும், உடம்படு மெய்யாகத் தோன்றும்.

உ-ம். ஏ + எல்லாம் = ஏ + வ் + எல்லாம் = ஏவெல்லாம். அவனே + அரசன் = அவனே + ய் + அரசன் = அவனேயரசன். சே + இலை = சே + ய் + இலை = சேயிலை, சேவிலை (சேமரத்தினைலை). சே + அடி =சேவடி, சேயடி.

இந்த மொழிகளின் இடையேவரும் ய் வ் என்ற மெய்யெழுத்துக்கள், வரும் உயிரெழுத்துக்களுக்கு உடம்பாக அடுக்கப் படுகிறபடியால், உடம்படு மெய்யென்று பெயர்பெற்றன. (உடம்பு அடுமெய் = உடம்பாக அடுக்கப்படுகின்ற மெய்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமொழி ஈற்றுயிரையும் வருமொழி முதலுயிரையும் உடன் படுத்துகிற மெய்யென்றும் பொருள் கொள்ளலாம். உடன்படுத்தல் = இசையச்செய்தல்.

இவற்றிற்குச் சூத்திரம்: -

௱௪. இ ஈ ஐவழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.

இதன் பொருள்: -

இ ஈ ஐ வழி = இ ஈ ஐ என்ற உயிர்களின் பின்னே
யவ்வும் = ய் என்ற மெய்யும்
ஏனை உயிர்வழி = அ ஆ உ ஊ ஒ ஓ ஔ என்ற ஏழுயிர்களின் பின்னே
வவ்வும் = வ் என்ற மெய்யும்
ஏமுன் இவ் இருமையும் = ஏ என்ற உயிரின் முன் ய் வ் என்னும் இரண்டும்
உயிர்வரின் = உயிரெழுத்தை முதலாக உள்ள சொல்வருமாயின்,
உடம்படுமெய் என்று ஆகும் = உடம்படு மெய்யாகவந்து தோற்றும்.

எகர வினாமுன்னும் சுட்டின் முன்னும் நாற்கணமும் புணர்தல் வினாப்பொருளில் வரும் எ என்ற இடைச்சொல்லின் முன்னும் அ இ உ என்ற சுட்டின் முன்னும் உயிரும் ய் என்ற மெய்யும் வந்தால், இடையிலே வ் என்ற மெய் மிகும்.

உ-ம். எ + அணி = எ + வ் + அணி = எவ்வணி. அ + அழகு = அ + வ் + அழகு = அவ்வழகு. இ + உடை = இ + வ் + உடை = இவ்வுடை. உ + யானை = உ + வ் + யானை = உவ்யானை.

இவைகளின் முன் க் ச் த் ப் ஞ் ந் ம் வ் ங் என்பவை வந்தால் வந்தமெய் மிகும். உ-ம். அ + குதிரை = அக்குதிரை. எ + சோறு = எச்சோறு. எ + தருமம் = எத்தருமம். எ + பொருள் = எப்பொருள். அ + ஞானம் = அஞ்ஞானம். எ + நாரை = எந்நாரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ+ மனை = எம்மனை. எ + வளை = எவ்வளை. எ + ஙனம்= எங்ஙனம். இவ்விதமே யகரம் ஒழிந்த மெய்கள் வருமொழி முதலில் வர வந்தமெய்கள் தோன்றின.

அ என்னும் சுட்டெழுத்து பாட்டில் ஆ என நீளுமிடத்து உயிர் வந்தால், இடையில் ய் என்ற மெய் தோன்றும்.

உ-ம். அ + இடை = ஆ + இடை = ஆ + ய் + இடை = ஆயிடை (அந்தஇடம்). இங்கே அ என்ற சுட்டெழுத்து ஆ என நீண்டு இடை என்ற பதத்தோடு புணரும் போது இடையில் வ் என்ற மெய் தோன்றாமல் ய் என்ற மெய் தோன்றிற்று.

இதற்குச் சூத்திரம்:-

**௱௫. எகர வினாமுச் சுட்டின் முன்னர்**
**உயிரும் யகரமு மெய்தின் வவ்வும்**
**பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு**
**நீளின் யகரமுந் தோன்றுத னெறியே.**

இதன் பொருள்:-

எகரவினா = எகரவினா விடைச்சொல்லுக்கும்
முச்சுட்டின் = மூன்று சுட்டிடைச்சொற்களுக்கும்
முன்னர் = முன்னே
உயிரும் யகரமும் எய்தின் = உயிரெழுத்துக்களும் ய் என் மெய் யெழுத்தும் வருமொழி முதலில் வந்தால்,
வவ்வும் = வ் என்ற மெய்யெழுத்தும்
பிறவரின் = ய் என்ற மெய் ஒழிந்த ஏனை க் ச் த் ப் ங் ஞ் ந் ம் வ் என்ற மெய்யெழுத்துக்கள் வந்தால்,
அவையும்= அவ்வாறு வந்த அந்த மெய்களும்
தூக்கில் சுட்டு நீளின்= பாட்டில் சுட்டெழுத்து நீளுமிடத்து
யகரமும் = ய் என்ற மெய்யெழுத்தும்
தோன்றுதல் நெறி = மிகுதல் முறைமையாம்.

குற்றியலுகரத்தின் முன்னும் சில முற்றியலுகரத்தின் முன்னும் உயிரும் யகரமும் புணரும் விதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றியலுகரமானது வருமொழி முதலில் உயிர்வந்தால் தனக்கு இடமாகிய மெய்யைவிட்டுக் கெடும். யகரம் வந்தால் இகரமாகத் திரியும்.

உ-ம். மொட்டு + அலர்ந்தது = மொட்டலர்ந்தது. பட்டு + யாது = பட்டியாது முற்றியலுகரம் வருமொழி முதலில் உயிரும் ய் என்ற மெய்யும் வந்தால் முறையே, வந்த உகர உயிர் கெட்டும், உகரம் இகரமாகத் திரிந்தும், புணரும்.

உ-ம். கதவு + ஓரம் = கதவோரம். படவு + யாது = படவியாது. கதவு என்பதில் இறுதி உகர உயிர் கெட்டு வ் என்னும் மெய்யுடன் ஒகாரஞ் சேர்ந்தது. படவு என்பதில் இறுதி உகரம் இகரமாகத் திரிந்தது.

இதற்குச் சூத்திரம்: -

சூ. உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்
யவ்வரி னிய்யா முற்றுமற் றொரோவழி.

இதன் பொருள்: -

உ குறள் உயிர்வரின் = குற்றியலுகரமானது வருமொழி முதலில் உயிர் வந்தால்
மெய் விட்டு ஓடும் = தனக்கு இடமாகிய மெய்யை விட்டுக் கெடும்.
ய வரின் இ ஆம் = வருமொழி முதலில் ய் என்ற மெய் வந்தால் அக்குற்றியலுகரம் குற்றியலிகரமாகத் திரியும்.
முற்றும் ஒரோவழி = முற்றியலுகரமும் ஒவ்வோரிடத்து
அற்று = அத்தன்மையையுடையது. (உயிர் வர உகரங்கெடுதலும், ய் என்ற மெய்வர குற்றியலுகரம் குற்றியலிகரமாகத் திரிதலும் ஆகிய விதியைப் பெறும்.)

உயிரீறு இருவகைப்படும், விதியுயிரீறு எனவும் இயல்பு யிரீறெனவும். விதியுயிரீறாவது மெய்யீற்றுச் சொற்கள் ஈற்றுமெய் கெட்டு உயிரீறாகநிற்பது. உ-ம். வட்டம் என்பது வட்ட என நின்று புணர்தல். வட்டம் என்னும் மெய்யீற்றுச்சொல் ம் என்னும் மெய்யைக் கெடுத்து வட்ட என விதி உயிரீறாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரீற்றுப் புணரியல்

இயல்புயிரீறாவது விதியீறுபோலாது இயல்பான உயிரெழுத்தை இறுதியிற் கொண்டு வருவது.

உ-ம். கோடு வலிது. இங்கே கோ + ட் + உ, என்பதில் உ இயல்புயிரீறு.

நிலைமொழி யீற்றின்கணுள்ள உயிரெழுத்துக்கள் வருமொழி முதலிலுள்ள வல்லெழுத்தோடு புணரும்போது இயல்புயிரீறாகவும், இவ்வாறு புணரும் நிலைமொழி விதியுயிரீறாகவும், வரும்.

இயல்பினாலாவது விதியினாலாவது நிலைமொழியீறாக நின்ற உயிரெழுத்துக்களின் முன் க் ச் த் ப் என்ற எழுத்துக்கள் வந்தால் பெரும்பாலும் மிகும்.

அல்வழிக்கு உதாரணம். தேட + கருதினான், தேடக் கருதினான். வட்டம் + கல், வட்டக்கல். வட்டம் என்னும் நிலைமொழி யீற்று மகரங்கெட்டு வட்ட என்றாகி வருமொழியில் க் என்ற வல்லொற்று வர அதுமிகுந்து வட்டக்கல் என்றாயிற்று.

வேற்றுமைக்கு உதாரணம். வாழை + பழம், வாழைப்பழம். மரம் + கிளை = மர + கிளை = மரக்கிளை.

பின்னர்ச் சிறப்புவிதியிற் சொல்லாதவைகளே இங்கு பெரும் பாலும் மிகும்.

உ-ம். நொ பொன்னா, நொப்பொன்னா என மிகுந்து வந்தது. நொ = வருத்தப்படு. பெரும்பாலும் என்றதனால், இவற்றுள் சிறுபான்மை மிகாமலும் வரும்.

ஏரி கரை, ஈட்டு தனம். இவற்றில் ககர வல்லொற்றும் தகர வல்லொற்றும் மிகாமல் இயல்பாக நின்றன.

முன்னிலை ஏவலுக்குமுன் வல்லினம் வந்தால், இயல்பாகவும் விகாரமாகவும் வரும். நொப் பொன்னா, துவ்வளவா, என்னும் முன்னிலை ஏவல்கள் தமக்குமுன் வரும் வல்லினம் இயல்பும் விகாரமுமாகிய இரண்டையும் பெறாவென்ற விதியிலடங்காமல், மிகுந்து வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னது இவ்விதியால் இன்னவாறு வருமென விதித்ததை (விதி சொல்லப்பட்டதை) விதந்தது என்றும், இன்னது இன்ன விதமாக வருமென்று விதிக்கப் பெறாதது விதவாதது (சிறப்பித்துச் சொல்லப்படாதது) என்றும், கூறப்படும்.

இவற்றிற்குச் சூத்திரம்:-

**௱எ. இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்**
**கசதப மிகும்வித வாதன மன்னே.**

இதன் பொருள்:-

இயல்பினும் விதியினும் நின்ற = இயல்பினாலாவது விதியினாலாவது மொழிக்கிறுதியில் நின்ற

உயிர்முன் க் ச் த் ப் = உயிர்களின்முன் வருமொழி முதலில் வருகின்ற க் ச் த் ப் என்ற மெய்யெழுத்துக்கள்

மன் மிகும் = பெரும்பாலும் இரட்டிக்கும்

விதவாதன = சிறப்பு விதி கூறப்பெறாதவற்றுள்.

எனவே, சில மெய்யெழுத்துக்கள் இரட்டியா என்றறிக.

இந்தச் சூத்திரத்திற் கூறிய விதிகள் (1) உயிரீற்று மரப்பெயர்ச் சிறப்புவிதியென்றும், (2) அகரவீற்றுச் சிறப்புவிதியென்றும், (3) ஆகாரவீற்றுச் சிறப்புவிதி என்றும், (4) இகரவீற்றுச் சிறப்பு விதி என்றும், (5) இகர ஐகாரவீற்றுச் சிறப்புவிதியென்றும், (6) ஈகாரவீற்றுச் சிறப்புவிதியென்றும், (7) உகரவீற்றுச் சிறப்புவிதி என்றும், (8) ஊகாரவீற்றுச் சிறப்புவிதி என்றும், (9) ஏகார ஓகாரவீற்றுச் சிறப்புவிதி என்றும் (10) ஐகாரவீற்றுச் சிறப்பு விதி என்றும் பத்து வகைப்படும்.

### உயிரீற்று மரப்பெயர்க்குச் சிறப்பு விதி

இது உயிரெழுத்துக்களை ஈறாகவுடைய மரப்பெயரோடு வல்லெழுத்தை முதலிலே உடைய வருமொழிகள் வந்து புணர்வது இத்தன்மைத்தெனச் சிறப்பித்துக் கூறுவது.

வேற்றுமையிலே உயிரீற்று மரப்பெயர்களின் முன்னர்வரும் வல்லெழுத்து மிகாமல் அவைகளுக்கு இனமாகிய மெல்லெழுத்து இடையில் வந்து புணரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். விள + காய், விளங்காய். காய் என்றதன் முதலெழுத் தாகிய க் என்றதற்கினமாகிய ங் என்றது வந்தமை காண்க. மா + பழம், மாம்பழம் என்றதும், அவ்வாறே.

இவ்விதியைப் பெறாமல் வருமொழிமுதல் மெய்யே மிகுதலு முண்டு.

உ-ம். பலா க் காய், ஆத்தி ப் பூ, வாழை ப் பழம்.

சில மரப்பெயர் வல்லெழுத்து மிகுந்தும் மெல்லெழுத்து மிகுந்தும் வரும்.

உ-ம். யா+ கோடு, யாக்கோடு என்றும், யாங்கோடு என்றும், வரும். யா ஒருமரத்தின் பெயர். காயா கோடு, காயாக் கோடு, காயாங் கோடு. காயா என்றது ஒரு மரத்தின் பெயர்.

இவற்றிற்குச் சூத்திரம்:-

ளஅ. மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து
வரப்பெறு நவுமுள வேற்றுமை வழியே.

இதன் பொருள்:-

வேற்றுமைவழி = வேற்றுமைப் புணர்ச்சிக் கண்
மரப்பெயர் முன்னர் = உயிரீற்றுச் சில மரப்பெயர்கட்டு முன் இனம் மெல்லெழுத்து வர பெறுநவும் உள = முன்சொன்ன பொது விதிப் படி வருகிற வல்லெழுத்து மிகாமல் அவற்றிற்கு இனமாகிய மெல் லெழுத்துத் தோன்றப்பெற்று வருவனவும் சில உள்ளனவாம்.

அகரவீற்றுச் சிறப்புவிதி. அஃதாவது, அகரத்தை ஈற்றிலே யுடைய நிலைமொழிகளோடு க் ச் த் ப் என்ற எழுத்துக்களை முதலிலேயுடைய வருமொழிகள் புணரும் விதி.

இந்த விதி (1) அகரவீற்றின் முன் வல்லினம் இயல்பாதல் எனவும், (2) வாழிய என்னும் வியங்கோள் வினைமுற்றிற்குச் சிறப்பு விதி எனவும், (3) சாவ என்னும் வினையெச்சத்திற்குச் சிறப்பு விதியெனவும், (4) பல சில என்பவைகட்குச் சிறப்புவிதி எனவும், நான்கு வகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரவீற்றின் முன் வல்லினம் இயல்பாதல், அகர ஈற்றுச் சொற்கள் வருமொழி முதலில் வல்லின் எழுத்துக்கள் வந்தால் இயல் பாகப் புணரும். உ-ம். உண்ணிய (உண்ணுதற்கு) சென்றான். செய்யிய (செய்தற்குப்) போனான். இங்கே உண்ணிய, செய்யிய என்பன வினையெச்சங்கள்.

அகர ஈற்றுப் பெயரெச்சங்களுக்கு முன்வல்லினம் வந்தால் இயல்பாகும். உ-ம். உண்ட கழுதை, உண்டகழுதை. சிறிய பொருள், சிறியபொருள்.

வினைமுற்றுக்களுக்குமுன் வல்லினம் வந்தால் இயல்பாகும். உ-ம். நடந்தன கழுதைகள், நடந்தனகழுதைகள். வாழிய பொன்னா, வாழியபொன்னா.

ஆறாம் வேற்றுமை அகர உருபிற்கு முன்வரும் வல்லினம் இயல்பாகும். உ-ம். தன கைகள். தன் என்ற சொல் ஆறாம் வேற்றுமை அகர உருபை ஏற்றுத், தன என்று வந்தது.

அகரத்தை ஈற்றிலேயுடைய பலவின்பாற் பெயர்களுக்கு முன்வரும் வல்லினம் இயல்பாகும். உ-ம். அல்வழியில் : பல கழுதைகள் . வேற்றுமையில் : பல புரிந்தான். இது பலவற்றைப் புரிந்தான் என்று இரண்டாம் வேற்றுமை உருபைப் பெற்று விரிந்து வரும்.

பாட்டில் வரும் அசைச்சொல்லாகிய அம்ம என்பதின்முன் வல்லினம்வரின், இயல்பாகும். உ-ம். அம்மகொற்றா, அம்ம பொன்னா.

இவற்றிற்குச் சூத்திரம்:-

**௭௬. செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப்**
**பெயரி னெச்சமுற் றாற னுருபே**
**அஃறிணைப் பன்மை அம்மமுன் னியல்பே.**

இதன் பொருள்:

செய்யிய என்னும் வினை எச்சம் = வினையெச்சங்களில் எதிர் காலத்தை உணர்த்தும் செய்யிய வினையெச்சத்திற்கும் பல்வகைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரின் எச்சம் = பலவகைப்பட்ட அகரவீற்றுப் பெயரெச்சங்களுக்கும்,
முற்று = பலவகைப்பட்ட அகரவீற்று வினைமுற்றுக்களுக்கும்;
ஆறான் உருபு = ஆறாம் வேற்றுமை அகர உருபிற்கும்,
அஃறிணைப் பன்மை = அகர வீற்றுப் பலவின்பாற் பெயர்களுக்கும்,
அம்ம = அம்ம என்னும் உரையசை இடைச்சொல்லுக்கும்,
முன் இயல்பே = முன்னே வருகிற க ச த ப என்ற மெய்யெழுத்துக்கள் இயல்பாகும்.

வாழிய என்னும் வியங்கோள் வினைமுற்றிற்குச் சிறப்புவிதி: -

வியங்கோள் வினைமுற்றாகிய வாழிய என்றதனோடு க் ச் த் ப் என்ற வல்லெழுத்துக்கள் வந்து புணரும்போது, வாழிய என்றதன் ஈற்றிலுள்ள ய என்ற உயிர்மெய் கெட்டு, இயல்பாகப் புணரும்.

உ-ம். வாழிய பொன்னா, வாழிபொன்னா (பொன்னா வாழ்க).

இவ்வாறே, போற்றிய என்ற வியங்கோள் வினைமுற்றின் ஈற்றிலுள்ள ய என்ற உயிர்மெய்யும் வருமொழியோடு புணரும் போது, கெடும். உ-ம். போற்றிய பொன்னா, போற்றிபொன்னா (பொன்னா போற்றப்படுக, அல்லது, போற்றுவாயாக).

இந்த வாழிய, போற்றிய, என்பவை எந்த மொழிகளோடு புணரும்போதும் ஈற்றுயிர்மெய் நீங்கியும் வரும்.

இவற்றிற்குச் சூத்திரம்: -

**ளகூ. வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்**
**ஏகலு முரித்தஃ தேகினு மியல்பே.**

இதன் பொருள்: -

வாழிய என்பதன் = வாழிய என்னும் வியங்கோள் வினை முற்றினுடைய
ஈற்றின் உயிர்மெய் = இறுதியிலுள்ள ய என்ற உயிர்மெய்யெழுத்து
ஏகலும் உரித்து = நீங்குதலும் உரியதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஃது ஏகினும் இயல்பே = அந்த ய என்ற உயிர்மெய் நீங்கி இகரவீறாய் நின்றாலும் இயல்பேயாகும்.

சாவ என்பதற்குச் சிறப்பு விதி: -

செயவென்னும் வினையெச்சமாகிய சாவ என்றதனோடு க் ச் த் ப் என்ற வல்லெழுத்துக்கள் வந்து புணரும்போது, சாவ என்பதின் ஈற்றிலுள்ள வ என்ற உயிர்மெய் கெட்டு. வல்லெழுத்து. மிகும். உ-ம். சாவ குத்தினான், சா குத்தினான், சாக்குத்தினான் (சாகும்படிகுத்தினான்).

இதற்குச் சூத்திரம்: -

**ளயு. சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி.**

இதன் பொருள்: -

சாவ என் மொழி = சாவ என்னும் செயவினையெச்சத்தினுடைய
ஈற்று உயிர்மெய் = இறுதியிலுள்ள உயிர்மெய்
சாதலும் விதி = வருமொழியோடு புணரும்போது, கெடுதலும் விதியாம்.

சாதலும் என்றதின் உம்மையால், உயிர்மெய் கெடாமற் புணர்தல் சிறப்பாகும் என்று விதித்தார்.

பல சில என்பவற்றிற்குச் சிறப்பு விதி:

பல என்பதற்கு முன் பல என்பதும், சில என்பதற்கு முன் சில என்பதும், வந்து புணர்ந்தால் இயல்பாயும் மிகுந்தும் வரும்.

உ-ம். இயல்பு : பல பல, பலபல. சில சில, சிலசில.
மிகுதி : பல பல, பலப்பல. சில சில, சிலச்சில.

பல என்றதன் முன் பல என்றதும், சில என்றதன் முன் சில என்றதும், வந்தால் அந்தச் சொற்களின் ஈற்றிலுள்ள அகரம் கெட்டு பல் சில் என்றாகி, அந்த ல் என்ற மெய் ற் என்று திரியும்.

உ-ம். பல பல, பற்பல. சில சில, சிற்சில. பல என்பது அகரங் கெடப் பல் என்றாகி, பல என்ற வருமொழியோடு புணரும்போது, பற்பல என லகர ஒற்று றகர ஒற்றாய்த் திரிந்தமை காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சில என்பவைகளின் இறுதி அகரத்தின் முன்னே பல சில என்பவை யல்லாத மறுசொற்கள் வந்தால், அந்த அகரம் நிற்பதும் நீங்குவதுமாகி விகற்பமாகும்.

உ-ம். பல கலை, பலகலை. இதில் அகரம் இயல்பாக நின்றது.

பல கலை, பல்கலை. இதில் அகரம் நீங்கியது. சில நாள், சிலநாள், சின்னாள். இதில் அகரம் நீங்கி, ல் என்ற எழுத்து ன் என்று திரிந்தது. மேலும் பல் பல, சில் சில, என இயல்பாயும், பற்பகல் சிற்கலை என அகரம் நீங்கி, லகரம் றகரமாகத் திரிந்தும், வரும்.

இவற்றிற்குச் சூத்திரம்:-

ளயக. பலசில எனுமிவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலு மகர மேக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற.

இதன்பொருள்:-

பல சில எனும் இவை = பல சில என்னும் இந்த இரண்டு சொல்லும்

தம்முன் தாம்வரின் = பல என்பதன்முன் பல என்றும், சில என்பதன்முன் சில என்றும் தமக்குமுன்னே தாமே வருமாயின்

இயல்பும் மிகலும் = வருமொழி முதல்மெய் இயல்பாதலும் மிகுதலும்.

அகரம் ஏக லகரம் றகரம் ஆகலும் = அகரங்கெட லகரமெய் றகரமெய்யாத் திரிதலும்

பிறவரின் = (இவ்விரண்டு சொற்களின் முன்) வேறு சொற்கள் வந்தால்

அகரம் விகற்பம் ஆதலும் உளபிற = (நிலைமொழி இறுதியில் நின்ற) அகரம் நிற்பதும் நீங்குவதுமாகி விகற்பித்தலுமுள்ளனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாரவீற்றுச் சிறப்புவிதி: அஃதாவது, ஆ என்ற எழுத்தை ஈற்றிலேயுடைய நிலைமொழிகளோடு க் ச் த் ப் என்னும் வல்லெழுத்துக்களை முதலிலே யுடைய மொழிகள் வந்து புணர்தல்.

இந்த ஆகார ஈற்றுச் சிறப்புவிதி ஆகாரத்தின்முன் வல்லினம் புணர்தல் எனவும், குறிலிணைந்த ஆகாரத்திற்குச் சிறப்புவிதி எனவும், இருவகைப்படும்.

ஆகாரத்தின்முன் வல்லினம் புணர்தல் ஆ (பசு) என்ற பெயர்க்கு முன் வரும் ச் ச் த் ப் என்னும் மெய்கள் அல்வழியிலே மிகாது இயல்பாகும். உ-ம். ஆ சிறிது, ஆசிறிது.

மா (விலங்கு, மிருகம்) என்ற பெயர்க்கு முன்வரும் வல்லின மாகிய க் ச் த் ப் என்னுமெழுத்துக்கள் அல்வழியில் மிகாது இயல்பாகும். உ-ம். மா பெரிது, மாபெரிது.

ஆமா (காட்டுப்பசு) என்ற பெயர்க்கு முன்வரும் க் ச் த் ப் என்ற வல்லெழுத்துக்கள் அல்வழியில் மிகாமல் இயல்பாகும். உ-ம். ஆமா கரிது (கருவை நிறமுடையது), ஆமாகரிது.

முன்னிலையசை இடைச்சொல்லாகிய மியா என்றதற்கு முன் வரும் க் ச் த் ப் என்ற வல்லெழுத்துக்கள் அல்வழியில் மிகாது இயல்பாகும். உ-ம். சென்மியா பொன்னா, சென்மியா பொன்னா. சென்மியா = செல்லுவாய்.

ஆகார ஈற்று எதிர்மறைப் பலவின்பால் வினைமுற்றுக்கு முன்வரும் க ச த ப என்ற வல்லொற்றுக்கள் அல்வழியிலே இயல்பாகும்.

உ-ம். உண்ணா குதிரைகள்= உண்ணாகுதிரைகள் (குதிரைகள் தின்னமாட்டா). இதில் உண்ணா என்பது வினைமுற்றுச் சொல்.

உண்ணாத என்ற பெயரெச்சத்தின் ஈற்றில் நின்ற த என்னும் உயிர்மெய்யெழுத்துக் கெட்டு, உண்ணா என நின்று வல்லெ ழுத்தோடு புணரும்போது மிகும்.

உ-ம். உண்ணா குதிரைகள், உண்ணாக்குதிரைகள். (உண்ணா = தின்னாத). உண்ணா என்பது தவ்வீறு குறைந்து நின்ற பெயரெச்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரீற்றுப் புணரியல்

உண்ணாமல் என்ற வினையெச்சத்தின் ஈற்றெழுத்துக்களாகிய மல் கெடப்பெற்று உண்ணா என நின்று வல்லெழுத்தோடு புணரும்போது மிகும். உ-ம். உண்ணா கிடந்தன = உண்ணாக் கிடந்தன.

செய்து என்ற பொருளைத் தரும் செய்யா என்னும் இறந்தகால வினையெச்சம் வல்லெழுத்தோடு புணரும்போது மிகும்.

உ-ம். உண்ணா கிடந்தன, உண்ணாக்கிடந்தன. இதில் உண்ணா என்றது உண்டு என்று பொருள்பட்டு இறந்தகால வினை யெச்சமாயிற்று.

இவற்றிற்குச் சூத்திரம் :-

**ளயஉ. அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா.**

இதன் பொருள்:-

அல்வழி = அல்வழிப்புணர்ச்சியில்
ஆ மா = ஆ என்ற பெயர்க்கும் மா என்ற பெயர்க்கும்
மியா = மியா என்னும் முன்னிலையசை இடைச்சொல்லுக்கும்
முற்று = ஆகாரவீற்று எதிர்மறைப் பலவின்பால் வினைமுற்றுக்கும்
முன்மிகா = முன்னே வருகின்ற வல்லினம் இயல்பாகும்.

குறிலணைந்த ஆகாரத்துக்குச் சிறப்பு விதி. அஃதாவது, ஒரு குற்றெழுத்துக்குப் பின்வருகிற ஆகார ஈற்றுப் பதங்கள் வல்லெழுத் தோடு புணருந்தன்மையைக் கூறும் விதி.

பாட்டில் குற்றெழுத்தோடு நின்ற ஆ என்ற எழுத்து அ என்று குறுகும். இவ்வாறு குறுகியதன் பின்னர் உ என்ற உயிரோடு கூடும்.

உ-ம். "நிலவிரிகானல்." நிலா என்னும் பதத்தின் கடை யிலுள்ள ஆ என்றது குறுகி நில என அகர ஈறாகிச் செய்யுளில் வந்தது.

செய்யுளில் மேற்காட்டியபடி நிலா, நில, நிலவு எனவரும். உலகவழக்கில் நில என்று வராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்குச் சூத்திரம்:-

**௳௯௩. குறியதன் கீழாக் குறுகலு மதனோ**
**டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்.**

இதன் பொருள்:-

குறியதன் கீழ் ஆ = குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம்.
குறுகலும் அதனோடு உகரம் ஏற்றலும் = அகரமாகக் குறுகுதலும், அவ்வாறு குறுகுதலுடனே உகரம் பெறுதலும்
இயல்பும் = தன் இயல்பாய் நிற்றலும்
தூக்கில் ஆம் = செய்யுளிடத்து அமைந்துவரும். (தூக்கு = பாட்டு).

இகர ஈற்றுப் புணர்ச்சியின் சிறப்பு விதி:- அஃதாவது, இகர ஈற்று நிலைமொழிகள் வருமொழி முதலெழுத்தோடு புணரும் சிறப்புவிதி.

இந்த இகர ஈற்றுப் புணர்ச்சி அன்றி, இன்றி என்றும், உரி நாழி என்றும், புளி என்றும் மூன்று பிரிவாகக் கூறப்படும்.

பாட்டில், அன்றி (அல்லாமல்) இன்றி (இல்லாமல்) என்னும் குறிப்புவினை எச்சங்கள் அன்று இன்று எனத் திரிந்துவரும்.

உ-ம். நாள் அன்றி போகி என்பது நாளன்று போகி எனவும், விண் இன்றி பொய்ப்பின் என்பது விண்ணின்று பொய்ப்பின் எனவும், வரும். திரிந்துநின்ற அன்று இன்று என்பவைகளின் முன்வரும் வல்லினம் இயல்பாகும்.

அன்றி, இன்றி என்று இயல்பாகுமானால், அப்போது வருமொழி முதலில் நிற்கும் வல்லெழுத்து மிகும்.

மேற்காட்டிய செய்யுள்களிலுள்ள அன்று இன்று என்பன ஈறு திரிந்த வினையெச்சமாகலின் முறையே அல்லாமல் இல்லாமல் என்று பொருள்படும். இவை அல்லது எனவும் இல்லை எனவும் குறிப்புவினைமுற்றுப் பொருள்பட்டும் வரும்.

இவற்றிற்குச் சூத்திரம்:-

**௳௯௪. அன்றி இன்றியென் வினையெஞ் சிகரந்**
**தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:-

அன்றி இன்றி என் வினை எஞ்சு இகரம் = அன்றி இன்றி என்கின்ற குறிப்பு வினையெச்சச் சொற்களின் ஈற்றிலுள்ள இகரம் தொடர்பினுள் = செய்யுளினிடத்து
உகரமாய் வரின் = அன்று இன்று என இகரம் உகரமாய்த் திரியப்பெற்று வருமானால்
இயல்பு = வருமொழி முதல் வல்லெழுத்துக்கள் (க் ச் த் ப் என்பன மிகாமல்) இயல்பாம்.

நாழி, உரி என்ற நிலைமொழிகளுக்குச் சிறப்புவிதி:

நாழி என்ற சொல் உரி என்பதனோடு புணரும்பொழுது, நாழி என்பதன் ஈற்றுயிர்மெய்யாகிய ழி கெட்டு, ட் என்ற மெய் தோன்றும். இவ்வாறு தோன்றிய ட் உரி என்பதனோடு புணர, நாடுரி என மாறுபடும்.

நாழி = படி, கொத்து. படி மரக்கால் என்றவை முகந்து அளப்பதால், முகத்தலளவையெனப்படும். தராசுகொண்டு நிறை யினால் அறியப்படும் அளவை நிறுத்தலளவையெனப்படும். முழம், பாகம் முதலியவற்றால் அளத்தல் நீட்டலளவையெனப் படும்.

உரி = அரைப்படி. நாழி உரி (நாடுரி) = ஒன்றரைப்படி.

உரி என்னும் பெயர்முன் வன்கணம், மென்கணம், இடைக் கணம், உயிர்க்கணம் என்னும் நாற்கணமும் வரின், சில இடங்களில் ய என்ற எழுத்து இடையிற்றோன்றும்.

உ-ம். உரி உப்பு உரியஉப்பு என்றும், உரி பயறு உரியபயறு என்றும், உரி மிளகு உரியமிளகு என்றும், உரி வரகு உரியவரகு என்றும், நாற்கணங்களிலும் வரும். உலக வழக்கில் ய என்ற உயிர்மெய் தோன்றாமல் உரியரிசி உரியெண்ணை என்று புணர் வதுமுண்டு.

இவற்றிற்குச் சூத்திரம்:-

ளயரு. உரிவரி னாழியி னீற்றுயீர் மெய்கெட
மருவும் டகர முரியின் வழியே
யகரவுயிர் மெய்யா மேற்பன வரினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்: -

உரிவரின் = உரி என்னும் அளவுப்பெயர் வருமொழியாக வருமாயின்

நாழியின் ஈற்று உயிர்மெய்கெட = அதற்கு நிலைமொழியாக நின்ற நாழி என்பதன் இறுதியிலுள்ள உயிர்மெய்யெழுத்தாகிய ழி என்பது கெட

டகரம் மருவும் = அவ்விடத்து ட் என்ற மெய்யெழுத்து வந்து பொருந்தும்.

உரியின்வழியே ஏற்பனவரின் = உரி என்ற நிலைமொழிக்கு வருமொழிகளாகப் பொருந்தும் மொழிகள் வந்தால்

யகர உயிர்மெய்யாம் = யகரம் இடையிலே தோன்றும்.

புளி என்னுஞ் சொல்லின்முன் வல்லினம் வந்தால், வந்த வல்லினம் முன்கூறிய விதிப்படி மிகும். உ-ம். புளி கறி = புளிக்கறி. புளி சோறு = புளிச்சோறு. ஆனால், புளி கொம்பு புளிக்கொம்பு என வராது.

அவ்வாறு வல்லெழுத்து மிகுதலேயன்றி இனமாகிய மெல்லெழுத்தும் மிகும். உ-ம். புளி கறி = புளிங்கறி. புளி பாளிதம் = புளிம்பாளிதம்.

இதற்குச் சூத்திரம்: -

**எயசூ. சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும்.**

இதன் பொருள்: -

சுவை புளிமுன் = புளிப்பாகிய உருசியை உணர்த்துகின்ற புளியென்ற சொல்லின்முன்

இனமென்மையும் தோன்றும் = வருங் கசதபக்கள் முன்கூறிய விதிப்படி மிகுந்து வருதலேயன்றி அவற்றிற்கினமாகிய மெல்லெழுத்துக்களும் இடையிலே வந்து பொருந்தும்.

இகர ஐகாரஈற்றுச் சிறப்பு விதி: இ என்ற எழுத்தையும் ஐ என்ற எழுத்தையும் ஈற்றிலுள்ள சொற்களின் முன்வரும் வல்லினம் சில இடத்தில் இயல்பாகவும், சில இடத்தில் மிகுந்தும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில இடத்தில் ஒருகால் மிகுந்தும் ஒருகால் மிகாதும் (விகற்பித்தும்), வரும்.

இயல்பாக வருவதற்கு உதாரணம்: பருத்தி குறிது = பருத்திகுறிது (எழுவாய்த்தொடர்). குடை கொடி = குடை கொடி (உம்மைத்தொகை). கடி சொல் = கடிசொல் (வினைத்தொகை).

இ, ஐ என்றவற்றை ஈற்றிலுள்ள சொற்களின் முன்வரும் வல்லினம், அல்வழியில் எழுவாய்த்தொடர் உம்மைத்தொகைத் வினைத்தொகைகளில் இயல்பாக வரும்.

வல்லினம் மிகுந்து வருதற்கு உதாரணம்: மாசி திங்கள் = மாசித்திங்கள் (பண்புத்தொகை). பனை கை = பனைக்கை (உவமைத் தொகை, பனைபோன்ற பருமனான கை). ஓடி போனான் = ஓடிப்போனான் (வினையெச்சத்தொடர்).

வல்லெழுத்து மிகுதல் அல்வழியில் பண்புத்தொகையிலும் உவமைத்தொகையிலும் வினையெச்சத்தொடரிலுமாம்.

இனி, வல்லெழுத்து விகற்பித்து (உறழ்ச்சிபெற்று), வருதலுக்கு உதாரணம்: கிளி குறிது, கிளிகுறிது, கிளிக்குறிது என்றும், தினை குறிது, தினைகுறிது, தினைக்குறிது என்றும், வரும்.

இவற்றிற்குச் சூத்திரம்: -

**௱௭௰. அல்வழி இஐம் முன்ன ராயின்**
**இயல்பும் மிகலும் விகற்பமு மாகும்.**

இதன் பொருள்: -

அல்வழி இ ஐ முன்னர் ஆயின் = அல்வழியிலே இகர ஐகார ஈற்றுச்சொற்களின் முன்னர் வல்லெழுத்து வருமாயின்
இயல்பும் மிகலும் = அவ்வல்லினம். இயல்பாதலும் மிகுந்து வருதலும்
விகற்பமும் ஆகும் = ஒருசொல்லே ஓரிடத்து மிகுந்து வருதலும் ஓரிடத்து இயல்பாக வருதலுமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈகார வீற்றுப் புணர்ச்சியின் சிறப்பு விதி: இப்புணர்ச்சி இருவகைப்படும். ஆப்பீ முன் நாற்கணமும் வந்து புணர்தலும், பவ்வீ நீ மீ என்பவைகளின் முன் நாற்கணமும் வந்து புணர்தலுமாம்.

ஆப்பீ (பசுவின் சாணம்) என்ற பதத்தின் ஈற்றிலுள்ள ஈகாரம் நாற்கணத்தோடும் புணருமிடத்து, இ என்று குறுகும்.

உ-ம். ஆப்பீ அரிது = ஆப்பியரிது, ஆப்பீ குளிரும் = ஆப்பி குளிரும், ஆப்பி நன்மை = ஆப்பிநன்மை, ஆப்பீ வறட்சி = ஆப்பி வறட்சி என்பன உயிர்க்கணத்திலும் வன்கணத்திலும் மென் கணத்திலும் இடைக் கணத்திலும் முறையே அல்வழியில் இயல்பாகப் புணர்ந்தன.

ஆப்பீ என்பதில், ஈ என்பது இ எனக் குறுகி நின்ற இடத்து வல்லினம் வந்தால் வேற்றுமையில் மிகும். உ-ம். ஆப்பி புழு = ஆப் பிப்புழு.

இவற்றிற்குச் சூத்திரம்: -

**௩௰அ. ஆமுன் பகரவீ யனைத்தும்வரக் குறுகும்.**
**மேலன அல்வழி இயல்பா கும்மே.**

இதன் பொருள்:

ஆ முன் =ஆ (பசுவை) உணர்த்தும் பெயரின் முன் நின்ற பகர ஈ அனைத்தும் வரக் குறுரும் = பகர ஈகாரம் வருமொழி முதலில் நாற் கணமும் வரக்குறுகும்.

மேலன அல்வழி இயல்பாகும் = வருமொழி முதலில் வரும் வல்லெழுத்துக்கள் அல்வழிப்புணர்ச்சியிலே இயல்பாகும்.

பகர ஈ, நீ, என்ற பெயர்களின் முன்வரும் வல்லினம் அல் வழியில் இயல்பாகும். உ-ம். பீ குறிது, நீ குறியை

மீ என்றதன் முன்வரும் வல்லினம் அவ்வழியில், இயல்பாக வும் வல்லெழுத்து மிகுந்தும் இனமெல்லெழுத்து மிகுந்தும் வரும். உ-ம். மீ கண் = மீகண் (மேலாகிய இடம்). மீ கோள் = மீக் கோள் (அன் மொழித் தொகை). மீ + தோல் = மீந்தோல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரீற்றுப் புணரியல்

இவற்றிற்குச் சூத்திரம் : -

**ஙயகூ. பவ்வீ நீமீ முன்ன ரல்வழி**
**இயல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே.**

இதன் பொருள்:

பவ்வீ நீ மீ முன்னர் = பகர ஈகாரம் நீ மீ என்ற பெயர்களின் முன்வரும் வல்லினம்

அல்வழி இயல்பாகம் = அல்வழியில் இயல்பாக நிற்கும். மீக்கு = மீ என்பதற்கு முன் வல்லெழுத்து வந்தால் வலி மெலி மிகலும் ஆம் = சில இடங்களில் வல்லெழுத்தும் சில இடங்களில் மெல் லெழுத்தும் மிகுந்து வருதலும் உண்டு.

முற்றுகர ஈற்றுச் சிறப்பு விதி: இப்புணர்ச்சியானது ஒடு அது எண்ணிடைச் சொற்கள் வினைத் தொகை சுட்டுப்பெயர் என்பவற் றின் முன் வல்லினம் புணர்தல் என்றும், அது என்பதன் முன் அன்று என்னும் சொற்புணர்தல் என்றும், இரண்டு விதப்படும்.

ஒடு முதலியவற்றின் முன் வல்லினம் புணர்தல்: மூன்றாம் வேற்றுமையுருபாகிய ஒடு என்பதின் முன்வரும் வல்லினம் மிகாது. உ-ம். தாயொடு போனாள், தாயொடுபோனாள்.

ஆறாம் வேற்றுமை யுருபாகிய அது என்பதன் முன்வரும் வல்லினம் இயல்பாம்.

உ-ம் மகனது புத்தகம், மகனதுபுத்தகம்.

ஏழு என்று இயல்பாக நிற்கும் எண்ணின் முன்னும், ஒன்று, இரண்டு முதலாயின விகாரப்பட்டுநிற்கும் ஒரு இரு முதலிய எண்களின் முன்னும், வரும் வல்லினம் இயல்பாகும். உ-ம். ஏழு குதிரை, ஏழுகுதிரை. ஒரு குதிரை, ஒருகுதிரை. இரு குதிரை, இரு குதிரை.

வினைத்தொகை இறுதியில் நிற்கும் முற்றுகரத்தின் முன் வரும் வல்லினம் இயல்பாகும். உ-ம். வரு குதிரை,வரு குதிரை. நடுகல், நடுகல்.

சுட்டுப்பெயர் இறுதியில் நிற்கும் முற்றுகரத்தின் முன்வரும் வல்லினம் இயல்பாகும். உ-ம். அது சிறிது. அதுசிறிது உது கொடிது, உதுகொடிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே. முற்றியலுகர ஈறாகிய மூன்றாம் வேற்றுமை ஆறாம் வேற்றுமை உருபும் சுட்டுப் பெயர்களுமாகிய இவற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

ஒன்று என்பது ஒரு என நின்றாற்போல, விகாரப்பட்ட எண்களின் விதி பின்னர்க் கூறப்படும்.

இவற்றிற்குச் சூத்திரம்: -

**௨௨௰. மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீ**
**றாகு முகர முன்ன ரியல்பாம்.**

இதன் பொருள்:

மூன்று ஆறு உருபு = மூன்றாம் உருபாகிய ஒடு என்பதும் ஆறாம் உருபாகிய அது என்பதும்

எண் = ஒன்று ஒரு, இரண்டு இரு, ஆறு அறு, ஏழு எழு என்று இயல்பாகவும் விகாரமாகவும் வரும் எண்களும்

வினைத்தொகை = அடுகளிறு அடுசேனை என்றாற்போல வரும் வினைத்தொகைகளும் ( அடுகளிறு = கொல்லுகின்ற யானை).

அடுசேனை = அழிக்கின்ற சேனை)

சுட்டு ஈறு ஆகும் = சுட்டுப் பெயர்களுமாகிய இவற்றின் இறுதியில் நிற்கின்ற உகரம் முன்னர் இயல்பே = முற்றிய லுகரத்தின் முன்வரும் வல்லெழுத்து இயல்பாக நிற்கும்.

அது, அன்று என்னுஞ் சொற்கள் புணரும் சிறப்பு விதி:

பாட்டிலே சில இடங்களில் அது என்ற சொல்லின் முன் வரும் அன்று என்ற சொல் ஆன்று என நீளும். உ-ம். அதான் றம்ம வெண்பாவீறே. அது அன்று = அதான்று. அதுவன்று, அதன்று என இயல்பாக நிற்பது முண்டு.

இதற்குச் சூத்திரம்: -

**௨௨௧. அதுமுன் வருமன் றான்றாந் தூக்கின்.**

இதன் பொருள்:

அது முன் வரும் அன்று = அது என்னுஞ் சுட்டுப் பெயர் முன் வருகின்ற அன்று என்னுங் குறிப்பு வினை முற்று = தூக்கில் செய்யுள் வழக்கில் வரும் போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்று ஆம்= ஆன்று என முதலெழுத்து நீண்டு வரும்.

குற்றியலுகரவீற்றுப் புணர்ச்சி விதி.

இப்புணர்ச்சியானது, (1) அல்வழியில் வற்றொடரல்லா தனமுன் வல்லினம் வருதல், (2) வேற்றுமையில் இடைத் தொடர் ஆய்தத் தொடர் ஒற்றிடை மிகாத நெடிற்றொடர் உயிர்த் தொடர் முன் வல்லினம் வருதல், (3) வேற்றுமையில் நெடிற்றொடர் உயிர்த்தொடர் வன்றொடராதல், (4) இரு வழியிலும் மென்றொடர் வன்றொடராதல், (5) குற்றுகரம் ஐகாரச்சாரியை பெறுதல், (6) திசைப் பெயர் வருமொழியோடு புணர்தல் (7) தெங்கு முன் காய் வந்து புணர்தல். (08) ஒன்று முதலெட்டீறாகிய எண்கள் வருமொழியோடு புணர்தல், (9) ஒன்று இரண்டு வருமொழியோடு புணர்தல், (10) மூன்று, (11) நான்கு, (12) ஐந்து, (13) எட்டு, (14) ஒன்பது பத்து நூறு என்ற மொழிகள் வருமொழியோடு புணர்தல், (15) ஒன்று முதலிய எட்டு எண்களின் முன் பத்து வந்து புணர்தல். (16) ஒருபஃது முதலிய எண்களின் முன் பிற எண்கள் வருதல். (17) பத்து ஒன்பது முதலியவற்றின் முன் பிற எண்கள் வருதல். (18) பத்து முன் இரண்டு வந்து புணர்தல், (19) ஒன்று முதலிய எண்கள் தம்முன் தாம் வருதல், என்பனவாம். இங்ஙனம் பத்தொன்பது பிரிவாக நன்னூலார் கூறினார்.

அல்வழியில் வன்றொடல்லாத தொடர்களின் முன் வல்லினம் வருதலுக்கு விதி:

நெடிற்றொடர் உயிர்த்தொடர் ஆய்தத் தொடர் மென் றொடர் இடைத் தொடர் என்னுங் குற்றியலுகரவீற்று மொழிகளின் முன்வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும்.

உ-ம். கோடு கூரியது. (கொம்பு கூர்மையுள்ளது), கோடு கூரியது; சிறிது செய்தான், சிறிது செய்தான்; அஃது கெட்டது, அஃது கெட்டது; இருந்து படித்தான், இருந்து படித்தான்; இயல்பு புணர்ச்சி, இயல்பு புணர்ச்சி.

பண்பு தொகை உவமைத் தொகையில் மேற்கூறிய குற்றுகரங்களின் முன் வரும் வல்லினம் மிகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். எஃகு பேருலோகம், எஃகுப்பேருலோகம். குருகு பறவை, குருகு (குஞ்சு)ப் பறவை. (பண்புத்தொகை), குரங்கு கொற்றன், குரங்குக்கொற்றன் (உவமைத் தொகை. குரங்கைப் போலச் சேட்டையுள்ள கொற்றன்).

அங்கு, யாண்டு, ஈங்கு என்றாற்போலும், இடப்பொருளுணர்த்தும் இடைச்சொற்களின் முன் வரும் வல்லினம் அல்வழிப் புணர்ச்சியாயினும் மிகும்.

உ-ம். அங்கு கண்டேன், அங்குக்கண்டேன், யாண்டு சென்றாய், யாண்டுச் சென்றாய்.

வன்றொடர்க் குற்றுகரத்தின் முன்வரும் வல்லினம் வேற்றுமையிலன்றி அவ்வழியிலும்பொது விதிப்படி மிகும்.

உ-ம். எழுத்து சிறிது, எழுத்துச்சிறிது. எடுத்து போ, எடுத்துப்போ. கூவிற்று கோழி, கூவிற்றுக்கோழி.

வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன்வரும் வல்லினம் வினைத்தொகையில் இயல்பாம்.

உ-ம். நாட்டு புகழ், நாட்டுபுகழ், கூப்பு கரம். கூப்புகரம்.

இவற்றிக்குச் சூத்திரம்:-

**ருஉஉ. வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி.**

இதன் பொருள்:

வன்றொடர் அல்லன முன் = வன்றொடரொந்த ஐந்து குற்றியலுகர வீற்றின் முன்னும் வரும் வல்லினம்.

அல்வழி மிகா = அல்வழியில் இயல்பாகும்.

இடைத் தொடர் ஆய்தத் தொடர் ஒற்றிடையின்மிகாத நொடிற்றொடர் ஒற்றுமிகாத உயிர்த்தொடர் என்பனவற்றின் முன் வரும் வல்லினம் வேற்றுமைக்கண் இயல்பாம்.

உ-ம். சால்பு பெருமை, சால்புபெருமை, பாகு பதம், பாகுபதம். வரகு சுவை, வரகுசுவை, எஃக கடுமை, எஃகுகடுமை.

எருது என்னும் உயிர்த் தொடர் எருத்து என்றும், காடு என்னும் நெடிற்றொடர் காட்டு என்றும், இடையில் ஒற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்து வரும். அப்படி இடையில் ஒற்று மிகுந்த உயிர்த்தொடரும் நெடிற்றொடரும் வன்றொடர்களாய் இயற்கையான வன்றொடர்க் குற்றியலுகரம் போல வேற்றுமையில் வல்லினம் வரின் மிகும். ஆதலால். இங்கே உயிர்த்தொடர் முன்னும் நெடிற்றொடர் முன்னும் வலிமிகா என்றது. வரகு பாகு என்றாற்போல, இடையில் ஒற்று மிகாமல் நிற்கின்ற உயிர்த்தொடரையும் நெடிற்றொடரையும் குறித்தது.

இவற்றிற்குச் சூத்திரம் :-

**௱௨௫.** இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

இதன் பொருள்:

இடைத் தொடர் ஆய்தத் தொடர் = இடைத் தொடரும் ஆய்தத் தொடரும்.

ஒற்று இடையில் மிகா நெடிற்றொடர் = ஒற்று இடையிலே மிகாத நெடிற்றொடரும்.

உயிர்த் தொடர்முன் = உயிர்த்தொடருமாகிய இவற்றின் முன் வரும் வல்லினம்

வேற்றுமை மிகா= வேற்றுமையில் இயல்பாம்.

நெடிற்றொடர் உயிர்த்தொடர் ஒற்று மிகுதல்:

டு று என்னும் இறுதியை யுடைய நெடிற்றொடர்க் குற்றியலுகரமும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமும் வேற்றுமைப் புணர்ச்சியிலே பெரும்பாலும் குற்றுகரம் நின்ற ட் ற் என்னும் ஒற்றுக்களும் இரட்டித்து நிற்கப் பெறும்.

உ-ம். மாடு கொம்பு, மாட்டுக்கொம்பு, கயிறு கட்டு, கயிற்றுக் கட்டு, நாறு மேடை, நாற்றுமேடை, எயிறு நிரை, எயிற்று நிரை.

ஒற்றுமை இரட்டித்த இடத்தில் அவ்விரு தொடரும் வன்றொடராக மாறி, வன்றொடருக்குரிய புணர்ச்சிபெறும்.

மாட்டுக் கொம்பு, கயிறு கட்டு, என்பன மாட்டுக் கொம்பு, கயிற்றுக் கட்டு, என்று வல்லினம் மிகுந்து வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மை இவ்விரு தொடர்களும் அல்வழியிலும் இரட்டிக்கும். உ-ம். வெளிறு பனை, வெளிற்றுப் பனை, (வெண்மை யாகிய பனை, பண்புத் தொகை).

சிறுபான்மை கு து என்பனவற்றை ஈற்றிலே கொண்ட உயிர்த்தொடர்களுக்கும் ஒற்று இரட்டித்துவரும். உ-ம். வெருகு கண், வெருக்குக் கண் (பூனைக் கண்). எருது மாடு, எருத்துமாடு.

இவற்றுக்குச் சூத்திரம்: -

**௲உ௪. நெடிலோ டுயித்தொடர்க் குற்றுக ரங்களுட்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே.**

இதன் பொருள்:

நெடிற் றொடர் உயிர்த்தொடர் குற்றுகரங்களுள் = நெடிற் றொடரும் உயிர்த்தொடருமாகிய குற்றியலுகரமொழிகளுள்

ட ற ஒற்று = அவ்வுகரம் நின்ற ட் ற் என்னும் மெய் எழுத் துக்கள்

வேற்றுமை மிக இரட்டும் = வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டிக்கும்.

சில மென்றொடர் வன்றொடராதல்.

வேற்றுமையிலே சில மென்றொடராதல் வன்றொடராக மாறும். உ-ம். மருந்து பை. மருத்து பை, மருத்துப்பை, கரும்பு வில், கருப்பு வில்.

சில மென்றொடர் அல்வழியிலும் வன்றொடராகும். உ - ம். குரங்கு மனம் = குரக்குமனம் (உவமைத் தொகை)

என்பு உடம்பு, ஏற்புடம்பு, எலும்பாகிய உடம்பு.

பலமென்றொடர்கள் வன்றொடராகா. உ-ம். வண்டு கால் வண்டுக்கால். பந்து திரட்சி, பந்துத் திரட்சி.

இவற்றிக்குச் சூத்திரம் : -

**௲உ௫. மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்
றம்மின வன்றொட ராகா மன்னே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்

மென்றொடர் மொழியுள் சில வேற்றுமையில் = மென்றொடர்க் குற்றியலுகர வீற்றிற் சில வேற்றுமைப் புணர்ச்சியில்

தம் இன வன்றொடர் = தமக்கு இனமாகிய வன்றொடராகும்.

ஆகா மன் = வன்றொடராகாத மென்றொடர்கள் பல.

சில குற்றுகரங்கள் ஐ காரச்சாரியை பெறல்:

சில மென்றொடர்கள் வரு மொழியோடு புணரும் போது ஐ என்ற சாரியை பெறும். உ-ம். பண்டு காலம், பண்டு ஐ காலம், பண்டைக்காலம், அன்று நாள், அன்று ஐ நாள், அற்றை நாள்.

பிற தொடர்களும் சிறுபான்மை ஐ என்ற சாரியை பெறும்.

உ-ம். நேற்று + கூலி = நேற்று + ஐ கூலி = நேற்றைக் கூலி.

வருமொழியோடு புணராமல் தனிமொழியாயும் தொடர் மொழியாயும் நின்று ஐ என்ற சாரியை பெறுகின்ற சில சொற்கள் உண்டு. உ-ம். ஒன்று ஐ, ஒற்றை, இரண்டு ஐ, இரட்டை என்று தனி மொழிகள் சாரியை பெற்றன. ஓராண்டு, ஓராட்டை, என தொடர் மொழி சாரியைப் பெற்றது.

இதற்குச் சூத்திரம் :-

**௱௨௬. ஐ யீற் றுடைக்குற் றுகரமு முளவே.**

இதன் பொருள்:

ஐ ஈ று உடை = ஐ காரத்தை இறுதியிலுள்ள குற்றுகரமும் உள = குற்றியலுகரமும் உண்டு.

திசைபெயர்க்குச் சிறப்பு விதி:

கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு என்ற திக்கின் பெயரோடு வரு மொழியாக வேறு திக்கின் பெயரும் பிற பெயரும் வந்து புணருமிடத்து, நிலைமொழியின் ஈறாகிய கு என்னும் உயிர்மெய்யெழுத்துக் கெடும்.

உ-ம். வடக்குக் கிழக்கு, வடக்கிழக்கு, குணக்கு கடல், குணக்கடல். மேற்கு பகுதி, மேற் பகுதி, மேலைப் பகுதி, மேற்கு மலை, மேல்மலை. தெற்கு பூமி, தெற்பூமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகரங் கெட்டபின் நிலைமொழி இறுதியில் இருப்பது க் என்பதாயின் அதுகெடும். ற் என்பதாயின் ல் அல்லது ன் ஆகத் திரியும்.

உ-ம். வடக் கிழக்கு, வட கிழக்கு. குணக் கடல், குணகடல், மேற் பகுதி, மேல் பகுதி. தெற் பூமி, தென் பூமி.

கிழக்கு என்பது நிலைமொழியாக நின்று புணருமிடத்து, ழ என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள அகரமும் க்கு என்பனவும் கெட்டு, முதலெழுத்தாகிய கி என்றது கீ என நீளும்.

உ-ம். கிழக்கு திசை, கீழ்திசை, கீழ்த்திசை, கீழைத் திசை, கிழக்குக் காற்று, கீழ் காற்று, கீழ்காற்று.

கீழ்திசை, கீழ்த்திசை என மிகுந்தும், கீழ்காற்று கீழ்காற்று என இயல்பாயும் புணர்தற்கு விதி மெய்யீற்றுப் புணரியலில் ழகர ஈற்றுப் புணர்ச்சியில் கூறப்படும்.

வடக்குக் கிழக்கு எனவும், மேற்கு மலை எனவும், இங்கே கூறிய விகாரங்களொன்றுமின்றிப் பொது விதிப்படி முடிதலும் விதியெனக் கொள்க.

இதற்குச் சூத்திரம்: -

**ஈஉஎ. திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்**
**நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்**
**றகரம் னலவாத் திரிதலு மாம்பிற.**

இதன் பொருள்:

திசையொடு திசையும் பிறவும் சேரின் = திக்கின் பெயரோடு திக்கின் பெயரும், திக்கின் பெயரோடு பிற பெயர்களும் புணர்ந்தால்.

நிலையீற்று உயிர் மெய் க. ஒற்று நீங்கலும் = நிலைமொழியிறுதியிலுள்ள கு என்னும் உயிர்மெய்யும், க் என்னும் மெய்யும் கெடுதலும்

றகரம் ன ல ஆத் திரிதலுமாம் = ற் என்ற மெய்யெழுத்து ன் ஆகவும் ல் ஆகவும் திரிதலு முண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயரீற்றுப் புணரியல்

தெங்கு என்ற நிலைமொழி காய் என்ற வருமொழியோடு புணர்தல்:

தெங்கு (தெற்கின் கண் உள்ள) காய், தெங்கு என்ற சொல் காய் என்ற சொல்லுடன் புணரும் போது, அதன் முதலெழுத்தாகிய தெ, தே என நீண்டு, இறுதி எழுத்தாகிய கு கெட்டு, தேங்காய் என்றாகும். தெங்கங்காய் எனவும் வழங்கும்.

இதற்குச் சூத்திரம்:-

ஈஉவு **தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.**

இதன் பொருள்:

காய்வரின் = காய் என்பது வருமொழியாக வந்தால் தெங்கு

நீண்டு = தெங்கு என்பதின் முதலெழுத்து நீண்டு ஈறு உயிர்மெய்

கெடும் = இறுதியிலுள்ள கு என்ற உயிர் மெய்யெழுத்துக் கெடும்.

ஒன்று முதல் எட்டளவுமுள்ள எண்ணுப் பெயர்கள் நிலை மொழியாக நின்று புணர்தல்:

ஒன்று என்பது வருமொழியோடு புணருமிடத்து. ஒன்று என்ற பதத்திலுள்ள று என்ற உயிர்மொய்யெழுத்துக் கெடும். ஈற்றெழுத்தாகிய று கெட்டபின். நிற்கும் ஒன் என்பதின் இறுதியி லுள்ள ன் என்ற மெய்யெழுத்து ர் என்ற மெய்யெழுத்தாகத் திரியும். ஓர் என்றதின் முதலெழுத்தாகிய ஒ என்பது ஓ என நீளும். உ-ம் ஒன்று யானை, ஒன் யானை, ஓர் யானை

ஓர் என்றதின் முதலெழுத்தாகிய ஒ என்ற எழுத்து நீளாமல், ர் என்ற மெய்யெழுத்தில் உ என்னும் உயிரெழுத்தேறி, ரு என்ற உயிர்மெய்யெழுத்தாக முடிதலுமுண்டு. ஓர் யானை, ஒரு யானை.

இரண்டு என்ற பதம் வருமொழியோடு புணருமிடத்து, இரண்டு என்ற சொல்லின் இரண்டாமெழுத்தாகிய ர என்பதில் அகரமும், ண்டு என்பனவும் கெடும், இகரம் நீளும்.

உ-ம். இரண்டு ஆயிரம், இர் ஆயிரம், ஈராயிரம்.

இர் என்பது ஈர் என முதல் நீளாமல், ர் என்பதில் உகர மேறி இரு என முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். இரண்டு தலை, இர்தலை, இருதலை.

மூன்று என்பது உயிரோடு புணரும் பொழுது, பெரும் பான்மையும் ன் று என்பன கெட்டுநின்று புணரும். உ-ம். மூன்று உலகு, மூவுலகு, மூன்று ஆயிரம், மூவாயிரம்.

மூன்று என்பது மெய்யெழுத்தோடு புணரும் போது, மு என முதல் குறுகி, வருமொழி முதலெழுத்து மிகும். உ-ம். மூன்றுதலை, முத்தலை; மூன்று நூல், மு நூல், முந்நூல்; மூன்று வட்டி முவ்வட்டி எனவும் ;மூன்று யானை முவ் யானை எனவும். புணரும்.

நான்கு என்பது ஈறுகெட்டுவல்லெழுத்துக்களை முதலிற் கொண்ட மொழியோடு புணருமிடத்து. நான்கு என்ற சொல்லினி டையிலுள்ள மெய்யெழுத்தாகிய ன் ற் ஆகத் திரியும். உ-ம். நான்கு கடல், நான் கடல், நாற்கடல்.

மெல்லின முதலெழுத்தைக் கொண்ட வருமொழியோடு புணருமிடத்து. நான்கு என்ற சொல்லின் நடுவிலுள்ள ன் என்ற மெய்யெழுத்துத் திரியாது.

நிலைமொழியாகிய நான்கு என்ற பதம் உயிரெழுத்தை முதலிற் கொண்டு வருமொழி யோடும், இடையின எழுத்தை முத லிற் கொண்ட வருமொழியோடும், புணருமிடத்து, நான்கு என்பதன் நடுவிலுள்ள மெய்யெழுத்தாகிய ன் என்றதுல் ஆகத்திரியும், உ-ம். நான்கு ஆயிரம், நான் ஆயிரம், நால் ஆயிரம், நாலாயிரம் , நான்கு வரை, நான்வரை, நால்வரை. (வரை=வரி)

ஐந்து என்ற பதத்தின் ஈற்றிலுள்ள து என்ற உயிர்மெய்யெ ழுத்துக் கெட்டு, ஐந் என நின்று, இதன் ஈற்றிலுள்ள ந் என்ற மெய்யெழுத்து வருமொழி முதலில் வல்லெழுத்து வருமிடத்து, அவ்வல்லெழுத்துக்கு இனமாகிய மெல்லெழுத்தாகத் திரியும்.
உ-ம். ஐந்து குணம், ஐந் குணம், ஐங்குணம், ஐந்து தலை, ஐந்தலை.

ஐந்தின் முன் இடையினமும் உயிரும் வந்தால், ந் கெடும். உ-ம். ஐந்து ஆயிரம், ஐந் ஆயிரம். ஐயாயிரம். ஐந்து வட்டி, ஐந் வட்டி, ஐ வட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயரீற்றுப் புணரியல்

ஆறு என்ற நிலைமொழியானது மெய்யெழுத்தை முதலாகக் கொண்ட வருமொழியோடு புணர்தல். ஆ என்ற நெட்டெழுத்து அ என்று குறுகும். உ-ம். ஆறு குதிரை, அறு குதிரை.

வருமொழி முதலெழுத்தாக உயிர் வரும்பொழுது ஆறு என்பதன் முதலெழுத்துக் குறுகாது. உ-ம் ஆறு அரசர், ஆறரசர்.

ஏழு என்பது மெய்யெழுத்தை முதலிற் கொண்ட வருமொழி வரும்பொழுது. நிலைமொழி முதலெழுத்தாகிய ஏ என்னும் உயிர் நெட்டெழுத்தாகவும் குற்றெழுத்தாகவும் நிற்கும். உ-ம். ஏழு கடல், ஏழ் கடல். எழுகடல்.

எட்டு என்பது வருமொழியோடு புணரும்போது, ஈற்றெழுத் தாகிய டு என்ற உயிர்மெய் கெட்டு, நடுவிலுள்ள மெய்யெழுத்தாகிய ட் என்றது ண் ஆகத் திரிந்து நிற்கும். உ-ம். எட்டு கிரி, எட் கிரி, எண்கிரி, எட்டு வகை, எட் வகை. எண்வகை.

இவற்றிக்குச் சூத்திரங்கள்: -

௱உகூ எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்
ஒன்று முதலெட் டீறா மெண்ணுள்
முதலீ ரெண்டுமுத னீளு மூன்றா
றேழ் குறு கும்மா றேழல் லவற்றின்
ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்
ஏகு மெற்புழி யென்மனார் புலவர்.

இதன் பொருள்:

எண்நிறை அளவும் பிறவும் எய்தின் = எண்ணுப் பெயரும் நிறைப் பெயரும் அளவுப் பெயரும் பிறபெயரும் வருமொழி யாகவரின்

ஒன்று முதல் எட்டு ஈறாம் எண்ணுள் = நிலைமொழியாக நின்ற ஒன்று முதல் எட்ட இறுதியாகிய என்னும் பெயர்களில் முதல்வர் ஈர் எண் முதல் நீளும் = ஒன்று இரண்டு என்னும் எண்கள் முதற் குறியின் முதலெழுத்தாகிய குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று ஆறு ஏழு முதல் குறுகும் = மூன்று ஆறு ஏழு என்பன முதலெழுத்தாகிய நெட்டெழுத்து குற்றெழுத்தாகக் குறுகும்.

ஆறு ஏழு அல்லவற்றின் ஈற்று உயிர் மெய்யும் = ஆறு ஏழு அல்லாத எண்களுடைய இறுதிலுள்ள உயிர்மெய்யெழுத்தும், ஏழன் உயிரும் = ஏழு என்பதன் கடையிலுள்ள ழு என்ற உயிர் மெய் யெ ழுத்தின் உகரமும்,

ஏற்புழி ஏகும் = ஏற்ற இடங்களிற் கெடும்

என்மனார் புலவர் = என்று சொல்லுவர் புலவர்

**௱௯௰. ஒன்றன் புள்ளி ரகர மாக**
**இரண்ட னொற்றுயி ரேகவுவ் வருமே.**

இதன் பொருள்:

ஒன்றன் புள்ளி ரகரம் ஆக = ஒன்று என்ற பதத்தின் நடுவெ ழுத்தாகிய னகரமெய் ர் என்ற மெய்யெழுத்தாகத் திரிய, இரண்டு ஒற்று உயிர் ஏக = இரண்டு என்பதன் நடுவிலுள்ள ர என்ற உயிர் மெய் எழுத்தின் அ என்ற உயிரெழுத்தும், ண் என்ற மெய்யெழுத்துங் கெட

உ வரும் = ர் என்ற மெய்யெழுத்தில் உகரம் ஏறி, ரு என்ற உயிர் மெய்யெழுத்தாகும்.

**௱௯௰௧. மூன்ற னுறுப்பழிவும் வந்தது மாகும்.**

இதன் பொருள்:

மூன்றன் உறுப்பு அழிவும் = மூன்று என்பதன் நடுநின்ற ன் என்னும் மெய் கெடுதலும் வந்ததும் ஆகும் = வருமொழி முதலில் வந்த மெய்யெழுத்தாகத் திரிதலுமாம்.

**௱௯௰௨. நான்கன் மெய்யே லறவா கும்மே.**

இதன் பொருள்:

நான்கன் மெய் = நான்கு என்பதன் நடுவிலுள்ள ன் என்னும் மெய்யெழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல் ஆகும் = சில இடங்களில் ல் என்ற மெய்யெழுத்தாகும்.
ற் ஆகும் = சில இடங்களில் ற் என்ற மெய்யெழுத்தாகும்.

**ஙகூ. ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும்.**

இதன் பொருள்:

ஐந்தன் ஒற்று அடைவதும் = ஐந்து என்பதன் நடுவிலுள்ள ந் என்னும் மெய்யெழுத்து வருமெய்யாகத் திரிதலும் இனமும் கேடும் = வருமெய்க்கு இனமெய்யாகத் திரிதலும் கெடுதலுமாம்.

**ஙகூஉ. எட்ட னுடம்புணவ் வாகு மென்ப.**

இதன் பொருள்:

எட்டன் உடம்பு = எட்டு என்பதன் நடுவிலேயுள்ள ட் என் னும் மெய் ண ஆகும் என்ப = ண எனத் திரியும் என்று சொல்லு வர் புலவர்.

எட்டுப் பத்துத் தமிழகத்தில் எண்பது என்று வழங்கி வரு வதை விதியெக் கொண்ட நன்னூலார், ஒன்பது என்ற சொல்லுக்கு விதி கூறவில்லை. அதன் பொருள் ஒன்று குறையப் பத்து, அல்லது பத்தை ஒன்றி நிற்பது, எனலாம். இப்பொருளைச் சார்ந்து நிற்குஞ் சொல்லுக்கு உலகவழக்கே விதியெனக் கொள்க.

இனி, தொண்ணூறு, தொள்ளாயிரம். என்ற சொற்களுக்கு நன்னூலார் கீழ்வருமாறு விதிகளைக் கூறினர்.

ஒன்பது என்ற பதம் பத்து என்பதோடு புணரும் போது, ஒன்பது என்றதன் கடையிலுள்ள பது என்பது கெட்டு, ஒன் என நிற்கு மென்றும்; ஓ என்ற உயிர் த் என்ற மெய்மேலேறி, தொன் என நிற்கு மென்றும்; தொன் என்பதன் ன கரவொற்று- ண கரமாகத் திரிந்து, தொண் என வந்ததென்றும்; இதன் வரு மொழியாகிய பத்து என்பது நூறு எனத் திரிந்ததென்றும்; திரிந்து, தொன்நூறு தொண் ணூறு என்றாயிற்றென்றும்; தொன் தொள்ளென மாறிற்றென்றும்; தொள் ஆயிரம் தொள்ளாயிரம் என வந்ததென்றும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதென்ற சொல் என்ன நியாயத்தைக் கொண்டு ஒன் என்று குறுகிற்றென்றும், ஏன் ஒன் தொன் என வந்ததென்றும், ஏன் தொன் தொண் என வந்ததென்றும், ஏன் தொன்பத்து தொண்ணூ றென மாறிற்றென்றும், ஏன் தொண்ணாயிரம் தொள்ளாயிரம் என வந்ததென்றும், விளக்கவில்லை. புலவர் கூற்றாகக் ( புலவர் தங்கள் கருத்தைக் கூறியதாக) கீழ் வருஞ் சூத்திரத்தை இயற்றினார்.

௪௬௩ ஒன்பா னோடுபத்து நூறு மொன்றின்
முன்ன தி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீ இப்பஃ தகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே.

இதன் பொருள்:

ஒன்பானோடு பத்தும் நூறும் ஒன்றின் = ஒன்பதென்னும் எண்ணுடனே பத்து என்பதும், நூறு என்பதும், வருமொழியாக வந்து புணருமாயின்

முன்னதின் = நிலைமொழியாகிய ஒன்பதினின்றும்

ஏனைய முரணி = வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும் முறையே நூறு எனவும். ஆயிரம் எனவும், மாற்றி

ஒவ் ஒடு தகரம் நிறீஇ = நிலைமொழியாகிய ஒன்பதுஎன்றதன் முதலெழுத்தான ஒகர உயிரோடு த் என்ற மெய்யெழுத்தை நிறுத்தி

பஃது அகற்றி = ஒன்பது என்ற நிலைமொழியிறுதியிலுள்ள பது என்பதைக் கெடுத்து

னவ்வை = தொன் என்றதிலுள்ள ன் என்னும் மெய் யெழுத்தை

நிரலே = முறையே

ண ஆக = வருமொழியாகிய நூறு என்றதன் முன் ண் ஆகவும்

ள ஆக = வருமொழியாகிய ஆயிரம் என்றதன் முன் ள் ஆகவும் திரிப்பது நெறி = மாற்றுவது முறையாகும்.

ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்களோடு பத்து என்பது புணர்தல்:

ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்கள் நிலைமொழியாக நிற்க, அவற்றோடு பத்து என்பது புணரும் போது, பத்தின் இடையிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த் என்ற மெய்யெழுத்துக் கெடும். உ-ம் ஒன்று பத்து, ஒரு பத்து. ஒரு பது, இரண்டு பத்து, இரு பத்து, இருபது, மூன்று பத்து, மு பத்து, முப்பது.

வருமொழியாகிய பத்து என்பதிலுள்ள மெய்யெழுத்தான த் என்பது ஆய்தமாக மாறுதலுமுண்டு. உ-ம் ஒரு பத்து. ஒரு பஃது . இரு பத்து, இருபஃது.

இதற்குச் சூத்திரம்:-

ா௱சூ. முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தின்
இடையொற் றேக லாய்த மாகல்
என இரு விதியு மேற்கு மென்ப.

இதன் பொருள்:

முதல் இரு நான்காம் எண் முனர் = ஒன்று முதலாகிய எட்டு எண்களின் முன் பத்தின் இடை ஒற்று = பத்தென்னும் வருமொழி யினது நடு நின்ற த் என்னும் மெய்யெழுத்து

ஏகல் ஆய்தம் ஆகல் = கெடுதலும் ஆய்தமாகத் திரிதலும் என இருவிதியும் ஏற்கும் என்ப = என்ற இரண்டு விதிகளையும் பொருந்துமென்று சொல்லுவர் புலவர்.

ஒரு பஃது முதல் எண்பஃது வரையுமுள்ள எண்களின் முன் ஒன்று முதலிய எண் பெயர்களும், எண் தொடர்ந்த பிற பெயர்களும் வரின். ஆய்தங்கெட த் என்ற மெய்யெழுத்து அவ் ஆய்தம் நின்ற இடத்து வரும். உ-ம். ஒரு பஃது மூன்று, ஒரு பத்துமூன்று. இரு பஃது மூன்று, இருபத்து மூன்று.

ஒருபது இருபது முப்பது முதலிய எண்கள் வருமொழியோடு புணருமிடத்து, நிலைமொழிகளின் ஈற்றிலுள்ள பது என்பதின் நடுவில் த் என்ற மெய்யெழுத்துத் தோன்றும். உ-ம் இருபது ஐந்து, இருபத்தைந்து,

இவற்றிக்குச் சூத்திரம்:-

உ௱எ. ஒரு பஃ தாதிமுன் னொன்றுமுத லொன்பான்
எண்ணு மவையூர் பிறவு மெய்தின்
ஆய்த மழியவாண் டாகுந் தவ்வே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:

ஒருபஃது ஆதிமுன்= ஒரு பஃது முதலிய எட்டெண்ணின் முன் ஒன்று முதல் ஒன்பான் எண்ணும் = ஒன்று முதலாகிய ஒன்பது எண்களும்,

அவையூர் பிறவும் எய்தின் = அந்த எண்களை ஊர்ந்த பிற பெயர்களும் வந்து புணருமாயின,

ஆய்தம் அழிய = நிலைமொழியின் பின் நின்ற சொல்லாகிய பஃது என்ற பதத்தின் இடையிலேயுள்ள ஆய்தங்கெட

ஆண்டு த ஆகும் = ஆய்தம் நின்ற இடத்தில் த் என்ற மெய் தோன்றும்.

பத்துமுன் வருமொழிபுணர்தல். நிலைமொழியாகிய பத்து என்பதன் வருமொழிகளாக எண்ணுப்பெயர்களும் பிறபெயர்களும் வந்து புணருமிடத்து, நிலைமொழியாகிய பத்து என்பது பதின் என்றாவது, பதிற்று என்றாவது. இடத்துக்கேற்றபடி வரும்.

உ-ம். பத்து ஒன்று, பத் ஒன்று, பதின் ஒன்று, பதினொன்று.

பத்து கழஞ்சு, பதின் கழஞ்சு, கழஞ்சு = ஓர்நிறை. பத்து ஒன்று, பதிற்று ஒன்று.

பதிற்றொன்று, பதினொன்று (பத்தும் ஒன்றும்), உம்மைத் தொகை. பதிற்றொன்று (பத்துத்தரம் ஒன்று), பண்புத் தொகை.

இவ்விகாரங்களின்றிப் புணர்தலுமுண்டு. உ-ம் பத்து கழஞ்சு, பத்துக் கழஞ்சு, பத்துக்கோடி, பத்துக் கோடி.

ஒன்பது என்வது வருமொழியோடு புணருமிடத்து, ஏற்ற படி ஒன்பதின் என்றாவது, ஒன்பதிற்று என்றாவது இன் அல்லது இற்றுச்சாரியை பெற்றுப் புணரும். உ-ம். ஒப்பது கழஞ்சு, ஒன்பதின் கழஞ்சு, ஒன்பது இரண்டு, ஒன்பதிற்றிரண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஒன்பதுதரம் இரண்டு, அஃதாவது, பதினெட்டு) சாரியை பெறாமல் இயல்பாகப் புணர்தலுமுண்டு. உ.ம். ஒன்பது கழஞ்சு,

இவற்றுக்குச் சூத்திரம்: -

௱௬௨. ஒன்றுமுத லீரைந் தாயிரம் கோடி
எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்
ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்
ஏற்ப தேற்கு மொன்பது மினைத்தே.

இதன் பொருள்:

ஒன்று முதல் ஈரைந்து ஆயிரம் கோடி எண் = ஒன்று முதலாகிய பத்தும் ஆயிரமும் கோடியுமாகிய எண்ணுப் பெயர்களும், நிறை அளவும் பிறவரின் = நிறைப் பெயர்களும் அளவுப் பெயர்களும் பிற பெயர்களும் வந்தால்,

பத்தின் ஈற்று உயிர் மெய் கெடுத்து = நிலைமொழியாகிய பத்து என்பதின் இறுதியிலுள்ள து என்ற உயிர்மெய்யைக் கெடுத்து,

இன் உம் இற்று உம் = இன் இற்று என்னுஞ் சாரியைகளில் ஏற்பது ஏற்கும் = பொருத்தமானதைப் பெறும்.

ஒன்பதும் இணைத்து = ஒன்பது என்பதும் இவ்வாறு இன் அல்லது இற்று என்னும் சாரியைகளில் ஒன்றைப் பெறும்.

பத்து இரண்டு புணர்தல்: பத்து என்பதின் முன் இரண்டு என்பது வரின், பத்து என்பதின் ஈற்றிலுள்ள உயிர்மெய்யெழுத்துத் தாகிய து என்பது கெட, நடுவிலுள்ள மெய்யெழுத்தாகிய த் என்பது ன் என்ற மெய்யெழுத்தாகத் திரியும்.

உ-ம். பத்து இரண்டு. பத் இரண்டு, பன் இரண்டு, பன்னிரண்டு, உம்மைத் தொகையாகத் பத்து இரண்டு என்ற மொழிகள் புணரும்பொழுது., (பத்து ஒன்று பதி னொன்று என்று இன் சாரியைப் பெற்றுப் புணர்ந்தது போலப்) பதினிரண்டு எனப் புணராது.

பத்து நான்கு இன்சாரியைப் பெற்று பதினான்கு என்றும், பத்து மூன்று பதின்மூன்று என்றும், புணரும், இன்சாரியை பெறாமல் பன்னான்கு பன்மூன்று என்றும் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம் :-

ளஙக. இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட ஒற்றுனவ் வாகு மென்ப

இரண்டு முன்வரின் = இரண்டு என்பது வருமொழியாக வருமாயின்

பத்தின் ஈற்று = நிலைமொழியாகிய பத்து என்றதின் இறுதி யிலுள்ள

உயிர்மெய் கரந்திட = து என்னும் உயிர்மெய்யெழுத்து மறைய ஒற்று ன் ஆகும் என்பது = பத்து என்றதன் நடுவிலுள்ள மெய்யெழுத்தாகிய த் ஆனது ன் என்னும் மெய்யெழுத்தாகும் என்று சொல்லுவர் புலவர்.

ஒன்று முதலியன தம்முன் தாம் வருதல்:

ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு எட்டு பத்து என்னும் எண்கள் நிலைமொழிகளாக நிற்க அவற்றின் முன் அவ்வவ் எண்களே வரின், ஒன்று முதலாகிய நிலைமொழிகளின் முதலெ ழுத்திருக்க ஏனைய எழுத்துக்கள் கெடும். கெட்டு, நிலை மொழி முதலெழுத்து மாத்திரம் நின்று புணரும் பொழுது, வருமொழி முதலுயிராயின் இடையில் வ் தோன்றும்.

உ-ம். ஒன்று ஒன்று, ஓ ஒன்று, ஒவ்வொன்று. இரண்டு, இரண்டு, இ, இரண்டு, இவ்விரண்டு, ஐந்து ஐந்து, ஐ ஐந்து, ஐ வைந்து, ஆறுஆறு, ஆ ஆறு, அவ்வாறு,

வருமொழி மெய்முதலாயின், வந்த மெய் மிகும். உ-ம் ப பத்து, ப ப்பத்து, பப்பத்து.

நான்கு என்பதில் முதலெழுத்துக் குறுகி வந்த மெய் மிகும். உ-ம் நான்கு நான்கு, ந நான்கு, நந்நான்கு,

இவற்றிற்குச் சூத்திரம்: -

ளசய. ஒன்ப தொழித்தவெண் ணொன்பது மிரட்டின்
முன்னதின் முன்னல வோட வுயிர்வரின்
வவ்வுமுயிர்வரின் வந்தது மிகனெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள் :

ஒன்பது ஒழித்த எண் ஒன்பதும் = ஒன்பது தவிர்த்து நின்ற ஒன்று முதல் பத்து ஈறாகிய ஒன்பது எண்களும்

இரட்டின் = தமக்குமுன் தாம் வந்தால்

முன்னதின் முன் அல ஓட = நிலைமொழியினது முதலெழுத் தல்லாதவைகளெல்லாம் கெட

உயிர்வரின் வவ்வும் = வருமொழி முதலில் உயிர்வந்தால் வ் என்னும் மெய்யும்

மெய்வரின் வந்ததும் = மெய்யெழுத்து வந்தால் வந்த மெய்யும் மிகல் நெறி = மிகுதல் முறைமையாம்.

ஊகாரவீற்றுச் சிறப்பு விதி: பூ என்பதன் முன் வல்லெழுத்து வருமாயின் அதற்கு இனமாகிய மெல்லெழுத்து மிகும். வல்லெழுத் தும் மிகுந்து வரும். பூ = பொலிவு, மலர்.

உ-ம் பூ கொடி, பூங்கொடி, பூக்கொடி, பூ கதிர், பூங் கதிர், பூக்கதிர், பூ தொடை, பூங்தொடை, பூத்தொடை,

இதற்குச் சூத்திரம்

**ளசக. பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்.**

இதன் பொருள்:

பூ பெயர்முன் = பூ என்னும் பெயர்ச்சொல்லின் முன் வருமொழி முதலில் வல்லெழுத்துக்கள் வந்தால் இனம் மென்மையும் தோன்றும் = அதற்கினமாகிய மெல்லெழுத்தும் மிகும்.

ஏகார ஓகார ஈற்றுச் சிறப்பு விதி: இடைச்சொற்களாகிய ஏ, ஓ என்பவற்றின் முன்வரும் வல்லினம் இயல்பாம்.

உ-ம். அவனே கொண்டான், அவனே கொண்டான். அவனோ கொண்டான். அவனோ கொண்டான்.

இதற்குச் சூத்திரம்: -

**ளசஉ. இடைச்சொல் லேயோ முன்வரி னியல்பே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:

இடைச்சொல் ஏ ஒ முன்= இடைச்சொற்களாகிய ஏ ஒ என்பவற்றின் முன் வரின் இயல்பு = வருமொழி முதலில் வல்லெழுத்து வந்தால், இயல்பாகும்.

ஐ கார ஈற்றுப் புணர்ச்சி: இது இரு வகைப்படும். மரப் பெயர்களுக்குப் பொதுவும், பனைக்குச் சிறப்புமரம்.

ஐ கார ஈற்று மரப் பெயர்: ஐகார ஈற்று மரப்பெயர்களுட் சில வேற்றுமைப் புணர்ச்சிகண் வருமொழியோடு புணருமிடத்து, நிலைமொழி இறுதி எழுத்தாகிய ஐ என்றது கெட, அம்சாரியை தோற்றும்.

உ-ம். வழு துணை காய், வழுதுண் காய், வழுதுண் அம் காய் வழுதுணங்காய் (கத்தரிக்காய்). தாழை பூ, தாழ் பூ, தாழ் அம் பூ. தாழம்பூ.

ஐ என்ற எழுத்தை இறுதியிலே கொண்ட பெயர்களுள் சில அம் என்ற சாரியை பெற்று, ஈற்றெழுத்தாகிய ஐ கெடாமலும் நிற்கும். உ-ம். புன்னை கானல், புன்னை அம் கானல், புன்னையங் கானல்.

ஐ என்ற எழுத்தை இறுதியிலே கொண்ட பெயர்களுள் சில சாரியை பெறாது, பொது விதிப்படி மிகுந்து முடிதலும் உண்டு. உ-ம் முல்லை, புறவம், முல்லைப்புறவம் (முல்லைக்காடு).

இவற்றிக்குச் சூத்திரம்:-

**ரு௪௯ வேற்றுமை யாயி னைகா னிறுமொழி**
**ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே.**

இதன் பொருள்:

ஐ கான் இறுமொழி = ஐ என்ற எழுத்தை இறுதியிலுள்ள சொற்கள்.

வேற்றுமை ஆயின் = வேற்றுமைப் புணர்ச்சியில் வரும் பொழுது ஈற்று அழிவோடு அம் ஏற்பவும் உள = ஈறுகெட்டு அம் சாரியை பெறுவனவும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயரீற்றுப் புணரியல்

பனை. பனை என்பதன் முன் திரள், கொடி, என்பன வந்தால், வருமொழி முதலிலுள்ள வல்லெழுத்து மிகும். கடையிலுள்ள ஐ கெட, அம் என்ற சாரியை பெறும்.

உ-ம். பனை திரள், பனைத்திரள், பனை கொடி, பனைக் கொடி. பனைதிரள், பன் திரள், பன் அம் திரள், பனந்திரள். பனை காய், பன் காய், பன் அம் காய், பனங்காய். பனை முன் அட்டு என் னுஞ் சொல் வந்தால், கடையிலுள்ள ஐ கெடும். வடமொழியா கிய அட்டு என்பதின் முதலிலுள்ள அ என்றது ஆ என நீளும்.

உ-ம் பனை அட்டு, பன் அட்டு, பன் ஆட்டு, பனாட்டு. அடுதல் = சமைத்தல்; அட்டு = சமைக்கப்பட்டது. இது வெய்யிலில் உலர்த்தப்பட்ட பனம்பழ உணவு.

இதற்குச் சூத்திரம் :-

**ஈசச. பனை முன் கொடி வரின் மிகலும் வலிவரின்**
**ஐபோ யம்முந் திரள்வரி னுறழ்வும்**
**அட்டுறி னைகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை.**

இதன் பொருள்:-

வேற்றுமை பனை முன் கொடிவரின் மிகலும் = வேற்றுமைக்கண் பனையென்னும் மரப்பெயர் முன்னர் கொடி என்னும் பெயர் வந்தால், வந்த எழுத்து மிகுதலும்

வலிவரின் ஐ போய் அம்மும் = வல்லெழுத்துக்கள் வந்தால் நிலை மொழியான பனை என்பதன் ஈற்று ஐகாரங் கெட்டு அம் சாரியை பெறுதலும்

திரள் வரின் உறழ்வும் = திரளென்னும் பெயர் வந்தால் விகற்பித்தலும் (அஃதாவது, வந்த எழுத்து மிகுதலும் ஐ கெட அம் சாரியை தோன்றுதலும்)

அட்டு உறின் ஐ கெட்டு அ நீள்வும் ஆம் = அட்டு என்ற பெயர் வருமாயின் பனை என்பதன் இறுதி ஐ காரங் கெட்டு வரு மொழிமுதலிலுள்ள அ என்றது ஆ என நீளுதலும் ஆகும்.

உயரீற்றுப் புணரியல் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்ததிகாரம்

### மெய்யீற்றுப் புணரியல்

இது காறும் உயிரெழுத்தை இறுதியாகவுடைய நிலை மொழிகள் வருமொழிகளோடு புணரும் இலக்கணத்தைக் கூறினாம்.

இனி மெய்யெழுத்தை ஈற்றிலுள்ள நிலைமொழிகள் வருமொழிகளோடு புணரும் இலக்கணத்தைக் கூறுவாம்.

மெய்யீற்று நிலைமொழிகள் என்றது ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் பதினொரு மெய்யில் ஒன்றை இறுதியில் கொண்ட மொழிகளாம். எஞ்சின க் ங் ச் ட் த் ப் ற் என்னும் ஏழு மெய்களும் மொழிக்கு ஈறாக வரா.

இந்த மெய்யீற்றுப் புணரியல் என்ற பிரிவிலுள்ள புணர்ச்சி இலக்கணங்களை முப்பந்தைந்து வகைப்படுத்திக் கூறலாம்.

அவையாவன: -

1. ஞ ண முதலிய யக மெய்களும் வருமொழியோடு புணர்தலைப் பற்றிய பொது விதி.
2. தனிக்குற்றெழுத்துக்களின் முன் உயிரெழுத்துக்கள் வந்து புணர்தலைப் பற்றிய சிறப்பு விதி.
3. யகரம் ஒழிந்த மெய்களின் முன் யகரம் வந்து புணருதல்.
4. முதனிலைத் தொழிற்பெயருக்கும் ஏவற்பெயருக்கும் உள்ள சிறப்பு விதி.
5. நகர ஈற்றுத் தொழிற்பெயருக்குச் சிறப்பு விதி
6. ணகர னகர ஈற்றின் இயல்பும் திரிபும்.
7. ணகர னகர ஈற்றின் கேடு
8. சில ண ன ஈற்றுப் பெயருக்குச் சிறப்பு விதி.
9. னகர ஈற்றுச் சாதிப் பெயருக்குச் சிறப்பு விதி
10. மீன் என்னும் மொழிக்குச் சிறப்பு விதி
11. தேன் என்னும் மொழிக்குச் சிறப்பு விதி
12. எகின் என்னும் மொழிக்குச் சிறப்பு விதி
13. குயின் ஊன் என்னும் மொழிக்குச் சிறப்பு விதி
14. மின் பின் பன் கன் என்பனவற்றிற்குச் சிறப்பு விதி.
15. தன் என் நின் என்பவற்றிற்குச் சிறப்பு விதி
16. மகார ஈற்றுக்குப் பொதுவிதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. மகார ஈற்றுக்குச் சிறப்புவிதி.
18. நும் முதலிய நான்கிற்குஞ் சிறப்புவிதி.
19. அகம் என்பதற்குச் சிறப்பு விதி
20. ஈம் கம் உரும் என்பவற்றிற்குச் சிறப்பு விதி
21. ய் ர் ழ் ஈற்றின் முன் வல்லினம்.
22. தமிழ் தாழ் என்பவற்றின் சிறப்பு விதி.
23. கீழ் என்பதற்குச் சிறப்பு விதி.
24. லகர ளகர ஈற்றுப் பொதுவிதி
25. லகர ளகர ஈற்றுச் சிறப்பு விதி
26. லகார ளகார ஈற்றின் கேடு முதலியன
27. லகார ளகார ஈற்றுத் தொழிற்பெயருக்குச் சிறப்புவிதி.
28. வல் என்பதற்குச் சிறப்பு விதி.
29. நெல் முதலிய நான்கிற்குச் சிறப்பு விதி.
30. இல் என்பதற்குச் சிறப்பு விதி.
31. புள் வள் என்பன வற்றிற்குச் சிறப்பு விதி.
32. வகார ஈற்றுச் சுட்டுப்பெயர்களுக்குச் சிறப்பு விதி.
33. தெவ் என்பதற்குச் சிறப்பு விதி.
34. வருமொழித் தகர நகரந் திரிதல்.
35. உருபு புணர்ச்சியின் முடிபைப் பொருட் புணர்ச்சிக்கும் ஏற்றுதல்.

### 01. ஞ் முதலிய மெய்கள் புணரும் பொதுவிதிகள்.

இவ்விதிகள் மெய்யெழுத்துக்களின் முன் உயிர் புணர்தலைப் பற்றியும், மெய்யீற்றுத் தொழிற்பெயர் ஏவல் வினைமுற்று என்பனவற்றின் முன் மெய் புணர்தலைப் பற்றியும், நகர ஈற்றுத் தொழிற்பெயர் புணர்தலைப் பற்றியும் நிற்கும்.

* மெய்யெழுத்தின் முன் உயிர்புணர்தல்

நிலைமொழியின் இறுதியிலுள்ள மெய்யெழுத்தின்மேல் வருமொழி முதலிலுள்ள உயிரெழுத்தேறி ஒன்றுபட்டு நிற்கும்.

உ-ம் ஆல் இலை, ஆலிலை, சங்கரன் உரைத்தான், சங்கரனுரைத்தான். இவ்வாறு மெய்மேல் உயிரேறிப் புணரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புணர்ச்சியானது. இயல்புணர்சி விகாரப்புணர்ச்சி என்ற இருவகைப் புணர்ச்சியில், இயல்பு புணர்ச்சியாம்.

விகாரப் புணர்ச்சியாவது நிலை மொழி வருமொழிகள். ஒன்றோடொன்று புணர்வதற்கு முன், நின்றவிதமாக நில்லாமல் புணர்ந்த பின் வேறுவிதமாக நிற்றலாமென்று முன்னர் ( பக்கம் 174) கூறினாம். எனவே ஆல் என்ற நிலைமொழியின் கடையிலும் இலை யென்ற வருமொழியின் முதலிலும் நின்ற ல், என்னும் எழுத்துக்கள் புணர்ந்தபின் முன்னின்றபடியே நில்லாது லி என்று வேறு விதப் படுதலால் இதுவும் விகாரப்புணர்ச்சியாகுமே எனின் ஆகாது. ஏனெ னில் லகர ஒற்றின்மேல் இகரம் ஏறி லி என உயிர்மெய்யாக நின்ற தனால்.

இதற்குச் சூத்திரம்: -

**ஈசரு. உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே.**

இதன் பொருள்:

உடன் மேல் = நிலைமொழியீற்றில் நின்ற மெய்யெழுத்தின் மேல் உயிர்வந்து ஒன்றுவது = வருமொழி முதலெழுத்தாகிய உயிர் வந்து ஒன்றுபட்டு நிற்பது,

இயல்பு = இயல்பு புணர்ச்சியாம் (தேகமும் ஆன்மாவும் ஒன்றுபட்டது போல)

தனிக்குற்றெழுத்தின் பின்நின்ற மெய்புணர்தல் தனிக்குற் றெழுத்தின் பின் நின்ற மெய்யெழுத்தானது வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் இரட்டிக்கும்.

உ-ம் பொன் ஒளி, பொன்னொளி, பொன் என்பதில் பொ தனிக்குற்றெழுத்து, ன் அதன் பின்நின்ற மெய். இந்த ன் என்ற மெய் யின் முன் ஒ என்ற உயிரெழுத்து வந்தபடியால், பொன் என்பதன் கடையிலுள்ள ன் இரட்டித்து (பொன் ன் ஒளி) பொன்னொளி என்றாயிற்று.

இதற்குச் சூத்திரம் : -

**ஈசசு. தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்**

இதன் பொருள்:

தனிக்குறின் முன் ஒற்று = தனிக்குற்றெழுத்தின் முன் நின்ற மெய்யெழுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்வரின் இரட்டும் = வருமொழி முதலிலுயிரெழுத்து வந்தால் இரட்டித்து நிற்கும்.

**03. யகரத்தை நீக்கி மற்ற மெய்யீற்றின் முன் யகரம் புணர்தல்.**

நிலைமொழியிறுதியில் ஞ் ண் ந் ம் ன் ர் ல் வ் ழ் ள் என்னும் மெய் கள் நிற்க வருமொழி முதலில் ய் என்னும் மெய் வந்தால் அவற்றின் நடுவே இகரச்சாரியை வந்து பொருந்தும்.

தோள் யாது தோள் இ யாது தோளியாது.
மண் யானை மண் ண் இ யானை மண்ணியானை.

இதற்குச் சூத்திரம்: -

ரசஎ. **தன்னொழி மெய்ம் முன் யவ்வரி னிகரம்**
**துன்னு மென்று துணிநரு முளரே.**

இதன் பொருள்:

தன் ஒழி மெய் முன்= தன்னையொழிந்த (யகரத்தைநீக்கி) ஞ் ண் ந் ம் ன் ர் ல் வ் ழ் ள் என்னும் பத்துமெய்களின் முன்னும்

யவரின் = யகர மெய் வந்தால்

இகரம் துன்னுமென்று = இகரச்சாரியையைத் தன்முன் பொருந்துமென்று

துணிநரும் உளர் = துணிவாகக் கூறுகின்றவர்களும் இருக்கின்றார்கள்.

துணிநர்= து ணிபவர், நிச்சயமாகச் சொல்பவர்.

துணிநரும் என்றதிலுள்ள உம்மை துணியாதவர் பலர் உண்டு எனக் குறித்தது.

**04. மெய்யீற்றுத் தொழிற்பெயர் ஏவல் வினைகளின் முன் மெய் புணர்தல்**

ஞ் ண் ந் ம் ல் வ் ள் ன் என்ற மெய்யெழுத்துக்களை இறுதி யிலேயுள்ள முதனிலைத் தொழிற்பெயர்கள் வருமொழி முதலில் யகரம் ஒழிந்த மெய்கள் வந்தால் உகரச்சாரியையைப் பொருந்தும்.

உ- ம் உரிஞ் (உரஞ்சுதல்) நல்லது, உரிநு நல்லது. மண் (கழுவுதல்) கடிது மண்ணுக்கடிது. பொருந் (பொருநர் தொழில்) சிறந்தது = பொருநுச் சிறந்தது. திரும் (திரும்புதல்) கடிது=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுக்கடிது. புல், வலிது, புல்லுவலிது. வவ் (கவர்தல்) கூடாது, வவ்வுக் கூடாது. துள் (துள்ளுதல்) தகாது, துள்ளுத் தகாது. துன் (நெருங்குதல்) சுகமன்று, துன்னுச்சுகமன்று.

ஈண்டு உரிஞ்சுதல் மண்ணுதல் பொருந்தல் திரும்பல் புல்லல் வவ்வல் துள்ளல் துன்னல் என்பவை தொழிற்பெயர். இவற்றில் உரிஞ் மண் பொரும் திரும் புல் வவ் துள் துன் முதனிலைத் தொழிற் பெயரெனப்படும்.

முதனிலைத் தொழிற் பெயராவது, தொழிலைக் காட்டும் விகுதியில்லாமல் பகுதி மாத்திரம் தொழிற்பெயர்ப் பொருளைத் தந்து நிற்பது.

ண் ள் ன் ல் என்னும் நான்கு மெய்களையும் ஈறாகவுள்ள தொழிற் பெயர்கள் உகரம் பெற்றும் பெறாதும் புணரும்.

உ-ம். உண் சரி, உண்ணுசரி, உண்சரி. கொள் தீது கொள்ளு தீது, கொள்தீது.

ஞ் ண் ந் ம் ல் வ் ள் ன் என்னும் மெய்களை இறுதியிலுள்ள ஏவல் வினைமுற்றுக்கள் வருமொழி முதலில் யகரமல்லாத மெய் கள் வந்தால் உகரச்சாரியையைப் பொருந்தும். உரிஞ் உ கொற்றா, உரிஞு கொற்றா (கொற்றனே உரிஞு)

தொழிற்பெயருக்குக் காட்டிய ஏனை ஈற்று உதாரணங்களை ஏவல் வினைமுற்றுக்கும் கொள்க.

ஏவல் வினையில் வரும் ரகர ஒற்று சிறுபான்மையாய் உகரச் சாரியை பெறும். உ-ம் மணலைவாரு (ர்+உ). கவியைத் தேரு (ர்+உ)

இவற்றிற்குச் சூத்திரம் :-

௨௪௨ **ஞணநம லவளன ஒன்றிறு தொழிற்பெயர்**
**ஏவல் வினைநனி யவ்வல் மெய்வரின்**
**உவ்வுறு மேவ லுறாசில சில் வழி.**

இதன் பொருள்:

ஞ் ண் ந் ம் ல் வ் ள் ன் ஒற்று = இந்த எட்டு மெய்யெழுத்தை இறுதொழிற்பெயர் = இறுதியிலுள்ள தொழிற்பெயர்களும், ஏவல் வினை= ஏவல்வினை முற்றுக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ய அல் மெய்வரின் = வருமொழி முதலில் யகரமல்லாத மெய்யெழுத்துக்கள் வந்தால்

நனி உ உறும் = பெரும்பாலும் உகரச்சாரியைப் பொருந்தும்.

சில ஏவல் சில்வழி உ உறா = சில ஏவல் வினைமுற்றுக்கள் சில இடங்களிலே உகரச்சாரியைப் பொருந்தா.

### 05. நகர ஈற்று முதனிலைத் தொழிற்பெயர்கள் அகரச்சாரியையும் பெறும்.

உ-ம். பெருந் கடுமை, பெரு நக்கடுமை.

இதற்குச் சூத்திரம்: -

**௱௨௬. நவ்விறு தொழிற்பெயர் கவ்வுமாம் வேற்றுமை**

இதன் பொருள்:

ந இறு = ந என்ற மெய்யெழுத்தை இறுதியாகவுள்ள தொழிற் பெயர்க்கு = தொழில் பெயர்களுக்கு வேற்றுமை அவ்வுமாம் = வேற்றுமைப் புணர்ச் சியில் அகரச் சாரியையும் பொருத்தப் பெறும்.

### 06. ண் ன் என்ற மெய்களின் முன் மெய்புணர்தல்

வேற்றுமைப் புணர்ச்சியில் நிலைமொழியிறுதியில் ண் ன் என்ற மெய்யெழுத்துக்கள் நிற்க, வருமொழி முதலில் வல்லினம் வந்தால் நிலைமொழியின் ஈற்றிலுள்ள மெய்யெழுத்தாகிய ண் என் பது ட் ஆகும். ன் என்ற மெய்யெழுத்து ற் ஆகும்.

உ-ம் சிறு கண் குதிரை, சிறுகட் குதிரை, பொன் கொல்லர், பொற்கொல்லர்.

வேற்றுமைப் புணர்ச்சியிலே ண் ன் வருமொழிமுதலில் இடையினமும் மெல்லினமும் வந்தால் இயல்பாக நிற்கும்.

உ-ம். விண் மலர், விண்மலர், விண்ணின் கட்பூத்தமலர் (ஏழாம் வேற்றுமை). பொான் முடி, பொன்முடி, பொன்னாலாகிய முடி (மூன்றாம் வேற்றுமை)

அல்வழிப் புணர்ச்சியில் ண் ன் என்பன வருமொழி முதலில் மூவினமெய்கள் வந்தாலும் இயல்பாகும்.

உ-ம் கண்கலுழ்ந்தது. (கலங்கினது) கண்கலுழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலவன் (நண்டு) போனது. அலவன் போனது. பொன் வரை, பொன்வரை

இதற்குச் சூத்திரம் : -

ஈடுய. **ணனவல் லினம்வரட் டறவும் பிறவரி**
**னியல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்**
**கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே**

இதன் பொருள்:

ண ன வேற்றுமைக்கு = ணகார னகாரங்கள் வேற்றுமைப் புணர்ச்சிக்கு

வல்லினம் வர டறவும் = வன்கணம் வந்தால் முறையே டகரமும் றகரமும்

பிறவரின் இயல்பும் ஆகும் = மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பும் ஆகப்புணரும்.

அல்வழிக்கு = அல்வழிப்புணர்ச்சிக்கு

அனைத்து மெய்வரினும் இயல்பாகும் = மூவினமெய்கள் வந்தாலும் இயல்பாகும்.

### 07. ணகர னகர ஈற்றின் கேடு

தனி நெடிதலுக்குப் பின்னும், ஒன்றின் மேற்பட்ட எழுத்துக்களின் பின்னும் , நின்ற ண் ன் எனும் மெய்யெழுத்துக்கள் வரு மொழி முதலில் நகரம் வந்தாற் கெடும்.

உ-ம். தூண் நன்று, தூ ணன்று, தூ ணன்று, பரண் நீட்சி, பர ணீட்சி, பரணீட்சி.

தூண் நன்று என்பன புணரும் பொழுது நிலை மொழி யிறுதியினின்ற ண் என்ற எழுத்தானது வரு மொழி முதலில் நகரம் வரக் கெட்டது. தூணன்று என்பதில் நன்று ணன்று எனவும், பரணீட்சி என்பதில் நீட்சி ணீட்சி எனவும், திரிந்து புணர்தற்கு விதி பின்பு கூறப்படும்.

தனிக்குற்றெழுத்தின் பின்நின்ற ண் ன் என்பன நகரம் வந்தாற் கெடமாட்டா.

உ-ம் கண் நன்று, கண் ணன்று, கண்ணன்று, மின் நன்று, மின் நன்று மின்னன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகைநிலைத் தொடரின் இறுதிச் சொல்லில் தனிக்குறிலின் பின் நின்றாலும் ண் ன் என்பன நகரம் வந்தாற் கெடுதலுமுண்டு.

உ-ம். திருக்கண் நன்று, திருக்கணன்று. ஒளிர்மின் நன்று, ஒளிர்மினன்று.

இதற்குச் சூத்திரம் :-

**ஈ௬க. குறிலணை வில்லா ணனக்கள் வந்த**
**நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.**

இதன் பொருள்:

குறில் அணைவு இல்லா ண ன க்கள் = தனிக்குற்றெழுத்துக்குப் பின்னாகாமல் ஒரு மொழியிலும் தொடர் மொழியிலும் வந்த ணகார னகார மெய்கள்

வந்த நகரம் திரிந்துழி = வருமொழி முதலில் வந்த நகரம் (ணகரமாகவும் னகரமாகவும்) திரிந்த இடத்து,

கேடு நண்ணும் = கெடுதலைப் பொருந்தும்.

### 08. சில ணகர ஈற்றுப் பெயருக்குச் சிறப்புவிதி

சாதிப் பெயரின் இறுதியிலும் கூட்டப் பெயர்களின் இறுதியிலும் பரண் கவண் என்னும் பெயர்களின் இறுதியிலுமுள்ள ண் என்ற மெய்யெழுத்தானது வருமொழி முதலில் வல்லெழுத்து வரின் வேற்றுமையிலும் இயல்பாகும்.

உ-ம் பாண் குடி, பாண்குடி. இது சாதிப் பெயர் (பாடுந் தொழிலுள்ள ஒரு சாதி). உமண் பாட்டு, உமண்பாட்டு. (உமண் = உப்பு விளைவிக்கும் ஒரு சாதி). அமண் (சமணர் கூட்டம்) கொடுமை, அமண்கொடுமை. பரண் (அட்டாளை) கால், பரண், கால், கவண் கல், கவண்கல்.

பாண் குடி என்பது அகரச்சாரியைப் பெற்றுப் பாணக்குடி (பாடுந்தொழிலைக் கொண்ட குலம்) எனப் புணருவதுமுண்டு.

எண்( எள்), சாண், என்பவற்றின் கடையிலுள்ள ண என்ற மெய்யெழுத்து வருமொழிமுதலில் வல்லெழுத்து வந்தால் அல்வழியிலும் டகரமாகத் திரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம் எண் (எள்ளு) கடிது, எட்கடிது. சாண் கோல், சாட் கோல். எண்கடிது, சாண்கோல், என இயல்பாகப் புணர்வதே சிறப்பு.

ஊண் துழனி ( உண்ணுதலால் உண்டாக்கிய சத்தம்) என்ற மொழிகள் வேற்றுமையில் ணகரம் டகரமாகாமல் ஊண்டுழனி என இயல்பாகப் புணரும். மண் குடம், மட்குடம், என்று வருதலேயன்றி, மண் குடம் என்று இயல்பாகவும் வரும்.

இதற்குச் சூத்திரம்: -

**ாருஉ. சாதி குழூ உப்பரண் கவண்பெய ரிறுதி**
**இயல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற**
**டவ்வா கலுமா மல்வழி யும்மே.**

இதன் பொருள்:
சாதி(ப்பெயர்) = சாதிபற்றிவரும் பெயர்களுக்கும்
குழூ உ(ப்பெயர்) = கூட்டம் பற்றி வரும் பெயர்களுக்கும்
பரண் கவண் பெயர் = பரண் கவண் என்னும் பெயர்களுக்கும்
இறுதி = ஈற்றிலே வருகின்ற ண் என்ற மெய்

வேற்றுமைக்கு இயல்பு ஆம் = வேற்றுமைக் கண்ணும் வல்லினம் வரின் இயல்பாம்.

உணவு எண் பெயர் = (எள்) உணவைக் குறிக்கும் எண் என்னும் பெயருக்கும்

சாண் பெயர் = சாணென்னும் நீட்டலளவைப் பெயருக்கும்

இறுதி = ஈற்று ண் என்ற மெய்யெழுத்தானது அல்வழியும் = வேற்றுமையில் டகரமாகத் திரிவதன்றி அல்வழியிலும் ட ஆகலு மாம் = டகரமாகத் திரிவதும் விதியாகும்.

**09. னகர ஈற்றுச் சாதிப் பெயர்க்குச் சிறப்பு விதி.**

சாதியைக் குறிக்கும் பெயரின் இறுதியிலுள்ள ன் என்ற மெய்யெழுத்து வல்லினம் வர, வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாயாவது அகரச் சாரியை பெற்றாவது நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம் வேற்றுமையில் இயல்புணர்ச்சி: எயின் (வேடர்) குடி, எயின் குடி. எயின் பாழி (குகை), எயின் பாழி.

வேற்றுமையில் அகரச்சாரியை : எயின் தோட்டம், எயினத் தோட்டம். எயின்குடி, எயினக்குடி.

இதற்குச் சூத்திரம்: -

௨௫௩. ணஃகான் கிளைப் பெய ரியல்பு மஃகான்
அடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே.

இதன் பொருள்:

ணஃகான் கிளைப் பெயர் = ன் என்ற மெய் யெழுத்தை இறுதியிலுடைய சாதிப்பெயர்.

இயல்பும் = வல்லினம் வருமொழியின் முதலெழுத்தாகவர ஈற்றெழுத்துத் திரியாதியல்பாதலும்

அஃகான் அடைவும் = அ என்ற சாரியை பெறுதலும் ஆகிய வேற்றுமைப் பொருட்கு ஆகும் = இந்த விதிகள் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியில் அமையும்.

### 10. மீன் என்பதற்குச் சிறப்பு விதி

மீன் என்னுஞ் சொல்லின் இறுதியெழுத்தாகிய ன் என்ற மெய்யெழுத்து வருமொழி முதலில் வல்லெழுத்து வந்தால் வேற்று மையில் இயல்பாதலும் விகாரப்படுதலுமாகிய உறழ்ச்சியை அடை யும்.

உ-ம். மீன் கண், மீன்கண், மீற் கண்.

இதற்குச் சூத்திரம்: -

௨௫௪. மீன்றவ் வொடுபொருஉம் வேற்றுமை வழியே

இதன் பொருள்:

மீன் = மீன் என்ற சொல்லின் இறுதியிலுள்ள ன் என்ற மெய் வேற்றுமை வழி = வேற்றுமையிலே வருமொழி முதலில் வல்லெழுத் துவந்தால்

றவ்வொடு பொரூஉம் = ற் என்னும் மெய்யும் உறழ்ந்து (இயல்பாகவும் விகாரப்பட்டும்) வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தேன் என்னுஞ் சொல்லுக்குச் சிறப்பு விதி.

தேனென்னுஞ் சொல்லினிறுதியிலுள்ள ன் என்ற மெய்யெழுத்து வருமொழி முதலில் மெய்யெழுத்து வந்தால் இரு வழியிலும் இயல்பாகும்.

உ-ம் தேன் மொழி, தேன்மொழி. தேன் மதுரம், தேன் மதுரம். தேன் யாது, தேன்யாது. தேன் குடம், தேன் குடம்.

வருமொழி முதலில் மெல்லெழுத்துத்து வந்தால் தேன் என்ற சொல்லின் கடையெழுத்தாகிய ன் என்ற மெய் கெடும்.

உ-ம். தேன் மொழி, தேமொழி. தேன் மலர், தேமலர்.

வருமொழி முதலில் வல்லெழுத்து வந்தால், தேன் என்ற சொல்லின் கடையெழுத்தாகிய ன் என்ற மெய்கெட்டு வருமொழி முதலில் வந்த வல்லெழுத்தாவது அதற்கின மொத்த மெல்லெழுத்தாவது மிகும்.

உ-ம். தேன் குழம்பு, தே குழம்பு, தேக்குழம்பு, தேங் குழம்பு. தேன் குடம், தே குடம், தேக்குடம், தேங்குடம்.

இதற்குச் சூத்திரம்: -

**௲௫. தேன் மொழி மெய்வரி னியல்பு மென்மை**
**மேவி னிறுதி யழிவும் வலிவரின்**
**ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி.**

இதன் பொருள்:

தேன் மொழி தேன் என்னுஞ் சொல்

மெய்வரின் இயல்பும் = வருமொழி முதலெழுத்தாக மூவின மெய்களும் வரின், நிலைமொழியாகிய தேன் என்ற சொல்லின் இறுதியிலுள்ள ன் என்னும் மெய் இயல்பாதலும்,

மென்மை மேவின் = வருமொழி முதலில் மெல்லினம் வரின்

இறுதி அழிவும் = தேன் என்ற சொல்லின் ஈறுதியெழுத்தாகிய ன் கெடுதலும்,

வலிவரின் = வருமொழிமுதலில் வல்லெழுத்து வரின்

ஈறு போய் = ன் என்ற இறுதியெழுத்துக் கெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி மெலி மிகலும் = வல்லினமாவது , அதற்கினமாகிய மெல்லின மாவது, மிகுதலும்,

இருவழி ஆம் = அல்வழி வேற்றுமை என்னும் இரண்டிடத் தும் விதியாயமையும்.

### 12. எகின் முன் வல்லினம் புணர்தல்

அல்வழி வேற்றுமைகளில் எகின் என்னுங்சொல் வல்லினம் வந்தால் இயல்பாகும்.

உ-ம். எகின் (அன்னப்பறவை) பறந்தது, எகின்பறந்தது. எகின் கால், எகின்கால்.

சில இடத்து எகின் என்ற சொல் வல்லினத்தோடு புணரும் போது அகரச்சாரியைப் பெற்று வலியாவது மெலியாவது மிக்கு வரும்.

உ-ம் எகின் சிறை, எகின் அ சிறை, எகினச்சிறை.

எகின் பறவை, எகின் அ பறவை, எகினப்பறவை. எகினம் பறவை. எகின் என்பது வருமொழிமுதலில் உயிர்க்கணம் மென் கணம் இடைக்கணம் வரும்பொழுதும் அகரச்சாரியை பெறும்.

உ-ம் எகின் மாட்சி, எகினமாட்சி. எகின் வாழ்க்கை, எகின வாழ்க்கை. எகின் அழகு, எகின அழகு.

இதற்குச் சூத்திரம்: -

**௩௫௯. மரமல் லெகின்மொழி யியல்பு மகரம்**
**மருவ வலிமெலி மிகலு மாகும்.**

இதன் பொருள்:

மரம் அல் எகின் மொழி = மரம் என்ற பொருளைத் தவிர்த்த எகின் (அன்னபட்சி) என்னுஞ் சொல்

இயல்பும் = வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வர இயல் பாதலும்

அகரம் மருவ = இருவழியிலும் அகரச்சாரியை பொருந்த வலிமெலி மிகலுமாகும் = வல்லெழுத்தாவது இனமெல்லெழுத் தாவது மிகுதலுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 13. குயின் ஊன்

குயின் ஊன் என்பனவற்றின் இறுதியெழுத்தாகிய ன் என்ற மெய் வேற்றுமைக்கண்ணும் வல்லினம் வரின் திரியாது. இயல்பாகப் புணரும்.

உ-ம். குயின் கருமை, குயின்கருமை, ஊன் சிறுமை, ஊன் சிறுமை.

இதற்குச் சூத்திரம்: -

**௲௩௭. குயினூன் வேற்றுமைக் கண்ணுமியல்பே.**

இதன் பொருள்:

குயின் ஊன் = குயின் (மேகம்) ஊன் என்பனவற்றின் இறுதியிலுள்ள ன் என்ற மெய்யெழுத்து

வேற்றுமைக்கண்ணும் இயல்பு = வேற்றுமையிலும் இயல்பாகும்.

உம்மையால் அல்வழியிலும் இயல்பாகும்.

### 14. மின் பின் பன் கன்.

மின் பின் பன் கன் என்ற சொற்கள் வருமொழி முதலெழுத்தாக யகரமல்லாத மெய்கள் வரின் உகரச்சாரியை பெறும்.

உ-ம் மின் (மின்னல்) சிறந்தது, மின்னுச்சிறந்தது. பின் (முதுகு) பெரிது, பின்னுப் பெரிது. பன் (ஒருவிதப்புல்) வலிது, பன்னு வலிது.

கன் அகரச்சாரியையை ஏற்று வருமொழி முதலிலுள்ள வல்லெழுத்தாவது அதற்கினமாகிய மெல்லெழுத்தாவது மிகப் பெறும்.

உ-ம் கன் தட்டு, கன்னத்தட்டு, கன்னந்தட்டு, (கன் =சிறு தராசு)

இதற்குச் சூத்திரம் : -

**௲௩௮ . மின்பின் பன்கன் றொழிபெய ரனைய**
**கன்னவ் வேற்று வன்மையோ டுறழும்**

இதன் பொருள்:

மின் பின் பன் கன் = இந்த நான்கு சொற்களும் யகரமல்லாத மெய்கள் வரின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற் பெயர் அனைய = தொழிற்பெயர் போல உகரச்சாரியை பொருந்தும்.

கன்= அவைகளுள்ளே கன்னென்பது

அ ஏற்று = அகரச்சாரியையும் பெற்று

மென்மை யோடு உறழும் = வல்லெழுத்து வந்தால் அவ்வல் லெழுத்தாவதுஅதற்கு இனமான மெல்லெழுத்தாவது மிகப் பெற்று விகற்பித்து வரும்.

*15. தன், என். நின், மான், அழன், அலவன், வரின்:*

தன் என் என்பனவற்றின் இறுதியொழுத்தாகிய ன் என்ற மெய்யெழுத்து, வருமொழி முதலில் வல்லெழுத்து வந்தால், றகரமாகத் திரிதலையும் இயல்பாக நிற்றலையும் பொருந்தும். உ-ம். தன் பகை. தன்பகை. தற்பகை. என் பகை, என்பகை, எற்பகை.

நின் என்பது வல்லினம் வந்தாலும் இயல்பாகும்.

உ-ம். நின் பகை= நின்பகை.

மின், பின், என்பன மின்கடிது பின் சிறிது என்று உகரச் சாரியை இன்றி வருதலுமுண்டு.

மான் குளம்பு, மான்குளம்பு, அழன் (பிணம்) கை, அழன் கை: அலவன் கால் , அலவன்கால், முதலியன வேற்றுமையில் னகர ஈற்றில் சிறப்புவிதி கூறப்பெறாதவைகள் இயல்பாதலுமுண்டு.

வரின் கொள்வான், வரிற்கொள்வான் என்று அவ்வழியில் திரிந்து புணர்தலுமுண்டு.

இதற்குச் சூத்திரம்: -

**௩௩௭. தன்னென் னென்பற் றீற்றுனவ் வன்மையோ
டுறழு நின்னீ றியல்பா முறவே.**

இதன் பொருள்

தன் என்பவற்று = தான் யான் என்பவற்றின் விகாரமாகிய தன் என் என்னுஞ் சொற்களினது

ஈற்று ன= இறுதியிலுள்ள னகரமெய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்மையோடு உறழும் = வல்லினம்வரின் றகரமாகத் திரிந்தும் இயல்பாகியும் விகற்பிக்கும்.

நின் ஈறு இயல்பு ஆம்=நின் என்பதன் ஈற்று னகரமெய் இயல் பாகப் புணரும்.

### 16. மகர ஈறு.

மகர ஈற்றுச் சொற்கள் இருவழியிலும் புணரும் பொழுது ஈறுகெடும்.

உ-ம். மரம் அடி, மர அடி, மரவடி.

மகர ஈறு, வேற்றுமையில் உயிரெழுத்து வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்து வரக் கெடும்.

உ-ம் மரம் அடி (அகர உயிர்) மர அடி. மரம் வண்டி( வகர இடை) மரவண்டி. மரம் கொப்பு ( வல்லெழுத்து க்) மாக்கொப்பு. மரம் ஞாளி ( மெல்லெழுத்து ஞ்), மர ஞாளி.

மகர ஈறு, அல்வழியில் பண்புத்தொகை உவமைத் தொகை களில் உயிர்க்கணம் வன் கணம் மென் கணம் இடைக்கணம் வரக் கெடும்.

உ-ம் மரம் உருள், மரஉருள். (பண்புத்தொகை, மரமாகிய உருள்). பவளம் வாய், பவளவாய் (உவமைத் தொகை, பவளம் போன் ற வாய்).

பண்புத்தொகை உவமைத் தொகைகளில் வல்லெழுத்துவ ரின், மகர ஈறு கெட்டு, வரும் வல்லெழுத்து மிகும்.

உ-ம். வட்டம் கல், வட்டக்கல். கமலம் கண், கமலக்கண்.

வேற்றுமையில் வினையாலணையும் பெயர் இறுதியிலும். தனிக்குறிலின் பின்னும், வரும் மகரம் கெடாமல் வருமொழி வல்லெழுத்துக்கு இன மெல்லெழுத்தாகத் திரியும்.

உ-ம் சிறியேம் கை, சிறியேங்கை. எம் சிறுமை, எஞ்சிறுமை.

தனிநெட்டெழுத்தோடு மகர ஈற்றுச் சொற்கள் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். ஆம் (நீர்), நாம் (அச்சம்), தாம் (நீர்வேட்கை), தோம் (குற்றம்), யாம் (நாம்), தேம் (தேசம்), வேம் (வேகும்).

இதற்குச் சூத்திரம்:-

௨௬௰ மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும்.

இதன் பொருள்:

மவ்வீறு = மகர ஈற்றுச் சொற்கள்

ஒற்று அழிந்து = நாற்கணமும் வர, ஈற்று மகர மெய்கெட்டு உயிரீறு ஒப்பவும் = இயல்பான உயிரீறு போலப் புணர்வனவம் வன்மைக்கு இனம் ஆத் திரிபவும் ஆகும். = வல்லினம் வந்தால் கெடாமல் அதற்கினமாக மெல்லினமாகத் திரிவனவுமாம்.

வேற்றுமையில் சில இடங்களில் மகர ஈறுகெட்டு, வரும் வல்லெழுத்தாவது, அதற்கின மெல்லெழுத்தாவது, மிகும்.

உ-ம் குளம் கரை, குள கரை, குளக்கரை, குளங்கரை.

பண்புத் தொகையும் உவமைத் தொகையும் ஒழிந்த அல்வழியில் மகர ஈற்றின் பின் உயிரும் இடையினமும் வந்தால், மகரம் இயல்பாக நிற்கும்.

உ-ம். மரம் உயர்ந்தது, மரமுயர்ந்தது. மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தது.

வினையாலணையும் பெயரிறுதியிலும், தனிக்குற்றெழுத்தின் பின்னும், நிற்கும் மகரம் வேற்றுமையிலும், உயிரும் இடையினமும் வரின், இயல்பாகும்.

உ-ம் சிறியேம் (சிறியேமாகிய எமது) அன்பு: இந்த இரண்டு சொற்களும் கூடி ஆறாம் வேற்றுமைத் தொகை ஆயிற்று. பெயரின் இறுதி மகரம், அகர உயிர்வர, இயல்பாக நின்றது.

நம் வாழ்வு: இதில் நகரத்தின் பின் நின்ற மகரமெய் இடையினமாகிய வகரம் வர, இயல்பாக நின்றது.

இதற்குச் சூத்திரம் :-

௨௬௧. வேற்றமை மப்போய் வலிமெலி யுறழ்வும்
அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:

வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வம் = வேற்றுமைக் கண் மகர ஈறு கெட்டு வல்லினமாவது அவற்றிற்கினமாவது மிகுந்து விகற்பித்தலும்

அல்வழி உயிர் இடைவரின்= அல்வழிக்கண் உயிரும் இடையினமும் வந்தால்

இயல்பும் உள= கெடாது இயல்பாதலுமுண்டு.

### 18. நும் தம் எம் நம்.

நும் தம் எம் நம் என்னுஞ் சொற்களின் இறுதியெழுத்தாகிய மகரம் வருமொழி முதலில் ஞ, ந. என்பன, வந்தால் வந்த எழுத்துக் களாகத் திரியும்.

உ-ம். நும் ஞாண், நுஞ்ஞாண். நும் நாண், நுந்நாண்.

அழகையுணர்த்தும் அம் என்னுஞ் சொல்லினிறுதி யெழுத் தாகிய மகரம் வருமொழி முதலில் ந் ஞ் என்பன வந்தால் ந் ஞ் ஆகத் திரியும்.

உ-ம். அம் ஞாண், அஞ்ஞாண்.

பிறசொற்களின் நிலைமொழியிறுதியில் நின்ற மகரம் வரு மொழி முதலில் நகரம் வந்தால் நகரமாகத் திரியும். உ-ம் எரி தரும் நுதல் விழி, எரி தருந்நுதல்விழி (அக்கினியைச் சொரிகின்ற நெற்றிக் கண்.

இதற்குச் சூத்திரம்

ருசுஉ நுந்தம்
எம்நம் மீறா மவ்வரு ஞநவே

இதன் பொருள்:

நுந் தம் எம் நம்= இந்நான்கு மொழிகளினதும்,

ஈ, று ஆம் ம= இறுதியாகிய மகரமெய்

வரும் ஞ ந= வருகின்ற ஞகர நகரங்களாகத் திரியும்.

### 19. அகம் செவி கை

அகம் என்னும் இடப்பெயர்முன் செவி என்பதும் கை என்பதும் முறையே வந்தால் அகம் என்பதன் நடுநின்ற க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உயிர்மெய்யெழுத்துக் கெடும். மகர ஒற்று வரும். வல்லெழுத்துக்கு இனமெல்லெழுத்தாகத் திரியும். உ-ம். அகம் செவி, அஞ்செவி. அகம் கை, அங்கை, அகஞ்சிறை, அஞ்சிறை.

இதற்குச் சூத்திரம் :-

௱௬௯ அகமுனர்ச்செவிகை வரினிடை யனகெடும்

இதன் பொருள்:

அகம் முன்னர்=அகம் என்னும் சொல்லின் முன்

செவிகை வரின்= செவி என்பதும் கை என்பதும் முறையே வரின்

இடையன கெடும் = நடுகின்ற ககரமெய்யும் அதன்மேலேறி நிற்கும் அகர உயிரும் கெடும்.

## 20. ஈம் கம் உரும்

ஈம் கம் உரும் என்பனவற்றின் முன் யகரமல்லாத மெய்கள் வரின் உகரச்சாரியை பெறும்

உ-ம். ஈம் கடிது, ஈமுக்கடிது. கம் கடிது, கம்முக்கடிது. உரும் கடிது, உருமுக்கடிது.

ஈம் கம் என்பன வேற்றுமையில் அகரச்சாரியையும் அம் சாரியையும் பெறுதலும் உண்டு.

உ-ம், ஈம் குடம், ஈமக்குடம். கம் குடம், கம்மக்குடம்.

ஈம்= சுடுகாடு, கம்= கம்மியரது தொழில். உரும்= இடி.

இதற்குச் சூத்திரம்:-

௱௬௪ ஈமுங்
கம்மு முருமுந் தொழிற் பெயர் மானும்
முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே.

இதன் பொருள்

ஈமும் கம்மும் உருமும் = ஈம் கம் உரும் என்பன தொழிற்பெயர்

மானும் = தொழிற்பெயர் போல வருமொழி முதலில் யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரச்சாரியை பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலன வேற்றுமைக்கு = ஈம் கம் என்பன வேற்றுமையின் கண் அவ்வும் பெறும் = உகரச்சாரியையேயன்றி அகரச்சாரியையும் பெறும்.

**21. ய் ர் ழ் ஈறு**

அல்வழியில் உவமைத் தொகை பண்புத்தொகையல்லாத இடத்தில் ய் ர் ழ் என்பன வற்றின் முன் வல்லினம் வந்தால் இயல்பாகப் புணரும்.

உ-ம். காய் கசக்கும், காய்கசக்கும் வேர் பெரிது, வேர் பெரிது. வீழ் சிறிது, வீழ்சிறிது.

அல்வழியில் பண்புத்தொகை உவமைத் தொகைகளில் ய்ழ்ர் மிகும்

உ-ம் மெய்கீர்த்தி, மெய்க்கீர்த்தி, கார் பருவம், கார்ப்பருவம். வீழ் கயிறு வீழ்க்கயிறு.

வேற்றுமையில் வல்லினம் வந்தால் ய் ர் ழ் பெரும்பான்மை மிகும்.

உ-ம் நாய் கால், நாய்க்கால்.

வேற்றுமையில் ய் ர் ழ் என்பன சிறுபான்மை வல்லெழுத்தும், இனமெல்லெழுத்தும், மிகுந்து விகற்பித்து வரும்.

உ-ம். வேய் குழல், வேய்க்குழல், வேய்ங்குழல்.

வாய்புகுவது (வாயின்கட்புகுவது) என்ற சொற்புணர்ச்சியில் யகரத்தின் பின் புகுவத்திலுள்ள ப் என்ற வல்லெழுத்து வேற்றுமையில் இயல்பாகப் புணர்ந்தது.

பாழ்க்கிணறு என்ற பண்புத் தொகையில் ழகர ஒற்றின் பின் வல்லொற்றாகிய க வரப் பாழ்க்கிணறு என்றும் பாழ்ங் கிணறு என்றும் உறழ்ந்து புணர்ந்தது.

நோய் யானை, காய் யாது, என்பன நோயானை காயாது எனத் தனிக் குறிலைச் சாராது யகரத்தின் பின் யகரம்வர நிலைமொழியீற்று யகரங் கெட்டுப் புணர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்: -

**ரசுரு. யரழ முன்னர்க் கசதப அல்வழி**
**இயல்பு மிகலு மாகும் வேற்றுமை**
**மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்.**

இதன் பொருள்:

யரழ முன்னர் = ய் ர் ழ் என்னும் மெய்களின் மேல்

க சதப = க்ச்த்ப் வந்தால்

அல்வழி இயல்பும் மிகலும் = அல்வழியில் இயல்பாதலும் மிகுதலும்

வேற்றுமை = வேற்றுமையில்

மிகலும் இனத்தோடு உறழ்தலும் = மிகுதலும் வல்லினமாவதுமெல்லினமாவது மிகுந்து விகற்பித்தலும்

விதி = விதியாகும்.

22. தமிழ் தாழ்

தமிழ் என்பது வேற்றுமையில் நாற்கணங்களுடன் புணரும் பொழுது அகரசாரியை பெறுதலும் உண்டு. உ-ம். தமிழ் கூத்து, தமிழ்க்கூத்து, தமிழக்கூத்து, தமிழமனுஷன், தமிழவரதன், தமிழ அருணன்.

தாழ் என்பது கோல் என்பதனுடன் புணரும்போது அகரச் சாரியைபெறும். உ-ம் தாழ் கோல், தாழக்கோல் (தாழைத் திறக்குங் கோல்)

இதற்குச் சூத்திரம் : -

**தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே**
**ரசுசு. தாழுங் கோல்வந் துறுமே லற்றே**

இதன் பொருள்:

தமிழ் வேற்றுமைக்கு அவ் உறவும் பெறும் = தமிழென்னுஞ் சொல் வேற்றுமைக்கண் அகரச்சாரியை பொருந்துதலு முண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழும் கோல்வந்து உறு மேல் அற்று = தாழ் என்னுஞ் சொல், தனக்குப் பின் கோல் என்னுங் சொல் வந்தால் அவ்வாறு தமிழென்ற சொல்லைப் போல அகரச்சாரியை பெறும்.

### 23. கீழ்

கீழ் என்னும் சொல்லின் மேல் வல்லினம் வந்தால் இயல்பாயும் மிகுந்தும் விகற்பித்தும் புணரும்.

உ-ம் கீழ் குலம். கீழ் குலம் எனவும், கீழ்க்குலம் எனவும், இயல்பாயும் மிகுந்தும் புணர்ந்தது. கீழ்ப்பிறந்துங்கற்றார் என்றார் திருவள்ளுவர்.

இதற்குச் சூத்திரம்: -

**௱௩௭. கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்.**

இதன் பொருள்:

கீழின் முன் வன்மை = கீழென்னும் சொல்லின் மேல்வரும் வல்லெழுத்தானது

விகற்பமுமாகும் = ஒரு கால் இயல்பாகியும் ஒரு கால் மிகுந்தும் விகற்பிக்கும்.

### 24. லகர ளகர ஈறு

ல் ள் என்பன வேற்றுமைக்கண் வருமொழி முதலில் வலி வந்தால் லகரம் றகரமாகவும் ளகரம், டகரமாகவும் திரியும்.

உ-ம் கல் குவியல், கற்குவியல், முள் காடு, முட்காடு.

அல்வழியில் ல் ள் என்பன வருமொழி முதலில் வல்லெழுத்து வந்தால், இயல்பாகவும் விகாரமாகவும் புணரும்.

உ-ம் கல் குறிது, கல்குறிது, கற்குறிது, முள் சிறிது, முள் சிறிது, முட்சிறிது.

வருமொழி முதலில் மெல்லெழுத்து வந்தால் நிலைமொழியீற்று ல் ஆனது ன் ஆகவும், ள் ஆனது ண் ஆகவும், புணரும், உ-ம். கல் மாடம், கன் மாடம். முள்மரம், முண்மரம்.

வருமொழி முதலில் இடையெழுத்து வந்தால் நிலை மொழியிறுதியிலுள்ள ல் ள் என்பன இயல்பாம். உ-ம் கல் வெள்ளை, கல் வெள்ளை, முள் வேலி, முள்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றோடு மயங்காத தகரம் வரின், இயல்பாகாது திரிந் தேவரும். உ-ம் கல் தீது, கற்றீது. முள் தீது, முட்டீது.

இதற்குச் சூத்திரம்: -

ாகூஅ. லளவேற் றுமையிற் றடவு மல்வழி
யவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேலி னணவு மிடைவரி னியல்பு
மாகு மிருவழி யானு மென்ப.

இதன் பொருள்:

ல ள = லகர ளகர மாகிய இரண்டு மெய்யீறுகளும் வேற்றுமையில் வலிவரின் = வேற்றுமையிலே வல்லினம் வந்தால் ற ட வும் = றகர டகர மெய்களும்

அல்வழி அவற்றோடு உறழ்வுமாம் = அல்வழிக்கண் றகார டகாரங்களுடனே உறழ்வனவுமாகும்.

இருவழியாலும் = அல்வழியிலும் வேற்றுமையிலும் மெலிமேவின் னணவும் = மெல்லெழுத்து வந்தால், முறையே னகர ணகர மெய்களும் இடைவரின் இயல்புமாகும் என்ப இடையினர் வந்தால் இயல்புமாகும் என்று சொல்லுவார் - புலவர்.

25. லகர ளகர ஈற்றுச் சிறப்பு விதி

தனிக்குற்றெழுத்தின் பின் நின்ற ல் ள் என்பன அல்வழிக் கண்ணே தகரம் வரின் றகர டகரமாகத் திரிதலேயன்றி ஆய்தமாக வும் திரியும்.

உ-ம். கல் தீது, கற்றீது, கஃறீது. முள் தீது, முட்டீது முஃடீது.

இதற்குச் சூத்திரம்: -

ாகூகூ குறில்வழி லளத்தவ் வணையி னாய்த
மாகவும் பெறூஉ மல்வழி யானே

இதன் பொருள்:

குறில் வழி ல ள = குற்றெழுத்துக்குப் பின் நின்ற லகார ளகாரங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த அணையின் = வருமொழி முதலில் தகரம் வந்தால், அல்வழியான் ஆய்தமாகவும் பெறூஉம் = அல்வழிக்கண் ஆய்தமாகவும் திரியும்.

### 26. லகார ளகார ஈற்றின் கேடு

தனிக்குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்களுக்குப் பின் ல் ள் என்பன, அல்வழியில் வருமொழி முதலில் வந்த தகரந் திரிந்த பின், கெடும். உ-ம். வேல் தீது, வேல்றீது, வேறீது. நாள் தீது, நாள் டீது, நாடீது.

குற்றெழுத்தின் பின் அல்லாத மற்றையிடத்து ல ள என்பன, வருமொழி முதலில் வந்த நகரந், திரிந்த பின், அல்வழி வேற்றுமை என்னும் இரண்டிடத்தும் கெடும். உ-ம். வேல் நன்று, வேனன்று. வாள் நன்று, வாணன்று. வாள் நன்மை, வாணன்மை.

அல்வழியில் உவமைத் தொகை பண்புத்தொகை தவிர்ந்த ஏனைய புணர்ச்சிகளில், ல ள உறழாது இயல்பாகும். உ-ம். கால் கடியன, கால்கடியன. மக்காள் சென்மின், மக்காள் சென்மின். கால் சுடர், கால்சுடர். அருள் குருகு அருள்குருகு.

அல்வழியிலே பண்புத்தொகை உவமைத் தொகைகளில் ல் ள் என்பனவற்றின் முன் வல்லினம் வந்தால், உறழாது திரிந்தே புணரும்.

உ-ம், கால் கமலம், காற்கமலம்.

வேற்றுமையிலே சில இடத்து ல் ள் என்பன. வருமொழி முதலில் வல்லெழுத்து வரத், திரியாது இயல்பாதலும் உண்டு.

உ-ம். கால் குதித்தோடிக் கடல்புக மண்டி.

வாள் போழ்ந்தட்ட நீள்கழன் மறவர்.

இந்தச் செய்யுளின் முதலடியில் கால் குதித்து என்றது. காற் குதித்து எனத் திரியாமல், கால் குதித்து என இயல்பாகப் புணர்ந்தது. அவ்வாறே கடல்புக என்பதும், இரண்டாமடியில் வாள் போழ்ந்து, வாட்போழ்ந்து எனத் திரியாமல், வாள் போழ்ந்து என இயல் பாகின்றது. இவ்வாறே நீள் கழலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றல் (அரசனது) தாள் (அடி), தோன்றறாள் எனவும், வேள் (வேட்கப்படுவோன், விரும்பப்படுவோன்) தோள், வேடோள் எனவும், புணர்ந்தன. இதற்கு விதி லகர ளகரங்களை இறுதியிலுள் உயர் திணைச் சொற்கள், வேற்றுமையில் வல்லினம்வரத் திரியாமல் கெடும்.

கால் துணை காற்றுணை எனவும், தாள் துணை தாட்டுணை எனவும். பிறங்கல் தோள் பிறங்கற்றோள் எனவும், அல்வழி பண்புத் தொகை உவமைத்தொகை உம்மைத் தொகைகளில் லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவுந், திரியும்.

இதற்குச் சூத்திரம்: -

௩௭௰. குறில் செறி யாலள அல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்புந் திரிபு மாவன வுளபிற.

இதன் பொருள்:

குறில் செறியா ல ள = தனிக்குறிலொன்றனையும் சாராத லகர ளகரங்கள்.

அல்வழி வந்த தகரம் திரிந்த பின் கேடும் = அல்வழிக்கண் வரு மொழி முதலில் வந்த தகரந் திரிந்த பின் கெடுதலும் ஈரிடத்தும்

வரு ந திரிந்த பின் மாய்வும் = அல்வழி வேற்றுமை என்னு மிரண்டிடத்தும் வருமொழி முதல் நகரந்திருந்த பின் கெடுதலும்

வலிவலின் இயல்பும் = வல்லெழுத்து வந்தால் அல் வழி யில் உறழாது இயல்பாதலும் வேற்றுமையில் திரியாதியல் பாதலும்

திரிவும் = அல்வழிக்கண் உறழாது திரிதலும்

ஆவன உள = பொருந்துவனவாம்.

27. லகரத்தை இறுதியாகவுடைய (விகுதியைப் பெற்ற) தொழிற் பெயர், அல்வழிவேற்றுமைகளில் யகரமல்லாத மெய்கள் வந்தால், உகரம் பெறாது.

உ-ம். ஆடற்சிறந்தது. ஆடலு என்று வராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளகரத்தை இறுதியாகவுடைய முதனிலை திரிந்த தொழிற் பெயர், இருவழியிலும் யகரமல்லாத மெய்கள் வந்தால், உகரம் பெறாது.

உ-ம் கோட்கடிது. கோளுக்கடிதென்று வராது.

இந்தத் தொழிற் பெயர்களிற் சில, அல்வழியில் வல்லின முதன்மொழி வந்தால், இயல்பாகும்.

உ-ம். நடத்தல் கடிது.

இதற்குச் சூத்திரம்: -

ΠΈக லளவிறு தொழிற்பெய ரீரிடத்து முவ்வுறா
வலிவரி னல்வழி யியல்புமா வனவுள.

இதன் பொருள்:

ல ள இறு தொழிற்பெயர் = லகர ளகரங்களை இறுதியாகவுடைய (விகுதி பெற்ற) தொழிற்பெயரும், ளகரத்தை இறுதியாகவுடைய (முதனிலை திரிந்த) தொழிற்பெயரும்,

ஈர் இடத்தும் = இருவழியிலும்

உ உறா= (யகரமல்லாத மெய்கள் வந்தால்) உகரம் பெறாவாம்.

வலிவரின் = வல்லினம் வந்தால்

அல்வழி இயல்பும் ஆவன உள = அல்வழியில் ( உறழாமல்) இயல்பாகுந் தொழிற்பெயர்களும் சில உண்டு.

28. வல்

வல் என்பதன் இறுதியில் நின்ற ல் என்ற மெய்யெழுத்து, இருவழியிலும் வருமொழியோடு புணருமிடத்து, உகரச்சாரியை பெறும். (வல் = சூதாடுகருவி)

உ-ம். வல் நன்று, வல் உ நன்று, வல்லுநன்று.

வல் என்பதனுடன் பலகை நாய் என்பன வந்தால் உகரச் சாரியை யன்றி அகரச் சாரியையும் பெறும். உ-ம் வல்பலகை, வல்லப் பலகை, வல் நாய், வல்லநாய் ( நாய்போற் செல்லும் சூதாடு கருவி) புலி குதிரை என்னும் பிற பெயர்கள், வல் என்பதனோடு புணர்ந்தால், அகரச்சாரியை பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம் : -

உஎஉ வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்
பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம்

இதன் பொருள்:

வல் இருவழியும் = வல் என்பது அல்வழி வேற்றுமை என்ற இரண்டிடத்தும்.

தொழிற்பெயர் அற்று = தொழிற்பெயரின் தன்மையுடைய தாய் உகரச்சாரியை பெறும்.

பலகை நாய் வரினும் = பலகை நாய் என்னுஞ் சொற்கள் வந் தால் வேற்றுமைக்கு அவ்வுமாம் = வேற்றுமைக்கண் அகரச்சாரி யையும் பெறும்.

**29.** நெல். செல், கொல், சொல்,

நெல், செல்( மேகம்) கொல் ( கொல்லன்) சொல் என்பனவற் றின் பின் வல்லினம் வந்தால் இரு வழியினும் றகரமாகத் திரியும்.

உ-ம் அல்வழியில், நெல் சிறிது, நெற்சிறிது, செல்கரிது, செற் கரிது. கொல் கொடிது, கொற்கொடிது. சொல் சிறிது, சொற்சிறிது. வேற்றுமையில், நெல் குதிர், நெற்குதிர். செல் கருமை, செற்கருமை, கொல் கொடுமை, கொற்கொடுமை. சொல் சிறுமை, சொற்சிறுமை.

இதற்குச் சூத்திரம்: -

உஎ௩. நெல்லுஞ் செல்லுஞ் கொல்லுஞ் சொல்லும்
அல்வழி யானும் றகர மாகும்

இதன் பொருள் :

நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும் = இந்த நான்கு சொற்களும்.

அல்வழியானும் றகரமாகும் = அல்வழியக்கண்ணும் வேற்று மைப் புணர்ச்சி போலவே வல்லினம் வந்தால் ல் என்ற எழுத்து ற் ஆகத் திரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 30. இல் என்னுஞ் சொல் சாரியை பெற்றுப் புணர்தல்.

இல்லாமையை உணர்த்தும் இல் என்னுஞ் சொல் நாற் கணத் தோடு புணரும்போது, ஆகார ஐ காரச் சாரியைகளைப் பெறும். வல்லினம் வரின் அவ்வல்லினம் மிகும்.

உ-ம் இல் பொருள், இல் ஆ பொருள், இல்லாப் பொருள். இல் பொருள், இல் ஐ பொருள், இல்லைப் பொருள்.

இல் என்பது சாரியை பெறாது வந்தால் வருமொழி முதல் மெல்லின மல்லாத இடத்து இயல்பாகப் புணரும். உ-ம். இல் பொருள் இல் பொருள். இல் வீடு, இல்வீடு.

இதற்குச் சூத்திரம்: -

௩௭௪. இல்லெ னின்மைச் சொற்கை யடைய
வன்மை விகற்பமு மாகா ரத்தொடு
வன்மை யாகலு மியல்பு மாகும்.

இதன் பொருள்: -

இல் என் இன்மைச் சொற்கு ஐ அடைய = இல்லாமையை உணர்த்தும், இல் என்னும் சொற்கு ஐ காரச்சாரியை வர வன்மை விகற்பமும் = வருமொழி முதலினின்ற வல்லினம் விகற்பித்தலும்.

ஆகாரத்தொடு வன்மையாகலும் = ஆகாரச்சாரியை பொருந்த அவ்விடம் வரும் வல்லினம் மிகுதலும் இயல்புமாகும். = இவ்விருவிதியும் பெறாது இயல்பாதலு முண்டு.

### 31. புள், வள்

புள் வள் என்னுஞ் சொற்கள், இரு வழியிலும் யகரமல்லாத மெய்கள் வந்தால், உகரச்சாரியை பெற்றுப் புணரும்.

உ-ம். புள் ( பறவை) கடிது. புட் கடிது, புள்ளுக்கடிது. வள் நன்மை, வண்ணன்மை, வள்ளுநன்மை.

இதற்குச் சூத்திரம்: -

௩௭௫ புள்ளும் வள்ளும் தொழிற்பெயரு மானும்

இதன் பொருள் :

புள்ளும் வள்ளும் = புள் வள் என்னும் இரண்டு சொற்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பெயரும் மானும் = தொழிற்பெயர்போல யகர மல்லாத மெய்வரின் இகரச்சாரியை பெறுதலுமுண்டு.

### 32. வகர ஈறு

அவ் இவ் உவ் என்னும் சொற்களினிறுதியிலுள்ள வகர மெய், வல்லின முதன் மொழி வந்தால், ஆய்தமாகத் திரியும்.

உ-ம். அவ் கடிய, அஃகடிய.

அவ் இவ் உவ் என்னும் சொற்களினிறுதி, வகரமெய் மெல் லெழுத்து வந்தால். வந்த மெல்லெழுத்தாகத் திரியும். உ-ம். அவ் ஞாலம், அஞ்ஞாலம்.

அவ் இவ் உவ் என்னும் சொற்களினிறுதி வகரமெய், இடை யினம் வந்தால், இயல்பாகும். உ-ம். அவ் யானை, அவ் யானை. இவ்விதிகள் அல் வழிக்கு மாத்திரமே உரியன.

இதற்குச் சூத்திரம்: -

௱௭௬. சுட்டு வகரமூ வினமுற முறையே
ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்.

இதன் பொருள்: -

சுட்டு வகரம் = அவ் இவ் உவ் என்னும் அஃறிணைச் சுட்டுப் பெயர்களீற்று வகரம்.

மூவினம் உற = வல்லினம் மெல்லினம் இடையினம் என்பன வர முறையே ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும் = முறையே வல்லினம் வர ஆய்தமும், மெல்லினம் வர மெல்லினமும், இடையினம் வர இயல்பும் ஆகும்.

### 33. தெவ்

தெவ் என்பது யகரமல்லாத மெய்களோடு புணரும் பொழுது உகரச்சாரியை பெறும். உ-ம் தெவ் கடிது, தெவ்வுக்கடிது.

தெவ் என்பது, வருமொழி முதலில் மகரம் வந்தால் வகரம் மகரமாகத் திரியவும் பெறும். உ- ம். தெவ் முனை, தெம்முனை, தெவ்வுமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்

௩௭௭ தெவ் வென் மொழியே தொழிற்பெய ரற்றே
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்.

இதன் பொருள்: -

தெவ் என் மொழி தொழிற் பெயர் அற்று =தெவ் என்னுஞ் சொல் தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெறும்.

ம வரின் = மகரம் வருமொழி முதலில் வந்தால் வஃகான் மவ்வும் ஆகும் = உகரச்சாரியை பெறுதலேயன்றி ஒரோ விடத்து வகர மெய் மகரமெய்யாகத் திரியவும் பெறும்.

### 34. வருமொழி தகர நகரந் திரிதல்

னகர லகர ஈற்றுச் சொற்களின் முன்வரும் தகரம் றகரமாகத் திரியும். உ-ம். பொன் தீது, பொன்றீது. கல் தீது கற்றீது.

னகர லகர ஈற்றுச் சொற்களின் முன் வரும் நகரம் னகர மாகத் திரியும்.

உ-ம் பொன் நன்று, பொன்னன்று. கல் நன்று, கன் னன்று.

ணகார ளகார ஈற்றுச் சொற்களின் முன்வரும் தகரம் டகரமாகத் திரியும். உ-ம் மண் தீது, மட்டீது. முள் தீது, முட்டீது.

ணகார ளகார ஈற்றுச் சொற்களின் முன்வரும் நகரம் ணகரமாகத் திரியும் . உ-ம். மண் நன்று, மண்ணன்று, முள் நன்று முண்ணன்று. இவை இங்ஙனம் அல்வழியிற் புணர்ந்தன.

பொற்றீமை கற்றீமை பொன்னம்மை கன்னம்மை மட்டீமை முட்டீமை மண்ணன்மை முண்ணன்மை என வேற்றுமை யிற் திரிந்தன.

இதற்குச் சூத்திரம்: -

௩௭௮ னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகுந் தநக்க ளாயுங் காலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:

ன ல முன்= னகர லகர மெய்களின் முன்

த நக்கள். றனவும்= வருகின்ற தகர நகரங்கள் (முறையே) றகர னகரங்களாகவும்

ணளமுன் = ணகர ளகர மெய்களின் முன் தகர நகரங்கள் டணவும் ஆகும்= டகர ணகரங்களாகவும் திரியும்.

ஆயுங்கால்= ஆராயுமிடத்து.

35. உருபு புணர்ச்சியின் முடிபைப்
பொருட்புணர்ச்சிக்கும் ஏற்றுதல்.

நிலைமொழி, உருபோடு புணரும் உருபுபுணர்ச்சியில் எய்தும் நிலைமைகளை அவ்வுருபு தொக்குவரும் பொருட்புணர்ச்சி யிலும் எய்தும்.

உருபு புணர்ச்சியாவது, நிலைமொழி வருமொழியோடு புணருங்கால், நடுவே உருபுபெற்று அவ்வுருபோடு புணரும் புணர்ச்சியாம்.

உ-ம் தான் கண்டான், தன் ஐ கண்டான், தன்னைக் கண் டான். இங்கே தான் என்ற நிலைமொழியும் ஐ என்ற உருபும் புணர் வதே உருபு புணர்ச்சியாம்.

பொருட்புணர்ச்சியாவது உருபு மறைந்து நிற்க நிலை மொழியும், வருமொழியும் புணருவதாம். உ-ம். தான் ஐ கண்டான் என்பது உருபு புணர்ச்சி. பொருட்புணர்ச்சியில் உருபு மறைந்து தான் குறுகி, தன் கண்டான் என்றானது. எல்லாம் பயன் என்பது, ஆறாம் வேற்றுமையில் எல்லாம் அது பயன் என்று நிற்கும். இங்கே எல்லாம் அது என்னும் உருபு புணர்ச்சியின் நடுவில் அற்று என்னும் சாரி யையும், அது என்னும் உருபின் பின் உம் என்னும் இடைச் சொல் லும், தோன்றும். தோன்றியபின் எல்லாவற்றதும் என்று புணரும், இதற்கு விதி பின்னர்க் கூறப்படும்.
(பக்கம் 266)

பொருட்புணர்ச்சியிலும் எல்லாம் பயன் என்பன நடுவில் அற்று என்ற சாரியையும், பயன் என்பதன் பின் உம் என்பதும், பெற்று எல்லாவற்றுப் பயனுமெனப் புணரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் தாம் என்பன, வேற்றுமை உருபுகளை ஏற்கும் பொழுது, தன் தம் எனக்குறுகி நிற்கும்.

அவ்வாறே உருபு தொக்கு தான் கை, தாம் கை என்று புணரும் பொருட்புணர்ச்சிக்கண் முதலெழுத்துக் குறுகித் தன் கை, தங்கை என்று நிற்கும்.

இதற்குச் சூத்திரம்: -

**௨௪௯ உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்.**

இதன் பொருள்:

உருபின் முடிபவை = மேல் உருபு புணர்ச்சிக்கண் முடியும் முடிபுகள்.

அப்பொருளினும் ஒக்கும் = அவ்வுருவின் பொருட்புணர்ச் சிக் கண்ணும் ஒத்து முடியும்.

*36.* இடை உரிச் சொற்களின் புணர்ச்சி.

இடைச்சொல் நிலைமொழியாக நின்று புணருமிடத்து மேற்கூறிய புணர்ச்சி இலக்கணங்கள் வேறுபட்டு வருவது முண்டு.

மடவை மன்ற தடவுநிலைக் கொன்றை என்ற செய்யுள டியில் மன்ற என்னும் அகர ஈற்று இடைச்சொல்லின் முன்னர் வந்த வல்லினம், இயல்பினும் விதியினும் என்ற விதிப்படி, மிகாமல் இயல் பாகப் புணர்ந்தது.

ஆன் கன்று, மான் கன்று, என வேற்றுமைப் புணர்ச்சிக் கண் ஆமா என்பவற்றின் சாரியையாகிய னகரங்கள் திரியாது இயல்பாயின.

உரிச்சொல் நிலைமொழியாக நின்று புணருமிடத்தும் மேற் கூறிய புணர்ச்சியிலக்கணங்கள் வேறுபட்டு வருவதுமுண்டு. உ-ம். மழகளிறு ( இளம் யானை). இங்கே ம ழ என்பது உரிச் சொல்லாத லின் அதன் முன் வலிமிகாமல் இயல்பாயிற்று.

வடசொல் நிலைமொழியாக நின்று புணருமிடத்து மேற் கூறிய புணர்ச்சியிலக்கணங்கள் வேறுபடுவதுமுண்டு. உ-ம். அளிகுலம், பாத புஷ்பம் என்பன வட நூன் முடிபின்படி வலிமிகாது இயல்பாகப் புணர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணப் போலிச் சொற்களும் மரூஉமொழிகளும் மேற் கூறிய புணர்ச்சியிலக்கணங்களிற் பிறழ்ந்து புணருவது முண்டு.

இலக்கணப்போலியாவது: இலக்கணமுறை பிறழ்ந்து வரினும் இலக்கண அமைதியுடைனபோல அறிஞர்களால் ஏற்கப் பட்டது. மரூஉவாவது இலக்கண முறைப்படி வழங்கிவருஞ் சொற்களினிடையில் எழுத்துக்கள் தோன்றியும் கெட்டும் திரிந்தும் வந்தமையால் இலக்கணம் சிதைந்து மருவி வழங்குவது.

உ-ம். இல்முன், முன்றில். பொது இல், பொதியில். இவை இலக்கணப் போலி.

அருமருந் தன்னபிள்ளை (அரு மருந்து அன்னபிள்ளை), அருமந்த பிள்ளை, சோழன் நாடு, சோணாடு. இவை மரூஉ.

### 37. வடசொற் புணர்ச்சி

வடமொழித் தொகை மொழிகள் தமிழில் வருங்கால் பெரும்பாலும் அவ்வடமொழிப் புணர்ச்சியே பெறும்.

வடமொழிப் புணர்ச்சியில் தீர்க்கசந்தி குணசந்தி விருத்தி சந்தி என்று மூவகைப் புணர்ச்சிகள் உண்டு. (சந்தி = புணர்ச்சி)

#### தீர்க்க சந்தி

அகர ஆகாரங்களின் முன் அகரமும் ஆகாரமும் வரின், நிலைமொழியீறும் வருமொழிமுதலும் கெட, புதிதாக ஆ என்ற அக்ஷரம் தோன்றும்.

உ-ம் பத அம்புயம், பதாம்புயம், சிவ ஆலயம், சிவாலயம். தேச அதிபதி, தேசாதிபதி. சதா ஆனந்தம், சதானந்தம்.

இகர ஈகாரங்களின் முன் இகரமும் ஈகாரமும்வரின், நிலை மொழியிறுதியும் வருமொழி முதலும் கெட, புதிதாக ஈ என்ற அக்ஷரம் தோன்றும்.

உ-ம். கிரி இந்திரன். கிரீந்திரன், கிரிஈசன், கிரீசன். மகி இந்திரன், மகீந்திரன், நதி ஈசன். நதீசன்.

உகர ஊகாரங்களின் முன் உகரமும், ஊகாரமும் வரின், நிலை மொழியிறுதியும் வருமொழி முதலும் கெட. புதிதாக ஊ என்ற அக்ஷரம் தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு உபதேசம், குரூபதேசம், மேரு ஊர்த்தவம், மேரூர்த்தவம். வதூ உத்தூவாகம், வதூத்துவாகம். வதூ ஊரு, வதூரு.

குணசந்தி

அகர ஆகாரங்களின் முன் இகரமும் ஈகாரமும் வரின் நிலைமொழியீறும் வருமொழிமுதலும் கெட, புதிதாக ஏ என்னும் அக்ஷரம் தோன்றும்.

உ-ம். நர இந்திரன், நரேந்திரன். சுர ஈசன், சுரேசன், தரா இந்திரன், தரேந்திரன், மகா ஈசன், மகேசன்.

அகர ஆகாரங்களின் முன் உகரமும் ஊகாரமும் வரின். நிலைமொழியீறும் வருமொழி முதலும் கெட, புதிதாக ஓ என்ற அக்ஷரம் தோன்றும்.

பாத உதகம், பாதோதகம். ஞான ஊர்ச்சிதன், ஞானோர்ச்சிதன். கங்கா உற்பத்தி, கங்கோற்பத்தி. தயா ஊர்ச்சிதன், தயோர்ச்சிதன்.

விருத்திசந்தி

அகர ஆகாரங்களின் முன் ஏகாரமும் ஐ காரமும் வரின், நிலைமொழியீறும் வருமொழிமுதலும் கெட, புதிதாக ஐ என்னும் அக்ஷரம் தோன்றும்.

உ-ம். லோக ஏகநாயகன், லோகைகநாயகன், சிவ ஐ ஐக்கியம், சிவைக்கியம்.

தரா ஏகவீரன், தரைகவீரன், மகா ஐஸ்வரியம், மகைசுவரியம்.

அகர ஆகாரங்களின் முன் ஓகாரமும் ஔகாரமும் வரின், நிலைமொழியீறும் வருமொழி முதலும் கெட, புதிதாக ஔ என்னும் அக்ஷரம் தோன்றும்.

உ-ம். கலச ஓதனம். கலசௌதனம், திவ்விய அவுடதம், திவ்வியௌடதம். கங்கா ஓகம், கங்கௌகம். மகா ஔதாரியம். மகௌதாரியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம் :-

ஈவுய இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்
போலியு மரூஉம் பொருந்திய வாற்றிற்
கியைப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.

இதன் பொருள்.

இடை உரி வட சொல்லில் இயம்பிய கொளாதவும் = தமிழில் இடைச் சொற்களிலும். உரிச் சொற்களிலும், வட சொற்களிலும், உயிரீற்றுப் புணரியல் மெய்யீற்றுப் புணரியல்களில் கூறிய விதிக்கு அமையாதனவும்,

போலியும் மரூஉம் = இலக்கணப் போலிச் சொற்களும் மரூஉ மொழிகளும்

பொருந்திய ஆற்றுக்கு இயையப்புணர்த்தல் = இருவகை வழக்கினும் வழங்கு முறைமைக்கு ஏற்ற தன்மையாகப் புணர்த்தல்,

யாவர்க்கும்நெறி=கற்ற வல்லாரெல்லார்க்குங் கடனாம்.

மெய்யீற்றுப் புணரியல் முற்றிற்று

---

## உருபு புணரியல்

இதுகாறும் மெய்யீற்றுச் சொற்கள் வருமொழியுடன் புணரும் விதத்தைக் கூறினாம். இனி உருபுகள் என்பவற்றுடன் நிலைமொழி வரு மொழிகள் புணரும் விதத்தைக் கூறலாம்.

உருபுகள் எண் வகைப்படும். அவை முதலாம் வேற்றுமை உருபுதொட்டு விளிவேற்றுமை உருபுவரையும் உள்ளனவாம். இவ்வெட்டுருபுகளும் உயர்திணையிலுள்ள ஆண், பெண், பலர் என்ற பெயர்களோடும், அஃறிணையிலுள்ள ஒன்று பல என்ற பாற்பெயர்களோடும் தனித்தனி சேர நாற்பதாகும்.

நம்பி (ஆண்), நங்கை ( பெண்), மக்கள் (பலர்) மரம் (ஒன்று), மரங்கள் (பல), என்பவை போன்ற ஐம்பாற்பெயர்களுடன் தனித்தனியே எட்டுருபுகளைக் கூட்டினால் நாற்பது உருபுகள் தோன்றும். பின்வருமாறு உருபுகளைக் கூட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பி (முதலாம் வேற்றுமை), நம்பியை இரண்டாம் வேற்றுமை), நம்பியால் (மூன்றாம் வேற்றுமை), நம்பிக்கு( நான்காம் வேற்றுமை), நம்பியின் ( ஐந்தாம் வேற்றுமை), நம்பியினது (ஆறாம் வேற்றுமை, நம்பியின்கண் (ஏழாம் வேற்றுமை), நம்பீ (எட்டாம் வேற்றுமை) என உயர்திணை ஆண்பாற்பெயர் எட்டுருபுகளையும் ஏற்றது. ( நம்பி = ஆடவன், ஆண்பிள்ளை), இவ்வாறே மற்றப் பாற் பெயர்களுடனும் உருபைக் கூட்டுக.

இதற்குச் சூத்திரம்: -

ஈவ௲ ஒருவ னொருத்தி பலரொன்று பலவென
வருபெய ரைந்தொடு பெயர்முதலிருநான்
குருபு முறழ்தர நாற்பதா முருபே.

இதன் பொருள்: -

ஒருவன் ஒருத்தி பலர் = ஆண்பாற் பெயரும், பெண்பாற் பெயரும், பலர்பாற் பெயரும்.

ஒன்று பல என = ஒன்றன் பாற்பெயரும் பலவின் பாற் பெயரும் என்று

வருபெயர் ஐந் தொடு = கருதப்படும் ஐம்பாற்பெயருடன்

பெயர்முதல் = எழுவாயுருபு முதல் விளியுருபு ஈறாகவுள்ள

இருநான்கு உருபும் உறழ்தர = எட்டுருபுகளையும் பெருக்க

உருபு நாற்பதாம் = உருபுகள் நாற்பதாகும்.

உருபுகள் வருமாறு

வேற்றுமையுருபுகள். தம்பொருளை உணர்த்துமாறு பெயர்ச் சொற்களின் பின்வரும். உ-ம் நம்பியைப் பெற்றான்.

உருபுகள் பெயர்ச்சொற்களின் பின் வரும்பொழுது, விரிந்தும் மறைந்தும் வரும். உ-ம். மரத்தைத் தறித்தான், மரந் தறித்தான்.

இதற்குச் சூத்திரம்: -

ஈஅஉ .பெயர்வழித் தம்பொரு டரவரு முருபே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:

பெயர் வழி தம்பொருள் தர = பெயர்ச் சொற்களின் பின் தமது பொருளை யுணர்த்துமாறு

உருபு வரும் = வேற்றுமையுருபுகள் விரிந்தும் மறைந்தும் வரும்.

ஐ முதலிய ஆறுருபுகளும் நிலைமொழி வருமொழிகளோடு புணரும் பொழுது, இயல்பாகியும் தோன்றல் திரிதல் கெடுதலாகிய விகாரங்களைப் பெற்றும் வரும்.

நம்பிகண் வாழ்வு. இது "ஆவியரமுன் வன்மை மிகா" (ப. 185) என்ற விதிப்படி நம்பிக்கண் எனமிகாது இயல்பாகப் புணர்ந்தது.

கண் வாழ்வு. இது" ணனவல்லினம்... பிறவரினியல்பு மாகும்" (ப.234) என்ற விதிப்படி இயல்பாகப் புணர்ந்தது.

உறிக்கண் தயிர். இது உயிரீற்று நிலைமொழியானதால் "இயல்பினும் விதியினும் நின்ற வுயிர்முன் கசதப மிகும்" (ப.194) என்ற விதிப்படி கண் என்பதன் முன்நின்ற வல்லொற்று மிக்கது. தயிரென்பது வல்லொற்று முதன் மொழியானதால் கண்ணுருபின் ஈற்று ணகரம் "ணனவல்லினம் வரட்டறவும்" (ப.234) என்ற விதிப்படி டகரமாகத் திரிந்தது.

உறிக்கண் தயிர் உறிக்கட்டயிர் என்றாயிற்று.

பழி கு (நான்காம் வேற்றுமை உருபு) இது இயல்பினும் என்ற விதிப்படி இகர ஈற்று நிலை மொழிக்கும் வல்லொற்றை முத லிற் கொண்ட உருபிற்கும் இடையில் ககரம் மிகுந்து புணர்ந்தது.

பழிக்கு அஞ்சி, பழிக்கஞ்சி, இது "உயிர்வரின் உக்குறள்" (ப. 192) என்ற சூத்திர விதிப்படி உகரம் மெய்யை விட்டு நீங்க, "உடன் மேல் உயிர் வந்து" (ப.230) என்ற விதிப்படி, ககர ஒற்றில் அகர மேறியது. இப்படி கு உருவின் முதலும் ஈறும் விகாரமாயின.

உருபுகள் சிறுபான்மை வேற்றுமையிற் புணரும் பெயர்களி னின்றும் வேறுபட்டுப் புணரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். நமக்கு பிள்ளை என்பது "வன்றொடரல்லன முன் மிகா அவ்வழி" என்ற விதிப்படி. (ப. 210, சூ. 122), நமக்குப் பிள்ளையென மிகுந்தது.

இதற்குச் சூத்திரம்: -

ஈவுரு. ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்
ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே

இதன் பொருள்:

ஒற்று உயிர் முதல் உருபுகள் = மெய்யெழுத்தையும் உயிரெழுத்தையும் முதலும் இறுதியுமாக உள்ள உருபுகள் புணர்ச்சியின் வேற்றுமைப் புணர்ப்பு = நிலைமொழி வருமொழிகளோடு புணருமிடத்து வேற்றுமை வழியாகப் புணர்கின்ற அப் பெயர் = மெய் உயிர் முதலீறாகவுள்ள பெயர்ச்சொற்களை மன் ஒக்கும் = பெரும்பாலும் ஒத்து முடியும்.

பதமும் உருபும் புணரும்பொழுது பதத்தோடு உருபைச் சாரச் செய்வது சாரியை எனப்படும். பதத்தோடு பதஞ்சேரும் பொழுதும், பகுதியோடு விகுதி சேரும்பொழுதும், இடையிலும் இறுதியிலும் தோன்றி அவற்றைப் புணர்ததி நிற்பதும் சாரியை.

மேற்கூறியவாறு சாரியை தோன்றும் போது பதத்துக்கும் பதத் தொடருக்கும் ஏற்றபடி ஒரு சாரியையும் பல சாரியையும் ஒரே யிடத்தில் வருவதுமுண்டு.

பதத்துடன் உருபுக்கும் உ-ம்: ஆகு, ஆவுக்கு, இது உசாரியை.

பதத்துடன் பதத்துக்கு: தண் துறை, தண்ணந்துறை. இது அம்சாரியை.

பகுதியுடன் விகுதிக்கு: நட, நடந்தனன். இது அன் சாரியை மரத்தினை. இதில் அத்து இன் என்ற இரண்டு சாரியைகள் வந்தன.

சாரியை மேற்கூறிய புணர்ச்சிகளில் வரவேண்டும் என்ற யாப்புறவு (கட்டுப்பாடு) இல்லை. வராது புணர்தலும், வந்தும் வராதும் புணர்தலும், உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரியை வராது புணர்தலுக்கு உ-ம்: எட்டு ஐந்துஎண்ணைந்து.

சாரியை வராதும் வந்தும் புணர்தலுக்கு உ-ம்: அது. வராது புணர்ந்தால், அது, அதை என்றாகும். வந்து புணர்ந்தால், அது அதனை என்றாகும். அவ்வாறெனில், அது, ஐ உருபைப்பெற்றால், அதை என்று புணரும், இதனிற் சாரியையில்லை அது அன் சாரியையைப் பெற்றால் அதன் என்று வந்து, ஐ என்ற உருபோடு கூடி, அதனை என்றாகும்.

இதற்குச் சூத்திரம்:-

ㅠஅச • பதமுன் விகுதியும் பதமு முருபும்
புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை
வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்.

இதன் பொருள்

பதமுன் விகுதியும் பதமும் உருபும் புணர்வழி = பதத்துடன் விகுதியும் சொல்லும் ஐ முதலிய உருபும் புணருமிடத்து, சாரியை ஒன்றும் பலவும் = ஒரு சாரியையாவது பல சாரியையாவது வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும். = வருவதும் வராமையும் வந்தும் வராதும் விகற்பித்து நிற்றலுமுண்டு.

சாரியைகளாவன: அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம் தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன் தன் தான் தாம் ஆம் ஆது என்பனவும் பிறவுமாம். இவை தனத்து நிற்கும்பொழுதும், சொற்களைச் சார்ந்து நிற்கும்பொழுதும், அர்த்தம் பெறா.

அன் சாரியைக்கு உ-ம். ஒன்றன் கூட்டம். ஒன்று அன் கூட்டம். ஆன் சாரியை: ஒரு பானுக்கு ( ஒரு பத்துக்கு). ஒரு பத்து ஆன் கு = ஒரு பாற்கு. இன் சாரியை: வண்டின் கால். வண்டு இன் கால் (வண்டினது கால்)

அல் சாரியைக்கு உ-ம்: தொடையல் (மாலை). துவைக்கப்பட்டது துவையல் என்றாற்போல, தொடுக்கப்பட்டது. தொடையல் ஆயிற்று. அற்று சாரியை: பலவற்றை, பல அற்று ஐ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்று சாரியை: பதிற்றுப் பத்து, (நூறு). பத்து இற்று பத்து. பத்துப்பத்து நூறு. பத்துப் பத்து என்ற பதங்கள் புணரும் போது இடையில் இற்றுவரும்.

அத்து சாரியை: மரத்தை மரம் அத்து ஐ

அம் சாரியை: மன்றம், மன்று அம்.

தம் சாரியை: எல்லார் தம்மையும், எல்லார் தம் ஐ உம்.

நம்சாரியை: எல்லா நம்மையும், எல்லாம் நம் ஐ உம் (எங்களெல்லாரையும்).

நும்சாரியை: எல்லீர் நும்பையும், நும் ஐ உம் (உங்கள் எல் லோரையும்),

| | | |
|---|---|---|
| ஏ சாரியை | காலே அரைக்கால் | கால் ஏ அரைக்கால் |
| அ சாரியை | நடந்தது | நடத் த் அது |
| உ சாரியை | சாத்தானுக்கு | சாத்தன் உகு. |
| ஐ சாரியை | முந்தைக்காலம் | முந்து ஐ காலம் |
| கு சாரியை | உய்குவை | உய் கு வை |
| ன் சாரியை | ஆன்(பசு) | ஆன் |
| தன் சாரியை | அவன் றன்னை | அவன் தன் ஐ |
| தான் சாரியை | அவன்றான் | அவன் தான் |
| தாம் சாரியை | அவர் தாம் | அவர் தாம் |
| ஆம் சாரியை | வெள்ளாங்குருகு | வெள்ஆம் குருகு (கோழி) |
| ஆ சாரியை | இல்லாப்பொருள் | இல் ஆ பொருள் |
| து சாரியை | செய்து கொண்டான் | செய்து கொள் ட் ஆன். |

இதற்குச் சூத்திரம்: -

**௨௪௫. அன் ஆன் இன் அல் அற்றிற் றத்தம்**
**தம்நம் நும்ஏ அஉ ஐ குன**
**இன்ன பிறவும் பொதுச்சா ரியையே**

இதன் பொருள்: -

அன்... ன = அன் முதலாக ன் வரையிலும் உள்ளனவும்

இன்ன பிறவும் = இவைபோல்வன பிறவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுச் சாரியை = பதம் உருபு விகுதி என்பனவற்றோடு புணர்தற்குப் பொதுவான சாரியைகளாம்.

முற்கூறிய சூத்திரத்தில் அற்று நம் என்னுஞ் சாரியைகளை யும் பொதுவாகக் கூறி, பின்வரும் சூத்திரத்தில் அற்றுச் சாரியை அஃறிணையிலும், நம்சாரியை உயர்திணையிலும், வருமென்பதை யும், அவை இறுதியில் முற்றும்மை பெறுமென்பதையும், விளக்கு கின்றார்.

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவான எல்லாம் என்றசொல் நம் சாரியை பெற்றால் உயர்திணை யாகவும், அற்றுச் சாரியை பெற்றால் அஃறிணையாகவும் வரும்.

உயர்திணைக்கு உதாரணம்: எல்லா நம்மையும் (எங்களெல் லாரையும்). எல்லாம் நம் ஐ உம்.

அஃறிணைக்கு உ-ம் எல்லாற்றையும், எல்லாம் அற்று ஐ உம்.

இரண்டு உதாரணங்களிலும் ஐ என்பது உருபு, உம் என்பது முற்றும்மை.

உருபு ஏற்கும் போது, எல்லாம் என்ற சொல் தனக்கும் உருபிற் கும் இடையில் நம் அல்லது அற்று என்ற சாரியை பெறும் உருபின் இறுதியில் முற்றும்மை வரும்.

எல்லாம் என்பது அற்றுச் சாரியையின் பின் இன்சாரியை சேர்ந்து புணர்வது முண்டு. உ- ம் எல்லாவற்றினையும்.

இதற்குச் சூத்திரம் :-

**உஅசு. எல்லா மென்பதிழிதிணை யாயின்**
**அற்றோடுருபின் மேலும் முறுமே**
**அன்றே னம்மிடை யடைந்தற் றாகும்.**

இதன் பொருள்:

எல்லாம் என்பது இழிதிணை ஆயின் = எல்லாம் என்னுஞ் சொல் அஃறிணையில் வரும் பொழுது

அற்றோடு உருபின் மேல் உம் உறும் = அற்றுச் சாரியையும் உருபின் பின்னர் முற்றும்மையும் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றேல் = உயர்திணையில் வரும்பொழுது

இடை நம் அடைந்து = எல்லாம் என்பதற்கும் உருபுக்கும் இடையில் நம் என்னுஞ் சாரியை பெற்று.

அற்றாகும் = அது போலாகும். (உருபின் பின்னர் முற்றும்மை பெறும்)

எல்லாம் என்பது முற்றும்மையை இறுதியிற் பெற்று, எல்லா நம்மையும் என வழங்குவதைப் பற்றிக் கூறினாம். இனி முற்றும்மையை இறுதியிலுள்ளனவாகிய எல்லாரும் எல்லீரும் என்ற பதங்கள் சாரியைப் பெறும் முறையைக் கூறுவாம்.

எல்லாரும் எல்லீரும் என்னும் பெயர்களின் ஈற்றிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி, எல்லார் என்பதுடன் தம்சாரியையும், எல்லீர் என்பதுடன் நும் சாரியையும், சேர்த்து, எல்லார்தம் எல்லீர் நும் என்றிருக்கும்போது, உருபைப்புணர்த்தி, உருபு புணர்ந்த பின் இச் சொற்களினின்றும் முன்நீக்கிய முற்றும்மையை அச்சொற்களின் ஈற்றில் இயைக்க வேண்டும்.

உ-ம். எல்லாரும் ஐ, எல்லாம் தம் ஐ உம், எல்லார் தம்மையும்.

எல்லீரும் ஐ, எல்லீர் நும் ஐ உம், எல்லீர் நும்மையும்.

சாரியை யின்றி எல்லாரையும் எல்லீரையும் என்று புணர்வதுங் கொள்க.

இதற்குச் சூத்திரம்: -

௱அ௭. எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லு முருபின் பின்ன ரும்மே

இதன் பொருள்:

எல்லாரும் எல்லீரும் என்பவற்று = எல்லாரும் எல்லீரும் என்னும் இரு பெயரும் ஆறுருபுகளுடனும் புணரும்போது அவைகளின்

உம்மை தள்ளி = இறுதியில் உள்ளனவாய முற்றும்மைகளை நீக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருபு புணரியல்

நிரலே தம் நும்சார = முறையாக தம் நும் என்னும் சாரியைகள் முற்றும்மை இருந்த இடங்களிற் பொருந்த

உருபின் பின்னர் உம் புல்லும் = உருபுகளின் பின்னே முன்னீக்கியிருந்த முற்றும்மை வந்து பொருந்தும்.

தான் தாம் நாம் என்பன உருபுகளுடன் புணரும் பொழுது, முதலெழுத்துக் குறுகப்பெறும். உ - ம். தான் ஐ, தன் ஐ, தன்னை, தாம் ஐ, தம் ஐ, தம்மை. நாம் ஐ, நம் ஐ, நம்மை.

யான் யாம் நீ நீர் என்பன உருபுடன் புணரும் பொழுது, முறையே யான் என்றது என் எனவும், யாம் என்றது எம் எனவும், நீ என்பது நின் எனவும், நீர் என்றது நும் எனவும், திரியும். உ-ம். யான் ஐ, என் ஐ, என்னை.

நீ என்பது உருபேற்கும் போது, நின் எனவும், நீர் என்பது உருபேற்கும் போது நும் எனவும், குறுகுவது போல, நீ என்பது உருபேற்கும் போது உன் என்றும், நீர் என்பது உருபேற்கும் போது, உம் என்றும் சொற்றி ரிந்து வழங்கும்.

உ-ம். நீ ஐ கண்டேன், உன்னைக் கண்டேன். நீர் ஐ கண்டேன். உம்மைக் கண்டேன்.

மேற்கூறிய மொழிகள் கு என்ற நான்காம் வேற்றுமையு ருபுடன் புணரும் போது, அகரச்சாரியை பெறும்.

உ-ம். தன் கு, தன் அகு, தனக்கு, "இயல்பினும் விதியினும்" என்ற விதிப்படி ககர ஒற்றுமிக்கது. நான்காம் ஆறாம் வேற்றுமையு ருபுகளுடன் புணரும் போது, உயிரெழுத்து வந்தால், "தனிக்குறின் முன்னொற்றுயிர்வரினிரட்டும்" என்ற விதிப்படி, இரட்டாது இயல்பாக நிற்கும்.

தன் நின் என்பன, தற்கு நிற்கு என்று சாரியை பெறாது, நான் காம் வேற்றுமையுருபுடன் புணர்வதுங் கொள்க.

இதற்குச் சூத்திரம்: -

ஊஅஅ. தான்தாம் நாமுதல் குறுகும் யான்யாம்
நீ நீர் என் எம் நின்னு மாம்பிற
குவ்வி னவ்வரும் நான்கா றிரட்டல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள் :-

தான் தாம் நாம் முதல்குறுகும் = தான் என்றது தன் எனவும், தாம் என்றது தம் எனவும், நாம் என்றது நம் எனவும், முதல் குறுகி வரும்.

யான் யாம் நீ நீர் = யான் யாம் நீநீர் என்பன

என் எம் நின் நும் ஆம் = யான் என்றது என் எனவும், யாம் என்றது எம் எனவும், நீ என்றது நின் எனவும், நீர் என்றது நும் எனவும், திரியும்.

குவ்வின் அவரும் = முதல் குறுகிய தன் தம் நம் என் எம் நின் நும் என்பன நான்காம்வேற்றுமைக் குவ் உருபோடு புணரும் போது, அகரச்சாரியை பெறும்.

நான்கு ஆறு இரட்டல = நான்காம் ஆறாம் வேற்றுமையுருபு களுடன் புணரும்போது, தனிக்குற்றெழுத்தின் முன்னின்றமெய் யெழுத்துக்கள் இரட்டியா.

ஆ(பசு) மா (விலங்கு) கோ (அரசன்) ஆமா ( காட்டுப்பசு) என்பன உருபுடன் புணரும் வழி இன்சாரியை பெறுதலுமுண்டு.

ஆ மா கோ ஆமா என்பன குவ்வுருபுடன் புணரும் பொழுது, ன் சாரியையும் உகரச்சாரியையும் பெறும். உ - ம். ஆனுக்கு. மானுக்கு.

ஆ மா கோ ஆமா என்பன நான்காம் வேற்றுமைக் குவ்வுருபு டன் புணரும்பொழுது, இன் என்ற சாரியையாவது உ என்ற சாரியையாவது இரண்டுமாவது பெறுவதுமுண்டு. உ - ம். ஆவிற்கு (ஆ இன் கு) . ஆவுக்கு ( ஆ உகு). ஆவினுக்கு ( ஆ இன் உகு).

உருபு பெறாத ஆ மா கோ ஆமா என்ற தனிச்சொற்கள் னகரச்சாரியை பெறுதலுமுண்டு. உ-ம் ஆன் மான் கோன் ஆமான்.

இதற்குச் சூத்திரம்: -

**ரஅ௬. ஆமா கோனவ் வணையவும் பெறுமே**

இதன் பொருள்:

ஆ மா கோ = முறையே பசுவையும் விலங்கையும் அரசனை யும் உணர்த்தும் இப்பெயர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன அணையவும் பெறும் = உருபுகள் புணருமிடத்து ன் என்னும் சாரியை புணர்தலுமுண்டு.

ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்கள் புணர்ந்து, ஒருபது இருபது என்றாற் போலநின்ற, பத்து என்பதன் முன் உருபுகள் வருமிடத்து, ஆன்சாரியை தோற்றுவதுமுண்டு.

உ-ம். ஒரு பானை ( ஒரு பத்தை). ஒரு பது ஐ, ஒருபது ஆன் ஐ= ஒருப் அது ஆன் ஐ. (அது கெட்டு) ஒருப் ஆன் ஐ, ஒரு பானை.

ஆன் சாரியை வந்தால் பது (ப் அ து) என்பதில் ப் நிற்க அது என்னும் எழுத்துக்கள் கெடும்.

ஒன்பது என்னும் எண்ணுப்பெயர் உருபுகளுடன் புணருமிடத்து, ஆன் சாரியை தோன்றப்பெற்று பது என்பதின் ப் நிற்க ஏனைய எழுத்துக்கள் கெடும்.

உ-ம். ஒன்பானை, ஒன்பது ஐ = ஒன்பது ஆன் ஐ = ஒன் ப் ஆன் ஐ ஒன்பானை.

ஒரு பஃது இருபஃது முதலிய ஆய்தமொடுநின்ற எண்ணுப் பெயர்களும் உருபுகளுடன் புணருங்கால், நடுவே ஆன்சாரியை தோன்றப் பெற்று, ஆய்தங் கெட்டு, முன் கூறியவாறு புணரும்.

உ-ம். ஒரு பானை ஒருபஃது ஐ, ஒரு பஃது ஆன் ஐ, ஒருபது ஆன் ஐ, ஒருப் ஆன் ஐ, ஒரு பானை, இவ்வாறே இருபானை.

இப்பெயர்கள் ஒருபதை ஐம்பதை ஒன்பதை என்று சாரியை பெறாதும் உருபுகளுடன் புணரும்.

ஒரு பானுக்கு ஒரு பானினையென்று ஆன்சாரியையுடன் உகரச்சாரியையும் இன்சாரியையும் பெறுதலுமுண்டு.

இதற்குச் சூத்திரம்: -

௱௬௰. ஒன்று முதலெட் டீறா மெண்ணூர்
பத்தின்முன் னான்வரிற் பவ்வொற்றொழிய மேல்
எல்லா மோடு ஒன்பதுமிற்றே.

இதன் பொருள்:

ஒன்றுமுதல் எட்டு ஈறம் = ஒன்றுமுத லெட்டீறாகவுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணூர் பத்தின்முன் = எண்களை முதலிற்கொண்ட பத்து என்பதன் முன்

ஆன்வரின் = (உருபுகளுடன் புணரும்பொழுது) ஆன்சாரியை வரின்,

ப ஒற்று ஒழிய = பது என்பதின் ப் என்னுமெழுத்துத் தவிர மேல் எல்லாம் ஒடும் = அ து என்பன கெடும்.

ஒன்பதும் இற்று = ஒன்பதும் இவ்வாறு புணரும்.

வகர ஈற்றுச் சுட்டுப்பெயர்கள்.

வ் என்ற மெய்யெழுத்தைக் கடையிலே கொண்ட அவ் இவ் உவ் என்ற சுட்டுப் பெயர்கள் உருபுகளுடன் புணரும் பொழுது அற்றுச் சாரியை பெறும்.

உ-ம். அவற்றை, அவ் ஐ , அவ் அற்று ஐ, இவற்றை, இவ் ஐ, இவ் அற்று ஐ. உவற்றை. உவ் ஐ, உவ் அற்று ஐ.

இப்பெயர்கள் அற்றுச்சாரியையுடன் இன்சாரியை பெறுவதுமுண்டு.

உ-ம். அவற்றினை, இவற்றினை, உவற்றினை.

அவ் இவ் உவ் என்றவை சாரியையுடன் புணரும் போது "தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்" என்ற விதிப்படி அவற்றினை யென்று இரட்டியாது இயல்பாயின.

இதற்குச் சூத்திரம்: -

**௨௬௧ . வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே.**

இதன் பொருள்:

வவ்விறு சுட்டிற்கு வழி = அவ் இவ் உவ் என்னுஞ் சுட்டுப்பெயர்கள் சாரியையுடன் புணருங்கால் அவற்றின் பின்

அற்று உறல் வழி = அற்றுச்சாரியை பொருந்துதல் முறைமை.

அஃது இஃது உஃது என்னுஞ் சுட்டுப் பெயர்கள் அன்சாரியையுடன் புணரும்பொழுது, அவற்றினிடையிலுள்ள ஆய்தங் கெடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். அஃது ஐ, அஃது அன் ஐ, அது அன் ஐ, அதனை, அஃதை இஃதை உஃதை என்று அன் சாரியை பெறாமலும் வரும்.

இதற்குச் சூத்திரம்

௨௬௨. சுட்டின் முன்னாய்த மன்வரிற் கெடுமே.

இதன் பொருள்:

சுட்டின் முன் ஆய்தம் = அஃது இஃது உஃது என்பவற்றிலுள்ள ஆய்தம்.

அன்வரின் கெடும் = அன்சாரியை வந்தாற்கெடும்.

அத்து என்ற சாரியை அகர ஈற்றுப் பெயர்களுடன் புணரும்பொழுது, முதலெழுத்தாகிய அகரங்கெடும். உ-ம். மர அத்து ஐ, மரத்து ஐ, மரத்தை. நக அத்து ஐ, நகத்தை.

இதற்குச் சூத்திரம்: -

௨௬௩. அத்தி னகர மகர முனை யில்லை.

இதன் பொருள்:

அத்தின் அகரம் = அத்துச்சாரியையின் அகரம்

அகரம் முனை இல்லை = அகர ஈற்றுச் சொற்களின் முன் கெடும்.

சாரியைகள் அநுபவ வாயிலாக அறிதலேயன்றி இந்தச் சொல்லுக்கு இதுதான் சாரியையென்று இலக்கணம் வகுத்துக் கூறுதலரிது.

இதற்குச் சூத்திரம்: -

௨௬௪. இதற்கிது சாரியை யெனினள வின்மையின்
விகுதியும் பதமு முருபும் பகுத்திடை
நின்ற வெழுத்தும் பதமு மியற்கையும்
ஒன்ற உணர்த்த லுரவோர் நெறியே.

இதன் பொருள்: -

இதற்கு இது சாரியை எனின் = விகுதிப் புணர்ச்சி பதப் புணர்ச்சி உருபு புணர்ச்சிகளில் இந்தச் சொல்லுக்கு இந்தச் சாரியை தான் அமையுமென்று சொல்லப்புகின்

அளவு இன்மையின் = எல்லையற்று வருமாதலால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகுதியும் பதமும் உருபும் பகுத்து = விகுதிப்புணர்ச்சியையும் பதப்புணர்ச்சியையும் உருபுப்புணர்ச்சியையும் பிரித்து,

இடை நின்ற = நடுவில் நின்ற

எழுத்தும் பதமும் = எழுத்துச்சாரியையும் பதச்சாரியையும்

இயல்பும் = இவ்விரண்டுமில்லாத இயல்பினையும்

ஒன்ற உணர்த்தல் = பொருந்துமாறு அறிவித்தல்

உரவோர் நெறியே = அறிவுடையோரது முறைமையாம்.

விகுதிப் புணர்ச்சி பதப்புணர்ச்சி உருபு புணர்ச்சி சாரியைப் புணர்ச்சி என்னும் புணர்ச்சிகள் ஒவ்வொன்றற்கும் பொதுவாக விதி சொல்லப்பட்டிருந்தாலும், சொல்லப்படாதவைகளைப் பற்றி இந்த விதி இந்தப் புணர்ச்சிக்குப் பொருத்தமுண்டு. இதற்குப் பொருத்த மில்லை என்பதை அறிந்து முடித்துக்கொள்க.

விகுதிப்புணர்ச்சியில், சென்றும் முதலிய சொற்களில் றும் என்ற விகுதி னகர ஒற்றின் பின் வந்தமையால், இறந்தகாலத்தைக் காட்டும். சேறும் முதலிய சொற்களில் றும் எதிர்காலத்தைக் காட்டும், னகர ஒற்றையடாதபடியால்.

பதப்புணர்ச்சியில், “அல்வழி இ ஐம் முன்னராயின் இயல்பும் மிகலும்” என்று கூறினாலும், மாசி திங்கள் என்று பண்புத் தொகையில் இயல்பாதலையும், யானைக்குதிரை என்று உம்மைத் தொகையில் மிகுதலையும் கொள்ளற்க (கொள் அல்க = கொள்ள வேண்டாம்). மாசித்திங்கள் என்று பண்புத்தொகைக்கண் மிகலும், யானை குதிரை என்று உம்மைத் தொகைக்கண் இயல்புங், கொள்க.

உருபு புணர்ச்சியில் உயர்திணைப் பெயர்களீற்று, “ஆவி முன் வன்மை மிகா” என்ற விதி கொண்டு, நம்பிகு (நம்பி = சிறந்தவன், கு நான்காம் வேற்றுமை உருபு) என்று இயல்பும், “இயல்பினும் விதியினும்” என்ற விதிபற்றி, நம்பிக்கண் என மிகலும், கொள்ளற்க (கொள்ள வேண்டாம்). எனவே, நம்பிக்கு என மிகுதலும், நம்பிகண் என இயல்பாதலும், கொள்க.

சாரியைப் புணர்ச்சியுள் வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும் என்பது பற்றி, காகம் என்ற பதம் உருபேற்கும் பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரியை பெற்றே காகத்தை காகத்தால் காகத்துக்கு காகத்தின் காகத்தினது காகத்தின்கண் என்று வரும்.

கொல் குதிரை என்பது கொல்லாங்குதிரை என்று சாரியை பெறமாட்டாது.

இதற்குச் சூத்திரம்

**ாகூடு. விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினும்**
**உரைத்த விதியினோர்ந் தொப்பன கொளலே.**

இதன் பொருள்:

விகுதி பதம் சாரியை உருபு அனைத்தினும் = விகுதி பதம் சாரியை உருபு என்னும் நால்வகைப் புணர்ச்சியிலும் உரைத்த விதியின் ஓர்ந்து = கூறின பொதுவிதிகளை ஆராய்ந்து ஒப்பன கொளல் = நூலாசிரியர்கள் கூறாத புணர்ச்சிகளுக்கு ஏற்றபடி அமைத்துக் கொள்க.

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்கு முன்னர் பொது விதிப்படி இயல்பாகும் என்ற புணர்ச்சிகள் சில விடயங்களில் விகாரமாகவும் முடியும். உ-ம். நின்புறங் காக்க, நிற்புறங்காக்க (நின் முதுகைச் சத்துருவுக்குக் காட்டாமற் காப்பாயாக).

விகாரமாக முடியும் புணர்ச்சிகள் இயல்பாகவும் முடியும். உ-ம். மண்கமழ், மட்கமழ்." ண னவல் லினம் வரட்டறவும்" என்ற விதிப்படி , மட்கமழ் என்று புணர வேண்டியிருப்பினும், மண் கமழ் என இயல்பாகப் புணரும்.

உயர்தினைப் பெயர்களில் உருபு விரிந்துவரும். நம்பி கொணர்ந்தான். என்ற பதங்கள் புணருமிடத்து. ஐ உருபு விரிந்து நம்பியைக் கொணர்ந்தானென்றாயின.

உயர்திணைப் பெயர்களில் உருபு தொக்கியும் வரும். உ-ம். ஆடூ உ அறி சொல்) ஆண்பாலை அறிவிக்கும் சொல்) என்ற பதங்கள் புணரும் போது, ஆடூ உவை என உருபு விரிய வேண்டிய இடத்து விரியாமல், ஆடூ உ அறி சொல் என இயல்பாக நிற்கும்.

விரவுப் பெயரில் (இரண்டு திணையிலும் விரவி - கலந்து - நிற்கின்ற பெயரில்) சாத்தன் கண்டான் என்னுஞ் சொற்கள் சாத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னானவன் கண்டானென்றாவது, சாத்தனைக் கண்டானென்றாவது, உருபுச் சொல் வெளிப்பட்டால் அதன் அர்த்தம் புலப்படும்.

விரவுப் பெயரில் வெளிப்படாமல் வருவதுமுண்டு. உ-ம் தாய்ப்பேண் (தாயைக் காப்பாற்றுக).

உறழ வேண்டிய இடத்தில் திரிந்து வருதலுமுண்டு. உ-ம். தற்கொண்டான் ( தன்னைக் கைக் கொண்டவன், புருஷன்). எற்கண்டான் (என்னைக் கண்டான்).

மெல்லெழுது மிகவேண்டிய இடத்தில் வல்லெழுத்து மிகுதலுமுண்டு. உ- ம் விளாக்குறைத்தான். (விளாமரத்தைத் துண்டு படுத்தினான்).

இதற்குச் சூத்திரம்: -

**ㅠசுகூ இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்**
**உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்**
**விரவுப் பெயரின் விரிந்து நின்றும்**
**அன்ன பிறவு மாகுமை யுருபே.**

இதன் பொருள்:

இயல்பின் விகாரமும் = பொதுவிதியோடு ஒத்து முடிதலே யன்றி இயல்பாகவேண்டிய இடத்தில் விகாரமும் விகாரத்து இயல்பும் = விகாரமாகப் புணரவேண்டிய இடத்தில் இயல்பும்

உயர்திணை இடத்து = உயர்திணைப் பெயர்களில் விரிந் தும் தொக்கும் = வெளிப்பட்டு நின்றும், மறைந்து நின்றும் விரவுப் பெய ரின் விரிந்தும் நின்றும் = பொதுப்பெயரில் வெளிப்பட்டும் மறைந்தும்

அன்னபிறவும் = அப்படிப்பட்ட பிற இலக்கணங்களையும்

ஐ உருபு ஆகும் = ஐ உருபு அடையும்.

மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியில் கருத்தாப் பொருளா கிய நிலைமொழி உயிரெழுத்தை இறுதியிற் கொண்டாவது மெய் யெழுத்தை இறுதியிற் கொண்டாவது நிற்க. அக்கருத்தாவாலாகிய தொழிலை அடைந்த செயப்பட்டு வினைச் சொற்கள் வந்தால் வரு மொழி முதலிலுள்ள வல்லினம் விகற்பமாகவாவது இயல்பாக வாவது புணரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். பேய் கோட்பட்டான். ஓரிடத்தில் பேய் கோட்பட்டான் என்றும், மற்றோரிடத்தில் பேய்க் கோட்பட்டான் என்றும் வரும். ( பேயினால் பிடிக்கப்பட்டான்.). புலி கோட் பட்டான். புலிகோட்பட்டான் என்றும், புலிக்கோட்பட்டான் என்றும் விகற்பமாக ( ஒரு கால் இயல்பாகியும் ஒரு கால் மிகுந்தும்) வரும். பேய் பிடிக்கப்பட்டான் என்றது பேய்ப்பிடிக்கப்பட்டான் என்று மிகுந்துவராது. புலி கடிக்கப்பட்டான் என்றது புலிக்கடிக்கப் பட்டான் என்று வராது இயல்பாகவே வரும்.

மேற்கூறிய பேய் புலி என்பன கருத்தாப்பொருளை உடையனவாகிய மூன்றாம் வேற்றுமைப் பெயர்கள். கோட்படல் பிடிக்கப் படல் கடிக்கப்படல் என்பன அக்கருத்தாவாலாகிய தொழிலைப் பெற்ற செயற்பாட்டு வினை முற்றுக்கள்.

இதற்குச் சூத்திரம்: -

௩௩௭ புள்ளியு முயிரு மாயிறு சொன்முன்
தம்மி னாகிய தொழின்மொழி வரினே
வல்லினம் விகற்பமு மியல்பு மாகும்.

இதன் பொருள்:

புள்ளியும் உயிரும் ஆய் இறு சொன்முன் = (மூன்றாம் வேற்றுமைத் தொகையில்) மெய்யும் உயிரும் இறுதியாகி நின்ற சொற்களின் முன்னர்

தம்மின் ஆகிய = கருத்தாப் பொருள்களாலாகிற தொழில்

மொழிவரின் = செய்கையைக் காட்டும் சொற்கள் வந்தால்

வல்லினம் விகற்பமும் = வருமொழி வல்லெழுத்துக்கள் ஒரு தொடரே. ஒருகால் இயல்பாகவும், ஒரு கால் விகாரமாகவும்

இயல்பும் ஆகும் = இயல்பாகவும் வரும்.

எழுத்ததிகாரத்தில் கூறப்படாத விதிகளை உய்துணர்ந்து அமைத்துக்கொள்க. இந்தச் சொல்லுக்கு இதுதான் இலக்கணம் என்று எல்லாவற்றையும் விதித்ததற்கு முடியாது. ஆதலினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி கூறப்பட்டவைகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு விதி கூறப்பெறாதவற்றிற்கும் விதி கூறுக.

இதற்குச் சூத்திரம் : -

ாகூஅ. **இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்**
**விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்**
**வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே.**

இதன் பொருள்: -

இதற்கு இது முடிபு என்று = இந்தச் சொல்லுக்கு இதுதான் இலக்கண முடிபாகுமென்று

யாவும் எஞ்சாது விதிப்ப = விதிக்கவேண்டிய எல்லாவற்றை யும், அளவு செய்து விதிக்க

அளவு இன்மையின் = அந்தச் சொற்களுக்கு எல்லையில்லா மையால் விதித்தவற்று இயலான் = வகுத்து விதித்த இலக்கண முடி புகளை ஆதாரமாகக் கொண்டு

வகுத்து உரையாதவும் = வகுத்துக்காட்டாதவற்றையும் வகுத்தனர் கொளல் = ஆராய்ந்து. இதற்கு இதுவே விதியாகுமென்று வகுத்து, அமைத்துக் கொள்க.

உருபு புணரியல் முற்றிற்று.
எழுத்ததிகாரம் முற்றிற்று.

---

## சொல்லதிகாரம்
## பெயரியல்

இதுகாறும் எழுத்ததிகாரத்தில் எழுத்துக்களின் பன்னி ரண்டு வகையான இலக்கணங்களைக் கூறினாம்.

இனி, இச்சொல்லதிகாரத்தில், எழுத்துக்களால் ஆக்கப்பட் டுள்ள சொற்களின் இலக்கணங்களைக் கூறுவாம்.

சொல்லதிகாரம் என்பது சொல்லின் இலக்கணங்களைக் கூறும் அதிகாரமாம். இது பெயரில், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என ஐந்து பிரிவுகளையுடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரியலாவது ஒவ்வொரு பொருளுக்குமுரிய பெயரின் இலக்கணங்களைக் கூறும் பிரிவு.

இந்தப் பெயரியல் சொல்லின் பொதுவிலக்கணம், சொற் பாகுபாடு, பெயர்ச்சொல், வேற்றுமை, என்ற நான்கு உட்பிரிவுகளை யுடையது.

01. பெயர்ச்சொற்களின் பொதுவிலக்கணம். (ப. 279 - 294)

இது (1) ஒருமொழி, தொடர் மொழி பொது மொழி, என்னும் மூவகை மொழியைப் பற்றியும், (2) உயர்திணை, அஃறிணை என்ற இரு திணைகளைப் பற்றியும், (3) ஆண்பால். பெண் பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால், என்ற ஐந்து பால்களைப் பற்றியும், (4) திணைப் பால்களின் புறனடை பற்றியும், (5) தன்மை முன்னிலை படக்கை என்ற மூவிடங்களைப் பற்றியும் (6) சொல்லின் வழக்கைப் பற்றியும், (7)செய்யுள் நடையைப் பற்றியும், (8) வெளிப் படையாகப் பொருளை உணர்த்துவதைப் பற்றியும், (9) குறிப்பாகப் பொருளையுணர்த்துவதைப் பற்றியும் கூறுதலான் ஒன் பது வகையாக விரிவும்.

சொல்லானது எழுத்தாலாக்கப்பட்ட தன்வடிவத்தையும், அதனுளிருக்கும் பொருளையும், இரு திணைகளாலும், ஐம் பால்களாலும், மூவகை மொழிகளாலும், மூவிடங்களாலும், வழக் காலும், செய்யுளாலும், வெளிப்படையாலும், குறிப்பாலும், அறி விக்கும்.

இதற்குச் சூத்திரம்: -

க. ஒரு மொழி தொடர்மொழி பொதுமொழியென்றா
இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.

இதன் பொருள்:

ஒருமொழி தொடர் மொழி பொதுமொழி என்றா = ஒரு மொழியும் தொடர் மொழியும் பொது மொழியும் என்ற பிரிவுக ளைப் பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதிணை ஐம்பால் பொருளையும் தன்னையும் = உயர்திணை அஃறிணைகளைப் பற்றியும், ஆண் பெண் பலர் ஒன்று பல என்னும் ஐம்பால்களைப் பற்றியும், சொல்லின் பொருளைப் பற்றியும் தனது வடிவத்தைப் பற்றியும்.

மூவகை இடத்தும் = தன்மை முன்னிலை படர்க்கையென்ற மூவிடத்தைப் பற்றியும்

வழக்கொடு செய்யுளின் = உரைநடையிடத்தும் செய்யுளினிடத்தும்

வெளிப்படை குறிப்பின் = வெளிப்படையைப் பற்றியும் குறிப்பைப் பற்றியும்,

விரிப்பது சொல்லே = விளக்குவது மொழியே.

### (1) மூவகை மொழிகள். (ப.279)

சொற்கள், ஒரு மொழி தொடர் மொழி பொது மொழியென்று மூவகைப்படும்.

ஒரு மொழியாவது : ஒரு பொருளை யுணர்த்திக் கொண்டு நிற்கும் ஒரு சொல்லாம். உ-ம். மாடு, ஆடு, முதலியன.

தொடர் மொழியாவது: சொற்கள் இரண்டு முதலாகத் தொடர்ந்து நிற்பதாம். உ-ம் மாடு பெரிது, பால்மாடுகள் இங்கே வந்தன.

பொது மொழியாவது: ஒரு கால் ஒரு மொழியாகக் கொள்ளப்பட்டும், மற்றொரு கால் அதுவே தொடர் மொழியாக பகுக்கப்பட்டும், பொருள் கொள்ள நிற்பதாம். உ-ம். பலகை. இந்தச் சொல் ஓர் இருக்கை (ஆசனம்) எனவும், பலவாகிய கைகள் எனவும் பொருள்படும்.

பலகை என்பது ஒரே சொல்லாக நின்று ஆசனம் எனப் பொருள்படும்பொழுது, ஒரு மொழியாம், பலகை எனப் பிரிந்து நின்று பலவாகிய கைகள் எனப்படும்பொழுது, தொடர்மொழியாம்

இதற்குச் சூத்திரம்: -

**உ. ஒருமொழி யொருபொரு ளனவாந் தொடர்மொழி**
**பலபொரு ளனபொது விருமையு மேற்பன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பொருள்: -

ஒருமொழி ஒரு பொருளன ஆம் = ஒரு மொழிகளாவன, பகாப்பதமேனும் பகுபதமேனும் ஒன்று நின்று தன் பொருளொன்றையே தருமளவில் நிற்பனவாம்.

தொடர்மொழி பலபொருளன = தொடர்மொழிகளாவன, மொழிகள் இரண்டு முதலாகக் கோவைப்பட்டு நின்று பல பொருளைத் தருவனவாம்.

பொது இரு மையும் ஏற்பன = பொது மொழிகளாவன, ஒருமொழிகளாக நிற்றலும் தொடர்மொழிகளாக நிற்றலுமாகிய இரண்டு தன்மையுடையனவாம்.

### 02. இரு திணை. (ப 279)

திணையென்பது இனம், குடி சாதி, அறிவு சம்பந்தமாக விருக்கும் பொருள்கள் சில உயர்ந்த சாதி எனவும் சில தாழ்ந்த சாதியெனவும், பிரிக்கப்படும்.

அறிவில் உயர்ந்த சாதிப்பொருள்கள் மக்கள் தேவர் நரகர் என்பவர்களாம். மக்கள் பூலோகத்தில் உள்ளவர், தேவர் தேவ லோகத்தில் உள்ளவர், நரகர் நரகலோகத்தில் உள்ளவர்.

இவர்கள் காரண காரிய சம்பந்தங்களைப் புத்தியால் விசாரித்தும் வாக்கால் சம்பாஷித்தும் அறிவதால் உயர்ந்த சாதியார், அல்லது உயர்திணையார் எனப்படுவர்.

அறிவில் உயர்ந்த சாதிகளல்லாதனவாய உயிருள்ளவைகளும் உயிரில்லாதவைகளுமாகிய பொருள்களெல்லாந் தாழ்ந்த சாதி, அல்லது அஃறிணை. எனப்படும்.

அஃறிணை = அல்லாத திணை, உயர்திணையல்லாத திணை.

இதற்குச் சூத்திரம்: -

> ௯. மக்க டேவர் நரக ருயர்திணை
> மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை

இதன் பொருள்:

மக்கள் தேவர் நரகர் உயர்திணை = மனிதர் தேவர் நரகர் என்ப வர்கள் உயர்திணையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை = இவரின் வேறாய உயிருள்ளவைகளும் உயிரில்லாதவைகளுமாகிய பொருள்கள் அஃறிணையாகும்.

உயர்திணைப் பொருளின் உயிராவது உடலாவது தனித் தனியாக நிற்கும்போது. அவையும் அஃறிணை எனப்படும்.

### 03. ஐம் பால் (ப. 279)

உயர்திணையானது ஆண் பால் பெண் பால் பலர் பாலென்று மூன்று பிரிவுகளையுடையது. இவற்றுள் ஆண்பாலும் பெண்பாலும் ஒருமையைக் குறிக்கும். பலர்பாலென்பது ஒன்றுக்கு மேற்பட்ட ஆடவர் மகளிரைக் குறிக்கும்.

அஃறிணையானது ஒன்றன்பால் பலவின் பால் என்று இரண்டு பிரிவுகளையுடையது. அவன் அவள் அது என்ற சுட்டுச் சொற்களால் குறிக்கப்பட்ட பொருள்களில் அது என்பது அஃறிணை ஒருமை. அவன் அவள் என்பன உயர்திணை ஒருமை.

உயர்திணையில் ஓர் ஆடவனை யுணர்த்துஞ்சொல் ஆண் பாலெனப்படும். உ-ம். மனிதன், இந்திரன், நரகன்.

உயர்திணையில் ஒரு பெண்ணையுணர்த்தும் சொல் பெண்பாலெனப்படும். உ-ம். தோழி, இந்திராணி, நரகி.

ஆண்மாடு பெண் மாடென்று சொல்லினும், அம்மாடு அது வென்றே கூறப்படும். அவன் அவள் என்று கூறார். அறிவிற் தாழ்ந்த சாதியாதலால்.

உயர்திணையில் இரண்டு மூன்று முதலிய ஆடவர்களை யாவது, மகளிர்களையாவது, ஆடவர்களும், மகளிர்களுங் கூடி நின்றவர்களையாவது, உணர்த்துஞ் சொல் பலர்பாலெனப்படும்.

பலர் பாலென்பது ஒருவரின் மேற்பட்ட இருவர் முதலாகப் பலரைக் குறிக்கும். உ-ம். தோழர்கள், தோழிகள், அறிவாளர்கள்.

இதற்குச் சூத்திரம்: -

**ச. ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:

உயர்திணை ஆண் பெண் பலர் என முப்பாற்று = உயர் திணையானது ஆண்பால் பெண்பால் பலர் பால் என்று மூன்று பால் களுள் ளது.

ஒன்றன் பாலாவது அஃறிணையில் ஒரு பொருளை உணர்த் துவது. உ- ம். பசு, யானை, குதிரை, மரம், கல்.

பலவின் பாலாவது அஃறிணையில் ஒன்றிற்கு மேற்பட்ட பல பொருளையுணர்த்துவது . உ-ம். யானைகள், குதிரைகள், மரங்கள், கற்கள்.

இதற்குச் சூத்திரம்: -

ரு. ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை

இதன் பொருள்:

அஃறிணை ஒன்றே பல என்று இரு பாற்று = அஃறிணை யானது ஒன்றன்பாலும் பலவின்பாலும் என்று இரண்டு பால்க ளுள்ளது.

### (4) திணைபால்களின் புறனடை. (ப. 279)

புறனடை = புறம்பாக அடுத்து இருப்பது. ஒன்றைக் கூறி அதற்கு வேறாகவுள்ளதையடுத்து வருவதற்குக் கூறும் விதி (47-வது பக்கம் பார்க்க)

ஈண்டு, முற்கூறிய உயர்திணை அஃறிணை என்பவற்றிற்கும் ஆண்பால் முதலியவற்றுக்கும் வேறாயடுத்து நிற்கும் அலியைப் பற்றி விதி கூறுவதால் "திணைப்பால்களின் புறனடை" ஆயிற்று.

உயர்திணையில் ஆண் ஆண்பாலாகவும், பெண் பெண் பாலாகவும், அமைந்தால் ஆணும் பெண்ணும் அல்லாத பேடு (அலி) எப்பாலாயமையுமோவெனின், ஆணுக்குரிய இலக்கணம் அதிகப் பட்டும், பெண்ணுக்குரிய இலக்கணங் குறைந்தும் அமையப் பெற்ற அலி ஆண்பாலாகக் கொள்ளப்படும். உ-ம் அலி வந்தான்.

பெண்ணுக்குரிய இலக்கணம் அதிகப்பட்டு ஆணுக்குரிய இலக்கணங்குறைந்த பேடு பெண்பாலாகக் கொள்ளப்படும். உ-ம் பேடி வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விருவகைப் பேடுகளையும் அஃறிணையாகவும் கொள்ளப்படும். உ-ம் பேடு வந்தது.

இதற்குச் சூத்திரம்: -

சூ. **பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பால்**
**ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்**
**இருமையு மஃறிணை யன்னவு மாகும்.**

இதன் பொருள்: -

பெண்மைவிட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால் = பெண் தன்மையை விரும்பாது ஆண் தன்மையை விரும்புவனவாகிய அலிகள் ஆண்பாலாம்.

ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால் = ஆண் தன்மையை விரும்பாது பெண் தன்மையை விரும்புவனவாகிய பேடுகள் பெண் பாலாம்.

(அவா = ஆசை, அவாவு பகுதி, வ் உடம்படு மெய். அ பன்மை விகுதி யாதலால் அவாவுவ = விரும்புவன).

இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும் = இந்த அலியும் பேடும் அஃறிணையைப் போல்வனவுமாம்.

**05. தன்மை முன்னிலை படர்க்கை என்ற மூவிடங்கள். (ப.279)**

தன்மை என்பது தன்னுடைய நிலை அல்லது இடம். உ-ம். நான் நாம் நாங்கள், யான் யாம் யாங்கள்; என்னை என்னால் எனக்கு என்னுடைய ; எங்களை எங்களால் எங்களுக்கு எங்களுடைய.

முன்னிலை என்பது தனக்கு முன்னிற்பான் நிலை, அல்லது இடம். உ-ம் நீ நீர் நீங்கள்; உனது உமது உங்களது; உன்னை உன்னால் உங்களால் உனக்கு உங்களுக்கு.

படர்க்கை என்பது தனக்கும் முன்னிற்பவனுக்கும் அப்பாற்பட்டு நிற்கும் அவன் அவள் அவர் அது அவை என்னும் பொருள்களின் நிலை, அல்லது இடம். ( படர்தல் = செல்லல் நிற் றல். தொழிற்பெயராகிய படர்க்கை என்பதில் படர், பகுதி; கை , விகுதி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படர்க்கையிடத்துக்குரிய பெயர்ச்சொல்லினாலும் வினைமுற்றினாலும் திணையும் பாலும் விளங்கும். உ -ம். அறிஞன் வந்தான். அறிஞன் ( அறி ஞ் அன்) என்னும் பெயர்ச்சொல்லின் அன் விகுதியும், வந்தான் ( வா ந் த் ஆன்) என்னும் வினைமுற்றுச் சொல்லின் ஆண் விகுதியும், உயர்திணையும், ஆண்பாலையும். உணர்த்தின.

படர்க்கையிடத்துக்குரிய பெயர்ச்சொற்களினதும், வினைச் சொற்களினதும் இறுதியில் நிற்கும் விகுதிகள் அநேகமாகத் திணையும் பாலையுங் காட்டும். உ-ம். அவன் என்பதிலும் அடித்தான் என்பதிலும் அன் விகுதி உயர்திணைப் பொருளையும் ஆண்பாலையும் காட்டிற்று.

முன்னிலைச் சொற்களாலும் தன்மைச் சொற்களாலும் திணைகளையும் பால்களையும் அறிதல் கூடாது.

நீ நீர் முதலிய முன்னிலைச் சொற்களால் முறையே ஒருமை பன்மை மாத்திரம் விளங்கின.

ஒரு ஆடவனை நீ யென்பது போல, ஒரு பெண்ணையும், நீ யெனக் கூறலாம். ஆடுமாடு கிளி நாகணவாய் முதலியன முன்னிலையில் நிற்கும்பொழுது, அவற்றோடு நீ நீங்கள் எனப் பேசலாம். ஆகவே, முன்னிலைச் சொற்களால் திணை பால்கள் விளங்கா. நான் நாங்கள் முதலிய தன்மைச் சொற்களாலும் திணை பால்களை, அறிய முடியாது.

இவற்றுச்குச் சூத்திரம்:-

எ. தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே.

இதன் பொருள்:

மூவிடன் தன்மை முன்னிலை படர்க்கை = மூவிடங்களாவன, தன்மையும் முன்னிலையும் படர்க்கையுமாம்.

வு. படர்க்கைவினை முற்று நாமங் குறிப்பின்
பெறப்படுந் திணைபா லனைத்து மேனை
இடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:

படர்க்கை வினைமுற்று நாமம் குறிப்பின் = படர்க்கை யிடத்துக்குரிய வினைமுற்றுச் சொல்லையும், பெயர்ச்சொல்லையும் கூறினால்,

திணை பால் அனைத்தும் பெறப்படும் = உயர்திணை அஃறிணையாகிய இருதிணைகளும், ஆண்பால் பெண்பால் பலர் பால் ஒன்றன் பால் பலவின் பாலாகிய ஐம்பால்களும் அறியப் படும்.

ஏனையிடத்து = முன்னிலையிடத்தும் தன்மையிடத்தும் அவற்று ஒருமைப்பால் பன்மைப் பால் பெறப்படும். = அவற்றுள் ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் பெறப்படும்.

**(6) வழக்கு இன்னதென்பது. (ப.279)**

வழக்கு என்பது வழங்கப்படுவது. வழமையாக ஒரு பொருளைக் குறிப்பதற்கு உபயோகிக்கப்படுஞ் சொல்.

தமிழ்ச்சொல்லின் வழக்கானது இயல்பு தகுதி என இரு வகைப்படும்.

ஆதிகாலத்தில் தமிழகத்தில் வாழ்ந்தவர்களது தென்மொழி யைச் சுத்தப்படுத்தினவர்கள் முருகமூர்த்தியாகிய சுப்பிரமணியக்க டவுளும், சிவபெருமானிடந் தமிழை கற்றுக் கொண்ட அகஸ்திய முனிவரும் என்றும், கல்வியறிவற்ற தமிழர்கள் பேசும்மொழியைக் கொடுந்தமிழ் என்றும், கற்றறிந்தவர்கள் பேசும் மொழியைச் செந்தமிழ் என்றும், பண்டைக்காலத்துத் தமிழ் நூல்களாலறிகின் றோம்.

இவ்வாறே, எங்கள் பரத கண்டத்து உத்தரதேசத்தில் வாழும் கல்விமான்கள் பேசும் வடமொழியைச் ஸம்ஸ்கிருதம் என் றும், மூடர்கள் பேசும் மொழியைப் ப்ராக்ருதம் என்றும் பிரித்தார்கள். ஐரோப்பா கண்டத்திலும் கற்றவர் கல்லாதவர்களைப் பற்றித், தத்தம் தேசங்களில் பேசப்படும் பாஷைகள் மேலென் றும் கீழென்றும் கூறப்பட்டன. இங்கிலீஷ் பாசையிலும் வல்கர் (Vul gar) இங்கிலீஸ் என்றும், க்லாஸீக் (Classic) இங்கிலீஷ் என்றும், பிரிவுபாடுகளுண்டு. எனவே, ப்ரமாண மற்ற பா மர ஜனங் கள் பேசிவரும் கோணல் மொழிகளை அறிவாளிகள் எந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலும் சுத்தப்படுத்துவது தங்கள் கடமையாகக் கொண்டார்கள். இதுவே பரமேஸ்வரனது ஆஞ்ஞையென்றுமறிக.

தமிழறிஞர் இயற்றிய செய்யுளும் உரைநடையும் தமிழிலக்கியம் எனப்படும். இந்த இலக்கியங்களில் செந்தமிழிற்குரிய இலக்கணங்கள் அமைந்து கிடக்கும்.

இலக்கண விதிகளை அனுசரித்து நிற்குஞ் சொற்கள் தமிழ் மொழி வழக்கென இலக்கணக் கர்த்தாக்கள் கூறுவர். இவர்களியற்றிய உரைநடையிலும் செய்யுளிலும் சொற்களின் வழக்கைக் காண்க.

## இயல்பு வழக்கு

இயல்பு வழக்காவது அறிஞர்கள் இயற்கை என்று ஒப்புக் கொண்ட சொற்கள்.

தமிழில் இயல் என்பது ஸம்ஸ்கிருதத்தில் ப்ரக்ருதி எனப்படும்.

இந்த இயல் அல்லது ப்ரக்ருதி அநேகநேக பிரிவுபாடுகளைப் பெற்றுள்ளன. (பக்கம் 22). இப்படிப் பெயர்க்கப்பட்ட பொருளொவ்வொன்றிற்கும் சொற்குறி அமைக்கப்பட்டது.

சொற்குறிகள், அல்லது பெயர்கள், அல்லது நாமங்கள், காரணமின்றியும் காரணத்தோடும் பிறந்தன.(பக்கம் 22-25) இவற்றில், அறிஞர்களால் ஒப்புக் கொண்ட சொற்கள் இயல்பு வழக்கு என்றறிக. மூடர்கள் கோணலாகப் பேசிவரும் சொற்கள் அறிஞர்கள் ஒப்புக் கொள்ளார். கொடுந்தமிழென விட்டுவிடுவார். செந்தமிழ் வழக்கே இலக்கணத்தில் வழக்கெனப்படும்.

கொடுந்தமிழ்ச் சொற்களும் அவற்றைத் திருத்தமாக்கும். செந்தமிழ்ச் சொற்களும் கீழ் வருமாறு காண்க.

மளை - மழை, பளம் - பழம், வாளை- வாழை, பிலாப்பளம்- பலாப்பழம், இஞ்சேவா -இங்கேவா, பங்கேபார்-அங்கேபார், போறியா -போகிறாயா, வாறியா - வருகிறாயா, அவையள் வந் தினம். அவர்கள் வந்தார்கள். அடிபிடிபட்டினம் -அடிபிடிப் பட்டார்கள். வாங்க-வாருங்கள், தண்ணிவிடாய்க்குது-தண்ணீர் விடாய்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நாசி விளுந்தார் - சந்நியாசி விழுந்தார், பாவக்காய் கயக்கும் - பாகற்காய் கசக்கும், சோத்துக்கே கல்லுக் கிடக்கு - சோற்றுக்குள் கற் கிடக்கின்றது.

இயல்பு வழக்கானது இலக்கணமுடையது. இலக்கணப் போலி, மரூஉ (இலக்கணஞ்சிதைந்து மருவிவழங்குவது), என்று மூவகைப்படும்.

இலக்கணமுடைய இயல்பு வழக்கென்பது, இலக்கண முறையாகச் சொற்களை வழங்குதல். உ-ம். முற்கூறிய செந்தமிழ் நடைச்சொற்களைக் காண்க.

இலக்கணப்போலியாவது, இலக்கண முறை பிறழ்ந்துவரினும் இலக்கண அமைதியுடையன போலப் பெரியோரால் ஒப்புக் கொள்ளப்பட்டது. உ-ம். புறநகர். இது நகரினது புறம் என்னும் பொருளைக் குறிப்பதற்கு நகர்ப்புறம் என்றிருக்க வேண்டியது. இது இடம்மாறிப் புறநகர் என்று திரிந்தாலும், அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு இலக்கணப் போலி யியல்பு வழக்கு எனப் பட்டது.

மரூ உவாவது, இலக்கண முறைப்படி வழங்கிவருஞ் சொற்களினிடையில் எழுத்துக்கள் தோன்றியும் கெட்டும் திரிந்தும் வந்தமையால், இலக்கணஞ் சிதைந்து மருவி வழங்குவது.

இலக்கணமுடைய இயல்பு வழக்குச் சொற்கள் இலக்கணஞ் சிதைந்து மரூஉவியல் வழக்காக வந்ததற்கு உதாரணம்: “ அருமருந் தன்ன பிள்ளை = அது அருமந்தபிள்ளை, மலையமானாடு ( மலையமான் நாடு)- மலாடு, சோழநாடு-(சோழன் நாடு)- சோணாடு பாண்டிய நாடு (பாண்டியன் நாடு)-பாண்டியநாடு, தொண்டை மாநாடு (தொண்டைமான் நாடு) - தொண்டை நாடு, அ இ.உ-அந்த இந்த உந்த, மா அடி (மரத்தின் அடி)- மராடி, குளவாம்பல் (குளத்தில் வளரும் ஆம்பற் கொடி) - குளாம்பல், யாவர் - யார், ஆர் ; தஞ்சாவூர் - தஞ்சை.

### தகுதி வழக்கு

தகுதி வழக்கானது இடக்கரடக்கல், (இடக்கு = இழி சொல், அடக்கல் = வெளிப்படுத்தாமல் அடக்குதல்), மங்கலம், குழூஉக்குறி என மூன்று பிரிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடக்கரடக்கலாவது கூறுவதற்கும் கேட்பதற்கும் அருவருப்பையும் வெட்கத்தையும் உண்டாக்குஞ் சொற்களை நீக்கித் தகுதியான சொற்களால் கூறுதலாம். உ-ம் வெளியே சென்று காலலம்பி வந்தான். ஜலோபாதி, (ஜலஉபாதி) க்குப் போனாள். ஜல ஸ்பர்ஸத்துக்கு (ஜலத்தைத் தொடுதலுக்கு)ப் போய் வருகிறேன்.

## மங்கல மொழி

மங்கலமாவது அமங்கலமான விஷயங்களை மங்கலமாக (சுபகரமாக)க் கூறுதல்.

சில வித்வான்கள் செத்தார், இறந்தார், சுடுகாடு, ஓலை, என்பன அமங்கலச் சொல்லென்றும், இவற்றிற்கு மங்கலச் சொற்கள் துஞ்சினார், சிவபதமடைந்தார். நன்காடு, திருமுகம், என்றும் கூறுவர். ஆனால், திருவாசகத்தில் செத்திலாப்பத்து என்ற பதிகத்தில் சாதல், செத்திலேன் என்றும், நாலடியாரில் " செத்தாரைச் சாவார் சுமந்து" என்றும் கூறியிருப்பதால், செத்தாரென்ற சொல் மேம்பாடு பெற்று நிற்கின்றது. இறந்தாரென்பது திரிலோக சஞ்சார முறையைக் காட்டி, பூலோகத்திலிருந்து நரகலோகத்துக்குச் செல்லுதலையும், சுவர்க்கலோகத்திலிருந்து பூலோகத்துக்குச் செல்லுதலையும் குறிப்பதால், அமங்கலச் சொல்லென்று கூறலாகாது. சுடுகாடு என்பது செத்தவனுடலை நாம் கொண்டுபோய் எரிக்கின்ற காடெனப் பொருள்படும். இந்தச் சொல் செத்தவனுடலைப் புதைக்கின்ற நிலத்தை உணர்த்தும் இடுகாடு என்பதோடு சம்பந்தப்பட்டு நிற்கின்றது. ஆதலால், மணிபோன்ற இச்சொற்களை அமங்கலமெனக் கூறலாகாது. அருணகிரிநாத சுவாமி " ஓலையுந் தூதருங் கொண்டு திண்டாடலொழிந்து" என்று பாடியிருப்பதால், ஓலை அமங்கல மொழியாகாது.

செவ்வாயனாகிய அங்காரகன் பெரும்பாலும் அமங்கல பலனை கொடுப்பவரெனினும், அந்தத் தேவனைச் சிறப்பிக்கும் பொருட்டுச் செவ்வாய்க்கிழமையை மங்கலவாரம் என்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் குரு முதலிய பெரியோர்கள் சிறியோருக்கு எழுதும் லிகிதங்கள் நிருபம், திருமுகம், எனச் சிறப்பிக்கப்படும் இவை போன்றவை மங்கலமொழி.

குழூஉக்குறி

குழூஉக்குறியாவது ஒரு கூட்டத்தார் ஒருபொருளுக்கு உலகத்தவர்கள் வழங்குஞ் சொல்லை நீக்கித் தமக்குள்ளே குறிப்பாக வழங்கிவருஞ் சொல்லாம். (குழூ= கூட்டம். குறி= குறிப்பு)

வேடர் குடிக்குங் கள்ளைச் சொல்விளம்பி (சொல்லைப் பிதற்றிவிப்பது) என்றும், பொற்கொல்லர் பொன்னைப் பறி என் றும், யானைப்பாகர் ஆடையைக் காரை என்றும் சொல்வர்.

இவற்றிக்குச் சூத்திரம்: -

**கூ. இலக்கண முடைய திலக்கணப் போலி**
**மருஉ வென் றாகு மூவகை யியல்பும்**
**இடக்க ரடக்கல் மங்கலங் குழூ உக்குறி**
**எனுமுத் தகுதியோ டாறாம் வழக்கியல்.**

இதன் பொருள்: -

இலக்கணம் உடையது = இலக்கணமுறையாகச் சொற்கள் வழங்கிவருவதும்

இலக்கணப் போலி = இலக்கணமுறை பிழைப்பட்டாலும் இலக்கணசாயை அச்சொல்லினுள்ளதென்று ஏற்கப்பட்டதும் மரூஉ என்றாகும் = எழுத்துக்கள் தோன்றி கெட்டு திரிந்து இருப்பினும் இலக்கணமுறையை மருவிவருவதும் என்று மூவகை இயல்பும் = இயல்புவழக்கு மூவகைப்படும்.

இடக்கரடக்கல் = இடக்குச் (இழிய) சொற்களை நீக்குவ தும் மங்கலம் = அமங்கலச் சொற்களை மங்கலமாக்குவதும் குழூ உக்குறி = ஒரு கூட்டத்தார் தமக்குள் ஒருபொருளைக் குறிப்பதற்கு ஒருசொல்லை வழங்கிவருவதும் எனும் மு தகுதியோடு = என்ற தகுதி வழக்கு மூன்றுடன் வழக்கியல் ஆறு ஆம் = வழக்கியலின் தொகை ஆறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. செய்யுள் இன்னது என்பது. (ப.279)

செய்யுளாவது, உயிர் தங்குவதற்கு இடமாகாத் தோல் இரத்தம் இறைச்சி நரம்பு எலும்பு, மச்சை என்னும் தாதுக்களால் கட்டி அலங்காரமாகக் கடவுளால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட உடல் போலப் பொருள் அமைவதற்கு இடமாகச் சொற்களை சீர்தளை அடி தொடை என்னும்பாட்டு லக்ஷணங்கள் வழுவாது புலவர்களால் அணி (அழகு) பொருந்தத் தொடுக்கப்படுவதாம்.

இதற்குச் சூத்திரம்: -

ய. பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்

இதன் பொருள்: -

பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல் போல் = பலவித தாதுக்களால் உயிருக்கு இடமாக இயற்றப்பட்ட உடம்பு போல

பல சொல்லால் = பலவகைச் சொற்களால்

பொருட்கிடனாக = பொருளமைதற்கிடமாக

உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள் = கற்ற வல்லோர் தங்களறிவினால் அலங்காரந் தோன்றச் செய்வன செய்யுளாம்.

(8) வெளிப்படைச் சொற்கள். (ப. 279)

சொற்கள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள்களை விளக்கும்.

எவ்வெவ் பொருளுக்குச் சொற்கள் அமைந்து நிற்கின்றனவோ அவ்வப்பொருளை நேரே வெளிப்படுத்துவது வெளிப்படையாகும். உ-ம். ஆகாயத்தின் கண்ணே நக்ஷத்திரங்கள் உதித்தன.

(9) குறிப்புச் சொற்கள். ( ப. 279)

சொற்கள் வெளிப்படையாகப் பொருளையுணர்த்தாமல் அடுத்து வருஞ்சொற்களை நோக்கியேனும், சொல்வோன் கருத்தை உணர்ந்தேனும், பொருள்கொள்ள நிற்பது குறிப்பாகும். உ-ம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சாயம் வெளுத்த சந்நியாசி. ஈண்டு சாயம் வெளிறின வஸ்திரம் என்னும் பொருளைக் குறியாமல், அவரது அகம்பாவ குணங்களைக் குறித்தது.

### குறிப்பின் வகைகள்

குறிப்புமொழிகளாவன: ஒன்றொழி பொதுச் சொல் (ஒரு பாலை நீக்கின பொதுச் சொல்), விகாரம், தகுதி, ஆகுபெயர், அன் மொழித்தொகை, குறிப்புவினைமுற்று, முதற் குறிப்பு, தொகைக் குறிப்பு, பிறகுறிப்பெனப் பலவகைப்படும்.

ஒன்றொழி பொதுச் செல்லாவது, ஆண் பெண் என்னும் இரண்டு பாலுக்கும் பொதுவாகிய சொற்கள் ஒரு பாலை நீக்கி மற்றப்பாலைக் குறிப்பினாற் காட்டுவதாம்.உ-ம். ஆயிரம் மக்கள் பொருதார். இங்கே ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுப் பெய ராகிய மக்கள் என்னும் சொல். போர் செய்தார் என்னும் ஆட வருக்குரிய தொழிற்குறிப்பினால் பெண்பாலை ஒழித்து ஆண் பாலைக் காட்டிற்று.

விகாரமாவது. தோன்றல் திரிதல் கெடுதல் என்னும் உருவ பேதங்களையடைந்துநின்ற சொற்கள் தத்தம் பொருளைக் குறிப்பாக உணர்த்துவதாம். உ-ம் மரைமலர். தாமரை என்ற பொருளின் முதலெழுத்தாகிய தா என்ற உயிர் மெய் கெட்டு மரை என்று நின் றது. முதல் எழுத்து கெட்டுநின்ற விகாரச் சொல்லாகிய மரை என்பது மலர் என்னுங் குறிப்பினால் தாமரையை உணர்த்திற்று.

தகுதியாவது, மேலே கூறிய தகுதி வழக்குச் சொற்கள் குறிப்பாகப் பொருளைத் தருதலாம். உ-ம் நீரல்லீரம் விலகிச் சென்மோ, இங்கே. நீரல் ஈரம் (சலத்தினால் உண்டாக்காத ஈரம்) என்பது குறிப்பினால் ஜலவிஸர்ஜனத்தால் வந்த ஈரத்தை உணர்த்திற்று.

ஆகுபெயராவது, ஒரு பெயர்ச்சொல் தனக்குரிய பொரு ளைக் குறிக்காமல் தன்னோடு சம்பந்தம் பெற்ற வேறு பொருளைக் குறிப்பதாம். உ-ம். கால் முறிந்தது. இங்கே, கால் என் னும் அளவைப் பெயர், தான் இயல்பாகக் குறிக்கும் ஒரு பொருளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலிலொரு பங்காகிய அளவைக் குறியாமல், உடம்பின் கால்பாக மாகிய தாள் என்னும் பொருளைக் குறிப்பாலுணர்த்திற்று.

அன்மொழித் தொகையாவது, தொகைமொழிகள் தமக்கு இயல்பாக அமைந்த பொருளைக் குறியாது, தம்மோடு சம்பந்த முள்ள வேறு பொருளைக் குறிப்பதாம். (அன்மொழி = அல்லாத மொழி, வேறுபொருளைக் குறிக்கும் மொழி). உ-ம் பவளவாய் மலர் கொய்தாள். இங்கே பவளவாய் என்பது மலர் கொய்தாள் என்பத னால் பெண்ணைக் குறிப்பாக உணர்த்திற்று.(பவள வாய் = பவளம் போன்ற சிவந்தவாயையுடையளாகிய பெண்).

குறிப்பு வினையாவது: முக்காலத்துக்கும் பொதுவாகிய வினைச் சொல் ஒவ்வோர் காலத்தைக் குறிப்பாகக் காட்டுவதாம். உ-ம். அவன் பண்டு (முற்காலத்தில்) பொன்னன், இங்கே பொன்னன் என்பது பண்டு என்னுஞ் சொற்குறிப்பினால் பொன்னனாக இருந் தான் என இறந்தகாலத்தைக் காட்டிற்று.

முதற் குறிப்பாவது: வாக்கியத்தின் முதற் சொல் நின்று அவ்வாக்கியம் முழுவதையும் குறித்தலாம். உ-ம். "அகரமுதல்" என்பது "அகரமுதல வெழுத்தெல்லா மாதி பகவன் முதற்றே யுலகு" என்னுங் குறளைக் குறித்தது.

தொகைக் குறிப்பாவது:- தொகையெண்ணடியாகத் தோன்றிய பெயர்கள் தாம் குறிக்கும் பல பொருள்களுள் ஒன்றைக் குறிப்பாக உணர்த்துவது. உ-ம். ஐவர்க்கு இடங்கொடாதே. இங்கே ஐவர் என்னுந் தொகையடியாகப் பிறந்த பெயர் சப்த பரிச ரச ரூப கந்தங்கள் என்னும் ஐம்புலன்களைக் குறிப்பாலுணர்த்திற்று.

பிற குறிப்பாவது: மேற்கூறியவாறன்றிப் பிறவழியாக நின்று குறிப்புப் பொருளைத் தருவதாம். உ-ம் பாயாத வேங்கை. புலிக்கும் வேங்கை மரத்துக்கும் பொதுவாகிய வேங்கை என்ற சொல் பாயா மையாகிய குறிப்பினால் வேங்கை மரத்தை உணர்த்திற்று.

உவர்க்கடலன்ன செல்வருமுளரே. இங்கே, உவர்க்கட லன்னசெல்வர் என்பது செல்வப் பெருக்கைக் குறியாது ஈயாமை யாலே பிறர்க்கு உபயோகப்படாத செல்வர் என்பதைக் குறித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைந்தொடி (பசும் வளையல்) என்பது பசும்பொன்னாற் செய்யப் பட்ட வளையலையணிந்த பெண்ணைக் குறிப்பாலுணர்த்திற்று. செஞ் செவி என்பதில் செம்மை என்னுஞ் சொல் சிவந்த காதணியை (காதி லணியப்பட்ட ஆபரணத்தை) க் குறிப்பாலுணத்திற்று.

இதற்குச் சூத்திரம்: -

யக . ஒன்றொழி பொதுச் சொல் விகாரந் தகுதி
ஆகு பெயரன் மொழிவினைக் குறிப்பே
முதறொகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை.

இதன் பொருள்: -

ஒன்றொழி பொதுச் சொல் = இருதிணை ஆண் பெண்ணுள் ஒன்றை நீக்கும் பொதுச் சொல்லும்

விகாரம் = விகாரச் சொல்லும்

தகுதி = மூவகைத் தகுதி வழக்குச் சொல்லும்

ஆகு பெயர் = ஆகு பெயர்ச்சொல்லும்

அன்மொழி = அன்மொழித்தொகைச் சொல்லும்

வினைக்குறிப்பு = வினைக்குறிப்புச் சொல்லும்

முதல் = முதற்குறிப்புச் சொல்லும்

தொகை = தொகைக்குறிப்புச் சொல்லும்

குறிப்போடு இன்ன பிறவும் = மேலே காட்டியவையல்லாத பிற குறிப்புச் சொற்களும் இவை போல்வன பிறவும்

குறிப்பின் தருமொழி = குறிப்பினால் இருதிணை ஐம்பாற் பொருள்களைத் தருஞ்சொற்களாம்.

அல்லன வெளிப்படை = இவை யல்லாதவையெல்லாம் வெளிப்படையால் அப்பொருளைத் தருஞ் சொற்களாம்.

இதுவரையில் பெயர்ச்சொற்களின் பொதுவிலக்கணங் கூறப்பட்டது. இனி, பெயர்ச்சொற்களின் பாகுபாடுகளைக் கூறுவாம்.

### 11. சொற்களின் பாகுபாடுகள். (ப. 294 -306)

சொல்லானது பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் என நான்கு வகைப்படும். இவை இலக்கணமுறைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்தால் இயற்சொல்லெனவும் திரிசொல்லெனவும் கூறப்படும். எனவே, சொல்லானது (1) பெயரியற் சொல்லென்றும், (2) பெயர்த்திரிசொல்லென்றும், (3) வினையியற் சொல்லென்றும், (4) வினைத்திரிசொல்லென்றும், (5) இடையியற் சொல்லென்றும், (6) இடைத்திரிசொல்லென்றும், (7) உரியியற் சொல்லென்றும், (8) உரித்திரிசொல்லென்றும், எட்டுவகையாகின்றது.

இந்த எட்டுப் பாகுபாடுகளும் இலக்கண விதிப்படி நடைபெறும் தமிழ்ச் சொற்களாதலால். அவையெல்லாம் செந்தமிழே.

செந்தமிழைத் தவிர்த்து (தமிழிலக்கண முறைகளுக்க மையாத) கொடுந்தமிழ்ச் சொல்லென்றும் திசைச் சொல்லென்றும் வட சொல்லென்றும் மூன்று பாகுபாடுகள் உள்ளன.

இவற்றை இனி விரித்து கூறுவாம்.

பெயர்ச்சொற்களாவன ; பிரகிருதி (ப்ரக்ருதி) வஸ்துவில் நின்று சிவபெருமானது திருவருளால் பெயர்ந்த சூக்கும தூல ரூபங்களுக்கு அமைக்கப்பட்ட நாமங்களாம்.

உ-ம். சிதாகாசம் மனாகாசம் பூதாகாசம்; விண் வாயு தீ நீர் பார்; காலம் திக்கு தேசம்; அண்டம் பிண்டம்; மேல்லோகங்களாகிய பூ புவர் சுவர் மகர் ஜன தப சத்தியலோகங்கள்; கீழ் லோகங்களாகிய அதல விதல சுதல தலாதல ரசாதல மகாதல பாதலங்கள்; கடல் மலை நிலம்: புல் செடி கொடி மரம்: பூ பிஞ்சு பழம்; நீர்வாழ்வன ஊர்வன நடப்பன பறப்பன; மக்கள் தேவர் நரகர்; அரசன் அடிமை: குரு சிஷ்யன்; தாய் தந்தை இனம் சனம் முதலியன.

வினைச்சொற்களாவன; பொருள்களின் தொழில்களாகிய இருத்தல், நிற்றல், அசைதல், செய்தல் என்பவற்றைக் குறிக்கும் சொற்கள். உ-ம்நின்றான், போனான். செய்தான், ஓடுகின்றது, பார்க்கின்றது. பறக்கின்றது முதலியன.

இடைச்சொற்களாவன: காலம் திக்கு தேசம் முதலிய பொருள்களைக் குறித்து, பெயர்ச்சொல்லாகாமலும், வினைச்சொல்லாகாமலும், அவைகளுக்குச் சகாயமாகியும், இடைப்பட்டு நிற்குஞ் சொற்கள். உ-ம். அன்று, இன்று, அங்கே, இங்கே, மற்று, போல, உறழ, நிகர, ஒப்ப முதலியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிச் சொற்களாவன: பொருளின் குணத்தையாவது தொழிலின் குணத்தையாவது விளக்குவதாம். உ-ம். கழிபெருஞ் சோலை (மிகப்பெரிய சோலை) நனிவளர்ந்தது (அதிகம் வளர்ந்தது). இவ்வாக்கியத்தில் கழிபெரும் என்பன சோலையின் குணத்தையும், நனியென்றது சோலையின் வளர்ச்சித் தொழிலையும். விளக்கின மையால் உரிச்சொற்களாயின.

இனி பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச் சொல் என்ற ஒவ்வொரு பாகுபாடும் இலக்கண அமைதிகளைப் பெற்றிருந்தால், இயற்சொல், திரிசொல் என்ற பிரிவுகளைச் சார்ந்துநிற்கும். எனவே, இவை பெயரியற் சொல்லென்றும், பெயர்த் திரிச் சொல்லென்றும், வினையியற்சொல்லென்றும், வினைத்திரி சொல்லென்றும்,இடையியற்சொல்லென்றும், வினைத் திரிசெல் லென்றும், இடையியற் சொல்லென்றும், இடைத் திரிசொல்லென் றும்,உரியியற்சொல்லென்றும், உரித்திரிசொல் லென்றும், கூறப்படும்.

01. பெயரியற் சொல்லாவது; இலக்கணவிதிப்படி நடை பெறும் செந்தமிழாகிக் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் தம்பொருளை நேரே விளக்குவது. செந்தமிழ் = செம்மையான தமிழ், சீர்மை பெற்றுள்ள தமிழ், இலக்கணவிதிப்படி நடைபெறுந்தமிழ். பெயரியற் சொல்லுக்கு உதாரணம்: கோவில், சாலை காலம்.

02. பெயர்த்திரி சொல்லாவது: ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களும், பல பொருளைக் குறிக்கும் ஒரு சொல்லுமான தன்மையைப் பெற்றிருப்பதால், அதன் பொருளை அரிதாக (பிர யாசப்பட்டு) அறி ய வேண்டியது.

ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களுக்கு உதாரணம்: விலங்கல் பொறை, வேதண்டம், விண்டு மாதிரம், வெற்பு முத லியன மலை என்ற ஒரு பொருளைக் குறித்தன. கிள்ளை, சுகம், தத்தை என்பன கிளி என்ற ஒரு பொருளைக் குறித்தன.

பகவன் என்ற ஒரு சொல் பல பொருளாகிய சிவபெருமா னையும், விஷ்ணுவையும், பிரமாவையும், புத்தனையும், குறிக் கின்றது. வாரணம் என்ற ஒரு சொல் பல பொருளாகிய சங்கு, யானை, கோழி, என்பனவற்றைக் குறிக்கும். நாகம் என்ற ஒரு சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பொருளாகிய மலையையும், பாம்பையும், சுவர்க்கலோகத்தையும் புன்னை மரத்தையும் குறிக்கும்.

*03.* வினையியற் சொல்லாவது: திரிசொற்போலாகாது யாவர்க்குந் தம் பொருளை நேரே இலக்கணமுறையாக விளக்குவது இதற்கு உதாரணம் : ஓடினான், விழுந்தது, போயிற்று.

*04.* வினைத்திரி சொல்லாவது ஒரு வினையின் பொருளைக் குறித்த பல சொல்லாகியும் பல வினைப் பொருளைக் குறித்த ஒரு சொல்லாகியும் வருவது. உ-ம். அடித்தல் என்னும் ஒரு வினையைக் குறித்த பல சொற்களாவன: தகர்த்தல், புடைத்தல், மோதுதல். சோருதல், மயங்குதல் என்னும் பலவினைகளைக் குறித்த ஒரு சொல்லாவது மறுகுதல்.

*05.* இடையியற் சொல்லாவது: இலக்கணவிதி அமைந்து யாவற்கும் நேரே தன்பொருளை விளக்குவது. உ-ம் அன்று, இன்று, அங்கே. இங்கே.

*06.* இடைத்திரிசொல்லாவது: பெயர்த்திரி சொல்லை அல்லது வினைத்திரி சொல்லைச் சார்ந்து அரிதாகப் பொருளுணர நிற்பது. உ-ம். மற்று. உறழ, கடுப்ப, யாண்டு, யாங்கு, நேர, நிகர என்பன.

*07.* உரியியற் சொல்லாவது: பொருளின் குணத்தையாவது தொழிலின் குணத்தையாவது யாவர்க்கும் நேரே விளக்கி நிற்பது . உ-ம். அன்பு, அழகு முதலியன.

*08.* உரித்திரிசொல்லாவது: பொருளின் குணத்தையும் தொழிலின் குணத்தையும் காட்டி அரிதாகப் பொருளுணர நிற்பது. உ-ம். சால, உறு, தவ, கழி, நனி என்பன.

இந்த எட்டுப் பாகுபாடுகளையுள்ள செந்தமிழும் அதன் விதிகளுக்கு வேறான கொடுந்தமிழ் மொழிகளும் தமிழகத்தில் பேசப்பட்டு வருகின்றன.

கொடுந்தமிழ்ழென்பது சீர்மையற்ற கோணலான தமிழ், இந்தக் கொடுந்தமிழைத் தமிழகத்துக்குப் பலதிக்கிலும் கற்றறியாதவர்கள் வழங்குவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுந்தமிழிலுள்ள சில சொற்களும், தமிழகத்துக்குப் புறம்பான தேசங்களினின்று செந்தமிழ் நிலத்திற் குடிகொண்ட சொற்களையும் திசைச் சொல்லெனப் பெரியோர் கூறுவர்.

தமிழகத்துத் திசைகளிற் பயிலும் கொடுந்தமிழுக்கு உதாரணங்கள் முன்னரே (பக்கம் 287) கூறப்பட்டன.

தமிழகத்துக்கப்பாற்பட்ட திசைகளினின்று தற்காலத்தில் வந்திலகும் திசைச்சொற்களுக்கு உதாரணம்: கதிரை ( நாற் காலாசனம்), போத்தல் ( புட்டி), மேசை ( பீடம்), பேனை ( ஓர்வித எழுத்தாணி), பென்சில் ( ஈயஎழுத்தாணி), உவைன் (முந்திரி ரசம்), பிறாண்டி ( ஓர் விதசாராயம்), க்ளாஸ் ( ஸ்படிகலோட்டா), சிலேற் (கற்பலகை), சூப் ( சூழ்), பூட்ஸ் ( ஒரு வித பாதரக்ஷை), சப்பாத்து (இன்னொருவித பாதரக்ஷை), காப்பி, கடுதாசி( காகிதம்), சால்வை ( உத்தரீகம்), ஜாப்தா (பட்டோலை), பங்கா ( தூக்கு விசிறி), ஜெமீன் தார், மிராஸ்தார், தாசில்தார், ஜில்லா முதலியன.

இவற்றில் முதலிரண்டு சொல்லும் க்றீஸ் தேசத்திலும், அடுத்த நான்கு உறோம் தேசத்திலும், இதற்கடுத்த மூன்றும் இங்கிலாந்துத் தேசத்திலும், இதற்கடுத்த இரண்டும் பிறான்ஸ் தேசத்திலும், இதற்கடுத்த சொல் போர்ட்டுக்கல் தேசத்திலும், இதற்கடுத்த மூன்றும் அராபிதேசத்திலும், இதற்கடுத்த ஆறும் முகம்மதியர் இராச்சியத்திலும் நின்று வந்தன.

இவையெல்லாம் தமிழகத்துக்கு அப்பாற்பட்ட திசைகளி னின்று தோன்றியமையால், இவையும் திசைச் சொல்லெனப்படும்.

பவணந்தினிமுனிவர் தமது ௰௪ - ஆம் சூத்திரத்தில் (ப. 306 இல்) செந்தமிழ் நிலத்தைச் சார்ந்த பன்னிரு நிலத்திலும் செந்தமிழ் நிலத்துக்குப் புறம்பான பதினேழு தேசங்களினுமிருந்து வந்து புகுந்த சொற்களைத் திசைச் சொல்லென்றார்.

ஆகவே, அவர் கருத்து யாதெனில், தமிழிலுள்ள திசைச் சொற்கள் ௰௨ அகநிலத்திலும் ௰௭ புறநிலத்திலும் இருந்து வந்தன என்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழும் கொடுந்தமிழும் பேசப்படுவோர் வாக்கைப் பற்றியே இருவகைப்பட்டதாலும். இவ்விருபகுதியாளரும், ஒரே நிலத்திற் கூடி வாழத்தக்கவராதலாலும், செந்தமிழாவது கொடுந் தமிழாவது வெவ்வேறு நிலத்தில் முற்றாகப் பேசப்பட்டு வந்த தென்றும், வருகின்றதென்றும், வருமென்றும் கூறக் கூடாது.

எந்த நிலத்திலும் செந்தமிழாவது கொடுந்தமிழாவது சிறு பான்மையாக அல்லது பெரும்பான்மையாக வழங்கி வருமெனக் கூறலாம்.

இதுவே திண்ணமாயினும், அபிமானவழியிற் சென்ற வித்வான்கள் செந்தமிழ்நாடு ஒன்றென்றும், கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டென்றும், ஒரு சாரார் செந்மிழ்நாடு பாண்டிய நாடென்றும், மற்றொருசாரார் சோழநாடென்றும் கூறுவர்.

பாண்டியநாடே செந்தமிழ் நாடென்பார் கட்சி:
"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவரும்
சௌந்தர பாண்டிய னெனுந்தமிழ் மாறனுஞ்
சங்கப் புலவருந் தழைத்தினிதிருக்கும்
மங்கலப்பாண்டி வளநாடென்ப."

சோழநாடே செந்தமிழ் நாடென்பார் கட்சி:
"மன்ற வாணன் மலர் திரு வருளால்
தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமு மாதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவருந் தழைத்தினி திருக்கும்
மையறு சோழ வளநாடென்ப."

சேனாவரையரும் நச்சினார்கினியரும் செந்தமிழ் நிலம் வைகையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாகுமென்றார்கள்.

தமிழ் நாட்டின் பூர்வ எல்லை வடக்கில் வேங்கடமலை, தெற்கில் குமரியாறு, கிழக்கிலும் மேற்கிலும் கடல் எனத் தொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பியரோடு படித்தவரும் தொல்காப்பியத்துக்குப் பாயிரங் கூறியவருமாகிய பனம்பாரனார் கூறினார். அவர் சூத்திரம்:

"வடவேங்கடந் தென்குமரியாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்."

ஈண்டு, குமரியென்றது குமரியாற்றை. இது தொல்காப்பியர் காலத்தில் உள்ளது. இதற்குத் தெற்கிலே ஏழ் தெங்கு நாடு, ஏழ் மதுரைநாடு, ஏழ் முன்பாலைநாடு, ஏழ் பின்பாலைநாடு, ஏழ் குறைநாடு, ஏழ் குடகாறைநாடு, ஏழ் குறுப்பனைநாடு என சயகூ நாடுகளிருந்தன. இவற்றுள் பஃறுளியாறும் இருந்தது. இந்த சயகூ நாடுகளும் குமரியாறும் பஃறுளியாறும் தலைச்சங்கமிருந்த மதுரையும் நிலந் தருதிருவிற் பாண்டியன் காலத்தில் கடல்கொண்டு அழிந்தன. கடல்கொண்டதைப்பற்றிச் சிலப்பதிகாரம் வேனிற் காதையுரையிலும், இறையனாரக பொருளுரையிலும், இளம்பூர ணர் நச்சினார்க்கினியார் தொல்காப்பிய உரைகளிலும் காண்க.

கீழ்வரும் வெண்பாவில்,

"தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன் வடக்கு நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிரு நாட்டெண்"

எனக் கூறியிருக்கின்றது.

இதில், தென்பாண்டியென்றது குமரியாற்றின் தெற்குப் பாகத்தை, இதன் வடக்கிலிருந்தன ஏனைய குட்டநாடு, குட நாடு, கற்காநாடு, வேணாடு, பூழி நாடு, பன்றிநாடு, அருவாநாடு, அருவா வடதலைநாடு, மலாடு, புனனாடு என்பன. இவற்றைச் சில பண்டிதர் கொடுந்தமிழ் நாடென்பர்.

இப்பொழுது எங்கள் கைக்கெட்டின நூல்களைக்கொண்டு முற்றாகக் கொடுந்தமிழ் வழங்கியநாடு, அல்லது முற்றாக செந்தமிழ் வழங்கிய நாடு இருந்ததோவென்று சொல்லுதலரிது.

ஔவையார் காலத்தில் பாண்டியநாட்டினெல்லையைக் கீழ் வருமாறு அவர் குறித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெள்ளாற்றின் தெற்கு மேற்குப் பெருவெளியாம்
தெள்ளாம் புனற்கன்னி தெற்காகும் - உள்ளாக
ஆய்ந்த கடல்கிழக்கு ஐம்பத்தாறாங்காதம்
பாண்டியநாட் டெல்கைப் பதி."

ஈண்டு வெள்ளாற்றின் தெற்கென்றது பாண்டியநாடு வெள்ளாற்றுக்கப்பாற்பட்ட பூமியல்லவென்றும், அவ்வாற்றிற்குத் தெற்கேயென்றும், மேற்குப்பெருவெளியாமென்றது திருநெல்வேலி மதுரை முதலிய மத்ய பட்டினங்களுக்கு மேற்கே நெல் முதலிய தானியங்கள் விளையும் நீண்டகண்ட வெளியென்றும், அவ்வெளியின் முடிவு மேற்திசையிலுள்ள குலபர்வதங்களென்றும், தெள்ளாம் புனற்கன்னி தெற்கு என்றது தென்றிசையினெல்லை தெளிவான நீரையுடைய கன்னியாகுமரியாறென்றும், கடல்கிழக்கு என்றது கிழக்குத் திசையில் கடலென்றும், உள்ளாக ஆய்ந்த ஐம்பத்தாறாங்காதம் என்றது இந்த நான்கெல்லைகளுக்குள்ளாக ஆராய்ந்து கண்ட சதுர்க்காதம் ஐம்பத்தாறு என்றும் அறியவேண்டியது.

இப்படிப்பட்ட பாண்டிநாட்டில் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு வருஷங்களின் முன் ஔவைப்பெருமாட்டியார் வாழ்ந்தவர். தமது காலத்தில் தமிழ்நாட்டுக்குப் பாண்டியன் சேரன் சோழன் என்ற பட்டப்பெயர் பொருந்திய மூவேந்தர்கள் இருந்தார்களென்றும், தமது பிரீதிபெற்ற ஓர்மங்கையின் விவாகத்துக்கு இவ்வரசர்கள் வந்தார்களென்றும், அவர்களையுபசரிக்குமாறு தமக்கு முன்னின்ற ஒரு பட்ட ஆண்பனைத் துண்டத்தை ஒருபாட்டால், திருவருள் சகாயங்கொண்டு, பெண்பனையாக்கிக் காய்க்கச்செய்து, அதன் இனிய மூன்று பழங்களை அவர்களுக்களித்தாரென்றும், கீழ்வரும் செய்யுளாலறிகின்றோம்.

"திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் றார்மணப் பந்தரின்கீழ்
நொங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்துப்
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே."

இவருக்கு வெகுகால முன்னரிருந்த தமிழகத்தின் வரலாற்றையும், செந்தமிழ்கொடுந்தமிழ் நிலையையும், கவனிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் ஔவையார் முதலிய பெரியோர் பாண்டி நாட்டு மதுரையில் ஸ்தாபிக்கப்பட்ட கடைச்சங்கத்துக்குரியவர்.

இவர்களிருந்த காலத்திற்கு மூவாயிரத்திருநூறுவருஷங் களுக்குமுன் கலியுகம் பிறந்து இதற்குமுன் தூவாபரயுக முடிவில் இற்றைக்கு ஐயாயிரத்தைந்நூறு வருஷத்துக்குமுன் யுதிஷ்டிரர் முதலிய பாண்டவர்களுக்கும், துரியோதனன் முதலிய தார்த்தராஷ்டர் களுக்கும், தற்காலத்தில் டில்லியியென்று வழங்கும் ஹஸ்தினா புரத்தில் நடந்த பெரும்யுத்தத்தில் அக்காலத்துப் பாண்டியனும் சோழனும் சேரனும் பாண்டவர்களுக்காகத் தங்கள் சேனைகளோடு சென்று போர் புரிந்து வெற்றியடைந்தார்களென்றும், வியாச முனிவர் மகாபாரத்தில் கூறினர்.

அதற்குமுன் நடைபெற்ற திரேதாயுகத்திலும் பாண்டிய சேர சோழ அரசர்களிருந்தார்களென்றும் வால்மீகி முனிவர் ராமாயணத்திற் கூறினர்.

ஸ்ரீராமர் தம் பத்தினியாகிய சீதையை ராவணன் கையினின்று மீட்கும்பொருட்டு, வானர அரசனாகிய சுக்கிரீவனைச் சார்ந்தபொழுது, அவன் தனது சேனாதிபதிகளை அழைத்துச் சீதா பிராட்டியைப் பாண்டிய சோழசேர தேசங்களிலும் தேடிப் பார்க்க வேண்டுமென்றும், பாண்டியராச்சியத்திலுள்ள பெருந்துறைமுகப் பட்டணமாகிய கபாடபுரத்திலும் விசாரிக்க வேண்டுமென்றும் கட்டளையிட்டான்.

பாண்டியனென்னும் பெயர் பழையவனென்று பொருள் படும். பண்டு, பண்டுகாலம் என்பன பழைமையைக்குறிக்கும். பண்டு என்னும் பெயர்ச்சொல் பாண்டு எனவரும். பாண்டல் நெய் என்பது பழைமைபெற்ற நெய் என்று பொருள்படும். இதுபற்றிப் பாண்டியனைப் "பழையவன்" என்று தொன்று தொட்டுப் பெரியோர் கூறுவர். ஸ்ரீபாகவதபுராணத்தின் எட்டாவது காண்டத்தில் விஷ்ணுபகவான் மற்ஸிய (மீன்) அவதாரங்கொண்டு ஆதிகாலத்தில் தர்மசொரூபியாகிய ஒரு பாண்டியனை ரக்ஷித்தாரென்றும், அவனது ப்ராரத்வ கர்மம் முடிந்தபின் அவன் வைவஸ்வத மநுவாகப் பிறந்தானென்றும் கூறியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைவஸ்வதமநு தற்காலம் நடைபெற்றுவரும் ஏழாவது மன்வந்திரத்துக்கு உரியவர். ஆகவே பாகவத புராணத்திற் குறிக்கப்பட்ட பாண்டியன் ஆறாவது மன்வந்திரத்துக் குரியவரென்றும் இவர் காலம் பத்துக்கோடி வருஷங்களுக்கு முன்னென்றும், சித்திக் கின்றது.

இந்தப் பாண்டியனது சரித்திரத்தை ஸ்ரீமத் பாகவதம் கீழ் வருமாறு கூறிற்று.

இவர் கிருதமாலா என்னும் நதியில் தண்ணீரள்ளுகையில் ஒருசிறுமீன் தமது கைக்குள் வந்ததென்றும், அதை நோக்கும் பொழுது தன்னை ஒரு பாத்திரத்திற் செலுத்திவிடும்படி கேட்ட தென்றும், அப்படியே அதனைச்செலுத்திவிட்டு அடுத்தநாள் அரசன் பார்க்கும்பொழுது அம்மீன் அப்பாத்திரம் நிறைய வளர்ந்திருந்ததென்றும், தன்னை ஒரு குளத்தில் கொண்டுபோய் விடுக என்று சொன்னதென்றும், பின்னர் அக்குளத்தளவு நிறைந்திருந்த தென்றும், அதன்பின் தன்னைச் சமுத்திரத்தில் விட வேண்டுமென் றும், சொற்பகாலத்துக்குள் ஒருபெரிய சலப் பிரளயம் வருமென்றும், சலப் பிரளயம் ஆரம்பிக்கமுன் தான் சமுத்திரக் கரையோரத்தில் ஒரு மரக்கலத்தோடு வந்து நிற்பாரென்றும், அத னைத் தமது கொம்பிற் பிணைத்து அதன்மீது ஏறிக்கொள்ள வேண்டுமென்றும், தான் பிரளயகாலம் முடிவு பெறும்வரையும் அவரையும் அவரோடு வரும் சாதுக்களையும் பசுமுதலிய விலங்கு களையும் அரிய ஒஷதிகளையும் சம்ரக்ஷித்துக் கரையேற்றுவா ரென்பதுமே.

இவ்வாறு ஜலப்பிரளயத்தினின்று காக்கப்பட்டவர்தான் மீனக்கொடியைப்பெற்று "பழையவன்" அல்லது "பாண்டியன்" என்று தமிழ்மொழியில் போற்றப்பட்டவர். இவரே வைவஸ்வத மநுவாக வந்தவரென்று விஷ்ணுவினவதாரங்களை வடமொழியில் விளங்குகின்ற ஸ்ரீ பாகவதங் கூறிற்று.

பாண்டியர் குடியின் சரித்திரம் இப்படியிருப்பதால், இதனை மகாபாரதத்தில் கூறப்பட்ட பாண்டவர் குடியோடு சம்பந் தப்படுத்தவே கூடாது. பாண்டுரோகத்தால் வாதிக்கப்பட்டு உத்தர தேசத்து ஹஸ்தினாபுரத்தில் இருந்த பாண்டுராசனுடைய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரர்கள் பஞ்சபாண்டவர்கள் எனப்படுவர். இந்தப் பாண்டவர்கள் இற்றைக்கு ஏறக்குறைய ஐயாயிரத்திருநூறு வருஷங்களுக்குமுன் வாழ்ந்தவர்கள். பாண்டியர்களோ வைவஸ்வத மனுவுக்குமுன்னிருந்த பாண்டியனது வம்சத்தவர்கள். பிரமாணப்படி இவர்காலம் அவர்களுக்கு பத்துக்கோடி வருஷங்களுக்கு முன்னென்று நிதானிக்க வேண்டும்.

மிக பண்டைக் காலத்திலுள்ள உரைநடை செய்யுள்களாகிய இலக்கியத்தைக்கொண்டே சுப்பிரமணியக் கடவுளும் அகஸ்திய முனிவரும் தங்கள் இலக்கண நூல்களை இயற்றினர். பாண்டிய அரசர்களும் தமிழ்ச்சங்க மூலமாகச் செந்தமிழ் நூல்களைப் பராபரித்தனர்.

இவ்வாறு நீடூழிகாலம் தமிழ்ச்சங்கங்கள் நடைபெற்று வாழ்ந்தபடியால் தலை இடை கடைச் சங்கங்கள் பதினாயிரம் வருஷங்களுக்குட்பட இருந்தன என்று சில பண்டிதர் கூறுவது புத்தியன்று. மேலும், ஒவ்வொரு சங்கத்தைப்பற்றி இத்தனை புலவர் விளங்கினரென்ற கூற்றும் ஒவ்வாது இன்னும் அநேகர் இருந்திருப்பார்கள் என்பதையும் மறுக்கக்கூடாது.

தமிழக மூவேந்தர்களது நகரங்கள் தோறும் வசித்த கல்விமான்கள் செந்தமிழையே வழங்கிவந்தனர். இவர்களோடிருந்த நாட்டார் தாழ்வான கொடுந்தமிழைப் பேசியும் எழுதியும் வந்தனர். இருபக்ஷத்தாரும் இக்காலத்து வழக்கம்போலக் கூடிவாழ்ந்தனர். செந்தமிழாளர் தங்களுக்குள் செந்தமிழையும், ஏனைத் தமிழரோடு கொடுந்தமிழையும், பேசிவந்தனர் என்பது நிச்சயமாக எண்ணலாம்.

இனி முற்றொடர் 295-ம் பக்கத்தில் கூறியபடி, வடசொற்பாகுபாடு எஞ்சி நிற்கின்றது. இதைப்பற்றி எழுத்ததிகாரத்து வடமொழியாக்கம் என்ற பகுதியில், பக்கம் 160 தொட்டு 166 வரைக்கும் பார்த்தறிக.

இவற்றிக்குச் சூத்திரங்கள் : -

**யக. அதுவே**

இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர்வினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெனவிரண் டாகு மிடையுரி யடுத்து
நான்கு மாந்திசை வடசொலணு காவழி.

இதன் பொருள் :

அது = தமிழ்ச்சொல்லாவது (தமிழ்ப்பாஷையில் வழங்கி வருஞ் சொற்களாவன)

இயற்சொல் திரிசொல் இயல்பின் = இயற்சொல் என்னுந் தன்மையையுடைய

பெயர்வினை என இரண்டாகும் = பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் என்று இரண்டுவகையாகும். (இவற்றுடன்)

இடைஉரி அடுத்து = இயற்சொல்லினதும் திரிசொல்லினதும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுஞ் சேர்ந்து

நான்குமாம் = நால்வகையாகும்.

திசைவடசொல் அணுகாவழி = திசைச்சொல்லும் வடசொல்லும் சேராவிடத்து.

௰௨. செந்தமி ழாகித் திரியா தியார்க்கும்
தம்பொருள் விளக்குந் தன்மையை வியற்சொல்

இதன் பொருள்:

செந்தமிழ் ஆகி = செந்தமிழ்நிலத்து மொழியாகி

திரியாது = திரிசொற்போலாகாது

யார்க்கும் = கற்றோர்க்கும் கல்லா தோர்க்கும்

தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல் = தமது பொருளை விளக்கும் இயல்புடைய சொற்களே இயற்சொற்களாம்.

௰௩. ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும்.

இதன் பொருள் :

ஒருபொருள் குறித்த பலசொல்லாகியும் = ஒருபொருளைக் குறித்துவருகின்ற பல சொற்களாகியும்.

பல்பொருள் குறித்த ஒரு சொல்லாகியும் = பலபொருளைக் குறித்து வருகின்ற ஒரேசொல்லாகியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதுணர்பொருளன திரிசொல்லாகும் அரிதாக அறியவேண்டிய பொருளையுடையன திரிசொற்களாம்.

௰௪. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினுந்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப.

இதன் பொருள்:

செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்திலும் = செந்தமிழ் நிலத்தைச்சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலங்களிலும்

ஒன்பதிற்றிரண்டினில் தமிழ் ஒழி நிலத்தினும் தங்குறிப்பின = பதினெண்பாஷைகளுள்ளே தமிழ்ப்பாஷை வழங்காத பதினேழு நிலங்களிலும் வசிப்போருடைய மொழிகளை அநுசரித்து செந்தமிழ்நிலத்தில் வழங்குவனவற்றை

திசைச்சொல் என்ப = திசைச்சொல் என்று சொல்லுவர் புலவர்.

௰௫. பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானு மியைவன வடசொல்.

இதன் பொருள்:

வடசொல் = வடசொற்களாவன

பொது எழுத்தானும்= ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொது எழுத்தாலும்.

சிறப்பு எழுத்தானும் = ஆரியத்திற்கே யுரிய சிறப்பெழுத்துத் திரிந்த எழுத்துக்களாலும்.

ஈரெழுத்தானும் இயைவன = இவ்விருவகை யெழுத்தினாலும் தமிழ் மொழியோடு இயைந்து வழங்குவனவாம்.

III. பெயர்ச்சொல். *(ப. 306 - 373)*

*1.* பெயரின் பொதுவிலக்கணம். *(ப. 306 - 310)*

பெயர்கள் பொருள்களைப்பற்றியே இருப்பதால் பெயரின் பிரிவுகளை அறிதற்கு பொருளின் விரிவுகளை முதலறியவேண்டும்.

பொருள் சித் அசித் என்று இருவகைப்படும். சித் பொருள் பரமாத்மாவும் ஜீவாத்மாக்களுமே. இவை அறிவுள்ள பொருள்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயரியல்

அறிவில்லாப் பொருளெல்லாம் அசித்பொருள், அல்லது சடப்பொருள் எனப்படும்.

ஜீவாத்மாக்கள் தமது ஐம்பொறிகளாலும் மனசாலும் அறியும் பொருள்களெல்லம் அகப்பொருள் என்றும் புறப்பொருள் என்றும் இரு வகைப்படும்.

இவற்றில் அகப்பொருளாவன உள்ளத்தில் நிகழ்கின்ற அன்பு, அறிவு, பகை, அறியாமை, வஞ்சனை, பொறாமை, லோபம் முதலியவை.

புறப்பொருளாவன: வெளியேவிளங்கும் நிலம் நீர் தீ காற்று ஆகாசமும் இவற்றைப் பற்றியிருக்கும் ரூபங்களும்.

இப்பொருள் தொழிலற்றும் தொழிலோடு கூடியும் இருக்கும். தொழிலற்றுத் தானாக நிற்கும்பொருள் அதன் இயல்பு அல்லது இயற்கை எனப்படும்.

ஸம்ஸ்கிருதத்தில் குணங்களைத் தரித்துநிற்கும் பொருளாகிய ஜீவாத்மா குணி என்பதுபோல, தமிழில் பண்பை (குணத்தை)த் தரித்து நிற்கும்பொருள் பண்பி எனப்படும். பக்கம் 123.

பொருளையும் பண்பையும் தொழிலையும் அறிவதற்குப் பெயர் அவசியம். இவற்றிற்கு இட்டபெயர்கள் பொருட்பெய ரென்றும் பண்புப்பெயரென்றும் தொழிற்பெயரென்றும் மூவகைப்படும். இம்மூவகைப் பெயர்களும் பெயர்ச் சொற்களே. (ப.22)

பெயர்ச்சொல்லானது பொருள் பண்பு தொழில் என்பவற்றிற்கு இடப்பட்டபெயராகியும், இறந்தகாலம் நிகழ்காலம் எதிர் காலம் என்றவற்றைக் காட்டாமல், திணை பால் இடமென்ற பிரிவு பாடுகளைக்காட்டியும் நிற்கின்றசொல்.

இராமன் மதுரை கண் பழம் கல் முதலிய பொருள்களின் பெயரும், நன்மை தீமை அருமை பெருமை கருமை செம்மை முதலிய பண்புப்பெயரும், வருகை (வருதல்) பிறப்பு (பிறத்தல்) முதலிய தொழிற்பெயரும், காலங்காட்டாமை காண்க. (வருகை என்பதில் கை தொழிற்பெயர்விகுதி, பிறப்பு என்பதில் பு தொழிற்பெயர் விகுதி, வருதல் பிறத்தல் என்பவற்றில் தல் தொழிற்பெயர் விகுதியாம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்றுவரும். கரும்பு என்னும் பெயர்ச்சொல் ஐ ஆல் கு முதலிய உருபுகளைப் பெறும். உ-ம். கரும்பை கரும்பால் கரும்பிற்கு.

பெயர்ச்சொற்கள் திணை பால் இடம் என்ற வீசேஷங்களைப் பொருந்திவிளங்கும். உயர்திணைக்கு உ-ம். மக்கள் தேவர் நரகர். அஃறிணைக்கு உ-ம். செடி மரம் பறவை விலங்கு முதலிய உயிர் களும், மண் கல் முதலிய சடப்பொருள்களும்.

பால்கள் ஐந்துக்கும் உ-ம். ஆண்பால், பொன்னன், பெண் பால், பொன்னி, பலர்பால், மலையர் கரையார். ஒன்றன்பால், ஆடு மாடு மரம், பலவின்பால், ஆடுகள் மாடுகள் மரங்கள்.

பொருட்பெயர் பண்புப்பெயர் தொழிற்பெயர் என்றவற்றை விட, வினையாலணையும் பெயரெனவும் ஒரு கூறுண்டு. எனவே பெயர்ச்சொல் நால்வகைப்படும்.

இவற்றில் வினையாலணையும் பெயருக்கு உ-ம். ஓடினவன், அழுதவன், விழுந்தவன் (வந்தான்). அசைந்தது, (விழுந்திட்டது).

பொருள்களின் தொழில்களால் வினையாலணையும் பெயர்ச் சொற்கள் வந்தன. பொருளும் பொருளுக்குத் தொழிலும் (வினை யும்) இருப்பதால், பொருளும் அதன்வினையும் சேர்ந்த விடத்து அச் சேர்க்கையை விளக்கும் பெயர் வினையாலணையும் பெயர் எனப் படும்.

பொருளின் தொழில்நிலை உயர்திணையாகிய ஆண்பாலா கவும் பெண்பாலாகவும் பலர்பாலாகவும், அஃறிணையாகி ஒன்றன் பாலாகவும் பலவின் பாலாகவும், சென்றகாலம் நிகழ்காலம் எதிர் காலம் என்ற திரிகாலமாகவும், தன்மை முன்னிலை படர்க்கை என்ற மூவிடங்களாகவும் தோன்றும்.

திணை பால் இடம் என்ற சின்னங்களோடு கூடிய பொருட் பெயர் ௰கூ வகைப்படும். கீழ்வருமாறு காண்க.

1. நான் என்றது தன்மை ஒருமைப் பொதுப்பெயர்.
2. நாம் என்றது தன்மைப் பன்மைப் பொதுப்பெயர்.
3. நீ என்றது முன்னிலை ஒருமைப் பொதுப்பெயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நீர் என்றது முன்னிலைப் பன்மைப் பொதுப்பெயர்.

5. அவன் என்றது உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைப்பெயர்.

6. அவள் என்றது உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்.

7. அவர் என்றது உயர்திணைப் பலர்பாற் பன்மைப் படர்க்கைப்பெயர்

8. அது நிலம் நீர் தீ வாயு ஆகாசம் முதலிவை அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைப்பெயர்கள்.

9. அவை என்றது அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப் பெயர்.

10. ஆடு மாடு என்றசொற்கள் அஃறிணை ஆண் பெண்ணாகிய இருபாற் பொதுப்பெயர்கள்.

11. சாத்தன் என்றது இருதிணை ஆண்பாற் பொதுப்பெயர்.

12. சாத்தி என்றது இருதிணைப் பெண்பாற் பொதுப் பெயர்.

13. கோதை என்றது உயர்திணை ஆண்பாலொருமையும் பெண்பாலொருமை அஃறிணை ஒன்றன்பாலுமாகிய முக்கூற்றெருமைப் பொதுப்பெயர்.

14. கோதைகள் என்றது இருதிணைப் பன்மைப் பொதுப் பெயர்.

15. ஒருவர் என்றது உயர்திணை ஆண் பெண் ஆகிய இருகூற்றொருமைப் படர்க்கைப் பொதுப்பெயர்.

16. எல்லாம் என்றது இருதிணைப் பன்மை மூவிடப் பொதுப் பெயர்.

பண்புப் பெயர் பொருளின் தன்மையை (அல்லது இயல்பை, அல்லது குணத்தை) விளக்கும், இதற்குத் திணை பால் இடம் இல்லை.

தொழிற்பெயருக்கும் திணைபால் இடம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம் : -

யசு. இடுகுறி காரண மரபோ டாக்கந்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே.

இதன் பொருள் :

இடுகுறி காரணம் மரபு ஆக்கம் தொடர்ந்து = இடுகுறிப்பெயர் காரணப் பெயர் என்றவை தத்தம் மரபையும் ஆக்கத்தையும் தொடர்ந்து

தொழில் அல காலம் தோற்று = வினையாலணையுங் காரணப்பெயர் மாத்திரங் காலங்காட்ட மற்றைய பெயர்கள் காலங்காட்டாதன வாகி

வேற்றுமைக்கு இடன் ஆய் = எட்டு வேற்றுமைகளும் சேர்ந்து வருவதற்கு இடமாகி

திணைபால் இடத்து ஒன்று ஏற்பவும் = இருதிணையிலும் ஐம்பாவிலும் மூன்றுமிடங்களிலும் ஒன்றை ஏற்பனவும்

பொதுவும் = பலவற்றினை ஏற்பனவும்

ஆவனபெயர் = ஆகிவருவன பெயர்களாம்.

இதுகாறும் பெயரின் பொதுவிலக்கணம் கூறப்பட்டது. இனி உயர்திணை ஆண்பாற் பெயர்கள் கூறப்படும்.

*2. உயர்திணை ஆண்பாற் பெயர்கள். (ப. 310 - 316)*

உயர்திணை ஆண்பாற்பெயர்கள் அன் ஆன் ன் என்ற விகுதிகளைப்பெற்று முடியும். உ-ம். சிறியன் நாட்டான் பிறன்.

மேலும், பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் அறுவகைப் பொருட்பெயர்களைப் பகுதியாகக்கொள்ளும்.

மேலும், அ இ உ என்ற சுட்டெழுத்துக்களையும், எ ஏ யா என்ற வினாயெழுத்துக்களையும், பிறமற்று முதலிய இடைச்சொற்களையும், பகுதியாகக்கொள்ளும்.

மேலும், ஆண்பாலைக் குறிக்கும் விகுதிகளைக் கொள்ளாமல் ஆண்பாற்பெயராய் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயரியல்

இனி, பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் பொருட்பெயர்களைப் பகுதியாக உயர்திணை ஆண்பாற் பெயர் கொள்ளும் என்பதை முறையே விரிப்பாம்.

முதல், பொருளைப் பகுதியாகக் கொண்ட உயர்திணை ஆண்பாற் பெயர்கள் பொருளடியாகப் பிறக்கும் என்பது சொல்லப் படும்.

### 1°. பொருள் அடியாகப் பிறக்கும் உயர்திணை ஆண்பாற் பெயர்கள்.

இவை சுற்றம், எண், கூட்டம் முதலிய பொருள்களின் பெயர்களைப் பகுதியாகப் பெற்றுவரும்.

சுற்றத்தால் வரும்பெயர்கள்: தமன் (தம்முடையவன்), எமன் (எம்முடையவன்)

எண்ணால் வரும்பெயர்கள்: ஒருவர், இருவர்

கூட்டத்தால் வரும்பெயர்கள்: தர்மசபையான், சமணன்

இப்பொருட்பெயர்களும், இடப்பெயர் முதலிய ஏனைய பெயர்களும் பகுதிகளாக வரும்பொழுது, தனிப்பகுதிகளாயும், அடையடுத்த (சிறப்பிக்கும் சொல்லைப் பொருந்தின) பகுதிகளாயும் வரும்.

தனிப்பகுதியைப்பெற்றுவந்த பொருட்பெயருக்கு உ-ம். பொன்னன். அடையடுத்துவந்த பொருட்பெயருக்கு உ-ம். பசும் பொன்னன்.

### 2°. இடம் அடியாகப் பிறக்கும் உயர்திணை ஆண்பாற் பெயர்கள்.

இவை ஐந்திணை நிலம், வான், தேசம், ஊர், அகம், புறம் என்ற இடப்பெயரடியாகப் பிறந்தவை.

ஐந்திணை நிலமாவன குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தலாம்.

தமிழகக் கடலோரத்தில் இருக்கும் பூமிகளுக்கு நீலவர்ண மான நெய்தற்புஷ்பம் உரியதாதலால், அந்நிலம் நெய்தல் நிலம் எனப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கடுத்த உள்ளூர் நிலம் உப்புச் சம்பந்தமற்றதாயும், நெல்முதலிய தானிய விளைவுக்கு உரியதாயும், ஆறு குளம் கிணறுகளின் அருகே மருதமரம் ஓங்கிவளர்வதாயும் இருப்பதால், அந்நிலம் மருதநிலமெனப்பட்டது.

இதற்கடுத்த பூமியில் ஆடு மாடு மேய்ப்புக்குரிய புல் செடி கொடிகள் நிறைந்திருப்பதாலும், தெய்வபூசைக்குரிய முல்லைப் புஷ்பமும் வில்வம் கொன்றை குருந்து முதலிய விருக்ஷங்களுமிருப் பதாலும். இந்த நிலம் முல்லைநிலமெனச் சிறப்பிக்கப்பட்டது.

இதற்கடுத்த நிலம் வறட்சிபெற்று பாலை முதிரை இருப்பை முதலிய மரங்கள் வளர்வதற்கிடமாதலால், பாலை நிலைமெனப்பட் டது.

இதற்கடுத்த நிலம் உயர்ந்த மலைகளையும் பன்னிரண்டு வருஷத்துக்குகொருதரம் பூக்கின்ற குறிஞ்சி மரங்களையும் பெற்றிருப் பதால், குறிஞ்சி நிலம் எனப்பட்டது.

இவையே இடமடியாகப் பிறந்த ஐந்திணை நிலப்பெயர்கள் என்றறிக. இவற்றில் வசிப்பவர் பெயர் கீழே காண்க.

குறிஞ்சியில் வாழ்பவன் வெற்பன் சிலம்பன் எனவும், (வெற்பு, சிலம்பு = மலை), பாலையில் வாழ்பவன் மறவன் (அறத் துக்கு விரோதமான மறத்தன்மைபெற்றவன்), எயினன் (அம்பால் எய்யும் தொழிலுடையவேடன்) எனவும், முல்லையில்வாழ்பவன் இடையன் (உயர்ந்தோருக்கும் தாழ்ந்தோருக்கும் இடை யிலுள்ளவன்) ஆயன் (பசுவைக் காப்பவன்) எனவும், மருதத்தில் வாழ் பவன் ஊரன் மகிழ்நன் எனவும், நெய்தலில் வாழ்பவன் பரவன் (பரவை கடல், கடலையடுத்திருப்பவன், கரையான் (கடலின் கரை யைச்சார்ந்தவன்) எனவும், கூறப்படுவர்.

வான்பரப்பைப்பற்றி பிறந்தபெயர் சுவர்க்கலோகத்தான் முதலியன.

தேயம் என்ற காரணம்பற்றிப் பிறந்தபெயர்கள் இலங்கை யான், மலையாளத்தான், வங்காளி முதலியன.

ஊரைப்பற்றிப்பிறந்த பெயர்கள்: கொழும்பான், தஞ்சாவூ ரான், பழநியான் முதலியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தைப்பற்றிப் பிறந்தபெயர்கள் இல்லான், உறவோன், நண்பன் முதலியன.

புறத்தைப்பற்றிப் பிறந்தபெயர்கள் புறத்தியான், அந்நியன் முதலியன.

இவையெல்லாம் இடமடியாகப் பிறந்தன.

$3^{0}$. காலம் அடியாகப் பிறக்கும் உயர்திணை ஆண்பாற் பெயர்.

இப்பெயர்கள் வருஷம், இருது, மாசம், நக்ஷத்திரம் முதலிய காலப்பிரிவுபாடுகளைப் பற்றிப்பிறக்கும்.

பிரபவன் என்றபெயர் பிரபவ வருஷத்தில் பிறந்தவன் என்றும், ஸ்ரீமுகன் என்றபெயர் ஸ்ரீமுகவருஷத்தில் பிறந்தவன், என்றும் குறிக்கும்.

முதுவேனிலான், காரான், என்னும்பெயர்கள் இருதுப்பருவங்களைப்பற்றிவந்தன.

பரணியான், ரேவதியான் என்ற பெயர்கள் அந்த நக்ஷத்திசங்களைப்பற்றிவந்தன.

கார்த்திகையான், சித்திரையான் என்ற பெயர்கள் அந்த மாசங்களடியாகப் பிறந்தன.

$4^{0}$. சினை அடியாகப்பிறக்கும் உயர்திணை ஆண்பாற் பெயர்கள் தோள், மயிர், மார்பு, கண், காது முதலிய உறுப்புக்களடியாகப்பிறக்கும். உ-ம் பெருந்தோளன், நெடுங்குஞ்சியன், மலைமார்பன், செங்கண்ணன், குழைக்காதன்.

$5^{0}$. குணம் அடியாகப் பிறக்கும் பெயர்கள்

குணம் என்பதுகீழ்வரும் (17-வது) சூத்திரத்தில் அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், கதி, சாதி, குடி, சிறப்பு முதலியன என்று விளக்கப்பட்டது.

எனவே, நெடியவன் குறியவன் என்பன அளவைப் பற்றியும், அறிஞன் மூடன் என்பன அறிவைப் பற்றியும், புலியன் என்பது ஒப்பைப்பற்றியும், கூனன் முடவன் என்பனவடிவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும், கரியன் சிவப்பன் என்பன நிறத்தைப்பற்றியும், முக்தன் சாலோகன் என்பன கதியைபற்றியும், அந்தணன் வேளாளன் என்பன சாதியைப் பற்றியும், பாண்டியன் தொல்காப்பியன் என்பன குடியைப் பற்றியும், ஐராவதம் (இந்திரனது பட்டத்துயானை), பாஞ்சஜன்யம் (அருச்சுனனுக்கு அருளிய சங்கு வாத்தியம்), இமாலயம் பொதியம் என்பன சிறப்பை விசேஷணத்தை)ப் பற்றியும் வந்த பெயர்கள்.

$6^0$. தொழில் அடியாகப் பிறக்கும் ஆண்பாற் பெயர்கள். படைத்தல் காத்தல் அழித்தல் ஓதல் ஈதல் முதலிய தொழிலைப் பற்றி வந்தன. உ-ம். படைத்தான், காத்தான், அழித்தான், ஓதினான், ஈகின்றான்.

$7^0$. சுட்டெழுத்து அடியாகப் பிறக்கும் ஆண்பாற் பெயர்கள். இவை அ, இ, உ என்ற சுட்டடியாகப் பிறந்தன. உ-ம். அவன், இவன், உவன்.

$8^0$. வினா அடியாகப் பிறக்கும் ஆண்பாற் பெயர்கள். இவை எ, யா என்ற வினாவடியாகப் பிறக்கும். உ-ம் எவன், யாவன்,

$9^0$. வேறு இடைச்சொல் அடியாகப் பிறக்கும் ஆண்பாற் பெயர். பிற என்றதில் நின்று பிறன் வந்தது. மற்று என்றதில் நின்று மற்றையான், வந்தது.

$10^0$. ஆண்பால் விகுதி பெறாதுவரும் ஆண்பாற்பெயர்கள். இவை நம்பி (ஆடவருட்சிறந்தவன்), வேள் (விரும்பப்படுபவன்), குடுமி (குடுமியைத்தரித்தவன்), வில்லி (வில்லேந்தினவன்), செட்டி (செட்டு, அல்லது வியாபாரஞ், செய்பவன்), விடலை (இளம்பருவமுடையவன்), குரிசில் (அரசன்), சென்னி (தலைவன்), வாளி (வாளையுடையவன்), சேய் (சிறுவன்), கோ (அரசன்), தோன்றல் (அரசன்), மீளி (வீரன்), ஏந்தல் (அரசன்).

இதற்குச் சூத்திரம் :-

௰எ. அவற்றுள்

கிளையெண் குழூஉ முதற் பல்பொரு டிணைதேம்
ஊர்வா னகம்புற முதல நிலன்யாண்
டிருது மதிநா ளாதிக் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரியல்

தோள்குழன் மார்புகண் காது முதலுறுப்
பளவறி வொப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்
ஓத லீத லாதிப் பல்வினை
இவையடை சுட்டு வினாப்பிற மற்றோ
டுற்ற னவ்வீறு நம்பி யாடூஉ
விடலை கோவேள் குரிசி றோன்றல்
இன்னன ஆண்பெய ராகுமென்ப.

இதன் பொருள் :

அவற்றுள் = மேலே பொதுவகையாகச் சொல்லிய பெயர்களுள் கிளை எண் குழஉ முதல் பல் பொருள் = சுற்றமும் எண்ணும் திரளும், முதலான பலபொருள்களையும்

திணை = குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்னும் ஐந்திணை நிலங்களையும்

தேம் ஊர் வான் அகம் புறம் முதல நிலன் = தேசமும் ஊரும் விண்ணும் உள்ளிடமும் வெளியிடமும் முதலாகிய நிலங்களையும்

யாண்டு இருது மதி நாள் ஆதி காலம் = வருஷமும் பருவமும் மாதமும் நக்ஷத்திரம் முதலான காலங்களையும்

தோள் குழல் மார்பு கண் காது முதல் உறுப்பு = தோளும் குழலும் மார்பும் கண்ணும் காதும் முதலான உறுப்புக்களையும்

அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம் கதி சாதி குடி சிறப்பு ஆதிபல குணம் = அளவும் அறிவும் ஒப்பும் வடிவும் நிறமும் பிறப்பும் சாதியும் குடியும் சிறப்பும் முதலான பலவகைப் பண்புகளையும்

ஓதல் ஈதல் ஆதி பல்வினை = படித்தல் கொடுத்தல் முதலான பல வகைத் தொழில்களையும்

இவை அடைசுட்டு வினா = இவற்றைப்பொருந்தி வருகின்ற மூன்று சுட்டுக்களையும் மூன்று வினாக்களையும்

பிறமற்றோடு உற்ற = பிற மற்று என்பவைகளையும் பொருந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன ஈறு = ன் என்ற மெய்யெழுத்தைக் கடையிலே கொண்டு வருகின்ற பெயர்களும்

நம்பி, தோன்றல் = நம்பி ஆடூஉ விடலை கோ வேள் குரிசில் தோன்றல் என்பனவும்

இன்னன ஆண்பெயர் ஆகும் என்ப = இவைபோல்வன பிறவும் ஆண்பாற்குரிய பெயர்களாமென்று புலவர் சொல்வர்.

*(3) உயர்திணைப் பெண்பாற்பெயர்கள். (ப. 316 - 318)*

மேற்கூறிய உயர்திணை ஆண்பாற்பெயர்கள் பொருள் இடம் முதலியவற்றினடியாகப் பிறந்தவாறு, உயர்திணைப் பெண் பாற் பெயர்களும் அள் ஆள் ள் இ என்னும் விகுதிகளால் முடிவுபெற்று நிற்பனவும், வேறு விகுதிபெற்றும் பெறாதும் நிற்பனவுமாம்.

பொருளடியாகப் பிறந்த உயர்திணைப் பெண்பாற் பெயர்களுக்கு உதாரணம் :-

$1^{0}$. கிளைபற்றி வந்தபெயர்கள், தமள் (தம்முடையவள்), நமள் (நம்முடையாள்), நு மள் (நும்முடையவள்)

$2^{0}$. எண்பற்றிவந்தவை ஒருத்தி.

$3^{0}$. குழூஉ (கூட்டத்தை)ப் பற்றிவந்தவை, தருமசபையாள், சமணத்தி.

$4^{0}$. இடமடியாகப்பிறந்த உயர்திணைப் பெண்பாற் பெயர்கள்:

| | |
|---|---|
| குறிஞ்சி நிலத்தைப் பற்றி வந்தவை | குறத்தி, கொடிச்சி. |
| பாலை நிலத்தைப்பற்றி வந்தவை | எயிற்றி, மறத்தி. |
| முல்லை நிலத்தைப்பற்றி வந்தவை | இடைச்சி, ஆய்ச்சி. |
| மருத நிலத்தைப்பற்றி வந்தவை | உழத்தி, கடைச்சி. |
| நெய்த நிலத்தைப்பற்றி வந்தவை | பரத்தி, நுளைச்சி. |
| தேசத்தைப்பற்றி வந்தவை | மலையாட்டி, சோழிச்சி. |
| ஊரைப்பற்றி வந்தவை | புத்தூராள், கருவூராள். |
| வானைப் பற்றி வந்தவை | விண்ணவள், சுவர்க்கத்தாள். |
| அகத்தைப்பற்றி வந்தவை | இல்லவள், நண்பாள். |
| புறத்தைப் பற்றி வந்தவை | புறத்தாள், அன்னியள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5[0]. காலம் அடியாகப்பிறந்த உயர்திணைப் பெண்பாற் பெயர் கள்.

| | |
|---|---|
| ஆண்டைப்பற்றி வந்தவை | ஈராண்டினள், துந்துபியாள். |
| இருதுவைப்பற்றி வந்தவை | இளவேனிலாள், கூதிராள். |
| மாசத்தைப்பற்றி வந்தவை | தையாள், மாசியாள். |

6[0]. சினையடியாகப்பிறந்த உயர்திணைப் பெண்பாற் பெயர் கள்.

தோளைப்பற்றியது பணைத்தோளி (மூங்கில்போன்ற தோளை யுடையவள்).

மயிரைப்பற்றியது கருங்குழலி (கரிய கூந்தலையுடையவள்).

மார்பைப்பற்றியது அணிமார்பாள் (ஆபரணந்தரித்த நெஞ் சினள்).

கண்ணைப்பற்றியது மனோக்கி (மானைப்போன்ற பார்வை யுள்ளவள்).

காதைப்பற்றியது பொற்செவியாள் (பொன்னணிந்த காதை யுடையவள்).

70. குணம் அடியாகப்பிறந்த உயர்திணைப் பெண்பாற் பெயர் கள்.

| | |
|---|---|
| அளவால் வந்தவை | பெரியள், சிறியள். |
| வடிவமைப்பற்றி வந்தவை | கூனி, முடத்தி. |
| நிறத்தைப்பற்றி வந்தவை | கரியாள், செய்யாள். |
| அறிவைப்பற்றி வந்தவை | அறிஞள், புலமையாள். |
| ஒப்பைப்பற்றி வந்தது | திருவொப்பாள், (இலக்குமியை நிகர்த்தவள்). |
| கணத்தைப்பற்றி வந்தவை | மானுடகணத்தி, தேவகணத்தி. |
| சாதியைப்பற்றி வந்தவை | பார்ப்பனத்தி, வேளாளத்தி. |
| குடியைப்பற்றி வந்தவை | சோழத்தி, குருகுலத்தி. |

80. தொழிலடியாகப் பிறந்த உயர்திணைப் பெண்பாற் பெயர் கள். மாணவி (படிப்பவள்), ஈபவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$9^{0}$. சுட்டடியாகப் பிறந்த உயர்திணைப் பெண்பாற் பெயர்கள்.

அ என்ற சுட்டெழுத்தைப்பற்றி வந்தது — அவள்

இ என்ற சுட்டெழுத்தைப்பற்றி வந்தது — இவள்

உ என்ற சுட்டெழுத்தைப்பற்றி வந்தது — உவள்

$10^{0}$. வினா வெழுத்தடியாகப் பிறந்த உயர் திணைப்பெண் பாற்பெயர்கள். எ யா என்ற வினாவால் வந்தன எவள், யாவள்,

$11^{0}$. பிற மற்று என்ற இடைச்சொற்களடியாக வந்தனபிறள், மற்றையாள்.

$12^{0}$. இவ்வாறல்லாத உயர்திணைப் பெண்பாற்பெயர்கள்: தோழி, செவிலி (பிள்ளைநோயாளி முதலியவர்களைப் பாதுகாப் பவள்), மகடூஉ (மகள் தூ, மானுடப்பெண்), நங்கை (பெண்ணிற் சிறந்தவள்), தையல் முதலியன.

இவையும் பிறவாறு விகுதி பெற்றும் பெறாதும் உயர் திணைப் பெண்பாலைக்குறித்து வரும் எல்லாப்பெயர்களும் உயர் திணைப் பெண்பாற்பெயராம்.

இதற்குச் சூத்திரம் : -

௱௩. கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்
ளவ்வொற் றிகரக் கேற்ற வீற்றவும்
தோழி செவிலி மகடூஉ நங்கை
தையலோ டின்னன பெண்பாற் பெயரே.

இதன் பொருள்.

கிளை முதலாக கிளந்தபொருள்களுள் = சுற்றம் முதலான மேலே கூறிய பொருள்களுள்ளே

ள ஒற்று இகரக்கு ஏற்ற ஈற்றவும் = ள் என்னும் மெய்யும் இகர உயிரும் பொருந்துதற்கு ஏற்ற இறுதியையுடைய பெயர்களும்

தோழி செவிலி மகடூஉ நங்கை தையலோடு = தோழி செவிலி மகடூஉ நங்கை தையல் என்னும் பெயர்களுடன்

இன்னன = இவை போன்ற வேறுபெயர்களும்

பெண்பாற்பெயர் = உயர்திணைப் பெண்பாற் பெயர்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) உயர்திணைப் பலர்பாற் பெயர்கள். (ப. 319 - 320)

பலர்பாலைக் குறிக்கும் சொற்களின் ஈற்றில் அர் ஆர் மார் ர் என்பன விகுதிகளாக வரும்.

இப்பெயர் மேற்காட்டிய விகுதிகளோடு பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்பவற்றின் பெயர்களையும், சுட்டு வினா பிற மற்று முதலிய சொற்களையும், பகுதிகளாகப் பெற்றுவரும்.

$1^{0}$. பொருட்பகுதியுள் வரும் உயர்திணைப் பலர்பாற் பெயர்கள். கற்றத்தைப்பற்றி, தமர்; எண்ணைப்பற்றி, இருவர்; குழுவை (கூட்டத்தை)ப்பற்றி, கூட்டத்தார்.

$2^{0}$. இடப்பகுதியுள் வரும் உயர்திணைப் பலர்பாற் பெயர்கள்: திணையைப்பற்றி, குறவர்; தேசத்தைப்பற்றி, பாண்டி நாட்டார்; ஊரைப்பற்றி, பட்டினத்தார்; வானைப்பற்றி, வானத்தார்: அகத்தைப்பற்றி, அகத்தார், புறத்தைப்பற்றி, புறத்தார்.

$3^{0}$. காலப் பகுதியுள் வரும் உயர்திணைப் பலர்பாற் பெயர்கள்: வருஷத்தைப் பற்றி மூவாண்டினர் (மூன்று வயதுடை யவர்); பருவத்தை (இருதுவை)ப்பற்றி, வேனிலார்; மாசத்தைப்பற்றி, வைகாசியார்; நக்ஷத்திரத்தைப்பற்றி, திருவாதிரையார்.

$4^{0}$. சினைப்பகுதியுள் வரும் உயர்திணைப் பலர்பாற் பெயர்கள்: தோளைப்பற்றி, வீரவாகு; குழலை (மயிரை)ப்பற்றி, கருங் குழலர்; மார்பைப்பற்றி, அகன்றமார்பர்; கண்ணைப்பற்றி, கண்ணப்பர், காதைப்பற்றி, தோடுடையர்.

$5^{0}$. குணப்பகுதியுள் வரும் உயர்திணைப்பலர்பாற் பெயர்கள்: அறிவைப்பற்றி, அறிஞர்; ஒப்பனைப்பற்றி, புருஷரிஷபத்தார் வடிவைப் பற்றி, கூனர்; நிறத்தைப்பற்றி, கரியர்; கணத்தைப்பற்றி, மானுடர்; சாதியைப் பற்றி, பிராமணர்; குடியைப்பற்றி, சோழர்; சிறப்பைப் பற்றி, ஆசிரியர்.

$6^{0}$. தொழிற் பகுதியுள் வரும் உயர்திணைப் பலர்பாற்பெயர்கள்: ஓதலைப்பற்றி, ஓதுவார்; ஈதலைப்பற்றி, ஈவார்.

$7^{0}$. சுட்டுப் பகுதியுள் வரும் உயர்திணைப் பலர்பாற் பெயர்கள்: அகரத்தைப்பற்றி, அவர்; இகரத்தைபற்றி, இவர்; உகரத்தைப் பற்றி, உவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8⁰. வினாப்பகுதியுள் வரும் உயர்திணைப் பலர்பாற் பெயர்கள்: எ என்பதைப்பற்றி, எவர்; யா என்பதைப்பற்றி, யாவர்.

9⁰. பிற மற்று என்னும் பகுதியுள் வரும் உயர்திணைப் பலர்பாற் பெயர்கள்: பிற என்பதைப் பற்றி, பிறர்; மற்று என்பதைப்பற்றி, மற்றையர்.

இதற்குச் சூத்திரம்: -

**௱சுஅ. கிளந்த கிளைமுத லுற்றரவ் வீற்றவும்**
**கள்ளெ னீற்றி னேற்பவும் பிறவும்**
**பல்லோர் பெயரின் பகுதி யாகும்.**

இதன் பொருள்:

கிளந்த கிளைமுதல் உள்ள = முன்னே சொல்லப்பட்ட சுற்றம் முதலாகிய அறுவகைப் பொருளையுணர்த்துஞ் சொற்களும் இடைச் சொற்களுமாகிய இவற்றைப் பகுதியாகக் கொண்டு வரும்.
ர ஈற்றவும் = ர கரமெய்யீற்றுப் பெயர்ச்சொற்களும்
கள் என் ஈற்றின் ஏற்பவும் = கள் விகுதியையுடைய பெயர்களுக்குப் பொருத்தமாய் வருவனவும்
பிறவும் = இவையல்லாதனவும்
பல்லோர் பெயரின் பகுதியாகும் = உயர்திணைப் பலர்பாற் பெயர்களாகவரும்.

(5) அஃறிணை ஒன்றன்பாற் பெயர்கள். (ப.320 - 322)

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்பன அடியாகவும், வினா சுட்டு பிற மற்று முதலியன அடியாகவும், துவ்விகுதிபெற்று வரும் பெயர்களும், ஒருபொருளைக் குறிக்கும் ஒன்று என்னும் பெயரும், அஃறிணை ஒன்றன்பாற் பெயர்களாகும்.

பொருளைப் பற்றிவந்த அஃறிணை ஒன்றன்பாற்பெயர், குழையது (குண்டலத்தையுடையது) இடத்தைப்பற்றிவந்தது, நாட்டது காலத்தைப்பற்றிவந்தது, மாசியது (மாசிமாசத்திற் பிறந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது); சினையைப்பற்றி வந்தது, கொம்பது (கொம்பையுடையது); குணத்தைப்பற்றிவந்தது, கரியது; தொழிலைப்பற்றிவந்தது, நடையது (நடையில்வல்லது); வினாவைப்பற்றிவந்தது, எது, யாது; சுட்டைப்பற்றிவந்தது, அது, இது, உது, எண்ணைப்பற்றி வந்தது, ஒன்று; ஆய்தச்சுட்டைப்பற்றிவந்தது, அஃது இஃது உஃது; பிற என்பதைப் பற்றிவந்தது, பிறிது (வேறாயுள்ளது); மற்று என்பதைப்பற்றிவந்தது, மற்றையது.

அஃறிணைக்கண் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்றும் ஆறும் வினாவப்பட்டும் சுட்டப்பட்டும் அறிய வேண்டியதால், எது யாது என வினாவும்பொழுதும், அது இது உது எனச் சுட்டும் பொழுதும், வினாவையும் சுட்டையும் உணர்த்தி நிற்கும் பொருள் இடம் முதலிய ஆறனுள் வருகிற எந்தச் சொல்வினாவெனவும் எந்தச்சொல் சுட்டெனவும் வெளிப்படையாக அறியமுடியாமையால், அவை ஆறும் சுட்டுப்பெயர்களுள்ளும் வினாப்பெயர்களுள்ளும் மறைந்து நிற்கும்.

உ-ம்: குழையது என்ற அஃறிணை ஒன்றன்பாற்பெயரில் எது குண்டலத்தையணிந்தது என்று வினாவியறியவேண்டியிருப்பதால், வினாவப்பட்டபொருள் அப்பெயரில் மறைந்து நிற்கின்றது. இது அஃறிணை ஒன்றன்பாற் பெயர்களின் தன்மையென்றறிக.

இதற்குச் சூத்திரம்: -

உ௰. வினாச்சுட்டுடனும் வேறு மாம்பொரு
ளாதி யுறுதுச் சுட்டணை யாய்தம்
ஒன்றனெண் ணின்னன ஒன்றன் பெயரே.

இதன் பொருள் :

வினாச்சுட்டு உடனும் வேறு மாம் பொருள் ஆதி உறுது = வினாவிலும் சுட்டிலும் மறைந்து வருவனவும் மறையாது வெளிப்பட்டு வருவனவுமாயுள்ள பொருட்பெயர் முதலாகிய அறுவகைப் பெயர்களில் து என்னும் விகுதி சேர்ந்த பெயர்களும் (உறுது = சேர்ந்தது)

சுட்டு அணை ஆய்தம் = அஃது இஃது உஃது எனச் சுட்டும் ஆய்தமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றன் எண் = ஒன்று என்னும் எண்ணுப்பெயரும்
இன்னன = இவைபோலும் வேறுபெயர்களும்
ஒன்றன் பெயரே = ஒன்றன்பாற் பெயர்களாம்.

(6) அஃறிணைப் பலவின்பாற் பெயர்கள். (ப.322 - 323)

பொருளாதி ஆறையும் அடியாகவும், பொருளாதியாறும் மறைந்து நின்ற வினாச்சுட்டை அடியாகவும், பிற மற்று என் பனவற்றை அடியாகவும், பிறந்து, வை அ கள் என்னும் விகுதிகளால் முடிவுபெறும் பெயர்களும், இரண்டு முதலிய எண்களாற் குறிக்கப்படும் பெயர்களும், உள்ள உள இல்ல இல பல்ல பல சில்ல சில என்னும் பெயர்களும், அவ் இவ் உவ் என்னும் சுட்டுப் பெயர்களும், பலவின்பாற் பெயர்களாம்.

வை விகுதியால் முடிந்த பெயர்களுக்கு உ-ம். அவை, சிறி யவை அணியவை. அ.விகுதியால் முடிந்த பெயருக்கு உ-ம். சிறிய, கள் விகுதியால் முடிந்த பெயர்களுக்கு உ-ம். யானைகள், குதிரைகள்.

அகர விகுதியானது அன்சாரியை பெற்றும் பெறாதும் வரும். உ-ம். சிறிய, சிறியன. கோட்ட, கோட்டன.

விகுதிபெறாத பல்வின்பாற் பெயர்கள்: இரண்டு, மூன்று முதலியன. யா, பிற என்பனவும் பலவின்பாலை உணர்த்தும்.

அஃறிணைப் பலவின்பாற் பெயரைப்பற்றிய சூத்திரம்:

**௨௰௨. முன்ன ரவ்வொடு வருவவை யவ்வும்**
**கட்டிறு வவ்வுங் கள்ளிறு மொழியும்**
**ஒன்ற லெண்ணு முள்ள வில்ல**
**பல்ல சில்ல வுளவில பலசில**
**இன்னவும் பலவின் பெயராகுமே.**

இதன் பொருள்:

முன்னர் அவ்வொடு வருவவை அவ்வும் = முன்னே கூறிய எ யா என் னும் வினாவெழுத்துக்களோடும், அ இ உ என்ற சுட்டெழுத் துக்களோடும், பொருளிடம் முதலிய அறுவகையடியாகப் பிறந்த சொற்களோடும், இயைந்தபடிவரும் வை அ என்ற விகுதிகளை யிறுதியாகவுடைய பெயர்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டு இறு வவ்வும் = வ் என்ற மெய்யை ஈற்றிலேகொண்ட சுட்டுப்பெயர்களும்,

கள் இறு மொழியும் = கள் என்ற விகுதியைக்கொண்ட பெயர்களும்,

ஒன்று அல் எண்ணும் = இரண்டு முதலாகிய எண்ணுப் பெயர்களும்,

உள்ள இல்ல பல்ல சில்ல உள இல பல சில = இந்தக் குறிப்பு வினையாலணைந்த எட்டுப்பெயர்களும்,

இன்னவும் = இவைபோன்ற பிறபெயர்களும்,

பலவின் பெயராகும் = அஃறிணைப் பன்மைப்பாற் பெயர்களாம்.

இனி, பொதுப் பெயர்கள் என்றவற்றுள் அஃறிணை ஒன்றன்பாலுக்கும் பலவின்பாலுக்கும் பொதுவான பால்பகா அஃறிணைப் பெயர்களை விளக்குவாம்.

*(7) பால்பகா அஃறிணைப்பெயர்கள். (ப. 323)*

இவை அஃறிணையிலுள்ள ஒன்றன்பாலென்றாவது பலவின் பாலென்றாவது பிரித்துக் கூறாத பெயராம். அப்பெயர் ஒன்றைக் குறிக்கும்போது ஒருமையாகவும், அதன் இனத்தைக் குறிக்கும் போது பன்மையாகவும், வழங்கப்படும். உ-ம். பசு வந்தது, வந்தன முகில் வந்தது, வந்தன.

இதற்குச் சூத்திரம் :-

**உ௩௨** பால்பகா அஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய.

இதன் பொருள்:

பால்பகா அஃறிணைப்பெயர்கள் = ஒன்றன்பாலென்றாவது பலவின் பாலென்றாவது பாலைப்பகுத்துக் கூறாத அஃறிணைப் பெயர்கள்

பாற்பொதுமைய = இருபாலுக்கும் பொதுவான தன்மையையுடையன.

*(8) இருதிணைப் பொதுப்பெயர்கள். (ப. 323 - 324)*

இவை உயர்திணை ஆண்பாலொருமை பெண்பாலொருமைக்கும், அஃறிணை ஆண்பாலொருமை பெண்பாலொருமைக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்திணை ஆண்பாற்பன்மை பெண்பாற் பன்மைக்கும், அஃறிணை ஆண்பாற்பன்மை பெண்பாற் பன்மைக்கும், பொதுவாக வரும் பெயர்களாம்.

சாத்தன் வந்தான் என்பது உயர்திணை ஆண்பாலொருமை. சாத்தனென்ற பெயருள்ள ஆடு மாடு குதிரை வந்தென்பது அஃறிணை ஆண்பாலொருமை. சாத்தி வந்தாளென்பது உயர் திணைப் பெண்பாலொருமை. சாத்தி வந்தது என்பது அஃறிணைப் பெண்பாலொருமை. சாத்தன் சாத்தி என்பன திணைப் பொதுப்பெயர்கள்.

கோதை என்பது ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால் என்றவற்றோடுகூடி மாலையைத் தரித்தவன், மாலையைத் தரித்தவள், மாலையைத்தரித்தது என்று மூன்றுபாலுக்கும் பொதுவாகப் பொருள்படும்.

கோதைகள், இவர்கள், இவைகள். இப்பொதுப்பெயர்கள் பலர்பால் பலவின்பாலென்றும் பன்மைகளுக்குப் பொதுவான பெயர்களாம்.

ஆண்பால்களைக் குறிக்கும் பொதுப்பெயர் ஆண்மைப் பொதுப்பெயர் எனவும், பெண்பால்களைக் குறிக்கும் பொதுப் பெயர் பெண்மைப் பொதுப்பெயர் எனவும், ஆண்பால் பெண்பால் ஔறன்பால்களுக்குப் பொதுவானபெயர் ஒருமைப்பொதுப் பெயர் எனவும், பலர்பால் பலவின்பால்களுக்குப் பொதுவான பெயர் பன்மைப்பொதுப்பெயர் எனவுங் கூறப்படும்.

*(9) முதல், சினை, சினைமுதற், பெயர்கள் (ப.324 - 326)*

முதற்பெயராவது பலசினைப்பொருள்கள் சேர்ந்து முழுதாக நிற்கும் பொருளின்பெயர். சாத்தி என்பது கண் காது கை கால் முதலிய அவயவங்களையுடைய ஒருத்தியை உணர்த்தியது ஆதலின் அது முதற்பெயராம்.

சினைப்பெயராவது ஒருமுதற்பொருளின் சிறுச்சிறு அங்கமாயுள்ள பொருளின்பெயரே இப்படிப்பட்ட ஒரு அங்கத்தைப் பற்றி ஒருவனுக்குப் பெயரமைக்கலாம். விஷ்ணுமூர்த்தியின் கண் பூரண கருணையைப்பெற்றுத் தாமரை மலர்போன்ற மிருதத்துவத்தைப் பொருந்தியிருப்பதால், கண்ணன் என்ற பெயர் அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைக்குறிக்கும். ஆதலால், கண்ணன் என்பது சினைப்பெயர். கை கால் முடங்கியிருத்தலைப்பற்றி ஒருவர் முடவன் எனப்படுவான்.

சினை முதற்பெயராவது: சினைப்பெயராகிய விசேஷண மொழியும் சினையுடைப்பொருளாகிய விசேஷியமொழியுஞ் சேர்ந்து அமையும்பொழுது தொகைமொழிப்பெயர் எனப்படும். முடக்கொற்றி என்பது கொற்றியென்னும் விசேஷியமொழி முடத் தன்மையாகிய விசேஷணம் பெற்றுவந்தமையால், அது சினை முதற் பெயரே.

முதற்பெயரும் சினைப்பெயரும் சினைமுதற்பெயரும் ஆண்மை பெண்மை ஒருமை பன்மைப்பற்றிப் பன்னிரண்டு வகைப் படும்.

முதற்பெயர்

$1^0$. ஆண்மை முதற்பெயர்: சாத்தனிவன், சாத்தனிவ்வெருது, என இருதிணை ஆண்பாற்கும் பொதுவாயிற்று.

$2^0$. பெண்மை முதற்பெயர்: சாத்தியிவள் சாத்தியிப்பசு, என இருதிணைப்பெண்பாற்கும் பொதுவாயிற்று.

$3^0$. ஒருமை முதற்பெயர்: கோதையிவன் கோதையிவள் கோதையிவ்வெருது என இருதிணை ஒன்றன்பாற்கும் பொது வாயிற்று.

$4^0$. பன்மை முதற்பெயர்: கோதைகளிவர்கள் கோதைகளில் வெருதுகள் என இருதிணை பன்மைக்கும் பொதுவாயிற்று.

சினைப்பெயர்

$1^0$. ஆண்மைச் சினைப்பெயர்: முடவன் இவன் முடவனிவ் வெருது என இருதிணை ஆண்பாற்கும் பொதுவாயிற்று.

$2^0$. பெண்மைச் சினைப்பெயர்: முடத்தியிவள் முடத்தியிப் பசு என இருதிணைப்பெண்பாற்கும் பொதுவாயிற்று.

$3^0$. ஒருமைச் சினைப்பெயர்: செவியிலியிவன், செவியிலி யிவள், செவியிலியிப்பசு, என இருதிணை ஒன்றன் பாற்கும் பொது வாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$4^0$. பன்மைச் சினைப்பெயர்: செவியிலிகளிவர்கள் செவியிலிகளிவ்வெருதுகள் என இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

சினைமுதற்பெயர்

$1^0$. ஆண்மைச் சினைமுதற்பெயர்: முடக்கொற்றனிவன் முடக்கொற்ற னிவ்வெருது என இருதிணையாண்பாற்கும் பொது வாயிற்று.

$2^0$. பெண்மைச் சினைமுதற்பெயர்: முடக்கொற்றியவள் முடக்கொற்றியிப்பசு என இருதிணைப் பெண்பாற்கும் பொது வாயிற்று.

$3^0$. ஒருமைச் சினைமுதற்பெயர்: கொடும்புற மருதி (கோணல் முதுகுடைய மருதி) யிவன், கொடும்புற மருதியிவன், கொடுபுற மருதியிப்பசு, என இருதிணை ஒன்றன்பாற்கும் பொதுவாயிற்று.

$4^0$. பன்மைச் சினைமுதற்பெயர்: கொடும்புற மருதிகளிவர்கள், கொடுப்புற மருதிகளிப் பசுக்கள், என இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.

தந்தை தாய் என்பனவும் உயர்திணை அஃறிணை இரண்டிற்கும் பொதுவான பெயர்களாதலால் பொதுப்பெயர்கள் எனப்படும். உ-ம். தந்தை இவன், தந்தை இவ்வெருது, தாய் இவள் தாயிப்பசு.

(10) தன்மை முன்னிலைபடர்க்கைப் பெயர்கள். (ப. 326-327)

தன்மைப்பெயர்கள்: யான், நான், யாம், நாம். முன்னிலைப் பெயர்கள்: எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ, படர்க்கைப்பெயர்கள்: தன் மையும் முன்னிலையும் அல்லா தன எல்லாம் படர்க்கைப் பெயர்கள்.

எல்லாம் என்ற சொல் தன்மை முன்னிலை படர்க்கை என்ற மூன்றிடங்களுக்கும் வரும்.

யான் நான் நீ என்னும் ஒருமைப்பெயர்கள் உயர்திணை யிலுள்ள ஆண்பால் பெண்பால்களுக்கும், அஃறிணையிலுள்ள ஒன் றன்பாலுக்கும், பெயராகவரும். உ-ம். யான் சுந்தரன், யான் சுந்தரி, யான் கிளி. நான் நீ என்பனவும் இவ்வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாம் நாம் நீர் நீவிர் நீயிர் நீங்கள் எல்லீரும் என்னும் பன்மைப் பெயர்கள் உயர்திணையிலுள்ள பலர்பாலுக்கும் அஃறிணையிலுள்ள பலவின்பாலுக்கும் பொதுவாகவரும், உ-ம். யாம் மனிதர், யாம் மிருகங்கள்.

எல்லாம் என்னும் பன்மைப்பெயர் தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூவிடங்கட்கும் இருதிணைப் பன்மைப் பால்களுக்கும் பொதுவாக வரும். உ-ம். தன்மை, யாமெல்லாம்; முன்னிலை, நீயிரெல்லாம்; படர்க்கை, அவரெல்லாம், அவையெல்லாம்.

*(11)* தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் இடம் வகுத்தல். (ப. *327 - 329)*

யானுணல் (யான் உண்ணுதல்), நீவிருணல் (நீவிருண்ணுதல்), அவையுணல் என்று தொழிற்பெயர்கள் மூன்றிடத்துச் சொற்களோடும் பயனிலையாக வந்தாலும், அவை மூன்றிடத்துக்கும் பொதுவாக வந்தாலும், படர்க்கைக்கே உரியனவாகும். உ-ம். யானுணல் இனிது, நீவிருணல் இனிது, அவையுணல் இனிது.

வினையாலணையும் பெயர்கள் தன்மை முதலிய மூன்றிடங்கட்கும் உரியனவாகும். உ-ம். நடந்தேனைக் கண்டனையோ, தன்மை; காத்தாய்க்கு (காப்பாற்றினவனாகிய உனக்கு) என்செய்வேன், முன்னிலை; உலகனைத்தும் படைத்தானை உள்ளாதா (நினையாதவர்), ரென்னாவர் படர்க்கை.

இவற்றிற்குச் சூத்திரம்:-

உயச. முதற்பெயர் நான்குஞ் சினைப்பெயர் நான்குஞ்
நினைமுதற் பெயரொரு நான்குமுறை யிரண்டும்
தன்மை நான்கு முன்னிலை யைந்தும்
எல்லாந் தாந்தா னின்னன பொதுப்பெயர்.

இதன் பொருள்:

முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும் = நான்கு முதற் பெயரும், நான்கு சினைப்பெயரும்

சினை முதற்பெயர் ஒரு நான்குமுறை இரண்டும் = நான்கு சினை முதற் பெயர்களும், இரண்டு முறைப்பெயர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும் = நான்கு தன்மைப் பெயர் களும், ஐந்து முன்னிலைப்பெயர்களும்

எல்லாம் தாம் தான் இன்னன பொதுப்பெயர் = எல்லாம் தாம் தான் என்பனவும் இவை போல்வனவும் இருதிணைப் பொதுப்பெயர் களாம்.

**௨௰௫. ஆண்மை பெண்மை யொருமை பன்மையி**
**னாமந் நான்மைக ளாண்பெண் முறைப்பெயர்.**

இதன் பொருள்:

ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின் = ஆண்பாலும் பெண் பாலும் ஒருமைப்பாலும் பன்மைப்பாலுங் காரணமாக

ஆம் அந்நான்மைகளாம் = அந்த முதற்பெயர் சினைப்பெயர் சினை முதற்பெயர் என்ற முப்பெயர்கள் ஒவ்வொன்றும் நந்நான்கு ஆகும்.

ஆண் பெண் முறைப்பெயர் = ஆண்பாலும் பெண்பாலும் காரண மாகவரும் தாய் தந்தை தமயன் தங்கை முதலிய முறைப்பெயர்கள் இரண்டுவகையாம்.

**௨௰௬. அவற்றுள்,**
**ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும்.**

இதன் பொருள்:

அவற்றுள் = மேலே கூறிய முதற்பெயர் முதலாகிய இருபத்தாறும் பிறவுமாகிய பெயர்களுள்

ஒன்றே இருதிணை = ஒவ்வொன்றே இருதிணையிலும்

தன்பால் ஏற்கும் = தனக்குரிய பால்களை ஏற்றுவரும்.

**௨௰௭. தன்மை யானான் யாநா முன்னிலை**
**எல்லீர் நீயிர், நீவிர், நீர்நீ**
**அல்லன படர்க்கை எல்லா மெனல்பொது.**

இதன் பொருள்:

தன்மை யான் நான் யாம் நாம் = தன்மைப் பெயர்களாவன யான் நான் யாம் நாம் என்னும் பெயர்களாம்

முன்னிலை, எல்லீர், நீயிர், நீவிர் நீர் நீ = முன்னிலைப்பெயர்களாவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லன படர்க்கை = மேற்கூறிய தன்மை முன்னிலை அல்லாத வைகளெல்லாம் படர்க்கைப்பெயர்களாம்.

எல்லாம் எனல்பொது = எல்லாமென்பது மூவிடங்கட்கும் பொதுப் பெயராம்.

உயஅ. வினையின் பெயரே படர்க்கை வினையா
லணையும் பெயரே யாண்டு மாகும்.

இதன் பொருள்:

வினையின் பெயரே படர்க்கை = வினைப்பெயர்கள் படர்க்கை யிடத்திற்கே உரியனவாகும்.

வினையாலணையும் பெயரே= வினையாலணையும் பெயர்கள்

யாண்டும் ஆகும்= தனித்தனி மூவிடங்களுக்கும் உரியனவாகும்.

(12) பன்னிரண்டு பொதுப்பெயர்கள். (ப. 329)

தான் யான் நான் நீ என்ற நான்குபெயர்களும், உயர்திணை யாண்பாலொருமை உயர்திணைப் பெண்பாலொருமை அஃறிணை ஒருமை என்ற இருதிணை முக்கூற்றொருமைகளாம்.

தாம் யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர் என்ற எட்டுப் பெயரும் உயர்திணைப் பன்மை அஃறிணைப்பன்மை என்ற இருதி ணைப் பன்மைப் பெயர்களாம்.

இதற்குச் சூத்திரம் : -

உயகூ. தான்யா னானீ யொருமை பன்மைதாம்
யாநா மெலாமெலீர் நீயிர் நீர் நீவிர்.

இதன் பொருள்:

தான் யான் நான் நீ ஒருமை = தான் யான் நான் நீ என்ற நான்கும் இரு திணை முக்கூற்று ஒருமைப் பெயர்களாம்.

தாம் யாம் நாம் எலாம் எலீர் நீயிர் நீர் நீவிர்பன்மை = என்ற இந்த எட் டும் இருதிணை இருகூற்றுப்பன்மைப்பெயர்களாம்,

(13) எண்ணால் வரும் உயர்திணைப்பெயருக்குப்
புறனடை. (ப. 329 - 331)

எண்ணால் வரும்பெயர் உயர்திணை ஆண்பாலில் ஒருவன் என்று வரும்.

எண்ணால் வரும்பெயர் உயர்திணை பெண்பாலில் ஒருத்தி என்று வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் ஒருத்தி என்று வருவதுபோன்று, இரண்டு முதலாகிய எண்களால் இருவன் இருத்தி என்று வரா.

இதற்குச் சூத்திரம் :-

**௩௰. ஒருவ னொருத்திப் பெயர்மே லெண்ணில**

இதன் பொருள்:

ஒருவன் ஒருத்தி ... ஒன்று என்ற எண்ணால் ஒருவன் ஒருத்தி என்று வருவனவன்றி

மேல் எண்பெயர் இல ... இவற்றின்மேல் இரண்டு முதலாகிய எண்களால் இவ்வாண்பாற் பெயரும் பெண்பாற் பெயரும் வருவரோடு முடியும்.

ஒருவர் என்று வழங்குஞ்சொல் உகேற்ற பன்மைப்பெய என்னும் இருபாற்கும் பொதுவாகவரும்.

வாய்ப்பாட்டைக் கொண்டு முடியும். வாய்பாடு வாயாற் பொருத்த மாகக் கூறப்பட்டசொல். உ-ம். ஆடவரு ஒருவர் வந்தார். மங்கை யருள் ஒருவர் போனார் இங்கே ஒருவர் என்ற சொல்லின் பகுதியாகி ஒன்று ஒருமையைக் காட்டி நிற்பினும் அர் என்ற பன்மை விகுதிக்கேற்ப வந்தார். போனார் என்ற பன்மைச் சொற்களையே கொண்டு முடிந்தது.

இருதிணைப்பொதுப்பெயரும் பால்பகா அஃறிணைப் பெயரும் சிறுபான்மை உயர்திணைப்பெயரும் உயர்த்தி (மரியாதை யாக)க் கூறுமிடத்து ஆர் என்ற இடைச்சொல்லை ஈற்றிலே கொண்டு வரும்.

ஆர் என்ற இடைச்சொல்லை ஈற்றிலேகொண்டபெயர்கள் தாங்கொண்ட விகுதிக்கேற்பப் பன்மைச்சொல்லோடு முடியும்.

உ-ம். சாத்தனார் வந்தார், கூன்மருதனார் வந்தார், தந்தை யார்வந்தார், என இருதிணைப் பொதுப்பெயர்கள் பன்மைச் சொல்லோடு முடிந்தன.

நாயார் வந்தார் (நாய்வந்தது) என்று பால்பகா அஃறிணைப் பொதுப்பெயர் பன்மைச்சொல்லோடு முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியார் வந்தார், நங்கையார் வந்தார், இறைவனார் வந் தார், அகஸ்தியனார் பாடினார், என உயர்த்திணைப்பெயர்கள் பன் மைச் சொல்லோடு முடிந்தன.

இதற்குச் சூத்திரம் :-

௩௰௧. ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.

இதன்பொருள்:

ஒருவர் என்பது உயர் இருபாற்று ஆய் = ஒருவர் என்ற சொல் உயர் திணை ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவானதாம்.

பன்மை வினைகொளும் பாங்கிற்று என்ப = பன்மை விகுதிச் சொல் லைப் பயனிலையாகக் கொள்ளும் முறைமையுடைய தென்று அறி ஞர் சொல்வார்.

இதுகாறும் அவ்வப்பொருளுக்கு உரிமையாயமைந்த பெயர் கள் விளக்கப்பட்டன. இனி ஒரு பொருளின்பெயர் அதனோடு சம் பந்தமுள்ள மற்றொரு பொருளுக்குப் பெயராகிவரும் ஆகு பெயர் விளக்கப்படும்.

ஆகு பெயர். (ப. *331 - 334*)

சொற்கள் தொடருமிடத்து ஒருபெயர்ச்சொல் தனக்குரிய பொருளைக்குறியாமல் தன்னோடு சம்பந்தம் பெற்ற பிறிதொரு பொருளைக்குறித்தால், அது ஆகுபெயர் எனப்படும்.

உ-ம். மல்லிகைக்கு நீர்ப்பாச்சு, மல்லிகைமாலைகட்டு, முதல் வாக்கியத்தில் மல்லிகை என்பது இயல்பான பெயராயமைந்த செடியைக்குறித்தால், இயற்பெயர் (இயல்பாக அமைந்தபெயர்) என் றாவது, உரிப்பெயர் என்றாவது, கூறப்படும்.

இரண்டாம் வாக்கியத்தில் மல்லிகை என்பது இயல்பாய மைந்த செடியைக்குறிக்காமல் செடியோடு சம்பந்தமுடைய மல ரைக்குறித்தது. ஆதலால் இங்கு மல்லிகை பொருளாகு பெயரா யிற்று.

ஊர் சிரித்தது, இங்கு ஊர் என்னும் இடப்பெயர் ஊரிலுள்ள மக்களைக் குறித்து இட ஆகுபெயராயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை பூத்தது, இங்கே கார்த்திகை யென்னும் மாசத்தின்பெயர் அந்த மாசத்திற் பூக்கும் ஒருசெடியை உணர்த்திக்கால ஆகுபெயராயிற்று.

வெற்றிலை நட்டான். இங்கு வெற்றிலையென்னும் (இலையாகிய சினையைக் குறிக்கும்) சினைப்பெயர் இலையையுடைய முதற் பொருளாகிய கொடியையுணர்த்திச் சினையாகு பெயராயிற்று.

மலர்ந்த நீலம் மாலைதொடுத்தத்திற்குரியது. இங்கு நீல நிறத்தையுணர்த்திக் குண ஆகுபெயராயிற்று.

வற்றலுண்டான். இங்கு வற்றலென்ற தொழிலின் பெயர் அத்தொழிலமைந்த ஒரு பொருளைக்குறித்துத் தொழிலாகுபெயராயிற்று.

அரைஞாண். இங்கு அரை என்னும் எண்ணலளவைப் பெயர் அவ்வெண்ணளவாய பொருளைக் குறிக்கின்றது

ஒரு எண்ணலளவையின்பெயர் அவ்வளவையுடைய பொருளைக்குறித்தால் அது எண்ணாகுபெயரெனப்படும்.

ஒருதுலாம் நிறுத்தான். இங்கு துலாம் என்னும் நிறுத்தலளவைப்பெயர் அவ்வளவையுடைய பொருளைக்குறிக்கின்றது.

ஓர் நிறுத்தலளவையின்பெயர் அவ்வளவையுடைய பொருளைக்குறித்தால் அது நிறுத்தலளவை ஆகுபெயர்.

நாழியுடைந்தது. இங்கு நாழியென்னும் முகத்தலளவைப் பெயர் அவ்வளவை அளத்தற்குரிய கருவியைக் குறிக்கின்றது.

ஒருமுகத்தலளவைப்பெயர் அவ்வளவையுடைய பொருளைக்குறித்தால் அது முகத்தலளவை யாகுபெயர் எனப்படும்.

உடுப்பது நான்குமுழம். இங்கு முழம் என்னும் நீட்டலளவைப்பெயர் அவ்வளவையுடைய பொருளைக் குறித்தால் அது நீட்ட லளவை யாகுபெயரெனப்படும்.

இந்நூற்கு உரைசெய்தான். இங்கு உரை என்னும் சொல்லின்பெயர் சொல்லின் பொருளைக் குறித்தலால் சொல்லாகு பெயர் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கு முறிந்தது. இங்கு விளக்கு என்னும் தீச்சுடரின் பெயர் அது இருக்குந்தானமாகிய தாளைக்குறித்தது.

ஒருதானியின் பெயர் அது இருக்குந்தானத்தைக் குறித்தால் தானியாகுபெயர் எனப்படும்.

திருவாசகம் படித்தான். இங்கு சிவபெருமானது அநுக்கிரகத் தைப்பெற்ற வாசகமென்னும் முதற்கருவியின்பெயர் அவ்வாசகத் தாற்காரியப்பட்ட ஒரு ஞான நூலைக்குறிக்கின்றது.

ஒரு கருவியின் பெயர் அதன் காரியத்தைக்குறித்தால் அது கருவியாகுபெயர் எனப்படும்.

இலக்கணம் விலைக்குவாங்கினான். இங்கு இலக்கணம் என்னும் காரியத்தின் பெயர் அதனையுணர்ந்தற்குக் கருவியாகி புத் தகத்தைக் குறிக்கின்றது.

ஒரு காரியத்தின்பெயர் கருவியையுணர்த்தினால் காரியவாகு பெயரெனப்படும்.

திருவள்ளுவர் படித்தான். இங்கு திருவள்ளுவர் என்ற தரு மசாத்திரக் கர்த்தாவின் பெயர் அவர்செய்த அறநூலைக்குறிக் கின்றது.

ஒரு கர்த்தாவின் பெயர் அக்கர்த்தாவின் செயலைக்குறித் தால் கர்த்தாவாகுபெயர் எனப்படும்.

பாவைவந்தாள். இங்கு பாவை என்னும் உவமையின் பெயர் உவமேயமாகிய பெண்ணைக்குறிக்கின்றது.

உபமானத்தின் பெயர் உபமேயத்தைக்குறித்தால் அது உவமை யாகுபெயர் எனப்படும்.

இவ்விதமாக ஆகுபெயரானது, (1) பொருளாகுபெயர், (2) இட ஆகு பெயர், (3) கால ஆகுபெயர், (4) சினை ஆகுபெயர், (5) குண ஆகுபெயர், (6) தொழிலாகுபெயர், (7) எண்ணலளவை யாகுபெயர், (8) எடுத்தலளவையாகுபெயர், (9) முகத்தலளவையாகு பெயர், (10) நீட்டலளவையாகுபெயர், (11) சொல்லாகுபெயர், (12) தானியாகுபெயர், (13) கருவியாகுபெயர், (14) காரியவாகுபெயர், (15) கருத்தாவாகுபெயர், (16) உவமையாகுபெயர், எனப்பதினாறு வகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்:-

௩௰௨. பொருண்முத லாறே டளவைசொற் றானி
கருவி காரியங் கருத்தனாதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன ஆகுபெயரே.

இதன் பொருள்:

பொருள் முதல் ஆறோடு = பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறுபொருள்களும்
அளவை சொல் தனி = அளவையும் சொல்லும் தானியும் கருவி காரியம் கருத்தன் ஆதியுள் = காரணம் காரியம் கர்த்தா என்னும் பொருள்களுள்ளே
ஒன்றன் பெயரான் = ஒருபொருளின் பெயரால்
அதற்கு இயை பிறிதை = அதனோடு சம்பந்தப்பட்ட மற்றொரு பொருளை
தொன்முறை உரைப்பன ஆகுபெயர் = தொன்றுதொட்டவரன் முறையால் சொல்லவருவனவாய சொற்கள் ஆகுபெயராம்.

இதுவரையுங் கூறிய இலக்கணங்களையுடைய பெயர்ச் சொற்கள் எட்டு வகையான வேற்றுமைகளைப் பெற்று நிற்கும்.

வேற்றுமை. (ப. 334 - 373)

இவ்வேற்றுமைகளின் இலக்கணங்கள் கீழ்வருமாறு விரிக்கப்படும். (௧) வேற்றுமை இன்னதென்பதும் எத்தனை என்பதும், (௨) வேற்றுமையின் பெயரும் முறையும், (௩) எழுவாய் உருபு மற்றைய உருபுகளை ஏற்றல், (௪) ஐ முதலிய உருபேலாப் பெயர்கள், (௫) பெயர் வேற்றுமை, (௬) இரண்டாம் வேற்றுமை, (௭) மூன்றாம் வேற்றுமை, (௮) நான்காம் வேற்றுமை, (௯) ஐந்தாம் வேற்றுமை, (௧0) ஆறாம் வேற்றுமை, (௧௧) ஏழாம் வேற்றுமை, (௧௨) கண் முதலிய ஏழாம் வேற்றுமை உருபுகள், (௧௩) எட்டாவது அல்லது விளி வேற்றுமை, (௧௪) விளிக்கப்படுபெயர்கள், (௧௫) பொதுவாகிய விளியுருபு, (௧௬) விளியுருபுக்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி, (௧௭) விளியுருபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குப் புறனடை, (கஅ) விளியுருபு ஏலாப் பெயர்கள், (கக) முதல் சினைத்தொடர்பின்கண் அவ்விரண்டினும் இரண்டினுருபு வரா தெனல், (உ0) ஐயுருபு முதல் சினை இரண்டினுக்கும் வராமைக்குக் காரணமும், மேலைச் சூத்திரப்பொருளோடு இப் பொருளைப் பிண்டப்பொருளுக்கும் ஏற்பித்தலும், (உக) உருபு மயக்கம், (உஉ) சிலவேற்றுமையுருபு செய்யுளிடத்துத் திரிந்து வருதல், (உங) எட்டு வேற்றுமைகள் முடிவதற்கான சொற்கள்.

*(1)* வேற்றுமை இன்னது என்பதும் எத்தனை என்பதும்.

பெயர்ச்சொற்கள் பிறசொற்களுடன் தொடர்ந்துநிற்கும். உ-ம். இராமன் வந்தான். இங்ஙனம் தொடர்ந்து நிற்கும் பொழுது அந்தப் பெயர்ச்சொற்களாற் குறிக்கப்பட்ட பொருளின் நிலைகள் எட்டுவிதமாகப் பேதப்படும். இவ்வெட்டுவிதமான பொருள்நிலை கள் வேற்றுமை எனப்படும்.

வெவ்வேறு விதமாகச் சொல்லின்பொருளை எது தோன்றச் செய்யுமோ, அது வேற்றுமை.

இவ்வேற்றுமைகளைச் செய்யும் கர்த்தாக்கள் உருபுகள் எனப படும். உருபு என்பது ரூபம். ஒரு பெயர்ச்சொல் தன்னியல்பு நிலை யில் நிற்கும்போது முதல்வேற்றுமை எனப்படும். இதற்குக் குறி உருபு இல்லை. ஆனவன் ஆனவள் ஆனது என்ற சொல் உருபுகளால் இது விளக்கப்படும்.

*(2)* வேற்றுமைகளின் பெயரும் உருபும். *(ப. 334)*

இவ்வேற்றுமைகள் முதலாம் வேற்றுமை (அல்லது பெயர் வேற்றுமை, அல்லது எழுவாய் வேற்றுமை), இரண்டாம் வேற் றுமை ஐ, மூன்றாம் வேற்றுமை ஆல், நான்காம்வேற்றுமை கு, ஐந் தாம்வேற்றுமை இன், ஆறாம் வேற்றுமை அது, ஏழாம் வேற்றுமை கண், எட்டாம் வேற்றுமை விளி என்பனவாம்.

எழுவாய் வேற்றுமையே பொருள்வேறுபாடுங்கால் (விளி வேற்றுமை ஒழிந்த மற்றைய) ஆறுவேற்றுமைகளாகவும் வரும்.

*(3)* எழுவாய் உருபு மற்றைய உருபுகளை ஏற்றல். *(ப. 334)*

உ-ம். பொன்னன் வந்தான் என்பதில் பொன்னன் எழுவாய் வேற்றுமை. பொன்னனைக் கண்டேன் என்பதில் பொன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் வேற்றுமை; பொன்னனது புத்தகம் என்பதில் பொன்னனது ஆறாம்வேற்றுமை.

எழுவாய் = ஆறுவேற்றுமைகளும் எழுதற்கு இடமாயுள்ளது.

(4) ஐ முதலிய உருபேலாப் (உருபுகளைப்பெறாத)
பெயர்கள். (ப. 334)

இவை நான் நாம் யாம், நாங்கள் யாங்கள், நீ நீர் நீயிர் நீவிர் என்பனவாம். இந்த எழுவாய்ப்பெயர்கள் பிறவேற்றுமை உருபுகளைப் பெறமாட்டா. நான் என்பது நானை நானால் நானுக்கு நானின் நானது நான்கண் என்று உருபேற்று வராது. நான் என் எனத் திரிந்து, என்னை என்னால் எனக்கு என்னின் எனது என்கண் என்று வரும்.

நாம் யாம் என்பன எம் எனத்திரிந்தும், நாங்கள் யாங்கள் என்பன எங்கள் எனத்திரிந்தும், நீ என்பது உன் எனத்திரிந்தும், நீர், நீயிர் நீவிர் என்பன உங்கள் எனத்திரிந்தும், பிறவேற்றுமை உருபுகளைப்பெறும்.

இவற்றிற்குச் சூத்திரங்கள் :-

**௩௰௩.** ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை.

இதன் பொருள் :

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் = தம்மை ஏற்கத்தக்க பெயர்ச் சொற்களுக்கெல்லாம்

ஈறாய் = இறுதியில் வந்து சேர்ந்து

பொருள்வேற்றுமைசெய்வன வேற்றுமை எட்டே = பொருளை வேறுபடுத்துவனவாய வேற்றுமைகள் எட்டாம்.

**௩௰௪.** பெயரே ஐயால் குஇன் அதுகண்
விளியென் றாகு மவற்றின் பெயர்முறை.

இதன்பொருள்:

பெயர் ஐ ஆல் கு இன் அது கண் விளி என்று = பெயர் வேற்றுமை ஐ வேற்றுமை, ஆல் வேற்றுமை கு வேற்றுமை, இன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமை, அதுவேற்றுமை, கண் வேற்றுமை, விளி வேற்றுமை, என்பன

அவற்றின் பெயர் ஆகும் = அவ்வேற்றுமைகளின் பெயராம்.

**௩௰௫. ஆறனுருபு மேற்குமவ் வுருபே.**

இதன் பொருள்:

அவ்வுருபு = அவ்வெழுவாயுருபு
ஆறன் உருபும் ஏற்கும் = இரண்டனுருபு முதல் ஏழனுருபு ஈறாக உள்ள ஆறுருபுகளையும் ஏற்றுவரும்.

**௩௰௬. நீயிர் நீவிர் நா னெழுவா யலபெறா.**

இதன் பொருள்:

நீயிர் நீவிர் நான் - நீயிர் நீவிர் நான் என்னுஞ் சொற்கள்
எழுவாய் அலபெறா - எழுவாய் வேற்றுமை ஒழிந்த மற்றவேற்றுமை உருபுகளை ஏற்றுவரமாட்டா.

*(5) எழுவாய் வேற்றுமை (அல்லது பெயர் வேற்றுமை, அல்லது முதலாம் வேற்றுமை). (ப. 334)*

எழுவாய் வேற்றுமை ஓர் குறியுருபையும் பெறாமல் யியல் பாக நிற்கும். அது வினைச்சொற்களையும் பெயர்ச்சொற்களையும் வினாச்சொற்களையும் பயனிலையாகக்கொண்டு ஒரு தொழிலுக்குக் கர்த்தாவாக நிற்கும்.

எழுவாய், வினைச்சொல்லைப் பயனிலையாகக் கொள்ளல்:

சாத்தன் வந்தான் என்னுந்தொடரில், சாத்தன் என்னும் பெயர் மாறுதலின்றித் தன்னியல்பாக நிற்பதால், எழுவாயாயிற்று. இந்தக்கர்த்தாவின் வருதலாகிய தொழில் பயன் எனப்படும். இந்தப் பயனை நிலை நிறுத்தும் சொல் வந்தான் என்பதே. இவ்வாறு முத லாம் வேற்றுமை, வினைச்சொல்லைப் பயனிலையாகக் கொள்ளும்.

எழுவாய், பெயர்ச்சொல்லைப் பயனிலையாகக் கொள்ளல்:

இது இருவகையாலாகும். முதல்வகை: இன்னதன்மையுள்ள தென்று பொருளையுணர்த்துஞ் சொல்லைப் பயனிலையாகக் கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தன் இவன் என்ற தொடரில் ஒருவன் சாத்தன் தன்மைகளை இன்னவை யென்று அறிந்து வேறொருவனுக்கும் தெரிவித்து, அச்சாத்தன் இருவர்முன்னிலையில் வந்தபொழுது, சாத்தன் இவன் என்பான். இதில் இவன் என்பது பெயர்ச்சொற்பயனிலை.

இரண்டாம்வகை: இவ்வளவு தொகை ஒரு பொருளில் உள்ள தென்றல். யானை நூறு என்றால், எழுவாயாகிய யானை நூறு என்ற தொகைப் பெயர்ச்சொல்லைப் பயனிலையாகக் கொண்டது.

வினாப்பெயரைப் பயனிலையாகக் கொள்ளல்:

பசு யாது என்பதில் எழுவாயாகிய பசு என்றது, யாது என்ற வினாப்பெயரைப் பயனிலையாகக் கொண்டது.

இதற்குச் சூத்திரம் :-

**௬௰௭. அவற்றுள்**

**எழுவா யுருபு திரிபில் பெயரே**

**வினைபெயர் வினாக்கொள லதன்பய னிலையே.**

இதன் பொருள்:

அவற்றுள் = முன்னர் சொல்லப்பட்ட எட்டுவேற்றுமைகளுள் எழுவாய் உருபு திரிபு இல் பெயரே = முதல் வேற்றுமையி னுருபாவது, ஐ முதலிய உருபுகளை யேற்றுத், திரிதலில்லாத பெயரேயாம். வினை பெயர் வினாக்கொளல் அதன் பயனிலை = வினையையும் பெயரையும் வினாவையும் கொள்ள வருதல் அவ்வுருபினது பொருணிலையாம்.

எனவே, அந்தத் திரிபு இல்லாத பெயர்தானே தன் பொருளை வினை முதற்பொருளாகவேற்றுமை செய்யுமென்பதாயிற்று.

(6) இரண்டாம் வேற்றுமை. (ப. 334)

இரண்டாம்வேற்றுமையின் உருபு ஐ என்பது. அதன் பொருள் செயப்படு பொருள். செய்பவன் கர்த்தா. கர்த்தாவாற் செய்யப்படும் பொருள் செயப்படுபொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம். இராமன் குடத்தை வனைந்தான். இங்கு குடம் வனைதற்குக் கர்த்தா இராமன். அவனது தொழில் வனைதல். வனைதலாகிய தொழிலைப்படுவது குடம். ஆதலால், குடம் செய்யப்படுபொருளாம். இப்பொருள் ஐ உருபால் விளக்கப்பட்டது.

ஐ உருவாகிய இரண்டாம் வேற்றுமை பலவகையான செயற்படுபொருளை உணர்த்தும். இந்த அர்த்தங்கள் ஆக்கப்படுதல், அழிக்கப்படுதல், அடையப்படுதல், நீக்கப்படுதல், ஒக்கப்படுதல், உடைமைப்படுதல் (தனதாகக் கொள்ளுதல்) முதலியனவாம்.

ஐயுருபு ஆக்கப்படுதல் என்னும் அர்த்தத்தை உணர்த்தும் என்பதற்கு உ-ம். வீட்டைக்கட்டினான். தருமத்தை வளர்த்தான்.

ஐயுருபு அழிக்கப்படுதல் என்னும் அர்த்தத்தைத் தருவதற்கு உ-ம். குடத்தை உடைத்தான். பாடத்தை மறந்தான்.

அடையப்படுதல் என்பது ஒருகர்த்தாவழியாக ஒருவன் ஒரு பொருளைப் பெறுதலாம். இந்த ஐயுருபின் அர்த்தத்துக்கு உதாரணம் ஊரை அடைந்தான்.

ஐயுருபு நீக்கப்படுதல் என்னும் அர்த்தத்தைத் தருவதற்கு உ-ம். மனைவியைத்துறந்தான். ஊரை நீத்தான்.

ஐயுருபு ஒக்கப்படுதல் என்னும் அர்த்தத்தை உணர்த்துதற்கு (ஒன்றோடு வேறொன்றை ஒத்ததாகக்காட்டுதற்கு) உ-ம் புலியை ஒத்தான் (புலிபோன்றவன்), பசுவை ஒத்தான்.

ஐயுருபு உடைமைப் படுதல் என்னும் அர்த்தத்தைத் தருவதற்கு உ-ம். கட்டழகை (அங்கசங்கச்சிறப்பை)யுடைய தமயந்தி.

இந்த இரண்டாம் வேற்றுமை காட்டும் செயற்படுபொருள் அகநிலைப் பொருளாகவும், புறநிலைப்பொருளாகவும், பிறவினைக் கர்த்தாப்பொருளாகவும், தன் வினைக்கர்த்தாப்பொருளாகவும் வரும். உ-ம். வேலன் கடவுளைநினைந்தான், இராமன்குடத்தை உடைத்தான், அரசன் தச்சனாற் கோவிலைக்கட்டுவித்தான், தன்னைப்புகழ்ந்தான், என முறையேவரும் வி பி விப்பி பிப்பி என்னும் விகுதிகளைப்பெற்ற வினைச்சொற்கள் பிறவினைச் சொற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளெனப்படும். இந்தப் பிறவினைக்கர்த்தாப்பொருள்களிற் சில ஐ வேற்றுமையாற் குறிக்கப்படும். இப்படிப்பட்ட பிறவினை ஒவ் வொன்றும் இரண்டு செயப்படுபொருள்களைக்கொள்ளும்.

வேறு சில பிறவினைக்கர்த்தாப் பொருள்கள் மூன்றாம் வேற்றுமை உருபுகளாகிய ஆல் ஆன் என்றவற்றால் குறிக்கப்படும். இவை ஒரு செயப்படுபொருளைமாத்திரம் கொள்ளும்.

அரசன் பகைவனைச் சிறைச்சாலையில் அடைவித்தான் என்ற வசனம், அரசன் பகைவனைச் சிறைச்சாலையை அடை வித்தான் என்றும் உலகவழக்கில் வரும். இதனில், அரசன் என்ற சொல் பிறவினைப் பயனிலைக்கு எழுவாய் என்றும், அடைவித்தான் என்ற சொல் பிறவினைப்பயனிலை என்றும், இடையிலுள்ள பகை வனை சிறைச்சாலையை என்ற சொற்கள் செயப்படுபொருள்கள் என்றும், அறியவேண்டியது.

எனவே, பகைவனை என்றசொல்லும் சிறைச்சாலையை என்ற சொல்லும் அரசன் என்ற எழுவாய்க்கு இரண்டு செயற்படு பொருளாயின.

கந்தன் சாத்தனைச் சோற்றை உண்பித்தான் என்ற வசனத்தில் சாத்தனை என்ற சொல்லும் சோற்றை என்ற சொல்லும் கந்தன் என்ற எழுவாய்க்கு இரண்டு செயப்படுபொருளாயின.

இதற்குச் சூத்திரம் : -

**௩௰அ. இரண்டா வதனுரு பையே யதன்பொருள்**
**ஆக்க லழித்த லடைத னீத்தல்**
**ஒத்த லுடைமை யாதி யாகும்**

இதன் பொருள் : -

இரண்டாவதன் உருபு ஐயே = இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்ற ஒன்றுமேயாகும்.

அதன் பொருள்= அதனுக்குரிய பொருள்கள்

ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல் ஒத்தல் உடைமை = ஆக்கப்படு பொருளும் அழிக்கப்படுபொருளும் அடையப்படுபொருளும் நீக் கப்படுபொருளும் ஒக்கப்படுபொருளும் உடைமைப்பொருளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியாகும் = முதலியனவாகும்.

ஆதி என்பதனால் ஒருகர்த்தா இரண்டு செயப்படுபொருளைக் கொள்ளுதலும் பெறப்படும்.

(7) மூன்றாம் வேற்றுமை. (ப. 334)

மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் ஆல் ஆன் ஒடு ஓடு என்பன.

உ-ம். வாளால் வெட்டினான், வாளான் வெட்டினான், தாயோடு வத்தான், தாயொடு வந்தான்.

மூன்றாம் வேற்றுமையின் அர்த்தங்கள் கருவி கர்த்தா உடனிகழ்ச்சி என்பனவாம்.

கருவிப்பொருளாவது, கருத்தாவின்தொழில் நடைபெறுதற்குச் சாதனமாயுள்ளது. உ-ம். வாளால் வெட்டினான்.

கருவியானது முதற்கருவி என்றும் துணைக்கருவி என்றும் இரண்டு வகையாகும்.

முதற்கருவியாவது, தானே காரியமாகும் பொருளாம்.

மண்ணே குடமாக மாறுதலால் மண் குடத்திற்கு முதற்கருவியாம். இது முதற்காரணம் எனவுங் கூறப்படும்.

துணைக்கருவியாவது: முதற்கருவி காரியாகும்வரையும் கூடச் சகாயமாக நின்று பின்பு பிரிந்து விடுவது.

மண் குடமாகும் வரையும் தண்டசக்கர முதலிய ஆயுதங்கள் சகாயமாகநின்று பின்பு குடம்வேறு தாம் வேறாகப் பிரிதலைக் காண்க. துணைக்கருவி துணைக்காரணம் எனவும் கூறப்படும்.

கருத்தாப்பொருளாவது: ஒருதொழிலைப் பிறப்பிக்கும் (நடைபெறுவிக்கும்) பொருளாம்.

கருத்தா, வினைமுதல் செய்பவன் என்பன ஒருபொருட்சொற்கள்.

கருத்தா என்பது இயற்றுதற்கருத்தா ஏவுதற்கருத்தா என்று இரண்டு வகைப்படும்.

இயற்றுதற்கருத்தாவாவது, தானே ஒரு தொழிலைச் செய்யும் வினைமுதலாம். தச்சன் வீடு கட்டினான் என்ற தொடர்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுதலாகிய தொழிலை நேரே செய்தவன் தச்சனாகையால், தச்சன் இயற்றுதற் கருத்தா.

ஏவுதற்கருத்தாவாவது: ஒரு தொழிலை நேரே செய்யாது பிறரை ஏவிச்செய்விக்கும் வினைமுதலாம். உ-ம். அரசன் கட்டிய ஆலயம். அரசன் தானே ஆலயத்தைக்கட்டாது பிறவை ஏவிச் செய்வித்தல், அரசன் ஏவுதற்கருத்தா.

உடனிகழ்ச்சியாவது: ஒருபெயர்ச்சொல் தான் அடுத்து நிற்கும் பெயர்ப்பொருளின் தொழிலையே தனது தொழிலாகவும் உடையது. தாயோடு மகள் வந்தாள். இங்கே தாய் என்பது மகளை அடுத்துநின்ற சொல்லின் வினையாகி வருதலையே தனக்கும் தொழிலாக உடையதாகலின் உடனிகழ்ச்சிப் பொருளாகும்.

மூன்றாம் வேற்றுமை உருபுகளாகிய ஆல் ஆன் வருடமிடத்து தொறும் தோறும் என்ற சொல்லுருபுகளும் வரும். உ-ம். ஊரான் ஒர் கோயில் ஊர்தொறும் ஒரு கோயில் என்றும், ஊர்தோறும் ஒரு கோயில் என்றும் வரும். தொறும் தோறும் என்பன, மயிலைநாதர் உரையிற் கூறியபடி தாம் புணர்ந்தசொல்லின் அர்த்தத்தைப் பலவாக்கி ஆங்காங்கென்பது பட நிற்கும். எனவே, ஊர்தோறும் ஒரு கோயில் பலகோவில் ஆங்காங்கு ஊரிலுள்ள தென்று அர்த்தப்படும்.

ஒடு ஓடு என்ற உருபுகள் சிறுபான்மை வேறுவினை யுடனி கழ்ச்சிப்பொருளிலும், வினையிலாப் பொருளிலும், கலப்புறு பொரு ளிலும், ஒப்புப் பொருளிலும், ஒற்றுமைப் பொருளிலும், அடை மொழிப் பொருளிலும் வரும்.

வேறுவினை உடனிகழ்ச்சிப்பொருள் ஒருவிதமான ஒரு தொழிலோடு வேறொருவிதமான தொழில் நடைபெறுதல். இதற்கு உ-ம். தொடியோடு தொல்கவின் வாடியதோள் (தோளிலணியப் படும் ஆபரணமாகிய வாகுவலயத்தோடு பழைய அழகும் சோர்ந்த தோள்). இந்தத் தொடரில் வாடுதலாகிய வினையைப்பெற்றசொல் கவின் (அழகு), கவின்வாடும் சமையத்தில். கொடி நெகிழ்தலாகிய வேறு தொழிலைப் பெற்றது. எனவே தொடி வேறுவினையுடனி கழ்ச்சிப் பொருளாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையிலாப் பொருளுக்கு உதாரணம்: மலையொடு மோதின யானை. இதில் மேதுதலாகிய தொழில் யானைக்கே, மலைக்கில்லை. ஆதலால், மலை வினையில்லாப்பொருள்.

கலப்புறு பொருளுக்கு உ-ம். பாலொடு தேன்கலந்தது. இதில் தேனைக் கலக்கப்படுதலால் பால் கலப்புறுபொருள்.

ஒப்புப்பொருளுக்கு உதாரணம்: வேலொடு ஒக்கும் விழி. இதில் விழிக்கு வேல் உவமானமாகையால், வேல் ஒப்புப்பொருள்.

ஒப்பலொப்புப்பொருள் (ஒப்பு அல் ஒப்பு = ஒப்பு அல்லாத ஒன்றை ஒப்பாகச்சொல்லுதல்). இதற்கு உ-ம். விலங்கொடு மக்கள் அனையர் (மிருகத்தோடு மனிதர் ஒப்பாவர்). இத்தொடரில் ஒப்பு அல்லாத விலங்கு ஒப்பாகச்சொல்லப்படுதலால் விலங்கு ஒப்ப லொப்புப்பொருள்.

ஒற்றுமைப்பொருளுக்கு உ-ம். எழுத்தொடு கூடியசொல். ஒடு என்ற உருபைத் தொடர்ந்த சொல்லென்றும் பொருளோடு ஒற்றுமையிருப்பதால், எழுத்து ஒற்றுமைப்பொருள்.

அடைமொழிப்பொருள். (அடைமொழி .. சொல்லை யடுத்து விசேஷிக்கும்சொல்). உ-ம். மகிழ்ச்சியொடு வந்தான். வரு தற்கு விசேஷண மாதலால், மகிழ்ச்சி அடைமொழிப்பொருள்.

ஆல் ஆன் என்பன கருவிப்பொருளில் வருமிடத்து கொண்டு என்பதும், ஓடு, ஒடு என்பன வரவேண்டிய இடத்தில் உடன் என் பதும், சொல்லுருபுகளாகவரும். உ-ம். வாள் கொண்டு வெட்டி னான். தாயுடன் தந்தைவந்தான்.

இதற்குச் சூத்திரம்

௩௰௯. மூன்றா வதனுரு பாலா னோடொடு
கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள்

இதன் பொருள் :

மூன்றாவதன் உருபு ஆல் ஆன் ஒடு ஓடு = மூன்றாம் வேற்றுமையின் உருபு ஆல் ஆன் ஒடு ஓடு என்னும் நான்குமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பொருள் கருவி கருத்தா உடனிகழ்வு = அம்மூன்றாம் வேற்றுமையின் பொருள் கருவிப்பொருள் கர்த்தாப் பொருள் உடனிகழ்ச்சிப் பொருள் என்பனவாம்.

*(8)* நான்காம் வேற்றுமை. *(ப. 334)*

இந்த வேற்றுமையின் உருபு கு என்பதாம். அதன் அர்த்தங் கள் கோடற்பொருள், பகைதொடர்பொருள், நட்புத்தொடர் பொருள், தகுதியுடையப் பொருள், முதற்காரணகாரியப் பொருள், நிமித்தகாரணகாரியப்பொருள், முறைக்கியைப்பொருள், என்பனவாம்.

கோடற்பொருளாவது ஒருபொருளைப் பெற்றுக்கொள்ளும் பொருளாம். (கோடல் = கொள்ளல்). உ-ம். ஆசிரியன் மாணாக்கனுக்குப் போதித்தான். ஆசிரியனது போதனையைப் பெறுவோன் மாணாக்கனாதலின், மாணாக்கன் கோடற்பொருளாம்.

பகைதொடர் பொருளாவது ஒருபொருளினோடு பகைமை தொடர்ந்துள்ள பொருள், உ-ம். பாம்புக்குப்பகை கருடன். கருடனோடு பகைதொடர்ந்துள்ளபொருள் பரம்பாதலின், பாம்பு பகைதொடர்பொருள்.

நட்புத்தொடர்பொருளாவது ஒருபொருளோடு சிநேகந் தொடர்ந்துள்ள பொருளாம். உ-ம். கந்தனுக்கு நண்பன் கோவிந்தன்.

தகுதியுடைப் பொருளாவது ஒருபொருளுடன் சம்பந்தப்படுதற்குத்தகுதியாகிய பொருளையுடைய பொருளாம். அரசர்க்குரிய முடி, முடி அரசனுடன் சம்பந்தப்படுவதற்குத் தகுந்தபொருள். அதனை உடையவன் அரசனாதவின், அரசன் தகுதியுடைப்பொருள்.

முதற்காரண காரியப் பொருளாவது முதற்காரணத்தாலாகும் பொருள். உ-ம். காப்புக்குப் பொன்வேண்டும். இங்கு காப்புக்கு முதற்காரணம் பொன், அதன் காரியம் காப்பு. ஆதவின், காப்பு முதற்காரண காரியம்.

நிமித்த காரண காரியப் பொருளாவது, ஒரு பொருளைப் பின்பு பெறுதல் காரணமாக அதன் முன்பு நடக்குந் தொழில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலியாகிய காரியத்தைப் பெறுவதற்குக் காரணம் வேலை யாதலின், வேலை நிமித்தகாரணமாம். நிமித்த காரணத்தாலாகிய பொருள் கூலி. இது நிமித்தகாரண காரியமாம்.

முறைக்கியைபொருள் (முறைக்கு இயைந்துவந்தபொருள்). பீஜ இரத்த விவாக உரிமைகளால் ஒன்றுக்கொன்று பொருத்தமாக நிற்கும்பொருளாம். உ-ம். இராமருக்கு மகன் லவன். இதில் ராமரது பீஜத்தில் நின்று லவன் தோன்றியபடியால், இராமர் முறைக்கியை பொருளானார்.

சகோதரரின் பிள்ளைகள் இரத்த உரிமையால் முறைக்கியை பொருள்களாம். விவாக உரிமையால் பதியும் பத்தினியும், அவர் களது பந்துக்களும், முறைக்கியை பொருள்களாம்.

இந்த நான்காம் வேற்றுமை வருசெயற்கு (இனிவரும் வினைக்கு) உரிய அறிகுறிப் பொருளிலும், குறைவின்மைப் பொரு ளிலும், இவைபோன்ற பிறபொருளிலும், வரும். உ-ம். மழைக்கு மின் னல். அவனுக்குப் போதும்.

கு என்ற உருபுநிற்றற்குரிய சில இடங்களில் பொருட்டு நிமித் தம் என்பனவும், கு என்ற உருபின்மேல் ஆக என்பதும், சொல்லுருபு களாக வரும். உ-ம். கூழுக்கு வேலைசெய்தான் = கூழின்பொருட்டு வேலைசெய்தான். கூலியின் நிமித்தம் வேலை செய்தான் = கூலிக்காக வேலைசெய்தான்.

இதற்குச் சூத்திரம் :-

சய. நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியினி தற்கிதெனல் பொருளே.

இதன் பொருள் :

நான்காவதற்கு உருபு கு ஆகும் = நான்காம் வேற்றுமைக்கு உருபு கு என்பதாம்.

பொருள் கொடை பகை நேர்ச்சி தகவு அதுவாதல் பொருட்டு முறை

ஆதியின் = அதன் பொருளாவன கோடற்பொருளும், பகை தொடர் பொருளும், நட்புத்தொடர்பொருளும், தகுதியு டைப் பொருளும், முதற்காரண காரியப்பொருளும், நிமித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரண காரியப் பொருளும், முறைக்கியை பொருளும் முதலாக
இதற்கு இது எனல்= இன்னதற்கு இது என வருதல் ஆகும்.

(9) ஐந்தாம் வேற்றுமை. (ப. 334)

ஐந்தாம் வேற்றுமையின் உருபு இல் இன் என்பனவாம்.

உ-ம். அரசரி லந்தணர் பெரியர் (இல்), மரத்தின் வீழ்கனி (இன்).

ஐந்தாம் வேற்றுமையின் பொருள் (அர்த்தம்), நீக்கப் பொருள், ஒப்புப்பொருள், எல்லைப்பொருள், ஏதுப்பொருள் என்பனவாம்.

நீக்கப்பொருளாவது மற்றொருபொருள் தன்னினின்றும் நீங்கிப்போகத் தான் தனியே நிற்கும் பொருள். உ-ம். மரத்தின் வீழ் கனி. இதில் கனி பிரிந்துபோகத் தனியே நிற்கும் பொருள் மரமாத லின், மரம் நீக்கப்பொருள்.

ஒப்புப்பொருளாவது ஒருபொருளிடத்துள்ள ஒருதன்மைக்கு ஒப்பாக நிற்கும் பிறிதொருபொருள். உ-ம். பாலில் வெள்ளை கொக்கு. இதில்கொக்கினது வெண்மைக்குப் பால் உபமானமாத லின், பால் ஒப்புப் பொருளாம்.

எல்லைப்பொருளாவது, அறியப்படாதபொருளின் எல் லையை அறிவதற்கு அறியப்பட்டபொருள் எல்லையாக நிற்கும் (எல்லை= அளவு).

இவ்வெல்லைப்பொருள் திசை வழி காலம் பண்பு முதலி யவைகளுக்கு எல்லையாகவரும். உ-ம். மதுரையின் வடக்குச் சிதம் பரம். ஒருவனால் அறியப்பட்ட மதுரையைக்கொண்டு அவனால் அறியப்படாத சிதம்பரத்தின் திசையை அறிவதனால், மதுரை எல் லைப்பொருளாயிற்று.

கச்சிற் றிருத்தணிகை முக்காதம். ஒருவன் தனது ஊருக்கும் கச்சியென்ற ஊருக்கும் வழி முக்காதம் என்றறிந்து, தான் அறியாத திருத்தணிகையை அறிவதற்குக் கச்சி என்ற ஊர் எல்லைப்பொருளா யிற்று.

பொன்னனில் இரண்டாம் மூத்தவன் காத்தான். அறி யாத காத்தானுடைய வயசை அறிதற்கு எல்லையாக நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் அறியப்பட்டபொன்னன். ஆதலால் பொன்னன் எல்லைப் பொருள்.

அரசரிலுயர்ந்தோரந்தணர். அந்தணரின் பெருமையை அறியாத ஒருவன் தான் அறிந்த அரசனைக்கொண்டு அவ்வந் தணனின் உயர்வை அறிகின்றானாதலின், அரசன் எல்லைப்பொருள். இது உயர்வுப் பண்பு.

பசுவிற்றாழ்ந்தது எருமை. ஒருவனால் அறியப்பட்ட பசுவைக்கொண்டு அறியப்படாத எருமையின் இழிவை அறிந்து கொள்கின்றான், ஆதலின் பசு எல்லைப்பொருள். இது இழிவுப் பண்பு.

உயர்வு தாழ்வில் வரும் பண்புகளை நீக்கப்பொருளென்று கொள்வாருமுண்டு.

ஏதுப்பொருளாவது ஒருபொருளின் பெருமை சிறுமை முதலியவற்றிற்கு ஏதுவாகவரும் பிறிதொருபொருளாம். உ-ம். கல்வியிற் பெரியவன் கம்பன். கம்பருடைய பெருமைக்குக் கல்வி எதுவாதலால், கல்வி ஏதுபொருள்.

நீக்கப்பொருளிலும் எல்லைப்பொருளிலும் இல் இன் என்பவற்றோடு நின்று, நின்றும், இருந்து, இருந்தும் என்பன சொல் லுருபுகளாக வரும். உ-ம். ஊரினின்றும் காடுதூரம். ஊரிலிருந்து போயினான்.

இதற்குச் சூத்திரம் :-

**சயக.** ஐந்தா வதனுரு பில்லு மின்னும்
நீக்கலொப் பெல்லை யேதுப் பொருளே.

இதன் பொருள் :

ஐந்தாவதன் உருபு இல்லும் இன்னும் = ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் இல் என்பதும் இம் என்பதுமாம்.

நீங்கல் ஒப்பு எல்லை எது பொருள் = நீக்கப்பொருள் ஒப்புப் பொருள் எல்லைப்பொருள் ஏதுப்பொருள் என்பன அதன் அர்த்தங்களாம்.

*(10)* ஆறாம் வேற்றுமை *(ப. 334)*

ஆறாம் வேற்றுமையின் உருபுகள் அது ஆது அ. உ-ம். மரம் அது கொம்பு, மரமது (மரத்தினது) கொம்பு. நின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதுகை, நினாது (உனது) கை. என் அ தோள்கள், என தோள்கள், எனது தோள்கள்.

ஆறாம் வேற்றுமையின் அர்த்தம் (உட்கருத்து) கிழமைப் பொருளாம்.

கிழமைப்பொருள் என்பது, உரிமைப்பெற்றுநிற்கும் பொருள். இராமனது மகள் என்ற தொடரில், இராமன் தன் மகளுக்கு உரிமைப்பட்டும், அவள் தன் தகப்பனுக்கு உரிமைப்பட்டும் இருப்ப தால், இந்தப் பரஸ்பர சம்பந்தமே கிழமைப்பொருள் எனப்படும். இது உடைய பொருளென்றும், உடைமைப்பொருளென்றும், இரு வகைச் சம்பந்தமுள்ளது. தகப்பனுடைய பொருளாகும்பொழுது, மகள் உடைமைப்பொருளாகிறாள். மகள் உடைய பொருளா கும்பொழுது, தகப்பன் உடைமைப்பொருளாகிறான்.

மேலும், இந்தக்கிழமைப்பொருள் தற்கிழமைப்பொரு ளென்றும், பிறிதுகிழமைப் பொருளென்றும், இருவகைப்படும்.

தற்கிழமைப்பொருளாவது தான் என்றபொருளோடு ஒன்று பட்டு நிற்கும் பொருளாம்.

உ-ம். பாலினது வெண்மை. பாலினின்று வெண்மையைப் பிரித்தல் கூடாதபடியால், பாலுக்கு வெண்மை, தற்கிழமைப்பொரு ளாயிற்று.

பிறிதின் கிழமைப்பெருளாவது, தன்னில் நின்று வேறாகித் தனக்கு உரிமைப்பட்டு நிற்கும் பொருளாம்.

உ-ம். கிளியினது கூடு. கூடானது கிளியின்று வேறாகி அது வசிப்பதற்கு உரிமைப்பட்டு நிற்பதால், கூடு பிறிதின் கிழமைப் பொருளாம். இவ்வாறு உடல் உயிருக்குக் கூடாக இருப்பதால், உடல் உயிருக்கு பிறிதின் கிழமைப் பொருளாயிற்று.

தற்கிழமைப்பொருளின் வகை: குணத்தாலும், தொழிலா லும், சினையாலும், ஒன்றன் கூட்டத்தாலும், பலவின் கூட்டத்தா லும், ஒன்று திரிந்து மற்றொன்றாதலாகிய திரிபின் ஆக்கத்தாலும், தற்கிழமைப்பொருள் அறுவகைப்படும்.

குணத்தற்கிழமையாவது குணம் உடைமைப்பொருளாய் உடைய பொருளோடு வேறற்று நிற்றலாம். உ-ம். சாத்தனது வரவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்புத்தற்கிழமையாவது, உறுப்பு உடைமைப்பொருளா யுடைய பொருளோடு வேறற்று நிற்றலாம். உ-ம். மாட்டினது வால்.

ஒன்றன் கூட்டத்தற்கிழமையாவது, ஓரினமான பொருள் களும் அவை கூடியிருக்கும் நிலையும் சம்பந்தப்பட்டு நிற்பதாம். உ-ம். புலவரது சபை.

பலவின் கூட்டத்தற்கிழமையாவது, பல இனமான பொருள் களும் அவை கூடியிருக்கும் நிலையும் சம்பந்தப்பட்டு நிற்றலாம். உ-ம். பறவைகளது கூட்டம்.

திரிபினாக்கத் (திரிபினாலாக்கப்பட்ட) தற்கிழமையாவது, ஒருபொருளும் அதன் விகாரமாய பொருளும் சம்பந்தப்பட்டு நிற்றலாம். உ-ம். அரிசியினது மா.

பிறிதின்கிழமை, பொருளாலும் இடத்தாலும் காலத்தாலும் மூவகைப்படும்.

பொருட்பிறிதின் கிழமையாவது ஒருபொருளோடு வேறொரு பொருள் சம்பந்தப்பட்டு நிற்றலாம். உ-ம். பொன்னனதுமாடு.

இடப்பிறிதின் கிழமையாவது ஒருபொருளும் இடமும் சம்பந்தப்பட்டு நிற்றலாம். உ-ம். ஆகாயத்தின்கண் பறவை.

காலப்பிறிதின் கிழமையாவது ஒரு பொருளும் காலமும் சம் பந்தப்பட்டிருத்தலாம். உ-ம். தாயினது நக்ஷத்திரம்.

இந்த ஆறாம்வேற்றுமை உடையபொருளும் உடைமைப் பொருளும் வேறாகாத ஒற்றுமைப் பொருளிலும் வரும். உ-ம். இராகுவினதுதலை. தலைவடிவாக இராகு என்ற கிரகம் அமைந் துளது ஆதலின், இராகுவாகிய உடையபொருளும் தலையாகிய உடைமைப்பொருளும் ஒன்றாயிருத்தலால் ஒற்றுமைப்பொரு ளாயிற்று.

அது என்ற ஆறாம் வேற்றுமையுருபு நிலைமொழியைச் சேர்ந்து வருமொழிப் பொருளைக் கொழுவிநிற்கும். மாடு அது வால், மாடு அது கால்கள், என்றவை மாடது வால், மாடது கால் கள் என்று புணரும். ஈண்டு, அது என்ற ஆறாம் வேற்றுமை உருபு, உடைய பொருளாகிய மாடு என்பதோடு சேர்ந்து, உட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்பொருளாகிய வால் என்ற ஒருமை மொழியையும், கால்கள் என்ற பன்மை மொழியையும், கொழுவி நின்கின்றது.

இவ்வாறே ஆது என்ற ஆறாம் வேற்றுமையுருபு நின் என்ற உடைய பொருளின் நிலைமொழியோடு சேர்ந்து, அடியவன் அடியவர் என்ற உடைமைப் பொருள்களின் மொழிகளைக் கொழுவி நின்று, நினாதடியவன் நினாதடியவர் என்றாகும்.

அ என்ற ஆறாம் வேற்றுமை உருபு பன்மை வருமொழியை மாத்திரம் கொழுவி நிற்கும். உ-ம். என் அ கைகள், என கைகள், (என்னுடைய கைகள்).

ஆறாம் வேற்றுமைக்குரிய அது அ என்ற உருபுகள் நிற்க வேண்டிய இடங்களிலே உடைய என்பது சொல்லுருபாகவரும். உ-ம். சாத்தனுடைய மனைவி. சாத்தனுடைய புதல்வர்கள். சாத்தனுடைய வீடு சாத்தனுடைய வீடுகள்.

இவ்வீடு எனது, அத்தோட்டம் அவனது, என்ற, வாக்கியங்களில், எனது அவனது என்பன, என் அவன் என்ற பகுதிகளும் து என்ற விகுதியும், அ என்ற சாரியையும், பெற்றுவந்த குறிப்பு வினைமுற்றுக்கள்.

இவ்வீடு எனது, எனதுபோயிற்று (என்னுடையபொருள் போயிற்று), அவ்வீடு அவனது, அவனது போயிற்று, என்ற வாக்கியங்களிலுள்ள எனது அவனது என்பன குறிப்புவினையாலணை யும் பெயர்கள்.

இவ்வாறு ஒரு சொல்லைப்பற்றி வரும் அது என்பதை ஆறாம் வேற்றுமை உருபென்று கொள்ளற்க. (கொள் அல் க = கொள் ளுதலல்லா த தாயிருக்க, கொள்ள வேண்டாம்).

இதற்குச் சூத்திரம்:

சயஉ. ஆற னொருமைக் கதுவு மாதும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவி னீட்டம்
திரிபி னாக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள் :
ஆறன் ஒருமைக்கு = ஆறாம் வேற்றுமை ஒருமைவருமொழிக்கு அதுவும் ஆதுவும் = அது ஆது என்பனவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம் = பன்மை வருமொழிக்கு அகரமும் உருபுகளாகவரும்.
பண்பு உறுப்பு = (குணமுந்தொழிலுமாகிய) பண்பும் அவயவமும்
ஒனறன் கூட்டம் பலவின் ஈட்டம் = ஒரினமான பொருள்களின் கூட்டமும், பலயினமான பொருள்களின் கூட்டமும் திரிபின் ஆக்கம் ஆம் = ஒரு பொருள் திரிந்து வேறொன்றாகுவதும்.
தற்கிழமையும் = தன்னோடு ஒற்றுமைபெற்ற பொருள்களையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் = இவற்றிற்கு புறம்பான கிழமைப்பொருள்களையும் உடையனவாக வருதலாம்.

*(11) ஏழாம் வேற்றுமை. (ப. 334)*

ஏழாம்வேற்றுமையின் உருபுகள் கண் கால் கடை இடை தலை வாய் திசை வயின் முன் சார் வலம் இடம் மேல் கீழ் புடை முதல் பின் பாடு அளை தேம் உழை வழி உழி உளி உள் அகம் புறம் இல் என்பன.

உ-ம். கண் — தேரின் கண் இருந்தான். கால் — ஊர்க்கால் நிவந்தபொதும்பர் (ஊரில்வளர்ந்திருக்கும்சோலை). கடை — வேலின் கடைமணி (வேலாயுதத்தினிடம் கட்டியமணி). இடை — நல்லாரிடைப்புக்கு (நல்லவர்களிடம் சென்று). தலை — வலைத் தலைமானன்ன (வலையினிடமகப்பட்ட மானைப்போல). வாய் — குரைகடல் வாயமுது (ஒலிக்கின்ற கடலினிடத்தே எழுந்த அமுது). திசை — தேர்த்திசை இருந்தான். வயின் — ஊர்வயின்சென்றீ. முன் — அவர் முன் போகலாம். சார் — காட்டுச்சாரோடுங்குறுமுயல் (காட்டினிடமோடுங்குறியமுயல்), வலம் — கைவலத்துள்ளது கொடுக்கும் (கையினிடத்துள்ளதைக் கொடுப்பான்). இடம் — இல்லிடபரத்தை (வீட்டினிடமிருந்து வியபிசாரஞ்செய்பவள்). மேல் — அவன் மேற் கல்லெறிந்தான். கீழ் — நிழற்கீழிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடை — எயிற்புடைநின்றான் (மதிலினிடம் நின்றான்). முதல் — சுரன் முதல் வந்த உரன்மாய் மாலை (பாலை நிலத்திற்றோற்றிய அறிவைக்கெடுக்கும் மாலைக்காலம்). பின் — காதலிபின் சென்ற (அன்புடையவளிடத்து மனஞ்சென்றது). பாடு — நாம் பாடளையாத நாள் (நம்மிடத்துப்பொருந்தாத தினம்). அளை — கல்லளைச் சுனைநீர் (கல்லிடத்துத்தோன்றின குண்டுநீர்). தேம் — தோழிக குரியவை கோடாய்தேத்து (பாங்கிக்குரிய பொருள்களைக் கொள்ளுமிடத்து). உழை — அவனுழை வந்தான் (அவனிடம் வந்தான்). வழி — நின்றதோர் நறவேங்கை நிழல்வழியசைந்தென்ன (நின்ற ஒரு வாசனையுள்ள வேங்கை மர நிழலினிடத்து). உழி — என்புழி என்று சொல்லுமிடத்து. உளி — குயில் சேர்காவுளி (குயில்கள் சேர்ந்திருக்கும் சோலையிடத்து). உள் — முல்லையங்குவட்டுள் வாழும் (முல்லைச்செடியார்ந்த அழகிய மலையிடத்து வாழும்). அகம் — பண்பில் சொற்பல்லாரகத்து (குணமில்லாத சொல் பலரிடத்திலுண்டு). புறம் — செல்லுமென்றுயிர்ப் புறத்திறுத்தமருண் மாலை (போகுமென்னுயிரிடத்துத்தங்கும் அவித்யாமாலை). இல் — ஊரிலிருந்தார்.

ஏழாம்வேற்றுமையின் பொருள் தற்கிழமையும் பிறிதின் கிழமையுமென இருவகைப்படும். இவை பொருள் இடம் காலம் சினைகுணம் தொழில் என்னும் அறுவகைக்கும் இடமாக நிற்கும்.

உ-ம். மணியின்கண் உள்ளது ஒளி — தற்கிழமைபொருள். மதிலின்கண் நின்றது வானரம் — பிறிதின்கிழமைப் பொருள். ஊரின்கணுள்ளது வீடு — தற்கிழமை இடம். வானின்கட்பறப்பது பருந்து — பிறி தின்கிழமை இடம். நாளின்கணுள்ளது நாழிகை — தற்கிழமை காலம். வேனிலின் கட்பூத்தது பாதிரி — பிறிதின்கிழமை காலம். கையின்கண்ணுள்ளது விரல் — தற்கிழமை சினை. கையின் கண்ணுள்ளது காப்பு — பிறிதின் கிழமை சினை. செம்மையின் கண்ணுள்ளது அழகு — தற்கிழமை பண்பு. இளமையின்கண் வந்தது வறுமை — பிறிதின் கிழமை பண்பு. ஆடற்கணுள்ளது தாளம் — தற்கிழமை தொழில் பாடற்கணுள்ளது அபிநயம் — பிறிதின்கிழமை, தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயரியல்

ஏழாம் வேற்றுமைப் பொருளுக்குரிய கொள்கை :

கர்த்தா நின்று செய்யும் தொழிலுக்கான இடமும், பொருளுக்கு நேர்கின்ற பயனது இடமும், இடப்பொருளெனப்படும்.

உ-ம். மணியின்கண் இருக்கின்ற ஒளி. இவ்வாக்கியத்தில் ஒளியாகிய கர்த்தாவின் தொழிலுக்கு மணி இடமாயிற்று.

கழுவின்கண் கள்வனை ஏற்றினான். இவ்வாக்கியத்தின் செயப்படுபொருளாகிய கள்வன் என்ற பொருளுக்கு நேர்கின்ற பயனாகிய உயிர்ப்பிரிவுக்குக் கழு இடமாயிற்று.

இடம்பொருளின் வேறுபாடுகள் : தன்னிற் சிறிதிடமாவதும், தான் முழுதுமிடமாவதும், தான் விஷயமாவதும் என்று மூன்று வகைப்படும்.

உ-ம். வீட்டின்கண் இருந்தான் என்ற தொடர் வீட்டின் ஒரு பாகத்தின் இருந்தான் என்பதுபற்றித் தன்னிற் சிறி திடமாயிற்று. பட்டினத்தின்கண் இருந்தான் என்பதும் தன்னிற் சிறிதிடம்.

நெருப்பின்கட் சூடு, உயிரின்கண் உணர்வு, தேனிற் சுவை. என்ற தொடர்கள் எங்கும் வியாபகம் என்பதை உணர்த்தின.

கற்றலின்கண் வேட்கை, மணாக்கன் மேலன்பு என்ற தொடர்களில் விஷயம் விளங்கின.

இவ்வேழாம் வேற்றுமை உருபுகள் சிறுபான்மை கூட்டிப் பிரித்தற் கெல்லையாகும் பொருளிலும், பிரித்துக்கூட்டலிற் குழுவாகும் பொருளிலும், ஒருதொழிற்காலத்தைக் குறிக்கும்போது பிறிதுதொழிலாகும் பொருளிலும், வரும்.

உ-ம். மக்களில் உயர்ந்தோர் அந்தணர் (அழகிய தண்மையாகிய சாந்தியைப் பெற்றவர்). மக்கள் வர்க்கத்தைக்கூட்டி அந்தணர்களைப் பிரித்தமை அறிக.

கல்வியறிவில்லாதான் விலங்கினுள் வைத்து மதிக்கப்படுவான். கல்வியறிவில்லாதவனை மக்கட்சாதியைவிட்டுப் பிரித்து விலங்குச் சாதியோடு சேர்த்தமை காண்க.

பால்கறக்கையில் வந்தான். பால்கறத்தல் நிகழுஞ் சமயம் அவனது வருகையோடு பொருந்தினது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்குச் சூத்திரம் : -

**௩௰௩. ஏழ னுருபுகண் ணாதி யாகும்**
**பொருண்முத லாறு மோரிரு கிழமையின்**
**இடனாய் நிற்ற லிதன்பொரு ளென்ப.**

இதன் பொருள் :

ஏழன் உருபு கண் ஆதி ஆகும் = ஏழாம் வேற்றுமையின் உருபுகள் கண்முதலியனவாம் (ப. 351).

இதன்பொருள் பொருண் முதலாறும் = ஏழாம் வேற்றுமை யினர்த்தம், பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறும்.

ஓரிரு கிழையின் = தற்கிழமைக்கும் பிறிதின் கிழமைக்கும் இடனாய் நிற்றல் என்ப = இடமாக நிற்றலென்று சொல்வாரறிஞர்.

12 (ப. 334). கண்முதலிய ஏழாம் வேற்றுமை உருபுகளைப்பற்றி சூத்திரம் : -

**௩௰௪. கண்கால் கடையயிடை தலைவாய் திசைவயின்**
**முன்சார் வலமிடம் மேல்கீழ் புடைமுதல்**
**பின்பா டளைதேம் உழைவழி உழிஉளி**
**உள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே.**

இதன்பொருள் வெளிப்படை.

13 (ப. 334). எட்டாம் வேற்றுமை.

எட்டாம் வேற்றுமையாவது படர்க்கையாக உள்ள பொருளை முன்னிலையில் அழைத்தலாம். உ-ம். மகனே வருக.

எட்டாம் வேற்றுமை உருபுகள் இயல்பாயும், ஈறுதிரிந்தும், ஈறுகெட்டும், ஈற்றின் ஒரெழுத்து மிகுந்தும், ஈற்றயலெழுத்துத் திரிந்தும் வரும்.

உ-ம். தம்பிவருக — இயல்பு. நல்லாய்வருக — ஈறுதிரிதல். அரச அருள்க — ஈறுகெடுதல். அரசனே அருள்க — ஈறுமிகுதல். முயால் வருக — ஈற்றயல்திரிபு.

ஈற்றயல் திரிபு = ஒரு சொல்லின் கடையெழுத்துக்கு அயலாய் முன்னிற்கும் எழுத்து மாறுபடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயல் என்ற சொல்லின் ஈற்றயல் எழுந்தாகிய யகரம் நீண்டது.

எட்டாம் வேற்றுமை விளியேற்றுமையென்று கூறப்படும். இதற்குச் சூத்திரம் : -

**சயரு.** எட்ட னுருபே யெய்துபெய ரீற்றின்
திரிபு குன்றன் மிகுத லியல்பயற்
றிரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே.

இதன் பொருள் :

எட்டனுருபு = எட்டாம் வேற்றுமையுருபு

எய்துபெயரீற்றின் = அழைத்தல் என்ற பொருள் அமைந்த பெயர்ச்சொல்லின் கடையில்

திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல் திரிபும் ஆம் = திரிதலும் கெடுதலும் மிகுதலும் இயல்பாதலும் ஈற்றயலெடுத்துத்திரிதலுமாகும்.

பொருள் = எட்டாம்வேற்றுமையின் பொருள்

படர்க்கையோரை = படர்க்கையிடத்திலுள்ளபொருளை

தன்முகமாக அழைப்பது - முன்னிலைப்படுத்தி அழைப்பதாம்.

*14 (ப. 334).* விளிக்கப்படு பெயர்கள் (அழைக்கப்படுகிற பெயர்கள்). இவை யான் நான். முதலிய தன்மைப் பெயர்களிலும், அவன் இவன் முதலிய சுட்டுப்பெயர்களிலும், எவன் யாவன் முதலிய வினாப்பெயர்களிலும், நீ நீர் நுமன் நுமள் முதலிய முன்னிலைப் பெயர்களிலும், வரமாட்டா

உயர்திணைப் பெயர்களில் இ உ ஊ ஐ ஒ ன் ள் ர் ல் ய் என்னும் பத்தெழுத்துக்களை இறுதியிலுள்ள சொற்கள் விளிவேற்றுமையைக் கொள்ளும்.

இ — நம்பி, நம்பியே கூறாய்; உ — வேந்து, வேந்தே கூறாய்; ஊ — ஆடூஉ, ஆடூஉவே கூறாய்; ஐ — விடலை, விடலாய் கூறாய்; ஓ — கோ, கோவே கூறாய்; ன் — ஐயன், ஐயனே கூறாய்; ள் — மகள், மகளே கூறாய்; ர் — வணிகர், வணிகீர் கூறிர்; ல் — தையல், தையலே கூறாய்; ய் — சேய், சேயே கூறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஃறிணைப்பெயர்களில் அ ஆ இ ஈ உ ஊ ஏ ஐ ஒ ண் ம் ய் ர் ல் வ் ழ் ள் ன் என்னும் எழுத்துக்களை இறுதியிலுள்ள சொற்கள் விளி வேற்றுமையைக் கொள்ளும்.

அ - நில, நிலவே விளங்குதியோ; ஆ-புறா, புறாவே யாண்டுச் செல்லுதி; இ-கிளி. கிளியே பழ முண்ணுதியோ; ஈ-வீ, வீயே மலர்ந் தனையோ; உ-கரும்பு, கரும்பே வளருதியோ; ஊ-பூ, பூவே கமழு தியோ; ஏ-சே, சேவே துள்ளுதியோ; ஐ-கிள்ளை, கிள்ளாய் யாது புரி குதி; ஒ-சோ(மதில்), சோவே இடிந்தனையோ; ண்-கண், கண்ணே மறைந்தனையோ; ம்-மரம், மரமே வளருதி; ய்.காய், காயே பழுக் குதி; ர்-தகர் (ஆட்டுக்கடா), தகரே செல்லுதி; ல்-குயில் கூவுதி; வ்-தெவ் (பகை), தெவ் ஒழிகுதி; ழ்-காழ் (வித்து), காழே பெருகுக; ள்-புள், புள்ளே பறக்குதி.

பொதுப்பெயர்களுள் ஆ இ உ ஊ ஐ ண் ன் ள் ல் ய் என்னும் பத்து எழுத்துக்களை இறுதியிலுள்ள எழுத்துக்கள் விளிவேற்றுமை யில் வரும்.

ஆ-பிதா, பிதாவே கூறாய்; இ-சாத்தி, சாத்தி கூறாய்; உ-கூற்று, கூற்றே செல்க; ஊ-அழிதூ(பேடு), அழிதூ உசெல்க; ஐ-தந்தை, தந்தை கூறாய்; ண்-ஆண், ஆணேகூறாய்; ன்.சாத்தன், சாத்தா செல்க; ள்-மகள், மகளே வருக; ல்-தூங்கல் (யானை), தூங்கலே வளர்க; ய்-தாய், தாயே அருள்க.

இதற்குச் சூத்திரம் : -

**சயகூ. இஉ ஊவோ டயோ னளரல**
**யவ்வீற் றுயர்திணை யோரவல் லிவற்றொடு**
**ணஃகா னாவீ றாகும் பொதுப்பெயர்**
**ஞநவொழி யனைத்தீற் றஃறிணை விளிப்பன.**

இதன் பொருள் :

இ உ ஊவோடு ஐ ஒ ண ள ர ல ய ஈ ற் று உயர்திணைப் பெயர் = இவ் வெழுத்துக்களை இறுதியிலுள்ள உயர்திணைப் பெயர்களும்.

ஒ ர அல் இவற்றொடு = இவற்றுள் ஒவும் ர் என்ற மெய்யும் ஒழிந்த எழுத்துக்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணஃகான் ஆ ஈ று ஆகும். பொதுப்பெயர் = ணகரமெய்யும் ஆகார உயிருமாகிய பத்து எழுத்துக்களை இறுதியிலுடைய பொதுப் பெயர்களும்

ஞ ந ஒழி அனைத்து ஈற்று அஃறிணை =ஞ் ந் என்பனவும் மொழிக்கு ஈறாகாத எகரமுமொழிந்த இருபத்தோரெழுத்துக்களை இறுதி யிலுள்ள அஃறிணைப்பெயர்களும்

விளிப்பன= விளிவேற்றுமையில் வருவனவாம்.

*15 (ப. 334)* மூவகைப்பெயர்க்கும் பொதுவாகிய விளியுருபு:

உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் பொதுப்பெயர் என்னும் மூன்றுவகையான பெயர்களும் விளிவேற்றுமையாக வரும் பொழுது இயல்பாக நிற்பனவும் இறுதியில் ஏகாரம் பெறுவனவும் இறுதி இகரம் ஈகாரமாகத் திரிவனவுமாம்.

உ-ம். முனி கூறாய்-இயல்பு; வேந்தே கூறாய்-ஏ மிகல்; நம்பீ கூறாய்-இகரநீட்சி. இவைமூன்றும் உயர்திணை. மான்போகாய்- இயல்பு; குயிலே கூவாய்-ஏ மிகல்; குருவீ பறவாய்-இகரநீட்சி. இவை மூன்றும் அஃறிணை அன்னை கூறாய்-இயல்பு; மகனே வருதி-ஏ மிகல்; சாத்தீ நடவாய்-இகரநீட்சி. இவை மூன்றும் பொதுப்பெயர்.

இயல்பாக நிற்றலும், இறுதியில் ஏ மிகுதலும், இகரம் ஈகாரமாக நீளுதலும், விளியுருபுகளாம். இவையுயர் திணைப்பெயர் அஃறிணைப்பெயர் பொதுப்பெயர் என்றும் மூவகையிலும் வருமாதலால், பொதுவிளியுருபு எனப்படும்.

இதற்குச் சூத்திரம் : -

**சயஎ. இம்முப் பெயர்க்கண் ணியல்பு மேயும்**
**இகர நீட்சியு முருபா மன்னே.**

இதன்பொருள்:

இம்முப்பெயர்க்கண் = உயர்திணைப்பெயர்களும் அஃறிணைப் பெயர்களும் பொதுப்பெயர்களுமாகிய இந்த மூன்று பெயர்களி லும்

இயல்பு ஏயும் இகரநீட்சியும் உருபாம் மன் = இயல்பாக இருத்தலும், ஏகார மிகுதலும், இகரம் ஈசாரமாக நீளுதலும், பெரும்பாலும் விளியுருபாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 (ப. 334) விளியுருபுக்கு ச அ-ம் சூத்திரத்திற்கூறிய பொது விதியின் ஐகார ஈற்று விளி உருபுகள் மேற்சிறப்புவிதிகள் (ப. 358 - 365).

பொதுப்பெயர்களின் இறுதியில் வரும் ஐகாரம் மேலே கூறிய பொதுவிதி பெறுதலேயன்றி, ஆய் எனவும் ஆ எனவும் திரிந்து வரும்.

உ-ம். அன் ன் ஐ என்றவை கூடி அன்னை எனவந்த பதம் அன் னாய் அன்னா எனச் சிறப்புவிதிப்படி விளிக்கப்படும். அன்னே என வும் வரும்.

உயர்திணை அஃறிணைப்பெயர்களின் இறுதி ஐகாரம் ஆய் எனத்திரியும். உ-ம். விடலை, விடலாய் (உயர்திணை); நாரை, நாராய் (அஃறிணை).

இதற்குச் சூத்திரம் :-

**சயவு.** ஐயிறு பொதுப்பெயர்க் காயு மாவும்
உருபா மல்லவற் றாயு மாகும்.

இதன் பொருள்:

ஐயிறு பொதுப்பெயர்க்கு = ஐகாரத்தை இறுதியிலுள்ள பொதுப் பெயர்ச்சொற்களுக்கு

ஆயும் ஆவும் உருபாம் = ஐகாரம் ஆய் ஆகவும் ஆகாரமாகவும் திரிதலும் விளியுருபுகளாம்.

அல்லவற்று = அல்லாத உயர்திணை அஃறிணைப்பெயர்கட்கு

ஆயும் = ஐகாரம் ஆய் ஆகத்திரிதலும் விளியுருபாம்.

உயர்திணைப்பெயர்களில் னகர ஈற்று விளியுருபுகள்:

சேரமான், புலவன், பெருமன், மன்னன், அண்ணன், திரையன், வேனிலான், வாயிலான், முருகன் என்ற உயர்திணைப் பெயர்கள் விளியுருபுகளை யேற்கும் முறை கீழ்வருமாறு காண்க.

னகரஈற்றுக்கு அயல் எழுத்து அளபெடுக்கும். உ-ம். சேரமான், சேரமாஅன். ஒரெழுத்துக்கு முன்னும் பின்னும் நிற்கும் எழுத் துக்கள் அயல் என்றும், ஈண்டு முன்னிற்கும் எழுத்தே அயல் எனவும், கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பெயர்களில் னகா ஈ று கெடும். உ-ம். புலவன், புலவ சிலபெயர் களில் னகர ஈற்றின் அயலெழுத்து நீளும்.
உ-ம் பெருமன், பெருமான்

சில னகர ஈற்றுப்பெயர்களின் அயல் நீண்டு இறுதிகெடும்.
உ-ம். மன்னன், மன்னா.

சில ஈற்றுப்பெயர்களின் அயல் நீண்டு ஈறுகெட்டு இறுதியில் ஏ வரும். உ-ம். அண்ணன் என்னும் பதம், ஈறுகெட்டு, அண்ண என்றும், ஈற்றயல் நீண்டு அண்ணா என்றும், ஈற்றில் ஏ பெற்று அண் ணாவே என்றும், மூவிதமாக விளிக்கப்படும்.

சில பெயர்களில் னகர ஈறுகெட்டு, இறுதியில் ஓகாரம் மிகும். உ-ம். திரையான், திரையவோ

சில பெயர்களில் னகரம் ய் ஆகந்திரியும். உ-ம். வேனிலான், வேனிலாய்.

சில இறுதிநகரம் ய் ஆக மாற, ஈற்றயவிலுள்ள ஆகாரம் ஒகார மாகத் திரியும். உ-ம். வாயிலான், வாயிலோய்.

சில னகர ஈறுகெட, இறுதியில் நின்ற அகரம் ஏகாரமாகத் திரியும். உ-ம். முருகன், முருகே.

இதற்குச் சூத்திரம் : -

**௩௰௬.** ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்
அளபீ றழிவய னீட்சி யதனோ
டீறு போத லவற்றோ டோவுற
லீறழிந் தோவுற லிறுதியவ் வாத
லதனோ டயறிரிந் தேயுற லீறழிந்
தயலே யாதலும் விளியுரு பாகும்.

இதன் பொருள் :

ன ஈ று உயர்திணைப்பெயர்க்கண் ஒருசார் = ன் ஈற்று உயர்திணைப் பொயர்களுட் சில

அளவு = ஈற்று அயலெழுத்து அளபெடுத்தலும், (மாத்திரை கூடி ஒலித்தலும்)

ஈறழிவு = இறுதியெழுத்துக் கெடுதலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல்நீட்சி= ஈற்றலெழுத்து நீளுதலும்

அதனோடு ஈறுபோதல்= ஈற்றயல் நீண்டு ஈறுகெடுதலும்

அவற்றோடு ஓ உறல்= ஈற்றயல் நீண்டு ஈறுகெட்டு ஓகாரம் மிகுதலும்

ஈறழிந்து ஓவுறல்= சில ஈறுகெட்டு ஓகாரம் மிகுதலும்

இறுதிய ஆதல்= சில ஈற்று னகரம் யகரமாகத்திரிதலும்

அதனோடு அயல் திரிந்து ஏயுறல் = சில ஈற்று னகரமெய் யகர மெய்யாகத்திரிந்து ஈற்றயல் ஆகாரம் ஒகாரமாய்ப் பின்னர் ஏகாரமிகலும்

ஈறழிந்து அயல் ஏ ஆதலும் = சில ஈற்று னகரமெய்கெட்டு இறுதியினின்ற அகரம் ஏகாரமாதலும்

விளியுருபாகும் = விளியுருபுகளாம்.

ளகர ஈற்று உயர்திணைப்பெயர்களின் விளியுருபு:

ள் என்னும் எழுத்தையிறுதியிலுடைய உயர்திணையில் வருஞ் சிலபெயர்களின் ஈற்று அயலெழுத்து அளபெடுக்கும்.

உ-ம். வேள் வேஎள்

சில பெயர்களின் ஈற்று ளகரஒற்றுக் கெடும். உ-ம். எல்லாள், எல்லா.

சில பெயர்களின் ஈற்று அயலிலுள்ள குற்றெழுத்து நீளும். உ-ம். மக்கள் மக்காள்.

சில பெயர்களின் ஈற்றிலுள்ள ள் என்ற மெய் ய் ஆகும். உ-ம். குழையாள், குழையாய்

சில பெயர்களின் ஈற்று அயலிலுள்ள அகரம் ஏகாரமாகும். உ-ம். அடிகள், அடிகேள்.

இதற்குச் சூத்திரம் : -

**௫௰. ளஃகா னுயர்பெயர்க் களபீ றழிவய**
**னீட்சி யிறுதி யவ்வொற் றாதல்**
**அயலி லகரமே யாதலும் விளித்தனு.**

இதன் பொருள் :

ளஃகான் உயர்பெயர்க்கு = ளகரவீற்று உயர்திணைப்பெயர்க்கு

அளபு= ஈற்றயலிலுள்ள உயிரெழுத்து அளபெடுத்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈறழிவு = இறுதியிலுள்ள எழுத்துக்கெடுதலும்

இறுதிய ஒற்று ஆதல் = ஈற்று ளகரமெய் யகரமாதலும்

அயலில் அகரம் ஏ ஆதலும் = ஈற்றயலினின்ற அகரம் ஏகாரமாகத் திரிதலும்

விளித்தனு ... விளியுருபுகளாகும்.

உயர்திணைப்பெயர்களின் ரகர ஈற்று விளியுருபுகள் :

சில ரகர ஈற்று உயர்திணைப்பெயர்ச் சொற்களின் ஈற்றய விலுள்ள நெடில் அளபெடுக்கும். உ-ம். சிறார் (சிறுவர்கள்), சிறா அர்.

ரகர ஈற்றின் அயலிலுள்ள அகரம் இகரமாகத்திரியும். உ-ம். தெவ்வர் (பகைவர்), தெவ்விர். தேவர், தேவிர்.

ரகர ஈற்றின் அயல் அகரம் ஈகாரம் ஆகும். உ-ம். நாய்கர், நாய்கீர். வணிகர், வணிகீர்.

ரகர ஈற்றின் அயல் ஆகாரம் ஈகாரம் ஆகும். உ-ம். பார்ப்பார், பார்ப்பீர், சான்றார், சான்றீர், வேந்தர், வேந்தீர்.

ரகர ஈற்றின் அயல் ஆவானது ஈயாகி ஏ மிகுந்துவரும். உ-ம். பல்சான்றார், பல்சான்றீர், பல்சான்றீரே, சீவகசாமியார், சீவகசாமியீர், சீவகசாமியீரே.

ரகர ஈற்றின் அயல் யாக்கெட்டு அதன் அயலிலுள்ள இகரம் நீண்டு ஏகாரம் மிகும். உ-ம். தொழுப்பியார் (தொண்டு செய்பவர்) என்றசொல் யா கெட்டு தொழும்பிர் என்றும், ஈற்று அயலிலுள்ள (பி = ப் + இ) இகரம் நீண்டு தொழும்பீர் என்றும், ஏகாரம் மிகுந்த தொழும்பீரே என்றும், திரிந்து விளியுருபாயினது.

சில உயர்திணைப்பெயர்களின் ஈற்று ரகரமெய் ஈர் ஏற்கும். உ-ம். எமர் (எம்முடையவர்கள்). எமரீர்.

இதற்குச் சூத்திரம்: -

௫௰௧. ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ லீற்றயல்
அகரம் இஈ யாதலாண் டையா
ஈயாத லதனோ டேயுற லீற்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கயல் யாக்கெட் டதனய னீட
லீற்றி னீருறலி வையுமீண் டுருபே.

இதன் பொருள் :

ர ஈற்று உயர்பெயர்க்கு = ரகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் (விளிவேற்றுமையில் வருங்கால்)

அளபெழல் = இறுதி அயலெழுத்து அளபெடுத்தலும்

ஈற்றயல் அகரம் இ ஈ ஆதல் = இறுதியயவிலுள்ள அகரம் இகர மாதலும் ஈகரமாதலும்

ஆண்டை ஆ ஈ ஆதல் = ஈற்றயலில் நின்ற ஆகாரம் ஈ ஆதலும் அதனோடு ஏயுறல் = ஈற்றயல் ஆகாரம் ஈ ஆக ஏகாரம் மிகுதலும்

ஈறு ஏமிக்கு அயல் யா கெட்டு அதன் அயல் நீடல் = ஈற்றில் ஏ மிகுந்து அயலில் யா கெட்டு அதன் அயலிலுள்ள இ என்பது ஈ ஆதலும்

ஈற்றில் ஈர உறல் = இறுதியில் ஈர் என்பது வந்து பொருந்துதலும்

இவையும் ஈண்டு உருபு = ஆகிய இவைகளும் இவ்விடத்து விளி யுருபுகளாம்.

உயிர் திணைப்பெயர்களின் லகர யகர ஈற்றுவிளியுருபுகள்:

லகர யீற்று உயர்திணைப்பெயர்களின் ஈற்றயலெழுத்து அளபெடுக்கும். உ-ம். மால், மாஅல்.

லகர ஈற்றின் அயலிலுள்ள குறில் நீளும். உ-ம். மடவரல், மடவரால்.

சில யகரயீற்று உயர்திணைப் பெயர்களின் ஈற்றயலெழுத்து அளபெடுக்கும். உ-ம். சேய், சேஎய்.

இதற்குச் சூத்திரம் :

௫௰௨. லகாரவீற் றுயர்பெயர்க் களபய னீட்சியும்
யகார வீற்றிற் களபுமா முருபே.

இதன் பொருள் :

லகார ஈற்று உயர்பெயர்க்கு = லகரத்தை இறுதியிலுள்ள உயர் திணைப்பெயர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளபு அயனீட்சியும் = அளபெடையும் ஈற்றயல் நீளுதலும் யகாரஈற்றிற்கு அளபும் = யகரத்தை யிறுதியிலேயுள்ள உயர்திணைப் பயர்களுக்கு அளபெடையும்

உருபாம் = விளியுருபுகளாம்.

சில அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களின் ஈற்று னகர மெய் கெடும். உ-ம். அலவன். அலவ, கொற்றன், கொற்ற.

சில பெயர்களின் ஈற்று னகரங்கெட்டு அயல் நீண்டுவரும். உ-ம். அலவன், அலவா. கொற்றன் கொற்றா.

இதற்குச் சூத்திரம் :-

**ருயரு. னவ்வீற் றுயர்திணை யல்லிரு பெயர்க்கண்
இறுதி யழிவத னோடய னீட்சி.**

இதன் பொருள் :

னவ்வீற்று உயர்திணை அல் இருபெயர்க்கண் = னகர ஈற்று (உயர்திணையல்லாத) அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களின் இறுதி அழிவு = ஈற்று னகரமெய் கெடுதலும்

அதனோடு அயல்நீட்சி = னகரமெய்கெட அயலெழுத்து நீளுதலும் விளியுருபாம்.

ல் ள் என்னும் எழுத்துக்களை இறுதியிலுள்ள அஃறிணைப் பெயர்கள் பொதுப்பெயர்களின் விளியுருபு ஈற்றயலெழுத்து நீளுதலாம். உ-ம். முயல், முயால். கிளிகள், கிளிகாள். (அஃறிணைப் பெயர்) மக்கள், மக்காள் (பொதுப்பெயர்).

இதற்குச் சூத்திரம்:-

**ருயச . லளவீற் றஃறிணைப் பெயர்பொதுப் பெயர்க்கண்
ஈற்றய னீட்சியு முருபா கும்மே.**

இதன் பொருள்:

ல ள ஈற்று அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்க்கண் = ல் ள் என்னும் மெய்யெழுத்துக்களை இறுதியிலேயுடைய அஃறிணைப் பெயர் பொதுப்பெயர்களுட் சிலவற்றிற்கு

ஈற்றயல் நீட்சியும் = இறுதியின் அயலெழுத்து நீளுதலும்

உருபு ஆகும். = விளியுருபாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*17 (ப. 334).* விளியுருபுகளுக்குப் புறனடை.

இதுவரையும் உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களுக்குப் பொதுவான விளியுருபுகளைக் கூறினாம். இனி அண்மை (சமீபவிளி) சேய்மை (தூரவிளி) புலம்பல் (இரங் கல்விளி) என்றும் மூவகைவிளிகளிலும் இன்ன இன்ன விளியுருபு வருமென்ற விதிகூறுவாம். இவ்விதி முற்கூறிய விதிகளுக்குப் புறம் பாகவும் அடுத்தும் நிற்பதால் புறனடையெனப்படும்.

சமீபப் பொருள்களையழைப்பதாகிய அண்மை விளிச் சொல், இயல்பாகவும் நிற்கும், ஈறுகெட்டும் நிற்கும். உ-ம். தம்பி வா. இது அண்மையில் இயல்புவிழி. மைந்த எழுதி. இதில் மைந்தன் என்ற பதம் அண்மையில் ஈறுகெட்டு மைந்த என ஆயிற்று.

தூரத்திலுள்ள பொருளை அழைப்பதாகிய சேய்மை விளிக்கு அளபெடை உருபாகவரும். உ-ம். சேய் (மகன்), சேஎய் வருதி என்றாகும்.

புலம்பலில், ஓ விளியுருபாக வரும். உ-ம். மைந்தவோ, வென்றன் மதகளிறோ, வல்வினையேன் — சித்தையோ, சிந்தை தெவிட்டாத தெள்ளமுதோ. இதன் பொருள் : என்மகனே, மதஞ் சொரியும் யானையை ஒத்தவனே, கொடிய வினையுடைய என்மன திற் தங்கியிருப்பவனே, என்சித்தத்தில் தெவிட்டாத அமிர்தத் தைப்போன்றவனே.

இதற்குச் சூத்திரம் : -

**ருயரு. அண்மையி னியல்புமீ றழிவுஞ் சேய்மையி**
**னளபும் புலம்பி னோவு மாகும்.**

இதன் பொருள் :

அண்மையின் இயல்பும் ஈறழிவும் = சமீபவிளியில் இயல்பாதலும் ஈறழிதலும்

சேய்மையின் அளபும் = தூரவிளிக்கு அளபெடுத்தலும்

புலம்பின் ஓவுமாகும் = புலம்புவிளிக்கு ஓ காரமிடுதலும் விளியுரு பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*18.* விளிவேற்றுமையில் வராதபெயர்கள் (ப. *335*):

இப்பெயர்கள் அவன் அவள் அவர் அது அவை ஆகிய ஐம்பாற் சுட்டுப்பெயர்களும், எவன் யாவன் யார் ஆர் எது யாது யான் ஆகிய ஐம்பால்வினாப்பெயர்களும், நுமன் நுமள் நுமர் ஆகிய முன்னிலை பெயர்களும், தான் மற்றையான் பிறன் முதலிய சிலபெயர்களுமாம்.

நுமன் நுமள் நுமர் என்பவற்றில் நு என்னும் பகுதி ன் ள் ர் என்ற விகுதிகளையேற்கும்பொழுது, பகுதி விகுதி இடையில் ம் என்ற மெய்தோற்றி, நும் அன் என்றும், நும் அள் என்றும், நும் அர் என்றும், ஆகும். மகர ஒற்றில் அகர உயிரேறி நுமன் நுமள் நுமர் என்றாயின.

இதற்குச் சூத்திரம் :-

**ருயகூ. நுவ்வொடு வினாச்சுட் டுற்றன ளர**
**வைதுத் தாந்தா னின்னன விளியா.**

இதன் பொருள்:

நுவ்வொடு வினா சுட்டு உற்ற = நு என்பதையும் எ ஏ யா என்னும் மூன்று வினாவையும் அ இ உ என்னும் மூன்று சுட்டையும் முறையே பொருந்திய

ன ள ர = ன் ள் ர் என்னும் ஈற்றையுடைய உயர்திணைப் பெயரும்

வைது = வை து என்னும் விகுதிகளைப்பெற்ற அஃறிணைப் பெயரும்

தாம் தான் = தாம் தான் என்னும் பொதுப்பெயரும்

இன்னன விளியா = இவைபோன்ற வேறுசில பெயரும், விளி வேற்றுமையில் வரா.

*19* (ப. *335*). முதலும் சினையும் தொடர்ந்து செயப்படு பொருளாய் நிற்குமிடத்து இரண்டாம் வேற்றுமை வரும்முறை:

முதற்பொருளுடன் ஐயுருபு வந்தால் சினைப்பொருளுடன் கண் உருபுவரும். உ-ம். யானையைக் காலின்கண் வெட்டினான். இங்கே யானைமுதற்பொருள். கால் சினைப்பொருள். யானை என்பதுடன் இரண்டாம் வேற்றுமை யுருபுசேர்ந்து யானையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாகி கால் என்பதுடன் கண் என்ற உருபுசேர்ந்து காலின் கண் எனவாகி நின்றது.

முதற்பொருளுடன் கண் உருபு சேர்ந்தால் சினையுடன் ஐ உருபுசேரும். உ-ம். யானையின்கட் காலைவெட்டினான்.

முதற்பொருளுடன் ஆறாம் வேற்றுமையுருபு சேர்ந்தால் சினைப்பொருளுடன் இரண்டாம் வேற்றுமை யுருபுசேரும்.
உ-ம். யானையினது காலைவெட்டினான்.

இதற்குச் சூத்திரம்: -

**ருயஎ. முதலை யையுறிற் சினையைக் கண்ணுறும்**
**அதுமுதற் காயிற் சினைக்கை யாகும்.**

இதன் பொருள்:

முதலை ஐயுறின் = முதற்பொருளை ஐயுருபு பொருந்தினால் சினை யைக் கண்ணுறும் = சினையினுக்கும் கண்ணுருபு வந்து சேரும்.

அதுமுதற்கு ஆயின் = அது என்ற ஆறாம்வேற்றுமை யுருபு முதற் பொருளுக்கு வருமேல்,

சினைக்கு ஐ ஆகும் = சினைப்பொருளுக்கு ஐ உருபுவரும்.

"அதுமுதற்காயின்" என்பதற்கு அக்கண்ணுருபு முதற் பொருளில் வந்தால் என்றும் பொருள்கொள்க.

*20 (ப. 335)* ஐ உருபானது முதல் சினை இரண்றிற்கும் வராமைக்குக் காரணம்.

யானையைக் காலைவெட்டினானென்று முதற்பொருளி னும் சினைப்பொருளினும் ஐயுருபு சேர்த்துக்கூறலாகாது. காலை வெட்டினான் என்றால் யானையை வெட்டினான் என்றும் பொருள் படும். ஆதலால், ஒரு தொடரில் வரும் முதற்பொருளும் சினைப் பொருளும் செயப்படுபொருளைப் பெறமாட்டா.

நெல்லைக் குவியலை வாரினான் என்பதும் பொருந்தாது. பிண்டித்த (ஒன்றோ டொன்று கூடித்திரண்ட) நெல்லும் பிண்டிக் கப்பட்ட (ஒன்றோ டொன்று கூட்டப்பட்ட) குவியலும் ஒரே பொருளாதலால், நெல்லை வாரினான் என்பது குவியலைவாரினாள் என்பதில் அடங்கி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம் : -

**ருயஅ. முதலிவை சினையிவை யெனவே றுளவில**
**உரைப்போர் குறிப்பின வற்றே பிண்டமும்.**

இதன் பொருள் :

முதல் இவை சினை இவை என = முதற்பொருள் இவை என்றும் சினைப்பொருள் இவை என்றும்,

வேறுள இல = வெவ்வேறாக இல்லை.

உரைப்போர் குறிப்பின = சொல்லுகிறவர்கள் முதலென்றும் சினையென்றும் பிரித்துக்கூறுதலில் அவ்வேறுபாடுகள் உளவாம்.

பிண்டமும் அற்று = பிண்டப்பொருளும் அந்தத் தன்மையையுடைய தாகும்.

21 (ப. 335). உருபு மயக்கம்.

உருபு மயக்கம் (உருபுமாறுதல்) ஆவது, ஒரு வேற்றுமை உருபு வேறொரு வேற்றுமையுருபில் வந்து முதற்கூறிய பொரு ளையே பயப்பது.

இதற்குச் சூத்திரம் : -

**ருயகூ. யாத னுருபிற் கூறிற் றாயினும்**
**பொருள்சென் மருங்கில் வேற்றுமை சாரும்.**

இதன் பொருள் :

யாதன் உருபில் கூறிற்று ஆயினும் = ஒருவேற்றுமையின் பொருள் வேறொரு வேற்றுமை யுருபால் கூறப்பட்டதாயினும் வேற்றுமை = அவ்வேற்றுமை உருபானது

பொருள் செல்மருங்கில் சாரும் = தனக்குரிய பொருளை யுணர்த் தாமல் எவ்வேற்றுமைப் பொருள் ஆண்டுப் பொருந்துமோ அவ் வேற்றுமைப் பொருளையே தரும்.

22 (ப. 335). வேற்றுமை உருபுகள் திரிந்து வருதல்:

காவலோனைக் களிறஞ்சுமே (அரசனுக்கு யானை அஞ்சும்) என்பது காவலோனக் களிறஞ்சும்மே எனவரும். இங்கே காவ லோனை என்ற உயர்திணைப்பெயரில் ஐயுருபு அகரமாகத் திரிந்து காவலோன என்று நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரைதீர்கேள்விப் (குற்றம் நீங்கிய நூற்கேள்வியையுடைய) புலவரான் என்பது புரைதீர்கேள்விப்புலவரான என்று நிற்கும். புலவரான் என்பதில் ஆன் அகரம் அடுத்து ஆன என்றாயிற்று.

கடிநிலையின்றே (அச்சமான நிலைமையில்லை) ஆசிரியர்க்கு என்பதில் குவ்வுருபிலுள்ள உகரம் அகரமாகத் திரிந்து ஆசிரியர்க்க எனவரும்.

அஃறிணையில் புள்ளினான் (பட்சியால்) என்பது புள்ளினான எனவந்தது. இதில் ஆன் அகரச்சாரியைபெற்று புள்ளினான என்றாயிற்று.

இவ்வாறு செய்யுளிலே சில உயர்திணைப்பெயர்களின் இறுதியில் நிற்கும் ஆன் என்பது, அகரம்பெற்று ஆன எனவரும், ஐ என்பது அ எனத்திரியும், கு என்பதிலுள்ள உகரம் அகரமா கத்திரிந்து க என வரும்.

அஃறிணைப்பெயர்களில் ஆன் என்பது அகரச்சாரியை பெற்று ஆன எனத்திரிந்து வரும்.

இதற்குச் சூத்திரம் : -

**கூ௰. ஐயான்குச் செய்யுட் கவ்வு மாகும்.**
**ஆகா வஃறிணைக் கானல் லாதன.**

இதன் பொருள் :

ஐயான் கு செய்யுட்கு - ஐ ஆன் கு என்ற உருபுகள் செய்யுளில்

அவ்வும் ஆகும் - ஐகாரம் அகரமாகும், ஆன் அகரம்பெறும், கு என்பதில் உகரம் அகரமாகத் திரியும்.

அஃறிணைக்கு ஆன் அல்லாதன - ஆகா = அஃறிணைப்பெயர்களில் ஆன் என்னும் உருபு ஒன்றுமே சில இடங்களில் மேற் கூறியவாறு திரியும். ஏனைய ஐயும் குவ்வும் திரியா.

*23 (ப. 355).* எட்டு வேற்றுமைகள் முடிவதற்கான சொற்கள்.

சில உருபுகள் பெயர்ச்சொல்லை மாத்திரம் கொண்டு முடியும். வேறு சில உருபுகள் வினைச்சொல்லை மாத்திரம் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். இன்னும் சில உருபுகள் பெயர்ச்சொல்லையும் வினைச் சொல்லையும் கொண்டு முடியும்.

பெயர்ச்சொல்லைமாத்திரம் கொள்ளும் உருபுகளாவன: நீக்கல் ஒப்பு ஏது எல்லை என்றபொருள்களை உணர்த்துகின்ற ஐந் தாம் வேற்றுமைப்பொருள்களில் எல்லைப்பொருளுக்குரிய உருபு கள் மாத்திரம் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும். உ-ம். இலங் கையின் வடக்கு யாழ்ப்பாணம். ஈண்டு இலங்கையின் என்ற பதத்தில் ஐந்தாம்வேற்றுமை எல்லைப்பொருளை உணர்த்தும் இன் என்ற உருபு வடக்கு என்னும் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்தது.

சிவனது பாதம் என்றதில் அது என்னும் ஆறாம்வேற்றுமை உருபு பாதம் என்னும் பெயர்ச்சொல்லைக்கொண்டது.

வினைச்சொல்லைமாத்திரம் கொள்ளும் உருபுகள்:

இரண்டாம்வேற்றுமை ஐ உருபு வினைச்சொல்லைக் கொள்ளும். உ-ம். மகனைக்கண்டாள்.

மூன்றாம்வேற்றுமை உருபுகளாகிய ஆல் ஆன் ஓடு ஒடு வினைச்சொல்லைக் கொள்ளும். உ-ம். வாளால் வெட்டினான்.

பெயரும் வினையும் கொள்ளும் உருபுகள்:

எழுவாய் வேற்றுமை பெயர்ச்சொல்லையும் வினைச்சொல் லையும் கொள்ளும். உ-ம். பொன்னன் மனிதன். பொன்னன் வந் தான். இவற்றில், எழுவாய் பொன்னன், மனிதன் என்ற பெயர்ச்சொல் லையும், வந்தான் என்ற வினைச்சொல்லையும், கொண்டது.

நான்காம் வேற்றுமை உருபாகிய கு பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் கொள்ளும். உ-ம். மோதிரத்துக்குப் பொன். கோயிலுக்குக் கொடுத்தான்.

ஏழாம்வேற்றுமை உருபாகிய கண் பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் கொள்ளும். உ-ம். மணியின்கண் ஒளி. கட லின்கண் விழுந்தான்.

எழுவாய் வேற்றுமை அவன் முதலிய சுட்டுப்பெயரையும், யாவன் யார் முதலிய வினாப்பெயரையும், கொள்ளும். உ-ம். லக்ஷ மணன் அவன் (ஒருவனைச் சுட்டி அவன் லக்ஷமணன் எனல்). அவர் யார், வினாப்பெயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாவதும் ஆறாவதும் ஒழிந்த ஏனைய வேற்றுமைகள் வினைச்சொற்களைக் கொண்டு தத்தம் வேலைகளைச் செய்தல் காரகம் எனப்படும்.

வேலைக்காரன் என்ற கூட்டுச்சொல்லில் காரன் என்பது செய்பவன் என்று பொருள்படும். வேற்றுமைக்காரகம் என்பது (எட்டாம் வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையுமல்லாத) வேற்றுமைகள், வினைச்சொற்களைக்கொண்டு தத்தம் வேலைகளைச் செய்து முடித்தலாம்.

கீழ்வரும் பழையசெய்யுளில் காரக இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

**விளிகுறை யிரண்டையும் விட்ட வேற்றுமைகள்**
**வினையான் முடியிற் காரக மெனப்பெறும்**
**குறையும் வினைகொளி னொரோவழிக் கூடும்**
**நாரா யணன்பூ வோரா யிரத்தைக்**
**கரத்தாற் கொய்தோ ரரற்கே கொடுத்துச்**
**சக்கரச் சிறுமையி னீங்கி நற்சுவைப்**
**பாற்கடற் கண்ணே பள்ளிகொண் டானெனக்**
**காரக முழுதும் வந்தன காண்க**
**இவற்றினு ளொன்றே யியம்பினுங் காரகம்.**

இதன் பொருள் :

விளிகுறை இரண்டையும் விட்டவேற்றுமைகள் = எட்டாம் வேற்றுமையும் ஆறாம்வேற்றுமையும் அல்லாத மற்றவேற்றுமைகள்

வினையான் முடியில் காரகம் எனப்பெறும் = வினைச்சொல்லைக் கொள்ளுமானால் காரகம் எனப்படும்.

நாராயணன் பூ ஓராயிரத்தைக் கரத்தாற் கொய்து = ஸ்ரீவிஷ்ணு பகவான் ஆயிரம் புஷ்பங்களைக் கையினாற் கொய்து

ஓர் அரற்கே கொடுத்து = சிவபெருமானுக்கு அர்ப்பணஞ்செய்து சக்கரச்சிறுமையின் நீங்கி = தனக்குச் சக்ராயுதம் இல்லாமையில் நின்று நீங்கி (சக்கரப்படையைப்பெற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்சுவைப் பாற்கடற்கண்ணே பள்ளிகொண்டான் = நல்ல சுவை யினையுடைய பாற்கடலினிடத்து அறிதுயில் செய்தார்

என = என்ற உதாரணத்தில்

காரகம் முழுவதும் வந்தன காண்க = காரகம் முதலாம் இரண்டாம் மூன்றாம் நான்காம் ஐந்தாம் ஏழாம் வேற்றுமைகளில் முற்றாக வந் தன.

கூறப்பட்ட உதாரணத்தில் "நாராயணன்" முதலாம் வேற் றுமை, "ஆயிரத்தை" இரண்டாம் வேற்றுமை, "கரத்தால்" மூன்றாம் வேற்றுமை, "அரனுக்கு" நான்காம் வேற்றுமை, "சிறுமையின்" ஐந் தாம்வேற்றுமை, "கடற்கண்" ஏழாம் வேற்றுமை ஆகும்.

இவ்வுதாரணத் தொடரில் அரிய உவமைப்பொருளும் அமைந்து கிடக்கின்றது. எவ்விதம் நாராயணன் தனது பல சிறுமை களைச் சிவபெருமானுக்கு ஒப்புவித்து, அவரிடமிருந்து மிகவலிய சக்கிராயுதத்தைப் பெற்றுச் சர்வ வல்லபியானாரோ, அதுபோல, வேற்றுமை உருபுகள் தமது சிறுமைகளைக் கிரியா சக்தி நிறைந்த வினைச்சொற்களுக்கு ஒப்புவித்து, அவற்றினிடமிருந்து செய்து முடிக்கும் சக்திகளை எல்லாம் பெற்றுக்கொள்றன என்று போதிக் கப்பட்டது.

இவற்றினுள் ஒன்றே இயம்பினும் காரகம் = இந்த உதாரணங்களில் ஒன்றைக் கூறினாலும் காரகமாம்.

எட்டாம் வேற்றுமை விளியுருபுபெற்ற இராமா வாராய் என் பது இராமா நீ வாராய் என்று அர்த்தப்படும். இராமா என்ற விளிச் சொல்லுக்குப் பயனிலை வாராய். நீ என்ற எழுவாய்க்கும் பயனிலை வாராய். இவ்வாறு வரும் விளித்தொடர்களில், விளி வேற்றுமையும் எழுவாய் வேற்றுமையும் ஒரே பயனிலையைக் கொள்ளும்.

இதற்குச் சூத்திரம் :-

**௬௰௧. எல்லை யின்னு மதுவும் பெயர்கொளு**
**மல்ல வினைகொளு நான்கே ழிருமையும்**
**புல்லும் பெரும்பாலு மென்மனார் புலவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:

எல்லை இன்னும் அதுவும் = ஐந்தாம் வேற்றுமையின் எல்லைப் பொருளில் வரும் இன் என்பதும், ஆறாம் வேற்றுமை உருபாகிய அது என்பதும்

பெயர்கொளும் = பெயர்ச்சொல்லைக் கொள்ளும்.

அல்ல வினைகொளும் = ஏனைய வேற்றுமைகள் வினைச்சொல் லைக் கொள்ளும்,

நான்கு ஏழு இருமையும் புல்லும் = (அத்தன்மையாக வினைகொள் ளும் வேற்றுமைகளில்) நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற் றுமையும் வினைச்சொல்லையும் பெயர்ச்சொல்லையும் கொள்ளும்,

பெரும்பாலும் என்மனார் புலவர் = பெரும்பாலும் என்று சொல்லு வர் புலவர்.

பெயரியல் முற்றிற்று.

---

## வினையியல்.

பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் என்னும் நான்குவகைச் சொற்களில், இதுகாறும் பெயர்ச்சொல்லின் இலக்கணத்தைக் கூறினாம்.

இனி, இரண்டாம் பிரிவாகிய வினைச்சொல்லின் இலக் கணத்தைக் கூறுவாம்.

வினை என்பது தொழில், செயல். இதனை இருத்தல், நிற்றல், அசைதல், நடத்தல், ஓடல், பாய்தல், பறத்தல், ஊர்தல், சுற்றல், பார்த் தல், கேட்டல், நினைத்தல், அறிதல் முதலியன வாகப் பிரிக்கலாம்.

இவ்வினைகளைப் பிரித்துக்கூறுஞ் சொற்கள் தொழிற் பெயர்ச் சொற்கள், அல்லது வினைப்பெயர்ச்சொற்கள், எனப்படும்.

ஒருதொழிலுக்கு இடப்பட்ட பெயர்ச்சொல்லை வினைச் சொல்லாக்கலாம். எப்படியெனில், பாடுதலிலுள்ள பாடு என் னும் பகுதியையும், பாடினவனைக் காட்டும் ஆன் என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினையியல்

ஆண்பால் விகுதியையும், இறந்தகாலத்தைக் காட்டும் இன் என்னும் இடைநிலையையும் கூட்டினால் , பாடினான் என்ற வினைச் சொல்லாகும். (பாடு + இன் + ஆன் = பாடினான்)

உண்ணுதல் என்னும் தொழிற்பெயரிலுள்ள உண் என்ற பகுதியையும், உ என்ற சாரியையையும், கின்று என்ற நிகழ்கால இடைநிலையையும், ஆன் என்ற ஆண்பால் விகுதியையும் சேர்த்தால், உண்ணுகின்றான் என்ற வினைச்சொல்லாகும்.

ஓடல் என்ற தொழிற்பெயரிலுள்ள ஓடு என்ற பகுதியையும், வ் என்ற எதிர்கால இடைநிலையையும், ஆள் என்ற பெண்பால் விகுதியையும் சேர்த்தால், ஓடுவாள் என்ற வினைச்சொல்லாகும்.

பாய்தல் என்ற தொழிற்பெயரிலுள்ள பாய் என்னும் பகுதியையும், உம் என்னும் அஃறிணை ஒன்றன்பால் விகுதியையும் கூட்டினால், பாயும் என்னும் வினைச்சொல்லாகும்.

ஒரு வினைச்சொல்லுக்குள் ஆறு ஆபத்திகள் (சம்பவங்கள்) உள்ளன. அவையாவன: பாடினான் என்ற வினைச்சொல்லில் பாடுதலாகிய செயலும், பாடுதலைச் செய்பவனும், பாடியபொருளும், எந்தக்கருவியைக் கொண்டு பாடினான் என்றும், எவ்விடத்தில் பாடினான் என்றும், எக்காலத்தில் பாடினான் என்றும், உள்ள சம்பவங்களாம்.

இதற்கு சூத்திரம் : -

௲௰௨. செய்பவன் கருவி நிலஞ்செயல் காலஞ்
செய்பொரு ளாறுந் தருவது வினையே.

இதன் பொருள் :

செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் = கர்த்தா கருவி இடம் தொழில் காலம் செயப்படுபொருள் ஆகிய ஆறும் = ஆறையும்

தருவது வினை = தனக்குள் அடக்கியிருந்து கொடுக்கத்தக்கது வினைச் சொல்லாம்.

எனவே, வினைச்சொல்லாவது கர்த்தா, அவனது கருவி, அவன் நின்ற இடம், அவன் செய்த கருமம், அதன்காலம், அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் செய்யப்பட்ட பொருள், என்றவற்றை முறையே தரும் சொல்லாம்.

வினைச்சொல் ஆறு வகைப்படும். இவை தெரிநிலை வினைமுற்று, தெரிநிலை வினைப்பெயரெச்சம், தெரிநிலை வினையெச்சம், குறிப்புவினைமுற்று, குறிப்பு வினைப்பெயரெச்சம் குறிப்பு வினை வினையெச்சமாம்.

இவற்றுள், முதல் தெரிநிலை வினைமுற்றையும் குறிப்பு வினை முற்றையும் எடுத்துக்கூறுவாம்.

தெரிநிலை வினைமுற்றுக்கு உதாரணங்கள்:

உண்டான். இதனில் உண்ணுதல் என்ற செயலும், அத் தொழிலைச் செய்த கர்த்தாவும், வாய் என்ற கருவியும், இறந்த காலமும், ஆகிய இந்நான்கும் ப்ரதயக்ஷமாக (வெளிப்படையாக)க் காணப்பட்டன.

உண்டான் என்பதில் செயப்படுபொருளும் இடமும் ப்ரத்யக்ஷயமாகவில்லை. வினாவால் வெளிப்படுத்த வேண்டியது.

எதனை உண்டான்? சோற்றையா, பழத்தையா, நஞ்சையா, என்று விசாரித்தால், உண்டான் என்று கூறினவன் விளக்குவான். இதனால் செயப்படுபொருளும் நிலமும் உண்டான் என்பதில் மறைந்து நின்றமை காண்க.

வனைந்தான். வனை பகுதி, ந் விகாரம், த் இடைநிலை, ஆன் விகுதியோடு கூடிய வனைந்தான் என்ற பதத்தில் வனைதல் என்ற குயவனது செயலும், வனைந்தவன் என்ற கர்த்தாவும், தண்டு சக்கரம் என்ற கருவிகளும், வனைந்தவீடு என்ற நிலமும், த் என்ற இறந்த காலமும், ஆகிய ஐந்து சம்பவங்கள் வெளிப்படையாகத் தோன்றின.

ஆறாவது சம்பவமாகிய செயப்படுபொருள் ப்ரத்யக்ஷமாக வில்லை. எதனைச்செய்தான் என்று வினாவினால், குடம் அல்லது சட்டி அல்லது பானை என்ற பொருள் வெளிவரும்.

பாடினான் என்னும் தெரிநிலை வினைமுற்றுச் சொல்லில் பாடுதலாகிய செயலும், பாடினவனாகிய கர்த்தாவும், இறந்தகாலமுமாகிய மூன்றும் ப்ரத்யக்ஷம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினையியல்

கருவி நிலம் செயப்படுபொருள் ஆகிய மூன்றும் மறைந்து நின்றன.

குறிப்புவினை முற்றாவது பொருட்பெயர் இடம்பெயர் காலப்பெயர் சினைப்பெயர் குணப்பெயர் தொழிற்பெயர் என்றவற்றில் ஒருபெயரைப் பகுதியாகக் கொண்டும், கர்த்தாவை வெளிப்படையாக உணர்த்தும் விகுதியைக் கொண்டும், கர்த்தாவின் வினையைக் குறிப்பாகக் காட்டி நிற்கும் சொல்லாம்.

இதற்கு உதாரணங்கள் : பரணியான், பண்டுபொன்னன், குழையினன்.

பரணியிற் பிறந்தான் என்னுந்தொடர் பரணியான் என்று வரின், குறிப்புவினை முற்று எனப்படும்.

பரணியான் (பரணி + ய் + ஆன்). இது பரணி என்னும் காலப் பெயரைப் பகுதியாகக் கொண்டும், ஆன் என்னும் ஆண்பாற் கர்த்தாவை நேரே உணர்த்தும் விகுதியைக் கொண்டும், பரணியிற் பிறந்த செயலைக் குறிப்பாக (சாடையாக)க் காட்டியும், நிற்றலால், பரணியான் என்னுஞ் சொல் குறிப்புவினைமுற்றாம்.

பொன்னன் என்பது பொன்னையுடையவன் என்று பொருள் படும்போது பெயர்ச்சொல்லாகும். பொன்னையுடையவனாக இருக்கின்றானோ இருந்தானோ இருப்பானோ எனப்பொருள் படும்போது குறிப்புவினைமுற்று எனப்படும். இதனில் அன்விகுதி ஆண்பாற் கர்த்தாவை நேரே அறிவித்து அவனது இருத்தலாகிய செயலை மறைவாகக் குறித்தது.

குழையினன். இது குண்டலத்தையுடையவன் எனப்பொருள் பட்டால் பெயர்ச்சொல்லாகும். குண்டலத்தை அணிந்திருக்கின் றான் எனப்பொருள்பட்டால் நிகழ்காலக்குறிப்பு வினைமுற்றாகும். குழையை அணிந்தான் எனப்பொருள்பட்டால் இறந்தகாலக் குறிப்புவினை முற்றாகும். குழைய அணிவான் எனப்பொருள் பட் டால் எதிர்காலக் குறிப்பு வினை முற்றாகும்.

குழையை அணிந்த கர்த்தாவை அன்விகுதி ஆண்பாலால் நேரே காட்டி அவனது அணிதலாகிய செயலைச் சாடையாக வெளிப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவகைப் பெயரும் குறிப்புவினை முற்றில் அடங்கின மைக்கு உதாரணங்கள் : குழையினன் — குழை என்னும் பொருட் பெய ரைப் பகுதியாகக் கொண்டு பிறந்தது.

நகரத்தினன் — நகரம் என்னும் இடம் பெயரைப்பகுதியாகக் கொண்டு பிறந்தது.

தையான் — தை என்னும் மாசகாலப்பெயரைப் பகுதியாகக் கொண்டு பிறந்தது.

காலான் (காலையுடையவன்) — கால் என்னும் சினைப் பெயரைப்பகுதியாகக் கொண்டு பிறந்தது.

கரியன் — கருமை என்னும் குணப்பெயரைப் பகுதியாகக் கொண்டு பிறந்தது.

ஆடலான் — ஆடல் என்னுந் தொழிற்பெயரைப் பகுதியாகக் கொண்டு பிறந்தது.

இதற்குச் சூத்திரம் : -

கூயரு. பொருண்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள்
வினைமுதன் மாத்திரை விளக்கல்வினைக் குறிப்பே.

இதன் பொருள் :

பொருள் முதல் ஆறினுந் தோற்றி = பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறையும் அடியாகக் கொண்டு பிறந்தது.

முன் ஆறனுள் = முன் சூத்திரத்திற் சொல்லிய செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செய்பொருள் என்ற ஆறனுள்ளே

வினை முதல் மாத்திரை விளக்கல் = வினைக்கு முதல்வனாகிய கர்த் தாவை மாத்திரம் ப்ரத்யக்ஷமாக்கும்

வினைக்குறிப்பு = குறிப்புவினை முற்றாம்.

நடந்தான் படிக்கின்றான் என்ற வினைச்சொற்கள் கர்த்தா வினது திணை பால் இடம் என்பவற்றை (பெயரியல், பக்கம் 279) காட்டிக் காரியத்தின் முடிவைக் குறிக்கின்றமையால், இவை போன்ற வினைச்சொற்கள் வினைமுற்றெனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினையியல்

ஒரு தொழிலின் முடிவை உணர்த்தாமல் நிற்கும் வினைச் சொற்கள் பெயரெச்சமென்றும் வினையெச்சமென்றும் கூறப்படும். (எச்சம் = முடிவு பெறாது எஞ்சி நிற்பது).

நடந்த சுந்தரேசன், படிக்கின்ற சுந்தரி, என்ற வாக்கியங் களில், நடந்த படிக்கின்ற என்ற வினைச்சொற்கள் காரியமுடிவைக் குறியாமல் முறையே சுந்தரேசன் சுந்தரி என்ற பெயர்ச் சொற்களைத் தழுவி நிற்கின்றன. இவை (நடந்த, படிக்கின்ற என்பன) வினைச் சொற்களாக இருந்தும், பெயர்ச்சொற்களைத் தழுவியிருப்பதால் பெயரெச்சங்கள் எனப்பட்டன.

சுந்தரேசன் நடந்து களைத்தான். சுந்தரி படித்துக் களித்தாள் என்ற வாக்கியங்களில், நடந்து படித்து என்ற வினைச்சொற்கள், அத்தொழில்களின் முடிவைக் குறியாமல், களைத்தான் களித்தாள் என்ற வினைமுற்றுக்களைக்கொண்டு முடிந்தன.

வினையெச்சமும் பெயரெச்சமும் திணை பால் இடம் என்றவற்றைக் குறியா.

சில வினைமுற்றுக்கள் இருதிணையில் ஒன்றையும், ஐம்பாலில் ஒருபாலையும், மூவிடத்தில் ஓரிடத்தையும் காட்டி நிற்கும். நடந்தான் என்னும் வினைமுற்று னகர ஈற்றினால் திணையில் உயர்திணையையும், பாலில் ஆண்பாலையும், இடத்தில் படர்க்கை யையும் காட்டிற்று.

சில வினைமுற்றுக்கள் இருதிணைக்கும் ஐம்பாலுக்கும் மூவிடத்துக்கும் பொதுவாக வரும். நான் நடந்தேன் என்று ஒரு மனுஷனும் ஒரு மனுஷியும், பேசுகின்ற ஒரு கிளியும், சொல்லலாம். ஆகையால் அந்தச் சொற்றொடர் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாயிற்று. அவ்வாறே ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாயிற்று. அவ்வாறே ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் ஒன்றன்பாலுக்கும் பொதுவாயிற்று.

நடந்த படிக்கின்ற முதலிய பெயரெச்சச்சொற்களும், நடந்து படித்து முதலிய வினையெச்சச்சொற்களும், நான் வாழ்க நீ வாழ்க அவன் வாழ்க முதலிய வியங்கோள் வினைமுற்றுச் சொற்களும், இருதிணைக்கும் ஐம்பாலுக்கும் மூவிடத்துக்கும் பொதுவாக வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமுமாகிய சொற்களில் சில தன்வினையில் வரும், சில பிறவினையில் வரும், சில இருவினைப்பொதுவாக வரும்.

தன்வினையாவது, ஒருதொழிலைத் தான் செய்ததாகக் காட்டும் வினை. நடந்தான் என்பது நடத்தலாகிய தொழிலை ஒருவன் செய்தான் என்று விளக்குகின்றது.

பிறவினையாவது, ஒருவன் வேறொருவனைக்கொண்டு செய் வித்ததாகக் காட்டும் வினை. நடத்தினான் என்றால் தான் நடக்க வில்லை, வேறொருவனை நடக்கச் செய்தான், என்று தெரிகிறது.

நடந்தான், நடந்த, நடந்து, என்றாற் போல்வன தன்வினை. நடத்தினான், நடத்திய, நடத்தி, என்றாற் போல்வன பிறவினை.

வெளுத்தான் என்பது தான் வெளிறினான் என்றும், வேட்டியை வெளிறச்செய்தான் என்றும், பொருள்படும். தான் வெளிறினான் என்றால் தன்வினையாகும். வெளிறச்செய்தான் என்றால் பிறவினையாகும்.

வினைச்சொற்கள் சில உடன்பாட்டு வினையென்றும், சில எதிர்மறை வினையென்றும், இருவகைப்படும். நடந்தான் என்பது உடன்பாட்டுவினை. நடந்திலன் என்பது எதிர்மறைவினை.

இவற்றைப்பற்றிய சூத்திரம் : -

**௲௰௪. அவைதாம்**

முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்.

இதன் பொருள் :

அவைதாம் = மேலேகூறிய வினைச்சொற்கள்

முற்றும், பெயர் வினை எச்சமும் ஆகி = வினை முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமுமாகிய பிரிவுகளை யுடையனவாய் ஒன்றற் குரியவும் = திணை பால் இடம் என்பவற்றில் ஒன்றற் குரியனவும் பொதுவும் ஆகும் = பலவற்றிற்குப் பொதுவுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினையியல்

வினைமுற்று (ப. 379 - 391)

இனி, வினைமுற்றின் இலக்கணங்களைப் பதினாறுவகையாக சூத்திரங்களிற் கூறியவாறு இங்கே விரித்துரைப்பாம்.

இவை 1. வினைமுற்றின் தன்மை. 2. தெரிநிலைவினைமுற்று விகற்பம். 3. ஆண்பாற்படர்க்கை வினைமுற்று. 4. பெண்பாற் படர்க்கை வினைமுற்று. 5. பலர்பாற் படர்க்கை வினைமுற்று. 6. ஒன்றன்பாற்படர்க்கை வினைமுற்று. 7. பலவின்பாற் படர்க்கை வினைமுற்று. 8. இருதிணைக்கும் பொதுவான வினைமுற்று பெயரெச்சம் வினையெச்சம். 9. தன்மை ஒருமை வினைமுற்று. 10.தன்மைப் பன்மை வினைமுற்று. 11. வினையுடனும் முடியும் தன்மை வினைமுற்று. 12. உளப்பாட்டுப்பன்மை முன்னிலை. 13. முன்னிலையொருமை வினைமுற்று. 14. முன்னிலைப்பன்மை வினைமுற்று. 15. வியங் கோள் வினைமுற்று. 16. வேறு, இல்லை, உண்டு, என்பன, ஆகப் பதினாறு வகை.

1. முற்றுவினை இத்தன்மையை உடையதென்பது :

எல்லா வினைச்சொற்களுக்கும் பொதுவாகவுள்ள செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்ற ஆறையும் உடையதாய், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறையும் உணர்த்தும் பெயர்ச்சொற்களுக்குப் பயனிலையாய், தானே தொழில் முடிவையுணர்த்துவதாய் வருவன, வினை முற்று எனப்படும்.

குதிரை பாய்ந்தது. பாய்ந்தது என்னும் வினைமுற்றுச் சொல் குதிரை என்னும் பொருட்பெயர்ச் சொல்லுக்குப் பயனிலையாய்த் தொழின் முடிவை உணர்த்தியது.

இந்த வினைமுற்று 375 - 6 பக்கங்களிற் கூறியபடி, தெரிநிலை வினைமுற்று குறிப்பு வினைமுற்று என்று இருவகைப்படும்.

இதற்குச் சூத்திரம் : -

**கூ௰௫.** பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரல தேற்பில முற்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:

பொது இயல்பு ஆறையும் தோற்றி = பலவகை வினைகளுக்கும் பொதுவாகிய செய்பவன் முதலிய ஆறையும் தோன்றச் செய்து

பொருட்பெயர் முதல் = பொருட்பெயர் முதலிய

அறுபெயர் அலது ஏற்பில = ஆறுவகைப் பெயரல்லாத மற்றொன் றையும் ஏற்காதன

முற்று = தெரிநிலைவினையும் குறிப்புவினையுமாகிய வினைமுற் றுக்களாகும்.

2. தெரிநிலைவினைமுற்றுக்களின் விகற்பங்கள் (பேதங்கள்).

ஆண் பெண் பலர் ஒன்று பல என்னும் ஐந்து பால்களிலும் வரும் படர்க்கைச் சொற்களை, இறந்தகாலம் நிகழ்காலம் எதிர் காலம் என்னும் மூன்று காலங்களிலும் தனித்தனியாகக் கூட்டவரும் படர்க்கைத் தெரிநிலைவினைமுற்றுப் பதினைந்தும் ஒருவிகற்ப மாகும்.

இதற்கு உதாரணம்:

| படர்க்கை | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| ஆண்பால். | நடந்தான் | நடக்கின்றான் | நடப்பான் |
| பெண்பால். | நடந்தாள் | நடக்கின்றாள் | நடப்பாள் |
| பலர்பால். | நடத்தார் | நடக்கின்றார் | நடப்பார் |
| ஒன்றன்பால். | நடந்தது | நடக்கின்றது | நடப்பது |
| பலவின்பால். | நடந்தன | நடக்கின்றன | நடப்பன |

தன்மை ஒருமையை மூன்று காலத்திலும், தன்மைப் பன்மையை மூன்று காலத்திலும் கூட்ட, தன்மைத் தெரிநிலைவினை முற்று ஆறும் வேறொருவிகற்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு உதாரணம் :

| முன்னிலை. | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| ஒருமை. | நடந்தாய் | நடக்கின்றாய் | நடப்பாய் |
| பன்மை. | நடந்தீர் | நடக்கின்றீர் | நடப்பீர் |

முன்னிலை ஒருமையை மூன்று காலத்திலும், முன்னிலைப் பன்மையை மூன்றுகாலத்திலும், கூட்ட முன்னிலைத் தெரிநிலை வினைமுற்று ஆறும் வேறொரு விகற்பமாகும்.

இதற்கு உதாரணம் :

| தன்மை. | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| ஒருமை. | நடந்தேன் | நடக்கின்றேன் | நடப்பேன் |
| பன்மை. | நடந்தோம் | நடக்கின்றேம் | நடப்பேம் |

இந்த மூவகைத் தெரிநிலைவினைமுற்றும் சேர்ந்து இருபத்தேழு தெரிநிலைவினை முற்றாயின.

இதற்குச் சூத்திரம் : -

கூ௰கூ. **ஒருவன்முத லைந்தையும் படர்க்கை யிடத்தும்**
**ஒருமைப் பன்மையைத் தன்மை முன்னிலையினு**
**முக்கா லத்தினு முரண முறையே**
**மூவைந் திருமூன் றாறாம் முற்று**
**வினைப்பத மொன்றே மூவொன் பானாம்.**

இதன் பொருள் :

ஒருவன் முதல் ஐந்தையும் படர்க்கை இடத்தும் = ஆண்பால் முதலிய ஐந்து பால்களின் வினைமுற்றுக்களைப் படர்க்கையிடத்திலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமை பன்மையைத் தன்மை முன்னிலையினும் = ஒருமை வினைமுற்றையும் பன்மைவினைமுற்றையும் தன்மையிடத்திலும் முன்னிலையிடத்திலும் வைத்து,

முக்காலத்திலும் முரண = இறந்தகாலம் முதலிய மூன்று காலங்களிலும் மாற,

முறையே மூவைந்து = முறையாக படர்க்கை வினைமுற்றுக்கள் பதினைந்தும்,

இரு மூன்று = தன்மை வினைமுற்றுக்கள் ஆறும்,

ஆறு ஆய் = முன்னிலை வினைமுற்றுக்கள் ஆறும் ஆகி,

முற்று வினைப்பதம் ஒன்றே மூவொன்பான் ஆம் = தெரிநிலை வினைமுற்றுப் பதம் ஒன்று இருபத்தேழ் (மூ ஒன்பது) ஆகும்.

இனி, மேலே கூறிய வினைமுற்றுக்களின் விகுதிகள் கூறப்படும்.

3 (ப. 379). ஆண்பாற் படர்க்கை வினைமுற்று.

உயர்திணை ஆண்பால் வினைமுற்று விகுதிகள் அன், ஆன், என்ற இரண்டுமாம். உம் என்னும் விகுதியும் வரும். உ-ம். நடந்தனன், நடந்தான்.

இதற்குச் சூத்திரம் :-

**கூயஎ. அன் ஆ னிறுமொழி யாண்பாற் படர்க்கை.**

இதன் பொருள்:

அன் ஆன் இறுமொழி = அன், ஆன் என்னும் விகுதிகளையுடைய வினைச்சொற்கள்

ஆண்பாற் படர்க்கை = உயர்திணை ஆண்பாற் படர்க்கை வினைமுற்றாம்.

4. (ப. 379). உயர்திணைப் பெண்பால் வினைமுற்று விகுதிகள்.

அள், ஆள் என்னும் இரண்டும் உயர்திணைப் பெண்பாற் படர்க்கை வினைமுற்று விகுதிகளாம். உ-ம். வந்தனள், வந்தாள்.

இதற்குச் சூத்திரம் :-

**கூயஅ . அள்ளா ளிறுமொழி பெண்பாற் படர்க்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள் :

அள் ஆள் இறுமொழி = அள், ஆள் என்னும் விகுதிகளையுடைய வினைச்சொற்கள்

பெண்பாற் படர்க்கை = பெண்பாற் படர்க்கை வினைமுற்றுக்களாம்.

5 (ப. 379). உயர்திணைப் பலர்பாற் படர்க்கை வினைமுற்று.

அர், ஆர், ப, மார் என்னும் நான்கும் உயர்திணைப்பலர்பாற் படர்க்கை வினைமுற்று விகுதிகளாம். உ-ம். சென்றனர், சென்றார், கூறும் (கூறுவர்), கொண்மார் (கொள்வார்).

இதற்குச் சூத்திரம் : -

௩௯௪ . அர் ஆர் பவ்வூ ரகரமா ரீற்ற
பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே.

இதன் பொருள் :

அர் ஆர் ப ஊர் அகரம் மார் ஈற்ற = அர், ஆர், என்பனவும், ப, மார் என்பனவுமாகிய விகுதிகளையுடைய வினைச்சொற்கள்

பல்லோர் படர்க்கை = உயர்திணைப் பலர்பாற் படர்க்கை வினைமுற்றுக்களாம்.

மார் வினையொடும் முடிமே = மார் என்ற ஈறு பெயரோடு முடிவதேயன்றி வினையோடும் முடியும்.

மார் என்ற விகுதி பெயரோடு வருவதற்கு உதாரணம்: குருமார், தேவிமார்.

6. (ப. 379). அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்று.

து, று என்னும் இரண்டும் தெரிநிலை ஒன்றன்பால் வினைமுற்றுக்களாம்.

து, று, டு என்னும் மூன்றும் ஒன்றன்பாற் படர்க்கை குறிப்பு வினைமுற்றுக்களாம்.

உதாரணம்: கூவினது, கூவிற்று — தெரிநிலை வினை முற்றுக்கள், சிறியது, அற்று (அத்தன்மையது), பொருட்டு — குறிப்பு வினை முற்றுக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம், -

**எு. துறுடுக் குற்றிய லுகர வீற்ற**
**ஒன்றன் படர்க்கை டுக் குறிப்பி னாகும்.**

இதன் பொருள் :

துறுடுக் குற்றியலுகர ஈற்ற = து, று, டு என்னும் மூன்றுவிகுதிகளையும் இறுதியிலுடைய குற்றிய லுகரஈற்று மொழிகள் ஒன்றன் படர்க்கை = ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்றும்
குறிப்பு முற்றுமாம்

டுக் குறிப்பின் ஆகும் = இவற்றுள் டு என்ற விகுதிகுறிப்பு வினை முற்றில் தான் வரும். (தெரிநிலை வினைமுற்றில்வராது).

7 (ப. 379). பலவின்பால் வினைமுற்று விகுதிகள்.

அ, ஆ என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியிலுள்ள வினைமுற்றுச் சொற்கள் பலவின்பால் வினைமுற்று விகுதிகளாம்.

ஆ என்பது எதிர்மறை விகுதியாகமாத்திரம் வரும். உ-ம். வந்தன — தெரிநிலைவினைமுற்று, குழையன் — குறிப்பு வினை முற்று, வரமாட்டா — ஆ எதிர்மறை விகுதி.

இதற்குச் சூத்திரம் : -

**எுக. அ ஆ ஈற்ற பலவின் படர்க்கை**
**ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும்.**

இதன் பொருள் :

அ ஆ ஈற்ற = அ, ஆ என்னும் விகுதிகளை இறுதியிலுடைய மொழிகள்

பலவின் படர்க்கை = பலவின்பாற் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றுமாம்.

ஆ எதிர் மறைக் கண்ணது ஆகும் = அவற்றுள் ஆகாரம் எதிர்மறை விதியாக மாத்திரம் வரும்.

8 (ப. 379). இருதிணைப் பொதுவினை.

கீழ்வரும் தன்மைத் தெரிநிலைவினை முற்றுக்களும், தன்மைக் குறிப்பு வினைமுற்றுக்களும், முன்னிலைத் தெரிநிலைவினை முற்றுக்களும், முன்னிலைக் குறிப்புவினை முற்றுக்களும், வியங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோள் தெரிநிலை வினைமுற்றுக்களும், வேறு இல்லை உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுக்களும், தன்மைப் பெயரெச்சங்களும், தன்மை வினையெச்சங்களும், உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாகவரும். இவற்றிற்கு உதாரணங்கள் :

நான் நடந்தேன் என்பது தன்மைத் தெரிநிலைவினை முற்றில் ஒருமையைக்காட்டும். யாம் நடந்தேம் என்பது தன்மைத் தெரி நிலைவினை முற்றில் பன்மையைக் காட்டும். நான் கரியன் என்பது தன்மைக் குறிப்புவினை முற்றில் ஒருமையைக் காட்டும். யாம் குழையினம் (குண்டலத்தையுடையேம்) என்பது தன்மைக் குறிப்பு வினைமுற்றில் பன்மையைக் காட்டும்.

நீ நடந்தாய் என்பது முன்னிலைத் தெரிநிலை வினைமுற்றில் ஒருமையைக்காட்டும். நீர் நடந்தீர் என்பது முன்னிலைத் தெரிநிலை வினைமுற்றில் பன்மையைக்காட்டும். நீ கரியை என்பது முன்னி லைக் குறிப்பு வினைமுற்றில் ஒருமையைக் காட்டும். நீர் கரியீர் என்பது முன்னிலைக் குறிப்பு வினைமுற்றில் பன்மையைக் காட்டும்.

நீ வாழ்க என்பது வியங்கோள் தெரிநிலை வினைமுற்றில் ஒருமையைக் காட்டும். நீர் வாழ்க என்பது வியங்கோள் தெரிநிலை வினைமுற்றில் பன்மையைக்காட்டும்.

அவன்வேறு, அவன் இல்லை, அவன் உண்டு, என்ற மூன்றும் குறிப்பு வினையில் ஒருமையைக் காட்டும். அவர் வேறு, அவர் இல்லை, அவர் உண்டு, என்ற மூன்றும் குறிப்பு வினையில் பன்மையைக் காட்டும்.

நடந்த உண்ட என்ற தெரிநிலை வினைப்பெயரெச்சங்கள் ஒருமையையும் பன்மையையும் காட்டும்.

இருதிணைப் பொதுவினையைப் பற்றிய சூத்திரம் :-

**௩௭௨. தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை**
**உண்டீ ரெச்ச மிருதிணைப் பொதுவினை.**

இதன்பொருள்:

தன்மை முன்னிலை வியங்கோள் = தன்மை வினைக்குறிப்பு முற்றுக் களும், முன்னிலை வினைக்குறிப்பு முற்றுக்களும், வியங்கோள் வினைமுற்றுக்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு இல்லை உண்டு = வேறு இல்லை உண்டு என்ற மூன்று குறிப்பு வினைமுற்றுக்களும்,

ஈர் எச்சம் = பெயரெச்ச வினைக் குறிப்புகளும் வினையெச்ச வினைக் குறிப்புகளும்,

இருதிணைப் பொதுவினை = உயர்திணைணக்கும் அஃறிணைக்கும் பொதுவான வினைகளாம்.

இனி, தன்மை வினைமுற்று விகுதிகளையும், முன்னிலை வினைமுற்று விகுதிகளையும், வியங்கோள் விகுதிகளையும், வேறு இல்லை உண்டு என்னும் குறிப்புவினைச் சொற்களையும், பெய ரெச்சவிகுதிகளையும், வினையெச்ச விகுதிகளையும் கூறுவாம்.

தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகளுக்கு உதாரணம்:

உண்ணுகின்றனன் (உண் + உ + கின்று + அன் + அன்). உண் பகுதி, இரண்டாம் அன் விகுதி ; உவும் முதலாம் அன்னும் சாரியை; கின்று இடைநிலை. நான் உண்ணுகின்றனன் என்பதில் அன் தன்மை ஒருமையைக் காட்டும். (அவன் நடந்தனன் என்பதில், அன் விகுதி படர்க்கை ஒருமையைக் காட்டும்). கின்று என்ற இடைநிலை நிகழ்காலத்தைக் காட்டும்.

உண்ணுகின்றனம் தன்மைப் பன்மையைக் காட்டும்.

நீ உண்ணுகின்றாய், முன்னிலை ஒருமை.

நீர் உண்டனிர், அல்லது உண்டீர், முன்னிலைப் பன்மை.

வியங்கோள் விகுதிகளுக்கு உதாரணம் : நீ வாழ்க,

நீர்வாழியர்.

வேறு இல்லை உண்டு என்பவற்றிற்கு உதாரணம்: அவன் வேறு, அவன் இல்லை, அவன் உண்டு. அவர் வேறு, அவர் இல்லை, அவர் உண்டு.

பெயரெச்ச விகுதிகளுக்கு உதாரணம்: உண்கின்ற, உண்ட, உண்ணும், (இராமன்).

வினையெச்ச விகுதிகளுக்கு உதாரணம்: உண்டு (வந்தான்), ஆடி (ஒழிந்தான்), வாடித் (திரிந்தான்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 (ப. 379). தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள்

தன்மை ஒருமை என்பது நான் யான் என்ற சொற்களாற் குறிக்கப்பட்டவனது தனிநிலை.

இந்தத் தன்மை ஒருமை நிலைக்குரிய வினைமுற்று விகுதிகள் கு டு து று அல் அன் என் ஏன் என்ற எட்டே.

இவற்றில், அல் அன் என் ஏன் என்றவை தெரிநிலைவினை முற்றுக்கும் குறிப்புவினை முற்றுக்கும் வரும். கு டு து று என்ற விகுதிகள் குறிப்புவினை முற்றுக்கு வாரா.

அல் அன் என் ஏன் என்ற தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகளுக்கு உதாரணம்: செய்வல் (செய்வேன்), செய்வன் (செய்வேன்), உண்பென் (உண்பேன்), உண்பேன். இவை வருங்காலத்தைக் குறிக்கும்.

கு டு து று என்ற விகுதிகளுக்கு உதாரணம் : உண்டு (உண்பேன், எதிர்காலம்); உண்டு (உண்டேன், இறந்தகாலம்); வந்து (வந்தேன், இறந்தகாலம்); வருது (வருவேன், எதிர்காலம்); சென்று (சென்றேன, இறந்தகாலம்); சேறு (செல்வேன், எதிர்காலம்)

இதற்குச் சூத்திரம் : -

எ௰௫. குடுதுறு வென்னுங் குன்றிய லுகரமோ
டல்லன் னென்னே னாகு மீற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை.

இதன் பொருள் :

கு டு து று என்னும் குன்றிய லுகாரமோடு = கு டு து று என்னும் விகுதிகளை இறுதியிலுள்ள சொற்களோடு

அல் அன் என் ஏன் ஆகும் ஈற்ற = அல் அன் என் ஏன் என்னும் விகுதிகளை இறுதியிலுள்ள முற்றுவினைச் சொற்கள்

இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை = இருதிணை யிடத்தனவாகிய ஒருவன் ஒருத்தி ஒன்று என்னும் மூன்று பால்களுக்கும் பொதுவாகிய ஒருமைத் தன்மைத் தெரிநிலை வினை முற்றும் குறிப்பு வினை முற்றுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*10 (ப. 379).* தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள்.

கும் டும் தும் றும் அம் ஆம் எம் ஏம் ஓம் என்பவைகள் தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகளாம்.

தன்மைப் பன்மையாவது: தன்னையும் தன்னோடு சேர்ந்தவர்களையும் தானாகப் பாவித்து உளப்படுத்தி (தனக்குள்ளாகிக்) கூறுவது.

முன்னிலையாரையும் படர்க்கையாரையும் தன்னுடன் உளப்படுத்திக் கூறுமிடத்தில் கும் டும் தும் றும் என்ற விகுதிகளைப்பெற்ற சொற்களாற் கூறவேண்டும்.

உ-ம். நீயும் அவனும் யானும் உண்கும் (உண்பேம்), உண்டும் (உண்டேம்), வந்தும் (வந்தேம்), வருதும் (வருவேம்), சென்றும் (சென்றேம்), சேறும் (செல்வேம்). செல் + து + ம் = செறும் = சேறும்.

முன்னிலையாரை மாத்திரம் தன்னுடன் உளப்படுத்திக் கூறுமிடத்தில், அம் ஆம் என்ற விகுதிகளைப்பெற்ற சொற்களாற் கூற வேண்டும்.

உ-ம். நீயும் யானும் வந்தனம் (வந்தேம்), நீயும் யானும் வருகின்றனம், நீயும் யானும் வருவம், நீயும் யானும் வந்தாம்.

படர்க்கையாரை மாத்திரம் தன்னோடு உளப்படுத்திக் கூறுமிடத்தில், எம் ஏம் ஓம் என்ற விகுதிபெற்ற சொற்களாற் கூறவேண்டும்.

உ-ம். அவனும் யானும் வருகின்றேம், அவனும் யானும் வருவேம்.

இதற்குச் சூத்திரம் : -

ஙயச. அம் ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம் ஏம் ஓமிவை படர்க்கை யாரையும்
உம்மூர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை.

இதன் பொருள் :

அம் ஆம் என்பன முன்னிலையாரையும் = தன்னிலையில் நிற்ப தன்றி அம் ஆம் என்ற விகுதிகள் பெற்ற சொற்கள் முன்னிலையிடத்தாரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் ஏம் ஓம் இவை படர்க்கையாரையும் = இம் மூன்று விகுதிச் சொற்களும் படர்க்கையிடத்தாரையும்

உம் ஊர் க ட த ற இருபாலாரையும் = உம் என்பது ஏறின க் ட் த் ற் என்ற மெய்யெழுத்துக்கள் இரண்டுவித இடத்தாரையும். அதாவது, கும் (க் + உம்), டும் (ட் + உம்), தும் (த் + உம்), றும் (ற் + உம்), விகுதிகளைப் பெற்ற சொற்கள் முன்னிலை படர்க்கை ஆகிய இரண்டிடத்தாரையும்

(சூத்திரத்தில் க ட த ற என்ற உயிர் மெய்கள் க் ட் த் ற் என்ற மெய்களுக்காக நிற்கின்றன).

தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை = தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப்பன்மை வினைமுற்றும் குறிப்புவினைமுற்றுமாம்.

*11 (ப. 379).* வினையுடன் முடியும் தன்மைவினை முற்றுக்கள்.

இவை வினைச்சொல்லைப் பயனிலையாகப் பெறும் நான் யான் என்ற தன்மைச்சொற்களுக்குரிய வினைமுற்றுக்களாம்.

இப்படியான வினைமுற்றுக்களுக்கு உதாரணம்: உண்கு (உண்பேனாகிய நான்) வந்தேன். இதில் உண்கு என்ற தன்மை ஒருமைச்சொல் வந்தேன் என்ற வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.

உண்கும் (உண்பேமாகிய யாம்) வந்தேம். இதில் உண்கும் என்ற தன்மைப் பன்மைச்சொல் வந்தேம் என்ற வினைமுற்றைக் கொண்டது.

இதற்குச் சூத்திரம் : -

௩௨௫. செய்கெ னொருமையுஞ் செய்குமென் பன்மையும்
வினையோடு முடியினும் விளம்பிய முற்றே.

இதன் பொருள் :

செய்கு என் ஒருமையும் = செய்கு என்ற வாய்பாட்டுத் தன்மை ஒருமை வினைமுற்றும்

செய்கும் என் பன்மையும் = செய்கும் என்ற வாய்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையொடுமுடியினும் = வினைச்சொல்லுடன் முடிந்தாலும்
விளம்பிய முற்று = முன்சொல்லிய வினைமுற்றுக்களாம்.

*12 (ப. 379).* உளப்பாட்டுப் பன்மை முன்னிலை.

தன்மையோடு கூடிய முன்னிலை படர்க்கை இடங்களைத் தன்மையோடு சேர்த்துக் கூறுவதுபோல (பக்கம் கக) முன்னிலையோடு கூடிய படர்க்கையிடத்தை முன்னிலையோடு சேர்த்துக் கூறலாம்.

உ-ம். நீயும் அவனும் உண்டனிர். நீயும் அவனும் உண்டீர். நீயும் அவனும் உண்மின்.

நீயும் அவனும் குழையினிர். நீயும் அவனும் குழையீர்.

இதற்குச் சூத்திரம் :-

**எ௰ச. முன்னிலை கூடிய படர்க்கையு முன்னிலை.**

இதன்பொருள்:

முன்னிலை கூடிய படர்க்கையும் = முன்னிலையிடத்தோடு கூடிய படர்க்கையும்.
முன்னிலை = முன்னிலையாகக் கூறப்படும்.

*13 (ப. 379).* முன்னிலை ஒருமை வினைமுற்று.

ஐ ஆய் இ ஏ அல் ஆல் ஏல் என்பன முன்னிலை ஏவல்வினை முற்றுக்களாம்.

இர் ஈர் உம் மின் என்பன முன்னிலைப்பன்மை விகுதிகளாம்.

இதற்குச் சூத்திரம்:-

**எ௰எ. ஐ ஆய் இகர வீற்ற மூன்றும்**
**ஏவலின் வரூஉ மெல்லா வீற்றவும்**
**முப்பா லொருமை முன்னிலை மொழியே.**

இதன் பொருள்:

ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும் = ஐ ஆய் இ என்னும் மூன்று விகுதிகளையும் இறுதியிலே யுள்ள முற்றுவினைச் சொற்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவலின் வருஉம் எல்லா ஈற்றவும் = ஏவற்பொருளில் வரும் எல்லா ஈற்று முற்றுவினைச் சொற்களும்,

முப்பாலொருமை முன்னிலைமொழி = இருதிணையிலுமுள்ள ஒருவன் ஒருத்தி ஒன்று என்னும் முக்கூற்றொருமைகளுக்கும் பொது வாகிய முன்னிலை வினைமுற்றுக்களாம்.

ஆய் விகுதி குறைந்த மெய்யீற்று ஏவல்வினை முற்றுக்கள் சில ஈ ஏ என்னும் முன்னிலையசையிடைச்சொற்களை இறுதியிற் பெற்றுவருங்கால் அவ்விடத்திற்குரிய யாதானுமொரு மெய்யில் ஏறிவரும்.

ஈ என்ற இறுதிபெற்ற ஏவல் வினைமுற்றுக்கு உதார ணம்: சென்றீ (செல்லுங்கள்). சென்றாய் என்ற சொல் ஆய் விகுதி குறைந்து செல் என்றாகி, முன்னிலையசை இடைச்சொல்லாகிய ஈகா ரம் அவ்விடத்திற்குரியதாகிய றகரமெய்யில் ஏறிவர செல்றீ என்றாகி, லகரம் னகரமாகத் திரிந்து சென்றீ என்றாகியது.

ஏ என்ற இறுதிபெற்ற ஏவல்வினைமுற்றுக்கு உதாரணம்: நின்மே. நின்றாய் என்ற சொல்லில் ஆய் விகுதி குறைந்து, நில் என் றாகி, முன்னிலை அசையிடை ஏகாரம் மகரமெய்யில் ஏறிவர, நில்மே என்றாகி, லகரம் னகரமாகத் திரிந்து நின்மே என்று வந்தது.

இதற்குச் சூத்திரம் :-

௭௰அ. முன்னிலை முன்ன ரீயு மேயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

இதன் பொருள் :

முன்னிலை முன்னர் = முன்னிலையேவல் ஒருமை முற்றிற்கு முன்

ஈயும் ஏயும் = ஈகாரமும் ஏகாரமும்

அ நிலை மரபின் = அவ்விடத்து நிற்குந் தன்மையுடைய

மெய்யூர்ந்துவரும் = யாதேனுமொரு மெய்யின்மேல் ஏறிவரும்.

*14 (ப. 379).* முன்னிலைப்பன்மை வினைமுற்று.

இர் ஈர் என்ற இரண்டு விகுதிகளும் உயர்திணை அஃறிணை யென்னும் இருதிணைகளிலும் முன்னிலைப் பன்மையில் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவலின் வரூஉம் எல்லா ஈற்றவும் = ஏவற்பொருளில் வரும் எல்லா ஈற்று முற்றுவினைச் சொற்களும்,

முப்பாலொருமை முன்னிலைமொழி = இருதிணையிலுமுள்ள ஒருவன் ஒருத்தி ஒன்று என்னும் முக்கூற்றொருமைகளுக்கும் பொது வாகிய முன்னிலை வினைமுற்றுக்களாம்.

ஆய் விகுதி குறைந்த மெய்யீற்று ஏவல்வினை முற்றுக்கள் சில ஈ ஏ என்னும் முன்னிலையசையிடைச்சொற்களை இறுதியிற் பெற்றுவருங்கால் அவ்விடத்திற்குரிய யாதானுமொரு மெய்யில் ஏறிவரும்.

ஈ என்ற இறுதிபெற்ற ஏவல் வினைமுற்றுக்கு உதார ணம்: சென்றீ (செல்லுங்கள்). சென்றாய் என்ற சொல் ஆய் விகுதி குறைந்து செல் என்றாகி, முன்னிலையசை இடைச்சொல்லாகிய ஈகா ரம் அவ்விடத்திற்குரியதாகிய றகரமெய்யில் ஏறிவர செல்றீ என்றாகி, லகரம் னகரமாகத் திரிந்து சென்றீ என்றாகியது.

ஏ என்ற இறுதிபெற்ற ஏவல்வினைமுற்றுக்கு உதாரணம்: நின்மே. நின்றாய் என்ற சொல்லில் ஆய் விகுதி குறைந்து, நில் என் றாகி, முன்னிலை அசையிடை ஏகாரம் மகரமெய்யில் ஏறிவர, நில்மே என்றாகி, லகரம் னகரமாகத் திரிந்து நின்மே என்று வந்தது.

இதற்குச் சூத்திரம் : -

எ௰அ. முன்னிலை முன்ன ரீயு மேயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

இதன் பொருள் :

முன்னிலை முன்னர் = முன்னிலையேவல் ஒருமை முற்றிற்கு முன்

ஈயும் ஏயும் = ஈகாரமும் ஏகாரமும்

அ நிலை மரபின் = அவ்விடத்து நிற்குந் தன்மையுடைய

மெய்யூர்ந்துவரும் = யாதேனுமொரு மெய்யின்மேல் ஏறிவரும்.

*14 (ப. 379).* முன்னிலைப்பன்மை வினைமுற்று.

இர் ஈர் என்ற இரண்டு விகுதிகளும் உயர்திணை அஃறிணை யென்னும் இருதிணைகளிலும் முன்னிலைப் பன்மையில் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் கண்டனிர், நீர் கண்டீர் என்று இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்றிலும் — நீர் காண்கின்றனிர், நீர் காண்கின்றீர் என்று நிகழ்காலத் தெரிநிலைவினைமுற்றிலும் — நீர் காண்பிர், நீர் காண்பீர் என்று எதிர்காலத் தெரிநிலை வினைமுற்றிலும் — நீர் குழையினிர், நீர் குழையீர் என்று குறிப்புவினை முற்றிலும் — வரும்.

பெரும்பான்மை மின் என்ற விகுதியும், சிறுபான்மை ஈர் உம் என்ற விகுதிகளும், முன்னிலைப் பன்மை ஏவலில் வரும்.

உ-ம். உண்மின், உண்ணீர், உண்ணும், என ஏவல்வினை முற்று வந்தன.

இதற்குச் சூத்திரம் : -

**எ௰௬. இர் ஈர் ஈற்ற இரண்டு மிருதிணைப்**
**பன்மை முன்னிலை மின்னவற் றேவல்.**

இதன் பொருள் :

இர் ஈர் ஈற்ற இரண்டும் = இர் ஈர் என்னும் விகுதிகளை இறுதியிலேயுடைய மொழிகள்

இருதிணைப் பன்மை முன்னிலை = உயர்திணை அஃறிணை யென்னும் இருதிணைகளுக்கும் பொதுவாகிய முன்னிலைப் பன்மைவினை முற்றும் குறிப்புவினை முற்றுமாம்.

மின் அவற்று ஏவல் = மின் என்ற விகுதியைஇறுதியிலுடைய மொழிகள் முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்றாம்

இனி, திணை பால்களுக்குப் பொதுவான வினைகளைக் கூறுவாம்.

தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, வேறு இல்லை எண்டு என்னும் குறிப்பு வினை முற்றுச்சொற்கள், பெயரெச்சம், வினையெச்சம் என்பன, இரண்டு திணைகளுக்கும் ஐந்து பால்களுக்கும் பொதுவாக வழங்கலா மாதலால், பொதுவினைகளாம்.

இவற்றுள் தன்மைவினைமுற்றைப்பற்றி 386 - 388 பக்கங் களிலும், முன்னிலை வினைமுற்றைப்பற்றி 388 - 392 பக்கங்களிலும், கூறினாம். ஏனையவற்றை இனி விளக்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 (ப. 379). வியங்கோள் வினைமுற்றுக்கள்.

இருதிணை ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவாகவரும் ஏவல் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று என்று சொல்லப்படும்.

உ-ம். தம்பீ வருவாய், தம்பி மீர் வருவீர், தம்பீவருக, பொன்னன்வருக, பொன்னிவருக, புலவர்வருக, மாடுவருக, மாடுகள் வருக, நான் கற்க, நாம் கற்க, நீ கற்க, நீர் கற்க.

வருவாய், வரவேண்டும், என்னுஞ் சொற்கள் ஏவற் பொருளை உணர்த்துவதுபோல, வருக என்பதும் ஏவற்பொருளை உணர்த்தும். இரண்டும் ஏவற்பொருளை உணர்த்தினாலும் தம் முட்பேதமுண்டு. வருவாய் என்பது முன்னிலை ஒருமை ஏவலில் மாத்திரம் வரும்.

வருக என்பது மூவிடங்களுக்கும் ஐம்பாலுக்கும் பொதுவாக வரும்.

வியங்கோள் வினைமுற்று விகுதிகளாவன :

க இய இயர் அ அல் தல் என்பன. உ-ம். க—செல்க. இய—உண்ணிய. இயர்—ஆடியர். அ—ஒங்க. அல்—எனல். தல்—மாசிலனாதல்.

வியங்கோள் வினைமுற்றின் பொருள்கள்.

கட்டளை, பிரார்த்தனை, வாழ்த்து, சபித்தல் என்பன. உ-ம். கட்டளை—அவ்வேலையைச் செய்க. பிரார்த்தனை—தேவ, நின் கடைக்கண்ணருள் தருக. வாழ்த்து—அறங்கள் ஓங்க. சபித்தல்—அத்தீயோன் கெடுக.

இதற்குச் சூத்திரம் :-

அ௰. கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலு மிடம்பா லெங்கு மென்ப.

இதன் பொருள்:

கய ஒடு ர ஒற்று ஈற்ற வியங்கோள் = கய என்ற இரண்டு உயிர்மெய் களுடன் ர் என்னும் மெய்மையும் இறுதியிலுடைய வியங்கோள் வினைமுற்றுக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பால் எங்கும் இயலுமென்ப—மூன்றிடங்களிலும் ஐம்பால் களிலும் செல்லுமென்று கூறுவர் புலவர்.

16 (ப. 379). வேறு இல்லை உண்டு.

வேறு இல்லை உண்டு என்னும் மூன்று குறிப்புவினை முற்றுச் சொற்களும் இருதிணை ஐம்பால் மூவிடங்கட்கும் பொது வாக வரும்.

வேறு என்னுஞ் சொல் யான் வேறு, யாம் வேறு எனத் தன்மையிலும் —நீ வேறு, நீர் வேறு என முன்னிலையிலும் —அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு என ஐம்பாற் படர்க்கையிலும்— வந்தமை காண்க.

இல்லை உண்டு என்பவற்றையும் இங்ஙனம் ஐம்பால் மூவிடங்களிலும் ஒட்டுக.

இதற்குச் சூத்திரம் :-

**அயக. வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன.**

இதன்பொருள்:

வேறு இல்லை உண்டு = இம்மூன்று குறிப்புவினை முற்றுச்சொற் களும்

ஐம்பான் மூ இடத்தன = இருதிணை ஐம்பான் மூவிடங்கட்கும் பொதுவாக வருவனவாம்.

இனி பெயரெச்சத்தைப்பற்றி இலக்கணங்கள் கூறப்படும்.
(முற்றொடர் ப.132, 377, 378).

பெயரெச்சம் (ப. 394 - 397).

பெயரெச்சமானது இத்தன்மையுடையதென்றும், செய்யும் என்ற பெயரெச்சத்திற்குள்ள சிறப்புவிதி யாதென்றும், கூறுவாம்.

பெயரெச்சம் இனைய என்பது.

பெயரெச்சமானது தெரிநிலை வினைப்பெயரெச்சம், குறிப்பு வினைப்பெயரெச்சம் என இரண்டு வகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினையியல்

தெரிநிலைவினைப் பெயரெச்சமானது காலத்தை வெளிப்படையாகக் காட்டி, திணை பால் இடங்களைக் காட்டா மல், பெயர்ச் சொல்லையேற்றுத், தொழில் முற்றுப்பெறாமல் நிற்கும் வினைச் சொல்லாம்.

உ-ம். உண்ட குதிரை, உண்ட = உண் ட் அ ட் என்ற இடை நிலையால் இறந்தகாலத்தை வெளிப்படையாகக் காட்டி, திணை பால் இடங்கள் தோற்றப்பெறாமல், குதிரை என்னும் பெயர்ச் சொல்லை ஏற்ற வாறு காண்க.

செய்த என்பதுபோன்ற பெயரெச்சங்கள் இறந்தகாலத்தைக் காட்டும், உ-ம். உண்ட, வெட்டிய, வாழ்ந்த.

செய்கின்ற என்பதுபோன்ற பெயரெச்சங்கள் நிகழ்காலத் தைக் காட்டும். உ-ம். உண்ணுகின்ற, வெட்டுகின்ற, வாழ்கின்ற.

செய்யும் என்பதுபோன்ற பெயரெச்சம் எதிர்காலத்தைக் காட்டும். உ-ம். உண்ணும், வெட்டும், வாழும்.

இந்தப்பெயரெச்சங்கள், செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செயப்படுபொருள் என்பவற்றை உணர்த்துஞ் சொற்களில் ஒன்றை, முடிக்குஞ்சொல்லாக, ஏற்றுவரும். உண்ட குதிரை எனக் கர்த்தாவையும், வெட்டிய வாள் எனக் கருவியையும், வாழ்ந்தவீடு என இடத்தையும், கண்டகாட்சி எனச் செயலையும், பிறந்த வருஷம் எனக் காலத்தையும், உண்டசோறு எனச் செயப்படுபொருளையும், முறையே உண்ட வெட்டிய முதலான பெயரெச்சங்கள் ஏற்றன.

உண்ணாத தின்னாத என்பன எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சம்.

குறிப்பு வினைப்பெயரெச்சமானது பெரும்பான்மையும் பெயர்ச்சொற்களிலிருந்து பிறந்து காலத்தைக் குறிப்பாகக் காட்டி, அகரவிகுதியால் முடிந்து பெயர்ச்சொற்களை ஏற்று வரும்.

சிறிய என்பது குறிப்புவினைப்பெயரெச்சம். இது சிறுமை என்னும் பண்புப் பெயரிலிருந்து பிறந்தது. காலம் வெளிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாயில்லை. அ என்ற விகுதிபெற்றது. குதிரை கழுதை பசு முதலி யவற்றில் ஒரு பெயர்ச்சொல்லை ஏற்கும். தண்மை கூர்மை முதலிய பெயர்களிலிருந்து தண்ணிய, கூரிய முதலாய குறிப்பு வினை யெச்சங்கள் பிறக்கும்.

எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சம் அன்மை, இன்மை என்னும் சொற்களைப் பகுதியாகக்கொண்டு பிறக்கும்.

உ-ம். அல்லாத, இல்லாத.

இதற்குச் சூத்திரம் :-

அ௭௨. செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

இதன் பொருள் :

செய்த செய்கின்ற செய்யும் என்பாட்டில் = இம்மூன்றுவகையான வாய்பாட்டுச் சொற்களில்

காலமும் செயலும் தோன்றி = இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலமும் தொழிலும் தோன்றி

பாலொடு செய்வதாதி அறுபொருட்பெயரும் = பாலும் செய்பவன் முதலிய அறுவகைப் பொருட்பெயர்களும்

எஞ்சநிற்பதுபெயரெச்சம் = ஒழியநிற்பது பெயரெச்சமாம்.

செய்யுமென் பெயரெச்சம்.

செய்யுமென் எச்சத்திற்கு எய்திய தன்மேற் சிறப்புவிதி:

முக்காலத் தெரிநிலைவினைப் பெயரெச்சங்களுள் செய்யு மென்வாய்பாட்டு எதிர்காலப் பெயரெச்சங்கள் ஏற்றப்பெற்றி ஈற்றயலெழுத்தாகிய உயிர்மெய் கெட்டுவரும்.

வாவும் புரவி (பாயும் குதிரை). வாவும் என்ற எதிர்காலப் பெயரெச்சத்தின் ஈற்றயலெழுத்தாகிய வு என்ற உயிர்மெய் கெட்டு, வாம்புரவி எனவழங்கும். போகும்பொழுது என்பது இப்படியே போம்பொழுது எனவரும்.

செய்யும் என்பதுபோன்ற பெயரெச்சங்கள் பாட்டிலே சில இடங்களில் இறுதியிலுள்ள உம் விகுதி உந்து எனத்திரிந்து வரு தலுமுண்டு. உ-ம். செய்யுந்து, பாயுந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினையியல்

செய்யும் என்பதுபோன்ற வினைமுற்றினது ஈற்றயலுயி ராவது உயிர்மெய்யாவது செய்யுளிற் சில இடங்களிற்கெடும்.

உ-ம். கலுழும் என்பது ஈற்றயலிலுள்ள உகர உயிர்கெட்டு கலுழ்ம் என்றாகும்.

வினையொடு முடியும் என்பது ஈற்றயலிலுள்ள யு என்ற உயிர்மெய் கெட்டு வினையொடு முடிம் என்றாயது.

போலும், மொழியும், உரையும் என்பனவும் இங்ஙனம் உயிரும் உயிர்மெய்யும் கெட்டு வழங்குதல் காண்க.

இதற்குச் சூத்திரம் :-

அ௰௩. செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளு ளும்முந் தாகலு முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே.

இதன்பொருள்:

செய்யும் என் எச்ச ஈற்று .. செய்யும் என்ற வாய்பாட்டு எச்சத்தின் இறுதியிலுள்ள

உயிர்மெய் சேறலும் = உயிர்மெய்யெழுத்துக் கெடுதலும்

செய்யுளுள் உம் உந்து ஆகலும் = செய்யுளிடத்து உம் விகுதி உந்து ஆகத் திரிதலும்

முற்றேல் = அது செய்யுமென் வாய்பாட்டு முற்றாயின்

உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உள = இறுதியிலுள்ள உயி ரெழுத்தும் உயிர்மெய்யெழுத்தும் கெடுதலுமுண்டு.

### வினையெச்சம்.

வினையெச்சம் நான்கு பிரிவுகளாகக் கூறப்படும். அவையாவன:

(க) வினையெச்சம் இனைய (இத்தன்மை உடையது) என்பது. (உ) முக்கால வினையெச்ச உதாரணங்கள். (௩) வினையெச்சங்கள் எவ்விதமாக முடியும். (௪) வினைமுதலுக்கு புறனடை.

வினையெச்சம் இனைய என்பது: இது தெரிநிலைவினை யெச்சம் குறிப்புவினையெச்சம் என இருவகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிநிலை வினையெச்சமாவது : காலத்தை வெளிப் படையாகக் காட்டி, திணைபால் இடங்களைக் காட்டாது, வினை யைக் கொண்டு முடியும் தொழில்முற்றாக வினைச்சொல்லாம்.

உ-ம். நடந்து வந்தான். யான் நடக்க அவனும் நடந்தான். நடந்தக்கால் கால் வருந்தும்.

வினையெச்சம், வினைமுற்றுச் சொல்லைக்கொண்டு முடியும். உ-ம். ஆடிப்பாடினான்.

வினையெச்சம், பெயரெச்சத்தைக் கொண்டு முடியும். உ-ம். ஆடிப் பாடிய மனிதன்

வினையெச்சம், வினையெச்சத்தைக் கொண்டு முடியும். உ-ம். பாம்பை அடித்துக் கொன்று புதைத்தான்.

வினையெச்சம், தொழிற் பெயரைக்கொண்டு முடியும். உ-ம். ஓடிவருதல்.

வினையெச்சம், வினையாலணையும் பெயரைக்கொண்டு முடியும். உ-ம். முயன்று படித்தவன் சித்திபெறுவான்.

(உ) முக்கால வினையெச்ச உதாரணங்கள் :

தெரிநிலை வினையெச்சமானது இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என்று மூன்று வகையாகும்.

இறந்தகால வினையெச்சம். உ-ம். நடந்து வந்தான். நாய் நக்குபு சென்றது (நக்குபு = நக்கி). பூனைபால் உண்ணா (உண்டு) களித்தது. படுமகன் படுக்கை காணுஉ (கண்டு) மகிழ்ந்தான். நடந்தெனக் (நடந்ததினால்) களைத்தான்.

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, என்னும் ஒருபொருட் சொற்கள் இறந்தகால வினையெச்ச வகைகளுக்கு உதாரணங்கள்.

நடந்து, இருந்து, ஆடி, ஓடி என்பவை செய்து என்ற வினையெச்சத்தைப் போல்வன.

நக்குபு, உண்குபு என்பவை செய்பு என்னும் வினையெச்சத்தைப்போல்வன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணா, நடவா, ஓடா என்பவை செய்யா என்னும் வினையெச்சத்தைப் போல்வன.

காணூஉ, நாணூஉ, சாரூஉ என்பவை செய்யூ என்னும் வினையெச்சத்தைப் போல்வன.

நடந்தென, உண்டென என்பவை செய்தென என்னும் வினையெச்சத்தைப் போல்வன.

செய என்பது நிகழ்கால வினையெச்சத்துக்கு உதாரணம்.

நடக்க, படிக்க, ஓட, பாட என்பவை செய என்னும் வினையெச்சத்தைப் போல்வன.

செயின், செய்யிய, செய்யியர், (செய்) வான் (முடிப்) பான், செய் பாக்கு என்பவை போன்றன எதிர்கால வினையெச்சத்துக்கு உதாரணங்கள்.

வரின், புகின், உண்ணின் என்பவை செயின் என்னும் வினையெச்சத்தைப் போல்வன.

கூறிய , சொல்லிய, காணிய என்பவை செய்யிய என்னும் வினையெச்சத்தைப் போல்வன.

உண்ணியர், சென்மியர் என்பவை செய்யியர் என்னும் வினையெச்சத்தைப் போல்வன. (செய்யியர்... செய்யும்படி).

சொல்வான், தருவான், புகுவான் என்றாற் போல்வன வான் ஈற்று எச்சங்கள். (சொல்வான்= சொல்லும்படி. தருவான்= தரும்படி. புகுவான்= புகும்படி)

உரைப்பான், உண்பான், காண்பான் என்றாற் போல்வனபான் ஈற்று எச்சங்கள். (உரைப்பான்= உரைக்கும்படி).

செய்பாக்கு, தருபாக்கு, உண்பாக்கு என்றாற் போல்வன பாக்கு ஈற்று எச்சங்கள். (செய்பாக்கு.. செய்யும்படி).

(ஈ) வினையெச்சங்கள் தம்பொருள்களை முடிப்பதற்குச் சொற்பெறும் விதம்.

பொன்னன் ஓடிக் களைத்தான். இதில் ஓடியென்னும் வினையெச்சம் களைத்தான் என்னும் வினைமுற்றுச் சொல்லுடன் முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடுதலாகிய வினைக்கும் களைத்தலாகிய வினைக்கும் கர்த்தா ஒருவனே, அதாவது, பொன்னன். ஆதலால் இவ்வாக்யத்தில் ஓடி என்னும் வினையெச்சம், ஓடுதலைச்செய்த தன் கர்த்தாவினது களைத்தலாகிய மற்றோர் வினையை உணர்த்தும்சொல்லை ஏற்று முடிந்தது.

வினையெச்சச் சொல்லின் கர்த்தாவும், வினையெச்சங் கொண்டு முடியும் முற்றுச்சொல்லின் கர்த்தாவும் ஒன்றாயிருந்தால் அதைத் தன்வினைக்கொண்டு முடிந்த எச்சம் என்க.

பொன்னன் வந்தால் கந்தனும் வருவான். இதில் வந்தான் என்னும் எச்சத்தின் வினைமுதல் பொன்னன். இந்த எச்சங்கொண்டு முடிந்த முற்றுச்சொல்லின் வினைமுதல் கந்தன்.

இதில் வந்தால் என்னும் எச்சத்தின் கர்த்தா ஒருவன்; வருவான் என்றும் முற்றுச்சொல்லின் கர்த்தா வேறொருவன்.

வினையெச்சச் சொல்லின் கர்த்தாவும் வினைமுற்றுச்சொல் லின் கர்த்தாவும் வேறு வேறாயிருப்பதால் இது பிறவினைகொண்டு முடிந்த எச்சமென்க.

தன்வினை முதலின் வினையைக்கொண்டுமுடியும் எச்சங்கள்.

இவையாவன, செய்து செய்பு செய்யா செய்யூ என்ற வினையெச்சங்களும் வான் பான் பாக்கு என்ற விகுதிகளையுடைய வினையெச்சங்களுமாம்.

ஏனைய எச்சங்கள் தமது வினைமுதலின் வினையையாவது, பிறவினைமுதலின் வினையையாவது, கொண்டு முடியும்.

முருகன் கற்றால் பண்டிதனாவான். இதில் கற்றலும், பண்டிதனாகலும் (முருகனாகிய) ஒருவன் வினையாதலால் தனது வினை முதலின் வினையைக் கொண்டது.

மகன் கற்றால் தந்தை உவக்கும். இதில் கற்றலின் வினை முதல் மகன். உவத்தலின் வினைமுதல் வேறொருவனாகிய தந்தை யாதலால் பிறவினை முதலின் வினை கொண்டது.

வினைமுதலுக்குப் புறனடை உதாரணங்கள்:

பொன்னனது கால் ஒடிந்து விழுந்தது. இதில், கால் என்ற சினையின் வினையாகிய ஒடிந்து என்னும் எச்சம் அச்சினையின் வினையாகிய விழுந்தது என்னும் வினைமுற்றைக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னன் கால் ஒடிந்து விழுந்தான். இதில், கால் என்ற சினையின் வினையாகிய ஒடிந்து என்னும் எச்சம், முதலின் வினையகிய விழுந்தான் என்னும் வினைமுற்றைக் கொண்டது.

மேற்காட்டிய உதாரணங்களால், சினையைப்பற்றிய வினையெச்சங்கள் அச்சினையின் வினைகொண்டு முடிதலன்றி, சினையையுடைய முதற்பொருளில் வினையுடனும் முடியும் என்பதுவிளங்கும்.

ஒருவாய்பாட்டு வினையெச்சம் வேறொரு வாய்பாட்டு வினையெச்சமாக விகாரப்பட்டு வருதலுமுண்டு.

மழைபெய்யக் குளம் நிறைந்தது என்று செயவென் வாய்பாடாய் நிற்கவேண்டிய வினையெச்சம் விகாரப்பட்டு மழைபெய்து குளம் நிறைந்தது என வருதலுமுண்டு.

இவ்வாறு சொல் விகாரப்பட்டாலும் பொருள் வேறுபடாது.

இவற்றிற்குச் சூத்திரங்கள் :-

அ௰௪. தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே.

இதன் பொருள்:

தொழிலுங் காலமுந் தோன்றி = தொழிலும் காலம் விளங்கி பால் வினை ஒழிய நிற்பது = வினைமுற்றுதற்கு வேண்டும் பால் ஒன்றுந் தோன்றாது வினையெஞ்ச நிற்பது.

வினையெச்சம் = வினையெச்சமாம்.

அ௰௫. செய்து செய்பு செய்யாச் செய்யூ
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்.

இதன் பொருள்:

செய்து செய்பு செய்யா செய்யூ செய்தென செய செயின் செய்யிய செய்யியர் = இந்த ஒன்பது வாய்பாட்டால் வருவனவும்.

வான் பான் பாக்கு = இந்த மூன்றுவித விகுதிகள் கொண்ட வருவனவும்.

இன பிற = இவைபோல்வன பிறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையெச்சம் = வினையெச்சங்களாம்

ஐந்து ஒன்று ஆறு = (அவற்றுள்) முன்னைய -ஐந்தும், (செய என்ற) நடு ஒன்றும், பின்னைய ஆறும்

முக்காலமும் முறை தரும் = இறந்த கால நிகழ்கால எதிர்காலங்களை முறையே காட்டும்.

அயகூ. அவற்றுள்
முதலி னான்கு மீற்றின் மூன்றும்
வினைமுதல் கொள்ளும் பிறவுமேற் கும்பிற.

இதன் பொருள் : அவற்றுள் = மேலைச் சூத்திரத்திற் கூறிய வினை யெச்சங்களுள் முதலில் நான்கும் = முதலிலுள்ள செய்து செய்பு செய்யா செய்யூ என்ற நான்கும்.

ஈற்றின் மூன்றும் = இறுதியிலுள்ள வான் பான் பாக்கு என்ற ஈற்று வினையெச்சம் மூன்றும்

வினை முதல் கொள்ளும் = தன் கர்த்தாவின் வினையைக் கொண்டு முடியும்.

பிற = நடுவிலுள்ள செய்தென செய செயின் செய்யிய செய்யியர் என்னும் ஐந்தும்

பிறவும் ஏற்கும் = தன் கர்த்தாவின் வினையும் பிற கர்த்தாவின் வினையும் கொண்டு முடியும்.

அயஎ. சினைவினை சினையொடு முதலியொடுஞ் செறியும்.

இதன் பொருள் : சினை வினை = தன்வினை முதல் வினை கொள்ளுமென்ற வினை யெச்சங்கள் சினைப்பொருளின் வினை யானால்

சினையொடும் = உறுப்பின் வினையுடனும்

முதலொடும் = முதற்பொருளின் வினையுடனும்

செறியும் = முடியும்.

இதற்குச் சூத்திரம் :-

அயஅ. சொற்றிரி யினும் பொரு டிரியா வினைக்குறை.

இதன் பொருள்: - வினைக்குறை=வினையெச்சவாய் பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்திரியினும் = சொற்கள் வேறு வாய்பாடு களா மாறினும்.

பொருள்திரியா = பொருள் வேறுபடமாட்டா.

இத்துணையும் வினைச்சொல்லின் இலக்கணங்களை விளக்கினாம்.

இனி, சிலவினைச்சொற்களுக்குச் சிறப்பிலக்கணங் கூறுவாம். முன் கூறாமல் ஒழிந்து நின்ற சில குறிப்புவினை முற்றுச் சொற்களும், செய்யும் என்ற தெரிநிலை முற்றுச் சொற்களும். ஐம்பாலுக்கும் பொதுவாகவரும் வினைச்சொற்களும், தெரிநிலை வினைமுற்றுக்கும் குறிப்பு வினை முற்றுக்கும் புறனடை இலக்கணங்களும், இனி விளக்கப்படும்.

ஒழிபு

குறிப்பு வினைகள் இயற்கைக் குறிப்பு வினையென்றும், ஆக்க வினைக் குறிப்பென்றும், இருவகைப்படும். உதாரணம்: கடவுள் என்றும் நல்லர். கடவுள் எக்காலமும் நல்லவராயிருத்தல் இயற்கையாகலின், இயற்கைக் குறிப்பு வினைமுற்று எனப்படும். நமது பகைவர் இந்நாளில் நல்லர். பகைவர் பண்டு தீயவராயிருந்து இடையில் நல்லவர்களாயினார் என்னும் ஆக்கப் பொருளைத் தருதலால், ஆக்கக் குறிப்பு வினைமுற்று எனப்படும்.

எனவே பொருள்களுக்கு இயல்பாக உள்ள தன்மையைக் குறிப்பது இயற்கை வினைக்குறிப்பு எனப்படும். பொருளுக்கு இடையிலுண் டாகுந் தன்மையைக் குறிப்பது ஆக்க வினைக்குறிப் பென்று சொல்வர்.

இடையிலுண்டான ஆக்க வினைச்சொற்களெல்லாம் ஆயிற்று ஆயின ஆயினர் ஆவார் முதலிய ஆக்கச்சொற்பெற்று வரும். உ-ம். கல்வியிற் பெரியனாயியான் (பெரியன் ஆயினான்).

வெண்முகில் கடனீர் முகந்து கருமுகிலாயிற்று. இதில் பால் போன்ற இமைய முகில் கடலுப்பு நீரையுண்டதால் , கரு முகிலாயிற்று என்றார்.

கந்தபுராணம் நாட்டுப்படலத்தில் மழைமேகத்தின் உற்பத்தி இவ்வாறே கூறியிருக்கின்றது. "சுந்தர மாயவன் றுயி லுமாழி போ-லிந்திரனூர்முகில் யாவுமேகியே-யந்தமில் கடற்புலனாருந் தியார்த்தெழீஇ- வந்தனவுவரியின் வண்ணமென்னவே." இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தம்: அழகிய விஷ்ணுபகவான் யோக நித்திரையில் மிதந்து கொண்டிருக்கும் பாற்கடல் போல, தேவேந்திரன் தனது வாகனமாகக் கொண்ட வெண்முகில் யாவுஞ் சென்று, எங்கும் எல்லையற்றுப் பரந்திருக்கும் உப்புக்கடலின் நீரை உறிஞ்சி, (மின்னல், இடிமுழக்க) ஆரவாரங்களோடு எழுந்து, கருங்கடலின் மயமென்று சொல்லும்படியே, வந்தன.

ஆக்கவினைக் குறிப்பு ஆக்கச்சொல் தொக்குவருதலு முண்டு.

உ-ம். கல்வியாற் பெரியன்.

இதற்குச் சூத்திரம்: -

**அ௧௬. ஆக்க வினைக் குறிப்பாக்க மின்றியலா.**

இதன் பொருள்:

ஆக்கவினைக் குறிப்பு = ஆக்கப் பொருளில் வரும் குறிப்பு வினைமுற்று.

ஆக்கம் இன்றி இயலா = ஆக்கச் சொல்லின்றி நடைபெறாது.

செய்யுமென் முற்று (ப.396)

செய்யும் என்னும் முற்று, ஆண்பால் பெண்பால் ஒன்றன் பால் பலவின் பால் என்னும் பால்களில் வரும். பலர்பாலிலும் தன்மை முன்னிலைகளிலும் வராது.

உ.ம். அவன் நடக்கும், அவள் நடக்கும், அது நடக்கும் அவை நடக்கும், (பாட்டில், நடக்கும் என்பது நடப்பான், நடப்பாள், என்றும் பொருள்படும்)

இதற்குச் சூத்திரம்:

**௬௰. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்**
**செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே.**

இதன் பொருள்:

செய்யும் என்முற்று = செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று பல்லோர் படர்க்கை = பலர்பாற் படர்க்கை.

முன்னிலைத்தன்மையில் = முன்னிலை தன்மையாகிய இடங்களில் செல்லாதாகும் = வராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்பொதுவினை.

யார் என்ற வினைச்சொல் உயர்திணையிலுள்ள ஆண்பால் பெண்பால் பலர்பாற் படர்க்கையாக வரும். இச்சொல் முப்பாலுக்கும் பொதுவான குறிப்பு வினைமுற்றுச்சொல்லாம். உ-ம்.அவன் யார், அவள் யார், அவர்யார் - நான் யார் , நாம்யார், நீ யார், நீர் யார். என்று தன்மை முன்னலைகளில் வரும்.

இதற்குச் சுத்திரம் : -

**௬௰௧. யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.**

இதன் பொருள்:

யாரென் வினா வினைக்குறிப்பு = யாரென்னும் வினாப்பொருளைத்தரும் குறிப்பு வினைமுற்று.

உயர் முப்பால் = உயர்திணை முப்பாலிலும் வரும்.

எவனென்னும் வினைக்குறிப்பு முற்று.

எவன்(எது, எவை) என்னும் வினைப்பொருளைத்தரும் வினைமுற்று அஃறிணைப்படர்க்கை இரண்டு பால்களுக்கும் பொதுவாம். உ.ம். மாடு எவன். மாடுகள் எவன்.

ஈண்டு எவன் என்பது உயர்திணை ஆண்பாலைக் குறிக்கும் எவன் அன்று.

இதற்குச் சூத்திரம்: -

**௬௰௨. எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.**

இதன் பொருள்:

எவன் என் வினா வினைக்குறிப்பு = எவனென்னும் வினாப்பொருளைத்தரும் குறிப்பு வினைமுற்று

இழி இருபால் = அஃறிணை இருபாலுக்கும் உரியதாம்.

இருவகைமுற்றிற்கும் புறநடை.

தெரிநிலை வினைமுற்றுக்கும் குறிப்பு வினை முற்றுக்கும் உரிய புறநடையை விளக்கும் உதாரணங்கள்

கண்டனன் வணங்கினான் என்ற வினைமுற்றுக்களில் கண்டனன் என்பது கண்டு என்ற வினையெச்சப்பொருள் பெற்று நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணான் விழுந்தான் (காணாமல் விழுந்தான்). காணான் என்பது காணாமல் என்ற வினையெச்சப் பொருள் பெற்று நிற்கும். இந்த இரண்டு உதாரணங்களும் தெரிநிலை வினைமுற்றுக்கள் எச்சமானதை விளக்கும்.

இனி, இராமன் வில்லினன்( வில்லையுடையவனாக) வந்தான். இதில் இராமன் என்ற எழுவாயைத் தொடர்ந்து வரும் வில்லினன் என்ற குறிப்பு வினைமுற்று வில்லை உடையவனாக என்ற வினையெச்சப் பொருள் பெற்று வந்தான் என்ற வினைமுற்றைக் கொண்டு முடியும்.

இந்த உதாரணம் குறிப்பு வினைமுற்று வினையெச்சப் பொருளில் வந்ததைக் காட்டும்.

இனி வில்லினன் ராமன் வந்தான் என்ற வாக்கியத்தில் வில்லினன் என்ற குறிப்பு வினைமுற்று, வில்லையுடைய என்ற பெயரெச்சப் பொருள் பெற்று இராமன் என்ற பெயரைக் கொண்டு முடிந்தது.

இதற்குச் சூத்திரம்: -

**௬௰௪௬.** வினைமுற் றேவினை யெச்ச மாகலும்
குறிப்புமுற் றீரெச்ச மாகலு முறவே.

இதன் பொருள்: வினைமுற்றே வினையெச்சம் ஆகலும் = வினைமுற்று வினையெச்சப் பொருள்பட்டு வருதலும்.

குறிப்பு முற்று ஈ ரெச்சமாகலும் உறவே = குறிப்பு வினை முற்று வினையெச்சமாகவும் பெயரெச்சமாகவும் பொருள் பட்டு வருதலுமுண்டு.

வினையியல் முற்றிற்று.

## பொதுவியல்

இதுகாறும் பெயர்ச்சொல் வினைச்சொல் என்பவற்றின் இலக்கணங்களைக் கூறினாம். இனி இந்தப் பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் பொதுவான இலக்கணங்களைக் கூறவேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பவணந்தி முனிவர் தமது நன்னூலில் பெயர்ச்சொல்லுக்கும் . வினைச்சொல்லுக்கும், இடைச்சொல்லுக்கும் உரிச்சொல்லுக்கும் உரிய பொது விதிகளை ஒன்று கூட்டி ஓரியலில் விளக்கினமையால், அவ்வியலுக்கு பொது வியல் என்று பெயரிட்டார். அவ்வாறே ஈண்டும் விளக்கப்படும்.

இந்த பொது வியல் ஐ வகைப்படும்:

(1) ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான சில சொற்கள் பயனிலை கொண்டு முடியும் விதம் இன்னதென்றும்.

(2) ஒரு பெயர்ச்சொல்லுக்கும் வேறொரு பெயர்ச் சொல்லுக்கும் அல்லது பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் நடுவே உருபுகள் மறைந்து நிற்க, இரண்டு சொற்கள் ஒரு சொற்போல் நிற்கும் முறை இன்னதென்றும்,

(3) உருபுகள் இரண்டு சொற்களின் நடுவில் விரிந்து நிற்கும் விதம் இன்னதென்றும்.

(4) சொற்களை ஆன்றோர் வழங்கி வந்த படி வழங்கும் முறை யாதென்றும் ஓரோவிடத்து வழுவினால் அதை அமைக்கும் விதம் இன்னதென்றும்.

(5) செய்யுள்களில் வரும் சொற்களுக்கு அர்த்தம் எவ்விதம் செய்ய வேண்டியதென்றுமே.

இவ்வைந்து பிரிவுபாடுகளை முறையே,

(1) பெயர் வினை இடை உரிச்சொற்களின் பொதுநிலைத் தொடர் முடிபுகள் என்றும்,

(2) தொகைநிலைத்தொடர் மொழி என்றும்.

(3) தொகாநிலைத்தொடர் மொழி என்றும்,

(4) வழாநிலை வழுவமைதி என்றும்,

(5) பொருள் கோள் என்றும்,

விரிப்பாம்.

இவற்றில், பெயர் வினை இடை உரிச்சொற்களின் பொது நிலைத்தொடர் முடிபுகள் ஒன்பது வகைப்படும். அவையாவன:

1° . பாற்பொதுமை நீங்கும் நெறி: அதாவது, ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் உள்ள பொது பொதுத்தன்மையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் சொல்லுஞ் சாடையினால் இது ஆண்பாலன்று இது பெண்பாலே எனப் பொதுத்தன்மையினின்று நீங்கும் முறை;

2°. பெயர்வினையிடத்து ஈற்றயல் திரிதல்;

3°. எட்டு உருபும் மூன்று வினையீறும் எதிர்மறுத்துச் சொல்லுமிடத்துத் திரியாது நிற்றல் ;

4°. உருபுகள் வெளிப்பட்டு அல்லது வெளிப்படாமல் தம் முன் அடுக்கி வந்தாலும், வினைச்சொற்கள் தனித்தனியே நின்றாலும், அப்படி நிற்பவை ஒரு பயனிலைச் சொல்லை ஏற்று வருதல்;

5°. இரு சொற்களினூடே பொருத்தமான வேறு சொல் வருதல்;

6° எட்டு உருபும் மூன்று வினையும் ஏற்று நிற்கும் சொற்கள் முதலிலும் ஈற்றிலும் மாறி மாறி நிற்றல்;

7°. ஒரு பொருளை உணர்த்துஞ் சொல் தனக்கினமான வேறு பொருளை உணர்த்துஞ் சொல்லைக் கொள்ளுதல் ;

8°. திணை பால் இடங்களின் பொதுமை நீக்கம் சிறப்புச் சொல்லால் அறிதல்;

9°. பத்து வகையான எச்சங்கள் பயனிலையை எற்று நிற்றல் என்பனவாம்.

### 1°. பாற்பொதுமை நீங்கு நெறி (ப.407)

உயர்திணையிலுள்ள ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவான பெயர்ச்சொல்லும் , அவை கொண்டு முடியும் வினைச்சொல்லும், அஃறிணையிலுள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான பெயர்ச்சொல்லும், அவை கொண்டு முடியும் வினைச்சொல்லும், குறிப்பினால் ஒரு பாலை ஒழித்து மற்றொரு பாலைக் குறிக்கும்.

உயர்திணைச் சொல் உதாரணம்: ஆயிரம் மக்கள் போர் செய்தனர். இதில் மக்கள் (மனிதர்) என்பது உயர்திணை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான பெயர்ச்சொல்; செய்தனர் என்பதும் பொதுவான வினைச்சொல்.

மக்கள் என்பதும், செய்தனர் என்பதும் ஆண் பெண் பால்களில் ஒன்றைக் காட்ட வில்லையாயினும், போர் என்றும் குறிப்பினால் ஆண்பாலையுணர்த்தினது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஃறிணைச் சொல் உதாரணம்: மாடுகள் பால் தருகின்றன. இங்கே மாடுகள் என்பதும் தருகின்றன என்பதும் ஆண்மாடு பெண்மாடு இரண்டிற்கும் பொதுவான சொற்களாயினும் பால் என்ற சிறப்பினால் பெண் மாடுகள் என்பதை உணர்த்தின.

மக்கள் செய்தனர், மாடுகள் தருகின்றன, என்பவற்றிலுள்ள பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் இரு பாற்கும் பொதுவாயினும், போர் பால் என்னும் குறிப்புப் பற்றி ஒரு பாலை விலக்குதலால், ஒன்றொழிபொதுச்சொல்லெனப்பட்டன.

ஒன்றொழிபொதுச்சொல் = ஒரு பாலை விலக்குகின்ற இருபாலுக்கும் பொதுவான சொல்.

இவ்வொன்றொழி பொதுச்சொல் பெயரியலில் கக-ம் சூத்திரத்தில் விளக்கப்பட்டது.

இதற்குச் சூத்திரம்:

**கூ௰௪. இருதிணை யாண்பெணு ளொன்றனை யொழிக்கும்**
**பெயரும் வினையுங் குறிப்பி னானே.**

இதன் பொருள்:

பெயரும் வினையும் = ஆண்பால் பெண்பால்களுக்குகுப் பொதுவாகிய பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும்

இருதிணை= இரண்டு திணைகளிலும்

ஆண் பெண்ணுள் ஒன்றனை = ஆண்பால் பெண்பால்களுள் ஒரு பாலை

குறிப்பினால் ஒழிக்கும் = குறிப்பினால் விலக்கி மற்றொரு பாலைக் காட்டும்.

*2° .செய்யுளில் சில பெயர்வினையின் ஈற்றயல் திரிதல்:*

செய்யுளில் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் ன் ள் ர் ய் என்னும் எழுத்துக்களுள் ஒன்றை இறுதியிலுடையனவாயின் ஈற்றயலில் நின்ற ஆகாரம் ஓகாரமாகத் திரிதலுமுண்டு.

பெயர்ச்சொல்லில் னகரஈற்றுக்கு அயலில் நின்று ஆகாரம் ஓகாரமாகத் திரிவது. உ.ம். வில்லான், வில்லோன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்சொல்லில் னகர ஈற்றுக்கு அயலில் நின்ற ஆகாரம் ஓகாரமாகத் திரிவது. உ.ம். வில்லான், வில்லோன்.

பெயர்ச்சொல்லில் ளகர ஈற்றுக்கு அயலில் நின்ற ஆகாரம் ஓகாரமாகத் திரிவது. உ.ம். தொடியாள், தொடியோள்.

பெயர்ச்சொல்லில் ரகர ஈற்றுக்கு அயல் ஆகாரம் ஓகாரமாகத் திரிவது. உ.ம் பெரியார் பெரியோர்.

பெயர்ச்சொல்லில் யகர ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாகத் திரிவது உ.ம். பெரியாய். பெரியோய்.

வினைச்சொல்லில் னகர ஈற்றுக்கு அயலில் நின்ற ஆகாரம் ஓகாரமாகத் திரிவது. உ.ம். படைத்தான், படைத்தோன்.

வினைச்சொல்லில் ளகர ஈற்றுக்கு அயலில் நின்ற ஆகாரம் ஓகாரமாகத் திரிவது. உ்ம். பெயர்த்தாள், பெயர்த்தோள்.

வினைச்சொல்லில் ரகர ஈற்றுக்கு அயலில் நின்ற ஆகாரம் ஓகாரமாகத் திரிவது. உ.ம். சென்றார், சென்றோர்.

வினைச்சொல்லில் யகர ஈற்றுக்கு அயலில் நின்ற ஆகாரம் ஓகாரமாகத் திரிவது. உ.ம். வந்தாய், வந்தோய்.

கிழவன் கிழவோன், புலவர் புலவோர், என ஈற்றகரம் ஓகாரமாகத் திரிதலுமுண்டு.

வண்ணான், தட்டான் முதலிய சொற்களின் ஈற்றய லாகாரம் ஓகாரமாகத் திரியாது.

இவ்விகாரங்கள் செய்யுட்களிலன்றி வசனத்திலும் வருமெனக் கொள்க.

இதற்குச் சூத்திரம்: -

**கூ௰௫. பெயர்வினை யிடத்து னளரய ஈற்றயல்**
**ஆவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே.**

இதன் பொருள்:

பெயர்வினையிடத்து = பெயர்ச் சொற்றளிலும் வினைச் சொற் களிலும்.

ன ள ர ய ஈற்று அயல் ஆ = இந்நான்கெழுத்துள் ஒன்றை இறுதியிலுடைய சொல்லின் ஈற்றயல் ஆகாரம்.

ஓ ஆகலும் செய்யுளுள் உரித்து = ஓகாரமாதலும் பாட்டிலுரிய தாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவியல்

உருபும் வினைவிகுதியும் எதிர்மறையினும் திரியாமை ஈண்டு எதிர்மறையிலும் திரியாமை என்றதனால், உடன்பாட்டிலும் திரியாமை என்று பொருள் பண்ணவேண்டியது.

உடன்பாடாவது, விருப்பத்திற்கு ஏற்றபடி சித்தமிசைந்து கர்மங்களைச் செய்வித்தலாம்.

இராமன் வந்தான் , கந்தன் போவான் என்ற வாக்கியங்கள் உடன்பாட்டு வினையெனப்படும். இராமன் வரான் , கந்தன் போகான் இவைக்கு எதிர்மறை.( விரோத வாக்கியம்)

வேற்றுமை உருபுகளும் வினை விகுதிகளும் உடன்பாட்டுப் பயனிலையைக் கொள்ளும் போது எப்படி நிற்குமோ, அப்படியே அவை எதிர்நிலைபயனிலையைக் கொள்ளும் போதும் நிற்கும்.

இவற்றிற்கு உதாரணங்கள்:

முதலாம் வேற்றுமையில்: முருகன் வந்தான் , முருகன் வரான். இவற்றில் முருகனானவன் என்ற எழுவாயுருபு வந்தானென்ற உடன்பாட்டுப் பயனிலையைக் கொண்டது. இவ்வாறே இதன் எதிர்மறைக்கும் முருகன் என்ற பதம் திரியாமல் நின்றது.

இரண்டாம் வேற்றுமையில்: குடத்தை வனைந்தான், குடத்தை வனையான், ஈண்டு ஐயுருபு உடன்பாட்டு வினையிலும் எதிர்மறை வினையிலும் திரியாமலிருக்கின்றது.

மூன்றாம் வேற்றுமையில்: வாளால் கொன்றான், வாளால் கொன்றிலன். ஈண்டு ஆல் உருபு உடன்பாட்டுவினையிலும் எதிர் மறை வினையிலும் திரியாமல் நின்றது.

நான்காம் வேற்றுமையில்: வேலனுக்கு கொடுப்பான், வேலனுக்கு கொடான் . ஈண்டு, கு உருபு உடன்பட்டு வினையிலும் எதிர்மறை வினையிலும் திரியாமல் நின்றது.

ஐந்தாம் வேற்றுமையில் மரத்தினின்று விழுவது, மரத்தினின்று விழாதது. ஈண்டு இல் என்ற குறி உருபும் நின்று என்ற சொல்லுருபுங் கூடி உடன்பாட்டு வினையிலும் எதிர்மறை வினையிலும் திரியாமல் நின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் வேற்றுமையில் : ஒளியினது உண்மை. ஒளியினது இன்மை . ஈண்டு . அது என்ற உருபு உடன்பாட்டு வினையிலும் எதிர்மறை வினையிலும் திரியாமல் நின்றது.

ஏழாம் வேற்றுமையில்: பனையின் கண் இருந்தது, பனையின் கண் இருந்திலது. ஈண்டு , இன் சாரியை, கண் உருபு. இந்த உருபு உடன்பாட்டு வினையிலும் எதிர் மறை வினையிலும் திரியாமல் நின்றது.

எட்டாம் வேற்றுமையில் கந்தா செல்க. கந்தா செல்லற்க. ஈண்டு கந்தன் என்ற பதத்திலள்ள ன் கெட்டு கந்த என்று வந்து அ ஆவாக நீண்ட உருபு உடன்பாட்டு வினையிலும் எதிர்மறை வினையிலும் திரியாமல் நின்றது.

வினைமுற்று பெயரெச்சம் வினையெச்சம் என்பவற்றின் விகுதிகள் உடன்பாட்டு வினையிலும் எதிர்மறை வினையிலும் வேறுபடாது நிற்கும் இவற்றிற்கு உதாரணங்கள்:

வினைமுற்றில் நடப்பான். நடவான், பெயரெச்சத்தில் நடந்த, நடவாத .வினையெச்சத்தில் நடந்து, நடவாது.

இதற்குச் சூத்திரம்: -

**௬௰௬. உருபும் வினையும் மெதிர்மறுத் துரைப்பினுந்**
**திரியா தத்தமீற் றுருபி னென்ப.**

இதன் பொருள்:

எதிர்மறுத்து உரைப்பினும் = எதிர்மறையாகச் சொல்லுமிடத்தும்

உருபும் வினையும் = வேற்றுமை உருபுகளும் வினைச் சொற்களும் தத்தம் ஈற்று உருபின் = தமது தமது விகுதியினின்றும் உருபினின்றும்

திரியா என்ப = வேறுபடா என்று சொல்லுவர்.

**4.** உருபும்வினையும் அடுக்கிமுடிதல்

அதாவது உருபுகள் ஒன்றோடொன்று அடுக்கியும் வினைச்சொற்கள் வெவ்வேறாக அடுக்கியும் ஒருவினைச் சொல்லைக் கொண்டு முடிதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவியல்

அரசனையும் அமைச்சனையும் சேனையையும் நகரத்தையும் அழித்தான் என்ற வாக்கியத்தில் இரண்டாம் வேற்றுமை உருபு பலமுறை அடுக்கப்பட்டு ஒரு பயனிலையைப் பெற்றது.

ஸ்ரீராமன் ராவணனது கைகளையும் தலைகளையும் பல பாணங்களால் வெட்டினார் இந்த வாக்கியத்தில் முதல் வேற்றுமை யானது ஆறாம் வேற்றுமையுடனும் இரண்டாம் வேற்றுமையுடனும் மூன்றாம் வேற்றுமையுடனும் விரவி, வெட்டினார் என்னும் ஒரு பயனிலை கொண்டது. (விரவுதல் = கலத்தல்)

நந்தன் ஆடினான் பாடினான் நகைத்தான் அழுதான்

கேட்ட சிந்தித்த தெளிந்த பெரியோர்.

ஆடிப் பாடிக் களித்து நகைத்து விழுந்து எழுந்திருந்தான்.

இந்த மூன்று வாக்கியங்களில் முறையே வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்பன வெவ்வேறு பல அடுக்கப் பட்டன.

இவ்வாறு வேற்றுமை உருபுகள் வெவ்வேறு அடுக்கி வந்தா லும் விரவி அடுக்கி வந்தாலும் ஒரு முடிக்கும் வினைச் சொல்லையே கொள்ளும்.

இதற்குச் சூத்திரம்: -

**௩௰௭. உருபு பல அடுக்கினும் வினைவே றடுங்கினும்**
**ஒருதம் மெச்ச மீறுற முடியும்.**

இதன்பொருள்:

உருபு = எட்டுவேற்றுமை உருபுகளும் (பக்கங்கள் 336-7). பல அடுக்கினும் = விரிந்தும் தொக்கும் தம்முள் விரவியாயினும் வெவ்வேறாகவாயினும் பல அடுக்கி வந்தாலும்

வினை வேறு அடுக்கினும் = மூவகை வினைச்சொற்கள் வெவ்வேறு பல அடுக்கி வந்தாலும்

ஒருதம் எச்சம் ஈறுற = தாம் முடியுஞ்சொற்கள் இறுதியில் வர முடியும் = அவற்றோடு முடியும்.

5. இடைப்பிறவரல்.

அதாவது இரண்டு சொற்களினிடையில் பிற சொல் வருதல். வேற்றுமை உருபுகளோடும், வினைமுற்றுக்களோடும், பெயரெச்சங்களோடும், வினையெச்சங்களோடும், பெயர்ச்சொற்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைச்சொற்களும் சேரும் போது ஊடே அவ்விடத்திற்குப் பொருத்தமான வேறு சொற்கள் வரலாம்.

இவற்றிற்கு உதாரணங்கள்: முதலாம் வேற்றுமைக்கு "

பொன்னன் (ஆனவன் பசிதீர) உண்டான் இதில் ஆனான் என்பது முதலாம் வேற்றுமைச் சொல்லுருபு உண்டான் என்றது அந்த வேற்றுமையைச் சேர்ந்த வினைச்சொல். பசி தீர என்ற சொற்கள் ஊடே பொருத்தமாக வந்த வேறு சொற்கள்.

இரண்டாம் வேற்றுமைக்கு உதாரணம்: நூலை (அழகுபெற) இயற்றினான். இதில் ஐ என்றது ஈரண்டாம் வேற்றுமை உருபு. இயற்றினான் என்றது அந்த வேற்றுமையைச் சேர்ந்த வினைச்சொல். அழகுபெற என்பன ஊடே பொருத்தமாக வந்த வேறு சொற்கள்.

மூன்றாம் வேற்றுமைக்கு உ-ம்: வாளால் (இருதுண்டாக) வெட்டினான். இதில் ஆல் என்றது மூன்றாம் வேற்றுமை உருபு. வெட்டினான் என்றது அந்த வேற்றுமையைச் சேர்ந்த வினைச்சொல். இரு துண்டாக என்பன ஊடே பொருத்தமாக வந்த வேறு சொற்கள்.

நான்காம் வேற்றுமைக்கு உ-ம். தேவர்க்குச் ( செல்வம் விரும்பி) நிவேதித்தான் அதில் கு என்றது நான்காம் வேற்றுமை உருபு. நிவேதித்தான் என்றது அந்த வேற்றுமையைச் சேர்ந்த வினைச்சொல். செல்வம் விரும்பி என்பன ஊடே பொருத்தமாக வந்த வேறு சொல்.

ஐந்தாம் வேற்றுமைக்கு உ-ம். மலையினின்று உருண்டு விழுந்தான் . இதில் இல் நின்று என்பன ஐந்தாம் வேற்றுமை உருபுகள். விழுந்தான் என்றது அந்த வேற்றுமையைச் சேர்ந்த வினைச்சொல் . உருண்டு என்பது ஊடே பொருத்தமாக வந்த வேறு சொல்

இவ்வறே ஆறாம் வேற்றுமைக்கும் ஏழாம் வேற்றுமைக்கும் வினைச்சொல்லையும் இடைப் பிறவரும் சொல்லையும் கொண்டு முடிக்க.

இனி, உருபு பெயர்சொல்லைக் கொண்டு முடிதற்கு உதாரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவியல்

முதலாம் வேற்றுமைக்கு (பக்கம் 336)உ-ம். கந்தன் (என்பவன் நான்சொன்ன)இவன் தானா. இதில் என்பவன் என்றது முதலாம் வேற்றுமைச் சொல்லுருபு. இவன் தானா என்றது அந்த வேற்றுமையைச் சேர்ந்த பெயர்ச்சொல் நான் சொன்ன என்பன ஊடே பொருத்தமாக வந்த வேறு சொற்கள்.

இரண்டாம் வேற்றுமை செயற்படுபொருளாதலால் பெயர்ச் சொல்லைச் சேர்ந்து வராது.

மூன்றாம் வேற்றுமைக்கு உ-ம் வித்தையால் (மிகவும்) பெரியோன். இதில் ஆல் என்பது மூன்றாம் வேற்றுமை உருபு. பெரியோன் என்றது அந்த வேற்றுமையைச் சேர்ந்த பெயர்ச்சொல். மிகவும்என்பது என்பது ஊடே பொருத்தமாக வந்த வேறுசொல்

ஐந்தாம் வேற்றுமைக்கு உ-ம் மலையில் (வீழ்) அருவி. இதில் இல் என்றது ஐந்தாம் வேற்றுமை உருபு. அருவி என்றது அந்த வேற்றுமையைச் சேர்ந்த பெயர்ச்சொல். வீழ் என்பது ஊடே பொருத்தமாக வந்த வேறு சொல்

ஆறாம் வேற்றுமைக்கு உ-ம். சாத்தனது (கோட்டு) யானை இதில் அது என்றது ஆறாம்வேற்றுமை உருபு. யானை என்றது அந்த வேற்றுமையைச் சேர்ந்த பெயர்ச்சொல். கோட்டு என்பது ஊடே பொருத்தமாக வந்த வேறு சொல்.

ஏழாம் வேற்றுமைக்கு உ-ம். ஊரக்காண் (உயர்ந்த ஒளி) மாடம். இதில் கண் என்பது ஏழாம் வேற்றுமை உருபு. மாடம் என்றது அந்த வேற்றுமையைச் சேர்ந்த பெயர்ச்சொல். உயர்ந்த ஒளி என்பன ஊடே பொருத்தமாக வந்த வேறு சொற்கள்.

எட்டாம் வேற்றுமைக்கு உ-ம். சாத்தா (விரைந்தோடி) வா. அதில் சாத்தன் ஈறுகெட்டடுஅகரம் ஆகாரமாக நீண்ட எட்டாம் வேற்றுமை உருபு. வா என்றது அந்த வேற்றுமையைச் சேர்ந்த வினைச்சொல். விரைந்து ஓடி என்பன ஊடே பொருத்தமாக வந்த வேறுசொற்கள்.

வினைமுற்றுக்கு உ-ம். வந்தான்( சென்ற) சாத்தன் வந்தான் என்றது வினைமுற்று. சாத்தன் என்றது வினைமுற்றோடு சேர்ந்த பெயர்ச்சொல். சென்ற என்பது ஊடே பொருத்தமாக் வந்த வேறுசொற்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரெச்சத்திற்கு உ-ம். படித்த (சோழநாட்டு) புலவர். படித்த என்றது பெயரெச்சம். புலவர் என்றது பெயரெச்சத்தோடு சேர்ந்த பெயர்ச்சொல். சோழ நாட்டு என்பன ஊடே பொருத்தமாக வந்த வேறு சொற்கள்.

வினையெச்சத்திற்கு உ-ம். (மகன்) படித்து (பரீக்ஷையிற் சித்திபெற்று) வந்தான். இதில் படித்து என்றது வினையெச்சம். வந்தான் என்றது வினையெச்சத்தோடு சேர்ந்த வினைமுற்று. பரீக்ஷையிற் சித்திபெற்று என்பன ஊடே பொருத்தமாக வந்த வேறு சொற்கள்.

இவ்விதமே வெறு பொருத்தமான சொற்களை இடையில் வருவிக்கலாம்.

இதற்குச் சூத்திரம்: -

**௯௰அ. உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்**
**பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன.**

இதன் பொருள்: உருபு முற்று ஈரேச்சம் = உருபுகளும் வினைமுற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் ஆகிய இவற்றுக்கும்.

கொள்ளும் பெயர்வினை = இவைகொண்டு முடிகிற பெயர்ச் சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும்

இடை ஏற்பன = நடுவில் ( அவ்விடத்துக்குப்) பொருத்து வனவாகிய

பிற வரலுமாம் = வேறு சொற்கள் வருதலுமாம்.

6 . முடிக்குஞ் சொல் நிற்கும் இடம்.

அதாவது, ஒரு வசனத்தை முடிவு பெறச்செய்யும் சொல்லானது எவ்விடத்து நிற்கும் என்பது.

உருபுகளையும் வினைமுற்று பெயரெச்சம் வினையெச்சம் என்றும் மூவகை வினைச்சொற்களையும், ஏற்று முடிகிற பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லும் அந்த உருபுகளுக்கும் வினைச சொற்களுக்கும் முன்னும் வரும், பின்னும் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கு உதாரணங்கள்:

முதலாம் வேற்றுமை முருகன் படித்தான் . இதில் முருகன் என்னும் முதலாம் வேற்றுமையின் ஈற்றில் படித்தான் என்னும் வினைச்சொல் வந்தது. இது. படித்தான் முருகன் என்று வினைச்சொல் முதலிலும் வரும்.

இரண்டாம் வேற்றுமை: வாழையை வெட்டினான். இதில் ஐ என்ற இரண்டாம் வேற்றுமையுருபின் ஈற்றில் வெட்டினான் என்னும் வினைச்சொல் வந்தது. இது வெட்டினான் வாழையை என்று வினைச்சொல் முதலிலும் வரும்.

மூன்றாம் வேற்றுமை: சாத்தனால் வந்தான். இதில் ஆல் என்ற மூன்றாம் வேற்றுமையுருபின் ஈற்றில் , வந்தான் என்னும் வினைச்சொல் வந்தது. இது வந்தான் சாத்தனால் என்று வினைச்சொல் முதலிலும் வரும்.

நான்காம் வேற்றுமை: சாத்தனுக்கு கொடுத்தான் இதில் கு என்ற நான்காம் வேற்றுமை உருபின் ஈற்றில் கொடுத்தான் என்னும் வினைச்சொல் வந்தது. இது கொடுத்தான் சாத்தனுக்கு என்ற வினைச்சொல் முதலிலும் வரும்.

ஐந்தாம் வேற்றுமை: வேலனின் நீங்கினான். இதில் இன் என்ற ஐந்தாம் வேற்றுமை உருபின் ஈற்றில், நீங்கினான் என்னும் வினைச் சொல் வந்தது. இது நீங்கினான் வேலனில் என்று வினைச்சொல் முதலிலும் வரும்.

ஆறாம் வேற்றுமை: மரத்தினது இலை இதில் அது என்ற ஆறாம் வேற்றுமை உருபின் ஈற்றில், இலையென்னும் பெயர்ச்சொல் வந்தது. இது, இலை மரத்தினது என்று பெயர்ச்சொல் முதலிலும் வரும்.

ஏழாம் வேற்றுமை: மலைக்கண் முனிவன். இதில் கண் என்ற ஏழாம் வேற்றுமை உருபின் ஈற்றில், முனிவன் என்னும் பெயர்ச்சொல் வந்தது. இது, முனிவன் மலைக்கண் என்று பெயர்ச்சொல் முதலிலும் வரும்.

எட்டாம் வேற்றுமை் அருச்சுனா வா. இதில் அர்ச்சுனன் என்பது ஈறுகெட்டு அ ஆ வாக நீண்ட விளியுருபின் ஈற்றில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா என்ற வினைச்சொல் வந்தது. இது, வா அரச்சுனா என்று வினைச்சொல் முதலிலும் வரும்.

எச்சச் சொற்கள் இறுதியில் வருதல் சிறப்பாம்.

இதற்குச் சூத்திரம்: -

**௬௰௪. எச்சப் பெயர்வினை யெய்து மீற்றினும்.**

இதன்பொருள்: எச்சப் பெயர்வினை = முடிக்குஞ் சொல்லாகிய பெயரும் வினையும் ஈற்றினும் எய்தும் = அவற்றிற்கு இறுதியிலும் வரும்.

7 . ஒரு சொல் இனத்தையுந் தழுவுதல். (ப.408)

அதாவது ஒரு சொல் தனக்கு இனமாகிய பொருளையுணர்த் தும் வேறோரு சொல்லையும் வேண்டிய இடத்தில தழுவி நிற்றல். மகுடத்தில் தோன்றிய "இனத்தையும்" என்ற பதத்திலுள்ள இடைச் சொல்லானது இனமற்ற சொல்லோடும் தழுவும் என்பதையும் காட்டிற்று. யானை. பானை மரம் மேகம் இனமற்ற சொற்களாயினும் ஒன்றையொன்று தழுவி நிற்பது இயல்பு விதி என்றும். ஒரு சொல் தன் இனத்தைக் கொழுவி அதனை கூறாமற் கூறுவது சிறப்பு விதி என்றும் மகுடம் உணர்த்திற்று.

இதற்கு உதாரணங்கள் சோறுண்டான் என்பது சோற்றின் இனமாகிய கறியையும் உண்டான் எனக்குறிக்கும்.

வெற்றிலை உண்டான் என்பது அதன் இனமாகிய பாக்கு சுண்ணாம்பு என்பவற்றையும் குறிக்கும்.

நஞ்சுண்டவன் சாவான் என்பது நஞ்சுண்டவள் சாவாள் என்ற பெண்பாலையும், நஞ்சுண்டது சாகும் என்ற ஒன்றன் பாலையும். நஞ்சுண்டன சாகும் என்ற பலவின் பாலையும் குறிக்கும்.

இதற்குச் சூத்திரம்: -

**ர. ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே.**

இதன் பொருள்: ஒரு மொழி ஒழி = ஒரு சொல்லானது எஞ்சிநின்ற தன் இனம் கொளற்கு உரித்து = தனது இனமாகிய சொல்லைத் தழுவிக்கொள்ளவும் உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பெயர்ச்சொல் வினைச்சொல் என்பவற்றின் திணை பால் இடப்பொதுமை நீங்குதல். (ப.408)

மாணிக்கம் என்ற பதம் மனிஷன் என்ற உயிர்திணைக்கும் மாடு என்ற அஃறிணைக்கும் பொதுவயிருப்பினும் மாணிக்கம் இவன் என்ற தொடர் திணைப்பொதுமையை நீக்கி உயர்திணையை விளக்கிற்று.

ஒருவர் என்ற பதம் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாய் வழங்குவதாயினும், ஒருவர் என் தகப்பன் என்ற தொடரில் தகப்பன் என்றது ஒருவரிலிருந்த பொதுமையை நீக்கிற்று.

எல்லாம் என்ற பதம் தன்மை முன்னிலை படர்க்கை என்ற மூவிடங்களுக்கும் பொதுவாயிருப்பினும், நாங்கள் எல்லாம் வருவோம் என்ற தொடரில் நாங்கள் என்ற பதம் முன்னிலையிடத்தையும் படர்க்கையிடத்தையும் நீக்கீற்று.

நீவிரெல்லாம் வருவீர் என்ற தொடரில் தன்மையும் படர்க்கையும் நீக்கப்பட்டன.

வந்த அரசன், வந்த அரசி. வந்த மாடு. வந்த நீ, வந்த நான் என்ற தொடர்களில் வந்த என்றும் பெயரெச்சம் இருதிணை ஐம் பால் மூவிடங்கட்கும் பொது. வந்த என்பதன் பொதுத் தன்மையையை அது கொண்டு முடியும் சிறப்புப் பெயர் நீக்கி ஒருதிணை ஒரு பால் ஒரு இடத்திற்கே உரியதாகும்.

வந்த என்பது ஆண்பாற் படர்க்கைச்சொல்லாகிய அரசன் என்ற பதத்ததை ஏற்றால், பெண்பால் ஒன்றன்பால்களும் தன்மை முன்னிலைகளும் நீங்கும்.

வந்த என்பது மாடு என்பதை ஏற்றால் உயர்திணையையும் ஆண்பாலையும், தன்மை முன்னிலையையும் நீக்கும்

வந்த நீ, வந்த நான், என்ற உதாரணங்களையும் இப்படியே ஆராய்ந்தறிக.

வாழ்க மாணிக்கம் என்ற தொடரில், வாழ்க என்பது பொதுவினை. மாணிக்கம் என்பது பொதுப்பெயர். ஆதலால் அத்தொடரின் பொதுமை நீங்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம் :-

**௱க. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீங்கும்
மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே.**

இதன்பொருள்:

பொதுப்பெயர் வினைகளின் = திணை பால் இடங்களுக்குப் பொதுவாகிய பெயர்ச்சொற்களினதும் வினைச் சொற்களினதும் பொதுமை மேல் வருஞ் = சிறப்பு = பொதுவாயிருக்குந் தன்மையை மேலே வருகிற ஒரு திணை பால் இடம் காலத்துக்கே சிறப்பாகிய

பெயர்வினை தாம் = பெயர்சொற்களும் வினைச் சொற்களும் நீக்கும் = நீக்கி ஒரு திணை பால் இடம் காலத்திற்கே உரிமை செய்யும்.

9 . எச்சங்களின் முடிபு.(ப. 408).

முடியாமல் நிற்கும் சொற்களாகிய எச்சங்கள் சொல்லெச்சம் என்றும், குறிப்பெச்சம் என்றும், கூறப்படும்.

இவற்றில் சொல்லெச்சமானது பெயரெச்சம். வினையெச்சம். உம்மைஎச்சம், சொல் எச்சம், என எச்சம் , பிரிநிலை எச்சம். ஒழியிசை எச்சம், எதிர்மறை எச்சம், இசை எச்சம், என்று ஒன்பது வகைப்படும்.

குறிப்பெச்சமும் பல வகைப்படும். பக்கம் 422 இல் தோன்றிய சூத்திரம் 102 இல் " பெயர்வினை....ஒன்பதும் குறிப்பும் தத்தமெச்சங்கொள்ளும்" எனக் கூறியிருப்பதாலும். பக்கம்294 இல் தோன்றிய சூத்திரம் 11இல் குறிப்பு மொழிகள் பலவகைப் படுமென்றும்(ப.292), இவையெல்லாம் குறிப்பினால் இருதிணை ஐம்பாற் பொருள்களையும் தருமென்று கூறியிருப்பதாலும், குறியெச் சங்கள் பல வகைப்படுமென்பதும் தானே அமையும் ஆதலால், சில உரைகாரர் குறிப்பெச்சம் ஒன்றே யென்பது ஒவ்வாது.

மேற்கூறிய பெயர். வினை. உம்மை, சொல்,என, பிரிநிலை, ஒழியிசை, எதிர்மறை. இசை. குறிப்பு என்ற பத்து எச்சங்களும் தத்தமக்குரிய எச்சச் சொற்களைக் கொண்டுமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரெச்ச இலக்கணம் முன்னே விளக்கப்பட்டது. (பக்கங்கள் *132, 377,378, 394, 397*) .

நடந்த கோவிந்தன் இங்கே நடந்த என்னும் பெயரெச்சம் கோவிந்தன் என்னும் பெயரைக் கொண்டு முடிந்தது. பெயரெச்சத்தின் முடிபுச் சொல் வாக்கியத்தில் வெளிப்படையாக நிற்றல் வேண்டும்.

வினையெச்ச இலக்கணம் *397*ம் பக்கத்தில் விளக்கப்பட்டது. பாய்ந்து வீழ்ந்தான், பாய்ந்து என்னும் வினையெச்சம் வீழ்ந்தான் என்னும் வினைச்சொல்லைக் கொண்டு முடிந்தது. வினையெச்சத்தின் முடிவுச் சொல் வாக்கியத்தில் வெளிப்படையாக நிற்றல் வேண்டும்.

உம்மை எச்சமாவது உம் என்ற இடைச்சொல் எஞ்சிநிற்பது. இது எச்சவும்மை என்றும் கூறப்படும்.

இது “இறந்தது தழீ இய எச்சவும்மை” ( முன்நடந்த ஒன்றை இப்பொழது தழுவிக் கூறும் எச்சம்) என்றும். “எதிரது தழீ இய எச்சவும்மை” (பின்நடக்கும் ஒன்றை இப்பொழுது தழுவிக் கூறும் எச்சம்) என்றும், இருவகைப்படும்.

இறந்தது தழீ இய எச்சவும்மைக்கு உதாரணம்:

பொன்னனும் வந்தான். இங்கே பொன்னனும் என்ற எச்சவும்மை இவன் வரமுன் வேறொருவன் வந்தான் என்பதைக் காட்டி முடிந்தது. இதில்,எச்சவும்மை குறிக்கும் வேறொருவன் என்ற சொல் மறைந்து நின்றது.

எதிரது தழீய எச்சவும்மைக்கு உதாரணம்: பொன்னனும் வருவான்.

சொல் எச்சமாவது சொல் என்னும் மொழி குறைந்து நிற்பது. சொல்லெச்சம் சொல் என்னும் மொழியைக் கொண்டு முடியும்.

உ.ம். நல்லவன் என்றான். இங்கே என்றான் என்னுஞ் சொல்லெச்சம், என்று சொன்னான் எனப் பொருள்பட்டு, மறைவாக நிற்கும் சொல் என்பதோடு முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிநிலை எச்சமாவது பல பொருள் ஒரு பொருளைத் தனியே பிரித்துக் கூறும் எச்சச் சொல்லாம். பிரிநிலை எச்சம் தனக்குரிய எச்சத்தைக் கொண்டு முடியும்.

உ-ம். மாணிக்கமே வாங்கினன் இங்கே மாணிக்கமே என்னும் பிரிநிலை எச்சம் ஏனை இரத்தினங்களை வாங்கிற்றிலேன் எனப் பிரித்துக் காட்டிற்று.

என எச்சமாவது என என்னும் இடைச்சொல், பெயர் சொல்லையாவது வினைச்சொல்லையாவது அடுத்து முடிவு பெறும் எச்சமாம். உ-ம். கடல் ஒல்லென ஒலித்தது . இங்கே ஒல்லென என்றதில் என என்னும் எச்சச் சொல் ஒலித்தது என்ற வினையைக் கொண்டு முடிந்தது. என எச்சத்தின் முடிக்கும் சொல் வெளிப்படையாக இருக்கும்.

ஒழியிசை எச்சமாவது ஒழிந்த சொல்லை வாக்கியத்தின் பயனாக இசைத்துத் தருவது. உ-ம். படிக்கவோ வந்தாய் இங்கே படிக்கவோ என்னும் ஒழி இசை எச்சம் விளையாட வந்தாய் என்று பொருள்படும்.

எதிர்மறை எச்சமாவது ஒரு விஷயத்தை எதிர்மறுத்துக் கூடிவருஞ் சொல்லாம். உ-ம். யானோ எடுத்தேன். இங்கே யானோ என்னும் எதிர் மறை எச்சம் யான் எடுத்திலேன் என்பதோடு முடிந்தது.

இசை எச்சமாவது ஒரு வாக்கியத்தின் பொருளை நன்கு முடித்தற் பொருட்டு அவ்விடத்திற்கேற்ப ஒரு சொல்லும் பல சொல்லும் வருவித்து முடிப்பதாம். உ-ம். "கற்றதனா லாயபயனென் கொல்." இங்கே இந் நூலைக்கற்றதனால் யாது பயன் என ஒரு சொல் வருவிக்கப்பட்டது. "அந்தாமரை யன்னமே, நின்னை யான் பிரிந்தாற்றுவனே ." இங்கே என்னுயிரிலுஞ் சிறந்த நின்னை என்று பல சொற்கள் வருவித்துரைக்கப்பட்டன.

குறிபெச்சம் பக்கம் 395-6,420 இல் கூறப்பட்டது.

இவற்றிற்குச் சூத்திரங்கள்: -

ஙஉ. பெயர்வினை யும்மைசொற் பிரிப்பென வொழியிசை
எதிர்மறை யிசையெனுஞ் சொல்லொழி பொன்பதும்
குறிப்புந் தத்த மெச்சங் கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்: -

பெயர் வினை உம்மை சொல் பிரிப்பு என ஒழி இசை எதிர்மறை இசை எனும் = பெயரெச்சம், வினையெச்சம், உம்மை எச்சம், சொல்லெச்சம், பிரிப்பெச்சம், என எச்சம், ஒழி இசை எச்சம், எதிர் மறை எச்சம், இசை எச்சம் என்னும்

சொல்லொழிபு ஒன்பதும் = சொல்லெச்சங்கள் ஒன்பதும் குறிப்பும் = குறிப்பெச்சத் தொகையாகிய பத்தெச்சங்களும் தத்தம் எச்சம் கொள்ளும் = அந்த எச்சங்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடியும்.

2. தொகைநிலைத் தொடர்மொழி. (ப. 407, 423, 434)

பெயர்ச்சொல்லுடன் பெயர்ச்சொல்லும், பெயர்ச் சொல்லுடன் வினைச்சொல்லும், இவற்றினிடையே வேற்றுமை யுருபுகளும் வினையுருபுகளும் பண்புருபுகளும் உவமையுருபுகளும் உம்மையுருபுகளும் மறைந்தும், வேறு மொழிகள் மறைந்தும் இருக்க, இரண்டு சொல் முதலாகத் தொடர்ந்து ஒரு சொற் போல் நிற்பது தொகைநிலைத் தொடர் மொழி எனப்படும்.

உ-ம். மரக்கொம்பு, மரம் என்னும் பெயரும், கொம்பு என்னும்பெயரும் புணரும் பொழுது மரத்தினது கொம்பென்று ஆறாம் வேற்றுமை உருபுடன் நிற்க வேண்டியது. அவ்வேற்றுமை மறைய இரு சொல்லும் ஒரு சொற் போல் நிற்பது தொகைமொழியாம்.

நிலங்கடந்தான் (நிலத்தைக் கடந்தான்). இந்தப் பெயர்ச் சொல் வினைச் சொற்றொடரில் இரண்டாம் வேற்றுமை உருபு இடையில் மறைய, இரு சொல்லும் ஒரு சொற்போல நின்றது.

"சிறுதோட் பிறைநுதற் சிற்றிடை-யுவதி" (மிருதுவான தோளையும், பால சந்திரனைப் போன்ற நெற்றியையும், சிறு இடையையுமுடைய யுவதி என்பவள்). இந்த தொடரில் சிறுதோள் பிறைநுதல் சிற்றிடை-என்ற இவ்விரண்டு சொற்கள், இடையிலுள்ள இரண்டாம் வேற்றுமை உருபுகள் மறைய நின்றன.

இப்படிப்பட்ட தொகைநிலைத் தொடர் மொழிகள் வேற்றுமைத்தொகை, வினைத்தொகை. பண்புத்தொகை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மைத்தொகை, அன்மொழித் தொகை எனஆறு வகைப்படும்.

இவற்றிக்குச் சூத்திரங்கள்-

௩௬. பெயரோடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளி னவற்றி னுருபிடை
ஒழிய விரண்டு முதலாந் தொடர்ந்தொரு
மொழிபோ னடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்

இதன் பொருள்:

பெயரொடுபெயரும் =பெயர்ச்சொல்லோடு பெயர்சொல்லும் வினையும் = பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் வேற்றுமை முதலிய பொருளின் = பின் சொல்லப்படும் வேற்றுமை முதலிய அறுவகைப்பொருட் புணர்ச்சிக்கண்

அவற்றின் உருபு இடைஒழிய = இவற்றின் உருபுகள் நடுவிலே தொக்கு நிற்ப

இரண்டு முதலாந் தொடர்ந்து ஒரு மொழிபோல் நடப்பன = இரண்டு சொற்கள் முதலாகப் பல சொற்கள் தொடர்ந்து ஒரு சொற்போல் நடப்பவை.

தொகை நிலைத்தொடர்ச்சொல் = தொகைநிலைத் தொடர்ச் சொற்களாம்.

௩௪. வேற்றுமை வினைபண் புவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையா றாகும்.

இதன்பொருள்:

வேற்றுமைத் (தொகை) வினைத் ( தொகை) = வேற்றுமைத் தொகையும் வினைத்தொகையும்

பண்புத்(தொகை) உவமைத்(தொகை) = பண்புத் தொகையும் உவமைத் தொகையும்

உம்மைத்(தொகை) அன்மொழித்( தொகை) என = உம்மைத் தொகையும் அன்மொழித்தொகையும் என்று

அ தொகை ஆறும் = முன் சொல்லிய தொகைநிலைத் தொடர் மொழி ஆறுவகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமைத் தொகையாவது, வேற்றுமைஉருபு இரண்டு சொற்களின் இடையில் மறைந்து நிற்பது. இவ்வுருபுகள் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை ஈறாக ஆறுவகைப்படும். அவற்றியியல்பு பெயரியலில் விளக்கப்பட்டது. (ப. 369).

இதற்குச் சூத்திரம்:-

**௩௫. இரண்டு முதலா மிடையா றுருபும்**
**வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.**

இதன் பொருள் :

இடை இரண்டு முதலாம் ஆறுருபும் = எழுவாய்க்கும் விளிக்கும் இடையே நின்ற இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமை யுருபுகளும்.

வெளிப்படலில்லது வேற்றுமைத் தொகை = தொக்க தொடர் மொழிகள் வேற்றுமைத் தொகைகளாம்.

வினைத்தொகையாவது, வினையுருபு இரண்டு சொற்களுக் கிடையில் தொக்குநிற்குந் தொடர் பெயரெச்சம் பெயரைக் கொண்டு முடியும் பொழுது, பெயரெச்சத்தின் பகுதிமாத்திரம் நிற்க, காலத்தைக் காட்டும் உறுப்புக்களாகிய இடைநிலையும், விகுதியும், தொக்கநிற்குந் தொடர் வினைத்தொகை எனப்படும். உ-ம். கொல்களிறு (கொல்கின்ற யானை). இது மூன்று காலத்திற்கும் பொதுவாயிருக்கும். கொன்ற களிறு) (இறந்தகாலம்), கொல்கின்ற களிறு (நிகழ்காலம்), கொள்லுங் களிறு (வருங்காலம்) என்ற மூன்று பொருளிலும் கொல்களிறு என்பது வரும்.

இதற்குச் சூத்திரம்:-

**௩௬. காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.**

இதன் பொருள்: வினைத்தொகை காலம் = வினைத் தொகையாவது காலங் காட்டும். வினையுருபாகியஇடைநிலையும் விகுதியும் முதலியன

கரந்த பெயரெச்சம் = மறைந்து நின்ற பெயரெச்சங்களாம்.

பண்புத்தொகையாவது, பண்புருபு இரண்டு சொற்களின் இடையில் தொக்கு நிற்குந் தொடர். இது வர்ணம் வடிவு அளவு சுவை முதலிய குணப்பெயரும் குணிப்பெயரும் நிலைமொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமொழிகளாக புணரும் பொழுது குணத்துக்கும் குணிக்கும் உள்ள சம்பந்தத்தை காட்டுவதற்கு நடுவில்வரும் ஆகிய என்னும் சொல்லுருபு மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

உ-ம். கருங்குதிரை (வர்ணப்பண்புத்தொகை) = கருமையாகிய குதிரை. வட்டக்கல் (வடிவுப் பண்புத்தொகை) = வட்டமாகிய கல். ஒரு மாடு (அளவுப் பண்புத்தொகை) = ஒன்றாகிய மாடு . புளிங்கறி (சுவைப்பண்புத்தொகை) = புளிப்பாகியகறி.

நிலைமொழி பண்புமொழியாகாமல் பொதுப்பெயராகவும், வருமொழி சிறப்புப் பெயராகவும். - நிலைமொழி சிறப்புப் பெயராகவும் வருமொழி பொதுப்பெயராகவும், - இரு மொழியும் சிறப்புப் பெயராகவும்வருவது இருபெயரொட்டுப் பண்புத் தொகை எனப்படும். உ-ம் ஆயன் பூதன் (ஆயனாகிய பூதன்). இதில் ஆயன் (இடையன்) என்பது பொதுப்பெயர். பூதன் என்பது ஒருவனைக் குறித்த சிறப்புப் பெயர். சாரைப்பாம்பு. இதில் நிலை மொழியாகிய சாரை சிறப்புப் பெயர், வருமொழியாகிய பாம்பு பொதுப்பெயர். ஷண்முக முருகன். இதில் இருமொழியும் சிறப்புப் பெயர்.

இவற்றிற்குச் சூத்திரம் : -

**௩௭. பண்பை விளக்கு மொழிதொக் கனவும்**
**ஒரு பொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொகை.**

இதன் பொருள்: பண்பை விளக்கும் = பண்புக்கும் பண்பிக்குமுள்ள ஒற்றுமையை விளக்கும் ஆகிய என்ற சொல்.

தொக்கனவும் = மறைந்து நிற்பனவும்

ஒரு பொருட்கு இருபெயர் வந்தவும் = ஒரு பொருளுக்கு இரண்டு பெயர்கள் வந்தனவும்.

குணத்தொகை = பண்புத்தொகையாம்.

உவமைத்தொகையாவது, உவமைச்சொல்லும் உவமேயச் சொல்லும் தொடருமிடத்து அவற்றினிடையிலே போல முதலிய உவம உருபுகள் மறைந்து நிற்கும் தொடராம். உ-ம். புலிக்கொற்றன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( புலி போலும் கொற்றன்) : துடியிடை - (உடுக்குப்போன்ற இடை ).

உவம உருபுகளாவன, போல புரைய ஒப்ப உறழ மான கடுப்ப இயைய ஏய்ப்ப நேர நிகர அன்ன இன்ன முதலியனவாம்.

இவற்றிற்குச் சூத்திரங்கள்: -

**௩அ. உவம உருபில துவமைத் தொகையே.**

இதன் பொருள்:

உவம உருபு இலது உவமைத்தொகை = உவம உருபுகள் மறைந்து நின்ற தொடர்மொழி உவமைத்தொகையாம்.

**௩௯. போலப் புரைய ஒப்ப உறழ**
**மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப**
**நேர நிகர அன்ன இன்ன**
**என்பனவும் பிறவும் உவமத் துருபே.**

இதன் பொருள் : போல முதல் இன்ன ஈறாக சொல்லப்பட்ட பன்னிரண்டு சொற்களும் இவை போல்வன பிறவும் உவம உருபுகளாம்.

உம்மைத்தொகையாவது, உம் என்ற இடைச்சொல் தொக்கு நிற்கும் தொடர். எண்ணலளவை எடுத்தலளவை முகத்தலளவை நீட்டலளவை என்னும் நால்வகை அளவைகளால் பொருள்களை அளக்கும் பொழுது அவ்வளவை பெயர்களுள் உம்மை தொக்கு நிற்பது உம்மைத்தொகையாம்.

உ-ம். ஒன்றும் காலுமாகிய எண்ணல் உம்மைத்தொகை ஒன்றேகால் என்று நின்றது. கழஞ்சும் காலுமாகிய எடுத்தல் உம்மைத் தொகை கழஞ்சே கால் என்று நின்றது. கலனும் குறுணியுமாகிய முகத்தலும்மைத்தொகை கலனே குறுணி என நின்றது. சாணும் அங்குலமும் ஆகிய நீட்டலும்மைத்தொகை சாணங்குலம் என நின்றது.

இதற்குச் சூத்திரம்: -

**௩ம. எண்ண லெடுத்தல் முகத்த னீட்டல்**
**எனுநான் களவையு ளும்மில தத்தொகை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள் :

எண்ணல் நீட்டல் என்னும்;= எண்ணலளவை எடுத்தலளவை முகத்தலளவை நீட்டலளவை என்று சொல்லப்படும்.

நான்கு அளவையுள் உம் இலது அத்தொகை = நால்வகை அளவைப்பொருள்களுள் உம்மை இல்லாதது அவ்வும்மைத் தொகை களாம்.

அன்மொழித் தொகையாவது, மேற்கூறிய ஐந்து தொகை களும் அல்லாத மொழிகள் தொக்கி நிற்பது. (அல் மொழி - அன்மொழி = அல்லாத மொழி) . இவ்விதம் மறைந்த நிற்கும் மொழிகள் தமக்குரிய பொருளை உணர்த்தாமல் தம்மோடு சம்பந்தப்பட்ட பிறிதொரு பொருளை உணர்த்தும்.

உ-ம். பூங்குழலவிழ்ந்திடப் புலம்பினாள். இவ்வாக்கியத்தில் பூங்குழல் என்னுந் தொகைமொழி பூவையணிந்த கூந்தலென்னும் தனக்குரியபொருளை உணர்த்திற்று.

பூங்குழல் புலம்பிய புலம்பல் கேட்டதே. இந்த வாக்கியத்தில் பூங்குழல் என்னும் தொகைமொழி பூவையணிந்த கூந்தலையுடை பெண் என்று தனக்குரிய பொருளைக் குறியாது தன்னோடு சம்பந்தப்பட்ட பெண்ணை உணர்த்திற்று.

பூங்குழல் என்னுஞ் சொல்லுக்கு இயல்பான பொருள் பூவை அணிந்த கூந்தல் . முதலுதாரணத்தில் இதுவே பொருளாயிற்று. இரண்டாமுதாரணத்தில் கூந்தலோடு சம்பந்தப்பட்ட பிற பொருளாகிய பெண்ணை உணர்த்திற்று.

அன்மொழித்தொகை ஆறு வேற்றுமைகளில் நின்றும், வினைத்தொகையில் நின்றும், பண்புத்தொகையில் நின்றும், உவமைத்தொகையில் நின்றும், உம்மைத்தொகையில் நின்றும் பிறக்கும். இவற்றிற்கு உதாரணங்கள்.

பூங்குழல்(பெண்). இது இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்து பிறந்த அன்மொழித்தொகை. (பூங்குழல் = பூவையணிந்த கூந்தலையுடையாள்) .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்றொடி . இது பொன்னாலாகிய தொடியையுடையாள் என, மூன்றாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

தமிழிலக்கணம். இது தமிழிலக்கணஞ் சொன்ன நூல் என்றும் நான்காம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

பொற்றாலி. இது பொன்னினாகிய தாலி என்று ஐந்தாம் வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

சேரன்குடி. இது சேரனது குடிப்பிறந்தார் இருக்குமூர் எனப்பட்டு ஆறாம் வேற்றுமைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

கீழ்வயிற்றுக்கழலை. இது கீழ் வயிற்றின் கண் எழுந்த கழலை (கட்டி) போல்வான் என்று ஏழாம்வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

தாழ்குழல். இது தாழ்ந்த (தொங்குகின்ற) கூந்தலையுடையா ளென்று வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

ஆண்டகை. இது ஆண்மையாகிய தகுதியை (குணத்தை) உடைய ஆடவன் என்று பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித்தொகை.

உயர்மெய். உயிரும் மெய்யும் கூடிப் பிறந்த எழுத்து என உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

தகரஞாழன் மார்பு ( தகரமும் ஞாழலும் கூடி உண்டாகிய சாந்து பூசிய மார்பினையுடையான்). இது பலசொற் றொக்கு வந்த தாதலின், பன்மொழித்தொடர் எனப்படும். தகரம் = வாசனைப் பொடி. ஞாழல்= குங்குமம்.

இதற்குச் சூத்திரம்: -

ஙயக. ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி.

இதன் பொருள்: ஐந்தொகை மொழிமேல் = வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத் தொடர்மொழிகளுக்குப் புறத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறதொகல் = அவ்வைந்தனுருபுமல்லாத பிறமொழிகள் தொக்கு நிற்பன

அன்மொழி = அன்மொழித்தொகையாம்.

இதுவரையில் தொகை நிலைத்தொடர் மொழிகள், வேற்றுமைத் தொகை வினைத்தொகை பண்புத்தொகை உவமைத் தொகை உம்மைத்தொகை அன்மொழித்தொகை என, அறுவகைப்படு மென்று கூறினாம்.

இனி மேற்கூறிய தொகைமொழிகளில் நிலைமொழிகளிலோ வருமொழிகளிலோ தத்தம் பொருள் சிறந்து நிற்கும் என்பதும், இடைத்தொகைக்கும் பெயர்தொகைக்குமுள்ள வேறுபாடுகள் இன்னதென்பதும், உம்மைத்தொகையின் புறநடை இன்னதென்பதும், தொகைமொழிகள் பலபொருள்படுதல் எவ்வாறென்பதும், விளக்க வேண்டியது.

தொகைநிலைத்தொடரிற் பொருள் சிறக்குமிடம்.

குடம்வனைந்தான் (குடத்தைவனைந்தான், இரண்டாம் வேற்றுமைத்தொகை ). விரிபூ (விரிகின்ற பூ, வினைத்தொகை), செந்தாமரை ( செம்மையாகிய தாமரை, பண்புத்தொகை) என்னும் தொடர்மொழிகளில், முன்மொழிகளாகிய குடம்,விரி,செம் என்பன முறையே பானை, விரியாத பூ, வெண்டாமரை யென்பவற்றை விலக்கி நிற்றலால், அந்த முன்மொழிகள் சிறந்தன.

நிலமுழுதான் (இரண்டாம் வேற்றுமைத்தொகை), சுடுதீ (வினைத்தொகை), செஞ்ஞாயிறு (பண்புத்தொகை) என்னும் தொடர்மொழிகளில், பின்மொழிகளாகிய உழுதல், தீ ஞாயிறு என்பவை முறையே நிலம், சூடு, செம்மை என்பவற்றைத் தாமே யறிவித்தலால், அந்தப் பின்மொழிகள் சிறந்தன.

கபிலபரணர், இராப்பகல், என்னுந்தொடர் மொழிகளில் உம்மைத்தொகையாகிய கபிலரும் பரணரும், இரவும் பகலும் என்ற முன்பின் மொழிகளிரண்டும் சிறந்தன.

அன்மொழித்தொகைகளாகிய பூங்குழல், உயிர்மெய் என்பவற்றில், பூங்குழல் பூவையணிந்த கூந்தலையுடைய பெண் என்றும், உயிர் மெய் உயிரும் மெய்யும் கூடிப் பிறந்த எழுத்து என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்படுதலால், முன்மொழி பின்மொழி இரண்டிலும் பொருள் சிறவாது, அவற்றிற்கு அலாதியான பெண் என்பதிலும் எழுத்து என்பதிலும் பொருள் சிறந்தன.

இதற்குச் சூத்திரம்: -

**௩௰௨. முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி**
**எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள்.**

இதன்பொருள்:

முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி = முன்னிற்கும் மொழியும் பின்னிற்கும் மொழியும் பலமொழியும் (இம்மொழி களல்லாமல்) புறத்துவரு மொழியும்.

எனு நான்கு இடத்தும் = என்கிற நான்கு இடங்களுள் ஒன்றிலே தொகைப்பொருள் சிறக்கும் = தொகை நிலைமொழித் தொடர்கள் பொருள் சிறந்து நிற்கும்.

இடத்தொகைக்கும் பெயர்த்தொகைக்கும் வேறுபாடு.

இடத்தொகையாவது, இடப்பொருளையுணர்த்தும் ஏழாம் வேற்றுமைத்தொகை. உ.ம். வடுகக் கண்ணன். வடுகநாட்டிற் பிறந்த கண்ணன் என்று வல்லின சகர ஒற்று மிகுந்து இடத்தொகையாயிற்று.

பெயர்த்தொகையாவது மனிதரது பொதுப்பெயரும் சிறப்புப் பெயரும் சேர்ந்து ஆகிய என்னும் பண்புரு தொக்கநிற்கிற தொகையாம். உ-ம். வடுகங் கண்ணன். இதில் மெல்லின ஙகர ஒற்று மிகுந்து வடுகனாகிய கண்ணன் என்று பொருள்பட்டது.

வடுகங் கண்ணன் என்பது சில சமயத்தில் வடுகனது மக னாகிய கண்ணனென ஆறாம் வேற்றுமைப் பொருள்படுதலுமுண்டு.

இதற்குச் சூத்திரம்: -

**௩௰௩. வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும்**
**மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும்.**

இதன் பொருள் :

வல்லொற்று வரின் = வரின் (நிலைமொழி வருமொழிகளுக் கிடையில் ) வல்லொற்று மிகுந்தால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தொகையாகும் = இடப்பொருளில் தொக்க (மறைந்த) ஏழாம் வேற்றுமைத் தொகையாம்.

மெல்லொற்றுவரின் = மெல்லெழுத்திடையில் வந்தால் பெயர்த்தொகையாகும் = பெயர்கள் தொக்க இருபெயரெட்டுப் பண்புத்தொகையாம்.

உம்மைத்தொகைக்குப் புறநடை, அதாவது, உம் என்னும் தன்மை மறைந்து நிற்றலுக்கு புறம்பான நடை.

கபிலபரணர் வந்தார் என்னும் தொடரில் கபிலனும் பரணனும் என்ற ஒருமைச் சொற்களிலுள்ள ஈற்றிலுள்ள உம்மை மறைந்தால் கபிலர் பரணர் என்கின்றாகி, முதல் நகர ஒற்றுக் கெட்டு, இரண்டாம் னகர ஒற்று ரகர ஒற்றாகத் திரிந்து கபிலபரணர் என்றாயிற்று.

சேர சோழ பாண்டியர் என்பதும், வில்லிவாளியார் ( வில்லை யுடைய ஒருவனும் வாளையுடைய வேறொருவனும்) என்பதும் அவ்வாறே.

சேரனும் சோழனும் பாண்டியனும் என்ற சேர சோழ பாண்டியர் என வரும்.

வில்லினனும் வாளினனும் என்ற தொடர் வில்லி வாளியர் என வரும்.

இவை உயர்திணை ஒருமையில் உம்மை தொக்கு நின்றபடி யால், பலர்பாலீறாக முடிந்தன.

அஃறிணையிலும் ஒன்றன் பாலில் வரும் உம்மைத்தொகை இராப்பகல் என ஒருமையிலும் இராப்பகல்கள் என்னும் பன்மையிலும் வரும்.

இதற்குச் சூத்திரம்: -

**௱௰௪. உயர்திணை உம்மைத் தொகைபல ரீறே**

இதன்பொருள் :

உயர்திணை உம்மைத்தொகை = உயர்திணை ஒருமையில் வருகிற உம்மைத்தொகை

பலர் ஈறே = பலர்பாலீறாக முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவியல்

தொகைமொழிகள் பலபொருள் பாடுதல்.

வேற்றுமை வினைபண்பு உவமை உம்மை அன்மொழி என்ற அறு வகை மொழிகளில், வேற்றுமைத்தொகை மொழிகளிலும் உம்மைத்தொகை மொழிகளிலும் பல பொருள்கள் பெரும்பாலுந் தோன்றும். மற்றைய தொகை மொழித்தொடர்களில் பலபெருள் தோன்றுவது அரிது.

வேற்றுமைத்தொகைக்கு (புணர்ச்சிக்கு) உதாரணங்கள்.

தெய்வவணக்கம். இந்த தொடர் தெய்வத்தை வணங்குதல் என இரண்டாம் வேற்றுமை பொருள் பெற்றும், தெய்வத்துக்கு வணக்கஞ் செய்தல் என நான்காம் வேற்றுமைப் பொருள் பெற்றும் வரும்.

தற்சேர்ந்தார். இதில் தன்னைச்சேர்ந்தார் என இரண்டாம் வேற்றுமைப் பொருளைப் பெற்றும், தன்னோடு சேர்ந்தார் என மூன்றாம் வேற்றுமைப் பொருளைப்பெற்றும், தன்னிடத்திற் சேர்ந்தார் என ஏழாம் வேற்றுமைப் பொருள் பெற்றும்,இருக்கும்.

சொல்லிலக்கணம் இதில் சொல்லினது இலக்கணம் ஆறாம் வேற்றுமைப்பொருள் பெற்றும், சொல்லுக்கு இலக்கணம் என நான்காம் வேற்றுமைப் பொருள் பெற்றும், சொல்லின் கண் இலக்கணம் என ஏழாம் வேற்றுமைப் பொருள் பெற்றும், வரும்.

பொன்மணி, இது பொன்னாலாகிய மணி என மூன்றாம் வேற்றுமைப்பொருள் பெற்றும், பொன்னாகிய மணி (பொன்னே மணி ரூபமாயிற்று ) எனத் பண்புத்தொகை பெற்றும், பொன்னின் கண்மணி (பொன்னிலிடப்பட்ட இரத்தினம்) என ஏழாம் வேற்றுமைப் பொருள் பெற்றும், பொன்னும் மணியும் என உம்மைத்தொகைப்பொருள் பெற்றும் வரும்.

மர வேலி, இது மரத்தாலாகிய வேலியென மூன்றாம் வேற்றுமைப் பொருள் பெற்றும், மரத்தினது வேலியென ஆறாம் வேற்றுமைப் பொருள் பெற்றும், மரமாகிய வேலி எனப் பண்புத்தொகைப் பொருள் பெற்றும், மரத்தைச் சார்ந்த வேலியென இரண்டாம் வேற்றுமைப் பொருள் பெற்றும் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் இது சொல்லினது பொருள் என ஆறாம் வேற்றுமைப்பொருள் பெற்றும், சொல்லால் அறியப்படும் பொருள் என் மூன்றாம் வேற்றுமைப்பொருள் பெற்றும், வரும்.

இவற்றில் முதலர்த்தம் சொன்மயமாகவேயிருக்கும். மோக்ஷமென்ற சொல் நிர்வாணமென்றது போலவும், மேரு என்ற சொல் பொன்மலை என்றது போலவும் இருக்கும், சங்கரன் என்ற சொல் சிவன் என்றது போலவும், இருக்கும் அறியாதவனுக்கு இச்சொற்களெல்லாம் சொல்ரூபமே, பொருளற்றவை. இவனுக்குக் கூறப்பட்ட சொல்லுக்குள் இருக்கும் பொருளை அறிய மாட்டான்.

சொற்பொருளின் இரண்டாம் அர்த்தம் சொல்லாற் பக்குவசாலி அறிகின்ற பொருளாம். மேக்ஷமென்ற சொல்லைக் கேட்டவன் அதென்னவென்று ஆவலோடு விசாரித்தல், மூர்க்க நெறியிலிருந்து விலகிப் பத்திநெறியிற் சென்று சமத்துவப்புத்தி பெற்று, ஞானசாதனைகளாகிய பிரணாமய யோகத்தை அல்லது மனோலய யோகத்தைக் கூடிநின்றால் மும்மலங்களைக் விட்டுக் கைவல்லிய நிலையைச்சார்ந்த, சிவமயமாகலாம் என்று முறையே தனது புத்தி பக்குவத்தால் அறிவான். இப்பொருள்களெல்லாம் மோக்ஷமென்ற சொல்லிலடங்கியிருப்பது போல, வேறு சொல்லிலும் ஒன்றிரண்டு முதலிய பொருள்கள் அடங்கியிருக்கலாம். ஆதலால் சொற்பொருள் சொல்லுக்குளிருக்கும் பொருள் என்றறிக.

இதற்குச் சூத்திரம்: -

**௱௰௫. தொக்குழி மயங்குந இரண்டு முதலேழ்**
**எல்லைப் பொருளின் மயங்கு மென்ப.**

இதன்பொருள் :

தொக்க உழி = (வேற்றுமை உருபு முதலியன) மறைந்து நின்ற இடத்து

மயங்குந = (பல பொருளைத் தோற்றுவித்து ) மயக்கத்தைச் செய்யும் தொடர்மொழிகள்.

இரண்டு முதல் ஏழ் எல்லைப் பொருளின் = இரண்டு பொருள் முதலா யெழுகின்ற பொருள்களால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈண்டு, முதலேழ் என்ற வாக்கியம் பாட்டிசைக்காக நீடிக்கப்பட்டது இதன் சுயவடிவம் முதலெழு என்றறிக. எழு என்பது ஏழ் என வந்ததை உய்த்துணராதவர்கள், இரண்டு முதல் ஏழீறாகிய பொருள்களால் மயங்குமென அர்த்தஞ்செய்து, சொற்பொருள் போன்ற தொகைமொழிகளுக்கு எழு பொருள்வலிந்து அமைக்க முயல்வார்கள்.

மயங்குமென்ப = மயக்கத்தைச் செய்யும் என்பர் புலவர்.

சொல் சடப்பொருளாதலால் அதற்கு மயக்கம் இல்லை. அறியும் ஆத்மா சொற்களின் விகற்பகங்களைக் கண்டு அவற்றின் பொருள் இதுவோ அதுவோ என்று சந்தேகப்படும்.

3. தொகாநிலைத்தொடர்மொழி (ப. *407, 435, 436*)

தொகாநிலையாவது வேற்றுமை உருபுகளும் மற்றைய உருபுகளும் தொகாமலும் (மறையாமலும்), ஒரு சொற்போலாகாமற் பிளவுபட்டும், சொற்கள் தொடர்ந்து நிற்பதாம்.

அவை வினைமுற்றுத் தொடர், பெயரெச்சத்தொடர் வினையெச்சத்தொடர், எழுவாய்தொடர், விளித்தொடர், இரண்டாம் மூன்றாம் நான்காம் ஐந்தாம் ஆறாம் ஏழாம் வேற்றுமைத் தொடர்கள், தொகா நிலைத்தொடர்கள் இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் என்பன.

இவற்றுக்கு உதாரணங்கள் : குழையன் கொற்றன். குழையன் (குண்டலத்தை தரித்தவன்) கொற்றவன் என்றது வினைமுற்று. குழையனானவன் கொற்றன் எனவிரிந்து நிற்கும்போது தொகா நிலைத் தொடராம்.

உண்ட குதிரை, பெயரெச்சத்தொடர், உண்டு போனான், வினையெச்சத் தொடர், சண்முகன் படிக்கிறான், எழுவாய்த்தொடர். சங்கரா வா, விளித்தொடர்.

மரத்தைத் தறித்தான், இரண்டாம் வேற்றுமைத் தொடர்: மரத்தால் விழுந்தான், மூன்றாம் வேற்றுமைத் தொடர்: வறியார்க்குச் சோறிட்டான், நான்காம் வேற்றுமைத்தொடர்: ஊரீனீங்கினான் ஐந்தாம் வேற்றுமைத்தொடர் பசுவின் பால், ஆறாம் வேற்றுமைத் தொடர் : கடலின் கண் விழுந்தான், ஏழாம் வேற்றுமைத் தொடர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொன்று, இடைச்சொற்றொடர் (மற்று ஒன்று என்பன இடைச்சொற்கள்). கழிப்பெருங்காதல், உரிச்சொற்றொடர். (கழி = மிகுந்த, பெரும் = பெரிய, என்றவை உரிச்சொற்கள்). புலிபுலி, அடுக்குத்தொடர்.

இதற்குச் சூத்திரம்: -

**ஙயகூ. முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடையுரி யடுக்கியவை தொகாநிலை.**

இதன்பொருள்:

முற்றுப்பொருள்= வினைமுற்றுப் பொருளிலும்

ஈரெச்ச எழுவாய் விளி பொருள் = பெயரெச்ச வினையெச்சப் பொருளிலும் விளிப்பொருளிலும்

ஆறுருபு = இரண்டாம் வேற்றுமை உருபு முதலிய ஆறுருபுகளும் விரிந்து நிற்பனவாம்.

இடை உரி அடுக்கு = இடைச்சொற்புணர்ச்சி, உரிச்சொற் புணர்ச்சி, ஒருசொல்லடுக்கி வரும் புணர்ச்சிகளுமாகிய இவை தொகாநிலை = இவ்வொன்பதும் தொகாநிலைத் தொடர்மொழி களாம்

4. வழுவாநிலையும் வழுவமைதியும். (ப.436, 472)

இவற்றில், வழுவாநிலை என்பது பிழைபாடற்றநிலை, அதாவது, இலக்கண முறைகளுக்கு ஒத்தபடியிருத்தலாம்.

திணை பால் இடம் காலம் என்பவற்றில் மாறுபடாமல் முடிக்குஞ் சொற்களும் முடிக்கப்படுஞ் சொற்களும் தொடர்ந்து நிற்றலும், ஆன்றோரது சொற்பிரயோக மரபு தவறாது நிற்றலும். வினாவும் விடையும் பொருத்தமாக நிற்றலும், வழுவாநிலை (வழாநிலை) எனப்படும். மரபு = தொன்று தொட்டு வழங்கு முறைமை.

வழுவாவன: திணை பால் இடம் காலம் என்பவற்றை உணர்த்தும் சொற்களின் முடிபுகள் ஒன்றிற்கொன்று ஒவ்வாமலும், மரபு தவறியும், வினாவும் விடையும் முறை பிறழ்ந்தும், வருவனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழு = இலக்கணக் குற்றமுடையது, இலக்கணத்தில் தவறி வருவது.

இலக்கணக்குற்ற முடையனவாகிய சொற்பிரயோகங்களில் ஆன்றோரால் ஒப்புக்கொள்ளப்பட்ட சொற்கள் எவையோ, அவை அவர்களின் அமைதியாதலால். வழுவமைதிகள் எனப்பட்டன.

வழுவாநிலையும் வழுவமைதியும் கொள்ளப்படும். வழு தள்ளப்படும்.

வழுவுக்கு உதாரணங்கள்: அம்மை வந்தது. அம்மை உயர்திணைப் பெண்பால், வந்தது அஃறிணை. ஆதலால் திணையிலும் பாலிலும் சொற்றொடர் வழுவிற்று.

அம்மை வந்தாள் ,(அல்லது உயர்த்தற்பொருட்டு, வந்தார்) என்பது வழாநிலை.

குதிரை வந்தனா. குதிரை அஃறிணை. வந்தானா உயர்திணை. இங்கே திணையில் வழுவிற்று.

முருகன் வந்தாய். முருகன் படர்க்கை, வந்தாய் முன்னிலை யாதலின், இடத்தைப்பற்றி வழுவிற்று.

நேற்று வருவேன். நேற்று இறந்த காலம், வருவேன் எதிர் காலமாதலின், காலத்தைப்பற்றி வழுவிற்று.

வினாவுக்குரிய எழுத்துக்கள் முதலில் எ யா, ஈற்றில் ஆ ஓ, முதலிலும் ஈற்றிலும் ஏ என்ற விதி இருப்பது போல விடைக்கு எழுத்திலக்கணங்களில்லை. வினாவெழுத்தைக் கொண்டு வழுவேற்றல் அரிதயிருப்பதாலும் விடைக்குரிய எழுத்துக்கள் இல்லாததாலும் வினாவுக்கும் விடைக்கும் வரும் வழு அர்த்தத்தைப் பற்றியே நிற்கும்.

சந்திரன் உஷ்ணமா? சூரியன் சீதளமா? என்ற வினாக்களில் அதன் தன்மையில் வழு ஏற்பட்டது.

சந்திரன் உஷ்ணமா என்ற கேள்விக்கு அது வெள்ளை யென்றால், அவ்விடை அர்த்தவழுவாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் சீதளமா என்ற கேள்விக்கு அது சிவப்பென்றால், அவ் விடையில் அர்த்தவழுவாயிற்று.

யானைப்பாகனை இடையனென்பதும், ஆட்டிடையனைப் பாகனென்பதும் மரபில் வழுவாயிற்று.

குதிரைக்குஞ்சு, கோழிக் குட்டி என்பனவும் மரபில் வழு.

அதற்குச் சூத்திரம்: -

௱௰௭. திணையே பாலிடம் பொழுது வினாவிறை
மரபா மேலும் மயங்கினாம் வழுவே.

இதன் பொருள் :

திணை பால் இடம் பொழுது = திணையும் பாலும் இடமும் பொழுதும்

வினா இறை மரபு ஆம் ஏழும் = வினாவும் விடையும் மரபு மாகிய ஏழும்.

மயங்கின் வழு ஆம் = முறை தவறி வந்தால் வழுவாம்.

திணையின் கண் வினாவும் விடையும், பாலின் கண் வினாவும் விடையும் வழுவாமல் நிற்றலுக்கு உபாயம்.

கட்டையோ கள்ளனோ தோன்றுகின்றது என்ற தொடரும், கள்ளனோ கட்டையோ தோன்றுகின்றவன் என்ற தொடரும், வழுவாகும் இதனை நீக்குவதற்கு உபாயம்: அது அவன் என்ற திணைகளை விலக்கி, இவற்றிற்குப் பொதுவான உரு என்ற சொல்லைத் ஏற்படுத்துவதே. கட்டையோ கள்ளனோ தோன்றுகின்ற உரு என்பது, திணையின் கண் வினாவழுவாமல் நிற்றலுக்கு உதாரணமென்றறிக.

கட்டையெனத் துணிந்தால் , கள்ளன் அன்று என்பது விடையாகும்: கள்ளனெனத் துணிந்தால் , கட்டை அன்று என்பது விடையாகும்.

இராமனோ இராமாயியோ அங்கே நிற்கின்றவன் என்பதும், நிற்கின்றவள் என்றதும், வழுவாம். உயர்திணைப்பால் சந்தேகப்படும் பொழுது, அப் பால்களுக்குரிய அவன் அவள் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை விலக்கி, இருபாற்கும் பொதுவான அவர் என்பதை ஏற்படுத்தி வினாவுக.

இந்த வினாவைப்பற்றி இராமன் நிற்கின்றான் என்று துணிந்தால். இராமாயி நிற்கவில்லை என்றும், இராமாயி நிற்கின்றாள் என்று துணிந்தால், இராமன் நிற்கவில்லை என்றும், விடையளிக்கப் படும்.

இதற்குச் சூத்திரம்: -

**ாயஅ. ஐந்திணைபா லவ்வப் பொதுவினும்**
**மெய்தெரி பொருண்மே லன்மையும் விளம்புப.**

இதன்பொருள்:

திணைபால் ஐயம் = திணையிலும் பாலிலும் சந்தேகம் தோன்றிய இடத்து அதனை

அவ்வப்பொதுவினும் = அந்தந்த திணைகளுக்கும் பால் களுக்கும் பொதுவான சொல்லாலும்.

மெய்தெரிபொருண்மேல் = உண்மையாகத் துணிந்த பொருள்களின் மேல்.

அன்மையும் விளம்புவ = அல்லாத தன்மையை வைத்துங் கூறுவர்.

திணையின் கண் வரும் வழுக்களை பெரியோர் பொறுத்து வழக்கப்படி ஏற்கலா மென்பது வழுவமைதி.

இதற்கு உதாரணம்: கம்பன் கவிப்பெரியன் . இதில் கம்பன் என்பது உயர்திணை, கவி என்பது அஃறிணை, பெரியன் என்பது உயர்திணைப் பயனிலை . இத்தொடரில் வழுவுண்டு. ஆனால் புலவர் இத்தொடரை ஒப்புக்கொண்டார். எதுபற்றி எனில், கவித்துவம் பெற்ற கம்பன் பெரியவன் என்று பொருள்பட்டு உயர்திணையாகிய கம்பனென்பதுடன் சார்த்தி முடித்தலால். இது பொருளைப்பற்றி வழுவமைதியாகும்.

இடத்தைப் பற்றிய வழுவமைதி முருகன் குறிஞ்சி இறைவன் (குமாரஸ்வாமி குறிஞ்சி நிலத்துத் தலைவன்). முருகன் உயர்திணை, குறிஞ்சி அஃறிணை, இறைவன் உயர்திணைப் பயனிலை. இத்தொடரில் வழுவுண்டு. அஃறிணையாகிய குறிஞ்சி உயர்திணை யாகிய இறைவனைக் கொண்டு முடிதலால். ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் புலவர் ஒப்புக் கொண்டார், குறிஞ்சி நிலத்தையுடைய முருகன் இறைவன் எனப் பொருள் பட்டு, முருகன் என்பதுடன் சேர்த்து முடித்தலால்.

காலத்தைப்பற்றிய வழுவமைதி: கந்தன் கார்த்திகைப் பிறந்தோன் .கந்தன் உயர்திணை, கார்த்திகை அஃறிணை. பிறந்தோன் உயர்திணைப் பயனிலை. இத்தொடரில் வழுவுண்டு , அஃறிணையாகிய கார்த்திகை உயர்திணையாகிய பிறந்தோனைக் கொண்டு முடிதலால். ஆனால் இதைப்புலவர் ஒப்புக்கொண்டார். கார்த்திகைப் பெண்களின் பாலையுண்டு வளர்ந்த கந்தன் அவர்கள் புதல்வனானன் எனப் பொருள்பட்டு, கந்தன் என்பதுடன் சார்த்தி முடித்தலால்.

சினையைப் பற்றிய வழுவமைதி: திண்ணன் கண் அழகியான் . திண்ணன் என்பது கண்ணப்பநாயனாருக்குப் பெரியோர் ஆதியில் இட்ட காரணப்பெயர். அவரது புத்தியானது பிறந்த காலத்திலேயே நிச்சயம், திண்ணம்,பெற்றிருந்ததால். திண்ணன் உயர்திணை, கண் அஃறிணை, அழகியன் உயர்திணைப் பயனிலை. இத்தொடரில் வழுவுண்டு, அஃறிணையாகிய கண் உயர்திணையாகிய அழகியானைக் கொண்டு முடிதலால். ஆனால் இதைப்புலவர் ஒப்புக்கொண்டார், தமது கண்ணினால் மேன்மையைப் பெற்ற திண்ணனார் அழகினர் எனப்பொருள் பட்டு, திண்ணன் என்பதுடன் சார்த்தி முடித்தலால்.

குணத்தைப் பற்றிய வழுவமைதி: சூரியன் சிவந்த கிரகத்தினன். சூரியன் உயர்திணை, சிவந்த அஃறிணைப் பெயரெச்சம், கிரணத்தினன் உயர்திணைப் பயனிலை. இதில் வழுவுண்டு, ஏனெனில், அஃறிணையாகிய சிவந்த என்ற சொல் உயர்திணையாகிய கிரணத்தினைக் கொண்டு முடிதலால். ஆனால், இதைப் புலவர் ஒப்புக்கொண்டனர். சிவந்த என்ற பதம் சூரியனோடு சேர்ந்து கிரணத்தினனுடன் முடிந்து வழுவமைதி யாயிற்று.

தொழிலைப் பற்றிய வழுவமைதி: வாயு தேவன் விரைந்து செல்கின்றவன். வாயு தேவன் உயர்திணை, விரைந்து அஃறிணை விளையெச்சம், செல்கின்றனன் உயர்திணைப் பயனிலை. இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுவுண்டு, அஃறிணையாகிய விரைந்து உயர் திணையாகிய செல்கின்றவனைக் கொண்டு முடிதலால். ஆனால் விரைந்து என்பது வாயுதேவன் என்பதுடன் சேர்ந்து செல்கின்றவ னென்பதோடு முடிதலால் வழுவதிமைதியாயிற்று

மேற்கூறிய திணை வழுவாமைகளில் அஃறிணை எழுவாய்கள் உயர்திணைப்பயனிலையைக் கொண்டன.

இதற்குச் சூத்திரம்: -

௩௰௯. உயர்திணை தொடர்ந்த பொருள்முத லாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின்.

இதன் பொருள்:

உயர்திணை தொடர்ந்த = உயர்திணை எழுவாயைத் தொடர்ந்து வந்து தாமும் எழுவாயாக நின்ற

பொருள் முதல் ஆறும் = அஃறிணையாகிய பொருட்பெயர் இடப்பெயர் காலப்பெயர் சினைப்பெயர் குணப்பெயர் தொழிற்பெயரும்

அதனொடு சார்த்தின் = அவ் உயர்திணைப் பெயரோடு சார்த்தி முடிக்கப்பட்டால்

அத்திணை முடிபின் = அவ்வுயர்திணை முடிவைப் பெறுவன வாம்.

இனி நன்னூலார் தமது சூத்திரங்களில் கூறிய வரிசைக் கிரமங்களின் படி, வேறு வழுவமைதிகள் கூறப்படும்.

இருதிணைகளும் ஐம்பால்களும் சொற்பிரயோக மரபுகளும் கலந்து வந்து ஒரு முடிபைப் பெறும் பொழுது தோன்றின வழுக்களை சமாதானமாகப் பெரியோர் ஏற்றுக் கொண்ட விடத்து அவை. திணைபால் மரபு வழுவமைதி யெனப்படும்.

இந்திரனும் ஐராவதமும் வந்தார்கள். இந்த உதாரணத்தில், இந்திரன் உயர்திணை, அவரது யானையாகிய ஐராவதம் அஃறிணை. இது அஃறிணையாயிருந்தும் பல விசேஷ லக்ஷணங்களோடு பாற்கடலிற் பிறந்து, தேவராசனுடைய வாகனமாக வந்த சிறப்புக் களைப் பற்றி, அஃறிணை கலந்து உயர்திணைப் பயனிலையோடு முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார் - மூத்தாரிளை யார் பசுப் பெண்டிர் என்றிவர்கள்." இதில் பார்ப்பாரும் தபஸ்விதிகளும் வீண் நினைவுகளைச் சுமக்கின்றவர்களும், நோயாளிகளும், முதிர்ந்தவர்களும், இளையர்களும், பசுக்களும், பெண்டிருமாகிய இவர்கள் என்னுந் தொடர் வழுவாகும். ஏனெனில், பசு அஃறிணை ஒன்றன் பாலாகவும், மற்றவையெல்லாம் உயர்திணைப் பாலர் பாலாகவும், நிற்றலால். ஆனால் பல உயர்திணைச் சொற்களோடு விலங்குகளிற் சிறந்த பசு என்னும் ஒரு அஃறிணை செல்லும் கலந்து உயர்திணை முடிவுபெற்றது.

"மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா." மானிடரூப உயர்திணையிற் பிறந்தும் இவனது புத்தி மூர்க்கத்துக்கு அடிமைப் பட்டிருப்பதால், அது முதலையினது புத்திக்குச் சமமெனப்பட்டு உயர்திணை அஃறிணையோடு கலந்து அஃறிணையின் முடிவு பெற்று வழுவமைதியாயிற்று.

"தானுந்தன் றையலுந் தாழ்சடையா னாண்டிலனேல்" (தாழ் சடையனாகிய தானும் தனது தையல் நாயகியாகிய உமையாளும் என்னை ஆண்டிடனேல்) என்ற தொடரில் ஆண்பாலும் பெண்பாலும் அன் என்ற முடிவைப் பெற்றது வழுவாகும். ஆனால் சத்தியாகிய உமையாளின் சிறப்பால் பெண்பால் கலந்து வந்து ஆண்பால் முடிவு பெற்று வழுவமைதி யாயிற்று.

சொற் பிரயோக மரபை பற்றிய வழுவமைதி: மாலை சூடப்படும் , முடி தலையில் கவிக்கப்படும் (கவிழ்க்கப்படும்) என்றது சொல் மரபாயிருப்பதால், "மாலையும் முடியும் கவித்தான் " என்பது வழுவாகும். ஆனால் முடி உயர்ந்த பொருளாயிருப்பதாலும், மாலை முடிக்கு அணியாதிருப்பதாலும் இரண்டு வினைப் பொருள்களுங் கலந்து சிறந்த சொல்லக்குரிய முடிபைப் பெற்றது.

சோற்றை உண்பாரென்றும், கறியைத் தின்பாரென்றும், அச்சொற்களின் பிரயோக மரபு இருப்பதால், சோறுங்கறியு முண்டா னென்பது வழுவாகும். ஆனால், கறியினும் விசேஷம் சோறு என்பது பற்றி, தின்னப்படுவதும் உண்ணப்படுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து உண்ணல் என்னும் முடிவையேற்று வழுவமைதியாயிற்று.

இதற்குச் சூத்திரம்:-

**௱௨௰. திணைபால் பொருள்பல விரவின சிறப்பினு மிகவினு மிழிவினு மொருமுடி பினவே.**

இதன் பொருள்:

திணைபால் பலபொருள் = திணைகளும் பால்களும் வெவ்வேறு வினைகளுக்கு உரிய பல பொருள்களும்.

விரவின = கலந்து ஒரு தொடராக வாருவனவாயின் அவை.

சிறப்பினும் மிகவினும் இழிவினும் ஒரு முடிபின = சிறப்பினாலும் மிகுதியினாலும் ஒரு முடிவைப் பெறுவனவாம்.

மேலும் சிறப்பினாலும் உயர்வினாலும் வழுவமைதி வருவது போல விருப்பாலும் வெறுப்பாலும் வரும்.

ஒருவன் தனது பசுவைக் கண்டு என்னம்மை வருகிறாள் என்பது உவப்பினால் அஃறிணை உயர்திணையாகக் கூறப்பட்டது.

தம்மகள் தம் பொருள் என்பதும் உவப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

அஃறிணையாகிய பசுங்கிளியைக்கண்டு அன்பினால் பசுங்கிளி சென்றார் என்று உயர்திணையாக்கிக் கூறுவதும் வழுவமைதி.

"தான்தேறான், ஏவவுஞ் செய்கலான், அவ்வுயிர் போமளவும் ஓர்நோய்" (தன் குற்றங்களைச் சிந்தித்து தேறமாட்டான், ஏவினாலும் செய்யமாட்டான், இவ்வுயிர் இறக்குமளவும் எனக்கு ஒரு நோயாய் இருக்கும்) என்பதில் அன் விகுதிபெற்ற வினைச்சொற்கள் உயர்திணையைக் காட்டி, உயிர் நோய் என்ற அஃறிணையோடு வெறுப்பாய் முடிவுபெற்றது, வழுவமைதி.

ஈர்வரனை மூவேழுலகுக்குந் தாயே என்பது அன்பினால் வந்த வழுவமைதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபத்தினால் பன்மைப்பாலை ஒருமைப் பாலாக்கலாம்: திருவள்ளுவர் " எனைத்துணையராயினு மென்னாந்தினைத் துணை யும் தேரான் பிறனில் புகல்" (எவ்வளவு பெருமையுள்ளவராயினும் என்னத்துக்கு தினையளவும் யோசிக்காமல் பிறன் மனைவியிடம் ஏகுதல்) என்பதில். பன்மைப்பாலாகிய எனைத்துணையர் கண்டிக்கப்பட்டதால் ஒருமைப்பாலாகிய தேரான் என்பதோடு முடிந்தது.

இதற்குச் சூத்திரம்: -

**ரூஉக. உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்**
**இழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்பே**

இதன் பொருள்:

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறவினும் இழிப்பினும் = இந்த ஐவகையினாலும் செறல் = வெறுப்பு. கோபம், கண்டனை.

பால் திணை இழுக்கினும் இயல்பு = பாலுந் திணையும் வழுவி வரினும் இயல்பாம்.

மேலும், ஒருமைப்பால் வரவேண்டிய இடத்தில் பன்மைபால் வருதலும் பன்மைப்பால் வரவேண்டிய இடத்தில் ஒருமைப்பால் வருதலும், ஒரு இடச்சொல் வர வேண்டிய இடத்தில் மற்றொரு இடச்சொல் வருதலும், சில சமயத்திலுண்டு .

உ-ம். இரு செவியும் செவிடாயிருக்கின்றது. இரு செவி களாலும் ஜீவாத்மா சத்தங்களை அறிவதால், பன்மை ஒருமையாக அமைந்தது.

" எம்பியை ஈங்குப்பெற்றோன் என்னெனக் கரியதென்றான்" ( எனது தம்பியை இவ்விடத்திற் பெற்றேன், எனக்கு இதிலும் அரியது வேறென்ன) என்பதில், தம்பியை விளித்துக் கூறுகின்றவன், உன்னையென்று முன்னிலைச் சொற் பிரயோகியாது, எம்பியை எனப் படர்க்கைச் சொல்லைப் பிரயோகித்தான். இது இடத்தைப்பற்றிய வழுவமைதி.

இதற்குச் சூத்திரம்: -

**ரூஉஉ. ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்**
**ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவியல்

இதன் பொருள் : ஒருமையிற் பன்மையும் = ஒருமைப்பாலிற் பன்மைப் பாற் சொல்லையும்.

பன்மையில் ஒருமையும் = பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும்,

ஓரிடம் பிறவிடம் தழுவலுமுள = ஓரிடத்திற் பிற இடச் சொல்லையும் தழுவிக் கூறுதலுமுண்டு.

தருதல் வருதல் என்பன தன்மை முன்னிலை படர்க்கை என்ற மூன்றிடங்கட்கும் பொதுவாகிய வினைகளாகும்.

எனக்குத்தந்தான் ( தன்மை) , நினக்குத்தந்தான் (முன்னிலை), அவனுக்குத் தந்தான் ( படர்க்கை ). என்னோடு உண்னோடு அவனோடு வந்தான் என்பதிலும், வரல் மூன்றிடங்கட்கும் பொது.

கொடை செலல் என்பன படர்க்கையிடத்து வினைகளாகும். உ-ம். அவனுக்குக் கொடுத்தான், அவனிடஞ் சென்றான்.

இதற்குச் சூத்திரம்: -

**௩௨௫. தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை**
**எழுவா யிரண்டு மெஞ்சிய வேற்கும்.**

இதன் பொருள்:

தரல் வரல் கொடை செலல் படர்க்கை சாரும் = இந்நான்கு சொற்களும் படர்க்கையை அடையும்.

எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும் = முதலிலுள்ள இரு சொற்களும் ஒழிந்த தன்மை முன்னிலைகளையும் ஏற்கும்.

மேலும், இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என்பனவற்றில் இறந்தகாலம் தொழில் நடைபெற்று முடிந்தமையைக் குறிக்கும். நிகழ்காலம் தொழில் நடந்து கொண்டிருப்பதைக் குறிக்கும். எதிர்காலம் இனித்தொழில் நடைபெறும் என்பதைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக் காலத்திலும் இடையீடின்றி நடை பெற்றுக் கொண்டிருப்ப தோர் பொருளின் தொழிலை நிகழ்காலத்தாற் கூறுவர் உ-ம் மலை நிற்கின்றது, பூமி சுழல்கின்றது.

இவற்றிக்குச் சூத்திரம்: -

**௱உச. இறப்பெதிர்வு நிகழ்வெனக் கால மூன்றே.**

இதன் பொருள்:

காலம் இறப்பு எதிர்வு நிகழ்வு என = காலமானது இறந்த காலம் எதிர்காலம் நிகழ்காலமென

மூன்று = மூன் றுவகையாகும்.

**௱உரு. முக்கா லத்தினு மொத்தியல் பொருளைச்**
**செப்புவர் நிகழுங் காலத் தானே.**

இதன் பொருள்:

முக்காலத்திலும் ஒத்தியல் பொருளை = மூன்று காலங்களிலும் தம் தொழில் இடைவிடாமல் ஒரு தன்மையாக நடக்கின்ற பொருள்களை

நிகழுங் காலத்தாற் செப்புவர் = நிகழ் காலத்தினாற் சொல்லுவர்.

மேலும். காலம் மயங்கியும் வழுவமைக்கப்படும். விரைவு பற்றி எதிர்காலம் இறந்தகாலமாகவும், நிகழ்காலமாகவும் இறந்த காலமாகவும் மாற்றிக் கூறப்படும்.

இதற்கு உ-ம். சோறு வெந்துகொண்டிருக்க அதனை உண்டு போதற் பொருட்டிருந்த ஒருவனைப் பார்த்து, அவனுடன் வெளியே போக நின்ற ஒருவன், இன்னும் உண்டிலையோ வென்றால், உண்டேன் உண்டேன் என்பான். இது விரைவு பற்றி எதிர்காலம் இறந்த காலமாக மாற்றிக் கூறப்பட்டது. உண்கின்ற வனைப்பார்த்து உண்டிலையோ வென்றால், அவனும் உண்டேன் உண்டேன் என்பான் . இது விரைவு பற்றி நிகழ்காலம் இறந்த காலமாகக் கூறப்பட்டது.

காரண காரிய சம்பந்தமாக நடைபெற்று வரும் கர்மசக்கர விதிப்படி, புண்ணியகர்மஞ் செய்தல் சுகபலன் மேற்படும், பாபகர்மஞ்செய்தால் துக்கபலன் மேற்படும் என்பது பற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவியல்

"அறஞ் செய்தான் சுவர்க்கம் புக்கான்" (தருமஞ் செய்தவன் சுவர்க்கத்தை அடைந்தான் ) என்று பழமொழி கூறும். இந்தச் சுகதுக்க காரியங்கள் தவறாது வருவதால், வருங்காலத்தை வந்த காலமாகப் பாவித்து வழுவமைக்கப்பட்டது.

உலோக அநுபவப்படி , எறும்புகள் சமநிலத்துக் கிடங்குகளில் வைத்திருந்த முட்டைகளை எடுத்து மேடைகளில் கொண்டு செலுத்தின பின் மழைபெய்யக் கண்டவர்கள், "எறும்பு முட்டையைக் கொண்டு திட்டையேறின், மழைபெய்தது" என்று கூறுவர். இது அநுபவத் தெளிவு பற்றி வந்த பழமொழியின் வழுவமைதி.

ஒரு காட்டில் கள்ளர்கள் தங்கள் வசதிகளைக் குறித்துக் கொள்ளையடிப்பதற்குக் கூடியிருப்பதைக் கண்டவர்கள் . "இக்காட்டில் போகில் பறிகொடுத்தான் " என்று அக்காட்டின் தற்கால இயல்பைப் பற்றிக் கூறுவர். இதுவும் வழுவமைதி.

இதற்குச் சூத்திரம்: -

**௩௨௯. விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும்**
**பிறழவும் பெறூஉமுக் காலமு மேற்புழி.**

இதன்பொருள்:- விரைவினும் மிகவினும் = வேகத்தாலும், பிரபலத்தாலும்.

தெளிவினும் இயல்பினும் = கேள்வி காட்சி முதலியவற்றால் உதித்த அநுபவத்தெளிவாலும், ஒன்றன் இயற்கையாலும், முக்காலமும் ஏற்புழி பிறழவும் பெறுஉம் = மூன்று காலங்களும் பொருந்து மிடத்தில் மாறிவரவும் பெறும்.

மேலும், வினாவால் வழு வரினும் இயல்பென்பர் புலவர்.

அறிந்ததை வினாவுதல், அறியாததை வினாவுதல், ஐயுற்றதை வினாவுதல், கொள்ளுவதற்கு வினாவுதல், கொடுத்தற்கு வினாவுதல், ஏவுதலைப்பற்றி வினாவுதல் என்பன வினாவின் வகைகள் .

அறிந்ததை வினாவுதல், தானறிந்த விஷயம் பிறரு மறிவார்களா வென வினாவுதல். உ.ம். இச்செய்யுளின் அர்த்தம் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாததை வினாவுதல், தான் அறியாத விஷயத்தை அறியும் பொருட்டு அதை அறிந்தவர்களிடம் கேட்டல். உ.ம். கடவுள் எப்படிப்பட்டவர், அவரை வழிபடும் முறை யாது?

ஐயுற்றதை வினாவுதல், சந்தேகமாகத் தோன்றும் இரு பொருளைக் கூறி, அதுவோ, இதுவோ இப் பொருள் என வினாவுதல். உ.ம். அங்கே வருபவன் பரதனா, சத்துருக்கனா?

கொள்ளுவதற்கு வினாவுதல். தான் வாங்கவிரும்பிய பொருள் பிறறிடம் உண்டோவென்று வினாவுதல் உ-ம். பட்டு வேட்டி யுண்டா?

கொடுத்தற்கு வினாவுதல். ஒருவனுக்குக் கொடுத்தற்காக அவனிடம் இல்லாத, அல்லது அவசியமான பொருள்யாதென வினாவுதல். உ-ம். உன்னிடம் குடையுண்டா?

ஏவுதலைப்பற்றி வினாவுதல், ஒருவனை ஒரு தொழிலுக்கு ஏவும் பொருட்டு அத்தொழில் ஆயிற்றா, ஆகவில்லையா என வினாவுதல். உ-ம். நமது கழனி (வயல்) உழுதாயிற்றா?

இதற்குச் சூத்திரம்: -

**௩௨௭. அறிவறி யாமை ஐயுறல் கொளல் கொடை**
**ஏவ றரும்வினா வாறு மிழுக்கார்.**

இதன் பொருள்:

அறிவு, அறியாமை ஐயுறல் = அறிதலும், அறியாமையும், ஐயுறலும்.

கொளல் கொடை ஏவல் = கொள்ளல், கொடுத்தல், ஏவல் ஆகிய தரும் வினா ஆறும் = அறுவகைப் பொருளையும் தருகின்ற வினாக்களை.

இழுக்கார் = தவறுதல் என்று புலவர் கூறார்.

விடைகளைப்பற்றி வழுவமைதிகள். விடைகள் எண்வகைப் படும்.

இவை சுட்டு, மறுப்பு, உடன்பாடு, ஏவுதல், எதிர்வினாவுதல், உற்றது சொல்லல், உறுவது சொல்லல், கேட்ட பொருளுக்கு இனமானதைச் சொல்லல் என்பன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவியல்

சுட்டுவிடை: அதுவோ இதுவோ எனச் சந்தேகப்பட்டு கேட்ட பொருளை இதுதான் எனக் குறித்துக் கூறுதல். உ.ம். நல்லூருக்கு வழி எது என்பதற்குச் சுட்டு விடை, இது தான்.

மறுப்புவிடை: ஒரு காரியத்தை செய்வாயோ என்பதற்றுச் செய்யமுடியாதென மறுத்தல். உ-ம். பால் கறப்பாயா என்பதற்கு மறுப்புவிடை, மாட்டேன்.

உடன்பாட்டு விடை: குறித்த காரியத்தை செய்வதற்கு உடன்படுதல். உ.ம். பால் தருவாயா என்பதற்கு உடன்பாட்டுவிடை, தருவேன்.

ஏவுதல்விடை: தன்னை ஏவினவனை தானேவுதல். உ-ம். இதை செய்வாயா (வெசய் வ் ஆய் ஆ ) என்ற ஏவல் வினாவுக்கு ஏவல்விடை, நீசெய்.

எதிர்வினாவிடை: தன்னை வினாவினவனுக்கு தன் விடையால் விடையளித்தல். உ.ம் மதுரைக்குப் போவாயா என்ற வினாவுக்கு என்னால் நடக்க முடியுமா என்பது.

உற்றது உரைக்கும் விடை: தனக்குப் பொருந்தின நிலையை விடையாகக் கூறுதல். உ.ம் இந்தக் கல்லை தூக்குவாயா என்ற வினாவுக்கு விடை, நெஞ்சுநோகின்றது.

கூறுவது கூறும் விடை: தனக்கு வரும் நிலையைக் விடை யாகக் கூறுதல்.
உ.ம். துலா மிதிப்பாயா என்பதற்கு விடை, விழுந்துவிடுவேன்.

இனத்தைச் சொல்லும் விடை: ஒன்றைப்பற்றி வினாவ அதன் இனத்தைப்பற்றி விடையளித்தல். உ-ம் கடையில் மிளகு இருக்கின்றதா என்பதற்கு விடை, சீரகம் உண்டு.

இவ்வெட்டு விடைகளில் முதல் மூன்றும் கேள்விக்கு நேரே மறுமொழி கொடுப்பதால் செவ்வனிறை (செவ்வன் இறை) எனப்படும். மற்ற ஐந்தும் மறுமொழிபோல விஷயத்தைத் தெரிவிப்பதால் இறைபயப்பன எனப்படும். (இறை = விடை: பயப்பன = தருவன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்: -

ாஉஅ. சுட்டு மறைநே ரேவல் வினாதல்
உற்ற துரைத்த லுறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய வைந்துமப் பொருண்மையி நேர்ப.

இதன் பொருள்:

சுட்டு மறை நேர் = குறித்துக் காட்டி கூறுதலும், எதிர்மறுத்துக் கூறுதலும், உடன்பட்டுக் கூறுதலும்.

ஏவல் வினாதல் = எதிராக ஏவுதலும், வினாவுதலும்.

உற்றது உரைத்தல் உறுவது கூறல் = நேர்ந்ததைச் சொல்லுதலும். இனி நேர்வதைச் சொல்லுதலும்.

இனமொழி எனும் எண் இறையுள் = வினாவியதற்கு இனமானதைச் சொல்லுதலும் என்ற எட்டுவித விடையுள்.

இறுதி நிலவியஐந்தும் = கடையினின்ற ஏவல் முதலிய ஐந்தும்

அப்பொருண்மையின் நேர்ப = அவ்விடைப் பொருளைக் குறிப்பாகக் கருதலால் விடைகளென்று சொல்வர்.

வினாவிடை என்பவற்றில் முதலும் சினையும் மயங்காமை.

முதல் என்பது முழுப்பொருள்: சினை என்பது அதன் பாகங்களி லொன்று.

முதலும் சினையும் மயங்கா வினாவுக்கு உ-ம். கண் பிறழ்ந்ததோ, மீன் பிறழ்ந்ததோ இந்த அலங்கார வார்த்தையில் பெண் முதல் எனவும், அவளது கண் சினை எனவும் , பிறழ்ச்சி கண்ணின் தொழிலெனவும் அறிய வேண்டியது. இந்த சம்பந்தங்களை மறந்த வர்கள் பெண் பிறழ்ந்தாளோ மீன் பிறழ்ந்ததோ என்று வினாவலாம். இது வழுவாகும். ஏனெனில், பிறழ்ச்சியானது முதற்பொருளாய பெண்ணுக்குரியதன்று, சினைப் பொருளாகிய கண்ணுக்கே உரியது எனலாம்.

மீன் பிறழ்ந்தது போலக் கண் பிறழ்ந்தது எனல் வழுவா விடையாகும் பெண் பிறழ்ந்தனள் எனல் விடை வழுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்: -

**௩௨௯. வினாவினுஞ் செப்பினும் விரவா சினைமுதல்.**

இதன் பொருள்:

வினாவினும் செப்பினும் = வினாவும் பொழுதும், விடையிறுக்கும் பொழுதும்.

சினைமுதல் விரவா= சினை முதல்கள் ஒற்றுமை கருதி மயங்கக் கூறப்படா.

மேலும், மரபைப் பற்றிய வாழா நிலையும் வழுவமைதியும்.

மரபாவது அறிவாளிகள் பொருள்களை எந்தெந்தச் சொற்களால் வழங்கி வந்தார்களோ. அவ்வழியே வழங்குதலாம்.

குதிரைக் கன்று, பசுக்குட்டி, எனக்கூறுதல் மரபுவழு: குதிரைக் குட்டி. பசுக்கன்று என வழங்குதல் மரபு.

இதற்குச் சூத்திரம்: -

**௩௩௦. எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்.**
**செப்பின ரப்படிச் செப்புதன் மரபே.**

இதன் பொருள்: எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் = எந்தப் பொருளை எந்தச் சொல்லில்லா எவ்விதமாக அறிவினும் அன்பினும் உயர்ந்தோர் சொல்லி வந்தார் களோ.

அப்படிச் செப்புதல் மரபு = அவ்வழியால் சொல்லுதலே மரபாம்.

ஒரு பொருளைக் குறித்து வரும் பலபெயர்களுக்குப் பயனிலை கொடுத்தல் மரபு வழா நிலை யெனப்படும்.

ஆசிரியனும் கொற்றவன் குடியினரு மாகிய உமாபதி வந்தார் என்று விரித்துக் கூறாமல் , ஆசிரியன் கொற்றங் குடியன் உமாபதி வந்தான் என்று கூறலாம்.

தொன்று தொட்டு இலக்கண வித்வான்கள் இது போன்ற வாக்கியங்களைத் தங்கள் மரபுக் கேற்றதென்று ஒப்புக் கொண்ட மையால் அவையெல்லாம் வழுவாநிலை மரபாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்: -

**௩௩௧. ஒரு பொருள் மேற்பல பெயர்வரி னிறுதி**
**ஒருவினை கொடுப்ப தனியு மொரோவழி.**

இதன் பொருள் :

ஒரு பொருள் மேல் பல பெயர்வரின் = ஒரு பொருளைக் குறித்துப் பல பெயர்ச் சொற்கள் வந்தால்.

இறுதி ஒருவினை கொடுப்ப = பொருள் ஒன்றேயென்பதை விளக்குவதற்கு அவற்றினிறுதியில் ஒரு பயனிலை கொடுத்து முடிப்பார்கள்.

தனியும் ஒரோவழி = ஒவ்வொரு பெயர்தோறும் பயனிலை கொடுத்து முடிப்பது முண்டு.

மேலும் , திணை தேசம் சாதி குடி உடைமை குணம் தொழில் கல்வி முதலியவை பற்றிவருஞ் சிறப்புப் பெயரும் இயற்கைப்பெயரும் வரும் போது சிறப்புப் பெயர் முன் வருதலே சிறப்பாகும்.

இயற்கைப் பெயர் = பெற்றாரிட்ட பெயர் , சிறப்புப் பெயர் = காரணம் பற்றிய சிறப்பால் வந்த பெயர்.

இயற்கைப்பெயருள்ள கொற்றவனுக்குக் குறிஞ்சித்திணையால் அமைந்த சிறப்புப் பெயர், குன்றவன் ( மலையான்). இயற்கைப் பெயருள்ள சங்கரனுக்குத் தேசத்தாலமைந்தபெயர், சோழியன் . இயற்கைப் பெயருள்ள நாராயணுக்கு சாதியாலாமைந்த பெயர் பார்ப்பான். இயற்கைப் பெயருள்ள அரிமர்த்தனனுக்குக் குடியால மைந்த பெயர் பாண்டியன். இயற்கைப் பெயருள்ள முருகனுக்கு உடைமையாலமைந்த பெயர் பொன்னன். இயற்கைப் பெயருள்ள கம்பனுக்கு குணத்தாலமைந்த பெயர் கரியன். இயற்கைப் பெயருள்ள ஆறுமுகனுக்குத் தொழிலாலமைந்த பெயர் கூத்தன் . இயற்கைப் பெயருள்ள கம்பனுக்குக் கல்வியாலமைந்த பெயர் கவிச்சக்கரவர்த்தி.

இதற்குச் சூத்திரம்: -

**௩௩௨. திணைநிலைஞ் சாதி குடியே யுடைமை**
**குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோ**
**டியற்பெய ரேற்றிடிற் பின்வரல் சிறப்பே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள் :

திணை நிலம் சாதி குடி உடைமை குணந்தொழில் கல்வி ஆம் சிறப்புப் பெயரோடு = இந்த எண்வகை சிறப்புப் பெயர்களுடனே.

இயற்பெயர் எற்றிடின் = இயற்கைபெயரை ஏற்றால்.

பின்வரல் சிறப்பு = இயற்கைப் பெயர் பின் வருதலே சிறந்த மரபாம்.

மேலும், சுட்டுப்பெயரானது உயர்திணை, அஃறிணை, பொதுத்திணைப் படர்க்கை எழுவாய்களின் பயனிலையான வினைச் சொற்களுக்குப் பின்வரும். உ.ம். நம்பி வந்தான், அவனுக்குச் சோறிடுக, இதில், நம்பி உயர்திணை எழுவாய்: வந்தான் வினைப்பயனிலை, அவன், வினைப் பயனிலைக்கு பின் வந்த சுட்டுப்பெயர்.

மாடு வந்தது, அதற்குப் புல்லிடுக. இதில் மாடு அஃறிணை எழுவாய். வந்தது வினைப்பயனிலை. அவன் வினைப்பயனிலைக்குப் பின் வந்த சுட்டுப் பெயர்.

சாத்தன் வந்தான். அவனுக்குக் கஞ்சியிடுக. சாத்தன் வந்தது, அதற்குக் கஞ்சியிடுக. இவ்வுதாரணங்களில் சாத்தன் என்ற பெயர் உயர்திணையாகிய மனுஷனுக்கும், மாடாகிய அஃறிணைக்கும் பொதுவான திணை எழுவாய். அவ்வவ் பெயருக்குப் பயனிலை முறையே வந்தான் என்பதும், வந்தது என்பதும், ஆகும். இவற்றின் பின் அவனென்ற உயர்திணைச் சுட்டும், அதுவென்ற அஃறிணைச் சுட்டும் வந்தன.

மேலும் வினைப்பயனிலை கொள்ளாத பெயர்ச்சொற்களில் சுட்டுப் பெயர் முன்னும் வரும், பின்னும் வரும். உ.ம். கந்தன் அவன். அவன் கந்தன்.

இதற்குச் சூத்திரம்: -

ருருரு. படர்க்கைமுப் பெயரோ டணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க் கெங்கும்
மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள் :

படர்க்கை முப்பெயரோடு = படர்க்கையிடத்துக்குரிய உயர்திணை அஃறிணை பொதுத்திணை என்னும் மூவகைப் பெயர்களோடு.

சுட்டு அணையின் = சுட்டுப் பெயர் சேர்ந்தால்.

வினை எனில் = அவ்விடத்தே வினையயாகிய முடிக்குஞ் சொல் வருமாயின்.

பின்வரும் = சுட்டுப் பெயர் அம்மூவகைப் பெயருக்கு பின் வரும். பெயர்க்கு எங்கும் மருவும் = ( அம்முடிக்குஞ் சொல் இல்லையாயின் ) அப்பெருக்குப் பின்னும் முன்னும் வரும்.

வழக்கிடை = இம்மரபு உலகவழக்கத்திலாம்.

செய்யுட்குஏற்புழி = பாட்டில் வேண்டியவாறே வரும்.

மேலும், உண்பது, தின்பது, நக்குவது, பருகுவது, சூடுவது, இடுவது, கட்டுவது, முதலான ஒவ்வொரு தொழிலுக்குரிய சிறப்புவினைச் சொல்லை சேர்த்துக் கூறுமிடத்து அவைக்குப் பொதுவான வினைச் சொல் அமைக்கவேண்டியது.

புலவர் மரபின் படி சோறு உண்பதென்றும், கறி தின்ப தென்றும், நீர் பருகுவதென்றும், தேன் நக்குவதென்றும், வழங்கும் இவ்வினையாலணையும் பெயர்க்கெல்லாம் பொதுவானது அடிசிற் படுவது. அடிசில் என்பது பல் நா அண்ணாக்குகளால் நசித்து உட்புகுத்தப்பட்ட பொருள். இது பெயர்ச்சொல். இதினின்று வந்த வினையாலணையும் பெயர் அடிசிற்படுவது. சோறு கறி நீர் தேன் அடிசில் என்றும், உண்பது தின்பது பருகுவது நக்குவது அடிசிற்படுவது, என்றும் அறிக.

அடிசில் என்னும் பொதுப் பெயர்ச்சொல்லுக்கு பொது வினைச்சொல் அயின்றார் என்றறிக. அயின்றார், புசித்தார், அருந்தினார். அயிலுதல் = புசித்தல், அருந்துதல்.

முடி சூடுவதென்றும், மோதிரம் இடுவதென்றும், அரைஞாண் கட்டுவதென்றும், வழங்கும். இவற்றிற்கெல்லாம் பொதுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ச்சொல் அணி (அணியப்பட்டது). இந்தப் பொதுச் சொல்லுடன் அணிசூடினார் அணி கட்டினார் அணிஇட்டார் என்று (தனித்தனியான பொருளுக்குரிய) சிறப்ப வினைச் சொற்களைச் சேர்த்துக் கூறினால் வழுவாம்.

அணியென்னும் பொதுச் செல்லுக்கு இசைய தரித்தார் என்னும் பொது வினைச் சொல்லைக் கூறுக.

பல சிறப்புச் சொற்களைச் சேர்த்து ஒரு முடிக்குஞ் சொல்லால் கூறவேண்டியிருந்தால் பொதுவினைச் சொல் சேர்த்துக் கூறவேண்டும்.

சிறப்புச் சொற்களை தனித்தனி முடிக்கில் அதற்குரிய தனித்தனி வினைச்சொற்களை சேர்த்து முடித்தல் வேண்டும். உ.ம். முடி சூடினான். மோதிரம் இட்டான், அரைஞான் கட்டினான்.

இதற்குச் சூத்திரம்: -

௪௱௩௰௪. வேறுவினைப் பல்பொருடமுவிய பொதுச்சொலும்
வேறவற்றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்.

இதன்பொருள்:

வேறுவினைப் பல்பொருள் தழுவிய = வெவ்வேறு வினைகட்குரிய பல பொருளையுந் தழுவிய

பொதுச்சொலும் = ஒரு பொதுச் சொல்லும்.

வேறு அவற்று எண்ணும் = வெவ்வேறு வினைக்குரிய பொருள்களை எண்ணி நிற்கும் பல சிறப்புச் சொற்களும்.

ஓர் பொது வினை வேண்டும் = எல்லாவற்றுக்கும் உரியதொரு பொதுவினை கொண்டு முடியும்.

மேலும், பல பொருள்களுக்கும் பொதுவான ஒரு சொல் தனது வினையாலும் , சார்பாலும், இனத்தாலும், இடத்தாலும். அந்தந்த தொடர்புக்கேற்றபடி விளக்கும். உ.ம். மா என்ற ஒரு சொல் மாமரம், வண்டு, குதிரை, திருமகள், என்ற பல பொருளை உணர்த்தும். ஆனால் மா, பூத்தது என்றால் பூக்கும் வினைபற்றி மரம் என்றும், மாவீழ் மலர் என்றால் புஷ்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழும் சார்புபற்றி வண்டு என்றும், யானை தேர் மா காலாள் என்றால் சேனையாகிய இனம்பற்றிக் குதிரை என்றும் மா வாழ் மார்பன் என்றால் மகாவிஷ்ணுவின் மார்பினிடத்தில் வாழ்கின்ற இலக்குமி என்றும், அறியலாம்.

இதற்குச் சூத்திரம்: -

**ҐҐҌ ரு. வினைசார் பினமிட மேவி விளங்காப்**

**பலபொரு ளொருசொற் பணிப்பர்சிறப் பெடுத்தே.**

இதன் பொருள்: வினை சார்பு இனம் இடம் மேவி = குறித்த பொருளை விளக்கும் வினையும் , சார்பும், இனமும், இடமும் முதலிய சொற்களைப் பொருத்தி

விளங்காப் பல பொருள் ஒரு சொல் = பொருள் விளங்காத பல சொற்களைக் குறிக்கும் ஒரு சொல்லை

சிறப்பெடுத்துப் பணிப்பர் = சிறப்புச் சொல்லோடு கூட்டி சொல்வார்.

மேலும், செய்யுளின் அசைநிலையைக் குறிக்கும் பொழுதும், வேகத்தில் அல்லது கோபத்தில் அல்லது பயங்கரத்தில் அல்லது துன்பத்தில் உண்டாகும் அகநிலைமையை வெளிப்படுத்தும் பொழுதும், செய்யுளில் ஓசை சிறப்பாக தோற்றும் பொழுதும், ஒருவன் கூறிய சொல்லை மீட்டும் மீட்டும் இரண்டு மூன்று நான்கு தரம் சொல்லலும் புலவர்க்குச் சம்மதம். ஆதலால், சொன்ன சொல்லை மீட்டும் மீட்டும் சொன்னானென்பது குற்றமன்று, வழுவமைதியாம்.

அசைநிலைக்கு இரண்டு தரமும், அகநிலைக்கு மூன்று தரமும், செய்யுளுக்கு நான்கு தரமும், வரும். இவ்வெல்லைக்கு மேற்பட்டு வரலாகாது. உட்பட்டு வரலாம்.

அசைநிலை, அன்றே அன்றே. விரைவு, போ போ போ. கோபம், ஏறி ஏறி ஏறி. மகிழ்ச்சி, வருக வருக வருக. அச்சம் பாம்பு பாம்பு பாம்பு. துன்பம், வாழேன் வாழேன் வாழேன். இசைநிறை, பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவியல்

இதற்குச் சூத்திரம்: -

**௱௩௬. அசைநிலை பொருணிலை இசைநிறைக் கொருசொல்**
**இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும்.**

இதன் பொருள்:

அசைநிலை = அசைநிலைக்கும்.

பொருள் நிலை = ( விரைவு கோபம் மகிழ்ச்சி அச்சம் துன்பம் முதலிய) பொருள்களின் நிலைக்கும்.

இசைநிறைக்கு ஒரு சொல் = இசையை நிறைப்பதற்கும் ஒரு சொல்லானது.

இரண்டு மூன்று நான்கு எல்லை முறை அடுக்கும் = இரண்டு மூன்று நான்கு அளவும் முறையே அடுக்கி நிற்கும்.

மேலும், கல்வியிலாதவன் - அடிப்பது மத்தாலே - என்ற தொடர்கள் ஒவ்வொன்றுக்கும், இசை பிரித்தலாலும் உச்சாரண வித்தியாசத்தாலும் இரண்டு மூன்று அர்த்தங்கள் அமைவது மயங்கக் கூறலென்னும் வழுவாகாது, அச்சொற்களின் பொருள் தெளிவடைதலால் புலவர் அவற்றை ஒப்புக்கொண்டனர்.

கல்வியிலாதவன் என்ற தொடரை கல்வி இல்லாதவன் என்று பிரித்தால், படிப்பில்லாதவன் என்று பொருள்படும். கல்வியில் ஆதவன் என்று பிரித்தால், படிப்பில் சூரியன் போல்வன் என்று பொருள்படும்.

அடிப்பது மத்தாலே என்பது அடிப் பதுமத்தாலே என்று பிரித்தால், பாததாமரையால் என்றும், அடிப்பது மத்தாலே என்று பிரித்தால் அடிக்கிறது மத்து என்னுங் கருவியால் என்றும், பொருள்படும்.

இதற்குச் சூத்திரம்: -

**௱௩௭. எழுத்திய றிரியாப் பொருடிரி புணர்மொழி**
**இசைத்திரி பாற்றெளி வெய்து மெனப.**

இதன் பொருள்:

எழுத்து இயல்திரியா = எழுத்தின் தன்மை வேறுபடாமல்

பொருள் திரி புணர்மொழி = பொருள் வேறுபட்டு ஐயப்படநின்ற தொடர்மொழிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைத்திரிபால் = இசையறுத்துச் சொல்லும் வகையினால் தெளிவு எய்தும் என்ப = பொருள் துணியப்படும் என்று சொல்வர் புலவர்.

மேலும், ஒரு சொல் தனியே நிற்கும்போது பொருளுணர்த்த மாட்டாமலும், இரட்டித்துக் கூறும் போது பொருளுணர்த்தியும் நிற்கும். இவற்றை இடைச் சொல் என்பர். தனித்துப் பொருள் தராதனவற்றை இரு முறை கூறுதல் வழுவன்று: வாழா நிலையாம். " சலசலமும் மதம்பாய" என்ற தொடரில் முன்னின்ற சல என்னுஞ் சொல்லை நீக்கி, சல மும்மதம் பாய என்றால் சரியான பொருள் தராது. இரு மொழிகளையும் சேர்த்து உச்சரித்தால், சலசல என்னும் ஓசையுடன் மூன்று மதங்களும் சொரிய என்று அர்த்தமாகும்.

"வற்றிய ஓலை கலகலக்கும்" இத்தொடரில் முன்நின்ற கல என்னும் சொல்லை நீக்கி வற்றிய ஓலை கலக்கும் என்றாவது. வற்றிய ஓலை கல என்றாவது பிரித்துக் கூறினால் பொருள் வராது.

"குடுகுடென் றோடினான்" இதை குடு என்றோடினா னென்றாவது பிரித்துக் கூறினால் பொருளமையாது. இங்கனம் வருவனவற்றைப் பிரித்துக் கூறலாகாது.

இதற்குச் சூத்திரம்: -

**ருகூஅ. இரட்டைக் கிளவி யிரட்டிற் பிரிந்திசையா.**

இதன் பொருள்:

இரட்டைக் கிளவி = இரட்டைச் சொற்கள்.

இரட்டின் = அவ்விரட்டிப்பினின்றும்

பிரிந்து இசையா = பிரிந்து (தனித்துநின்று) ஒலியா.

மேலும், ஒன்றுக்கொன்று பிரிவில்லாதனவாய பல விஷேணப் பெயர்கள் வேறொரு பெயரைத் தொடர்ந்து வரலாம். ஒன்றுக் கொன்று மாறுபட்ட பொருளுள்ள விஷேணப்பெயர்கள் தொடரின், வழுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனப் பொதிகையோன், செந்தமிழாசான், மாதவச் செல்வன், அகஸ்தியன் வந்தான். இவை தொடர்ந்த நிலமையாலும், அகஸ்திய முனிவருக்கு ஏற்ற விசேஷணத்தாலும் வழுவாத நிலையாயின.

"எழுத்தறிவில்லான் இலக்கண நிறைகடல்" எழுத்தறியாத வனுக்கு இலக்கணந் தெரியாதாகலின், பொருத்தமில்லாத விசேஷணமாயிற்று. இங்கே பொருள் பொருந்தாது, வழுவாம்.

இதற்குச் சூத்திரம் : -

**௩௩௬. ஒருபொருட் பல பெயர் பிரிவில வரையார்.**

இதன்பொருள்:

ஒரு பொருள் பல பெயர் = ஒரு பொருளின் மேல் பல பெயர்கள் வரும்போது

பிரிவில = தம்பொருளினின்றும் பிரிந்து நில்லாதனவற்றை வரையார்= தள்ளமாட்டார்.

மேலும், செவிக்கு இன்பம் பயக்குமானால், ஒரு பொருளைத் தரும் பல சொற்களை ஒரு தொடரில் சேர்த்துக் கூறுதல் வழுவன்று.

"மீ மிசை ஞாயிறு" என்ற தொடரில், மீ ( உயர்ச்சி) மிசை (உயர்ச்சி) இரண்டும், உயரம் என்னும் ஒரு பொருளைக் குறித்தன வேனும், செவிக்கு இன்பமாய் தோன்றுதலின் வழுவன்று.

"புனிற்றிளங்கன்று" புனிறு (இளமை) இளம் ( இளமை) என்பதும் இங்ஙனமே வழுவன்று.

இதற்குச் சூத்திரம்: -

**௩௪௧. ஒரு பொருட் பன்மொழி சிறப்பி னின்வழா.**

இதன்பொருள்:

ஒரு பொருள் பன்மொழி = ஒரு பொருளில் வரும் பல சொற்கள், சிறப்பினின் வழா = செவிக்கின் பந்தரும் சிறப்பினால் வழுவாகமாட்டா.

மேலும் , பின்கூறும் இடங்களில் வழுவராமற் காத்தலுக்கு முற்றும்மை கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினையும் சேரா, இதில் உம் என்ற இடைச்சொல்லை நீக்கி இருவினை சேரா என்றால், இரண்டு வினைக்குக் கூடியவினைகள் உண்டென்றும், அவை வந்து சேரலாமென்றும். பொருள்படும். ஆனால். நல்வினை தீவினைகளாகிய இரண்டேயிருப்பதால், இருவினையும் சேராஎன்ற வாக்கியம் அவ்விரண்டும் சேர என்று பொருள்படும்.

தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார். இதில் உம்மை நீக்கித் தமிழ் நாட்டு மூவேந்தர் வந்தார் என்றால், மூவரினும் கூடிய வேந்தர்கள் உண்டென்றும், அவர்கள் வரலாமென்றும், பொருள்படும் ஆனால், மூவேந்தரும் வந்தாரென்பது மூன்றுக்குமேல் வேந்தரில்லையென்றும், அவர்களொவ்வொருவரும் வந்தாரென்றும். பொருள்படும்.

இவ்வாறே, உலகில்லாத பொருள்களும் வினைப்பயனிலை கொண்டால், உம் என்ற சொல்லைச் சேர்க்க வேண்டும். இதற்கு உதரணம்: முயற்கோடு என்றும் இல்லை. இதில் கொம்புள்ள முயல் ஒரு காலத்திலும் காணப்பெறாதபடியால், அது இல்லை யெனும் வினைப்பயனிலையைக் கொள்ளும்போதுஎன்றும் என்ற முற்றும்மை யைச் சேர்த்தாலன்றி வழுவமைதி சித்திக்காது.

ஆகாயப் பூ எங்கும் இல்லை. ஆகாசவெளியில் ஓரிடத்திலும் புஷ்பம் மலராத படியால். அது இல்லையென்னும் வினைப் பயனிலையைக் கொண்ட போது எங்கும் என்ற முற்றும்மையைப் பெற வேண்டும்.

நாகத்தின் ஐந்து தலைகளையும் கண்டார். இங்கே முற்றும் மையால் ஐந்தலைநாகம் உண்டென்றும், அதன் ஐந்து தலைகளும் ஒருங்கே காணப்பெற்றன வென்றும் விளக்கப்பட்டது.

இதற்குச் சூத்திரம் :-

**௱சக. இனைத்தென் றறிபொரு ளுலகி னிலாப்பொருள்**
**வினைப்படுத் துரைப்பி னும்மை வேண்டும்.**

இதன்பொருள்:

இனைத்தென்று அறிபொருள் = இவ்வளவென்றுஅளவறியப் பட்ட பொருளையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவியல்

உலகில் இலாப்பொருள் = உலகத்தில் வில்லாத பொருளையும் வினைப்படுத்து உரைப்பின் = வினையோடு சேர்த்துக் கூறும் போது.

உம்மை வேண்டும் = முற்றும்மை வேண்டும்.

மேலும், இம்மாடு யான் கொண்டது - இவ்வெழுத்தாணி யான் எழுதியது = இவ்வீடு யான் வசித்தது - இந் நாள் அவன் பிறந்தது - இவ்வடி அவன் அடித்தது - என்ற வாக்கியங்கள், இம் மாட்டை யான் வாங்கினேனென்றும், இந்த எழுத்தாணியால் யான் எழுதினேனென்றும், இந்த வீட்டின் கண் யான் வசித்தேனென்றும், இந்த அடியை அவன் அடித்தானென்றும், இந்நாளில் அவன் பிறந்தானென்றும் பொருள் பட்டு, வழுவமைதியாகும் என்று சில புலவர் நினைக் கின்றனர்.

மாடு கொண்டது என்ற வாக்கியத்தில், மாடு எழுவாயாகவும் கொண்டது பயனிலையாகவும் தோற்றுகின்றது.

மாடு கொண்டது, விளக்கெரிகின்றது போலவும், மனம் பொறாமை கொண்டது போலவும், அஃறிணை எழுவாய் தன் வினைப்பயனைப் பற்றிற்று. ஆனால், யான் இம்மாடு கொண்டதென்பது இலக்கணத்துக்கு விரோதம். இம்மாட்டை யான் கொண்டேன் என்று கூறவேண்டும். இந்தக் கருத்தை இம்மாடு யான் கொண்டது என்ற வாக்கியம் சுட்டுவதால், சிலர் இதை வழுவமைதி யென்றனர்.

கொடுந்தமிழ் வழக்கங்கள் செந்தமிழாகுமோ எனவும், வழுவமைதியாகுமோ எனவும், சிந்திக்கற்பாலது. இங்கனமே மற்றைய உதாரணங்களையும் ஆராய்ந்தறிக.

செயப்படுபொருள். கருவி நிலம் செயல் காலம் என்பவற்றை எழுவாய்போல இலக்கணப்பயிற்சியில்லாதவர்கள் பேசுவதைப் புலவர் வழமையுரிமை என்றனர்.

இதற்குச் சூத்திரம்: -

ஙசஉ. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினு ளுரித்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள் : செயற்படு பொருளைச் செய்தது போல = செயற்படு பொருளைக் கர்த்தாவைப்போல, வைத்து.

தொழிற்படக் கிளத்தலும் = அதன் மேல் அக்கர்த்தாவின் வினையை ஏற்றிக் கூறுதலும்.

வழக்கினுள் உரித்து = வழக்கத்திலுள்ள உரிமையாம்.

மேலும் ஒரு சொல்லைச் சிறப்பித்து நிற்கிற வேறொரு சொல் அடைமொழி எனப்படும். உ.ம். கார்த்திகை விளக்கு. இதில் விளக்கு முதல் மொழி என்றும், விளக்கை அடுத்து அதனைச் சிறப்பிக்குங் சொல் அடைமொழி என்றும் கூறுவர். முதல் மொழிக்குப் பரியாயநாமம் அடைகொளி ( அடையைக் கொண்டது)

அடைமொழியானது இனமுள்ள அடைமொழி என்றும், இனமில்லாத அடைமொழி என்றும் இருவகைப்படும். இந்த இரண்டு விதமான அடைமொழிகளும் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்பவற்றைப் பற்றிநிற்கும்.

முருகன் என்ற பொருளுள்ள பலர் இருக்குமிடத்தில், கோரிய ஒருவனை அழைப்பதற்கு அவனுடைய தகப்பன் பெயர் அல்லது ஊர் முதலிய விசேஷங்களில் ஒன்றை அடையாக வைத்தல் உலகத்தார் மரபு. இவ்விதச் சிறப்பு மொழி இனமுள்ள அடைமொழி எனப்படும்.

பிரசித்தமான விசேஷநிலைப் பொருளைப் பொருந்தின ஒரு பெரியோன் பெயருக்கு அடைமொழி கொடுத்தல் மிகைபடலாகும். இது இனமற்ற அடைமொழியெனப்படும்.

இனமுள்ளதற்கு உதாரணம்: சங்கரன் முருகன் (பொருள்). கருப்புந்தோட்டம் (இடம்) . கார்த்திகைப் பிறை ( காலம்). பூமரம் (சினை). செந்தாமரை ( குணம்). ஆடு பாம்பு ( தொழில்).

இனமில்லாததற்கு உதாரணம்: ( பொருள்) உப்பளம். இதில் அளமென்பது உப்பு விளையும் குளமாதலால், உப்பென்றது அளத்துக்கு விசேடணமன்று. ஆனால், இது மரபு எனலால் வழுவமைதி எனக் கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள் : செயற்படு பொருளைச் செய்தது போல = செயற்படு பொருளைக் கர்த்தாவைப்போல, வைத்து.

தொழிற்படக் கிளத்தலும் = அதன் மேல் அக்கர்த்தாவின் வினையை ஏற்றிக் கூறுதலும்.

வழக்கினுள் உரித்து = வழக்கத்திலுள்ள உரிமையாம்.

மேலும் ஒரு சொல்லைச் சிறப்பித்து நிற்கிற வேறொரு சொல் அடைமொழி எனப்படும். உ.ம். கார்த்திகை விளக்கு. இதில் விளக்கு முதல் மொழி என்றும், விளக்கை அடுத்து அதனைச் சிறப்பிக்குங் சொல் அடைமொழி என்றும் கூறுவர். முதல் மொழிக்குப் பரியாயநாமம் அடைகொளி ( அடையைக் கொண்டது)

அடைமொழியானது இனமுள்ள அடைமொழி என்றும், இனமில்லாத அடைமொழி என்றும் இருவகைப்படும். இந்த இரண்டு விதமான அடைமொழிகளும் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்பவற்றைப் பற்றிநிற்கும்.

முருகன் என்ற பொருளுள்ள பலர் இருக்குமிடத்தில், கோரிய ஒருவனை அழைப்பதற்கு அவனுடைய தகப்பன் பெயர் அல்லது ஊர் முதலிய விசேஷங்களில் ஒன்றை அடையாக வைத்தல் உலகத்தார் மரபு. இவ்விதச் சிறப்பு மொழி இனமுள்ள அடைமொழி எனப்படும்.

பிரசித்தமான விசேஷநிலைப் பொருளைப் பொருந்தின ஒரு பெரியோன் பெயருக்கு அடைமொழி கொடுத்தல் மிகைபடலாகும். இது இனமற்ற அடைமொழியெனப்படும்.

இனமுள்ளதற்கு உதாரணம்: சங்கரன் முருகன் (பொருள்). கருப்புந்தோட்டம் (இடம்) . கார்த்திகைப் பிறை ( காலம்). பூமரம் (சினை). செந்தாமரை ( குணம்). ஆடு பாம்பு ( தொழில்).

இனமில்லாததற்கு உதாரணம்: ( பொருள்) உப்பளம். இதில் அளமென்பது உப்பு விளையும் குளமாதலால், உப்பென்றது அளத்துக்கு விசேடணமன்று. ஆனால், இது மரபு எனலால் வழுவமைதி எனக் கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவியல்

(இடம்) ஊர்மன்று. மன்று (சபை) காட்டிலமையாது, ஊருக்கே உரியதாதலால் ஊர்மன்று என்று சொல்வது மிகைபட லெனினும், மரபில் உள்ளது பற்றி வழுவமைதியாயிற்று.

(காலம்) நாளரும்பு. நாள் காலஞ்செல்லாமல் அரும்பு தோற்றமாட்டாதபடியால் நாளரும்பு வழுவமைதி.

(சினை) காது செவிடன். காது என்ற சினைச் சொல்லை அடுத்து வந்த முதல் மொழி செவிடன். செவிடன் என்று கூறவே காதுகேளாதவனென்று விளங்குதலால், காது செவிடன் என்பது வழுவாமைதியாம்.

(குணம்) செம்போத்து ( சிவந்த செம்பகப்பறவை) . செம் என்ற குணச்சொல்லை அடுத்துவந்த முதல்மொழி போத்து. போத்து என்ற சொல்லவே செந்நிறம் விளங்குதலால், செம்போத்து என்பது வழுவமைதி.

(தொழில்) தோய் தயிர் (உறையிட்டதயிர்). புளித்த மோரை அல்லது தயிரைப் பாலிலிட்டால் அது தயிராகும். ஆதலால் தோய்தயிர் என்பது மரபாயினும் வழுவமைதியாம்.

இதுவரையில் உலக வழக்கு உதாரணங்கள் கூறப்பட்டன. இனி , செய்யுள் வழக்கினும் இனமுள்ளவையும் இனமற்றவையுமான உதாரணங்கள் கூறப்படும்.

" பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்." (பொருளை விரும்பிய வேசிகளது பொய்த்தன்மையான சேர்க்கை). அறத்துக்குரிய பெண்டிரைப் பொருள் என்ற பதம் விலக்கி, மறத்தைச் செய்யும் வேசியரைக் குறித்தது.

"கான்யாற்றடைகரை" (முல்லை நிலத்துக்குரிய கான்யாறு பாய்தற்குப் பொருத்தமான கரை). கரை என்பது தீரம். இது இடத்தைப் பற்றியது.

முந்நாட் பிறையின் முனியாது வளர்ந்தது (மூன்றாம் நாளின் பிறைபோலச் சாந்தமாய் வளர்ந்தது). இது காலத்தைப் பற்றிய இன அடைமொழி.

"கலவமா மயிலெருத்திற் கடிமல ரவிழ்ந்தன காயா" (மயிலினது தோகையைப் போலச் சிறந்த புஷ்பங்களை அலர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது காயாமரம்) .கலவம் = தோகை. இதில் கலவம் என்றது சினையைப்பற்றிய இனமுள்ள அடைமொழி.

"சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு" (சிறிய கொம்பில் பெரிய பழம் தூங்கினாற்போல). சிறுமை என்னும் குணச்சிறப்புச் சொல்லை அடுத்து வந்த முதல் மொழி கோடு.

"ஆடர வாடா வாடு மம்பலத் தமிர்தே." (ஆடு அரவு ஆட ஆடும் அம்பலத்து அமிர்தே) அம்பலத்தில் ஆடுகின்ற அமிர்தமே, தமது ஆடலைப் பார்த்து, பாம்பின் கீழ்ப்பாகத்தைப் பெற்ற பதஞ்சலி முனிவரும் பாம்புபோல ஆட). ஆடுதலாகிய தொழிலைக் குறிக்கும் இன அடைமொழி.

இனமில்லாத அடைமொழி.

வடவேங்கடம் தென்குமரி." தமிழகத்தில் வேங்கடம். அதன் வட பாக எல்லையில் உண்டென்று யாவரும் அறிந்த படியால் வடவேங்கடமென்று கூறுவது வழுவமைதி. அவ்வாறே குமரியென்பது தமிழகத்தில்தென்பாக எல்லையென்று யாவரும் அறிந்த படியால் தென்குமரியென்பதும் வழுவமைதி. இவ்விரண்டும் இடத்தைப்பற்றி வந்தன.

"வேனிற் கோங்கின் பூம் பொகுட்டன." ( வேனிற் காலத்தில் புஷ்பிக்கின்ற கோங்கினது பொலிவாகிய முகைபோல). வேனிற் காலத்தில் கோங்கு பூப்பது பிரஸ்தாபமாயிருப்பதால், வேனிற் கொங்கு எனல் வழுவமைதி.

சிறகர் வண்டு செவ்வழிப்பாட." (சிறகையுடைய வண்டு செவ்வழி என்னும் பண்ணைப் பாட) வண்டுக்குச் சிறகு இயல் பாதலால், சிறகர் வண்டு என அடைகொடுத்தது வழுவமைதி. அது சினையைப்பற்றியது

"செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்." ( சிவந்த நிறத்தையுடைய சூரிய பகவானது ஒளியை விரும்பினாலும்). சூரிய தேவனது நிறம் சிவந்ததானபடியால், செம் என்ற அடைமொழி மரபினால் வந்த வழுவமைதி. இது குணத்தைப்பற்றியது.

"கோட்சுறா." (சுழலும் சுறா) சுறாவுக்குச் சுழன்று போகுதல் தொழிலாலதால், கோள் என்பது மரபினால் வந்த வழுவமைதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்:-

**ராசரு. பொருண்முத லாறு மடைசேர் மொழியினம்**
**உள்ளது மில்லது மாமிரு வழக்கினும்.**

இதன் பொருள்:

பொருள் முதல் ஆறும் அடைசேர் மொழி = பொருளாதி ஆறாகிய அடைகளடுத்துவரும் மொழிகள்

இருவழக்கினும் = இருவகை வழக்கினும்

இனம் உள்ளதும் இல்லாததும் ஆம் = இனம் உள்ளனவும் இனம் இல்லனவுமாம்.

ஈண்டு "உள்ளது மில்லது மாமிரு வழக்கினும்" என்று பவணந்தி முனிவர் இரண்டாம் அடியிற் கூறினதை வைத்திய நாத தேசிகர் தமது இலக்கண விளக்கத்தில் "உள்ளதற்குரித்தில் லதற்கு மொரோவழி" என்று பாடமோதினார். இதனாற் சூத்திரத்தின் பொருள் மிகத் தெளிவாயிற்று.

வைத்திய நாத தேசிகர் பாடப்படி (இலக்கண விளக்கம், சூத்திரம் 312-க்குரை) "இனம் உள்ளதற்கு உரித்து , அல்லதற்கும் ஒரோவழி = இனப்பொருள்கள் உள்ளதாகி முதல் மொழிகளில் ஒன்றைக் குறிப்பதற்குச் சிறப்புப்பெயர் கொடுத்தல் உரிய அடைமொழி எனப்படும். அடைமொழி இல்லாமல் அறியத்தக்க முதல்மொழிக்குச் சிலவிடத்து (ஒரோவழி, ஓர் ஓர் இடத்து) அடைமொழி உரியதாகும். அநேக கந்தசாமிக் கோவில்கள் இருப்பதால், நல்லூர் கந்தசாமிக் கோவிலென்பது உரிய அடைமொழி. அகஸ்தியர்என்ற மகா முனிவரைப் பொதியமலை அகஸ்தியர் என்று கூறவேண்டியதில்லை. அந்த அடைமொழி ஏகதேசம் வரின் வழுவமைதியாகும்.

மேலும். அடைமொழிகள் தமக்கினமான பொருளை யுணர்த்துவதுடன் இனமில்லாத பொருளையும் உணர்த்தும்.

பாவஞ் செய்தவன் நரகமடைவான். இது புண்ணியஞ் செய்தவன் சுவர்க்கமடைவானென்று இனத்தைச் சுட்டுகின்றது.

இதற்குச் சூத்திரம்:-

**ராசச. அடைமொழி யினமல் லதுந்தரு மாண்டுறின்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பொருள்:

ஆண்டு உறின்=இவ்விடத்துக்குப் பொருந்து மாயின்

அடைமொழி= அடையாக நிற்குஞ் சொல்

இனமல்லததும் தரும் = (இனத்தைத் தருதலேயன்றி அதனோடு) இனமல்லாததையும் தரும்.

மேலும், ஒரு முதற்பொருளை விசேஷித்து அதன்முன் சினையுங், சினையை விசேஷித்து அதன்முன் அடையும், வருவது மரபு. உ.ம். வேற்கை முருகன் . முருகன் முதல்மொழி, கை முதலை விசேஷித்த சினை, வேல் சினையை விசேஷித்த அடை. செங்கால் நாரை. நரையைக் காலும், காலை செம்மையும் விசேஷித்தன. இந்தத் தொடர்களில் அடையும் சினையும் தோன்றியபின் முதல் மொழி வந்தது.

இரண்டு அடைமொழிகள் ஒரு முதற்பொருளை விசேஷித்து வருதலுமுண்டு. உ-ம். மனைச்சிறு கிணறு(மனையின் கணுள்ள சிறு கிணறு) மனை, சிறு என்ற இரண்டு அடைமொழிகள் முதல் மொழியை விசேஷித்தன. மனை என்பது சிறு என்பதற்கு அடையாக வராது.

சிறு கருங் காக்கை. ஈண்டும் சிறு என்பது கருமையை விசேஷியாமல், முதல்மொழியை விசேஷித்தது கரு என்பதும் அதனை விசேஷித்தது. சிறு என்பதும் கரும் என்பதற்கு அடையாகாது.

பாட்டில் சினையை இரண்டடை விசேஷித்தும், இரண்டிற்கு மேற்பட்டும், வரும். சிறு கருங்கட் பேதை . (சிறிய கரிய கண்ணை யுடைய பெண்). இது சிறு கரும் என்ற இரண்டடைகளையும் கண் என்ற சினை கொண்டது.

“பெருந்தோட் சிறு மருங்கிற (மருங்கு = இடை. இல் சாரியை) போரமர்க்கட் பேதை” இதில், பெரிய தோளையும். சிறிய இடையையும், பெரிய போரை விளைவிக்கும் கண்களையும் உடைய பெண் என்று பல விசேஷணங்கள் வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்: -

**௩௪௫. அடைசினை முதன்முறை யடைதலு மீரடை
முதலோ டாதலும் வழக்கிய லீரடை
சினையொடு செறிதலும் மயங்கலுஞ் செயுட்கே.**

இதன் பொருள்:

அடை சினை முதல் முறை அடைதலும் = அடையும் சினையும் முதலுமாய் முறையே ஒன்றை ஒன்று விசேஷித்து வருதலும்.

ஈர் அடை முதலொடு ஆதலும் = இரண்டு அடைமொழி ஒருமுதலை விசேஷித்து வருதலும்

வழக்கியல் = உலக வழக்கம்.

ஈரடை சினையொடு செறிதலும் மயங்கலும் இரண்டு அடைமொழி ஒரு சினையை விசேஷித்து வருதலும் இவ்வரம்பு கடந்து வருதலும்.

செய்யுட்கு = செய்யுளுக்குரிய வழக்கமாம்.

மேலும், ஒருபொருளுக்கு இயற்கையாயுள்ள தன்மையைக் கூறும்போது ஆயிற்று, ஆனது முதலிய ஆக்கச் சொற்களைக் கொடாமல் கூறுக. இன்னபொருள் இத்தன்மைத்தென்று கூறல் வழுவாநிலை.

நீருக்குக் குளிர்ச்சி இயற்கையாதலால் நீர் தண்ணிதாயிற்று என்று ஆக்கச் சொல்லோடு கூறின், நீர் முன் வெய்யதாயிருந்த தென்றும் இப்போது தண்ணிதாயிற்றென்றும் அர்த்தப்படும். இதன் இயற்கையை மாத்திரம் காட்ட குறிப்பிட்டுக் கூறும் போது நீர் தண்ணிது என்று கூறவேண்டும். ஆனால் வெய்யது என்பது அனலின் இயற்கையைக் காட்டலால் வழாநிலை. அனல் வெய்யதாயிற்று என்றால் முன் குளிர்ந்திருந்தெனப் பொருள் பட்டு வழுவாகும். ஆதலின் அனல் வெய்யதென்க.

இதற்குச் சூத்திரம்: -

**௩௪௬. இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.**

இதன் பொருள்:

இயற்கைப் பொருளை = இயற்கைப் பொருள் செயற்கைப் பொருள் என்னும் இருவகைப் பொருள்களுள் இயற்கைப் பொருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்று எனக்கிளத்தல்= இத்தன்மை என்று சொல்லுக.

மேலும் ஒரு பொருளின் , இயற்கையாயுள்ள தன்மையைக் கூறும் போது அப்பொருளின் செயற் காரணச் சொல்லை முன்னும், ஆயின ஆயிற்று முதலான ஆக்கச்சொல்லொன்றைப் பின்னும் வைத்துக் கூறவேண்டும்.

எருப்பெய்து நீர்ப்பாய்ச்சிக் களைபிடுங்கியமையால் பயிர் நல்லவாயின என்ற தொடரில், எரு இடுதல் நீர் விடுதல் களை பிடுங்குதல் என்ற செயற் காரணச்சொற்கள் முன்னும், ஆயின என்ற ஆக்கச் சொல் பின்னும், வந்தன. இங்ஙனம் வருதல் மரபு வழுவாமை.

செயற்கைப் பொருள் (உண்டாக்கப்பட்ட பொருள்) களை கூறும் போது காரணச் சொல் இல்லாமல் ஆக்கச் சொல்லை மாத்தி ரம் வைத்து கூறுதலுமுண்டு. உ.ம். பயிர் நல்லவாயின. இவ்வாறு காரணமின்றி ஆக்கம் பெற்று வருதல் வழுவமைதி.

செயற்கைப் பொருளைக் கூறும் போது ஆக்கச்சொல் இல்லாமல் காரணத்தை மாத்திரம் சேர்த்துக் கூறுதலுமுண்டு. உ.ம். எருப்பெய்து நீர்ப்பாய்ச்சிக் களைபிடுங்கப்பட்டமையால் பயிர் நல்ல. இங்கே எருப்பெய்தல் நீர்ப்பாய்ச்சல் இளங்களை கட்டல் என்னும் காரணங்கள் கூறியிருக்கின்றன. ஆயின் என்னும் ஆக்கம் இல்லை. இது ஆக்கமின்றி வந்தமையால் வழுவமைதி.

ஆக்கச் சொல்லும் காரணச் சொல்லும் இல்லாமலும் வரும். உ.ம்.பயிர் நல்ல. இது ஆக்கமும் காரணமுமின்றி வந்தமையால் வழுவமைதி.

இதற்குச் சூத்திரம்: -

**௱௪௭. காரண முதலா ஆக்கம் பெற்றும்**
**காரண மின்றி ஆக்கம் பெற்றும்**
**ஆக்க மின்றிக் காரண மடுத்தும்**
**இருமையு மின்றியு மியலுஞ் செயும்பொருள்.**

இதன் பொருள்: செயும் பொருள் = செயற்கைப் பொருள் (உண்டாக்கப்பட்ட பொருள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரண முதலா ஆக்கம் பெற்றும் = காரணச்சொல் முன் வரவும், ஆக்கச்சொல் பின்வரவும் பெற்றும்

காரணமின்றி ஆக்கம் பெற்றும் = காரணச் சொல் தொக்கு நிற்ப ஆக்கச் சொல் வரப்பெற்றும்

ஆக்கம் இன்றிக் காரணம் அடுத்தும் = ஆக்கச் சொல் தொக்கு நிற்பக் காரணச் சொல் வரப்பெற்றும்

இருமையும் இன்றியும் இயலும் = இவ்விருவகைச் சொல்லும் தொக்கு நிற்கவும் நடக்கும்.

மேலும், தன்னிடத்தி லில்லாத ஒரு பொருளை விலைக்கு வாங்குவோன் வினாவுக்கு அவன் கேட்ட பொருள் தன்னிடமில்லாமையை விளக்கும் பொருட்டுக் கேட்டதற் கினமான பொருளிருக்கின்றதென்று விடையளிப்பது வழுவமைதி. உ.ம். நன்னூலிருக்கின்றதா என்ற வினாவுக்கு அது தன்னிடமில்லாதவன் தொல்காப்பியமிருக்கின்றதென்று கூறுதல்.

கேட்ட பொருளிருந்தால் அது இருக்கின்றதென்று கூறாமல் அதன் விலையைக் கூறுதல் வழுவமைதி.

இதற்குச் சூத்திரம்: -

௩௪௮. தம்பா லில்ல தில்லெனி னினனாய்
உள்ளது கூறி மாற்றியு முள்ளது
சுட்டியு முரைப்பர் சொற்சுருங் குதற்கே.

இதன் பொருள்:

தம்பால் இல்லது இல்லெனின் = தம்மிடத்து இல்லாத பொருள்களை இல்லையென்று கூறவேண்டின்.

இனனாய் உள்ளது கூறி = அதற்கினமான பொருளைச் சொல்லி மாற்றியும் = மாறிக் கூறுவதினால் மறுத்தும்

உள்ளது சுட்டியும் = வினாவிய பொருள் தம்மிடத்துள்ள தாயின் அதன் அளவைக் குறித்தும்

சொற்சுருங்குதற்கு உரைப்ப = சொற்சுருங்குதற் பொருட்டுக் கூறுவர்

மேலும், ஈ என்பது தாழ்ந்தவன் உயர்ந்தவனிடம் ஒரு பொருளைக் கேட்கும் இரப்பு வார்த்தை. உ.ம். தந்தையே ஈ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தா என்பது சமானமனவனிடம் ஒரு பொருளைக் கேட்கும் உரையாம். உ.ம். தோழா, அதனைத் தா.

கொடு என்பது தாழ்ந்தவனிடம் உயர்ந்தோன் ஒரு பொருளைக் கேட்கும் உரையாம். உ.ம். மைந்தா கொடு.

இம்மூன்று சொற்களும் முறைதவறி வருதலை "புதியன புகுதலும்" என்னும் சூத்திரத்தால் அமைக்க.

இதற்குச் சூத்திரம்: -

**௪௬௬. ஈதா கொடுவெனு மூன்று முறையே**
**இழிந்தோ னொப்பேன் மிக்கோ னிரப்புரை.**

இதன் பொருள்: ஈ தா கொடு என்னும் மூன்றும் முறையே = இம்மூன்று சொற்களும் நிரனிறையாக

இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரைப்புரை = இழிந்தவனும் ஒப்பவனும் உயர்ந்தவனும் இரத்தற்குவரும் சொற்களாம்.

மேலும் குறித்த பொருளை நேரே வெளிப்படுத்தாது வேறோரு பொருளைக் கூறுவதனால் வெளிப்படுத்தும் குறிப்புச் சொற்களுமுண்டு. உ.ம். குழை கொண்டு கோழியெறியும் வாழ்க்கையர் இது, காதிலணிந்த இரத்தினக் கமலத்தைக் கொண்டு கோழியைத் துரத்த எறியும் வாழ்க்கையுடையவர்கள் என்று பொருள்படும். இதனால் அவர்களது பெருஞ்செல்வம் குறிப்பாக உணர்த்தப்பட்டது.

இதற்குச் சூத்திரம்: -

**௪௫௰. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே.**

இதன் பொருள்:

முன்னத்தின் உணரும் = வெளிப்படையாலன்றிக் குறிப்பினால் பொருளறியப்படும்

கிளவியும் உள = சொற்களும் சில உண்டு.

மேலும் அறியும் சக்தியற்ற பொருள்களை அறிகின்றது போலவும், பேசுஞ் சத்தியற்றவை பேசுவன போலவும், அசையுஞ் சதியற்றவை அசைகின்றது போலவும், பாவித்தல் வழுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைதியாகும். உ.ம். குனிப்புடையானுக்கே சென்றதாய் கோத்தும்பி ஈண்டு ஒரு தும்பி கேட்டு அறியும் தன்னுடையது போல விளிக்கப்பட்டது.

இவ்வழி மதுரைக்குப் போகும். ஓரிடத்திலிருந்து வேறோரிடத்துக்கு இட்ட வழி அந்தந்த இடத்தில் இட்டபடியேயிருக்கும். அதற்குச் செல்லுஞ் சத்தியில்லை. அந்த வழியில் நடப்பவர்கள் மதுரைக்குப் போவார்கள் என்று பொருள் பட இத்தொடரை கூறுதல் வழுவமைதி.

நாவினாற் சுட்டவடு. வாக்காற் சுடு பட்டு வந்த வடு (தழும்பு). நாவுக்குத் தொழில் போசுவதும் சுவைப்பதுமே. (ஈண்டு நாவென்பது பேசும் வாக்கு) வாக்கானது சாந்த சொற்களைப் பேசினால் கேட்பவனது மனதில் இன்பத்தைப் பயக்கும். அகோர சொற்களைப் பேசினால் துன்பத்தை அல்லது எரிவைப் பயக்கும். அகோர சொற்களை மறவாது நினைத்துக் கொண்டேயிருக்கும். மனசில் துன்பம் வடுப்போல் நிற்கும். சூடேறி நிற்குமிடம் மனசாதலால் நாவினாற் சுட்ட வடு என்பது வழுவமைதி.

இதற்குச் சூத்திரம்: -

௱௫௧. கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினு மறையப் படுமே.

இதன் பொருள்:

கேட்குந போலவும் = கேளாதவற்றைக் கேட்பது போலவும்
கிளக்குந போலவும் = பேசாதவற்றை பேசுவது போலவும்
இயங்குந போலவும் = நடவாதனவற்றை நடப்பவை போலவும்
இயற்றுந போலவும = செய்யாதனவற்றை செய்தன போலவும்

அஃறிணை மருங்கினும் அறையப்படும் = அஃறிணையிலும் உயர்திணை போலச் சொல்லப்படும்.

மேலும், உவமையிலும் உருவகத்திலும் உயர்திணைப் பொருளுக்கு அஃறிணைப்பொருளை உவமானமாகவும், அஃறிணைப் பொருளுக்கு உயர்திணைப்பொருளை உவமானமாகவும் கூறுதல் மரபு. உ.ம் சிங்கம் போன்ற அரசன். உயர்திணையாகிய அரசனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஃறிணையாகிய சிங்கத்ததை உவமைகூறி யிருக்கின்றது. இரவலர் போல் மரம் இறைஞ்சி நின்றது. ( பிச்சை வாங்குபவர் போல மரம் வணங்கி நின்றது). இதுவும் வழுவமைதி.

ஆண்பாலுக்குப் பெண்பாலும், பெண்பாலுக்கு ஆண்பாலும் உவமை கூறுதலுமுண்டு. இவன் சரஸ்வதிக்கு ஒப்பானவன். சரஸ்வதி பெண்பால், இவன் ஆண்பால். ஈண்டுபால் மாறிக் கூறப்பட்டிருக் கின்றது.

இவள் சிங்கேறு போல்வாள் = சிங்கேறு ஆண்பால், இவள் பெண்பால். ஈண்டும் பால் மாறிவந்தது.

உவமானம் சினையாகவும் உவமேயம் முதலாகவும், உபமானம் முதலாகவும் உவமேயம் சினையாகவும் மாறிவரும். உ.ம். அவனுக்கு தம்பியார் இரு தோள்போல்வர். அவனுக்குக் கைகள் இரண்டு வீரர் போன்றன.

இதற்குச் சூத்திரம்: -

**௩௫௨. உருவக வுவமையிற் றிணைசினை முதல்கள்**
**பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே.**

இதன் பொருள்:

உருவக உவமையில் = உருவக அணியும் உவமையணியிலும்

திணை சினை முதல்கள் = உயர்திணை அஃறிணைகளும் அவயவமும் அவயவியும்

பிறழ்தலும் பிறவும் = தம்முள் மாறிவருதலையும். சொல்லாத வற்றையும்

பேணினர் கொளல் = பாதுகாத்துக் கொள்க.

5. பொருள் கோள் (அர்த்தங் கொள்ளுதல்)

விதம் எட்டு: (ப 472-480)

அவையாவன: யாற்றுநீர்ப் பொருள்கோள், மொழிமாற்றுப் பொருள்கோள், நிரனிறைப் பொருள்கோள், விற்பூட்டுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டு கூட்டுப் பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள் என்பன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1° யாற்று நீரப் பொருள் கோள்.

பெயரெச்ச வினையெச்ச சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து ஒவ்வொரு அடிகளிலும் பொருள் முடிவுகள் தோன்றும் படி ஒழுகுதல் யாற்றுநீரப் பொருள்கோள் எனப்படும். உ.ம்.

சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலாலர்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே.

இதனர்த்தம்: நெற்பயிர் அரிய சினைப்பட்ட பச்சைப் பாம்பைப் போல மென்மையாக கதிர்விட்டு (இருந்தீன்று), கீழ்மக்கள் செல்வம் பாராட்டப்படுவது போலக் கதிர்களை மேலே உயர்த்த (நிறுவி), நூல்களை கற்றுத் தெளிவடைந்த மனுஷரைப்போலப் பழுத்த கதிர்வளைந்து (இறைஞ்சி) காய்க்கப் பெற்றது.

இதில், சொல (நெற்பயிர்) ஆனது இருந்தீன்று நிறுவி இறைஞ்சி என்று ஒன்றையொன்று தொடர்ந்து பொருள் முடிந்து காய்த்ததுவே என்று முற்றுப் பெற்றதனால், யாற்று நீரப்பொருள் கோள் எனப்படும்.

2° மொழி மாற்றுப் பொருள் கோள்.

ஒரு சொல்லுக்குப் பொருத்தமான பயனிலையை அந்தப் பயனிலைக்குப் பொருத்தமாக சொல்லுடன் சேர்த்துக் கூறாமல் பொருந்தாத மற்றொரு சொல்லுக்குப் பயனிலை போல ஓரடியுள்ளே மாற்றிக் கூறுதல் மொழிமாற்றுப் பொருள் கோள் எனப்படும். உ.ம்.

சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

இதன் சொல்லர்த்தம்: கானக நாட்டானது குளம் சுரைக்காய் ஆழத்தக்கதும் அம்மிக்கல் மிதக்கத்தக்கதும் யானைக்கு நீந்தத்தக்கவும் முயலுக்கு நிலையாக நிற்கத்தக்கதும் என்பர். ஆனால், சுரைக்காய் ஆழமாட்டாமலும் அம்மிக்கல் மிதக்கமாட்டாமலும்,இருப்பதாலும், யானை குளத்தில் நீந்த மாட்டாமலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயல் நிலையாக மாட்டாமலும் இருப்பதாலும், பயனிலைகளை மாற்றி சுரைமிதக்க என்றும் அம்மி ஆழ என்றும், யானைக்கு நிலை என்றும், முயலுக்கு நீத்து என்றும், பொருள் கொள்ள வேண்டும் இது மொழி மாற்றுப் பொருள் கோள் எனப்படும்.

3°. நிரைனிறைப் பொருள் கோள்.

பெயர்ச்சொல்லிலாவது வினைச் சொல்லிலாவது முடிக்குஞ் சொற்கள் ஒரு நிரையாகவும் முறையே நிறுத்தப்பட்டு இதற்கு இது பயனிலையென்பது பட நிறைந்தது நிரனிறைப் பொருள் கோள். உ.ம். காரிகையார் கண் முக மதரங் கயன்மலர் பவளமாகும். இங்கே, கண் முகம் அதரம் என்னும் சொற்கள் ஒருங்கு நின்று கயல் மலர் பவளம் என்னும் சொற்களை முறையே தனித்தனி கொண்டு முடிந்தன.

நிரனிறைப் பொருள் கோள் என்பது முறைநிரைப்பொருள் கோள் என்னும் எதிர்நிரனிறைப் பொருள்கோள் என்றும் இரு வகைப்படும்.

முறை நிரனிறைப் பொருள் கோளுக்கு எழுவாய்ச் சொற்கள் நின்ற முறையே பயனிலைச் சொற்களும் வரிசையாக இருக்கும்.

உ.ம்.

உடுத்ததுவு மேய்த்ததுவு மும்பர்கோன் றன்னா
லெடுத்ததுவும் பள்ளிக் கியையப் - படுத்ததுவும்
அந்நாளெறிந்ததுவும் மனபி னிரைந்ததுவும்
பொன்னா வரையிலைகாய் பூ.

இதனர்த்தம்: தேவர்களுக்கு அரசனாகிய விஷ்ணு உடுத்ததும் மேய்த்ததும் எடுத்ததும் நித்திரை கொள்ளுதற்றுப் படுத்ததும் சென்ற நாட்களில் எறிந்ததும் அன்பினால் பிச்சை எடுத்ததும் பொன் ஆ (பசு) வரை (மலை) இலை காய் பூ, இதில் உடுத்தது முதலிய வினைப் பெயர்கள் அவற்றிற்கு ஏற்ற பயனிலை பெயர்களோடு சேர்த்து முடிக்க வேண்டும். எப்படியெனில், அவருடுத்தது பொன்னாடை, மேய்த்தது பசுக்கள், குடையாக எடுத்தது விளையாடினது கோவர்த்தனம், படுப்பதற்கு இயைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிலை, எறிந்தது விளாங்காய், மகாவலிச் சக்கரவர்த்தியிடம் கேட்டுப் பெற்றது, அவனாண்டு வந்த பூமி முதலிய லோகங்கள் யாவும்.

எழுவாய் சொல் நின்ற முறைக்கு எதிராகப் பயனிலை சொற்கள் வரிசைமாறி நிற்பது எதிர்நிரனிரை. உ.ம்.

வான்முகிலும் மின்னும் வறுநிலத்து வீழ்ந்தது போல்
தானுங் குழலும் தனி வீழ்ந்தாள்.

அதில் வான் முகிலுக்கு ஏற்ப குழலை (கூந்தலை)யும். மின்னுக்குமேற்ப மின்போன்ற இடைபெற்ற தன்னையும், முறையே பயனிலைகளாக வையாது தானுங் குழலுமென மாறி வைத்த படியால் எதிர் நிரனிறையாயிற்று.

4° . பூட்டுவிற் பொருள் கோள்.

செய்யுளின் முதற் சொல்லும் கடைசிச் சொல்லும் நாண் பூட்டிய வில்லின் நுனியைப் போல ஒன்றுக்கொன்று பொருணோக் குடையதும் விற்பூட்டுப் பொருள் கோள் எனப்படும். உ.ம்.

தருமஞ் சந்திகழ் தாமரை யோன்பதம்
கருமஞ் சந்தி கடுப்பவர் வாழ்பதம்
துருமஞ் சந்திரன் றோய்திருக் காளத்தி
வருமஞ் சந்தி மழைமத வாரணம்.

இச் செய்யுளிலமுதற் சொல்லாகிய தரும் என்பதும். இறுதிச் சொல்லகிய வாரணமென்பதும் இயைந்து பொருள் பட்டன.

5°.தாப்பிசைப் பொருள் கோள்.

செய்யுளின் நடுவிலுள்ள சொல் செய்யுள் முதலிலும் கடைசியிலும் ஊஞ்சற் கயிறு போற் சொல்லுவதால் (தாம்பு இசை = தாப்பிசை, ஊஞ்சல் போலுலாவிவரும்) தாப்பிசைப் பொருள் கோளெனப்படும். உ.ம். உண்ணாமை யுள்ளது உயிர்நிலை, ஊனுண்ண அண்ணத்தால் செய்யா தளறு.

இங்கே ஊன் என்னும் நடுநின்ற சொல் ஊன் உண்ணாமை என முற்பக்கத்து மொழியோடும். ஊன் உண்ண எனப் பிற்பக்கத்து மொழியோடும், இசைந்து பொருள்பட்டவாறு காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6° . அளைமறிபாப்புப் பொருள் கோள்

செய்யுளின் கடைசிச் சொல் இடையிலும் முதலிலும் பொருள் நோக்கி நிற்றலால் தலைகீழாய்ப் புற்றிலே மடங்கும் பாம்பு போல்வது அளைமாறி பாப்புப் பொருள் கோள் எனப்படும். (அளை = புற்று, மறி = மடங்கிய, பாப்பு = பாம்பு) . இதற்கு உதாரணம் :

சூழ்ந்த வினையாக்கை சுடவிறந்த நாற்கதியிற் சுழர்வார் தாமும்
மூழ்ந்த பிணி நலிய முன்செய்த வினையென்றே முனிவார் தாமும்
தாழ்ந்த உணர்வினாய்த் தாளுடைந்து தண்டூன்றித் தளர்வார் தாமும்.
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே.

இச்செய்யுளில் , வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறி முன்னி முயலாதார், தாழ்ந்த உணர்வினராய்த்தாளுடைந்து தண்டூன்றி தளர்வார், மூழ்ந்த பிணிநலிய முன் செய்த வினையென்றே முனிவார், சூழ்ந்த வினையாக்கை சுடவிறந்து நற்கதியில் சுழல்வர்,என்று பொருள் பண்ணவேண்டும். ஆனால் செய்யுளில் அடிகள் தலைகீழாய்ச் சென்று கூடுதல் காண்க.

7° . கொண்டு கூட்டுப் பொருள்கோள்.

செய்யுளடிகள் பலவற்றினும் கிடக்கும் சொற்களை பொருள் பொருத்தமுறக் கூட்டியுரைப்பது கொண்டு கூட்டுப் பொருள் கோள் எனப்படும். இதற்கு உதாரணம்:

தெங்கங்காய் போலத் திரண்டுருண் டபைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்.

இதில் வங்கத்துச் சென்றார் (சென்ற நாயகன்) வரின் அஞ்சனத்தன்ன பைங்கூந்தலையுடைய நாயகியினது தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட வெண்கோழி முட்டை உடைத்தன்ன பசலை (தேமல்) தணிவாம், என்று பல அடிகளிலும் ஆங்காங்குள்ள சொற்களைக் கூட்டிப் பொருள் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8°. அடிமறிமாற்றுப் பொருள் கோள்.

எந்த அடியை எந்த இடத்தில் கூட்டி உச்சரித்தாலும் பொருளும் ஓசையும் மாறாததாகியும், சில இடத்து ஓசை மாறினும் பொருள் மாறாததாகியும், வருவது அடி மாற்றுப் பொருள் கோள் எனப்படும். இதற்கு உதாரணம்:

நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டும்
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலர்ந்தக் கால்.

இச் செய்யுளில் கொடுத்துத் தான் துய்ப்பினுந் ஈண்டுங்கால் ஈண்டும் ( இரண்டாம் வரி), விடுக்கும் வினையுயர்ந்தக் கால் ( நாலாம் வரி), மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம் (மூன்றாம் வரி), (இதனை அறியாதார்) நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந்துடையார் (முதலாம் வரி), என்று பொருளுக்கேற்றபடி அடிகளைக் கூட்டிப் பொருள் பண்ணவேண்டும்.

இவற்றிற்குச் சூத்திரம்: -

௱௫௫. யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
டாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே.

இதன் பொருள்: பொருள் கோள் = பொருள் கொள்ளு நெறியானது

யாற்று நீர்மொழி மாற்று நிரனிறை விற்பூண் தாப்பிசை அளைமறி பாப்புக்கொண்டு கூட்டு அடிமறி மாற்று என = யாற்று நீர்ப் பொருள் கோள் முதலிய எட்டு = எட்டுவகையாம்.

௱௫௪. மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்
அற்றற் றொழுகுமஃ தியாற்றுப் புனலே.

இதன் பொருள்:

மற்றைய நோக்காது = ஏனை பொருள் கோள்களைப் போல சொற்களை மாற்றிக் கூற வேண்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி தொறும் வான் பொருள் அற்று அற்று ஒழுகு அஃது = ஒவ்வோரடியிலும் அமைந்த அமைந்து நடக்கும் பொருள் கோள்

ஆற்றுப் புனல் = ஆற்றொழுக்குப் பொருள் கோளாம்.

**ருடுடு. ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை**
**மாற்றியே ரடியுள் வழங்கல்மொழி மாற்றே.**

இதன் பொருள்: ஏற்ற பொருளுக்கு இயையும் மொழிகளை = பொருத்தமான இரண்டு பயனிலைகளுக்குத் தகுந்த சொற்களை

மாற்றி ஓரடியுள் வழங்கல் = முறைமாற்றி ஓரடியினுள்ளே பிரயோகித்தல்.

மொழிமாற்று = மொழிமாற்றுப் பொருள் கோளாம்.

**ருடுசு. பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்**
**வேறு நிரனிறீஇ றையினு மெதிரினும்**
**நேரும் பொருள் கோள் நிரனிறை நெறியே.**

இதன் பொருள்: பொருளும் வினையும் ஆம் சொல்லையும் பொருளையும் = பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் ஆகிய சொற்களையும் பயனிலைகளையும்

வேறு நிரல் நி றீ இ = வேறுவேறாக வரிசைப்பட நிறுத்தி முறையினும் எதிரினும் = முறையாகவாயினும் எதிராகவாயினும்

நேரும் பொருள் கோள் = இதற்கு இது பயனிலை யென்பதுபடக் கூறும் பொருள் கோள்

நிரல் நிறை நெறியே = நிரனிறைப் பொருள்கோள்.

**ருடுஎ. எழுவா யிறுதி நிலைமொழி தம்முட்**
**பொருணோக் குடையது பூட்டுவில் லாகும்.**

இதன் பொருள்: எழுவாய் இறுதி நிலைமொழி = செய்யுள் முதலிலும் இறுதியிலும் நிற்குமொழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்முள் பொருள் நோக்கு உடையது = தம்முள்ளே பொருட் பொருத்தம் பெற்றிருப்பது.

பூட்டுவில்லாகும் = பூட்டுவிற் பொருள் கோளாகும்.

**௫௫அ. இடைநிலை மொழியே ஏனையீ ரிடத்தும்**
**நடந்து பொருளை நண்ணுத றாப்பிசை.**

இதன் பொருள் : இடைநிலை மொழி = செய்யுள் நடுவில் நிற்கின்ற மொழி

ஏனையீரிடத்தும் = ஒழிந்த முதலிலும் இறுதியிலும்

நடந்து பொருளை நண்ணுதல் = சென்று பொருளைக் கூடுவது

தாப்பிசை = தாப்பிசைக் கோளாம்.

**௫௫கூ. செய்யு ளிறுதி மொழியிடை முதலினுற்**
**எய்திய பொருள்கோ ளளைமறி பாப்பே.**

இதன் பொருள்: செய்யுளிறுதிமொழி = செய்யுளீற்றினின்ற சொல்

இடைமுதலினும் எய்திய பொருள்கோள் = இடையினும் முதலிலும் சென்று பொருந்திய பொருள் கோளாம்.

அளைமறிபாப்பு = அளைமறிபாப்புப் பொருள் கோளாம்.

**௫௫ய. யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை**
**ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே.**

இதன் பொருள் : யாப்பு அடி பலவினும் = செய்யுளடிகள் பலவற்றினும்

கோப்பு உடை மொழிகளை = கோக்கப்பட்டுக் கிடக்கின்ற சொற்களை

ஏற்புழி இசைப்பது = ஏற்ற இடங்களிற் கொண்டு கூட்டுவது

கொண்டுகூட்டு = கொண்டு கூட்டுப்பொருள் கோளாம்.

**௫௫க. ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியவும்**
**யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை**
**மாட்சியு மாறா அடியவு மடிமறி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள் :

ஏற்புழி எடுத்து உடன் கூட்டுறுமடியாவும் = பொருளுக்கு ஏற்ற இடத்து எடுத்து நீங்காமற் கூட்டுகின்ற அடியையுடையவும்

யாப்பு ஈறு இடை முதல் ஆக்கினும் = செய்யுள் இறுதி நடுமுதல் களையாதோரிடத்திற் கூட்டினாலும்

பொருள் இசைமாட்சியும் மாறா அடியவும் = பொருளோடு செய்யுளோசை மாட்சியும் பொருள் மாட்சியும் வேறுபடாத அடியை யுடையனவும்

அடி மாறி = அடிமறி மாற்றுப் பொருள் கோளாம்.

பொது வியல் முற்றிற்று.

இடையியலாவது இடைச்சொற்களின் இயல்பைக் கூறும் பிரிவு. இடைச்சொல் தான் மாத்திரம் நின்று ஒரு பொருளை உணர்த்த மாட்டாது. பெயர்ச் சொல்லின் முன் அல்லது பின் நின்றாவது. வினைச் சொல்லின் முன் அல்லது பின் நின்றாவது, பொருளை விளக்கும்.

இடைச்சொற்களின் இலக்கணம் பின்வருமாறு பகுத்துக் கூறப்படும்: (1) இடைச்சொல்லின் வகை, (2) இடைச்சொற் பொருள், (3) ஏகார இடைச்சொல், (4) ஓகார இடைச்சொல், (5) என, என்று, ஆகிய இடைச் சொற்கள், (6) உம் என்னும் இடைச்சொல். (7) முற்றும்மைக்குச் சிறப்பு விதி, (8) எச்ச உம்மைக்குச் சிறப்பு விதி. (9) சில எண்ணிடைச் சொற்களுக்குப் பொது சிறப்பு இலக்கணம் . (10) எண்ணிடைச் சொற்களுக்கு சிறப்பு விதி, ( 11) பெயரோடு வரும் எண்ணிடைச் சொற்கள் வினையோடு வருதல், (12) தில் என்னும் இடைச்சொல், (13) மன் என்னும் இடைச் சொல், (14) மற்று என்னும் இடைச்சொல், (15) ஒடு, செய்ய என்னும் இடைச்சொல், (16) மற்று என்பதற்குப் புறநடை, (17) கொள் என்னும் இடைச்சொல், (18) அந்தில், ஆங்கு என்னும் இடைச்சொற்கள், (19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடையியல்

அம்ம, அம்மா என்னும் இடைச்சொற்கள், (20)மா என்னும் இடைச்சொல், (21) முன்னிலை அசைச் சொற்கள் , (22) எல்லா இடத்தும் வரும் அசைச்சொற்கள்.

### 1. இடைச்சொற்களின் வகை (ப.478 - 481).

இடைச்சொற்கள் எண் வகைப்படும். வேற்றுமை உருபுகளும், விகுதி இடைநிலை ஆகிய வினையைக் குறிக்கும் உருபுகளும், சாரியை உருபுகளும் உவமை உருபுகளும் எ ஒ மன் உம் முதலிய இடைச் சொற்பொருளை யுணர்த்தவருவனவும், இசை நிறைக்க வருவனவும், அசை நிலையும், குறிப்பால் பொருளுணர்த்துவனவுமாம்.

வேற்றுமை உருபாகிய இடைச் சொற்கள் ஐஆல் கு இன் அது கண் ஏ முதலியனவாகும். உ.ம். இராமனை , இராமனால், இராமனுக்கு, இராமனின், இராமனது, இராமன் கண், இராமனே.

வினச்சொற்களின் விகுதியும் இடைநிலையும் வினையுருபுகள் எனப்படும். உ.ம். வந்தான் (வரு+த்+ஆன்): அதில் ஆன் என்ற விகுதி வினையுருபிடைச்சொல். த் என்பதுஇடைநிலை.

சாரியை இடைச்சொற்கள், உருபுபுணரியலிற் (ப.265)) கூறப்பட்ட அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம் தம் நம் தும் ஏ உ ஐ கு ன என்பவையாம். உ.ம்.மரம் - மரத்தின். இன் என்ற உருபு அத்துச்சாரியையோடு கூடிற்று. பல - பலவற்றை. ஐ உருபு அற்றுச் சாரியையோடு கூடிற்று.

உவமையுருபிடைச் சொற்கள், போல புரைய ஒப்ப உறழமான கடுப்ப இயைய ஏய்ப்ப நேர நிகர அன்ன இன்ன என்பனவும் பிறவுமாம். உ.ம். மழை ஒத்தகொடை. புலிநிகர்த்தான். இவற்றை ஒப்புருபு இடைச்சொல் என்றுங் கூறுவர்.

வினைப்பொருளை உணர்த்தும் இடைச்சொற்கள் எ ஒ முதலியவைகளாம். உ.ம் எவன் பொன்னனோ. இங்கு எவன் என்ற பதத்தில் உள்ள எ என்பதாலும் பொன்னனோ என்பதன் ஈற்றிலுள்ள ஒ என்பதாலும், ஒருவனைப்பற்றி வினாக்கள் எழுந்தன. ஆகையால் எ ஒ வினாப்பொருளைப்பற்றி வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன் கழிவு ( சென்று போன பொருளைப் பற்றி வரும் இடைச் சொல். உ-ம். இறந்தான் மன் ( காலஞ்சென்று போய்விட் டான்)

உ-ம். ஆக்கப் பொருளைப் பற்றி வரும். உ-ம். இந்தப்பால் மருந்தும் ஆயிற்று.

இசை நிறையாவது வேறுபொருளில்லாமல் செய்யுளில் ஓசை யினிமையை நிறைத்தற்கு வருவதாம். உ-ம். ஏ ஏ இவளொருத்தி பேடி, இங்கு வேறுபொருளில்லாமல் ஓசையினிமையை நிறைந்து வந்தமையால், இசை நிறையாம்.

அசை நிலையாது ஓசை நிறைக்கவராமல், பெயர் வினைக ளோடு சார்த்திச் சொல்லப்படுவதாம். உ-ம். சொல்லுவன் கேண் மினோ. இங்கே சொல்லுவேன் கேளுங்கள் எனப்பொருள்பட்டு? ஓகாரம் வேறுபொருளின்றி வினையோடு சார்த்தப்பட்டு நிற்றலால், அசை நிலையாம். (அசைத்தால் = ஒருபொருளையும் உணர்த்தாமல் பெயர் வினைச் சொற்களோடு சார்த்திச் சொல்லப்படுதல்)

குறிப்பாற் பொருளுணர்த்தும் இடைச் சொற்களாவன: கோவன, சோவென, துடுமென, ஒல்லென, கஃறென, சுஃறென, கடகடென, கறகறென, சளசளென, குளுகுளென, கொளகொளென, சிலுசிலென, திடு திடென, படு படென, மள மளனெ, சட சடென, நெறுநெறென மொனமொனென பளபளென துண்ணென, திட்கென, திடுக்கென, பட்டென, சட்டென, தளதளென, விடு விடென, பொருக்கென, ஞெரேலென, என்பனவும் பிறவுமாம்.

இந்தக் குறிப்புச் சொற்கள் ஒலிக்குறிப்பு அச்சுக் குறிப்பு விரைவுக் குறிப்பு ஒளிக்குறிப்பு முதலாகப் பலவகைப்படும்.

ஒலிக்குறிப்பை உணர்த்துவன: கோவென, கடகடென

அச்சக்குறிப்பை உணர்த்துவன: திடுக்கென துண்ணென

விரைவுக் குறிப்பை உணர்த்துவன: பொள்ளென, பொருக்கென

இனி, இவ் விடைச் சொற்கள் பெயர் வினைகளின் முன்னும் பின்னும், ஒன்று பலவும், வரப்பெறும். உதாரணங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழையன். குழை என்ற பெயரின் பின் அன் என்ற ஒரு இடைச்சொல் வந்தது.

அதுமற்றம்ம, அது என்ற பெயரின்பின் மற்று அம்ம என்ற இரண்டு இடைச் சொற்கள் வந்தன.

ஓ சாத்தான், சாத்தான் என்ற பெயரின் முன் ஓ வந்தது.

இனி மற்று ஒன்று, ஒன்று என்ற பெயரின் முன் இனி மற்று என்ற இடைச் சொற்கள் வந்தன.

உண்ணாய், உண் என்ற வினையின்பின் ஆய் என்ற இடைச் சொல் வந்தது.

நடந்தனனே. நட என்ற வினையின் பின் அன் ஏ என்ற இடைச் சொற்கள் வந்தன.

அம்மா சிறிது. சிறிது என்ற வினையின் முன் அம்மா என்ற இடைச்சொல் வந்தது.

சீ சீ ஓடு. ஓடு என்ற வினையின்முன் சீ சீ என்ற இடைச் சொற்கள் வந்தன.

இதற்குச் சூத்திரம்

**ராருஉ. வேற்றுமை வினைசா ரியையொப் புருபுக**
**டத்தம் பொருள விசைநிறை வசை நிலை**
**குறிப்பெ ணெண்பகுதியின் றனித்திய லின்றிப்**
**பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்**
**தொன்றும் பலவும் வந் தொன்றுவ திடைச்சொல்.**

இதன் பொருள்:

வேற்றுமை = ஐ முதலிய வேற்றுமை உருபுகளும்

வினை = விகுதி முதலிய வினையுருபுகளும்

சாரியை = அன் ஆன் முதலிய சாரியையுருபுகளும்

ஒப்பு உருபுகள் = போல முதலிய உவம உருபுகளும்

தத்தம் பொருள = தமக்குரிய பொருளை உணர்த்தி வருகிற ஏ ஓ முதலியவைகளும்

இசைநிறை = (வேறு பொருளில்லாமல்) செய்யுள்ளிசை நிறைத்தற்கே வருபவைகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசை நிலை = அசையாகவருதலே பொருளாக நிற்பவையும் குறிப்பு = (வெளிப்படையா வரும் மேலே காட்டியவை போலல்லாமல்) குறிப்பினாற் பொருளுணர்த்தி வருபவையும் என் எண்பகுதியின் = என்கின்ற இந்த எட்டுவகையுடையனவாய் தனித்து இயல் இன்றி = தனித்து நடக்கும் தன்மை இல்லாமல் பெயரினும் வினையினும் = பெயர்ச்சொல்லிடத்தும் வினைச்சொல் விடத்தும்

பின் முன் ஓரிடத்து = அவற்றின் பின்னேயாயினும் முன் னேயாயினும் ஒரு இடத்தில்

ஒன்றும் பலவும் வந்து ஒன்றாவது = ஒன்றாயினும் பல வாயினும் வந்து ஒன்று பட்டு நடப்பது

இடைச் சொல் = இடைச்சொல்லாம்.

02. இடைச் சொல்லின்பொருள்கள் (ப.484 - 488)

இடைச்சொற்கள் தெரிநிலைப்பொருளிலும், தேற்றப் பொருளிலும், ஐயப்பொருளிலும், முற்றுப் பொருளிலும், எண்ணுப் பொருளிலும், சிறப்புப் பொருளிலும், எதிர்மறைப் பொருளிலும், எச்சப் பொருளிலும், வினாப் பொருளிலும், விருப்புப் பொருளிலும், ஒழியிசைப் பொருளிலும், பிரிநிலைப் பொருளிலும், கழிவுப் பொருளிலும், ஆக்கப் பொருளிலும் வரும்.

இவற்றோடன்றி, சுட்டுப் பொருளிலும், வினாப் பொரு ளிலும் இடப்பொருளிலும் காலப் பொருளிலும் விகற்பப் பொரு ளிலும் வியப்புப் பொருளிலும் பயனின்மைப் பொருளிலும் இகழ்ச்சிப் பொருளிலும் உயர்வுப் பொருளிலும் இடைச்சொல் வரும்.

தெரிநிலைப் பொருளாவது, ஒரு பொருளை இன்னது என்று தெரிவிக்கும். உ-ம். ஆணோ அதுவுமன்று, பெண்ணோ அதுவு மன்று. இது ஆணும் பெண்ணுமாகுந் தன்மையில்லாத அலியைத் தெரிவித்தது.

தேற்ற (தெளிவு)ப் பொருளாவது, நிச்சயப் பொருளில் வரு வதாம். உ-ம். உண்டே மறுமை. உண்டே என்பதில், ஏஎன்ற இடைச் சொல்லானது மறுமை நிச்சயமாக உண்டு என்று தெளிவுபடுத் தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடையியல்

ஐய ( சந்தேக)ப் பொருளாவது, ஒரு பொருளின் உண்மை யறிய மாட்டாது. இதுவே அதுவோ என்ற பொருளில் வருவதாம். உ-ம். பத்தாயினம் எட்டாயினுங்கொடு. இவ்வளவு கொடு என்று ஒன்றைத் துணிந்து சொல்லாமையால், ஐயம்.

முற்றுப் பொருளாவது தன்னோடு ஒற்றுமையுடைய எல் லாப் பொருளையுந் தழுவி வருவது. உ-ம். தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார். இதில், உம் என்ற இடைச் சொல் தமிழ் நாட்டு வேந்தருள் வருவதற்குரியார். பிறரில்லையென்று குறைவில்லாமைப் பொரு ளைத் தந்தது.

எண்ணுப் பொருளாவது வரிசையாக இதுவும் இதுவம் இதுவும் எனப் பல பொருளையும் எண்ணுகின்ற பொருளில் வரு வது. உ-ம். நிலமும் நீரும் தீயும் காற்றும் விண்ணும். இதில் உம் எண் ணுப் பொருளைக் காட்டிற்று.

சிறப்புப் பொருளாவது ஒரு பொருளின் உயர்வின் மிகுதியை யேனும் இழிவின் மிகுதியையேனும் உணர்த்துவதாம். உயர்வின் மிகுதியை உணர்த்துவது உயர்வு சிறப்பெனப்படும். உ-ம். ஓ ஓ பெரி யன். இதில் ஒருவனதுபெருமையின் மிகுதியைக் காட்டிற்று.

இழிவின் மிகுதியையுணர்த்துவது இழிவு சிறப்பாகும். உ-ம். ஓ ஓ கொடியன். இதில் ஓ ஒருவனது கொடுமையின் மிகுதியைப் புலப்படுத்திற்று.

எதிர்மறைப் பொருளாவது ஒருபொருள் தனக்குரிய பொரு ளைத் தராமல் எதிரான பொருளைத் தருவதாம். உ-ம். அவனோ கொண்டான். இந்த வினாவில் ஓ என்பது அவன் கொண்டிலன் என்ற பொருளை உள்ளடக்கிற்று.

எச்சப் பொருளாவது ஒரு பொருள் தன்னோடு எஞ்சி நிற்கும் பொருளையுந் தழுவி வருவது. இவ்வெச்சப் பொருள் நடந்த விஷயத்தில் வரும்போது, இறந்தது தழுவிய எச்சம் எனவும், நடக் கும் விஷயத்தில் வரும் போது எதிரது தழுவிய எச்சம் எனவும் கூறப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தது தழுவிய எச்சத்துக்கு உ-ம். பொன்னனும் வந்தான். இங்கே பொன்னன் வந்தான் என்றும் வேறொருவனும் வந்தான் என்று பொருள்படும்.

எதிரது தழுவிய எச்சத்திற்கு உ-ம்: இனிக் கொற்றனும் வருவான்.

வினாப் பொருளாவது ஒன்றைப் பற்றி வினாவும் பொருளில் வரும் இடைச்சொல்லாம். உ-ம். நீயோ கொண்டாய், நீயா கொண் டாய்.

விழைவுப் பொருளாவது ஒருவனுக்கு ஒரு பொருளின் மேல் விரும்பம் (விழைவு) உண்டாகுதல். உ-ம். யானே இவளைப் பெறுக தில்லம்ம. இங்கு தில் என்பது இவளைப் பெற வேண்டும்மென்கின்ற விருப்பதைக் காட்டிற்று. அம்ம, அசை.

ஒழியிசையாவது ஒழிந்த சொல்லை உணர்த்துவதாம். உ-ம். கூரியதோர் வாண்மன். இங்கு, மன் என்றது இந்தவாள் சென்ற காலத் தில் கூரியதோர் வாளாக இருந்ததென்றும், இப்பொழுது மழுங்கிப் போயிற்று என்றும், பொருள்படும்.

பிரிநிலைப் பொருளாவது ஒரு கூட்டத்துள் ஒரு பொருளைப் பிரித்துக் கூறுவதாம். உ-ம். அவர்களுள் இவனே பரிசு பெற்றான். இதில் அவர்கள் என்னும் ஒரு கூட்டத்தில் நின்று அவனைப் பிரித்து ஏ காட்டிற்று.

கழிவுப்பொருளாவது ஒருபொருளின் கழிவாலே எனக்கு வரும் குறைகளை அறிவிப்பது. உ-ம். சிறிய கட்பெறினேயெமக்கீயு மன்னே (சிறிய கண்களையுடைய யானையைப் பெற்றால், அதை எங்களுக்குக் கொடுப்பான்.) அவன் இறந்த காரணத்தால் எமக்குத் தருவது கழிந்தது என்னும் பொருளை மன் என்ற இடைச்சொல் தரும்.

ஆக்கப் பொருளாவது ஒன்றுக்குரியபொருள் மற்றொன்றுக் குமாவதாம்: உ-ம்.பாலும் மருந்தாயிற்று. இங்கு நோயாளிக்குப் பாலே உணவும் மருந்துமாயிற்றெனப் பொருள்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடையியல்

சுட்டுப் பொருளைத் தருவன: அவன் என்றதில் அகரமும், இவர் என்றதில் இகரமும் உவை என்றதில் உகரமும், வினாப் பொருளைத் தருவன: எவன், யாவன், பொன்னனா, சாத்தனோ, ஏது என்பவற்றில், எ, யா, ஆ, ஓ, ஏ.

இடப்பொருளும் காலப் பொருளும் தருவன: முன் செய், பின் இரு என்பவற்றில் முன், பின்

கால இடங்கில் எல்லைப் பொருளைத் தரும் இடைச் சொல்: இனி. உ-ம். இனிச்செய்வேன். இனி எம்மூர்.

தொழிலிடங்களின் பன்மைப் பொருளைத் தரும் இடைச் சொல்: தோறும். உ-ம் மனைதோறும் விளக்கு எரியும்.

விகற்பப் பொருளைத்தருவன: ஆவது ஆதல் ஆயினும்.
உ-ம். பத்தாவது எட்டாவது கொடு.
இரக்கப் பொருளைத் தருவன: ஐயோ, அந்தோ.
வியப்பு (ஆச்சரிய) ப் பொருளைத் தரும் இடைச் சொல்: அம்ம.

பயனின்மைப் பொருளைத் தருவன: வாளா, சும்மா, கொன்னே.

இகழ்ச்சிப் பொருளைத்தரும் இடைச்சொல்: சீ சீ. உயர்வுப் பொருளைத் தருவது: ந(நல்ல). உ-ம். நக்கீரன் (நல்ல கீரன்)

இதற்குச் சூத்திரம்: -

௨௫௫. தெரிநிலை தேற்றம் ஐயமுற் றெண்சிறப்
பெதிர்மறை யெச்சம் வினாவிழை வொழியிசை
பிரிப்புப் கழிவாக்க மின்னன விடைப்பொருள்

இதன் பொருள்: -

தெரிநிலை தேற்றம் ஐயம் முற்று எண் சிறப்பு எதிர்மறை எச்சம் வினா விழைவு ஒழியிசை பிரிப்பு கழிவு ஆக்கம் = தெரிவு நிலையும் தெளிவும் சந்தேகமும் முற்றும் எண்ணும் சிறப்பும் எதிர் மறையும் எச்சமும் வினாவும் விருப்பமும் ஒழிந்தசொல்லும் பிரி நிலையும் கழிதலும் ஆக்கமும் என்னும் பதினான்கும், இன்னன = இவைபோல்வன பிறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைப்பொருள்= இடைச்சொற்களினுடைய பொருள்களாம்.

### 03. ஏகார இடைச்சொல்.

ஏ என்பது பிரிநிலைப்பொருளிலும் வரும்: உ-ம். அவர்களுள் இவனே வந்தான். வினாப் பொருளிலும் வரும்: உ-ம். அவனேகொண்டான். (அவனாகொண்டான்). எண்ணுதற் பொருளிலும் வரும்: உ-ம். மலையே காடே வயலே சுரமே கடலே. ஈற்றசையாகவும் வரும்: உ-ம். அறைகுவன் சொல்லே. (சொல்லைப் பற்றிக் கூறுவேன்). தோற்றப்பொருளிலும் வரும்: உ-ம். உண்டே நன்மை. இசைநிறையிலும் வரும்: உ-ம். ஏ ஏ இவளொருத்தி பேடி.

ஏ என்பது சில இடத்தில் வினாப்பொருளிலும் வரும்போது எதிர்மறையில் வரும். உ-ம்.நானே கொண்டேன். (நானோ கொண் டேன், நான் கொண்டிலேன்). சில இடத்தில் இகழ்ச்சிப் பொருளில் வரும். உ-ம். ஏ ஏ அறிவிலி.

இதற்குச் சூத்திரம்: -

**௩௬௪. பிரிநிலை வினாவெண் ணீற்றசை தேற்றம்**
**இசை நிறை வெனவா றேகா ரம்மே.**

இதன் பொருள்:

ஏகாரம் பிரிநிலை வினா எண் ஈற்றசை தேற்றம் இசைநிறை என = ஏகார இடைச்சொல்லானது பிரிநிலையும் வினா வும் எண்ணும் ஈற்றசையும் தேற்றமும் இசைநிறையும் என்று கூறிய ஆறு = ஆறு பொருள்களாம்.

### 04. ஓகார இடைச்சொல்

ஓகாரம் ஒழியிசைப் பொருளில் வரும்: உ-ம். உண்ணுதற் கோ வந்தான். இது உண்பதற்கு அன்று. இங்கு கலகஞ் செய்வதற்கு வந்தான் என ஒழிந்த சொற்களைத்தருதலின், ஒழியிசையாம்.

ஓகாரம் வினாப் பொருளில் வரும். உ-ம். இராமனோ கொடுத்தான். இங்கு ஓ என்பது வினாப் பொருளைத் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகாரம் உயர்வு இழிவு என்ற வகையிற் சிறப்புப் பொருளிலும் வரும். உ.ம். ப.485 - ல் கொடுக்கப்பட்டது.

எதிர்மறைப்பொருளிலும் வரும் : உ.ம். அவனோ தந்தான். இது அவன் தந்திலன் என்னும் பொருளைத் தருதலின், எதிர்மறை எனப்பட்டது.

ஓகாரம் தெரிநிலைப் பொருளையுந் தரும். உ.ம்.ப. 484-ல். காண்க.

ஓகாரம் கழிவுப் பொருளாலும் வரும்: உ.ம். இவர் தமக்கோர் உறுதி உணராரோ (இவர் தமக்கே ஓர் உறுதியான வழியைத் தேடாரோ). இதில் அவரது வாழ்நாள் வீணாகக் கழிந்ததென்று ஓகாரம் காட்டிற்று.

இது பிரிநிலைப் பொருளில் வரும்: உ.ம்.இவனோ கொண்டான். பல பெயரினின்றும் ஒருவனைப் பிரித்து நிற்றலால், பிரிநிலை ஆயிற்று.

ஓகாரம் ஐயப்பொருளிலும் வரும். உ.ம் இங்கே வந்தவன் இராமனோ பொன்னனோ.

இதற்றுச் சூத்திரம்: -

**௪௱௨௪. ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை**
**கழிவசை நிலைப்பிரிப் பெனவெட் டோவே.**

இதன்பொருள் : ஓ = ஓகார இடைச்சொல்லானது

ஒழியிசை வினா சிறப்பு எதிர்மறை தெரிநிலை கழிவு அசைநிலை பிரிப்பு என = ஒழியிசையும் வினாவும் சிறப்பும் எதிர்மறையும் தெரிநிலையும் கழிவும் அசைநிலையும் பிரிநிலையும் என்று கூறிய

எட்டு = எட்டுப்பொருளையுந் தரும்.

(5) என, என்று என்னும் இடைச்சொற்கள்.

என என்று என்னும் இடைச்சொற்கள் வினையோடு பொருந்தி வரும். உ.ம். மகன் பிறந்தானெனத் தாய் மகிழ்ந்தாள். மகன் பிறந்தான் என்று தந்தை மகிழ்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என என்று என்பன பெயர்ச்சொல்லோடும் வரும். உ-ம். புலியென ஒரு பாவி, புலியென்றொரு பாவி.

என என்று என்பன விரைவுக்குறிப்போடு வரும். உ-ம். பொள்ளென வந்தான். சள்ளென்று பாய்ந்தான்.

என என்று என்பன ஒலிக்குறிப்போடு வரும். உ-ம். ஒல்லெனக் கேட்டது.

என என்று என்பன எண்ணுடன் வரும் உ-ம். நிலமென நீரென தீயென. நிலனென்று நீரென்று தீயென்று.

என என்று என்பன பண்பொடுவரும். உ-ம். வெள்ளென (விடியற்காலம்) வா. வெள்றென்று (வெள்ளை போல) விளர்த்தது (விடிந்தது).

இதற்குச் சூத்திரம்:-

**௱௫௫**. வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினு
மெனவெனு மொழிவரு மென்று மற்றே.

இதன் பொருள்:

என எனும் மொழி = என என்னும் இடைச் சொல்

வினை பெயர் குறிப்புஇசை எண் பண்பும் ஆயினும் வரும் = வினையும் பெயரும் குறிப்பும் இசையும் எண்ணும் பண்பும் ஆகிய ஆறு பொருளிலும் சேர்ந்து வரும்.

என்றும் அற்று = என்று என்னும் இடைச்சொல்லும் அப்படியே ஆறுபொருளினும் வரும்.

### 06. உம் என்னும் இடைச் சொல்

உம் என்பது எதிர்மறையில் வரும் : உ- ம் பொன்னன் வருவதற்கும் உரியன். இங்கே வராமைக்கும் உரியன் எனப் பொருள்படுதலின் எதிர்மறை.

உ ம் என்பது சிறப்பிலும் வரும். சிறப்பும்மை உயர்வு சிறப்பென்றும் இழிவு சிறப்பென்றும் இரு வகைப்படும். உ - ம். குறவரும் அஞ்சும் மலை. குறவர்மூலமாக மலையின் பெருமையை உ-ம் விளக்குதலால் இது உயர்வு சிறப்பும்மை. புலையரும் விரும்பாப் புன்புலால்யாக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலையர் மூலமாக உடம்பின் இழிவை உம் விளக்குதலால் இது இழிவு சிறப்பு.

உம் என்பது ஐயப்பொருளிலும் வரும். உ-ம். பத்தாயினும் எட்டாயினுங்கொடு.

எச்சப் பொருளிலும் வரும் . உ-ம். சாத்தனும் வந்தான். இது இறந்தது தழுவிய எச்சம். பொன்னனும் வருவான் இது எதிரது தழுவிய எச்சம்.

உம் என்பது முற்றுப் பொருளில் வரும் : உ-ம். தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார். இங்கே குறைவில்லாமைப் பொருளைத் தருதலால், முற்றும்மையாம்.

உம் என்பது எண்ணுப் பொருளிலும் வரும். உ-ம். சேரனும் சோழனும்.

தெரிநிலையிலும் வரும்: உ-ம். இது காடுமன்று நாடுமன்று எனவே, நகரம் (பட்டினம்) என்பதைக் குறித்தது. உம் உம்மை.

உம் என்பது ஆக்கப் பொருளிலும் வரும். உ-ம். ப. 486. இல் காட்டப்பட்டது.

இதற்குச் சூத்திரம்

**௱௫௭. எதிர்மறை சிறப்பைய மெச்சமுற் றளவை**
**தெரிநிலை யாக்கமோ டும்மை யெட்டே**

இதன் பொருள்:

உம்மை எதிர்மறை சிறப்பு ஐயம் எச்சம் முற்று அளவை தெரிநிலை ஆக்கமோடு எட்டு = உம் என்னும் இடைச்சொல் எதிர்மறையும் சிறப்பும் ஐயமும் எச்சமும் முற்றும் எண்ணும் தெரிநிலையும் ஆக்கமுமாகிய எட்டுப் பொருளைத் தரும்.

7. முற்றும்மைக்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி.

முற்றுப் பொருளில் வரும் உம் என்பது சில இடங்களில் எச்சப் பொருளையுந் தரும். முற்றும்மை பெரும்பான்மை எதிர் மறையில் வரும். உ-ம். எல்லாரும் வந்திலர் என்பதில் சிலர் வந்தார் என்றும், பத்தும் பெறான் என்பதில் சில பெறுவான் என்றும், பொருள்படுதல் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு சூத்திரம்

**முற்றும்மை யொரோவழி எச்சமுமாகும்.**

இதன் பொருள்:

முற்றும்மை ஒரோவழி எச்சமுமாகும் = முற்றுப்பொருளில் வரும் உம்மை சில இடங்களில் எச்சப்பொருளைத் தருவதுமாம்

(8) எச்சவும்மைக்கு சிறப்பு விதி.

எச்சப்பொருளில் வருகிற உம்மை செவ்வெண்ணில் வருமாயின் ஈற்றிலே வருமென அறிக.

செவ்வெண் என்பது பெயர் வினைகளிலே எண்ணிடைச் சொல் (ப. 485) தொக்கு நிற்பது உ.ம். கல்வி செல்வமும் பெறுவாருமுளர். கல்வி செல்வம் ஒழுக்கமும் பெறுவாருமுளர். கல்வி செல்வம் ஒழுக்கம் குடிப்பிறப்பும் பெறுவாருமுளர். இந்த உதாரணங்களில் எச்சவும்மை செவ்வெண் ணீற்றில் வந்தது.

இதற்கு சூத்திரம்: -

**செவ்வெண் ணீற்றதா மெச்ச வும்மை**

இதன் பொருள்:

எச்ச உம்மை செவ்வெண் ஈற்றது ஆம் = எச்சப் பொருளில் வருகிற உம்மை செவ்வெண்ணிலே வருமாயின் ஈற்றிலே வரும்.

(9) சில எண்ணிடைச் சொற்களுக்கு இலக்கணம். பெயர்களிடத்தே எண்ணிடைச்சொல் தொக்கு வருகிற செவ்வெண்ணும், தொகாமல் வருகிற ஏ என்றா எனா என்கிற இம் மூன்று எண்ணிடைச் சொற்களும் ஆகிய இந்த நான்கு எண்களும் இத்தனையென்று கணக்கிடும் தொகைச் சொல்லைப் பெற்றுவரும்.

தொக்கு (விரியாமல்) வருகிற செவ்வெண் என்பதற்கு உதாணரம்: சாத்தன் பொன்னன் இருவரும் வந்தார். இந்தத் தொடரில் உம் என்ற எண்ணிடைச் சொல் தோன்றி வந்தால் சாத்தனும் பொன்னனுமாகிய இருவரும் வந்தார் என்றும் விரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகாமல் (விரிந்து) வருகிற ஏ என்றா எனா என்கின்ற எண்ணிடைச் சொற்களுக்கு உதாரணம்: சாத்தனே பொன்னனே இருவரும் வந்தார். சாத்தானென்றா பொன்னனென்றா இருவரும் வந்தார். இவற்றில் சாத்தன் பொன்னன் என்ற பெயர்களுக்கிடையே முறையாக ஏ, என்றா, எனா என்னும் எண்ணிடைச் சொற்கள் விரியப்பெற்று ஈற்றில் இத்தனையென்று தொகை பெற்றுவந்தன.

சாத்தனும் கொற்றனும் வந்தார். சாத்தனென்று பொன்னனென்று உளர் சாத்தனென பொன்னனென உளர். சாத்தனோடு கொற்றனோடு உளர் என்றவை தொகைபெறாது வந்தன.

இவற்றிற்கு சூத்திரம் :-

**௩௭௰. பெயர்ச்செவ் வெண்ணே என்றா எனா எண்**
**ணான்குந் தொகைபெறு மும்மையென் றெனவோ**
**டின்னான் கெண்ணுமஃ தின்றியு மியலும்.**

இதன் பொருள்:

பெயர்செவ் எண் = பெயர்களிடத்தே எண்ணிடைச் சொல் தொகுவருகிற செவ்வெண்ணும்

ஏ என்றா எனா எண் = தொகாமல்வருகிற இம்மூன்று எண்ணிடைச் சொற்களும்.

நான்கு தொகைபெறும் = ஆகிய இந்த நான்கு எண்களும் இத்தனையென்று கணக்கிடும் தொகைச் சொல்லைப் பெற்றுவரும். உம்மை என்று என ஓடு = உம் முதலிய நான்கு எண்ணிடைச் சொற்களும்

அஃது இன்றியும் இயலும் அந்த இரண்டு முதலிய எண்ணிடைகளைப் பெறாமலும் வரும்

(10) சில எண்ணிடைச் சொற்களுக்குச் சிறப்புவிதி. என்று, என, ஒடு ஆகிய இடைச்சொற்கள், ஒன்றன்பின் ஒன்றாய் எண்ணப்படும் ஒவ்வொரு சொல்லுடனும் சேர்ந்துவராமல், இறுதியில் நிற்கும் ஒரு சொல்லுடன் மாத்திரம் வருதலுமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று என்னும் இடைச்சொல்லுக்க உதாரணம்: பிரமாவிட்ணு உருத்திரன் என்று மும்மூர்த்திகள் உளர். இங்கே பிரமா என்ற விட்ணு என்று உருத்திரன் என்று ஒவ்வோர் சொல்லோடும் சேராமல் இறுதியிலுள்ள உருத்திரனோடு அந்த இடைச்சொல் சேர்ந்து வந்தது.

என என்னும் இடைச்சொல்லுக்கு உதாரணம்: பகை, பாவம் , அச்சம், பழி என நான்கும். இங்கே பகை என பாவம் என அச்சம் என பழி என என்று ஒவ்வொரு சொல்லோடும் சேராமல் இறுதியிலுள்ள பழி என்பதோடு என சேர்ந்து வந்தது.

ஒடு என்னும் இடைச்சொல்லுக்கு உதாரணம் : பொருள் கருவி காலம் வினை இடனொடைந்தும். இங்கே ஒடு என்னும் இடைச்சொல் பொருளோடு கருவியோடு காலத்தோடு வினையோடு இடனோடு என்று ஒவ்வொரு சொல்லுடனும், சேராமல், இறுதியிலுள்ள சொல்லோடு சேர்ந்து வந்தது.

இதற்குச் சூத்திரம்: -

ՐՐஎக. என்று மெனவு மொடுவு மொரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்.

இதன் பொருள்:

என்றும் எனவும் ஒடுவும் = என்று ஒடு என்ற மூன்று எண்ணிடைச் சொற்களும்.

ஒரோவழி நின்றும் பிரிந்து = (எண்ணப்படும் பொருள் தொறும் நில்லாமல்) ஓரிடத்து நின்றும், (தன்னிடத்தினின்றும்) பிரிந்து

எண் பொருள் தொறும் நேரும் = எண்ணப்படுகின்ற பொருள்கடோறும் போய்ப் பொருந்தும்.

(11) பெயரோடு வரும் எண்ணிடைச் சொற்கள் வினையோடுவருதல்.

சில எண்ணிடைச் சொற்கள் வினைசொற்களோடு வந்தாலும் பெயர் சொற்கள் ஒன்றையொன்று தொடர்ந்து வரும் போது, உம் முதலிய இடைச்சொல் தொக்கு நின்றும் விரிந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவது போல, வினைச் சொற்கள் தொடர்ந்து வரும்போது இடைச்சொற்கள் தொக்கும் விரிந்தும் வரும். உ-ம். நின்று இருந்து நடந்து தொழுதேன். இதில் உம், தொக்கு நின்றது. நின்றும் இருந்தும் நடந்தும் தொழுதேன். இதில் உம் விரிந்து நின்றது. கற்கக் கேட்க வந்தான். இதில் என்று (வந்தானுக்கு முன்) தொக்கு நின்றது. கற்கவென்று கேட்கவென்று வந்தான். இதில் என்று விரிந்து நின்றது. உண்ண உடுக்கப்போனான். இதில் என தொக்கு நின்றது. உண்ணவென உடுக்கவெனப் போனான். இதில் என விரிந்துநின்றது.

இதற்குச் சூத்திரம்: -

**௩௭௨. வினையொடு வரினுமெண் ணினைய வேற்பன.**

இதன் பொருள் :

எண் வினையொடுவரினும் = எண்ணிடைச் சொற்கள் வினைச் சொல்லோட வந்தாலும்

இனைய ஏற்பன = இத்தன்மையாக (மேற்கூறியவாறு) இரண்டு முதலாய தொகைகளைப் பெற்றும் பெறாமலும் ஏற்றுக் கொள்ளும்.

(12) தில் என்னும் இடைச் சொல்.

தில் என்பது விருப்பப் பொருளையும் காலப்பொருளையும் ஒழியிசைப் பொருளையும் விளக்கும்.

தில் விருப்பப்பொருளையும் உணர்த்துவதற்கு உதாரணம்: பெண்ணைப் பெறுவதில் அம்ம. (நீ பெண்ணைப் பெற விருப்பங் கொள்வாயாக) அம்ம (அசைச் சொல்). இத்தொடரில் தில் என்ற இடைச் சொல் பெறுக என்ற வினைச்சொல்லுக்குப் பின் வந்து அதன் விருப்பப்பொருளை விளக்கிற்று.

காலப் பொருளைப் பற்றிய உதாரணம்: பெற்றாங் கறிகதில் லம்ம விவ் வூரே. (பெற்றகாலத்திலறிக இவ்வூரே). இது காலத்தை உணர்த்தியது.

ஒழியிசைப் பொருளைப் பற்றிய உதாரணம் : வருகதில்லம்ம எம்மூர் சேர (எம்மூர் சேர வருதி). எனவே, வந்தால் இன்னது தருவேன் என ஒரு பொருள் ஒழிந்து நின்றமையால் ஒழியிசை எனப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்: -

**௩௪௩**. **விழைவே கால மொழியிசை தில்லே.**

இதன் பொருள் :

தில்= தில் என்னும் இடைச் சொல்

விழைவு காலம் ஒழியிசைப் பொருளையும் உணர்த்தும்.

(13) மன் என்னும் இடைச் சொல்.

மன் என்பது அசை நிலையிலும், ஒழியிசை ஆக்கம் கழிவு மிகுதி நிலைபேறு எனற பொருள்களிலும் வரும்.

இவற்றிற்கு உதாரணம்:

அசை நிலை - உ-ம் அதுமன் கொண்கன் தேரே (அது நாயகனுடைய தேர்). இங்கு மன் பொருளற்ற அசைச்சொல்லாம்.

ஒழியிசை - உ-ம். கூரியதோர் வாண்மண் (கூர்மை பெற்ற ஓர் வாள்). இந்த வாள் தற்காலத்தில் கூர்மையற்றதென்ற பொருளை மண் குறித்தது.

ஆக்கம் (உண்டாக்குதல்) - உ-ம். பண்டு காடு மன் (பழைய காலத்தில் இது காடாயிருந்தது). எனவே, தற்காலத்தில் நாடு அல்லது நகரம்என்ற பொருளை மன் உணர்த்திற்று.

கழிவு (நீக்கம்) உ-ம். சிறிய கட்பெறினே யெமக்கீயுமன்னே, என்று ஒருபுலவர் பாடினார். இதன் பொருள்: சிறிய கண்களையுடைய யானைகளைத் திறையாக எனது அரசன் பெற்றிருந்தால் எனக்குக் கொடுப்பன். இதில், மன் என்ற இடைச் சொ ல் லானது இனி இவ்வாறு எனக்குக் கொடுப்பதற்கு அவர் இல்லையே, அவர் இறந்துபோனாரே, என்பதைக் காட்டுகின்றது.

மிகுதி. உ-ம். எந்தை யெமக்கருளுமன். (எனது பிதா எனக்கு மிகவும் தருவார்). இங்கே மன் மிகுதிப் பொருளைக் குறித்தது.

நிலைபேறு. உ-ம்- மன்னா உலகத்து மன்னியது புரிமோ நிலையற்ற உலகத்தில் நிலைபெற்ற கர்மங்களைச் செய்யுமின்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா என்றதில் தோன்றிய மன்னும், மின்னியதில் தோன்றிய மன்னும், இடைச்சொல்லே. ஆ,ஓடு கூடிய எதிர்மறையாயிற்று. மன்னியது உடன்பாடாயிற்று.

இதற்கு சூத்திரம் :-

**ஈஎச**. மன்னே யசைநிலை யொழியிசை யாக்கங்
கழிவு மிகுதி நிலைபே றாகும்.

இதன் பொருள்: (ப. 483 - 484)

மன் = மன் என்னும் இடைச் சொல்

அசை நிலை (ஆகும்) = பொருளற்ற அசைச் சொல்லாக நிற்கும்.

ஒழியிசை (ஆகும்) = ஒரு பொருளின் இயல்பான செயல் நீக்கத்தால் வேறொரு பொருளை உணர்த்தும் சொல்லாக நிற்கும்.

ஆக்கம் (ஆகும்) = ஒன்றுக்குரிய பயன் வேறொன்றுக்குரிய பயனுமாகும்.

கழிவு (ஆகும்) = இறந்த பொருளைக் குறித்து நிற்கும்.

மிகுதி (ஆகும்) = மிகுதிப் பொருளைக் குறிக்கும்.

நிலைபேறு (ஆகும்) = நிலையாகப் பெற்ற தன்மையைக் குறிக்கும்.

(14) மற்று என்னும் இடைச் சொல்.

மற்று என்பது பொருளற்ற அசைச்சொல்லோடும், பொருள் பெற்றுவரும் வினைமாற்றோடும், பிறிது என்பதனோடும் நிற்கும்.

இவற்றுக்கு உதாரணங்கள்: அசைச்சொல் - மற்றென்னை விடுக. இதன் பொருள் என்னை விட்டுவிடு.

வினைமாற்றுப் பொருள் - மற்றறிவாம் நல்வினையா மிளையமென்னாது கைத்துண்டாம்போதே கரவா தறஞ்செய்க. இதன் பொருள்: நாம் இளமைப் பருவத்தோடிருப்பதால் பின்னொரு காலத்தில் புண்ணிய கர்மங்களை விசாரித்துச் செய்வோம் என்று கூறாமல், இப்பொழுது கையில் பொருளிருக்கும் பொழுதேஅதனை மறைத்துவையாமல், நன்கொடைகளைச் செய்வாயாக.

கூறின பொருளுக்குப் பிறிதானபொருள் - ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான்முந் துறும். இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : முற்பிறவிகளிற் செய்த கர்மங்களுக்கேற்படி இன்ப துன்பங்கள் தவறாது கர்மகர்த்தாவைப் புசிக்கச்செய்யும் ஊழினும் பெரிய வலிமை உடையது யாது. இதன் வழியில் காரண காரிய சம்பந்தமாக வரும் பலன், வேறுவழியிற் பழுத்திருக்கும்பலனுக்கு முன்னமே முடிவுபெறும். இங்கே மற்று என்பது கூறிய ஊழின் பலனுக்கு வேறான பொருளைக் காட்டிற்று.

இதற்குக் சூத்திரம்: -

**௱எ௫. வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே.**

இதன் பொருள்:

மற்று = மற்றென்னும் இடைச்சொல்.

வினை மாற்று அசைநிலை பிறிது எனும் = வினைமாற்றிலும் அசை நிலையிலும் வேறு பொருளிலும் வரும்.

### 15. ஒடு தெய்ய என்னும் இடைச்சொற்கள்.

ஒடு என்பது இசைநிறைப் பொருளைப் பற்றி நிற்கும். உ-ம். விதைக்குறு வட்டில் போதொடு பொதுள.

தெய்ய என்பது இசைநிறைப் பொருளைப் பற்றிநிற்கும். உ-ம். சொல்லேன் தெய்ய நின்னொடும் பெயர்த்தே (உன்னோடு மீளவும் வார்த்தை பேசேன்).

இதற்குச் சூத்திரம்: -

**௱எ௬. ஒடுவுந் தெய்யவு மிசைநிறை மொழியே.**

இதன் பொருள்:

ஒடுவும் தெய்யவும் = ஒடு தெய்ய என்னும் இரண்டும்.

இசைநிறைமொழி = இசைநிறைப் பொருளைத் தருகிற இடைச்சொற்களாம்.

### 16. மற்று என்பதற்குப் புறனடை

ஓரிடத்திலுள்ள இரண்டு பொருள்களில் ஒன்றை ஒருவன் கொண்டு வர அது வேண்டியதில்லையென்று நினைத்தவன் மற்றதை யெடுத்துவா என்று கூறினால். மற்று என்பது முன் கொண்டுவந்த பொருளுக்கு இடத்தைப் பற்றிய இனமான பொருளைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமானது சாதி (பிறப்பு) இடம் முதலியவற்றால் வரும் சம்பந்தம்.

ஒரு புத்தகமும் ஒரு வஸ்திரமும் ஓரிடத்தில் இருப்பதனைக் கண்டு ஒருவன் இன்னொருவனுக்கு அதைக் கொண்டுவா என்று சுட்டின சமையத்தில் அவன் புத்தகத்தைக் கொண்டு வந்தால் இவன் மற்றதைக் கொண்டுவா எனலாம். ஈண்டு மற்று என்னும் இடைச்சொல் வஸ்திரத்தைக் குறித்தது.

இதற்குக் சூத்திரம்:-

**௬௭௭. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.**

இதன் பொருள் வெளிப்படை.

(17) கொல் என்னும் இடைச் சொல்,

கொல் என்பது ஐயப்பொருளைப் பற்றியும் அசைநிலைப்யைப் பற்றியும் வினாப் பொருளையும் பற்றியும் வரும்.

இவற்றிற்கு உதாரணம்: அவள் தெய்வங்கொல், மாதர் கொல், இதில் கொல் என்பது தெய்வ மகளோ மானுடமகளோ என்னும் ஐயப்பொருளை விளக்கிற்று.

கற்றதனாலாய பயனென்கொல், இதில் கொல்லெண்பது வேறு பொருளின்றி நிற்றலால், அசை நிலையாம்.

நீகொல் செய்தாய். இதில், நீயாசெய்தாய் என்ற வினா வந்தது.

இதற்குச் சூத்திரம்:-

**௬௭௮. கொல்லே யைய மசைநிலைக் கூற்றே.**

இதன் பொருள்:

கொல் என்பது ஐயப்பொருளிலும் அசைநிலைப் பொருளிலு ம் வருகிற இடைச்சொல்லாம் .

(18) அந்தில், ஆங்கு, என்னும் இடைச்சொற்கள்.

இவை அசைநிலையாகவும் இடப்பொருளாகவும் வரும்.

உ-ம். அந்தில் கழலினன் கச்சினன் (வீரக் கழலையும் கச்சையும் அணிந்தவன்). அந்தில் அசை, பொருளற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தில் கொழுநன் காணிய (அவ்விடத்தில் வரும் நாயகனைக் காண்க)

ஆங்கு. ஆக்கத்திறனல்ல யாம் கழற. (ஆங்கு அத்திறனல்ல யாம் கழற = நாம் சொல்ல அந்தத் தன்மையுள்ள தல்ல). இங்கே ஆங்கு அசைநிலை. ஆங்குக் கண்டேன். இங்கே, ஆங்கு இடம் எனப் பொருள்படும்.

இதற்குச் சூத்திரம்: -

**ஈஎசூ. அந்தலாங் கசைநிலை யிடப்பொரு ளவ்வே.**

இதன் பொருள் வெளிப்படை.

(19) அம்ம, அம்மா, என்னும் இடைச்சொற்கள்.

அம்ம, அம்மா, என்பவை சிறிதே பொருளுணர்த்திவருவதால் உரை யசைகள் எனப்படும்.

உ-ம். சும்மா விருக்கச் சுகஞ் சுகமென்று சுருதியெல்லாமம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு.

அம்ம, அம்மா, என்பவை நீ இதைக் கேள் என்று சிறிது பொருளை உணர்த்தும்.

இதற்குச் சூத்திரம் : -

**ஈஅய. அம்ம உரையசை கேண்மினென் றாகும்.**

இதன் பொருள் :

அம்ம, என்னும் இடைச்சொல் கட்டுரைச் சொல்லிலும் சொல்லுகிறேன் கேளும் என்ற ஏவற் பொருளிலும் வரும்.

(20) மா என்னும் இடைச் சொல்

இது வியங்கோளையடுத்த அசைச்சொல்லாகும்.

உ-ம். புற்கை உண்கமா(உப்பில்லாத புற்கைச் சாதத்தை உண்க). இதில் உண்க என்னும் வியங்கோளைப் பின்பற்றி மா என்ற அசைவந்தது.

இதற்குச் சூத்திரம்: -

**ஈஅக. மாஎன் கிளவி வியங்கோ ளசைச்சொல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடையியல்

இதன் பொருள் :

மா என்னும் சொல் வியங்கோளில் வரும் அசைச் சொல்லாம்.

(21) முன்னிலை யசைச்சொற்கள்.

இவையெல்லாம் கீழ்வருமாறு முன்னிலையேவலில் வரும்.

1. மியா - கேண்மியா (கேள்).
2. இக - காணிக (காண்).
3. மோ - மொழிமோ (மொழி).
4. மதி - செல்மதி (செல்)
5. அத்தை - சொல்லியரத்தை (சொல்லியச் சொல்லும்படி).
6. இத்தை - பாடித்தை (பாடு).
7. வாழிய - காணிய வாழிய (வாழ்).
8. மான - தவிர்ந்தீகமான (தவிர்ந்துஈக).
9. ஈ - சென்றீபெரும (சென்றுபெரும).
10. யாழ - செலவயர்ந்தியாழ (செலவு அயர்ந்து).

இதற்குச் சூத்திரம்: -

**ாஅ௨. மியாயிக மோமதி யத்தை யித்தை**
**வாழிய மானவீ யாழமுன் னிலையசை**

இதன் பொருள் :

மியாமுதல் யாழ இறுதியான பத்திடைச் சொற்களும் முன்னிலை யிடத்து வருகின்ற அசைச் சொற்களாம்.

(22) எல்லா இடத்தும் வரும் அசைச்சொற்கள்.

இவை பெயர்ச் சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும் முன்னும் பின்னும் வரக்கூடிய அசைகள்.

1. யா - யா பன்னிருவர் (பன்னிருவர்)
2. கா - இவள் காண்டிகா (இவளைக்காணுதி)
3. பிற - அணியல்லபிற (அலங்காரமல்ல)
4. பிறக்கு - பிறக்கு இதனுட்செல்லான் (இதனுட்செல்லான்)
5. அரோ - ஓடாதரோ (ஓடாது)
6. போ - கூவாதென்போ (கூவாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மாது - வந்ததன்று மாதே ா (வந்தன்று, வரவில்லை).
8. இகும் - கண்டிகு மல்லமோ (கண்டோம் அல்லோம், நாம் காணவில்லை)
9. சின் - உரைத்திசின் (உரைத்தி, சொல்லுதி)
10. குரை - பலகுரை யூதியம் (பல ஊதியம், வரும்படி)
11. ஓரும் - அஞ்சுவதோரு மறனே (அஞ்சுவது அறனே, விலக்கப்பட்ட பழிகளுக்கு அஞ்சவேண்டும்)
12. போலும் - நட்டளைபோலும் (நட்டளை, நஷ்டம்).
13. இருந்து - எழுந்திருந்தேன் (எழுந்தேன்)
14. இட்டு - நடந்திட்டான் (நடந்தான்)
15. அன்று உரைத்துமன்றே (உரைத்தும்)
16. ஆம் -பணியுமாமென்றும் (பணியுமென்றும்)
17. தாம் - அவர்தாம் (அவர்)
18. தான் - நன்றான் (நான்)
19. கின்று - எழுந்திருக்கின்றேன் (எழுந்தேன்)

இதற்குச் சூத்திரம்: -

ΠΙஅரு. யாகா பிறபிறக் கரோபோ மாதிகுஞ்
சின்குரை யோரும் போலு மிருந்திட்
டன்றாந் தாந்தான் கின்றுநின் றசைமொழி

இதன் பொருள் வெளிப்படை.

இடையியல் முற்றிற்று.

## உரியியல்

இதுகாறும் இடைச்சொல்லின் இலக்கணத்தைக் கூறினாம். இனி உரிச்சொல்லின் இலக்கணத்தைக் கூறுவாம்.

இந்த உரியியல் பதினேழு பிரிவுகளிற் கூறப்படும். அவையாவன: 1. உரிச்சொல்லின் பொதுவிலக்கணம், 2. உயிர் சடப்பொருள்களின் பண்பு, 3. உயிர்ப்பொருள், 4. ஓரறிவுள்ள உயிர், 5. ஈரறிவுள்ள உயிர், 6. மூவறிவுள்ள உயிர், 7. நாலறிவுள்ள உயிர், 8. ஐயறிவுள்ள உயிர், 9. சடப்பொருள், 10. இவற்றிற்குப் புறனடை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரியல்

*11. உயிர்ப்பொருள்களின் குணம், 12. உயிர்ப்பொருள்களின் தொழில், 13 சடப்(உயிரில்) பொருள்களின் பண்பு, 14 இருபொருள்களுக்கும் பொதுவாகிய தொழிற் பண்பு, 15. ஒரு குணந்தழுவிய உரிச் சொல், 16. பலகுணந்தழுவிய உரிச்சொல், 17. இவ்வியலுக்குப் புறனடை.*

1. உரிச்சொல்லின் பொதுவிலக்கணம்

சொற்கள் பெயர் வினைஇடை உரி என நான்கு வகைப்படுமாதலால், உரிச்சொற்கபெல்லாம் நான்காம் பிரிவினுள் அடங்கி , பெயர் வினைச்சொற்களையே அடுத்து, அவற்றின் குணங்களை விளக்கி, செய்யுள் வழங்களை அநுசரித்து, நிற்கும்.

இதற்குச் சூத்திரம் :-

ாஅச. பல்வகைப் பண்டும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல்.

இதன் பொருள் :

பல்வகைப் பண்பும் பகர்பெயராகி = பலவகையான பொருள்களின் பண்புகளை க் கூறும் பிரிவுகளாகியும்,

ஒரு குணம் பல குணம் தழுவி = ஒன்று இரண்டு முதலிய பல குணங்களையும் தெரிவிக்கின்றனவாயும் விட்டு நீங்காதனவாயும்.

பெயர் வினை ஒருவா = பெயர்சொல்லையும் வினைச் சொல்லைல்லையும்,

செய்யுட்கு உரியன = செய்யுள் வழக்கத்திற்கு உரியனவாயும் உரிச் சொல் = உள்ளன உரிச்சொற்கள்.

02. பண்பு இன்னது என்பது.

உயிர் உள்ளவும், உயிர் இல்லாதனவுமாகிய பொருள்களின் குணங்கள் பண்பு எனப்படும்.

இதற்குச் சூத்திரம் :-

ாஅரு. உயிருயி ரல்லதாம் பொருட்குணம் பண்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:

உயிர் உயிரல்லதாம் = உயிருள்ள உயிரல்லாத பொருட்குணம் பண்பு = பிறவிகளின் குணம் பண்பு எனப்படும்.

*03.* உயிரின் இலக்கணமும் வகைகளும் உயிரென்பது சீவன், ஜீவன் (ஸம்ஸ்க்ரதத்தில் ஜீவாத்மா) இதன் சொரூபம் அறிவும் அன்புமே.

ஜீவகோடிகள் சிற்றறிவுகள் என்றும், பேரறிவுகள் என்றும் பிரிக்கப்படும்

அறிவைப் பழுதுபடுத்தி மயக்கும் பொருளாகிய மலம் (கெடுக்கும் வஸ்து, இங்கிளீஷில் evil) எவ்வளவு அதிகரித்திருக்மோ, அவ்வளவுக்கு அறிவையும் அன்பையும் குறைக்கும். இவ்வாறு மலத்தில் தோய்ந்திருக்கும் ஜீவாத்மா எது மலம் எது தான் என்று அறியாமல், மலத்தில்நின்று தோன்றிய ஆசைகளே , அல்லது விருப்பு வெறுப்புக்களே (desires or Likes and dislikes), நான் என்று திரியும். மலத்துக்கு அடிமைப்பட்ட சீவர்களை மலபந்தனசீவர் என்றும், சீவபக்தர் (Jiva - bathhiar) என்றும், பெரியோர் கூறுவர். மலத்துக்கு அடிமைப்படாத சீவரை சீவமுக்தர் (Jiva - mukthar) என்பார்கள்.

மலத்தின் பந்தனங்களால் அறிவும் அன்பும் மிகக்குன்றி, மூடத்திலும் (அறியாமையிலும்) துக்கத்திலும் பயத்திலும் சோர்விலும் ஆழ்ந்திருக்கும் சீவபக்தர்களைத் தூக்கித் தமது சொந்தப் பரிசுத்த நிலைகளைப் பெறும்பொருட்டு, பரமேஸ்வரன் பல அரிய பெரிய தத்துவங்களை அவர்கட்குக் கொடுத்தான்.

இவற்றில், பராணன் அபானன் வியானன் சமானன் உதானன் என்ற சூக்ஷும வாயுக்களும், சூக்ஷும கர்மேந்திரியங்களாகிய வாக்கு கை பாதம் பாயு உபஸ்தம் என்பவைகளும், சூக்ஷும ஐம்பொறிகளாகிய மெய் வாய் கண் மூக்கு செவி என்பவைகளும், உள்ளம் மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற சூக்ஷும அந்தஃகரணங்களும் முக்கிய தத்துவங்களாம். இவையெல்லாம் சேர்ந்து சீவனுக்குச் சூக்ஷுமசரீரம் (Sukshma shariram) எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சூக்ஷம தத்துவங்களைக்கொண்டும். குருமார் உபதேசிக்கின்ற தருமநெறிகளை அநுசரித்தும், சீவபக்தர்கள் (சிற்றறிவாளிகள்) தங்களை சுத்தப்படுத்திக்கொள்ளவேண்டும்.

அறிவுமய உயிரும் அதற்கு அருளப்பட்ட சூக்ஷம சரீரமும் கூடி ஒரு ஸ்தூல சரீரத்தில் அடக்கப்பெற்று வாழும். இந்த ஸ்தூலசரீரங்கள் புல் பூடு கொடி மரம் புழு பாம்பு மீன் குருவி மான் மாடு குரங்கு மனுசன் என்ற கூறப்பட்ட வடிவங்களாம். இவை பல ஜாதிகளாய்த் தோன்றும். இவற்றில், மக்கள் தேவர் நரகர் உயர்திணையாம், பசு முதலிய விலங்குகளும் மரங்களும் தாழ்ந்தசாதியாம், அஃறிணையாம்.

இந்தஸ்தூல சாதிபேதங்களை உயிர்கள், தத்தம் முற்பிறவி களிற்செய்த கர்மங்களுக் கேற்றபடியே, பெற்றன. இவ்வகையான ஸ்தூலதேகங்கள் ஒவ்வொன்றிற்குள் முற்கூறிய சூக்ஷம கருவி கரணங்கள் இருப்பினும், பலவித பல நெருக்கங்களால் உயிர்களின் அறிவும் அன்பும், சூக்ஷம கருவி காரணங்களும் வெவ்வேறு கோலங்களை பெற்றிருக்கும்.

எனவே, புல்முதலிய மரசீவகோடிகளின் சிற்றறிவுகள் ஒரு வகையாகவும், புழு பாம்பு பறவை பசு முதலியவற்றின் சிற்றிவுகள் வேறு பலவகையாக்வும், மக்கள் ஞானநூற் கர்த்தாக்கள் முதலியவரின் சிற்றறிவுகள். வேறுவகையாகவும் இருக்கும். பஞ்சப்பொறிகளையும் அவற்றோடு நிற்கும் மனசையும் பற்றி, ஓரறிவு ஈரறிவு மூவறிவு நான்கறிவு ஐயறிவுபெற்ற உயிர்கள் உள்ளனவென்றும், ஐயறிவுக் கூட்டத்தையும் புத்தியையும் புத்தியை அண்டிப்பேசும் வாக்கையும் பற்றி, ஆறறிவு பெற்ற உயிர்கள் மக்கள் தேவர் நரகர் எனவுங் கூறுவர். ஆனால் பவணந்தி முதலிய இலக்கணக் கர்த்தாக்கள், உயிர்கள் ஐவகை என்றார்கள். ஏனெனில், ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து பொறிகளாகிய புறக்கருவிகளோடு வாழக்கண்டதால், உட்கருவி களாகிய உள்ளம் மனம் புத்தி சித்தம் அகங்காரம் வாக்கு என்பவற்றைக் கழித்துவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்: -

**ரு௮௬. மெய்நா மூக்கு நாட்டம் செவிகளின்**
**ஒன்று முதலாக்கீழ்க் கொண்டுமே லுணர்தலின்**
**ஓரறிவு வாதியா உயிரைந் தாகும்.**

இதன் பொருள்: -

மெய் நா மூக்கு நாட்டம் செவிகளின் = மெய்யும் நாக்கும் மூக்கும் கண்ணும் காதும் ஆகிய ஐந்து இந்திரியங்களாலும், ஒன்று முதலா கீழ்க்கொண்டு மேல் உணர்த்தலின் = உச்சிதொட்டுப் பாதம் வரையிலுள்ள ஊறு (ஸ்பரிசம்) ஒன்று முதலாக உச்சிக்குக் கீழேயுள்ள ஒளி ஓசை நாற்றம் சுவை என்றவைகளைப் பற்றி அறிதலால்.

ஓரறிவாதியா ஐந்து ஆகும் உயிர் = ஓரறிவு முதல் ஐவகை அறிவுகளைப்பெற்று வாழ்கின்றன உயிர்கள்.

04. ஓரறிவு உயிர்கள்.

ஓரறிவுயிர்களாவன: புல்மரம் முதலிய வர்க்கங்களில் ஸ்பரிச(தொடுதலுக்குரிய) அறிவுமாத்திரம் உபயோகமாகின்றது. எஞ்சின நான்குபொறிகளும் அடங்கி உபயோகமற்று இருக்கின்றன. எவ்வாறோவெனின், ஒரு மனுசனது ஜாக்ர அவஸ்தையில் தத்தம் தொழில்களைச் செய்துகொண்டிருந்த ஐம்பொறிகளும் அந்தஃகரணங்களும் கர்மேந்திரியங்களும் சுழுத்தி அவஸ்தையில் முற்றாக அடங்க, ப்ராணன் முதலிய வாயுக்கள் மாத்திரம் உபயோகிக்கப்பட்டது போல எனக் காண்க.

இதற்கு சூத்திரம்: -

**ரு௮௭. புல்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்.**

இதன் பொருள்:

புல்மரம் முதல = புல் மரம் முதலியவை

உற்று அறியும் ஓரறிவுயிர் = தேகத்திலுள்ள நாடி நரம்புகள் தோறும் பரந்து சஞ்சரிக்கும் ஸ்பரிச வாயுவால் அறியும் ஓரறிவை உபயோகிக்கும் உயிர்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. ஈரறிவு உயிர்கள்.

ஈரறிவுயிர்களாவன : சிப்பி சங்கு முதலிய சில வர்க்கங்கள், ஸ்பரிச வாயுவால் தொட்டும், நாவினால் ரஸத்தை அறிந்தும், வாழ்தலால், ஈரறிவுயிராம்.

இதற்கு சூத்திரம்: -

**௩அஅ. முரணந்த தாதிநா வறிவொடீ ரறிவுயிர்.**

இதன் பொருள்:

முரண் நந்து ஆதி = சிப்பி சங்கு முதலியவை

நா அறிவொடு ஈரறிவுயிர் = ஸ்பரிச அறிவடனும் நாக்கறி வுடனும் சீவிப்பதால் இரண்டறிவுயிராம்.

06. மூவறிவு உயிர்கள்.

மூவறிவு உயிர்களாவன : சிதல் (கறையான்), எறும்பு முதலியவை, மேற்கூறிய இரண்டறிவுடன், மூக்கினால் மணத்தையறி கின்றபடியால், மூன்றறிவுடைய உயிர்களாம்.

இதற்கு சூத்திரம்: -

**௩அசு. சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்.**

இதன் பொருள் வெளிப்படை.

07. நாலறிவுயிர்கள்.

நாலறிவுயிர்களான: தும்பி வண்டு முதலியவை, மேற் கூறிய மூன்றறிவுகளுடன், கண்ணால் ரூபத்தை அறிகிற படியால், நாலறிவை உபயோகிக்கின்ற உயிர்களாம்.

இதற்குச் சூத்திரம்: -

**௩கூ௰. தும்பிவண் டாதிகண் ணறிவினா லறிவுயிர்.**

இதன் பொருள் வெளிப்படை.

08. ஐயறிவு உயிர்கள்.

ஐயறிவுகளாவன: தேவரும் மனிதரும் நரகரும் விலங்குகளும் பறவைகளும் முதலான வர்க்கங்கள் மேற்கூறிய நாலறிவுடனே செவியறிவை உபயோகிக்கின்றமையால், ஐயறிவுயிர்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு சூத்திரம்: -

**௱சுக. வானவர் மக்கள் நாகர் விலங்குபுள்**
**ஆதி செவியறி வோடை யறிவுயிர்**

இதன் பொருள் வெளிப்படை.

### 09. சடப்பொருள்

உயிரற்ற பொருள்கள் சடப்பொருள் என்றும், அசேதனப் பொருள் என்றும், இவற்றிற்கு அறிவில்லையாதலால், உடல் என்றும் கூறப்படும்.

இதற்கு சூத்திரம்: -

**௱சுஉ. உணர்விய லாமுயி ரொன்று யொழித்த**
**உடன்முத லனைத்து முயிரல் பொருட்குணம்.**

இதன் பொருள்:

உணர்வியலாம் உயிரொன்றும் ஒழித்த = அறிவுமயமாகிய சீவன் ஒன்றையும் நீக்கியுள்ள

உடன் முதலனைத்தும் = உடம்பு கல் மண் முதலிய பொருள்களெல்லாம்.

உயிரல் பொருட்குணம் = உயிரல்லாத பொருளின் தன்மை.

### 10. முன்னதற்கொரு புறனடை.

உடம்புக்குள் உயிர் இருந்து கொண்டு, இவையிரண்டும் ஒன்றுபோலத் தோன்றினாலும், அவை வெவ்வேறு பொருள்களே.

இதற்குச் சூத்திரம்: -

**௱சுரு. ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்றினும்**
**வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர்.**

இதன் பொருள் :

ஒற்றுமை நயத்தின் ஒன்று எனத்தோன்றினும் = உயிர் கூடலொடு சேர்ந்து உடல் மயமாய் நின்று ஒன்று போலத் தோன்றினும்.

வேற்றுமை நயத்தின் = அறிவுள்ள பொருள் அறிவில்லாத பொருள் என்னும் வேறுபாடுபற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுயிர் வேறு உடலும் வேறு, உயிரும் வேறு.

11. சீவபக்தர் என்னும் மலசகித உயிர்களுடைய குணங்கள் :

இவற்றைச் சூத்திரத்தின் இசைக்குத் தக்கபடி பவணந்தி முனிவர் கீழ்வருமாறு அடுக்கி இயற்றினார்:

சிற்றறிவு, சிற்றன்பு, ஆசை பயம், அபிமானம், மகிழ்ச்சி, அல்பபொறுமை, ஒற்றுமை, பற்றினதில் அழுந்தல், வீண் விஷயங'களைப் பற்றி ஓயாமல் நினைத்தல், வெறுப்பு விருப்பு, இரக்கம், வெட்கம், கோபம், துணிவு, அசுத்த சித்தம், பட்சம், ஏழைமை தளர்ச்சி, துக்கம், சுகம், இளமை, மூப்பு, பகை, வெற்றியில் அவா, அயர்ச்சி, உற்சாகம், அதர்மம், ஆணவம், மறத்தல் முதலியவை சிற்றறிவாளி (சீவபக்தர்) களின் குணங்களாம். இக் குணங்கள் மலரகித உயிர்களாகிய சீவமுக்தர்களை வாதிக்கா.

இதற்குச் சூத்திரம்.

௪௫௪. அறிவரு ளாசை அச்சம் மானம்
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி
துணிவழுக் காறன் பெளிமை மெய்த்தல்
துன்ப மின்பம் இளமை மூப்பிகல்
வென்றி பொச்சாப் பூக்க மறமதம்
மறவி யினைய உடல்கொ ளுயிர்க்குணம்.

இதன் பொருள் மேல் விளக்கப்பட்டது. அறிவு = சிற்றறிவு.

அருள் = சிற்றன்பு, அல்ப கருணை

இங்கே சூத்திர இசைக்கேற்படி கோக்கப்பெற்ற குணங்களை வரிசைக்கிரமமாகக் கூறவாம்.

அறிவும் அன்பும் ஆனந்தமும் ஒன்று கூடி சீவன் எனப் பெயர்பெற்று வாழுங்காலத்தில், சீர்கேடுகளை யுண்டாக்கும் மல கோசத்தில் ஏதோ காரணத்தால் வீழ்ந்து, அதன் கொடிய சக்திகயாகிய ஆசை, விருப்பு வெறுப்பு, அடங்காமை, கோபம், மயக்கம், லோகம், பொறாமை, என்றவற்றால் பந்திக்கப்பட்டு, தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியுந் தன்மையும் அன்புவிளைவையும் ஆனந்தத்தையும் மிக இழந்தது. இந்த நிலையில் அறியாமை அன்பில்லாமை துக்கம் பயம் சோகம்(தளர்சசி) அதிகப்பட்டன.

இவற்றினின்று உயிரைத் தூக்கி விடும்படி பரமேஸ்வரன் ஐம்பொறிகளையும் உட்கரணங்களயையும் ப்ராணன் முதலிய வாயுக்களையும் சீவனுக்கருளினார். இவற்றுடன் தர்மத்தையும், அதனைப் போதிக்கும் பொருட்டு பிதா மாதா உபாத்தியாயர் ஆசிரியர் முதலிய குரவர்களையும், அருளினார். இவ்வகையான திவ்விய துணையாளிகளால் மல பந்தங்களை நீக்கி முத்தி பெறக்கடவீர்க ளென்று பேரறிவாளிகள் மூலமாக ஆஞ்ஞாபித்தார்.

ஆஞ்ஞாபித்தும், உயிர்கள் சாக்ர திசையில் நின்று விழிப்பாக தரும நெறிகளைப் பற்றிப்பிடித்து தங்களை இரக்ஷித்துக் கொள்ளாமல், ஆசைகளால் ஏவப்பட்டு, தமது ஐம்பொறிகளைத் தகாத விசயங்களில் செல்லவிட்டும், மனசை வீண் நினைவுகளை ரூபிக்கவும் பற்றின பொருளில் அழுந்தவும் விட்டும், புத்தியைத் தகாத விசாரணைகளில் பிரவேசிக்கவும் துணிவுகொள்ளவும்விட்டும், வாக்கைப் பாரபக்ஷங்கள் பேசிக்கொண்டும் ஏழைமை கூறிக்கொண்டும் பகை பாராட்டிக் கொண்டும் இருக்கவிட்டும், தேகத்தின் இளமை மூப்பு சுகம் அசுகம் முதலியவற்றைச் சிந்தித்தும் சலித்'தும் துக்கித்துங் கொண்டிருக்க விட்டும், அக் கருவிகள் எல்லாம் சீவோத்தாரணத்தை மறந்து மலசக்தி களுக்கு அடிமைப்பட்டன.

*12. உடலோடு கூடியிருக்கும் உயிரின் தொழில்கள்:*

இவையாவன, ஜீவாத்மா, தனக்கருளப்பட்ட சுக்குமஸதூல சரீரங்களோடு கூடி, கருவி கரணங்களால் பொருள்களையறிந்து, அவற்றால் வரும் சுகதுக்க போகங்களை அநுபவித்தல் (துய்த்தல்); சாக்கிர சொப்பன சுழுத்தி அவஸ்தைகளைப்பற்றி, விழித்தும் கனவு கண்டும் தூங்கியும் நிற்றல் (துஞ்சல்); தனக்குரிய ஆடை ஆபரணங் களை அணிதல் ; நடந்து திரிதல் (உய்த்தல்); தெய்வம் முதலிய பெரியோரை வழிபடுதல் (தொழுதல்) முதலியவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்:-

**௱சுரு. துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல்**
**உய்த்த லாதி உடலுயிர்த் தொழிற் குணம்**

இதன் பொருள் மேலே காண்க.

*13.* உயிரற்ற பொருள்களின் குணங்கள்.

மனுசனுடைய தேகத்துக்குள்ளாவது, மாட்டின் தேகத்துக் குள்ளாவது, மீனினுள்ளாவது, மரத்தினுள்ளாவது இருந்த உயிரும், அதன் சூக்ஷம சரீரமும், சென்றவுடனே, அத்தூல தேகங்களெல்லாம் சடப்பொருளாயின. இப்படிக் கண்டறிந்தவர்கள் உயிரின் குணம் எதுவென்றும், சூக்ஷம் சரீரத்தின் குணம் எதுவென்றும், ஸதூல சரீரத்தின் குணம் எதுவென்றும், பிரித்துக்கூறுவர்.

ஸ்தூல தேகங்களுக்குக் குணங்கள் யாவையெனில், பல வடிவமாய்த் தோன்றலும், அவை ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு நிறம் நாற்றம் சுவை ஊறுகளைப் பெற்றிருப்பதுமே.

இதற்குச் சூத்திரம்:-

**௱சுசு. பல்வகை வடிவிரு நாற்றமை வண்ண**
**மறுசுவை யூறெட் டுயிரல் பொருட்குணம்.**

இதன் பொருள்:

பல்வகை வடிவு இருநாற்றம் = பலவகையான ரூபங்களையும் நல்ல மணம்கெட்ட மனத்தையும்.

ஐவண்ணம் = கருமை செம்மை பொன்மை பசுமை வெண்மை யென்ற நிறங்களையும்.

அறுசுவை = கைப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு இனிப்பு என்ற சுவைகளையும்.

எட்டு ஊறு = வெம்மை குளிர்மை வலிமை மெதுமை நொய்மை (லகுத்துவம்) சீர்மை (ஒப்புரவு) சர்ச்சரை (மெதுவில்லாமை) என்பவற்றையும்.

உயிரல் பொருட்குணம் = சடப்பொருளின் குணங்கள் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*14.* உயிருள்ள பொருள்களுக்கும் உயிரற்ற பொருள்களுக்கு ம் பொதுவாகிய தொழிற்பண்பு.

ஐம்பொறிகளுக்கும், மனம் புத்தி முதலிய உட்கரணங் களுக்கும், ப்ராணன் முதலிய வாயுக்களுக்கும், வாக்கு முதலிய கர்மேந்திரயங் களுக்கும் தொழிலுண்டு. உயிரும் கரணமும் அற்ற பொருளுக்குத் தொழிலிராது. மண் கல் முதலிய பொருள்களுக்கும் உயிரோடிக்கும் பொருள்களுக்கும் தோன்றல் இருத்தல் தேய்தல் மறைதல் என்னும் நிலைகள் உண்டு. இவை, தொழில்களெனக் கூறற்பாலனவல்ல.

படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்ற பஞ்சகிருத்தியங்கள் பரமேஸ்வரனுக்கே உரியன. அவர் அருளால் எவ்வகைப்பொருளும் தோன்றும் நிற்கும் மாளும் மறையும். மேலும், அவர் கிருபையாலேயே கரணங்களைப்பெற்ற உயிர்ப்பொருள்கள், தத்தம் தொழில்களைச் செய்யும். உயிரற்ற பொருள்களோ, கீழ்வரும் சூத்திரத்திற் கூறியவாறு, நீங்கள் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதல் என்பனவும், இவைபோல்வன பிறதொழில்களும் செய்யா.

பூமி நடுங்குகின்றது என்ற தொடர்பின் அர்த்தம், பூமியி னிடத்துச் சஞ்சரிக்கும் வாயுவினால் நடுங்கப்பெற்றது என்பதே தண்ட வாளத்தில் இழுக்கப்படும் வண்டித்தொடர் (railway train) வந்து நிற்கின்றது என்ற வாக்கியத்தில் அது தானே வந்ததென்றும் தானே நின்றதென்றும் கூறக்கூடாது. வருதலும் நிற்றலும் யந்திரமோட்டு வோரின் சித்தப்படி செய்யப்பட்ட தொழிலென்று அறிய வேண்டியது. வயற்காணி போகத்தைத் தருமென்ற தொடரில், மனுசனும் மாடும் கூடித் தத்தம் தொழில்களைச் செய்தால், பூமியில் விதைத்த நெல் விளைந்து போகத்தைக் தருமென்பதே.

ஆகாசம் தொனிக்கும், வாயு உலர்த்தும், நெருப்பு எரிக்கும், நீர் நனைக்கும், மண் கடினமாயிருக்கும் என்றவையெல்லாம் அந்தந்தத் தத்துவங்களுக்குச் சிவபெருமான் நியமித்த பண்புகள் எனக்கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவணந்தி முனிவரது சூத்திரத்தையும், அதற்க மயிலை நாதரெழுதிய உரையையும், ஈண்டுக் கூறிய விளக்கத்தைக்கொண்டு ஆராய்க.

இதற்குச் சூத்திரம்: -

**ஈகளை. தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்**
**நீங்கல் அடைதல் நடுங்குதல் இசைத்தல்**
**ஈத லின்னன இருபொருட் டொழிற்குணம்**

15. ஒரு கருத்தைக் குறிக்கும் பல உரிச்சொற்கள்.

சால உறு தவ கழி கூர் நனி என்னும் ஆறும் மிகுதியென்னும் கருத்தை விளக்கும். உ.ம். சாலப்பலர் (மிகவும்பலர்), உறுபுகழ் (மிகுந்தபுகழ்), தவப்பல (மிகவும்பல), கழிபொருள் காதல்(மிகப்பெரிய ஆசை), மகிழ் கூர் மனம் (மகிழ்ச்சியைப் பெற்ற மனம்), நனிபேதை (அதிகமூடன்)

இதற்குச் சூத்திரம்: -

**ஈகூஅ. சால உறுதவ நனிகூர் கழிமிகல்**

மேற்கூறிய ஆறு உரிச்சொல்லுடன் கீழ்வரும் பதினாறும் ஒரு கருத்தைக் குறிக்கும் உரிச்சொற்களாம்.

இவை மாற்றம், நுகற்சி, செப்பு, உரை, கரை, நொடி, இசை, கூற்று, புகறல், மொழி, கிளவி, விளம்பு, அறை, பாட்டு, பகர்ச்சி, இயம்பல் என்பனவாகும்.

உ -ம். வாய்மாற்றம் (பேசப்பட்ட சொல்), அறிந்து நுவல் (விசாரித்து அறிந்து பேசு), செப்பலுற்றேன், உரைப்பவை, அறங்கரைநா (தருமத்தை விளக்கும் வாக்கு), ஆயிழை நொடியும் பெண் சொல்லும்), இசையென (சொல்வாயாக என்று), நமது கூற்று (நம்முடைய சொல்), புகறல் நன்று (சொல்லல் நன்று), கண்டதுமொழி (கண்டதைச்சொல்), கடியெனுங்கிழவி (கடி என்ற சொல்), விளம்பினர் புலவர், அறைகுவன் (சொல்வேன்), அறம்பாடி (அறத்தைப்பற்றிச் சொன்னவன்), பகர்ந்தனர் புலவர் (சொன்னார் புலவர்), இயம்பலுற்றேன் (சொன்னேன்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சூத்திரம்: -

**௩௯௯. மாற்ற நுவற்சி செப்புரைகளை நொடியிசை**
**கூற்றுப் புகறல் மொழிகிளவி விளம்பறை**
**பாட்டு பகர்ச்சி இயம்பல் சொல்லே.**

மேற்கூறிய இருபத்திரண்டு உரிச்சொற்களோடு கீழ்வரும் இருபத்திரண்டும் ஓசை தொனி என்ற ஒரு கருத்தைக் குறிக்கும் உரிச்சொற்களாம்.

இவை முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, துவை, பிளிறு, இரை, இரங்கு, அழுங்கு, இயம்பல், இமிழ், குளிறு, அதிர் குரை, கனை, சிலை, சும்மை, கௌவை, கம்பலை, அரவம், ஆர்ப்பு என்பனவாகும்.

உதாரணம். முழங்குடல் (சத்தமிடும் கடல்), குடிஞை யிரட்டும் (ஆறு இரையும்), ஒலி புனலூரன் (முழங்குகின்ற நீர்வளம் உள்ள ஊரையுடையவன்), கலிகெழுமூதூர் (ஆரவாரிக்கும் பழைய ஊர்), பறையிசையருவி (பறைபோல் சத்தமிடும் அருவி), பல்லியந்துவைப்ப (பல வாத்தியம் முழங்க), பிளிறு வார் முரசு (ஓசையுண்டாகும் படி வார் இறுக்கிய முரசு) இரைக்கும் புனல். (இரைந்துபாய்கிற நீர்), அழுங்கின நாட்டகம் (ஆரவாரிக்கின்ற நாடு), தண்ணுமை யியம்ப (தண்ணுமை வாத்தியம் ஒலிக்க), இமிழ்கங்கை (ஒலிக்கும் நதி), குரைபுனலாறு (இரையும் நீரையுடைய நதி), கனைகடல் (கனையோசை கொண்ட கடல்), சிலையுறு தடாரி (ஓசைமிகுந்த தடாரிப்பறை) சும்மை மிகு நாடு (ஓசை மிகுந்த நாடு), கௌவைக்கடல் (இரைக்கும் சமுத்திரம்), வினைக்கம்பலை (தொழிலாலுண்டாகும் சத்தம்), அரவயானை (சத்தமிடுகின்ற யானை), ஆர்த்தபல்லியம் (பலவாத்தியம் ஒலித்தன).

இதற்குச் சூத்திரம்: -

**௨௱. முழக்கிரட் டொலிகலி யிசைதுவை பிளிறிரை**
**இரங்கழுக் கியம்ப லிமிழ்குளி றதிர்குரை**
**கனைசிலை சும்மை கௌவை கம்பலை**
**அரவ மார்ப்போ டின்னன வோசை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்: -

முழக்கு ..... ஆர்ப்போடு = முழக்கு முதலாகிய இருபத்திரண்டும்

இன்னன = இவைபோல்வன பிறவும்

ஓசை = ஓசை என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச் சொற்களாம்.

**16.** பல கருத்தைக் குறிக்கம் ஓர் உரிச் சொல்.

கடி என்னும் உரிச் சொல் காவல் கூர்மை வாசனை பிரகாசம் பயம் சிறப்பு வேகம் மிகுதி புதுமை ஒலித்தல் நீக்கல் மங்கலம் கரிப்பு என்னும் பலகருத்தை விளக்கும்.

உ-ம். கடிநகர் (காவல் பெற்ற பட்டினம்), கடிவேல் (கூர்மை பொருந்திய வேலாயும்), கடிமாலை (வாசனைபொருந்திய மாலை), கடிமார்பன் (பிரகாசிக்கும் மார்பையுடையவன்), கடிப்பேய் (பயமுறுத்தும் பேய்), கடிமனை (சிறந்தவீடு), கடிசென்றான் (வேகமாய் சென்றான்), கடிகாற்று (மிகுதியான காற்று), கடிமணம் (புதுமையான விவாகம்), கடிமுரசு (ஒலிக்கும் முரசு), கடிமது (நீக்கத்தக்க கள்), கடிவினை (மங்களகர்மம்), கடிமிளகு (கரிப்பு என்னும் உறைப்பினை யுடைய மிளகு)

இதற்குச் சூத்திரம்: -

**உ௱௧.** கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சம் சிறப்பு
விரைவே மிகுதி புதுமை யார்த்தல்
வரைவே மன்றல் கரிப்பி னாகும்.

இதன் பொருள்:

கடியென் கிளவி = கடியென்னனும் சொல்

காப்பு .......... கரிப்பின் ஆகும் = காவல், கூர்மை, வாசனை, பிரகாசம், பயம், சிறப்பு, விரைவு, மிகுதி, ஒலித்தல், புதுமை, விலக்குதல், மங்களம், உறைப்பு என்னுங் குணங்களை உணர்த்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. வேறு உயிர்ச்சொற்களை நிகண்டு கூறுமென்பது.

பண்புப் பெயர்களையும் பண்பிப் (பண்புகளை உடைய பொருட்) பெயர்களையும் எடுத்து நிகண்டு நூலிற் கூறுவதுபோல, இவ்விலக்கண நூலிற் கூற இயலாது. ஆதலால் அவற்றைப் பிங்கலந்தை முதலாய நூல்களிற் காண்க.

இதற்குச் சூத்திரம்:

உ௱உ. இன்ன தின்னழி இன்னண மியலும்
என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலா
நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே.

இதன் பொருள்:

இன்னது இன்னுழி இன்னணம் இலும் என்று = இன்னசொல் இவ்விடத்தே இன்ன இலக்கணமுள்ளதாய் வருமென்று

இசை நூலுள் = சொல்லுவதாகிய இந்நூலுள்

குணகுணிப் பெயர்கள் = பண்புப் பெயர்களையும் பண்பிப் (பண்புகளை உடைய பொருட்) பெயர்களையும்.

பரத்தலில் சொல்லாம் = பரந்திருத்தலின் விரித்துரைக்க மாட்டோம்.

பிங்கலம் முதலாம் நல்லோர் உரிச்சொல்லின்பிங்கலத்தை முதலிய நற்புலவோர் நிகண்டுகளின் உரிச்சொல் தொகுதியில் நயந்தனர் கொளல்= விரும்பிக் கண்டறிந்து கொள்க.

உயிரியல் முற்றிற்று

இவ்வதிகாரத்தில் கூறாத இலக்கணங்கள் இருக்குமாயின், அவற்றை இங்குக் கூறியவற்றிற்கு இசையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வோர் சொல்லையும் எடுத்து இதன் இலக்கணம் இதுவா மென்று கூறுவது முடியாதாகையால், இலக்கணம் கூறப்பட்டவற்றின் லக்ஷணங்களை யறிந்து, அவை போன்ற வேறு சொற்களின் இலக்கணங்களையும் தெளிய உணர்தல் நன்மாணாகர்களுக்குடைய கடனாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரியியல்.

இதற்குச் சூத்திரம்: -

உ௱௩. சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்து
முற்ற மொழிகுறின் முடிவில வாதலிற்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவுந்
தெற்றென வுணர்த றெள்ளியோர் திறனே.

இதன் பொருள்:

சொல் தொறும் இதன் பெற்றி இற்று என்று = ஒவ்வொரு சொல் தோறும் இதன் தன்மை இது வென்று

அனைத்தும் முற்ற மொழிகுறின் = முழுவதும் நிறையக் கூறப்புகுந்தால்

முடிவிலை ஆதலின் = அதற்கு முடிவில்லாமற் போகுமாகை யால் சொற்றவற்று இயலான் = இங்க எடுத்துச் செல்லப்பட்ட சொற்களின் இலக்கணங்களைக்கொண்டு.

மற்றைய பிறவும் = சொல்லப்படாதவற்றின் இலக்கணங் களையும் தெற்றென உணர்தல் = தெளிவாக அறிந்துகொள்ளுதல்.

தெள்ளியோர் கடன் = தெளிந்த அறிவுடையோர்களது கடனாம்.

முற்காலத்தில் வழங்கின சில இலக்கண முறைகள் பிற்காலத்தில் மறைதலும், முற்காலத்தில் இல்லாத சில இலக்கண முறைகள் பிற்காலத்தில் நுழைதலும் உண்டு. அவை கால வேறுபாடு பற்றி நிகழும். ஆதலால், அவற்றை பெரியோர் குற்றமாகக் கருதார்.

இதற்குச் சூத்திரம்: -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ௱௪. வழுவல கால வகையினானே.

இதன் பொருள் =

பழையன கழிதலும் = முற்காலத்து இலக்கணங்களுள் சில பிற்காலத்தில் ஒழித்தலும்.

புதியன புகுதலும் = முற்கலத்தில் இல்லாத சில இலக்கணங்கள் பிற்காலத்தில் நுழைதலும்,

கால வகையினால் வழுவல = கால வேறுபாட்டால் (ஏற்படுவதினால்) குற்றமாகமாட்டா.

சொல்லதிகாரம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத அகராதி


அ

அஃறிணை 281, 308
அஃறிணை ஒன்றன்பால் பெயர் 320, 321
அஃறிணை பலவின் பால் பெயர் 322, 323
அகச் சுட்டு ...., 28
அகப்பொருள் ...., 307
அகப்பொருள் விளக்கம் ...., 3
அகவினா ...., 30
அகஸ்திய முனிவர் 286, 304
அகஸ்தியம் ...., 3
அஸம்பவ தோஷம் ...., 1
அசை நிலை 456, 457
அடி ...., 2
அடி மறிமாற்றுப் பொருள் கோள் 477, 480
அடைமொழி ...., 462
அணி ...., 2,3
அணு ...., 12
அணுத்திரள் ...., 12
அண்ணம் ...., 45
அதிகாரம் ...., 6
அதிவியாப்திதோஷம் ...., 1
அந்தில் என்னும் இடைச் சொல் 499,500
அமிர்தசபாரர் ...., 3

அ

அம்மா என்னும் இடைச் சொல் ...., 500
அரிச்சுவடி (ஹரிவரி) 35, 37
அர்த்தவொற்றுமையால் இனம் ...., 34
அலங்காரம் ...., 2
அல்வழிப்புணர்ச்சி 167, 169
அவ்யாப்தி தோஷம் ...., 1
அளபடை ...., 53
அளபெடை ...., 53
அளைமறிபாப்பு பொருள் கோள் 476, 479
அறம் ...., 3
அறுவகை வினா 447, 448
அன்மொழித் தொகை 171, 293

ஆ

ஆகுபெயரின் எண் ...., 333
ஆகுபெயர் 292,331,334
ஆங்கு என்னும் இடைச் சொல் 499, 500
ஆண்பால் விகுதியின்றிவரும் ஆண்பால் பெயர் 314, 315
ஆண்பாற்படர்க்கை வினை முற்று ...., 382
ஆய்தக்குறுக்கம் ...., 70




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத அகராதி


ஆ

ஆய்தம் ...., 14
ஆரியம் ...., 159
ஆறாம் வேற்றுமை 347, 351
ஆறுமுக நாவலர் ...., 6

இ

இசை எச்சம் ...., 422
இசை நிறை 456, 457
இடவாகுபெயர் ...., 331
இடுகுறி சிறப்புப் பெயர் 23
இடு குறிப் பெயர் ... 22
இடைச் சொல் 295, 480
இடைச்சொல்லடியாகப் பிறக்கும் ஆண்பாற் பெயர் 314, 315
இடைச் சொல்லின் பொருள் 484, 487
இடைச் சொல்லின் வகை 481
இடைத்திரி சொல் 297, 305
இடைப்பிற வரல் 413-416
இடையியற் சொல் 297-305
இடையினம் ..... 33
இயல்புப் புணர்ச்சி ...., 174
இயல்பு வழக்கு 287, 282
இயற்கைப் பெயர் ...., 452
இயற்கைப் பொருள் 467, 468
இயற்பெயர் ...., 331
இரட்டைச் சொல் ...., 458
இரண்டாம் வேற்றுமை 338, 341
இராமாநுஜக் கவிராயர் 6
இரு திணை ...., 281

இ

இரு திணைப் பொதுப் பெயர் 323, 324, 327, 329
இரு திணைப் பொது வினை 384, 386
இருவகை முற்றுக்கும் புறனடை 405, 406
இலக்கணக்கொத்து ...., 3
இலக்கணப்போலி ...., 288
இலக்கண விளக்கம் ...., 3
இறைபயப்பன ...., 449
இனத்தைச் சொல்லும் விடை ...., 449
இனமில்லா அடைமொழி 464,465
இனம் 33-35
இன்பம் ...., 3
இன்னிசையளபெடை 54

ஈ

ஈ .... ...., 470
ஈரறிவு உயிர் ...., 507

உ

உடன்பாட்டு விடை ...., 449
உடன்பாட்டுவினை ...., 378
உடல்கொள் உயிர்க் குணம் 509, 510
உடல்கொள் உயிர்த் தொழில் ...., 510
உம் என்னும் இடைச் சொல் 490,491
உம்மை ...., 460
உம்மை எச்சம் ...., 421




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத அகராதி


உ

உம்மைத் தொகை 170, 427, 428
உயர்திணை 281, 308
உயர்திணை ஆண்பாற்
பெயர் 310, 316
உயர்திணைப் பலர்பாற்
பெயர் 319, 320
உயர்திணைப் பெண்பாற்
பெயர் 316, 318
உயிரளபெடை ..., 53
உயிரற்றபொருட்குணம் 511
உயிரின் இலக்கணம் 504 - 506
உயிரின் வகை 504 - 506
உயிரீற்றுப்புணர்ச்சி 180, 194, 227
உயிரெழுத்து 13, 25, 26
உயிரிமெய்எழுத்து ..., 50
உரிச் சொல் ..., 296
உரிச்சொல்லின்பொது
விலக்கணம் ..., 503
உரியியற் சொல் 297, 305
உருபு புணர்ச்சி 180, 261, 278
உருபு மயக்கம் ..., 367
உருபும் வினையும்
அடுக்கி முடித்தல் 412, 413
உருபும் வினை விகுதியும்
திரியாமை 411, 412
உருபேலாப் பெயர்கள் 336
உரைநடை ..., 3
உவமைத்தொகை 170, 427
உவமையாகு பெயர் ..., 333

உ

உளப்பாட்டுப் பன்மை
முன்னிலை ..., 390
உறுவதுகூறும் விடை ..., 449
உற்றதுரைக்கும் விடை ..., 449

எ

எச்சங்களின் முடிபு 420, 422
எச்சவும்மைக்குச் சிறப்பு
விதி ..., ..., 492
எட்டாம் வேற்றுமை 354 - 363
எட்டுவேற்றுமை முடிவு
தற்காம் சொற்கள் 368, 370
எண்ணாகுபெயர் 330, 332
எண்ணால் வரும் உயர்திணைப்
பெயர் 329, 330
எண்ணிடைச் சொற்கள் 492 - 493
எண்ணிடைச் சொற்களுக்குச்
சிறப்பு விதி 493, 494
எண்வகை விடை 448, 450
எதிர்மறை எச்சம் ..., 422
எதிர்மறை வினை ..., 378
எதிர்வினா விடை .., 449
எல்லாவிடத்தும் வரும்
இடைச்சொல் 501, 502
எழுத்ததிகாரம் ..., 6
எழுத்து 4, 22
எழுத்துக்களினிடை
நிலை 82, 92, 152, 156
எழுத்துக்களினிறுதி நிலை 78, 80
எழுத்துக்களினுருவம் 71
எழுத்துக்களின் பிறப்பு 39, 46




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத அகராதி


எ

எழுத்துக்களின் பெயர் 21, 33
எழுத்துக்களின் போலி 93, 104
எழுத்துக்களின் முதனிலை 74
எழுத்துக்களின் முறை 33
எழுத்திலக்கணம் ...., 4, 6
எழுவாய் வேற்றுமை 337, 338
என எச்சம் ..., 422
என என்னும் இடைச் சொல் 489, 490
என்று என்னும் இடைச் சொல் 489, 490

ஏ

ஏகார இடைச் சொல் ..., 488
ஏவல் ..., 137
ஏவுதல் விடை ..., 449
எழாம் வேற்றுமை 351-354

ஐ

ஐகாரக்குறுக்கம் ..., 67
ஐந்தாம் வேற்றுமை 346 - 347
ஐம்பால் 282, 308
ஐயறிவு உயிர் 507,508
ஐயனாரிதனார் ..., 3

ஒ

ஒடு என்னும் இடைச் சொல் 498
ஒரு கருத்தைக்குறிக்கும் பல உரிச்சொல் 513-515
ஒருசொல் இனத்தையுந் தழுவுதல் ..., 418
ஒரு பொருட் பன்மொழி 459
ஒரு மொழி 279, 280
ஒலி ..., ..., 11
ஒலிவடிவங்கள் 11, 17, 18, 22
ஒழிபு ..., ..., 403
ஒழியிசை எச்சம் ..., 422
ஒற்றளபெடை 56, 57
ஒன்றன்பாற் படர்க்கை வினை முற்று 383, 384

ஓ

ஓகார இடைச்சொல் 488, 489
ஓசை ..., ..., 11
ஓரறிவு உயிர் ..., 506

ஔ

ஔகாரக் குறுக்கம் ..., 67

க

கருவியாகுபெயர் ..., 333
கர்த்தாவாகுபெயர் ..., 333

கா

காரகம் 370, 371
காரண இடுகுறிப்பெயர் ..., 24
காரணப்பெயர் ..., 24
காரியவாகுபெயர் ..., 333
கால ஆகுபெயர் ..., 332

கு

குணசந்தி ..., 260
குணவாகுபெயர் ..., 332
குணவீரபண்டிதர் ..., 3
குலோத்துங்கசோழன் 4
குழுஉக்குறி ..., 290
குறிப்பால் பொருளுணர்த்தும் இடைச்சொல் 482, 483




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத அகராதி


கு

குறிப்புச் சொல் 291, 292

குறிப்பு வினை ..., 293

குறிப்பு வினைப் பெய
ரெச்சம் 374

குறிப்பு வினைமுற்று 374, 376

குறிப்பு வினை வினை
யெச்சம் 374

குறிப்பெச்சம் 395, 396, 420

குற்றியலிகரம் 14, 16, 58, 60

குற்றியலுகரம் 14, 16, 60

கொ

கொங்குமண்டலம் ..., 4

கொடு ..., 470

கொடுந்தமிழ் 286, 299

கொடுந்தமிழ் நாடு ..., 300

கொண்டு கூட்டுப்
பொருள் கோள் 476, 479

கொல் என்னும்
இடைச் சொல் ..., 499

ச

சங்கர நமச்சிவாயப்புலவர் 6

சடப்பொருள் 307, 508

சனகாபுரம் ..., 3

சன்மதிமாமுனிவர் ..., 3

சா

சாமிநாத தேசிகர் ..., 3

சார்பெழுத்து 13, 14, 48

சி

சிறப்புப் பெயர் ..., 452

சிறப்புவினைச் சொல் 454, 455

சிற்றிலக்கியம் ..., 6

சி

சினை ... ... 450

சினைப்பெயர் 324, 325, 328

சினைமுதற்பெயர் 325, 326, 328

சினையாகுபெயர் ..., 332

சீ

சீயகங்கன் ...., 4, 6

சீர் ..., ..., 2

சீவபத்தர் ..., 509

சு

சுட்டு விடை ..., 449

சுட்டெழுத்தடியாகப்
பிறக்கும் ஆண்பாற்பெயர் 314, 315

சுட்டெழுத்து ..., 27

சூ

சூத்திரம் ..., 4, 5

செ

செந்தமிழ் 286, 299

செந்தமிழ் நாடு ..., 299

செயற்கைப்பொருள் 467, 468

செய்யுமென் முற்று ..., 404

செய்யுள் ..., 291

செவ்வனிறை ..., 449

சொ

சொல் 11, 279

சொல்லதிகாரம் ..., 8

சொல்லாகு பெயர் ..., 332

சொல்லிசை யளபெடை ..., 55

சொல்லெச்சம் ..., 421

சொல்லெச்சவகை ..., 120

சொற்களின் பாகுபாடு 294, 306




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த

தகுதி வழக்கு 288, 292
தமிழிலக்கணம் ..., 1, 2, 6
தமிழிலக்கியம் ..., 287
தமிழ் ..., ..., 286
தமிழ்ச்சங்கம் ..., 304
தளை ..., ..., 2
தன்மை ..., ..., 284
தன்மை ஒருமை
வினைமுற்று விகுதி 386, 387
தன்மைப் பன்மை
வினைமுற்று விகுதி 388, 389
தன்மைப் பெயர் ..., 326
தன்வினை ..., 378

தா

தா ..., ..., 470
தாப்பிசைப் பொருள்
கோள் 475, 479
தானியாகுபெயர் ..., 333

தி

திசைச்சொல் 298, 306
திணை ..., ..., 281
திணைபால்களின்
புறநடை 283, 284
திணைபால் மரபு
வழுவமைதி ..., ..., 441
திணையின் புறநடை ...., 283
திணை வழுவமைதி 439, 441
திருக்குருகூர்ரத்நக்கவிராயர் 3
தில் என்னும் இடைச்
சொல் 495, 496

தீ

தீர்க்க சந்தி ..., 259

தெ

தெய்ய என்னும் இடைச்
சொல் ..., 498
தெரிநிலை வினைப்பெயர்
எச்சம் 374, 377
முற்றின் விகற்பம் 380, 382
தெரிநிலை வினைமுற்று ..., 374
தெரிநிலைவினை வினை
யெச்சம் 374, 377

தே

தேவநாகரி ..., 19
தேவர் ..., ..., 281

தொ

தொகாநிலைத் தொடர் ..., 171
தொகாநிலைத் தொடர்
மொழி 407, 435, 436
தொகைக் குறிப்பு ..., 293
தொகை நிலைகள் ..., 171
தொகைநிலைத் தொடர்
மொழி 407, 423, 435
தொடர் மொழி 279, 281
தொடை ..., 2
தொல்காப்பியம் ..., 3
தொழிலாகுபெயர் ..., 332
தொழிற்பெயர் 307, 309, 310, 327

த்

த்ரண தூமாக்நி ..., 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந

நந்தி ..., ... 3
நரகர் ..., ..., 281
நன்னூல் ..., 3
நன்னூலுக்குஆதார சூத்திரங்கள் ..., 3
நன்னூல் பத அர்த்தம் ..., 5

நா

நாலறிவு உயிர் ..., 507
நான்காம் வேற்றுமை 344, 346

நி

நிரனிறைப் பொருள் கோள் 474, 475
நிறுத்தலளவை ஆகுபெயர் 332

நீ

நீட்டலளவை ஆகு பெயர் 332

நெ

நெடுங்கணக்கு 35, 37
நெட்டெழுத்து ..., 27

நே

நேமிநாதம் ..., 3

ப

பாகப்பதம் 110-112
பகுதி ..., 120-130
பகுபதம் ... 112, 120
படர்க்கை ..., 284
படர்க்கைப்பெயர் ..., 326
பண்பி ..., ..., 307
பண்பு இன்னது 503, 504
பண்புத்தொகை 70, 426
பண்புப்பெயர் 307, 309, 310
பதப் புணர்ச்சி ..., 167

ப

பதம் ..., 104, 110
பல கருத்தைக் குறிக்கும் ஓர் உரிச்சொல் ..., 515
பலர்பால் படர்க்கை வினை முற்று ...., 383
பலவின்பால் படர்க்கை வினைமுற்று ..., 384
பவணந்தி முனிவர் ..., 2
பழையவன் 302
பழையன கழிதல் 517, 518

பா

பாட்டு ..., ..., 2
பாண்டியநாட்டெல்லை ..., 301
பாண்டியன் ..., 302
பாலின் புறனடை ..., 283
பால்பகா அஃறிணைப் பெயர் ..., 323
பால்பொதுமை
நீங்கும் நெறி ..., 408, 409
பாற்பொதுவினை ..., 405
பாஷா இலக்கணம் ..., 2

பி

பிராகிருதம் ..., 286
பிரிநிலையெச்சம் ..., 422
பிறகுறிப்பு ..., 293
பிறப்பிடத்தால் இனம் 34
பிறவினை ..., 378

பு

புணரியல் 166, 278
புதியன புகுதல் 517, 518
புருஷார்த்தம் ..., 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத அகராதி


**பு**

புறச்சுட்டு ..., 28

புறப்பொருள் ..., 307

புறப்பொருள் வெண்

பாமாலை ..., 3

புறவினா ..., 30

புறனடை 47, 283

**பூ**

பூட்டுவிற் பொருள்

கோள் 475, 478

**பெ**

பெண்பாற் படர்க்கை

வினைமுற்று 382, 383

பெயரியல் 278 - 372

பெயரியற் சொல் 296, 305

பெயரெச்சம் 377, 378, 394 - 397

பெயர்ச்சொற்கள் ..., 295

பெயர்த்திரிசொல் 296, 305

பெயர் வினையின்

ஈற்றயல் திரிதல் 409, 410

**பே**

பேச்சிலக்கணம் ..., 2

பேரிலக்கணம் ..., 6

பேரிலக்கியம் ..., 6

**பொ**

பொதுத் தொழிற்

பண்பு 512, 513

பொதுநிலைத்

தொடர் முடிபு 407, 408

பொதுமொழி 279, 281

பொதுவினை 385, 392

பொதுவினைச் சொல் 454, 455

**பொ**

பொருட் பெயர் ..., 307

பொருட்பெயர் வகை 308, 309

பொருளாகுபெயர் ..., 331

பொருள் ..., 300

பொருள்கோள் ..., 407

பொருள் கோள் வகை ..., 472

பொருள் நிலை 457

பொருட்புணர்ச்சி ..., 167

**ம**

மகரக்குறுக்கம் ..., 68

மக்கள் ..., 281

மங்கல மொழி ..., 289

மயிலைநாதர் ..., 6

மரபுவழாநிலையும்

வழுவமையும் ..., 451

மரூஉ ..., 288

மறுப்பு விடை ..., 449

மற்று என்பதற்குப்

புறனடை 498, 499

மற்று என்னும் இடைச்

சொல் 497, 498

மன் என்னும் இடைச்

சொல் 496, 497

**மா**

மா என்னும் இடைச்சொல் 500, 501

மாத்திரை 27, 72

மாத்திரையால் இனம் ..., 34

மாறனலங்காரம் ..., 3

**மு**

முகத்தலளவை ஆகுபெயர் 332




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத அகராதி


**மு**

முக்கால வினையெச்சம் 398
முடிக்குஞ் சொல் நிற்கு
மிடம் 416. 417
முதல் ... ..., 450
முதற் குறிப்பு ...., 293
முதற் பெயர் 324, 325, 328
முயற்சியால் இனம் ..., 34
முருகக் கடவுள் 286, 304
முற்றாய்தம் ..., 51
முற்றியலுகரம் ..., 66
முற்றும்மைக்குச் சிறப்பு
விதி 491, 492
முற்றுவினை 379, 380
முன்னம் ..., 470
முன்னிலை ..., 284
முன்னிலை ஒருமை
வினைமுற்று 390, 391
முன்னிலைப்பன்மை வினை
முற்று 391, 392
முன்னிலைப் பெயர் ..., 326
முன்னிலையசைச்சொல் 501, 502

**மூ**

மூவகை மொழி 280, 281
மூவறிவு உயிர் ..., 507
மூவிடம் ..., 284
மூன்றாம் வேற்றுமை 341 - 344
மெய்யீற்றுப்
புணர்ச்சி 180, 228 -259
மெய்யெழுத்து 13, 25, 32
மெல்லினம் ..., 32

**மொ**

மொழி ..., 11
மொழி இலக்கணம் ..., 2
மொழிமாற்றுப்
பொருள் கோள் 473, 474

**யா**

யாப்பருங்கலக்காரிகை 3
யாப்பு ..., ..., 2, 3
யாற்றுநீர்ப்பொருள்
கோள் 473, 477, 478

**ல**

லக்ஷணம் ..., 1
லக்ஷ்யம் ..., 1

**வ**

வடசொல் 159, 306
வடசொற்புணர்ச்சி 259, 260
வடமொழி ..., 159
வடமொழியாக்கம் 160, 166
வரிவடிவத்தால் இனம் 35
வரி வடிவம் 17, 18
வல்லினம் ..., 32
வழக்கு ..., ..., 286
வழமையுரிமை ..., 461
வழுவா நிலையும்
வழுவமைதியும் 407, 436, 471

**வா**

வாக்கு ..., ..., 2

**வி**

விகாரப்புணர்ச்சி ..., 174
விகாரம் ..., ..., 292
விகுதி ..., 139, 152




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி

விசாகப்பெருமாளையர் ..., 6

விஷேணப்பெயர் 458, 459

வியங்கோள் வினைமுற்று 393

வியங்கோள்வினைமுற்று

விகுதி ..., 393

வியாகரணம் ..., 4

விருத்தி சந்தி ..., 260

விளியுருபுகளுக்குப்

புறனடை ...,364

விளிவேற்றுமையில்

வாரப்பெயர் ..., 365

வினாவடியாகப்

பிறக்கும் ஆண்பாற்

பெயர் 314, 315

வினாவெழுத்து ..., 29

வினை ..., 372

வினைச்சொல்லின் வகை 374

வினைச் சொற்கள் 295, 372, 373

வினைத்திரிசொல் 297, 305

வினைத்தொகை 169, 425

வினைமுதலுக்குப்

புறனடை 400, 401

வினைமுற்று 379, 394

வினையாலணையும்

பெயர் 308, 327

வினையியற் சொல் 297, 305

வி

வினையுடன் முடியும்

தன்மை வினைமுற்று ..., 389

வினையெச்சப்பிரிவு 397, 402

வினையெச்சம் 132, 397

வீ

வீடு ..., ..., 3

வெ

வெளிப்படைச் சொற்கள் 291

வே

வேறு, இல்லை, உண்டு 394

வேற்றுமை 334, 372

வேற்றுமைகளின் பெயரும்

உருபும் 335, 336

வேற்றுமைப்புணர்ச்சி 167

வை

வைத்தியநாத நாவலர் ..., 3

வைவஸ்வதமநு ..., 303

ஸ

ஸம்ஸ்கிருதம் 159, 286

ஸம்ஸ்கிருதவெழுத்து 18, 159

ஜ

ஜமதக்நி ..., ..., 3

ஜை

ஜைனமதம் ..., 3




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னூற் சூத்திர அகராதி


அ

அ ஆ ஈற்ற ... 384
அ ஆ உ ஊ ... 77
அ ஆ எ ஒ ... 77
அ இ உ எ ... 27
அ இ உம் முதல் ... 29
அ ஐ முதலிடை ... 98
அகமுனர் ... 245
அசைநிலை ... 457
அடிநாவடியணம் ... 44
அடைசினை முதன் ... 467
அடைமொழி ... 465
அண்ண நுனிநாநனி ... 46
அண்ண நுனிநாவரு ... 45
அண்பலடிநா ... 44
அண்பல் முதலும் ... 45
அண்மையினியல்பு ... 364
அதுமுன்வரு ... 208
அதுவே இயற்சொற் ... 364
அத்தினகர ... 273
அந்திலாங்கசை ... 500
அம் ஆம் என்பன ... 388
அம்ம உரையசை ... 500
அம்முதலீறா ... 26
அம்முனிகரம் ... 102
அர், ஆர் பவ்வூர் ... 383
அல்வழி இ ஐ ... 205
அல்வழியாமா ... 201
அவற்றுள், அ இ உ ... 27
அவற்றுள்,
எழுவாய் ... 338
அவற்றுள், ஒன்றேயிரு ... 328
அவற்றுள், கிளையெண் ... 314
அவற்றுள், முதலினான்கு ... 402
அவற்றுள், முயற்சியுள் ... 42
அவைதாம், முற்றும் ... 378
அவ்வழி ஆவி ... 41
அள்ளா ளிறுமொழி ... 382
அறி வரு ளாசை ... 509
அறிவறியாமை ... 448
அன் ஆனிறுமொழி ... 382
அன் ஆன் அள் ஆள் ... 151
அன் ஆன் இன் ... 266
அன்றி இன்றி ... 202

ஆ

ஆ ஈ ஊ ... 27
ஆக்க வினை ... 404
ஆண் பெண் பலர் ... 282
ஆண்மை பெண்மை ... 328
ஆநின் றுகின்று ... 155
ஆமாகோ ... 270
ஆமுன் பகர ... 206
ஆய்தக் கிடந்தலை ... 47
ஆவிஞணநமன ... 80




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னூற் சூத்திர அகராதி


**ஆ**

ஆவியாழ ... 188
ஆவியுமொற்றும் ... 74
ஆறனுருபு ... 337
ஆறனொருமை ... 350

**இ**

இ ஈ எ ஏ ... 42
இ ஈ ஐ வழி ... 190
இ உ ஊவோ ... 356
இசை கெடின் ... 55
இடுகுறி காரணப் ... 25
இடுகுறி காரண மரபோ ... 310
இடைச்சொல் ... 225
இடைத் தொடர் ... 211
இடைநிலை மொழி ... 479
இடையினம் யர ... 33
இடையுரி வடசொல் ... 261
இணைந்தியல் ... 166
இதற்கிது சாரியை ... 273
இதற்கிது முடிபென் ... 278
இம்முப்பெயர்க்கண் ... 357
இயல்பினும் ... 194
இயல்பின் விகாரமும் ... 276
இயல்பெழுமாந்தர் ... 72
இயற்கைப் பொருள் ... 467
இயற்சொற்றிரி ... 304
இரட்டைக் கிளவி ... 458
இரண்டாவதன் உரு ... 340
இரண்டு முதலா ... 425
இரண்டு முன்வரில் ... 224
இருதிணையாண் ... 409
இர் ஈர் ஈற்ற ... 392
இலக்கணமுடைய ... 290
இலக்கியங் கண்ட ... 153
இல்லெனின்மை ... 254
இறப்பெதிர்வு ... 446
இனைத்தென்றறி ... 460
இன்னதின்னுழி ... 516

**ஈ**

ஈதா கொடு ... 470
ஈமும் ... 245
ஈறுபோதல் ... 128
ஈற்றியாவினா ... 187

**உ**

உ ஊ ஒ ஓ ஔ ... 43
உ ஊ ஒ ஓ வல ... 76
உடன் மேலுயிர் ... 230
உணர்விய லாமுயிர் ... 508
உயர்திணை உம்மை ... 432
உயர்திணை தொடர்ந்த ... 441
உயிரு முடம்பும் ... 13
உயிரல்லதாம் ... 503
உயிர் மவில் ... 108
உயிர் மெய்யாய்தம் ... 15
உயிர்மெய்யிரட்டு ... 16
உயிர் வரின் ... 192
உரிவரினாழி ... 203
உருபின் முடிபை ... 258
உருபுபலவடிக்கினும் ... 413
உருபு முற்றீ ... 416
உருபும் வினையும் ... 412
உருவக உவமையில் ... 472
உவப்பினுமுயர்வினும் ... 44
உவம உருபில ... 427




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னூற் சூத்திர அகராதி


**எ**

எகர வினா ... 191
எச்சப்பெயர் ... 418
எடுத்தல் படுத்தல் ... 48
எட்டனுடம்பு ... 219
எட்டனுருபே ... 355
எண்ணலெடுத்தல் ... 427
எண்ணிறை ... 217
எண்பெயர் ... 10
எண்மூவெழுத்தீற் ... 182
எதிர்மறை சிறப்பை ... 491
எப்பொருளெச்சொல் ... 451
எல்லாமென்ப ... 267
எல்லாரும் ... 268
எல்லையின்னும் ... 371
எவனென்வினா ... 405
எழுத்தியறிரியா ... 457
எழுத்தே ... 106
எழுவாயிறுதி ... 478
என்றுமெனவும் ... 494

**ஏ**

ஏயாமுதலும் ... 31
ஏழனுருபுகண் ... 354
ஏழாமுயிர் ... 163
ஏற்குமெவ்வகை ... 336
ஏற்புழி யெடுத்துடன் ... 479
ஏற்ற பொருளக் ... 478

**ஐ**

ஐ ஆய் இகர ... 390
ஐ ஔ இ உ ... 37
ஐ கான் யவ்வழி ... 98
ஐந்னொற் ... 219
ஐந்தாவதனுரு ... 347
ஐந்தொகைமொழி ... 429
ஐந்திணை பால் ... 439
ஐயான்குச் செய்யுள் ... 368
ஐயிறு பொது ... 358
ஐய்யீற்றுடை ... 213

**ஒ**

ஒடுவுந்தெய்யவும் ... 498
ஒருசார் னவ்வீற் ... 359
ஒருபஃதாதி ... 221
ஒருபுணர்க் ... 179
ஒருபொருள் குறித்த ... 305
ஒருபொருள் பல ... 459
ஒருபொருள் பன் ... 459
ஒருபொருள் மேற்பல ... 452
ஒருமையிற் பன்மை ... 444
ஒருமொழி தொடர்மொழி ... 279
ஒருமொழி மூவழி ... 179
ஒருமொழியொருபொருள் ... 280
ஒருமொழியொழி ... 418
ஒருவரென்பது ... 331
ஒருவனொருத்திபலர் ... 262
ஒருவனொருத்திப் பெயர் ... 330
ஒருவன் முதலைந்தை ... 381
ஒழியிசை வினா ... 489
ஒற்றுமைநயத்தின் ... 508
ஒற்றுயிர் ... 264
ஒன்பதொழித்த ... 224
ஒன்பானொடுபத்து ... 220
ஒன்றன்புள்ளி ... 218
ஒன்றமுதல் ... 223
ஒன்று முதலெட்டு ... 271




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னூற் சூத்திர அகராதி


ஒ

ஒன்றே பலவென் ... 283

ஒன்றொழி பொதுச்சொல் ... 294

க

க ங வும் ... 43

க ச த ஒழித்த ... 83

கடியென் கிழவி ... 515

கண்கால்கடை ... 354

கயவொடு ரவ் ... 393

கா

காரணமுதலா ... 468

காலங்கரந்த ... 425

கி

கிளந்த கிளைமுதல் ... 320

கிளைமுதலாக் ... 318

கிளையெண் குழூஉ ... 314

கீ

கீழின் முன் ... 248

கு

குடுதுறுவென் ... 387

குயினூன் ... 240

குறியதன் கீழா ... 202

குறியதன் முன்னர் ... 52

குறிலணைவில்லா ... 235

குறில் செறியா ... 251

குறில் வழி ... 249

குற்றுயிரளபின் ... 80

கே

கேட்குந போலவும் ... 471

கொ

கொல்லே யைய ... 499

ங

ங ஞ ண ந ... 58

நம்முன் கவ்வாம் ... 85

சா

சாதிகுழூஉப்பரண் ... 236

சால உறுதவ ... 513

சாவவென்மொழி ... 198

சி

சிதலெறும்பாதி ... 507

சிறப்பினுமினத்தினும் ... 35

சினைவினை ... 402

சு

சுட்டியாவெகர ... 78

சுட்டின் முன் ... 273

சுட்டு மறைநேர் ... 450

சுட்டு வகரமூ ... 255

சுவைப்புளி ... 204

செ

செந்தமிழாகி ... 305

செந்தமிழ் நிலஞ் ... 306

செம்மை சிறுமை ... 123

செய்யப்படுபொருளை ... 461

செய்கென்னாருமை ... 389

செய்த செய்கின்ற ... 396

செய்து செய்பு ... 401

செய்பவன் கருவி ... 373

செய்யியவென்னும் ... 196

செய்யுமெனச்சம் ... 397

செய்யுளிறுதி ... 479

செய்யென் ... 138

செவ்வெண்ணீற்ற ... 492




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்னூற் சூத்திர அகராதி


**சொ**

சொற்றிரியினும் ... 402
சொற்றொறு மிற்றிதன் ... 517

**ஞ**

ஞணநம ... ... 232
ஞநமுன் ... ... 86

**ட**

டறமுன் ... ... 86

**ண**

ணனமுன்னின ... 87
ணனமுன்னும் ... 69
ணனவல்லினம் ... 234

**த**

தடறவொற்றின்னே ... 155
தத்தம் பகாப் ... 122
தமிழவ்வுறவும் ... 247
தம்பாலில்ல ... 469
தம்பெயர் ... 92
தரல்வரல் கொடை ... 445
தற்சுட்டளபொழி ... 68
தனிக்குறின் ... 230
தன்மைமுன்னிலை படர்... 285
தன்மை முன்னிலை வியங்... 385
தன்மையானான் ... 328
தன்னென் ... 241
தன்னொழிமெய் ... 231

**தா**

தானமுயற்சி ... 36
தான் தாம் ... 269
தான் யானானீ ... 329

**தி**

திசையொடு திசை ... 214
திணைநிலஞ் சாதி ... 452

**தி**

திணைபால் பொருள்... 443
திணையே பாலிடம்... 438

**து**

தும்பிவண்டாதி ... 507
துய்த்தல் துஞ்சல் ... 511
துறுடுக்குற்றியல் ... 384

**தெ**

தெங்கு நீண் ... 215
தெரிநிலை தேற்றம் ... 487
தெவ்வென்மொழி ... 256

**தே**

தேன்மொழி ... 238

**தொ**

தொக்குழிமயங்கு ... 434
தொல்லைவடிவின ... 71
தொழிலுங் காலமும் ... 401

**தோ**

தோன்றல் மறைதல் ... 513
தோன்றறிரிதல் ... 178

**ந**

நடவாமடி சீ ... 135
நவ்விறுதொழிற் ... 233

**நா**

நான்கன் ... 218
நான்காவதற்குரு ... 345

**நி**

நிறையுயிர் முயற்சி ... 40
நின்றநெறியே ... 81

**நீ**

நீயிர் நீவிர் ... 337




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நு**

நுந்தம் ... 244
நுவ்வொடு ... 365

**நெ**

நெடிலோடாய்தம் ... 66
நெடிலோடுயிர் ... 221
நெல்லுஞ் செல்லுங் ... 253

**ப**

பகாப் பதமேழும் ... 109
பகுதி விகுதி ... 120
பகுப்பாற் ... 111
படர்க்கை முப்பெயர் ... 453
படர்க்கை வினைமுற்று ... 285
பண்பை விளக்கு ... 426
பதமுன் விகுதியும் ... 265
பலசிலவெனும் ... 199
பல்லோர் படர்க்கை ... 404
பல்வகைத்தாது ... 291
பல்வகைப்பண்பு ... 503
பல்வகை வடிவிரு ... 511
பவ்வ மூவிடத் ... 156
பவ்வீ நீமீ ... 207
பழையன கழிதலும் ... 517
பனைமுன் ... 227
பன்னீருயிரும் ... 75

**பா**

பால்பகா அஃறிணை ... 323

**பி**

பிரிநிலை வினா ... 488

**பு**

புல்மரமுதல ... 506
புள்ளியுமுயிரும் ... 277

**பு**

புள்ளிவிட்டவ்வொடு ... 50
புள்ளும் வள்ளும் ... 254

**பூ**

பூப்பெயர் ... 225

**பெ**

பெண்மைவிட்டாணவா ... 284
பெயரும் வினையும் ... 478
பெயரே ஐயால் ... 336
பெயரொடு பெயரும் ... 424
பெயர்ச் செவ்வெண் ... 493
பெயர் வழி ... 262
பெயர்வினையிடத்து ... 410
பெயர்வினையும்மை ... 422

**பொ**

பொதுப்பெயருயர் திணை ... 185
பொதுப்பெயர் வினை ... 420
பொதுவியல்பாறை ... 379
பொதுவெழுத்தானும் ... 306
பொருண்முதலாறினும் ... 376
பொருண்முதலாறா ... 465
பொருண்முதலாறோ ... 334
பொருளிடம் ... 116

**போ**

போலப்புரைய ... 427

**ம**

மகரவிறுதி ... 95
மக்கடேவர் ... 281
மம்முன் ... 87
மரப்பெயர் ... 195
மரமல்லெகின் ... 239
மவ்வீறொற்றழிந் ... 243




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னூற் சூத்திர அகராதி


ம

மற்றயதென்பது ... 499
மற்றையநோக்கா ... 477
மன்னேயசைநிலை ... 497

மா

மாவென்கிளவி ... 500
மாற்றநுவற்சி ... 514

மி

மியாயிகமோ ... 501
மின்பின் ... 240

மீ

மீகீழிதமுற ... 44
மீன்றவ்வொடு ... 237

மு

முக்காலத்தினும் ... 446
முதலிருநான்கா ... 221
முதலிவைசினை ... 367
முதலையையுறிற் ... 366
முதற் பெயர் நான்கு ... 327
முரணந்தாதி ... 507
முழுங்கிரட்டொலி ... 514
முற்றும்மை யொரோ ... 492
முற்றீரெச்சம் ... 436
முன்மொழிபின் ... 431
முன்னத்தினுணரும் ... 470
முன்னரவ்வொடு ... 322
முன்னிலைகூடிய ... 390
முன்னிலை முன்னர் ... 391

மூ

மூன்றனுறுப்பழி ... 218
மூன்றாவதனுருபா ... 343
மூன்றாறுருபு ... 208
மூன்றுயிரளபு ... 73

மெ

மெய்களகரமும் ... 103
மெய் நா மூக்க ... 506
மெய்யுயிர் ... 176
மெல்லினம் ங ஞ ... 33
மென்றொடர் ... 212

மே

மேற்பல்லிதமுற ... 46

மொ

மொழிமுதற் ... 12
மொழியாய் ... 104

ய

யகரம் வரக்குறள் ... 60
யரழமுன்னர்க்கச ... 247
யரழமுன்னர்மொழி ... 88
யரழவொற்றின் ... 90

யா

யாகா பிறபிறக் ... 502
யாதனருபிற் ... 367
யாப்படி பலவினும் ... 479
யாரென் வினா ... 405
யாற்று நீர் ... 477

ர

ரவ்விற் ... 165
ரவ்வீற்றுயர் ... 361
ரழவல்லன ... 90

ல

லகாரவீற்று ... 362
லளமுன் ... 89
லளமெய் ... 91
ல ள விறுதொழிற் ... 252




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ல**

ல ள வீற்றியைபின் ... 70

ல ள வீற்று ... 363

ல ள வேற்றுமை ... 249

**வ**

வலித்தன் மெலித்தல் ... 178

வல்லினங் கசட ... 32

வல்லே தொழில் ... 253

வல்லொற்று ... 431

வவ்விறு சுட்டு ... 272

வன்றொடரல்லன ... 210

**வா**

வாழிய வென்பதன் ... 197

வானவர் மக்கள் ... 508

**வி**

விகார மனைத்தும் ... 178

விகுதி பதம் ... 275

விரைவினும் ... 447

விழைவே காலம் ... 496

விளம்பிய பகுதி ... 139

வினாச்சுட்டுடனும் ... 321

வினாவினுஞ் செப்பினும் ... 451

வினைச் சார்பினம் ... 456

**வி**

வினைபெயர் குறிப்பிசை ... 490

வினை மாற்றசை நிலை ... 498

வினைமுற்றே வினை ... 406

வினையின் பெயரே ... 329

வினையொடு வரினும் ... 495

**வே**

வேறில்லை யுண்டைம் ... 394

வேறுவினைப்பால் ... 455

வேற்றுமை மப்போய் ... 243

வேற்றுமை யாயின் ... 226

வேற்றுமையைம் முத ... 177

வேற்றுமை வினைசார் ... 483

வேற்றுமை வினைபண் ... 424

**ள**

ளஃகானுயர் ... 360

**ற**

றவ்வொ டுகர ... 158

றனழ எ ... 161

**ன**

னஃகான் கிளைப்பெயர் ... 237

னலமுன்றனவும் ... 256

னவ்வீற்றுயர் ... 363




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவகிறீன் அச்சகம்,
693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org